தலைமை

ஜனவரி - ஜூன்

2005

©

UL
V211M, N67.
PCS
135429

தமிழரசு
ஜனவரி 2005

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
மார்கழி – தை
மலர்: 36 இதழ்: 7
ஜனவரி 2005
விலை ரூ.10

இந்த இதழில்...

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி ......

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்கு மேலும் ரூ.396 கோடி மதிப்பிலான உதவிகள்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 29.1.2005) 3

★ கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 3.1.2005) 6

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி 9

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோள் 10

★ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட ரூ.4,800 கோடி நிதி வழங்க வேண்டும்.
(மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை) 12

★ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட நாகப்பட்டினம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் 17

★ சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்குச் சென்னை மாநகராட்சியின் நிவாரணப் பணிகள் 31

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் நிவாரணப் பணிகள் 33

★ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மலேசிய நாட்டின் நிதிஉதவி 35

★ பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் உதவி 36

★ அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை மற்றும் நிறைவுரை 37

★ காஞ்சிபுரம் மாவட்டம் – சுனாமி பாதித்த பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள் 45

★ தமிழுக்கு அதிகாரம் தந்த தமிழன் – (கவிதை) கவியரசர் இளந்தேவன் 49

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண சீரமைப்புப் பணிகள் 51

★ பெற்றோரை இழந்த பெண்களின் பெயரில் வைப்புநிதி
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 4.1.2005) 56

★ கடலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் மின்னல்வேக நிவாரணப் பணிகள் 57

★ போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 25.12.2004) 65

★ கடலோரத்தில் தடுப்புச் சுவர் அமைக்க ரூ.5,000 கோடி வழங்க வேண்டும்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிக் குழுவிடம் வலியுறுத்தல்) 67

★ சென்னை மாவட்டப் பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள் 69

★ சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுத் தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி 73

★ பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிதியுதவி
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 18.1.2005) 76

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு
இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் பக்க அட்டை : சுனாமி பேரலை பாதித்த மாவட்டங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **வ. கனகராஜ்**, இ.ஆ.ப., ஆணையர் மற்றும் இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

185429

புத்தாண்டு புத்தெழுச்சியை அளிக்கட்டும்! புது மலர்ச்சியைப் படைக்கட்டும்!!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

புத்தாண்டு மலர்கின்ற இந்தத் திருநாளில் எல்லோருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நடந்து முடிந்த ஆண்டு நம் நினைவை விட்டு அகலாத ஆண்டாக நம்மைக் கடந்து சென்றிருக்கிறது.

சாதனைச் சரித்திரங்கள் பல படைக்கச் சாதகமாக இருந்த அதே 2004–ஆம் ஆண்டுதான், விடைபெற்றுச் செல்கின்ற வேளையில் வேதனையை விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறது. நீலக்கடல் அருகே நிம்மதியாக வாழ்ந்த மக்கள் ஆழிப் பேரலைகளால் அழிக்கப்பட்ட அவலம் நடந்திருக்கிறது. உயிர் நீத்த மக்களுக்காக உள்ளம் உருகும் அதே வேளையில், துயர்ப்படும் மக்கள் மறுவாழ்வு பெற அனைத்து உதவிகளையும் அரசு ஆற்றி வருகிறது.

எதிர் நிற்க இயலாத இயற்கை பேரிடரால் உற்றார் உறவினர்களை மட்டுமல்லாமல் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு வாடி நிற்கும் நம் அன்புச் சகோதர சகோதரிகளின் வாட்டம் போக்க நம் அன்பும், ஆதரவும் உதவியும் தேவை. எனவே, என் அருமை தமிழகப் பெருமக்கள் அனைவரையும் பேரிடர் தீர்க்கும் இந்தப் பெரும்பணிக்கு வாரி வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாண்டு என்னருமைத் தமிழக மக்களுக்குப் புதிய நம்பிக்கை வழங்குகின்ற புத்தாண்டாக மலரட்டும்!

புத்தாண்டில் பூக்கின்ற புதிய நம்பிக்கை, புத்தெழுச்சியை அளிக்கட்டும்; புது மலர்ச்சியைப் படைக்கட்டும்; புதுவளர்ச்சியை வழங்கட்டும்!

உறுதி கொண்ட உள்ளத்தால் ஊழை வெல்லும் ஊக்கத்தால், ஒய்வறியா உழைப்பால், புத்தம் புதிய பொற்காலத்தைத் தமிழகத்தில் உருவாக்குவோம்.

என் அன்புக்கு உரிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்கு மேலும் ரூ.396 கோடி மதிப்பிலான உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 29.1.2005

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை 26.12.2004 அன்று , சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்கின்ற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, இந்தப் பேரிடரில் கடலோரக் கிராமங்களில் வசித்து வந்த மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுத் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டு மொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங் களையும் முற்றிலுமாக இழந்துவிட்டார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாகப் பார்வையிட்டதுடன், பாதிக்கப் பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண தொகுப்பு உதவிகளை 28.12.2004 அன்றே அறிவித்து நிவாரண உதவிகள் வழங்கும் பணிகளை 30.12.2004 அன்று நான் துவக்கி வைத்தேன்.

கடலோர மீனவக் குடும்பங்களின் துயர நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்றுக் கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட 28.12.2004 அன்றே நான் ஆணையிட்டேன்.

இதன்படி, பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது வள்ளங்களுக்கான வலைகளை மாற்றுவதற்காக வள்ளம் ஒன்றுக்கு 20,000 ரூபாய் என்ற வீதத்தில் 20 கோடி ரூபாய், கட்டுமரங்களுக்கான மீன்பிடி வலைகள் மாற்றுவதற்காக கட்டுமரம் ஒன்றுக்கு 10,000 ரூபாய் என்ற வீதத்தில் 20 கோடி ரூபாய்; வள்ளங்களைப் பழுதுபார்ப்பதற்காகவும் அல்லது புதுப்பித்துக் கொள்வதற்காகவும், வள்ளம் ஒன்றுக்கு 15,000 ரூபாய் என்ற வீதத்தில் 15 கோடி ரூபாய், கட்டுமரங்களைப் பழுது பார்ப்பதற்காக அல்லது புதுப்பித்துக் கொள்வதற்காக 5,000 ரூபாய் என்ற வீதத்தில் 10 கோடி ரூபாய் என மொத்தம் 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட நான் ஆணையிட்டேன்.

இதுவன்றி பாதிக்கப்பட்ட மீன்பிடி படகுகளின் வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் மோட்டார் இயந்திரங்களைப் பழுதுபார்க்க ஒரு மோட்டார் இயந்திரத்திற்கு 5,000 ரூபாய் வீதம் 78 இலட்சம் ரூபாய் உதவியினை வழங்கிடவும் ஆணையிட்டேன்.

பின்னர், சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் மற்றும் பொதுச் சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளைச் சீர்படுத்தவும் தேவையான 4,800 கோடி ரூபாய் நிதி உதவியை வழங்கும்படி பாரதப் பிரதமர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு அளித்த கோரிக்கை மனுவில் நான் கோரியிருந்தேன். இதைத் தவிர, கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவு (Groynes) ஆகியவை கட்டுவதற்காக மேலும் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு அளிக்கவும் கோரியிருந்தேன். இதில், பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வு ஆதாரத்தைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில், முழுமையாகச் சேதமடைந்த அல்லது காணாமல் போன அவர்களது கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகு ஆகியவற்றிற்கு மாற்றாகப் புதிய கண்ணாடி

இழை கட்டுமரங்களும், வள்ளங்களும் மற்றும் விசைப்படகுகளும் வாங்க முழு மானியம் வழங்கப்பட வேண்டும் என்று நான் கோரியிருந்தேன். பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது வீடு, உடைமைகள் மற்றும் பிழைப்பு ஆதாரமான படகு, வலைகள் ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாக இழந்துவிட்ட காரணத்தால் வங்கிக் கடன் சுமையை அவர்களால் ஏற்க இயலாது என்பதால் முழு மானியம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பாக 15.1.2005 அன்று சென்னையில் மத்திய விவசாயத் துறை அமைச்சருடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கண்ணாடி இழை கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகுகள் ஆகியவை முழு மானியத்துடன் வழங்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினேன். மேலும், சேதமுற்ற மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை மீளக் கட்டுவதற்கும், முகத் துவாரங்களையும், துறைமுகங்களையும் தூர் வாரி ஆழப்படுத்தவும் தமிழக அரசு கோரியுள்ள நிதி உதவியை முழுமையாக வழங்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்தினேன்.

மீனவர்கள் மறுவாழ்வுக்கும், மீன்பிடித் துறைமுகங்களை மீளக் கட்டுவது போன்ற உள்கட்டமைப்புக்காகவும் கோரப்பட்ட மொத்தத் தொகை 1030.93 கோடி ரூபாய் ஆகும். இதில் மீனவர் மறுவாழ்விற்காகக் கோரப்பட்ட மானியத் தொகை 907.53 கோடி ரூபாய் ஆகும். ஆனால், 19.1.2005 அன்று மத்திய அரசு வெளியிட்டுள்ள நிவாரண உதவி அறிவிப்பில் மீனவர்கள் மறு வாழ்விற்காக அறிவிக்கப்பட்ட மானியத் தொகை சுமார் 346 கோடி ரூபாய் ஆகும். மீதமுள்ள தொகை வங்கிகளின் மூலம் மீனவர்களுக்குக் கடனாக வழங்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

23.1.2005 அன்று மத்திய விவசாயத் துறை அமைச்சருடன் நடத்திய கலந்தாலோசனையின் போதும் மீனவர் மறுவாழ்விற்கு அளிக்கப்படும் உதவி முழு மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன்.

மத்திய அரசு மீனவர்களுக்கான நிவாரணத் திட்டம் அறிவிப்பதற்கு முன்னதாகவே, அதாவது 28.12.2004 அன்றே 65 கோடி ரூபாய்க்கான நிவாரணத் தொகுப்பினை நான் அறிவித்தேன். அதன் அடிப்படையில் வாழ்வாதார நிவாரண உதவிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மீனவர்களுக்கான வாழ்வாதார நிவாரணங்களுக்காகக் கீழ்க்காணும் கூடுதல் தொகுப்பு உதவிகளை வழங்கிட தற்போது நான் ஆணையிட்டுள்ளேன்.

1. பாதிக்கப்பட்ட மீனவர்கள் முழுமையாகச் சேதமடைந்த தங்களது மரத்திலான கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரங்களையோ அல்லது கண்ணாடி இழையிலான கட்டுமரங்களையோ தங்களது விருப்பப்படி வாங்கிக் கொள்ள அரசு மானிய உதவி வழங்கும். இதன்படி,

அ) புதிய மரக் கட்டுமரங்களை வாங்க விரும்பும் மீனவர்களுக்கு மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய் முழுமையும் அரசு மானியமாக வழங்கப்படும்.

அல்லது

ஆ) சேதமுற்ற மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாகக் கண்ணாடி இழை கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்குக் கண்ணாடி இழை கட்டுமரம், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவை வாங்க 35 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதற்கு அதிகபட்சமாக 52,500 ரூபாய் மானியம் வழங்கப்படும். இந்த மானியம் கட்டுமரம், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவற்றின் மொத்த விலை 1.5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் வழங்கப்படுகிறது.

2. அதேபோல முழுமையானச் சேதமடைந்த வள்ளங்களுக்குப் பதிலாக புதிய வள்ளங்கள் வாங்க அரசு மானியம் வழங்கும். இதன்படி, முழுமையாகச் சேதமடைந்த மரம் மற்றும் கண்ணாடி இழை வள்ளங்களுக்குப் பதிலாக புதிய வள்ளங்கள், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவை வாங்க 35 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதற்கு அதிகபட்சமாக 52,500 ரூபாய் மானியம் வழங்கப்படும். இந்த மானியம் வள்ளம், மோட்டார் இயந்திரம் மற்றும் உரிய வலை ஆகியவற்றின் மொத்த விலை 1.5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் வழங்கப்படுகிறது.

3. முழுமையாகச் சேதமடைந்த விசைப்படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப்படகுகள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, அதன் மொத்த விலையில் 35 சதவிகித மானியம் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை 5 இலட்சம் ரூபாய் ஆக இருக்கும்.

பகுதி சேதமடைந்த கட்டுமரம் மற்றும் வள்ளம் ஆகியவற்றைப் பழுது நீக்கிச் சீரமைக்க ஏற்கெனவே உதவித் திட்டம் ஒன்றை நான் அறிவித்துள்ளேன். அதன் தொடர்ச்சியாகப் பின்வரும் உதவிகளை வழங்க நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

1. பகுதி சேதமடைந்த மரத்திலான கட்டுமரங்களைச் சீரமைக்க 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கிட ஏற்கெனவே நான் ஆணையிட்டிருந்தேன். தற்போது சில கட்டுமரங்களைச் சீரமைக்க 10,000 ரூபாய் வரை தேவைப்படுகிறது என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர். இந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, கட்டுமரங்கள் பழுது நீக்க நிவாரண உதவித் தொகைக்கான உச்ச வரம்பை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்க தற்போது நான் ஆணையிட்டுள்ளேன்.
2. பகுதி சேதமடைந்த விசைப்படகுகளைச் சீரமைக்க அதன் சேத மதிப்பீட்டில் 60 சதவிகிதம் மானிய உதவி வழங்கப்படும். வழங்கப்படும் மானியத்தின் அதிகபட்ச அளவு 3 இலட்சம் ரூபாயாக இருக்கும்.

விசைப்படகுகள் பழுது நீக்கம் செய்வதற்கும், கண்ணாடி இழை கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகு ஆகியவற்றைப் புதிதாக வாங்குவதற்கும் மானியம் போக எஞ்சியுள்ள தொகைக்கான வங்கிக் கடன் பெற்றுத்தர மத்திய அரசு உறுதி அளித்துள்ளது. இந்த வங்கிக் கடன் 1½ ஆண்டுகளுக்குப் பிறகு தவணை முறையில் 5 சதவிகித வட்டியுடன் 7 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதற்கான முழுச் செலவையும் மானியமாக வழங்கிட வேண்டும் என்று மத்திய அரசிடம் நான் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன். இதனை ஏற்று, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எவ்வித கடன் சுமையும் ஏற்படாத வண்ணம் முழு மானியத்துடன் கூடிய உதவித் திட்டத்தை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று நான் கோரியுள்ளேன்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்காக இன்று நான் அறிவித்துள்ள இந்தத் தொகுப்பு உதவிகளுக்கு மொத்தம் 396 கோடி ரூபாய் செலவாகும். 28.12.2004 அன்று நான் அறிவித்த 65 கோடி ரூபாய் நிதி உதவியுடன், இன்றைக்கு அறிவிக்கப்பட்டுள்ள உதவியையும் சேர்த்து மொத்தம் 461 கோடி ரூபாய் செலவில் மீனவர்கள் தங்களது வாழ்வாதாரங்களைப் பெற்று புது வாழ்வு தொடங்குவதை நான் உறுதி செய்துள்ளேன்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது புதிய வாழ்க்கையை நம்பிக்கையுடன் தொடங்கும் வகையில் அவர்களது பிழைப்பு ஆதாரங்களை உறுதி செய்திட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் இந்தத் தொகுப்பு உதவிகளை நான் அறிவித்துள்ளேன். சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடித் தொழிலைப் புதிய உற்சாகத்துடன் மேற்கொண்டு, ஒரு புது வாழ்வு காண இந்தத் தொகுப்பு உதவித் திட்டம் பயனுள்ளதாக அமையும் என்று நான் நம்புகிறேன். ❒

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் மூலம் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 6.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் வாஷிங்டன் நகரிலுள்ள Global Peace Initiative அமைப்பின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் கே.ஏ. பால் மற்றும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பிஷப் டாக்டர் எம். பிரகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து தமிழகத்தில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான நிவாரணப் பொருட்களை அளித்தார்கள்.

26.12.2004 அன்று தமிழகத்தில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக உதவிகள் வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். இவரது வேண்டுகோளை ஏற்று, பல்வேறு தரப்பினர் தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகின்றனர். இவ்வகையில், தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக அமெரிக்க நாட்டின் வாஷிங்டன் நகரிலுள்ள Global Peace Initiative என்னும் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் கே.ஏ.பால் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பிஷப் டாக்டர் எம். பிரகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் நிவாரணப் பொருட்களை நேரில் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, பிரபல உலக முன்னாள் குத்துச் சண்டை சாம்பியன் திரு. இவாண்டர் ஹோலிஃபீல்ட் (Mr. Evander Hollyfield, Former World Heavy Weight Champion), *Global Peace Initiative* அமைப்பின் செயல் இயக்குநர் திரு. தவே மெக்கியுடே (Mr. Dave Macquade, Executive Director), தேசிய இயக்குநர் டாக்டர் கே. டேவிட் ராஜு, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் டி. கமால் ஷெரீஃப், சென்னை, வெல்நெஸ் பவுண்டேஷனின் தலைவர் டாக்டர் விஜய் ஜி. பிரபாகர் மற்றும் செயலாளர் டாக்டர் கே. மயில்வாகனன் ஆகியோர் உடனிருந்தனர். ❖

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 3–1–2005

26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைத் திடீரென பெரும் சீற்றத்துடன் சுனாமி பேரலைகள் தாக்கியதின் விளைவாக, அப்பகுதியிலுள்ள கடலோரக் கிராமங்களில், எண்ணிப் பார்க்கவும் இயலாத உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டன. பாதிக்கப்பட்ட இடங்களில் போர்க்கால அடிப்படையில் தேடுதல் பணிகளும், மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிட 133 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு தொகுப்பு உதவித் திட்டங்களை நான் அறிவித்து, நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து வழங்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இரண்டு செட் சீருடைகள் ஆகியவற்றை இலவசமாக வழங்க நான் ஆணையிட்டேன். இதுவன்றி, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த, நிராதரவாக நிற்கும் அனைத்துக் குழந்தைகளையும் தமிழக அரசே தத்தெடுத்துப் பாதுகாக்கவும், சுனாமி பேரலைகள் திடீரென தாக்கியதன் காரணமாக அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிட, அவர்களுக்கு உளவியல் ரீதியான அனைத்து ஆலோசனைகள் வழங்கிட அந்தப் பகுதிகளுக்கு உளவியலாளர்களை (counsellors) அனுப்பிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

பொருளீட்டி குடும்பத்தைக் காத்து வந்த குடும்பத் தலைவர்கள் பலர் இந்தப் பேரழிவில் உயிர் இழந்து விட்டனர். இதனால் அவர்களைச் சார்ந்திருந்த குடும்பங்கள் தற்போது ஆதரவற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, கணவரை இழந்த பெண்களும், மகனை இழந்த வயது முதிர்ந்த பெற்றோரும் பிழைப்புக்கு வழியின்றி உள்ளனர்.

இந்தப் பேரழிவால் உயிர் இழந்த ஒவ்வொருவருக்கும் நிவாரண உதவியாக ஒரு இலட்சம் ரூபாய் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கிட நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். எனினும், குடும்ப வருவாயை ஈட்டி வந்த உறுப்பினர் இறந்து விட்ட நிலையில், அக்குடும்பங்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்று நான் முடிவெடுத்துள்ளேன். இதன்படி, அரசு தற்போது ஆதரவற்றோருக்காகச் செயல்படுத்தி வருகின்ற ஒய்வூதியத் திட்டங்களான முதியோர் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவை ஒய்வூதியத் திட்டம் ஆகிய உதவித் திட்டங்களில் அந்தந்த திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைவருக்கும் உதவித் தொகைகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டங்களின் கீழ் உதவி வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு மாதந்தோறும் 200 ரூபாய் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும். மேலும், இவர்களுக்கு நாள்தோறும் இலவச சத்துணவும், மாதந்தோறும் இலவச அரிசியும் வழங்கப்படும். அதாவது சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதந்தோறும் 2 கிலோ அரிசியும், உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதந்தோறும் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும். இதுவன்றி, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும்,

ஆண்டுக்கு இரு முறை இலவசமாக வழங்கப்படும். பாதிக்கப்பட்டோரது குடும்பங்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்திட இந்த உதவிகள் பயனுள்ளதாக இருக்கும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள இத்தகைய முதியோர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களை உடனடியாகக் கண்டறிந்து, மேற்காணும் திட்டங்களின் கீழ் அவர்களுக்கு உதவி அளிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இத்திட்டங்களின் பயன்கள் ஒரு வார காலத்திற்குள் சென்றடைந்து அவர்கள் உடனடியாக இந்த உதவித் தொகையினைப் பெறுகின்ற வண்ணம் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த உத்தரவு உடனே செயலாக்கம் பெற்று உதவித் தொகைகள் பாதிக்கப்பட்டோருக்குச் சென்றடையத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வருவாய் நிருவாகத் துறை சிறப்பு ஆணையர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளேன்.

பெற்றோரை இழந்த இளம் பெண்களுக்கு ரூ. 5 இலட்சம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 3–1–2005

26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை முன் எப்போதும் இல்லாத அளவிலான சுனாமி பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில், தமிழகத்தின் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களும், நகரங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எவரும் நினைத்துப் பார்க்கவும் இயலாத மிகக் கடுமையான உயிர் சேதத்தையும், பொருட் சேதத்தையும் கடலோரக் கிராமங்கள் சந்தித்தன. இது பற்றிய விவரம் எனக்குக் கிடைத்த உடனேயே தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மின்னல் வேகத்தில் மேற்கொள்ள தமிழக அரசின் நிருவாக இயந்திரத்தை நான் முடுக்கி விட்டேன். போர்க்கால அடிப்படையில் தேடும் பணிகளும், மீட்புப் பணிகளும் எனது உத்தரவின் பேரில் விரைந்து மேற்கொள்ளப் பட்டன.

கடலோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் தங்களது உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டன. அவர்கள் மீண்டும் புதிதாக வாழ்க்கை தொடங்குவதற்கு ஏதுவாக பல்வேறு நிவாரண உதவிகளை நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன்.

இந்தப் பேரழிவால் மூவாயிரத்திற்கும் அதிகமான நபர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். படுகாயம் அடைந்தவர்களில் பலர் தங்கள் கண்களை இழந்துள்ளனர். மேலும், கை, கால் போன்ற உடல் உறுப்புகளையும் இழந்துள்ளனர். இவ்வாறு உடல் உறுப்புகளை இழந்துள்ள அனைவருக்கும் கருணைத் தொகையாக நபர் ஒருவருக்கு 25,000 ரூபாய் வழங்கப்படும். மேலும், இவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ வசதிகளும் அரசு மருத்துவமனைகள் மூலம் இலவசமாக வழங்கப்படும்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டுப் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு மேல் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற்று வரும் ஒவ்வொருவருக்கும் தலா 5,000 ரூபாய் வழங்கப்படும்.

இந்தப் பேரழிவால் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளை அரசே தத்தெடுத்து அரசு காப்பகங்களில் அவர்கள் பராமரிக்கப்படுவர் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். அவர்களின் பெற்றோர் இறந்தமைக்காக அவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகையான 2 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, அக்குழந்தைகள் 18 வயது அடையும் போது, அவ்வைப்பீட்டின் முதிர்வுத் தொகை அக்குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று ஏற்கெனவே நான் அறிவித்திருந்தேன். அரசு சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் இக்குழந்தைகளுக்கு வழங்கப்படும். இதைத் தவிர அவர்களுக்குப் பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து கிடைக்கும் ரூபாய் ஒரு இலட்சத்துடன் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் பெற்றோர்களை இழந்து அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படும். இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை இந்தக் குழந்தைகள் 18 வயது நிரம்பியவுடன் அவர்களுக்கு வழங்கப்படும். இது

அவர்களது பாதுகாப்பான எதிர்க்காலத்தை உறுதி செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

சுனாமி பேரழிவால் 14 வயதிலிருந்து 18 வயதில் உள்ள இளம் பெண்கள் அனாதையாக்கப்பட்டுள்ளனர். இயற்கைப் பேரிடரால் எதிர்க்காலம் கேள்விக் குறியாக ஆக்கப்பட்டுள்ள இந்த இளம் பெண்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து, அவர்களுக்கு வளமான ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதில் எனது அரசு உறுதியாக உள்ளது. இத்தகைய இளம் பெண்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசு சேவை இல்லங்களில் உடனடியாகச் சேர்க்கப்படுவர். கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் புதியதாக அரசு சேவை இல்லங்கள் உடனடியாகத் துவங்கப்படும். அவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம் மற்றும் உடைகள் வழங்கப்படும். அவர்கள் சேவை இல்லங்களில் தங்கி தங்களது கல்வியைத் தொடர்ந்து கற்க வகை செய்யப்படும். இப்பெண்கள் தங்கள் சொந்தக் காலிலே நிற்பதற்கு வழிவகை செய்யும் வகையில் அவர்களுக்கு நவீனத் தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படும். இதன் மூலம் அவர்களுக்கு நவீனத் தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படும். இதன் மூலம் அவர்கள் ஏற்ற சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள இயலும். மேலும், அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதைப் போலவே இவர்கள் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்பட்டு, இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை இந்த இளம் பெண்கள் 18 வயது நிரம்பியவுடன் அவர்களுக்கு வழங்கப்படும். இது அவர்கள் சொந்த தொழில் தொடங்கவோ அல்லது உயர்கல்வி கற்பதற்கோ பயன் உள்ளதாக அமையும்.

ஆழிப் பேரலையின் தாக்குலால் நிராதரவாக ஆக்கப்பட்டுள்ளவர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க எனது அரசு ஆயத்தமாக உள்ளது. ★

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சனிக்கிழமைகளிலும் பணியாற்றிட

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, சென்னை மாநகரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், அதன் பிரிவு அலுவ்லகங்கள், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் செங்குன்றம் பிரிவு அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் சனிக்கிழமை களிலும் பணியாற்றிட உத்தர விட்டுள்ளார்கள். பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இந்த நடைமுறை 1.1.2005 முதல் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் வாகன ஓட்டுநர் உரிமம் வழங்குதல், உரிமம் மாற்றி வழங்குதல், முகவரி மாற்றம் முதலான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்கள், குறிப்பாக தனியார் அலுவலகங்களில் பணியாற்றுவோர் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகியோர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களுக்குச் சென்று இந்த சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனில், தங்களது அலுவலகங்களில் விடு[illegible] மேற்கொண்டுதான் இந்தப் பணி[illegible]ளைக் கவனிக்க முடிகிறது என்றும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சனிக்கிழமைகளிலும் பணியாற்றினால் தங்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்றும் தெரிவித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கைகள் விடுத்தனர். இந்தக் கோரிக்கைகளைக் கவனமுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பொதுமக்கள் நலன் கருதி, சென்னை நகரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், அதன் பிரிவு அலுவலகங்கள், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் செங்குன்றம் பிரிவு அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் 1.1.2005 முதல் சனிக்கிழமைகளிலும் பணியாற்றிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, இந்த அலுவலகங்கள், பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து அல்லாத (non-transport category) ஏனைய வாகனங்களுக்கான, பழகுவோர் வாகன ஓட்டுநர் உரிமம் (Learners Driving Licence) வழங்குதல், வாகன ஓட்டுநர் உரிமம் (Driving Licence) வழங்குதல், நகல் வானக ஓட்டுநர் உரிமம் (Duplicate Driving Licence) வழங்குதல், வாகன ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பித்தல் (Renewal of Driving Licence), வாகன ஓட்டுநர் உரிமங்களில் முகவரி மாற்றம் (Change of address), பதிவுச் சான்றிதழில் வாகன உரிமை மாற்றித் தருதல் மற்றும் முகவரி மாற்றம் (Change of address and transfer of ownership in Registration Certificate), பதிவுச் சான்றிதழில் அடைமான ஒப்பந்தம் ரத்து செய்தல் மற்றும் அடைமான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தல் (Endorsement of hypothecation agreement and cancellation of hypothecation agreement in Registration Certificate - non transport category) முதலான பணிகளைச் சனிக்கிழமைகளிலும் மேற்கொள்ளும்.

இந்தப் புதிய நடைமுறையைப் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொண்டு பலன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். □

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி

மங்கலப் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் உலகத் தமிழர்கள் அனைவருக்கும் எனது இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்ற வள்ளுவப் பெருமானின் வாக்குக்கு இணங்க, இந்த உலகம் உழவர் பெருமக்களின் பின் செல்கின்றது. அந்த உழவர் பெருமக்கள் தங்கள் உழைப்பின் பயனைப் பெற்று உவகை அடையும் நாள் இந்தப் பொங்கல் திருநாள்.

இயற்கைப் பேரிடர் கடலோரத் தமிழகத்தைச் சிதைத்து விட்ட வேளையிலே பிறந்திருக்கிறது. இந்தத் தைத் திங்கள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். பிறக்கின்ற தைத் திருநாள் தமிழர்க்குப் புது வாழ்வு அளிக்கின்ற திருநாளாக மலரட்டும்; புதிய நம்பிக்கையை அளிக்கின்ற திருநாளாக மலரட்டும்.

இயற்கைக்கு அஞ்சி வாழாமல் இயற்கையை வென்று வாழ்வதில் தான் மானுடத்தின் வெற்றி அமைந்திருக்கிறது. மனிதகுல வரலாறு நமக்குக் கற்றுத் தருகின்ற மகத்தான பாடம் இதுதான். எனவே, நம்பிக்கை கொள்வோம்! இயற்கைப் பேரிடரால் நிலை குலைந்த மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப ஏற்ற பணிபுரிவோம்!

இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் தாண்டி, புதியதொரு பொற்காலத்தைத் தமிழகம் காண உழைப்போம்!

பொங்கட்டும் பொங்கல்!
பூக்கட்டும் புதுவாழ்வு!
மங்கலப் பொங்கல் நாள்
மகிழ்ச்சிதனைப் பெருக்கட்டும்!

என்று மனமார வாழ்த்தி, என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பொங்கல் திருநாள் நல் வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேண்டுகோள்

இந்தோனேசியக் கடற்கரைக்கு அப்பால் ஆழ்க்கடல் படுகையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து எழுந்த ராட்சத சுனாமி அலைகள் (tsunami waves) 26.12.2004 அன்று தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளைக் கடுமையாகத் தாக்கின. இதனால் தமிழகக் கடலோரப் பகுதிகள் சொல்லவொண்ணா பேரழிவுகளுக்கும், இன்னல்களுக்கும் இலக்காயின. இதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு திடீரெனவும், கடும் சீற்றத்துடனும் பேரலைகள் உருவெடுத்து பேரழிவை ஏற்படுத்தி உள்ளன. இப்பேரழிவின் காரணமாகத் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளின் பொருளாதாரம் முற்றிலுமாகச் சீரழிந்து விட்டது. சென்னை தொடங்கி கன்னியாகுமரி வரை தமிழகத்தின் கடற்கரை நெடுகிலும் வாழ்ந்து வரும் மீனவச் சமுதாயத்தினரின் வாழ்க்கையை இது சீரழித்து விட்டது. இலட்சோப இலட்சம் 'மக்கள் தங்கள் வீடுகளை இழந்து விட்டனர். தமிழக அரசின் ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் முடுக்கி விடப்பட்டு, போர்க்கால அடிப்படையில் தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவம், கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படை ஆகியவையும் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இப்பேரழிவினால் பல நூறு கோடி ரூபாய் அளவுக்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும், அவர்களுக்கு மீண்டும் குடியிருப்புகள் கட்டித் தரவும், தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு நெஞ்சை உருக்கும் இந்தச் சோகச் சம்பவத்தால் துன்புற்று, மனம் இரங்கும் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவும் தேவைப்படுகிறது.

பல தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகள், நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள், கொடையுள்ளம் கொண்ட மனிதநேயப் பண்பாளர்கள் மற்றும் இந்தத் துயரச் சம்பவத்தால் கலக்கமுற்று மனமுருகிய பொதுமக்கள் ஆகியோர் முன்வந்து உதவியும், ஆதரவும் அளித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதித் தட்டுப்பாடு காரணமாக நிவாரணப் பணிகள் தடைப்பட்டு விடாமல் தொய்வின்றித் தொடர்ந்து மேற்கொள்ளப்பட ஏதுவாக அனைத்து நன்கொடைகளும் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"–க்கு அனுப்பப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வழங்கப்படுகின்ற அனைத்து நன்கொடைகளுக்கும் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80(G)– ன் கீழ் 100 சதவிகிதம் வரி விலக்கு அளிக்கப்படும்.

"முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"–க்கு அளிக்கப்படும் நன்கொடைகள், காசோலையாகவோ, வரைவோலையாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்படலாம்.

இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்
முதலமைச்சரின் பொது நிவாரண நிதி,
நிதித்துறை, தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வேண்டுகோள்

26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமும், மறுவாழ்வும் அளிப்பதற்காக நிதி உதவியும் ஆதரவும் நல்குமாறு பொதுநல சிந்தையுள்ள குடிமக்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகள், நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் கொடையுள்ளம் படைத்தோர் ஆகியோர் அனைவருக்கும் 28.12.2004 அன்றே நான் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

நிவாரணப் பணிகளுக்காக அனைத்து தரப்பினரிடமிருந்தும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதியுதவிகள் வந்த வண்ணம் உள்ளன. நிதியுதவி நல்கிய அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நிதியுதவிகள், காசோலைகள்/கேட்பு வரைவோலைகள் மூலமாகப் பெறப்படுகின்றன. வங்கிகள் மூலமாகவும், கணினி வழியாகவும் (on-line) இந்த நிதியுதவி நல்கிட உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, வணிக வங்கிகள் மூலமாகவும் மற்றும் கணினி வழியாக (on-line) செலுத்த தமிழ்நாடு அரசின் இணையதள முகவரியான "www.tn.gov.in" மூலமாகவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதியுதவி அனுப்ப தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வங்கி மூலம் நிதியுதவி அளிக்க விரும்பும் நன்கொடையாளர்கள், பின்வரும் வணிக வங்கிகளின் எந்த ஒரு கிளையிலும் தொகையைச் செலுத்தலாம். இவ்வாறு அளிக்கப்படும் தொகைக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது.

1. பாரத ஸ்டேட் வங்கி
2. இந்தியன் வங்கி
3. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
4. கனரா வங்கி
5. சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
6. யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா
7. சிண்டிகேட் வங்கி
8. பாங்க் ஆஃப் இந்தியா
9. பஞ்சாப் நேஷனல் வங்கி
10. பாங்க் ஆஃப் பரோடா
11. வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழக வங்கி (HDFC Bank)
12. இந்திய தொழில் கடனுதவி முதலீட்டுக் கழக வங்கி (ICICI Bank)

இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அனைத்து வங்கிகளும், நீங்கள் வழங்கும் தொகை, முதலமைச்சர் பொது நிவாரண நிதியைச் சென்றடைவதை உறுதி செய்யும்.

கணினி வழியாக (on-line) நிதியுதவி அளிக்க விரும்பும் நன்கொடையாளர்கள், தமிழ்நாடு அரசின் "www.tn.gov.in" என்ற இணையதள முகவரியின் முதன்மைப் பக்கத்திற்குச் சென்று, அதில் கண்டுள்ள அறிவுரைகளின்படி தொகையை அளிக்கலாம். இதற்கான ஒப்புகை, நிதியுதவி அளிப்பவரின் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இத்தகைய நன்கொடையாளர்களுக்கு அலுவல் முறையிலான ரசீதும் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் அனைத்துத் தொகைகளுக்கும் வருமான வரிச் சட்டத்தின் 80(G) பிரிவின் கீழ் 100 சதவிகித வரிவிலக்கு அளிக்கப்படும்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட ரூ.4,800 கோடி நிதிவழங்க வேண்டும்

மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் கோரிக்கை

26.12.2004 அன்று, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை முன்னெப்போதும் இல்லாத அளவிலான பேரிடர் ஒன்று திடீரெனப் பெரும் சீற்றத்தோடு தாக்கியது.

இதனால் கடற்கரைப் பகுதிகள் நெடுகிலும் அமைந்திருந்த கிராமங்களும், நகரங்களும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாகப் பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இலட்சோபலட்ச மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். இந்தப் பேரிடர் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளின் பொருளாதாரத்தையே முற்றிலுமாக நசித்துவிட்டது. மீனவர்களின் வாழ்க்கையே சீரழிந்து விட்டது. அவர்கள் வீடுகள், உடைமைகள், பிழைப்பு ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர்.

26.12.2004 அன்று ஏற்பட்ட பேரழிவு பற்றிய விவரங்களை அறிந்த உடனேயே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாநில அரசின் ஒட்டு மொத்த அரசு இயந்திரத்தையும் முடுக்கிவிட்டு தேடுதல் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாநில அரசுக்கு உதவியாக இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல் படை ஆகியனவும் ஈடுபடுத்தப்பட்டன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பாதிக்கப்பட்ட பகுதிகளை 26.12.2004 அன்றே ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார். மீண்டும், 27.12.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.12.2004 அன்று பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடனடியாக ரூ.5,000 அளவுக்கு நிவாரணத் தொகுப்புதவித் திட்டத்தை அறிவித்தார். மீனவர்கள் மீண்டும் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்று வாழ்க்கை நடத்த இயலும் வகையில் ரூ.65 கோடி செலவில் உடனடி நிவாரணத் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இதுதவிர இந்தப் பேரழிவால் இறந்துவிட்ட ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் ரூ. 1 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கிடும் முதற் கட்டப் பணியை 30.12.2004 அன்று தானே நேரடியாகத் தொடங்கி வைத்தார். சுனாமி அலைகள் தங்கள் வீடுகளுக்குள் புகவில்லை என்றாலும், அப்பேரலையினால் தங்களது பிழைப்பாதாரத்தை இழந்துவிட்ட மீனவர்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு அத்தகைய மீனவர்களுக்கு நிவாரண தொகுப்பு உதவித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பமும் சுமார் ரூ.3,000 நிதியுதவிபெறும். இத்துயரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பொதுவிநியோக முறையிலிருந்து இன்றியமையாப் பொருள்கள் வாங்க இயலும் பொருட்டு இப்பேரழிவால் தங்கள் குடும்ப அட்டைகளை இழந்துவிட்ட அனைவருக்கும், உடனடியாகக் குடும்ப அட்டைகளை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றும் 2005 ஜனவரி மாதத்திலிருந்து பொது விநியோக முறையிலிருந்து 10 லிட்டர் மண்ணெண்ணெயைக் கூடுதலாகவும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இப்பேரழிவினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் பள்ளிகளுக்கு விரைவில் திரும்ப இயலும் வகையில் அவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், இரு ஜோடி சீருடைகள் ஆகியவற்றை வழங்குவதற்கு வகை செய்யும் தனித் தொகுப்பு உதவித் திட்டம் ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில். தங்கள் கல்விச் சான்றிதழை இழந்தவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் நகலை இலவசமாக வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட பேரழிவால், பெற்றோர்களையும் உற்றார்களையும் இழந்து அநாதைகளாகிவிட்ட சிறார்களுக்கென தனி தொகுப்புதவித் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததுடன், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அத்தகைய சிறார்களுக்காகக் காப்பகங்கள் ஏற்படுத்தவும் ஆணையிட்டுள்ளார்கள்.

வளர் இளம்பெண்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவர்களை மாநில அரசு நடத்தும் கருணை இல்லங்களில் சேர்ப்பதற்கும் கன்னியாகுமரி, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக இரண்டு கருணை இல்லங்களைத் திறப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் சிறப்புத் தொகுப்புதவித் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார். இவ்வளர் இளம்பெண்களுக்கு இந்த இல்லங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். வீடிழந்த ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் வளர் இளம்பெண்களின் எதிர்காலப் பாதுகாப்புக்காக அவர்கள் ஒவ்வொருவரின் பெயரில் மாநில அரசு ரூ. 5 இலட்சம் வைப்பீடு செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். சுனாமிப் பேரழிவினால் அநாதைகளாகிவிட்ட அனைவரும் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் அரசின் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் உடனடியாகக் கொண்டு வரப்படுவர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அண்மையில் பேரழிவினால் பெரும் எண்ணிக்கையிலானோர் காயமுற்றுள்ளதால் தங்கள் கண்களையும், கை கால்களையும், இழந்துவிட்டவர்களுக்கு ரூ.25,000–ம் மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேலாக அகநோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ரூ.5,000–ம் அளிக்க

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ரூ.262.36 கோடி மொத்த செலவாகக் கூடிய உடனடி நிவாரணத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்க இயலும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசு, தமிழ்நாட்டுக்காக உடனடியாக ரூ.250 கோடியை வழங்கியுள்ளது. சுனாமியால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காகத் திரு. ஏ.கே. ஸ்ரீ வத்சவா தலைமையிலான மத்தியக் குழு ஒன்று 4.1.2005 முதல் 6.1.2005 வரை மாநிலத்தைப் பார்வையிடும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

26.12.2004 அன்று தாக்கிய சுனாமிப் பேரலையால் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட பெரும் சேதம் பற்றிய துரித மதிப்பீடு ஒன்றை மாநில அரசு மேற்கொண்டது. இம்மதிப்பீட்டின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 3.1.2005 அன்று நடைபெற்ற விரிவான ஆய்வுக் கூட்டத்தில் அறிக்கை ஒன்றை முடிவு செய்தார். பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான குடும்பங்கள், ஓரளவுக்குத் தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இயலும் வகையில் இந்த அறிக்கையில் ரூ.4,800 கோடி உதவியும், 54,000 டன் உணவுத் தானியமும் அளிக்குமாறு கோரப்பட்டது. எந்தெந்த தலைப்புகளின் கீழ் உதவித்தொகை கோரப்பட்டது. அறிக்கையில் எவ்வளவு தொகை கோரப்பட்டது என்பன போன்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தேடுதல் மீட்பு மற்றும் நிவாரணம்	ரூ.204.95 கோடி
தற்காலிக நிவாரணத் தொகுப்புதவி	ரூ.90 கோடி
பொதுச்சுகாதாரம் – கொள்ளை நோய்களைத் தடுத்தலும், காயமுற்றவர்களுக்குச் சிகிச்சையளித்தலும்	ரூ.71.45 கோடி
வாழ்வாதார இழப்பை ஈடு செய்யும் பிழைப்பு தொகுப்புதவித் திட்டம்	ரூ.261.36 கோடி
தற்காலிக வீட்டு வசதி	ரூ.250 கோடி
நிரந்தர வீட்டு வசதி	ரூ.750 கோடி
சமூக சொத்துகள் புனரமைப்பு	ரூ.709.22 கோடி
மீனவர்களுக்கு மறுவாழ்வு அளித்தலும் மீளவும் வாழ்வாதாரங்களுக்கு வகை செய்தலும்	ரூ.1054 கோடி

ஏனையோருக்கு மீளவும் வாழ்வாதாரங்களுக்கு வகை செய்தல்	ரூ.130.62கோடி
கடற்கரையோரப் பகுதியைப் பாதுகாத்தல் கடல் அரிப்பைத் தடுத்தல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்கான திட்டம்	ரூ.449 கோடி
கடற்கரையோரம் நெடுகிலும் உயிரின வாழ்க்கைச் சூழலை மீளவும் உருவாக்குதலும் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தலும்	ரூ.200 கோடி
அடிப்படைக் கட்டமைப்பு புனரமைத்தல் பழுது பார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள்	ரூ.628.88 கோடி

இப்பேரழிவினால் வாழ்வாதாரங்களையும் தங்கள் வீடுகளையும் இழந்து விட்டவர்களுக்கு உடனடியாக மறுவாழ்வு அளிப்பது தொடர்பாகவே, கோரிக்கை மனுவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களைத் தேடுதல், மீட்டு வருதல், பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுதல், ஆகியவை தொடர்பாக எந்த முயற்சியையும் தமிழ்நாடு அரசு விட்டு வைக்கவில்லை. உணவு மற்றும் புகலிடம் அளித்தல், மருத்துவ வசதிகள் அளித்தல், தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்குப் பொதுச் சுகாதார நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்தல், குடிநீர் வழங்கல் முதலியவற்றுடன் உடனடியாக நிவாரண முகாம்களை அமைப்பதும் இதில் அடங்கும். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தேவைப் படக்கூடிய நிதி ஆகியவை பற்றி இந்தக் கோரிக்கை மனுவில் விவரிக்கப்பட்டுள்ளது.

இப்பேரழிவு காரணமாக இடம் பெயர்ந்து சென்றுள்ளவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்துவிட்டவர்கள் அனைவருக்கும் முறையாக மறுவாழ்வு அளிப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள் குறித்துத் திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்கு சிறிது காலம் பிடிக்கும். வரலாறு காணாத இந்த இயற்கைப் பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி மீளவும் தங்களுடைய வாழ்க்கைத் தொழிலை தொடங்குகிற வரையில், அவர்கள் பிழைப்பு நடத்துவதற்கு ஏதுவாக அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வாழ்வாதார தொகுப்பு உதவி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தங்களுடைய வாழ்வாதாரத்தை முற்றிலுமாக இழந்துவிட்டவர்களுக்கு ரொக்க நிதியுதவி வழங்க வகை செய்யும்.

சுனாமி பேரலைகள், காரை வீடுகளைக் கூட அடியோடு தரைமட்டமாக்கியுள்ளன. குடிசைகளோ இருந்த இடம் தெரியாமல் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. மறுவாழ்வு திட்டத்தில், வீட்டு வசதி ஒரு முக்கியமான கூறாகும். தற்காலிக நிவாரணத் திட்டத்தில் முதல் கட்டமாக உடனடி உதவிக்காகச் சிறிது தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. வீடு இழந்தவர்களுக்கு உடனடியாகத் தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க, தற்காலிகத் தங்குமிட வசதிகளை விரைவிலேயே உருவாக்கத் தற்போது திட்டமிடப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முறையாகத் திட்டமிட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகள் உருவாக்கப்படும். இடம் பெயர்ந்து சென்றவர்கள், இப்புதிய வீடுகளில், சுனாமி பேரலை பற்றிய அச்சமின்றி, கண்ணியத்துடன் வாழ இயலும்.

ஆழிப்பேரலைகள், கடற்கரை நெடுகிலும் அமைந்திருந்த சமுதாயச் சொத்துக்களைச் சேதப்படுத்தி விட்டன. கடற்கரையோரப் பகுதிகளில் சாலைகள், சத்துணவு மையங்கள், சமுதாயக் கூடங்கள் முதலியவை போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்கு வதற்கான முக்கிய திட்டமொன்று தொடங்கப்படும்.

இத்திட்டம், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், தங்களுடைய வாழ்க்கையை மீண்டும் தொடங்கு வதற்கான உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும்.

தற்போது நம் முன் உள்ள முக்கியமான சவால், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீண்டும் வாழ்வா தாரங்களை அளிப்பதுதான். சேதமோ மிக அதிகம். மீனவர், தங்களது வள்ளங்கள், கட்டுமரங்கள், எப்.ஆர்.பி. படகுகள், இயந்திரப் படகுகள் முதலியவற்றை இழந்துள்ளனர். அவர்கள் விலை உயர்ந்த வலைகள் உட்பட சாதாரண வலைகளையும் இழந்துள்ளனர். மணலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் மற்றும் வலைகளையும் கூட அழிக்கும் அளவுக்கு ஆழிப்பேரலையின் சீற்றம் இருந்தது. இப்பேரலை கடற்கரையோரப் பகுதிகளின் பொருளாதாரத்தையே முற்றிலுமாகச் சீரழித்து விட்டது. மீனவர்கள் மீண்டும் தங்களுடைய பழைய வாழ்க்கைத் தொழிலைத் தொடர இயலும் வகையில், பெரும் திட்டமொன்று தொடங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், மீனவர்களுக்கு மறு வாழ்வு அளித்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் புனரமைப்பதற்கும் வகை செய்கிறது. அதேபோன்று, மீனவர் அல்லாத ஏனையோரின் வாழ்வாதாரங்களைப் புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

26.12.2004 ஆம் நாளன்று நிகழ்ந்ததைப் போன்று மீண்டும் கடலோரப் பகுதிகளில் பேரழிவுகள் ஏற்படாமல் உறுதி செய்யும் பொருட்டு, கடல் சுவர்கள், கடலரிப்புத் தடுப்பு அரண் கடற்கரைப் பாதுகாப்பு ஆகியவை உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை சுனாமி பேரலைகள், நமக்கு உணர்த்தியுள்ளன. மோசமான வடிகால் வசதி மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகிய பிரச்சினைகளிலிருந்து நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பாதுகாப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், சுனாமி பேரலைகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையாக, கடற்கரையோரம், காப்புப் பகுதிகளை (Shelter belts) ஏற்படுத்தவும், சதுப்பு நிலக் காடுகள் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுனாமி பேரலை தாக்கியதால் முற்றிலுமாகச் சிதைந்துபோய்விட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் புனரமைப்பதும் கோரிக்கை மனுவில் இடம் பெற்றுள்ளது. இதில், சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், மின் வழங்கல் ஏற்பாட்டு முறைகள் ஆகியவற்றைப் புதுப்பித்தலும் அடங்கும்.

கடற்கரையோரப் பொருளாதாரத்திற்குக் குறிப்பாக, மீனவர்களின் பொருளாதாரத்திற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட சேதத்தினால் எழுந்துள்ள சூழ்நிலை குறித்தும் இந்தக் கோரிக்கை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வணிக வங்கிகளிடமிருந்தும் கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் மீனவர்கள் வாங்கிய கடன்களில் எஞ்சியுள்ள நிலுவைத் தொகைகள் அனைத்தையும் தள்ளுபடி செய்வதற்கான கோரிக்கையும் இந்தக் கோரிக்கை மனுவில் இடம் பெற்றிருக்கிறது. மீன்பிடி வலைகள், மோட்டார்கள், இயந்திரம் பொருத்தப்பட்ட மற்றும் கண்ணாடி இழைப் படகுகளுக்கான உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான சுங்கத் தீர்வையையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமெனவும் அவற்றை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான ஆயத்தீர்வை களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் அரசிடம் கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கை மனுவை, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் மத்திய உள்துறை அமைச்சருக்கும் அனுப்பியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்கும், மத்திய உள்துறை அமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதத்தில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட இந்த சீற்றத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு பார்க்குமிடத்துப் பேரிடர் நிவாரண நிதியின் (CRF) வழக்கமான விதிமுறைகளை இதற்குப் பின்பற்ற முடியாது என்றும் இதற்கென சிறப்பு தொகுப்புதவித் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஏற்கெனவே 27-12-2004ஆம் நாளான்று மத்திய உள்துறை அமைச்சருடன் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்தபோது இது குறித்துக் குறிப்பிட்டதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தன்னுடைய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இது குறித்து கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர், மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் உறுதி யளித்திருந்தார். ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 19-1-2005 அன்று, தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் யேல் பல்கலைக்கழகம் இல்லினாய்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் சிங்கப்பூர் நான் யாங்க் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சென்னையில் அமைந்துள்ள கிரேட் லேக்ஸ் மேலாண்மைப் பயிலகத்தின் (GREAT LAKES INSTITUTE OF MANAGEMENT) புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருகாட்டுப்பள்ளி, கிளாமங்களம், பாப்பாநாடு, திருமங்கலக்கோட்டை, கீழையூர் மற்றும் தஞ்சாவூர் சண்முகா நகர் ஆகிய இடங்களில் 2 கோடியே 73 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பல்வேறு புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரத்தநாடு சிறப்பு ஊராட்சியில் 45 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வணிக வளாகம் ஒன்றும், 9 இலட்சம் ரூபாய் செலவில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருக்காட்டுப்பள்ளி சிறப்பு ஊராட்சியில் 50–ஆம் எண் சாலை, மார்க்கெட், குடமுருட்டி கரை, மார்க்கெட் சந்து மற்றும் பழமானேரி ஆகிய ஐந்து இடங்களில் 37 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் ஐந்து வணிக வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒரத்தநாடு வட்டம் கிளாமங்களத்தில் 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் தங்கும் விடுதிக் கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. மேலும், 59 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பாப்பாநாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் கட்டடமும் 30 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் திருமங்கலக்கோட்டை கீழையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் கட்டடமும் கட்டப்பட்டுள்ளன. இதுவன்றி, தஞ்சாவூர் சண்முகா நகரில் 60 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கூட்டுறவு திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மொத்தம் 2 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மேற்படி கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர்.வைத்திலிங்கம், தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள்

26.12.2004 அன்று, சுனாமி என்னும் ஆழிப் பேரலை ஏற்படுத்திய பாதிப்புகளைக் களைய, மின்னல் வேக நடவடிக்கையில் தமிழக அரசு ஈடுபட்டது. நிவாரண உதவிகள், மீட்புப் பணிகள், சுகாதாரப் பணிகள், உணவு வழங்கல் என அத்தனை உதவிகளையும் உடனடியாகச் செய்து முடிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் ஆட்சித் தலைவர்களும் களத்தில் இறங்கினார்கள்.

வெகுநேர்த்தியாகத் திட்டமிட்டு நடவடிக்கையை மேற்கொண்டனர். பெரும் பாதிப்புக்குள்ளான நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீரமைப்புப் பணிகள் விரைந்து நடந்தன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உதவி

நாகப்பட்டினம் மாவட்டத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 26, 27 & 30.12.2004 ஆகிய நாட்களில், வருகை புரிந்து மரணம் அடைந்த குடும்பங்களுக்கு கீழ்க்கண்ட நிவாரண உதவியை வழங்கினார்கள்.

1) உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாயும், வீடுகட்ட, பாத்திரங்கள் மற்றும் இதரச் செலவினங்களுக்கு ரூ.4,000/– தலா ஒரு வேட்டி, சேலை, 60 கிலோ அரிசி மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்கியுள்ளார்கள்.

2) முதல் கட்டமாக நம்பியார் நகரில் 49 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரிடமும் நேரில் பேசி குறைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வருகையின் போது தலைமைச் செயலர், நிதி துறைச் செயலர், வருவாய் நிர்வாக ஆணையர், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் ஆகியோர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் 11 கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பு

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுவீச்சில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள 11 கண்காணிப்புக் குழுக்களின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தில் 77 பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு ஒவ்வொரு குழுவினரும் சென்று மேற்கொண்ட நிவாரணப் பணிகள் குறித்து ஒவ்வொரு குழுவினருடன் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்த 77 கிராமங்களில் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் 82 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தக்க சமயத்தில் உணவு வழங்குதல், மருத்துவ வசதி செய்து கொடுத்தல் மற்றும் அவர்களின் தேவை அறிந்து அவர்களுக்கு உடனுக்குடன் தேவைகள் பூர்த்தி செய்யும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒவ்வொரு குழுவினரையும் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

குழுக்களிடம் ஆலோசனை நடத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு கூடுதலாக ஜே.சி.பி. பொக்லைன் எந்திரங்கள், டிப்பர்கள், புல்டோசர்கள் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு தொடர்புடைய துறைகளுக்கு உத்தரவிட்டார்.

நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வர்களுக்கு சுகாதார வசதிகள் எந்த நேரமும் கிடைக்கின்ற வகையில் டாக்டர்கள் இருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார். பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், மின் வசதி கிடைப்பதற்கு கண்காணிப்புக் குழுவினர் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பாதிக்கப்பட்ட கிராமங்களில் வீடுகளை இழந்தவர்களை அவர்களுடைய விருப்பத்தின் பேரில் தக்க இடத்தில் இடங்களைத் தேர்வு செய்து தற்காலிகமாகத் தங்கவைக்க இருப்பிடங்களை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிடங்களை அமைத்து அவர்களுக்கு குடிநீர், கழிப்பிட வசதி, சுகாதார வசதி மற்றும் தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டும். இதில் தனிக் கவனம் இருக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள அனைத்து நிவாரணங்களும் பாதிக்கப் பட்ட மக்களுக்குச் சென்றடைய வேண்டும். இதை ஒவ்வொரு குழுவினரும் உறுதி செய்ய வேண்டும். நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வகையில் குழுவினர் நடவடிக் கைகள் எடுக்க விரைந்து செயல்பட வேண்டும். நாகை மாவட்டம் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி உள்ளது. நிவாரணப் பணியில் ஈடுபடுகின்ற அனைத்துத் துறையினரும் சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட குழுவில் இடம் பெற்றிருந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

1. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திருமதி. பதர்சயீத், வக்ஃபு வாரியத் தலைவர் 2. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், எம்.பி., அவர்கள் 3. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுச்சாமி அவர்கள், தாட்கோ, தலைவர், திருமதி. வி. சரோஜா 4. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. ஜெயராமன், 5. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் 6. மாண்புமிகு செய்தி விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் 7. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் அவர்கள் 8. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. சிந்து ரவிச்சந்திரன் அவர்கள் 9. மருத்துவப் பணிகள் கழகத் தலைவர் திரு. பரஞ்ஜோதி அவர்கள் 10. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. எம். ரவிச்சந்திரன் அவர்கள் 11. திருமதி. கோகுல இந்திரா, எம்.பி., அவர்கள் ஆகியோர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டது. திரு. டி.டி.வி. தினகரன், எம்.பி., திரு. ஆர். காமராஜ், எம்.பி., மற்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம்

நாகை மாவட்டம் பெரும் பாதிப்படைந்ததைக் கருத்தில் கொண்டு எல்லாப் பகுதிகளிலும் விரைந்த பணிகள் நடைபெற ஏதுவாக தமிழக அரசு 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உடனடியாக நியமனம் செய்தது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றி அனுபவம் பெற்ற இவர்கள் நாகை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒருவர் வீதம் சென்று நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டனர்.

உதவி மையங்கள்

தங்களின் இருப்பிடங்களை இழந்த மக்கள் தங்குவதற்காக 72 உதவி மையங்கள் அமைக்கப் பட்டன.

மத்தியக் குழு ஆய்வு

பாதிக்கப்பட்ட ஆரிய நாட்டுத் தெரு, கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை, வேளாங்கண்ணி உள்ளிட்ட இடங்களில் 6 பேர் கொண்ட மத்தியக் குழு ஸ்ரீவஸ்தவா தலைமையில் ஆய்வு செய்தனர்.

பாதிப்புகள் பற்றிய கணக்கெடுப்பு

26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 73 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேற்படி 73 குடியிருப்புகளில் அக்கரைபேட்டை, கீச்சாபாளையம், வேளாங்கண்ணி, நாகூர் மற்றும் தரங்கம்பாடி ஆகியவை மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டவையாகும். 11.1.2005 வரை 6,065 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அதிகபட்சமாக நாகப்பட்டினம் வட்டத்தில் 2,141 நபர்கள் இறந்துள்ளனர். வேதாரண்யத்தில் 83 நபர்கள் இறந்துள்ளனர். இவைகளில் ஆண்களைவிட பெண்களே அதிகம் இறந்துள்ளார்கள். குழந்தைகள் மட்டுமே 1,500 பேர் இறந்துள்ளனர். பெரும்பாலான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு விட்டது. மீதம் காணாமல் போன நபர்களின் உடல்கள் கண்டுபிடிக்கும் பணி மேலும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஜே.சி.பி. உட்பட 80க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நிவாரணப்பணியை கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் வட்டத்திற்கு ஒரு அதிகாரியும், வட்டாட்சியர், ஊராட்சி ஒன்றிய ஆணையர், வருவாய் ஆய்வாளர் நிலையில் மற்றும் கிராம நிருவாக அலுவலர் நிலையில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மொத்தம் 75 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தரங்கம்பாடி வட்டத்தில் 9 மையங்களில் 11,800 நபர்களுக்கும், சீர்காழி வட்டத்தில் 33 மையங்களில் 30,505 நபர்களுக்கும், நாகப்பட்டினம் வட்டத்தில் 27 மையங்களில் 29,510 நபர்களுக்கும், வேதாரண்யம் வட்டத்தில் 13 மையங்களில் 9,490 நபர்களுக்குமாக மொத்தம் 82 மையங்களில் 81,305 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் 19 மையங்களில் உள்ளவர்களுக்கு நிவாரண உதவி முகாம்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 7 மையங்களில் 4,000 நபர்களுக்கு நிவாரண உதவி முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 366 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், அக்கரைப்பேட்டை, வேளாங்கண்ணி, நாகூர், கீச்சாங்குப்பம், தரங்கம்பாடி, திருமுல்லைவாசல் மற்றும் பாலையார் ஆகிய இடங்களில் சடலங்களை மீட்பதிலும், அவற்றை அப்புறப்படுத்திடவும், நிவாரண உதவிப் பொருட்கள் விநியோகம் செய்யவும் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பணியமர்த்தப்பட்டனர். மேலும், சடலங்களை மீட்கும் பணியில் காவல்துறை, வருவாய்த் துறை, தீயணைப்புத் துறை ஆகியோர்கள் முழு வீச்சில் செயல்பட்டனர். உயர் மட்ட அலுவலர்கள் அல்லாமல் 390 அலுவலர்கள் மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஊனமுற்றோர்க்கு உதவிகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கண்டறியப் பட்ட ஊனமுற்றோர்களுக்கு 112 சைக்கிள்கள், 9 சக்கர நாற்காலிகள், 245 ஊன்றுகோல்கள், 400 காதொலிக் கருவிகள், 400 சோலார் பேட்டரிகள், 370 பேர்களுக்கு ஆடைகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவப் பணி

பாதிப்படைந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அரசு மருத்துவத் துறையைச் சேர்ந்த 235 மருத்துவர்கள், 115 செவிலியர்கள், 66 மருத்துவப் பணியாளர்கள் மற்றும் 206 பிற பணியாளர்களும், அரசு சாரா மருத்துவர்கள் 173 பேர், செவிலியர்கள் 52 பேர், மருத்துவப் பணியாளர்கள் 55 பேர், பிற பணியாளர்கள் 225 பேர் ஆகியோர் உட்பட 1,127 பேர் மருத்துவ சிகிச்சைப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.

மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள்

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்குவதற்கு 13.88 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 12.1.2005 வரை 52.80 இலட்சம் ரூபாய் மீனவளத்துறை இணை இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளது. உதவித்தொகை வழங்கும் பணியில் குழு மேலாளர்களுக்கு உதவி புரிய 8 உதவி இயக்குநர்கள் பணிக்கப்பட்டு, மீதமுள்ள தொகையும் சில நாட்களில் வழங்கப்பட்டது.

தற்காலிகக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட தற்காலிகக் குடியிருப்புகளுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்கியுள்ளது. தற்சமயம் மாவட்ட நிருவாகத் திடமிருந்து இணைப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது. மொத்தமுள்ள வீடுகளுக்கும் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. தெருவிளக்கு களைப் பொறுத்தவரை மொத்தமுள்ள 3,560 தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலவச பேருந்துப் பயண அட்டை

நாகப்பட்டினத்திலுள்ள 45 கிராமங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளிகளுக்குச் சென்று வர இலவச பேருந்துப் பயண அட்டைகள் அரசு போக்குவரத்துக் கழகத்தால் வழங்கப்பட்டது. 4,126 இலவசப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் தத்தம் வழித்தடங்களில் தடையின்றி இயக்கப் படுகின்றன.

நியாய விலைக் கடைகள் திறப்பு

12.1.2005 அன்று 73 பகுதி/முழு நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை பகுதி/முழுநேர நியாய விலைக்கடைகள் இல்லாத பாதிக்கப்பட்ட பகுதிகளில் பகுதிநேர கடைகள் திறக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது. 13,917 குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன.

கடலோரங்களில் காடு வளர்ப்புத் திட்டம்

வனப் பாதுகாவலர் உத்தரவின் அடிப்படையில் கீச்சாங்குப்பம் மற்றும் செருதூர் கிராமங்களில் சவுக்கு மற்றும் தென்னை நாற்றுக்கள் வனத்துறையினரால் நடவு செய்யப்படுகிறது. அனைத்துக் கடலோர வாழ் மக்களையும் காக்கும் பொருட்டு காடு வளர்ப்புத் திட்டத்தைச் செயலாக்க வனத்துறை திட்டமிட்டுள்ளது.

கால்நடைகளுக்குச் சிகிச்சை

கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த 49,854 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 35 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கால்நடைத்துறை இயக்குநரின் அறிவுறுத்தலின்படி உடனடியாக மேலும் 10 முகாம்கள் திறக்கப்பட உள்ளன. 58 டன் கால்நடைத் தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு கால்நடைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் குழுவினரின் நிவாரண உதவிகள்

300 பேர்களைக் கொண்ட பஞ்சாப் குழு ஒன்று உணவு தானியங்கள், மருந்துகள், நிவாரணப் பொருட்களுடன் 28 ரயில் பெட்டிகளில் நாகப்பட்டினம் வந்தடைந்தது. இந்தக் குழு நாகப்பட்டினத்திலுள்ள (சில பகுதிகளைத் தெரிந் தெடுத்துள்ளது.) பாதிக்கப்பட்டமக்களுக்கு உணவு வழங்க மொத்த நிவாரணப் பொருட்களும் தமிழ்நாடு உணவுக் கிடங்கில் மற்ற பிற நிவாரண மையங்களுக்குப் பிரித்து அனுப்பும் பொருட்டு சேமிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்

சுனாமியால் உயிரிழந்தோர் குடும்பங்களைச் சேர்ந்த அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குறைந்தபட்ச தொகுப்பு நிவாரண உதவிகளை வழங்கிட குழு மேலாளர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

18.1.2005 வரை மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் வருமாறு:

நிவாரணத் தொகை தலா ரூ. 1 இலட்சம் வீதம் 3,868 நபர்களுக்கு ரூ. 38.68 கோடி வழங்கப்பட்டது. பழுதுபட்ட 37,824 வீடுகளுக்கான நிவாரணமாக ரூ.18.58 கோடி வழங்கப்பட்டுள்ளது. வருவாய் இழந்தோருக்கான தொகுப்பு நிவாரணம் 32,960 பேர்களுக்கு ரூ.9.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. ரூ.3.77 கோடியில் மீன்பிடி வலைகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஆக ரூ. 70.62 கோடி நிவாரணமாக அரசு வழங்கியுள்ளது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 176, நடைபெற்றுக் கொண்டிருக்கும் பள்ளிகள் 173, முகாம்கள் 3, தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 1,023. இவை அனைத்தும் செயல்படுகின்றன.

சுகாதாரப் பணிகள்

இதுபோன்ற பேரழிவு ஏற்படும் போது மக்களுக்கு காலரா, டைபாய்டு போன்ற தொற்று நோய் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணியை தமிழக அரசு முடுக்கி விட்டது.

★ 30 இலட்சம் குளோரின் மாத்திரைகள், பிளீச்சிங் பவுடர் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டது.

★ உணவகங்களில் விற்பனை செய்யப்படும் தின்பண்டங்கள் சோதனை செய்யப்பட்டது.

★ மீட்கப்பட்ட சடலங்களைப் புதைக்கும்போது பிளீச்சிங் மற்றும் சுண்ணாம்புப் பவுடர் தூவப்பட்டது. பின்னர் மண் போட்டு மூடப்பட்டது.

★ தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சடலங்களை அப்புறப்படுத்தும் பணிகளைச் செய்தனர்.

மருத்துவக் குழுக்கள் – ஆம்புலன்சுகள்

நாகை மாவட்டத்திற்கு மருத்துவப் பணிகளை மேற்கொள்ள அரசு மருத்துவத்துறை உடனடியாக மருத்துவக் குழுக்களை நியமித்தது.

★ 60 மருத்துவர்கள் கொண்ட சிறப்பு மருத்துவக் குழு மற்றும்

★ 20 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மருத்துவப் பணிகளைத் தொடங்கிச் செய்தது.

சீருடைகள் – புத்தகங்கள்

பாதிக்கப்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகளையும், பள்ளிப் பாடப்புத்தகங்களையும் மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் வழங்கினார். வேளாங்கண்ணியை அடுத்த செருதூரில் நடைபெற்று வந்த மறுசீரமைப்புப் பணிகளை அவர் பார்வையிட்டார்.

நாகை மாவட்டத்தில் உள்ள 25,640 மாணவ, மாணவியர்களுக்கு பாடநூல்களும், சீருடைகளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி வழங்கப்படுவதாக மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

நிவாரண உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நிவாரண உதவிகள் 2.1.2005 மற்றும் 3.1.2005 அன்று நாகை மாவட்டத்தில் வழங்கப்பட்டன.

2.1.2005 அன்று பாடசாலை தெருவில் 180 குடும்பங்களுக்கு ரூ.7,20,000 மதிப்பிலும், பிரோடு தெருவில் 61 குடும்பங்களுக்கு ரூ.2,44,000 மதிப்பிலும், 3.1.2005 அன்று நாகூர் பட்டினம்பூரில் 759 குடும்பங்களுக்கு ரூ.30,36,000 மதிப்பிலும், சில்லடி தர்காவில் 283 குடும்பங்களுக்கு ரூ.11,32,000 மதிப்பிலும் நிவாரண உதவிகளை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் வழங்கினார். வெள்ளக்கோவில் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 95 பேருக்கு ரூ.3,80,000 மதிப்பில் பொருட்களும், இறந்து போன 19 பேர் குடும்பத்துக்கு ரூ.6,28,000மும், மேலும் இறந்து போன 7 பேர் குடும்பத்துக்கு ரூ.7 இலட்சமும், மாணிக்கம் பங்கி கிராமத்தில் பாதிக்கப்பட்ட 122 பேருக்கு ரூ.4,08,000மும், இறந்துபோன 11 பேர் குடும்பத்துக்கு ரூ.11 இலட்சமும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன் அவர்களால் வழங்கப் பட்டது.

வேதாரண்யம் வட்டம் அகஸ்தியம்பள்ளி கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை பகுதிகளில் பாதிக்கப்பட்ட 834 நபர்களுக்கு சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.

மீண்டும் தொழிலைத் தொடங்கிய மீனவர்கள்

நாகை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக அரசு நிவாரண உதவிகளை வழங்கியது. இத்துடன், தற்காலிக இருப்பிடங்களையும் அரசு ஏற்பாடு செய்து தந்தது. மேலும், மனஅளவில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளையும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அரசின் உதவிகளையும் அரசு அளித்த ஊக்கத்தையும் பெற்ற மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை மீண்டும் தொடங்க முடிவு செய்தனர்.

9.1.2005 அன்று மதியம் 1 மணியளவில் கோடியக்கரையில் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்களை உற்சாகப்படுத்தி மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பச்சைக்கொடியை காட்டித் தொடங்கி வைத்து உடன் சென்றார். இம் மீனவர் குழுவினர் சுமார் 3 மணி நேரம் மீன்பிடித்து கரைக்கு வந்தனர். பின்னர் அப்போது பிடிக்கப்பட்ட மீன்கள் ஏலம் விடப்பட்டது. ரூ.1,300க்கு ஏலம் கேட்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையை அளித்து மீன்களைப் பெற்று பொது மக்களிடம் வழங்கினார்.

பழுது நீக்கம் செய்யப்பட்ட 3 பைபர் படகுகளில் மீனவர்கள் பால்ராஜ், எல். வீரமணி, செல்வம், வி. சுப்பிரமணியன், ராமசாமி, சக்திவேல், கோபால், நாகராசன் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இராணுவ பிரிகேடியர் மணவாளன் ஆகியோரும் உடன் சென்றனர். வெள்ளோட்டமாக கடலுக்குள் சென்றுவந்தபின் மாவட்ட ஆட்சியர் கூறும் போது, "அரசின் சார்பில் இராணுவ உதவியுடன் 30 மெக்கானிக்குகள் மூலம் 25 பைபர் படகுகள் பழுது நீக்கம் செய்து தரப்படும்" என்றார்.

தடுப்பு மருந்துகள்

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு தட்டம்மை நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கையாக மேலும் 6 மாதம் முதல் 5 வயதுக் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இத்துடன் வைட்டமின் 'ஏ' மருந்தும், ஓ.ஆர்.எஸ். சர்க்கரை உப்புக் கரைசலும் போலியோ சொட்டு மருந்தும் வழங்கப் பட்டது.

தற்காலிகக் குடியிருப்புகள்

செருதூர் கிராமத்தில் 175 குடும்பங்களுக்கு ரூ.1.51 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தற்காலிகக் குடியிருப்புகளை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் திறந்து வைத்தார். பின்னர் அவர் கூறும் போது, "இக்குடியிருப்பு ஒரு முன்மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல காமேஸ்வரத்தில் இரண்டும், விழுந்தமாவடியில் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. 100 அடி நீளம் 20 அடி அகலம் கொண்ட இக்குடியிருப்பில் சுகாதாரம், மின்சாரம், கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

மேலும், செருதூரில் பள்ளிக் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் ரூ.2.50 இலட்சம் மதிப்பில் விளையாட்டுப் பொருள்களை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அமைச்சர் மேற்பார்வை

வேதாரண்யம் ஒன்றியம் புஷ்பவனம், மீனவர் காலனி, தலைஞாயிறு ஒன்றியம் வெள்ளப்பள்ளம், வானவன் மகாதேவி, நாலுவேதபதி ஆகிய ஊர்களில் நிவாரணப் பணிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் பார்வையிட்டு மக்கள் குறைகளை நிவர்த்தி செய்ய உத்தரவிட்டார்.

பள்ளிக் கட்டடம் புதுப்பிப்பு

ஆற்காட்டுத் துறையில் ரூ.4 இலட்சம் மதிப்பில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் சீரமைப்புப் பணியையும், வானவன் மகாதேவி கடற்கரைப் பகுதி சீரமைப்பு, சாலைகள் சீரமைப்பு, புயல் பாதுகாப்பு இல்லம் அருகே 150 மீனவர்கள் தங்கும் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்புப் பணி ஆகியவற்றை மேற்பார்வை குழு உறுப்பினர் டிடிவி. தினகரன், எம்.பி., பார்வையிட்டு துரிதப்படுத்தினார்.

மீனவர் குடியிருப்பில் தெரு விளக்குகள்

சீர்காழி, பழையார் பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகளை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பார்வையிட்டார். தாண்டவங்குளம், கொட்டகைமேடு, மடவாமேடு, பழையார் பகுதியில் உயிரிழந்த மீனவக் குடும்பங்களுக்கு ரூ.27 இலட்சம் நிதி வழங்கிய அமைச்சர், சின்ன கொட்டகைமேடு தற்காலிகக் குடியிருப்பு அமைக்கும் பணி, ஓலை கொட்டகைமேடு மின் கம்பங்கள் சீரமைப்புப் பணியைப் பார்வையிட்டு விரைவுபடுத்தினார். பின்னர் அங்கு புதிய தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க உத்தர விட்டார்.

நாகூர் பகுதியில் 1,000 குடியிருப்புகள்

நாகூர் பகுதியில் வீடிழந்தோருக்காக 1,000 தற்காலிகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. ஐ.ஐ.டி. வளாகத்தில் 550ம், சாமந்தன்பேட்டையில் 320ம், பனங்குடியில் 230ம் முடிவடையும் நிலையில் உள்ளது. இதில் பல்வேறு தன்னார்வ நிறுவனங்கள் ரூ.66 இலட்சத்தில் 800 வீடுகளைக் கட்டுகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரூ.16 இலட்சத்தில் 200 வீடுகளைக் கட்டி வருகின்றது.

தூய்மைப் பணி

15.1.2005 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:–

"நிவாரணப் பணிகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. நாகப்பட்டினம் நகரைத் தூய்மைப்படுத்த 600 துப்புரவுப் பணியாளர்கள், என்.எஸ்.எஸ். மாணவர்கள், சேவை அமைப்பினர் 250 பேர் ஈடுபட்டுள்ளனர். 60 லாரிகள், 20 பொக்லைன் எந்திரங்களுடன் நடக்கும் இப்பணி 3 மாதத்தில் நிறைவடையும். அக்கரைப்பேட்டை, சின்னூர்பேட்டை, நாகை அரசு மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் உப்புநீரைக் குடிநீராக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமி பாதித்த பகுதியில் மின் கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட மாட்டாது. 2,200 தற்காலிகக் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது." என்று அவர் கூறினார்.

பூம்புகார் மீனவர்களுக்கு ரூ.90 இலட்சம் உதவி

பூம்புகாரில் மீனவர்களின் 760 கட்டுமரங்கள், 70 பைபர் படகுகள், வலைகள் உள்ளிட்டவற்றைச் சீரமைக்க ஒரே நாளில் ரூ.90 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

76 கடலோரக் கிராமங்களில் 400 குடிநீர் மாதிரிகளும், 10க்கும் அதிகமான மீன் வகைகளும் பரிசோதனை செய்யப்பட்டு அவற்றால் தொற்றுநோய் இல்லை எனக் கண்டறியப்பட்டது.

உப்பளங்கள் ஆய்வு

வேதாரண்யம், அகஸ்தியம்பள்ளி, தவக்காடு மற்றும் கோடியக்கரை பகுதிகளில் உள்ள உப்பளங்களை ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் திருமதி. சாந்த ஷீலா நாயர் பார்வையிட்டார். அதில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், தொழிலாளர்கள் வேலை இழப்பு ஆகியவற்றை கணக்கிட்டு அரசுக்குக் கருத்துரு அனுப்ப அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சேவை இல்லம்

சுனாமியால் பெற்றோரை இழந்த 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குச் சேவை இல்லம் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டதற்கிணங்க நாகை மாவட்டம் சீர்காழியில் ஒரு சேவை இல்லத்தை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.

உலக வங்கி மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கிக் குழு பார்வையிடுதல்

உலக வங்கி மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் குழு உறுப்பினர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தை 17.1.2005 அன்று பார்வையிட்டனர். வங்கிக் குழுவினரை வரவேற்ற நாகை ஆட்சித் தலைவர், அந்த மாவட்டத்தில் சுனாமியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றியும் உயிர்ச் சேதம் பற்றியும் விவரித்துக் கூறினார்.

பொது மற்றும் தனியார் ஒப்பந்தம்

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பொது மற்றும் தனியார் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிரந்தர மாற்று இடம் மற்றும் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களின் மறு சீரமைப்பு குறித்தும் அரசு வெளியிட்ட இரண்டு அரசாணைகளுக்கு தன்னார்வ மற்றும் தொண்டு நிறுவனங்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. சுனாமி தாக்கிய இடங்களுக்கு நிரந்தர வீடு மற்றும் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அடிப்படை வசதியை செய்து தருவதில் மாவட்ட நிருவாகமும் தன்னுடைய பங்கை தொண்டு நிறுவனங்களுடன் செய்து வருகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக தகவல் பலகையில் அரசாணைகளின் நகல்களும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் பற்றிய தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் கடலோரப் பகுதிகள் பற்றிய ஆய்வு

தேசிய கடல் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த 10 பேர் அடங்கிய குழு திரு. ஜி.சி. பட்டாச்சார்யா தலைமையில் நாகையில் சுனாமி தாக்குதலுக்குப் பின்பு நிலவும் நிலை குறித்து அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வில் கடலோர நில வடிவம், கடல் பொறியியல், அலைகள் அளவு, கடலோர சுற்றுச்சூழல் பற்றிய ஆராய்ச்சிகளும் அடங்கும்.

நிவாரண உதவிகள் வழங்கும் பணி

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் அரசு பரந்த மனதுடன் நிவாரண உதவிகளை அறிவித்துள்ளது. 11 குழுக்களாக அமைத்து, ஒவ்வொரு குழுவும் ஒரு ஐ.ஏ.எஸ்., அதிகாரி தலைமையிலும் இதுதவிர, 15 உயர் அதிகாரிகளும் இந்த நிவாரண உதவி நடவடிக்கைகளில் செயல்பட்டு வருகின்றனர். ஒரு சில கிராம மக்கள் நிவாரண உதவி கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூட்டமாக

திரண்ட வண்ணம் உள்ளனர். இதுகுறித்து தலைமைக் குழுத் தலைவரை அணுகி தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து முறையிட்டால் தகுந்த உதவிப் பொருட்கள் கிடைக்கும் என்றும் பாதிக்கப் பட்டவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

போலி நிவாரண உரிமை குற்ற நடவடிக்கை

நிவாரணம் பெற போலி ஆவணங்களைக் காட்டி உதவிகள் பெற முயற்சிப்போர் மீது கடுமையான கிரிமினல் குற்ற நடவடிக்கையை மாவட்ட நிருவாகம் எடுக்கும்.

அனாதை இல்லம்

சிக்கல் பகுதியில் அமைக்கப்பட்ட அனாதை இல்லம், கூடுதலாக 77 குழந்தைகளை சேர்ப்பதற்காகவும், மேலும் பல வசதிகளை அளிப்பதற்காகவும் கடம்பாடி என்ற இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சமூகநலத்துறை கடந்த 17.1.2005 அரசு சேவை விடுதி ஒன்றைத் தொடங்கியுள்ளது. மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சீர்காழி சட்டமன்ற தொகுதி உறுப்பினர், சீர்காழி நகராட்சி தலைவர், ஆணையர் மற்றும் மாவட்ட சமூக நலத்துறை அதிகாரி ஆகியோர் இந்த அரசு விடுதியைப் பார்வையிட்டனர். மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பாத்திரங்கள், கேஸ் இணைப்பு, துணிகள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்களைத் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து விடுதியில் உள்ள பெண்களுக்கு வழங்கியுள்ளார்.

குடிநீர் வழங்குதல் மற்றும் சீரமைப்புப் பணிகள்

சுனாமி பாதித்த பகுதிகளில் 66 குடிநீர் வழங்கும் மையங்கள் பாதிப்படைந்து தற்போது அவை சீரமைக்கப்பட்டு 20.1.2005 முதல் குடிநீர் வழங்கும் பணிகள் முழுமையாகத் தொடங்கப் பட்டது.

66 மையங்களுக்கு 27 நீர் ஆதாரங்களிலிருந்து அதாவது ஆழ்கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த 27 நீர் ஆதாரங்களில், 22 ஆதாரங்கள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் உள்ளது. 5 நீர் ஆதாரங்கள் மட்டுமே ஒரு கிலோ மீட்டருக்குள் அமைந் துள்ளது. இந்த 5 இடங்களில் விழுந்தமாவடி என்ற மீனவப் பகுதியில் அமைந்துள்ள ஆழ்கிணறு ஒன்றில் சுனாமி கடல் தண்ணீர் புகுந்ததால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கடல் நீர் புகுந்ததால் கிணற்றில் உள்ள தண்ணீர் அளவு 21,350 பி.பி.எம். வரை உயர்ந்தது. பின்னர் 3 நாட்களுக்கு இந்த நீர் பம்புகள் மூலம் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு 750 பி.பி.எம்., அளவுக்கு இறங்கியது. தற்போது கிணறு உபயோகப்படுத்தும் நிலையில் உள்ளது.

தற்காப்பு நடவடிக்கையாக ஒரு கிலோ மீட்டருக்குள் உள்ள 4 ஆழ்கிணறுகளும் சரி செய்யப்பட்டு உபயோகப் படுத்தும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள நீர் ஆதாரங்கள் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகாத காரணத்தினால் அவை சரியாகச் செயல்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட நீர் ஆதாரங்களில் குளோரின் சேர்க்கப்பட்டு அவை தொடர் கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளது. குறைந்தபட்சம் 0.5 பி.பி.எம். முதல் 1.00 பி.பி.எம். வரை அளவிலான குளோரின் மீதம் மட்டுமே உள்ளதா என்பதை சரிபார்க்க சுமார் 20 பொறியாளர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து

நாகை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து 73 சுனாமி தற்காலிக புனர் வாழ்வு மையங்களில் தமிழ்நாடு அரசு அனுமதியுடன் அனைத்து கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் 0–36 மாதக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு இரட்டிப்பு அளவாக காலை மற்றும் மாலை என இரண்டு முறை வழங்கப்பட்டது. இதில் தோராயமாக 2,500 குழந்தைகளும் 1,120 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயன் பெறுவர்.

3 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் மதியம் 12.30 மணி மற்றும் மாலை 4.00 மணி என இரண்டு முறை உணவு வழங்கப்பட உள்ளது. இதில் சுமாராக 3,000 குழந்தைகள் பயன்பெறுவர். இவர்களுக்கு மையங்களில் முன்பருவக் கல்வியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 17.1.2005 முதல் 21.1.2005 வரை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது அவர்கள் தங்கியுள்ள இடங்களுக்கு சென்று கல்லூரி மாணவ, மாணவிகளாலும், திட்டத்தைச் சார்ந்த முதுநிலைப் பயிற்றுநர்கள், குழந்தை பயிற்றுநர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், திட்ட அலுவலர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் உதவி இயக்குநர் (பொறுப்பு) சென்னை ஆகியோர் இணைந்து 4 குழுக்களாக பிரிந்து பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, தாய்ப்பாலின் அவசியம், தன் சுத்தம் மற்றும் சுற்றுப்புறச் சுத்தம், தொற்று நோய்கள் வராமல் தடுப்பது எப்படி, என்பன பற்றிய விழிப்புணர்வுக் கல்வியைத் திட்டத்தின் தொடர்பு பிரிவின் மூலமாக வழங்கப்பட்டது. மாலையில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி திரைப்படங்கள் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மையங்கள் செயல்பாட்டிற்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் தட்டுகள், டம்ளர் என அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட உள்ளது.

மேலும், நாகை மாவட்டத்தில் கடற்கரை சார்ந்த திட்டப் பணிகளின் பயனை அடையாத 67 கிராமங்களில் புதிய மையங்கள் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இதன் மூலம் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த ஏழு வட்டாரங்களில் 67 கிராமங்கள் திட்டப் பணிகளின் பயன்களை அடைவார்கள்.

அனைத்து துறை அலுவலர் கூட்டம்

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர் கூட்டம் உள்ளாட்சித்துறை செயலர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உள்ளாட்சித்துறைச் செயலர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள்:

1. மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ரேஷன் கார்டுகள் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கென்று 33,000 ரேஷன் கார்டுகள் வந்துள்ளன. இதுவரை 1,152 கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் ரேஷன் கார்டுகள் விநியோகிக்கும் பணி முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.
2. நியாய விலைக்கடைகள் இல்லாத பாதிக்கப்பட்ட கிராமங்களில் உடனடியாகப் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படவேண்டும் என மாவட்ட வழங்கல் அலுவலருக்கு உத்தரவிட்டார்.
3. பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டது. இதில் 4,400 பேருக்கு புத்தகங்களும், நோட்டு புத்தகங்கள், 1,45,000 குழந்தைகளுக்கும் சீருடைகள், 29,853 மாணவர்களுக்கும் 29,853 மாணவிகளுக்கு சீருடைகளும் பெறப்பட்டு வழங்கப்பட்டு விட்டது.
4. பாதிக்கப்பட்ட கிராமங்களில் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் மின்கம்பங்கள் மின்மாற்றிகள் மாற்றப்பட்டு மின் சப்ளை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் தெரு விளக்குகள் அனைத்தும் 100 சதம் எரியும் வகையில் மின்வாரியம் உறுதி செய்யவேண்டும் என கேட்டுக் கொண்டார். தெரு விளக்குகள் 3,560, OHT – 28, மின்மாற்றிகள் – 180, மின்கம்பங்கள் – 1856 ஆகியவை சரிசெய்யப் பட்டுள்ளன.
5. பாதிக்கப்பட்ட கிராமங்களில் போக்குவரத்துத்துறை பேருந்து இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவும், மாவட்டத்தில் உள்ள மொத்தப் பள்ளிகள் 176 இதில் 157 பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பள்ளிகளில் நிவாரண முகாம்கள் உள்ளதால் 16 பள்ளிகளில் திறக்க முடியவில்லை. மேலும் சேதமான 3 பள்ளிகளும் திறக்க முடியவில்லை. மாணவ மாணவிகள் எவ்விதப் பிரச்சினையுமின்றி பள்ளிக்குச் செல்லும் வகையில் போக்குவரத்துத் துறை உறுதி செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.
6. நாகை மற்றும் நாகூரில் நகராட்சி துப்புறவுப் பணியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கொண்டு துப்புறவு முகாம்கள் தொடங்க வேண்டும் எனவும்,
7. நாகப்பட்டினத்தில் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு குப்பைகளை அகற்றுதல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் முனைப்புடன் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றும்,
8. வேளாண்மைப் பொறியியல் துறையினர் கடல் நீர் புகுந்த விவசாய நிலங்கள் மற்றும் கிணறுகளில் உப்பு நீர் அகற்றும் பணிகளை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.
9. திருமுல்லைவாசல், கல்லார் ஆகிய பகுதிகளில் டிராக்டர் கொண்டு உப்பு நீர் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.
10. பொதுப் பணித் துறையினர் மாவட்டத்தில் 68 அரசுக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளது என தெரிவித்துள்ளனர். தக்க முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி நிதியுதவிப் பெற்று அரசு கட்டடங்களை சரி செய்ய வேண்டும் எனக் கூறினார்.
11. நிவாரண உதவிகள் வழங்குவதற்காக அரசுடன் இணைந்து பணியாற்றும் வகையிலும் நிவாரண உதவிகள் பெறுபவர்களுக்கு உதவிடும் வகையிலும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் தனிப்பிரிவு

ஓங்கட்டும் உலக சகோதரத்துவம்; ஒளிரட்டும் மனித நேயம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
பக்ரீத் வாழ்த்து

தியாகத் திருநாளாம் 'பக்ரீத்' திருநாளை இறையுணர்வுடன் கொண்டாடி மகிழும் இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் என் இனிய 'பக்ரீத்' நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இறைவன் ஆணைக்குக் கட்டுப்படுவதே வாழ்வின் நெறி என்று வாழ்ந்த இறைத் தூதர் இப்ராஹிம் அவர்களது தியாகத்தை நினைவு கூர்கின்ற திருநாளே 'பக்ரீத்' திருநாளாகும்.

வைகறை வேளையில் துயில் எழுந்து, வணக்கத்துக்குரிய இறைவனை வணங்கி, விருந்தோம்பி மகிழும் இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த 'பக்ரீத்' திருநாள் வாழ்த்துகளை மறுமுறையும் மட்டற்ற மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓங்கட்டும் உலக சகோதரத்துவம்!
ஒளிரட்டும் மனித நேயம்!

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

அமைக்கப்பட்டது. மேலும் நிவாரண உதவிகள் பெறுவதில் சிரமம் இருந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

12. அக்கரைப்பேட்டையில் நாகை துறைமுக ஊழியர்கள் மற்றும் இராணுவத்தைக் கொண்டு பாதிக்கப்பட்ட படகுகளில் பழுது அகற்றும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதேபோல் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களின் முயற்சியால் தூத்துக்குடி மற்றும் சென்னையிலிருந்து 200 படகு பழுது நீக்கும் தொழில்நுட்பப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு பழுது நீக்கி வருகிறார்கள்.
13. பாதிக்கப்பட்ட கிராமங்களில் பசுமாடுகள் 944ம் எருமை மாடுகள் 52ம் காளை மாடுகள் 141ம் வெள்ளாடுகள் 9,704ம் கோழிகள் 329ம் நாய்கள் 104ம் இறந்துள்ளன.
14. பூம்புகார் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பழுதுபட்டுள்ள காரணத்தினால் அவ்விடங்களில் உடனடியாகத் தற்காலிகமாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்க இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டுள்ளது. மேலும் அவ்விடங்களில் தடுப்பூசி மருந்துகள் வைக்கத் தேவையான குளிர்சாதனப் பெட்டிகள் இயங்குவதற்கு உரிய மின்சாரம் வழங்கவும் (ஜென்செட்) இராணுவத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.
15. மாவட்டம் முழுவதும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பூசி வழங்க தமிழ்நாட்டில் முதல் முறையாக நவீன ஊசி முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

– எஸ். கண்ணதாசன்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவ கூடுதலாக நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் 15.1.2005 அன்று மத்திய வேளாண்மை, நுகர்வோர், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. சரத்பவாருடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களில் சுனாமி பேரலைகளால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 7.12.2005 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களை, ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேரலைகளால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும், நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தச் சந்திப்பின்போது மத்திய அமைச்சர் சரத்பவாரும் உடனிருந்தார். இதனைத் தொடர்ந்து அதே நாளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சரத்பவாரைச் சந்தித்தபோது மாண்புமிகு மத்திய அமைச்சர், நிவாரண நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை மீண்டும் சந்தித்து நிவாரணப் பணிகள் குறித்தும், மீனவர்களுக்கு வழங்கப்பட உள்ள உதவிகள் குறித்தும் ஆலோசிக்க உள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து 15.1.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இருவேறு பிரச்சினைக்ள் முக்கியமாக ஆராயப்பட்டன. இதில் மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் தொடரத் தேவையான முழு உதவிகள் அளிப்பது குறித்தும், சுனாமியால் வீடிழந்தோருக்குப் பாதுகாப்பான பகுதிகளில் நிரந்தர வீடுகள் கட்டித் தருவது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்களின் 31 ஆயிரத்து 383 கட்டுமரங்கள் முழுவதுமாகச் சேதம் அடைந்துள்ளதாகவும், அதற்கு மாற்று

ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இவற்றில் மரத்தாலான கட்டுமரங்கள் மற்றும் கண்ணாடி இழை பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்ட கட்டு மரங்கள் என இருவகைப் படகுகள் அடங்கும். சேதமடைந்த கட்டுமரங்கள் அனைத்தையும் கண்ணாடி இழை பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பிடி வலைகளுடன் கூடிய கட்டுமரமாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொன்றும் ரூ.1.5 இலட்சம் செலவு பிடிக்கும். இந்த கட்டுமரங்களை இலவசமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதற்கு ஆகும் மொத்த செலவான ரூ.470.75 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இவை தவிர சேதமடைந்த 8,140 மரத்தாலும் கண்ணாடி இழை பிளாஸ்டிக்கினாலும் ஆன வல்லங்கள் எனப்படும் கட்டுமரத்திற்கும், மீன்பிடிப் படகுகளுக்கும் இடையேயான படகுகளைப் புதிதாக வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இவற்றை இலவசமாகத் தலா ரூ.1.5 இலட்சம் செலவில் வழங்க ரூ.122.10 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், இயந்திரப் படகுகளைப் பொறுத்த மட்டில் 3 பிரிவுகளாக அவற்றைப் பிரிக்கலாம். முதல் பிரிவு ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 7 இலட்சம் மதிப்புள்ள ஐ.பி.எம், படகுகள், அடுத்து ரூ. 8 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் பிடிக்கும் 40 அடிக்கும் குறைவான எஸ்.டி.பி. படகுகள், 3ஆவது வகை ரூ.15 இலட்சம் முதல் ரூ.16 இலட்சம் மதிப்பிலுள்ள 40 அடிக்கும் அதிகமான எஸ்.டி.பி. படகுகள். இவற்றிற்கான செலவு அதிகம் என்றாலும், இவை அனைத்தும் முற்றிலும் சேதம் அடைந்துள்ள நிலையிலும் இவற்றிற்குச் சொந்த மானவர்களின் வீடுகளும் முற்றிலும் அழிந்துவிட்ட நிலையிலும் இந்த உதவி செய்து தரப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. இந்த வகையில் 2,655 இயந்திரப் படகுகளுக்கு ஆகும் மொத்தச் செலவான ரூ.211.86 கோடியை மத்திய அரசு முழுவதுமாக வழங்க வேண்டும்.

இந்த வகையில் மீன்பிடிப் படகுகள், இயந்திரப் படகுகள், மீன்பிடி வலைகள், என்ஜின்கள் ஆகியவற்றிற்கு ஆகும் மொத்த செலவான ரூ.804.71 கோடியை மத்திய அரசு முழுவதுமாக வழங்க வேண்டும். இது தவிர சேதமடைந்துள்ள மீன்பிடி படகுகள், இயந்திரப் படகுகள் மற்றும் அவற்றிற்கான எஞ்ஜின்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதிய வலைகள் வாங்குவதற்கான செலவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீன்பிடித் துறைமுகங்களைச் சீரமைத்து நவீனப்படுத்தும் பணியையும் கூடுதலாக மேற்கொள்ளத் தேவையான ரூ.100 கோடிக்கான மதிப்பீடு ஒன்றை ஏற்கெனவே தனியாக தமிழக அரசு அளித்துள்ளது. மேற்படி, துறைமுகங்களைச் சீரமைப்பது மட்டுமல்லாமல் அவற்றை முற்றிலுமாக நவீனப்படுத்தி, தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

மீன்வளர்ப்பிற்கு ஏற்றச் சூழ்நிலைகளை ஏற்படுத்தவும், படகுகளின் நடமாட்டத்திற்கும் உதவும் வகையில் 52 நதி முகப்புகளை ஆழப்படுத்தும் பணி ரூ.15.60 கோடியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் ஆகும் மொத்தச் செலவான ரூ.1,030.93 கோடியை மத்திய அரசு முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இரண்டாவதாக உள்ள பிரச்சினை, வீடுகளை இழந்தோருக்கு நிரந்தர வீடுகளைக் கட்டித் தரும் பணி. இது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறுகையில், இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடு கட்டத் தேவையான இடத்தை, கடலில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் தேர்வு செய்யும் பணியை மாநில அரசு மேற்கொள்ளும் என்றும், இதற்குத் தேவைப்படும் முதல் கட்டத் தவணையாக ரூ.50 கோடியை வழங்குமாறு தமிழக அரசு அளித்துள்ள திட்டக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் முழுத்தொகை பற்றிய விவரங்கள் பின்னர் அளிக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது ஒரு புதிய பிரச்சினை என்பதால் இதற்கான நிதியையும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இந்தக் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடரத் தேவையான வசதிகளை என்.ஜி.ஓ.க்கள் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியைக் கொண்டு செயல்படுத்தப் படும் என்றும் இதற்கான புதிய திட்டம் வகுக்கப்பட்டு அரசாணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இதன் மூலம் என்.ஜி.ஓக்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவை இப்பணியில் பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் பெரிய அளவில் ஈடுபட முடியும் என்பதைத் தெரிவித்தார்கள். இந்தப் புதிய குடியிருப்புகள் நில அதிர்ச்சி மற்றும் புயல் ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ளும் வசதியைக் கொண்டதாக அமையத் தேவையான பலத்துடன் வரைபடத்தை மாநில அரசு தயாரிக்கும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தப் பணிக்குத் தேவைப்படும் நிலம், நிலத்திற்கான ரூ.50 கோடி முதல் ரூ.100 கோடி மற்றும் கட்டுமானப் பணிக்குத் தேவைப்படும் ரூ.600 கோடி மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கத் தேவைப்படும் ரூ.100 கோடி ஆகியவற்றுடன் மொத்தமாக இந்தத் திட்டத்திற்கு ரூ.750 கோடி முதல் ரூ.800 கோடி வரை தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் என்.ஜி.ஓக்களின் பங்கு போக மீதமுள்ள பெருந் தொகையை அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வேளாண்மையைப் பொறுத்தவரை, விவசாய நிலங்கள் சுனாமி அலைகளால் மண்குவிப்பு மற்றும் உவர்நீர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 1.2 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் நிவாரண உதவியாக மாதம் 30கிலோ அரிசி மற்றும் 2 ஆண்டுகளுக்குத் தேவையான பண உதவி ஆகியவற்றுடன் நிலங்களை மீட்கத் தேவையான நிதி பற்றிய விவரங்கள் கணக்கிடப்பட்டு 15.1.2005 அன்று அனுப்பி வைக்கப்படும் என்றும் இவற்றிற்கான செலவுகளையும் மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

உப்பளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் அவற்றில் பணிபுரியும் ஏராளமான தொழிலாளர்களின் வாழ்க்கையையும் சரிசெய்யத் தேவையான நிதி விவரங்கள் குறித்து தனியான ஒரு விவர அறிக்கையும் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன் மற்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு, தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிரானேஷ், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் திரு. என் நாராயணன், இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களுடன் கால்நடைத்துறைச் செயலாளர் திரு. பி.எம்.ஏ.ஹக்கீம், இ.ஆ.ப., இணைச் செயலாளர் திரு. அஜய் பட்டாச்சாரியா, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை செயலாளர் அஜய் மேத்தா ஆகியோரும் உடனிருந்தனர். ❖

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்குச் சென்னை மாநகராட்சியின் நிவாரணப் பணிகள்

சென்னையில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தங்குமிடம், உணவு, குடிநீர், மருத்துவ வசதி ஆகியவற்றைச் சென்னை மாநகராட்சி செய்தது. பொதுமக்களுக்கு உதவுவதற்காக 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை, போதிய தொலைபேசி வசதியுடன் ரிப்பன் மாளிகையில் உடனடியாக ஏற்படுத்தப்பட்டது, மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க 13 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்த இடங்களில் மொத்தம் 40 மருத்துவர்கள், எட்டு ஆம்புலன்ஸ் மற்றும் 150 மருத்துவப் பணியாளர்கள் மருத்துவப் பணிகளை ஆற்றினர். மேலும், பாதிக்கப் பட்ட இடங்களில் தொற்றுநோய் பரவாமல் இருக்க கிருமிநாசினி மருந்து, பிளிச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டப் பகுதிகளிலிருந்து குப்பைகள் உடனடியாக அகற்றப்பட்டதுடன் சுகாதாரமான உணவு மற்றும் குடிநீரையே அருந்துமாறு சென்னை மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டனர். சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாகச் சுத்தமான குடிநீரைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் சுத்தமானதா என்று பரிசோதிக்கப் பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கும் கடற்கரைப் பகுதியிலுள்ள 5,000 குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பூசி மற்றும் வைட்டமின் “ஏ” மருந்து அளிக்கப்பட்டது.

இந்த இயற்கைச் சீற்றத்தால் உயிரிழந்தவர்களைக் கட்டணம் ஏதுமின்றி நல்லடக்கம் செய்வதற்குச் சென்னை மாநகராட்சி இடுகாடு மற்றும் சுடுகாடு களில் அனைத்து ஏற்பாடுகளையும் சென்னை மாநகராட்சி செய்தது. மேலும் உடலை எரிக்கத் தேவையான எரிபொருட்களும் மாநகராட்சி செலவில் அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் உடைமைகளைப் பாதுகாக்க காவல்துறையின் உதவியுடன் தக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதிய மின்வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.



பொதுமக்கள் தங்க வைக்கப்பட்ட இடங்கள்

மண்டலம் 1, 2, 6, மற்றும் 10 ஆகியவற்றில் 11 மாநகராட்சிப்பள்ளிகள், 4 சமுதாய நலக்கூடங்கள் மற்றும் 9 தனியார் திருமண மண்டபங்கள், கோவில்கள், மாதா கோவில்கள் ஆகியவற்றில் பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டனர்.

சிந்தாதரிப்பேட்டை, கோபாலபுரம், பெரம்பூர், பேசின் பாலம் ஆகிய இடங்களிலுள்ள சென்னை மாநகராட்சி சமையல் கூடங்கள் மற்றும் 8 மாநகராட்சி சமுதாயக் கூடங்கள், ஆகியவற்றில் உணவு தயாரிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. உணவகங்களிலிருந்து மாநகராட்சியால் நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இது தவிர தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களின் மூலம் அளிக்கப்படும் உணவுப் பொட்டலங்கள் மற்றும் ரொட்டிகள் ஆகியவைகளும் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப் பட்டன.

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் அரிசி, சமையல் பொருட்கள், பாத்திரங்கள், மருந்துப் பொருட்கள், போர்வைகள், ஆடைகள் மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி என்ற பெயரில் வங்கி வரைவோலை ஆகியவற்றைப் பொது மக்களிடமிருந்து பெறுவதற்காக ரிப்பன் மாளிகையில் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு உதவிப் பொருட்கள் பெறப்பட்டன.

சுனாமி அலையால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் மெரினா கடற்கரைப் பகுதியிலுள்ள உள்வட்டச்சாலை சுத்திகரிக்கப்பட்டன. பேரலையால் இழுத்து வரப்பட்ட படகுகள் மற்றும் கட்டுமரங்கள் ஆகியவை மீனவர்களின் உதவியுடன் மீண்டும் கடற்கரைப் பகுதிக்கே எடுத்துச் சென்று வைக்கப்பட்டன.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு வீடிழந்தவர்களுக்காக வட சென்னையில் சாத்தாங்காடு பகுதியில் 2,750 தற்காலிக வீடுகளும், தென் சென்னை பகுதியில் 2,750 தற்காலிக வீடுகளும் சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு வருகின்றன.

தங்களது உறவினர், வீடு மற்றும் உடைமைகளை இழந்தவர்கள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்ட போது

அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றைச் சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்தது. மேலும், அவர்கள் அரசு செலவிலேயே தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்லுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்பட்டன.

– சேது. ராமச்சந்திரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி

சுனாமியால் பாதிக்கப்பட்ட

திருநெல்வேலி மாவட்டத்தில் நிவாரணப்பணிகள்

கடந்த 26.12.2004 அன்று தெற்காசிய நாடான இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி பேரலைகள் உருவாகி தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியை மிகக் கடுமையாகத் தாக்கியது. திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் வட்டத்திற்கு உட்பட்ட 10 கடற்கரை கிராமங்கள் பாதிக்கப்பட்டன. சுனாமி பேரலைகள் தாக்கிய சிறிது நேரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட பகுதிக்கு அரசு அலுவலர்களுடன் விரைந்து சென்றார். மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ. கருப்பசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.நயினார்நாகேந்திரன் ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து சென்று பொதுமக்களுக்கு ஆறுதல் கூறினர்.

24 மணி நேரத்தில் பாதிப்புகள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அதன்படி வீடுகளை இழந்த பதினோராயிரத்து நூற்றி எழுபது நபர்களும், 20 நிவாரணமுகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இந்நிவாரண முகாம்களை 8 பிரிவுகளாக்கி ஒவ்வொன்றிற்கும் ஒரு துணை ஆட்சியர் நியமிக்கப் பட்டு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரூ.28

இலட்சம் மதிப்பில் தற்காலிக வீடுகளைக் கட்டும் பணி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 630 வீடுகளும், 435 வல்லங்களும், 1,256 கட்டுமரங்களும், 50,362 மீன்பிடி வலைகளும் சேதமடைந்துள்ளது கண்டறியப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி வீடுகளை இழந்தவர்களுக்கு ரூ.30,94,560 மதிப்பில் 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி, 1 சேலை, 2 பெட்சீட், தலா ரூ.4,000 வழங்கப்பட்டது. மேலும் எஸ்ஜிஆர்ஒய் திட்டத்தின் கீழ் வீடுகளை இழந்தவர்களுக்கு தலா ரூ.12,500 வீதம் ரூ.78,75,000 வழங்கப்பட்டுள்ளது. பொருள்களை இழந்தவர்கள் 5,372 எனக் கண்டறியப்பட்டு அவர்களுக்கு ரூ.1,56,43,264 மதிப்பில் வேட்டிகள், சேலைகள் மற்றும் தலா ரூ.2,000 வழங்கப்பட்டது.

இச்சுனாமி பேரலைகளால் திரு.ஜோசப்–இடிந்தகரை, திருமதி. சரோஜா விஜயாபதி, செல்வி. அசுவதி – கூந்தன்குழி, மரிய எலிசபெத் – பெருமணல் ஆகிய நான்கு நபர்கள் இறந்துள்ளனர். இவர்களின் குடும்பத்தாருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தலா ரூ.1 இலட்சம் உடனடியாக வழங்கப்பட்டது. மேலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள 267 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1,33,50,000 மதிப்பில் தலா ரூ.50,000 வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இதில் ரூ.25,000 மானியம் ஆகும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் கணக்கெடுக்கும் பணி மீனவளத்துறையினர் மூலம் எடுக்கப்பட்டு இதுவரை 44 மீனவர்களுக்கு ரூ.2.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படாத வண்ணம் சுகாதாரத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடப்புத்தகங்களை இழந்த 6,125 மாணவ மாணவியர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று 6,967 மாணவ மாணவியர்களுக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தற்காலிகக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இதுவரை ரூ.9,24,010 மதிப்பில் பல்வேறு வகையான பொருட்களை வழங்கியுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமி நிவாரணப் பணிகளுக்காக ரூ.30 இலட்சம் பொதுமக்களால் வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

– உல. இரவீந்திரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மலேசியா நாட்டின் நிதிஉதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 13.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மலேசிய நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. டத்தோ' எஸ். சாமிவேலு அவர்கள் (Dato' Seri S. Samy Vellu, Hon'ble Minister for Works, Malaysia) நேரில் சந்தித்து, சுனாமி பேரலைகளால் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட மலேசிய அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையாக 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். திரு. ஹம்சா ஹசன், தலைமைச் செயல் அலுவலர், மலேசிய கட்டுமானத் தொழில் மேம்பாட்டு வாரியம் (Mr. Hamzah Hasan, CEO, Construction Industry Development Board), திரு. ரோஸ்லி, சென்னையில் உள்ள மலேசியா கான்சல் ஜெனரல் (Mr. Rosli, Consul General of Malaysia at Chennai) மற்றும் திரு. கிருஷ்ணன் டான், மேலாண்மை இயக்குநர், IJM நிறுவனம், மலேசியா (Mr.Krishnan Tan,Managing Director, IJM Company) ஆகியோர் உடனிருந்தனர்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிவாரணப் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருவதையும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பாராட்டிய மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. டத்தோ' எஸ். சாமிவேலு அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் உதவிகளை வழங்கிட மலேசிய அரசு தயாராக உள்ளது என்பதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி உதவி வழங்கக் கோரிய தமது வேண்டுகோளை ஏற்று, மலேசிய அரசின் சார்பாக 2 கோடி ரூபாய் நிதி வழங்கியமைக்காக மலேசிய நாட்டு மக்களுக்கும் மாண்புமிகு மலேசிய பிரதமர் திரு. அப்துல்லா அகமது படாவி (YAB Dato' Seri Abdullah bin Ahmad Badawi) அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது இதயப் பூர்வமான நன்றியை, மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.டத்தோ'எஸ்.சாமிவேலு அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். ❖

பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 10.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு.பிரகாஷ் சிங் பாதல், சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவர் திருமதி. பீபீ ஜாகீர் கவுர் ஆகியோர் நேரில் சந்தித்து, சுனாமி பேரலைகளால் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தங்களது ஆறுதலைத் தெரிவித்துக் கொண்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதிஅளித்தனர். மேலும், 11.1.2005 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்திற்குச் சென்று, 28 இரயில் பெட்டிகளில் வந்துள்ள போர்வைகள், தலையணைகள், புதிய துணிகள், அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் வழங்கவிருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும், நான்கு இரயில் பெட்டிகளில் வந்துள்ள சமையல்காரர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட 400 பேர் அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய இருப்பதாகவும் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பின்போது, திரு.தர்ஷன் சிங் தாலிவால் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.எஸ். பாதல், திரு. இசட். எஸ். மான், திரு.வரீந்தர் பஜ்வா மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். ரேக்ரா ஆகியோர் உடன் இருந்தனர்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாராளமாக உதவிகள் வழங்கிட வேண்டும் என்ற தனது வேண்டுகோளினை ஏற்று, நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கிய பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு.பிரகாஷ் சிங் பாதல், சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவர் திருமதி. பீபீ ஜாகீர் கவுர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள். ◆

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்திற்கான வாழ்க்கை ஆதாரங்களை வழங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள்

அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இந்தக் குறுகிய காலப் பிரளயத்திற்கு ஜப்பானிய மொழியில் 'சுனாமி' (Tsunami) என்று பெயராம். திடீரென்று தாக்குதலைத் தொடுத்த சுனாமி அலைகளைத் தமிழகம் இதற்கு முன் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. எனவே, அடுத்து நடக்க இருக்கிறது ஓர் ஆபத்து என்பதைத் தமிழகக் கடலோர மக்கள் அறிவதற்கு முன்னாலேயே, தங்களை ஒரு அபாயம் தாக்க இருக்கிறது என்பதை அறிவதற்கு முன்னாலேயே, மூர்க்கத்தனமான அலைகளின் தாக்குதலால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் முடிவைச் சந்தித்து விட்டார்கள். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து விட்டார்கள்.

இப்படி ஓர் அவலம் ஏற்படும் என்று எவருக்கும் தெரியாது. இது எப்படி ஏற்பட்டது என்பதும் அப்போது யாருக்கும் தெரியாது.

இத்தனை விரைவாகக் கிட்டத்தட்ட எட்டாயிரம் பேர் திடீரென்று மாண்டு போவார்கள் என்றோ, மறைந்து போவார்கள் என்றோ, நாம் கனவு கூடக் கண்டது இல்லை.

ஈடு செய்ய முடியாத உயிர் இழப்பு ஒருபுறம் என்றால், கடலோரக் கிராமங்களிலும், நகரங்களிலும், கடல் அலைகள் ஏற்படுத்தி இருக்கும் பொருள் இழப்பு ஏராளம். கடலோரத் தமிழகத்தின் பொருளாதாரமே சிதைந்து போய்க் கிடக்கிறது. கடலோர மக்கள் வாழ்வு இழந்து இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள். அவர்களுடைய இருப்பிடங்கள் அழிந்து போய் விட்டன. அவர்களுடைய படகுகள் உடைந்து சிதறிப் போய் விட்டன. எந்தக் கடலை மீனவர்கள் நம்பி வாழ்ந்தார்களோ, அந்தக் கடலின் அலைகளே அவர்களின் வாழ்க்கை ஆதாரத்தை அழித்து விட்டன.

இந்தப் பேரிடர் பற்றிய விவரம் அறிந்த உடனேயே, காணாமல் போனவர்களைத் தேடவும், மீட்கவும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், உடனடியாக நான் உத்தரவிட்டேன். இந்தப் பணிகளில் மாநில அரசுப் பணியாளர்கள் மட்டும் அல்லாமல், இராணுவம், கடற்படை, வான்படை, கடலோரக் காவல்படை ஆகிய படைகளைச் சேர்ந்த வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

26.12.2004, 27.12.2004 மற்றும் **30.12.2004** ஆகிய தினங்களில் நான் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு நேரில் பார்வையிட்டேன். உடனடி நிவாரணம் வழங்குதலையும் துவக்கி வைத்தேன். அமைச்சர் பெருமக்களும் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளுக்குச் சென்று, மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டார்கள். போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களின் நிகழ்காலத்திற்கான உடனடி நிவாரணம் மட்டும் அல்லாது, எதிர் காலத்திற்கான வாழ்க்கை ஆதாரங்களை வழங்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மிக விரைவாக எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த பன்னிரண்டு நாட்களாகப் பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் நானும், அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும், காவல் துறையினரும் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தோம்.

ஆழிப் பேரலைகளின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து உங்கள் அனைவரது கருத்துகளையும், ஆலோசனைகளையும் அறிவதற்காக இன்று இந்தக் கூட்டத்தை நான் கூட்டியிருக்கிறேன்.

இங்கு வருகை புரிந்திருக்கும் நீங்கள் அனைவரும் உங்களது ஆக்கபூர்வமான கருத்துகளையும், மேலான ஆலோசனைகளையும் இப்போது வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு முன்பாக, சுனாமி பேரலைகளின் காரணமாக உயிர் இழந்த அனைவருக்கும் மரியாதை செலுத்தும் வகையில், அனைவரும் எழுந்து 2 நிமிடங்கள் மவுனம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

7.1.2005 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்து விவாதிக்க நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய தொடக்க உரை

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புதுவாழ்வு வழங்கும் பெரும் பணியில் விரைவாகவும் சிறப்பாகவும் செயல்படுவோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

சுனாமி என்று அழைக்கப்படும் ஆழிப் பேரலைகளால் தாக்கப்பட்டு, நிலைகுலைந்து போய் இருக்கும் கடலோரத் தமிழகத்து மக்களுக்கான நிவாரணப் பணிகளை மிக விரைந்து ஆற்றி வருகிறோம். எந்தெந்த வகைகளில் எல்லாம் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களோ, அந்தந்த வகைகளைக் கண்டறிந்து, உரிய உதவிகளை உடனுக்குடன் வழங்கி வருகின்றோம்.

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டு, வீடு மற்றும் உடைமைகளை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும், 5,000 ரூபாய் அளவுக்கான உடனடி நிவாரணத்தை வழங்க நான் 28.12.2004 அன்று ஆணையிட்டேன். இந்த நிவாரணத் தொகுப்பின் கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 60 கிலோ அரிசி, 1 வேட்டி, 1 சேலை மற்றும் 2 போர்வைகள், எண்ணெய் பருப்பு முதலியன வாங்க 1,000 ரூபாய் ரொக்கப் பணம், பாத்திரங்கள் மற்றும் ஸ்டவ் வாங்க 1,000 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் உடனடியாகத் தற்காலிகக் குடிசை அமைக்க 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும், கடல் அலையால் தங்கள் வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும், தங்கள் வாழ்வுக்கான ஆதாரத்தை இழந்து தவிக்கும் மீனவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், தலா 3,000 ரூபாய் அளவிற்கான உதவித் தொகுப்பை வழங்கவும் நான் ஆணையிட்டேன். இந்த நிவாரண உதவித் தொகுப்புகள் வழங்குகின்ற பணி ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. அது மட்டுமல்லாமல், சுனாமியால் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் நிவாரணத் தொகையாக, ஒரு இலட்சம் ரூபாய் வீதம் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்க நான் உத்தரவிட்டேன். மேலும், சுனாமி பேரலைகளால் பாதிப்புக்குள்ளாகி தங்களுடைய கண், கை, கால் போன்ற உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு கருணைத் தொகையாக 25,000 ரூபாய் வழங்கவும், படுகாயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு மேல் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு 5,000 ரூபாய் வழங்கவும் நான் ஆணையிட்டேன்.

30.12.2004 அன்று கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்ட நிவாரண உதவி வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தேன்.

இது தவிர, மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடி தொழிலை மீண்டும் துவக்குவதற்கு ஏதுவாக, வலைகள் வாங்குவதற்கும், வல்லங்கள் மற்றும் கட்டுமரங்களைச்

சீர்செய்வதற்கும் 65 கோடி ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன். இந்த நிவாரணப் பணி ஓரிரு நாட்களில் துவக்கப்பட்டு விடும்.

26.12.2004 அன்று சுனாமி பேரலைகளின் காரணமாகப் பாதிப்புக்கு உள்ளான தமிழகத்தின் கடலோரப் பகுதி மக்கள் தங்களது குடும்ப அட்டைகளையும் இழந்துள்ளனர். இதனால், அவர்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற இயலாத நிலை ஏற்பட்டது. அவர்கள் இழந்த குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக, புதிய குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள, அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளேன். இவ்வாறு புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் வழங்கிடச் சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்கின்ற காரணத்தால், பாதிப்படைந்துள்ள குடும்பங்கள் தாமதம் எதுவுமின்றி, நியாயவிலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றிட ஏதுவாக, உடனடியாக மாற்றுக் குடும்ப அட்டைகள் வழங்கிட நான் ஆணையிட்டேன். அவை தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் சமையல் எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் நியாய விலைக் கடைகளில், 2005 ஜனவரி மாதத்திற்குரிய அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் போது, கூடுதலாக 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

சுனாமி பேரலைக் கொந்தளிப்பின் காரணமாக, மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்களுடைய பாடபுத்தகங்களையும், பள்ளிச் சீருடைகளையும் இழந்துள்ளனர். அம்மாணவ, மாணவியர்கள் தங்களது கல்வியினைத் தடையின்றித் தொடரும் வகையில், பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் இழந்த 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களை இலவசமாகத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு, இரண்டு செட் சீருடைகள் இலவசமாக வழங்கிடவும் நான் ஏற்பாடு செய்துள்ளேன்.

மேலும், கல்விச் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு, கல்விச் சான்றிதழ்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டு, பாதிப்படைந்த கடலோரப் பகுதிகளில் தங்கள் பெற்றோரை இழந்து நிராதரவாக நிற்கும் குழந்தைகளை, அரசே தத்தெடுத்து, அவர்களைப் பாதுகாக்க எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இக்குழந்தைகளுக்காக பிரத்யேகமாக குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களது பாதுகாப்பான எதிர்கால வாழ்வைக் கருதி, அவர்களின் பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் அவர்களின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டு, 18 வயது நிரம்பும் போது அதன் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும் திட்டத்தையும் அறிவித்துள்ளேன்.

இவ்வாறு நிராதரவாக்கப்பட்டு அனாதையாக நிற்கின்ற குழந்தைகள், ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருந்தால், அத்தகைய அனைத்துக் குழந்தைகளின் எதிர்காலத்தையும் உறுதி செய்யும் வகையில், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

மேலும், சுனாமி பேரலைகளால் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்ற 14 வயது முதல் 18 வயது வரையிலான வளர் இளம் பெண்கள், சேவை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். மேலும், அவர்கள் பெயரிலும், பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித்

தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு 18 வயது நிரம்பும் போது சொந்தத் தொழில் தொடங்கவோ, அல்லது உயர் கல்வி கற்கவோ பயன் அளிக்கும் வகையில், இந்த வைப்பீட்டின் முதிர்வு தொகை வழங்கப்படுவதற்கும் எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகையோரும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருப்பார்களேயானால், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் தலா 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக முதலீடு செய்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன். சேவை இல்லங்களில் தங்க வைக்கப்படும் இப்பெண்கள், கல்வி கற்கவும், உயர் தொழில் பயிற்சி பெற்றிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சுனாமி பேரலைகளின் பாதிப்பால், தங்கள் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும், ஒரு பாதுகாப்பான எதிர்கால வாழ்க்கையை அளிக்க, எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய 18 வயதிற்கு மேற்பட்ட நிராதரவான பெண்களும் சேவை இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். தங்களது சொந்தக் காலில் நிற்க வழிவகை செய்யும் வகையில், இவர்களுக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், இவ்வாறு சேவை இல்லங்களில் சேர்க்கப்படுபவர்கள் உயர்கல்வி கற்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதன் மூலம் அவர்கள் தங்களுக்கு ஏற்ற சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு உதவிடும் வகையில், அவர்கள் பெற்றோரை இழந்தமைக்காக வழங்கப்படுகின்ற 3 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக முதலீடு செய்திட நான் உத்தரவிட்டுள்ளேன். அதே குடும்பத்தில் இத்தகைய பெண்கள் ஒருவருக்கு மேற்பட்டு இருப்பார்களேயானால், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 3 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யும் வகையில், நிதி உதவி அளிக்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். 3 இலட்சம் ரூபாய் என்றால் மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் 2 இலட்சம் ரூபாய், அத்துடன் பிரதமர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய். உயர்கல்வி அல்லது தொழில்நுட்பப் பயிற்சியை முடித்த பின்னர், புதிய தொழில் தொடங்கித் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதுவாக, இந்த முதலீட்டின் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும், சுனாமி பேரலைகள் திடீரெனத் தாக்கியதன் காரணமாக, அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிட, அவர்களுக்கு உளவியல் ரீதியான அனைத்து ஆலோசனைகள் வழங்கிட அந்தப் பகுதிகளுக்கு உளவியலாளர்கள் அதாவது, Counsellors அனுப்பப்பட்டுள்ளனர்.

பொருள் ஈட்டிக் குடும்பத்தைக் காத்து வந்த குடும்பத் தலைவர்கள் பலர் இந்தப் பேரழிவில் உயிர் இழந்துவிட்டனர். இதனால் அவர்களைச் சார்ந்திருந்த குடும்பங்கள், தற்போது ஆதரவற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, கணவரை இழந்த பெண்களும், மகனை இழந்த வயது முதிர்ந்த பெற்றோரும் பிழைப்புக்கு வழியின்றி உள்ளனர்.

எனவே, குடும்ப வருவாயை ஈட்டி வந்த உறுப்பினர் இறந்து விட்ட நிலையில், அக்குடும்பங்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன். இதன்படி, அரசு தற்போது ஆதரவற்றோருக்காகச் செயல்படுத்தி வருகின்ற ஓய்வூதியத் திட்டங்களான முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் ஆகிய உதவித் திட்டங்களில், அந்தந்தத் திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைவருக்கும் உதவித் தொகைகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டங்களின் கீழ் உதவி வழங்கப்படத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு, மாதந்தோறும் 200 ரூபாய் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும். மேலும்,

இவர்களுக்கு நாள்தோறும் இலவச சத்துணவும், மாதந்தோறும் இலவச அரிசியும் வழங்கப்படும். அதாவது, சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதந்தோறும் 2 கிலோ அரிசியும், உணவு உட்கொள்ளா தவர்களுக்கு மாதந்தோறும் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும். இதுவன்றி, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்குச் சேலையும், ஆண்டுக்கு இரு முறை இலவசமாக வழங்கப்படும்.

உடனடி நிவாரணம் அளிப்பதற்காக, தமிழக அரசு, இதுவரை 262 கோடியே 36 இலட்சம் ரூபாய் தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது. இது பாதிக்கப்பட்ட குடும்பங்கள் புது வாழ்வு தொடங்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசு உடனடித் தவணைத் தொகையாக 250 கோடி ரூபாயை வழங்கி உள்ளது. மேலும், மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் அவர்களின் தலைமையில், மத்திய குழு ஒன்று கடந்த மூன்று நாட்களாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்துள்ளது.

சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளையும், சேத நிலவரங்களையும் உடனடியாகக் கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வழிவகை செய்வதற்காக, 4,800 கோடி ரூபாய் நிதி உதவியும், 54,000 டன் அரிசியும் வழங்கக் கோரி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் ஒன்றினையும், கோரிக்கை மனுவையும் (Memorandum) அனுப்பியுள்ளேன். இதில், தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக, 204.95 கோடி ரூபாயும், தற்காலிக நிவாரண தொகுப்புக்காக 90 கோடி ரூபாயும், பொது சுகாதாரம், தொற்று நோய் தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக 71.45 கோடி ரூபாயும், தம் வாழ்வு ஆதாரத்தை முழுமையாக இழந்தவர்களுக்கு, அவர்களது இழப்பை ஈடுகட்டுவதற்காக 261.36 கோடி ரூபாயும், தற்காலிகமாக வீடுகள் கட்டுவதற்கு 250 கோடி ரூபாயும், நிரந்தர வீட்டுவசதிகளுக்காக 750 கோடி ரூபாயும், சமூகச் சொத்துகளைச் சீரமைப்பதற்காக 709.22 கோடி ரூபாயும், மீனவர்களின் மறு வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக 1,054 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட ஏனையோரின் வாழ்வு ஆதாரத்திற்காக 130.62 கோடி ரூபாயும், கடற்கரைப் பாதுகாப்பு, கடல் அரிப்பைத் தடுத்தல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளத் தடுப்பிற்கான பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள 449 கோடி ரூபாயும், சுற்றுச் சூழலை மீளப் புதுப்பித்தல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாங்ரோவ் காடுகள் மேம்படுத்துதல் பணிகளுக்காக 200 கோடி ரூபாயும், உள் கட்டமைப்பு வசதிகள், பழுதுபார்ப்பு மற்றும் மீளகட்டும் பணிக்காக 628.88 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 4,800 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து நிவாரண உதவியாகக் கேட்கப்பட்டுள்ளது.

வரலாறு காணாத அளவில் ஆழிப் பேரலை அழிவை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழக அரசு துரித நடவடிக்கைகளை எடுத்து, மிக விரைவாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது; இன்னும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இன்று, இந்தக் கூட்டத்தில் பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் இன்னும் உதவிகள் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களையும், அவர்களின் நிலையான வாழ்வுக்கான நிவாரணங்களையும், இன்னும் வழங்க வேண்டும் என்பது தான் எனது விருப்பம் ஆகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் தான், 4,800 கோடி ரூபாய் நிதி உதவியையும், 54,000 டன் அரிசியும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு இந்த உதவிகள் பயன்படும். எனவே, இந்த உதவியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு, அனைத்துக் கட்சித் தலைவர்களும் உதவிட வேண்டும் என்று நான் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீண்டும் தங்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பத் தேவையான அனைத்து உடனடி மற்றும் நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகளையும் இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய பெருமக்கள் பொதுவாகக் குறிப்பிட்ட இன்னொரு கருத்து, மீட்புப் பணியிலும், நிவாரணப் பணியிலும் சில இடங்களில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதாகும்.

தமிழகம் இதுவரை சந்தித்திராத பேரழிவு, 26.12.2004 அன்று நிகழ்ந்திருக்கிறது. இதுபோன்ற தேசியப் பேரிடர்களின் போது, இன்னும் சிறப்பாகப் பணி புரிந்திருக்கலாமே என்றும், இன்னும் விரைவாகப் பணிகள் நடைபெற்றிருக்கலாமே என்றும் நினைப்பதற்கு, நிச்சயம் இடம் உண்டு. அது இயல்பு தான். அழிவு ஒரு சில நிமிடங்களில் நடந்து விடுகிறது. ஆனால், ஆக்கப் பணிகளை அத்தனை விரைவில் செய்திட இயலாது என்பதை, அனைவரும் அறிவீர்கள். இயற்கையின் அழிப்புச் சக்திக்கு இணையாக, மனித சக்தியால் ஆக்கப் பணிகளை ஆற்ற இயலாது என்பது உண்மை. இருப்பினும், ஆழிப் பேரலைகள் தந்த அதிர்ச்சியால் உள்ளம் தளராமல், உடனடியாக, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தமிழக அரசு சிறப்பாக மேற்கொண்டது. அதனைத் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும், தகவல் தொடர்பு ஊடகங்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளன என்பதை, அனைவரின் கவனத்துக்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்னும் விரைந்து செயல்பட்டிருக்கலாமே என்னும் உங்கள் ஆதங்கத்தையும் நான் உணர்கிறேன்.

அது போல் அரசின் அரிய பணிகளை நீங்களும் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தவும், நிவாரணங்களை விரைந்து வழங்கவும், கண்காணிக்கவும்,

அமைச்சர்கள் தலைமையில் அரசு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு, தீவிர நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். பேரிடர்களில் செயல்படுத்தப்படும் முதல் கட்டப் பணிகளான தேடுதல், மீட்பு மற்றும் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்தல் ஆகிய பணிகள், 30.12.2004 அன்றே முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டப் பணிகளான நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் துவக்கப்பட்டன.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட அந்தமான், கார் நிகோபார், இலங்கை மற்றும் இந்தோனேஷியா முதலான பகுதிகளில், முதல் கட்ட மீட்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்கே போராடிக் கொண்டிருந்த சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தான் முதற்கட்ட மீட்புப் பணிகள் பெரும்பாலும் 30.12.2004 அன்றே முடிவுற்றன என்பதை, நான் இங்கே மன நிறைவோடு குறிப்பிட விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட மீனவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான பணிகள், தற்போது விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆக்கப் பூர்வமான நீங்கள் வழங்கிய கருத்துகளையும் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புதுவாழ்வு வழங்கும் பெரும்பணியில் இன்னும் விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுனாமி அலைகளின் தாக்குதலால் ஆற்றொணாத் துயர் அடைந்திருக்கும் மக்களின் அல்லல் களைவதிலும், அவர்கள் புதுவாழ்வு காணத் தேவையான அரும்பணிகளை மேற்கொள்வதிலும், எனது அரசு முன்னே நிற்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொண்டு, விடை பெற்றுச் செல்வதற்கு முன்பு இங்கே தெரிவிக்கப்பட்ட சில கருத்துகளுக்கு நான் விளக்கம் கூற விரும்புகிறேன்.

சகோதரர் திருமாவளவன் அவர்கள் பேசுகின்ற போது பொங்கல் விழாவையே ரத்து செய்து விடலாம் என்று கூறினார். பொங்கல் விழாவை அரசு கொண்டாடுவது இல்லை. தனிப்பட்ட முறையில் மக்கள் கொண்டாடுவது. அவர்களின் இல்லங்களில் மக்கள் தாங்களாக கொண்டாடுவது. ஆகவே இதற்கு அரசு அறிவிப்பு தேவையில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஆனால், அதே சமயத்தில் மாநிலத்தின் சார்பில் துக்கம் அனுசரிக்கும் ஒரு நாள் அறிவிக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். நான் அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும் ஆலோசனை நடத்தி விட்டு இதற்கான முடிவை விரைவில் அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, மீனவர்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இங்கே தெரிவிக்கப்பட்டது. பிரதமர் அவர்களுக்கு நான் அனுப்பியுள்ள Memorandum அந்தக் கோரிக்கை மனுவிலேயே இந்தக் கோரிக்கையும் வைக்கப்பட்டு உள்ளது என்பதை நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று பிரதமர் அவர்களை சந்திக்கும் போதும், இந்தக் கருத்தை வலியுறுத்துவேன். மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பெரும்பாலான கடன்கள் Commercial Banks மூலமாகவும், Co-operative Banks மூலமாகவும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தள்ளுபடி செய்வதானால் மத்திய அரசு தான் அதை செய்ய வேண்டும். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. இதைப் பற்றி நிச்சயமாக பிரதமர் அவர்களிடம் நான் வலியுறுத்துவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Groynes அதாவது தூண்டில் வளைவுகள், தடுப்புச் சுவர்கள் கடலோரத்தில் கட்ட வேண்டும் என்ற கருத்தை பலர் இங்கே தெரிவித்தார்கள். இதையே ஒரு அம்சமாக பிரதமரிடம் வைக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுவில் சேர்த்திருக்கிறோம். அதற்காக தான் ஏறக்குறைய 449 கோடி ரூபாய் கோரி இருக்கிறோம். இது இப்போது vulnerable ஆக, பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய 40 இடங்களில் இந்த Groynes கட்டுவதற்கும், தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் கோரி இருக்கிறோம். ஆனால், தமிழகத்தின் ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை முழுவதற்கும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமானால் 3000 கோடி ரூபாய் தேவைப்படும். அதையும் இன்று பிரதமர் அவர்களை சந்திக்கும் போது நான் வலியுறுத்த விரும்புகிறேன். இது தமிழகத்திலுள்ள அனைத்து மீனவர்களின் கோரிக்கையாகும். கடலுக்கு செல்லும் மீனவர்களின் கோரிக்கையாகும். ஆகவே, இன்று மத்திய அரசில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் இங்கே இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை நீங்களும் மத்திய அரசிடம் வலியுறுத்தி இதற்கான நிதி உதவியை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கும்படியாக நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே பேசிய சிலர், நிரந்தரமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு குறைந்தபட்சம் 6 மாதத்திலிருந்து 1 ஆண்டு காலம் ஆகும்; ஆகவே, அதுவரை அவர்களை கூடாரங்களில் தங்க வைக்கலாம் என்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். கூடாரங்களில் தங்குவதை மீனவர்கள் விரும்புவதில்லை. ஒட்டுமொத்தமாக ஒரு dormitory type accommodation செய்து கொடுத்தாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. தனித்தனி வீடுகள் வேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்காலிகமாக தனியாரிடமிருந்து தேவையான நிலங்களை குத்தகைக்கு

எடுத்துக் கொண்டு lease-ல் எடுத்துக் கொண்டு, அங்கே, அங்குள்ள பகுதியில் மீனவர்கள் எத்தகைய குடியிருப்புகளை விரும்புகிறார்களோ தற்காலிகமாக அத்தகைய குடியிருப்புகளை கட்டித் தருவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிகமான குடியிருப்புகள் பல design-களில் இருக்கும். நாம் பொதுவாக ஒரே design கொடுத்தோமானால், ஒரு பகுதியிலுள்ள மீனவர்கள் அதை விரும்புவதில்லை. இன்னொரு பகுதியில் உள்ளவர்கள் வேறு design வேண்டும் என்கிறார்கள். ஆகவே, எத்தகைய குடியிருப்புகளை, தற்காலிகமான குடியிருப்புகளைக் கட்டுவது என்ற அதிகாரம், அதை முடிவு செய்யும் அதிகாரம், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி உடனடியாக துவங்கும். இந்தத் தற்காலிகமான குடியிருப்புகள் எப்படியும் ஓர் ஆண்டுகாலம் வரை ஸ்திரமாக இருக்கும். அதற்குள் அவர்களுக்கு நிரந்தரமான வீட்டு வசதிகளை செய்து கொடுப்போம். அதற்காகத் தான் மத்திய அரசிடமிருந்து 4800 கோடி ரூபாய் நிதி உதவி கேட்டிருக்கிறோம். இங்கே பேசிய மரியாதைக்குரிய ஆற்காடு வீராசாமி அவர்கள், இது போதாது, இன்னும் கேட்க வேண்டும் என்றார்கள். நாங்கள் கேட்பதற்குத் தயார், ஆனால் மத்திய அரசு வழங்க வேண்டும், அதற்கு நீங்களும் அங்கே பேசி அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய அழைப்பை ஏற்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்துள்ள அனைவருக்கும், நல்ல ஆலோசனைகளைக் கூறிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

7.1.2005 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல் பற்றிய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய நிறைவுரை

7.1.2005 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டோர் விவரம் :

1. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மு.க. ஸ்டாலின், திரு. ஆற்காடு என். வீராசாமி, 2. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. வாசன், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், 3. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. என். வரதராஜன் மற்றும் திரு. டி.கே. ரெங்கராஜன், 4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். நல்லகண்ணு, திரு. சி. பழனிச்சாமி, 5. பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், திரு. குமாரவேல், 6. பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி, திரு. ராம.முத்துக்குமார், 7. இந்திய தேசிய லீக் கட்சி மாநிலத் தலைவர் திரு. பஷீர்அகமது, செயலாளர் திரு. நிஜாமுதீன், 8. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. காதர் மொய்தீன், திரு. எம். அப்துல் ஹக்கீம், 9. திராவிடர் கழகத்தைச் சேர்ந்த திரு. பூங்குன்றன், திருமதி. அருள்மொழி, 10. சமூக நீதிக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜெகவீரபாண்டியன், திரு. அசோகன், 11. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. எல். கணேசன், திரு. சத்யா, 12. இந்திய குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. செ.கு. தமிழரசன், திரு. செங்குட்டுவன், 13. இந்திய குடியரசுக் கட்சி (கவாய் பிரிவு)யின் தலைவர் திரு. சக்திதாசன், மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. சென்னாமூர்த்தி, 14. அம்பேத்கர் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. வை. பாலசுந்தரம், திரு. அண்ணாதுரை, 15. பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த திரு. எம். ஷரீப், திரு. எஸ்.எஸ். முகம்மது ரஜாக், 16. இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த திரு. வேட்டவலம் மணிகண்டன், திரு. என்.பி. வெங்கடகிருஷ்ணன், 17. தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த திரு. பொன். குமார், 18. விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த திரு. தொல் திருமாவளவன், திரு. செல்வப் பெருந்தகை, 19. பாரதிய குடியரசுக் கட்சியின் தலைவர் திரு. பி.வி. கரியமால், பொதுச்செயலாளர் திரு. அகிலன், 20. அகில இந்திய குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் திரு. தாமோதரம், வேலூர் மாவட்டத்தின் தலைவர் திரு. டி.சி. மணிவேல், 21. தமிழ்நாடு முத்தரையர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ராஜமாணிக்கம், திரு. சின்னசாமி, 22. தமிழ் மாநில முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு. ஷேக் தாவூது, செயலாளர் திரு. அனந்தராமன், 23. கிறிஸ்துவ முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஜோசப் பெர்னாண்டோ, 24. பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. சந்தானம், திரு. மெய்யப்பன், 25. மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. ஸ்ரீதர் வாண்டையார், இணைச் செயலாளர் திரு. இ. முத்து, 26. கிறிஸ்துவ ஜனநாயக முன்னணியின் தலைவர் டாக்டர் தம்பா, செயலாளர் திரு. டொமினிக், 27. தமிழக திராவிட மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவன், திரு. என். வேதகிரி, 28. தமிழக விவசாயிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் எம்.ஆர். சிவசாமி, 29. தமிழ்நாடு நேஷனலிஸ்ட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம்

சுனாமி பாதித்த பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள்

26.12.2004 அன்று திடீரென தாக்கிய கடல் கொந்தளிப்பால் வீடு வாசல்களை இழந்த 33 குப்பங்களைச் சேர்ந்த 28,000 மீனவர்களை செங்கல்பட்டு, திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய பகுதிகளில் 44 முகாம்களில் (திருமண மண்டபம் மற்றும் பள்ளிகளில்) 26.12.2004 முதல் 31.12.2004 முடிய தங்க வைத்து, தினமும் 3 வேளைகள் உணவுப் பொட்டலங்கள், போர்வைகள், குடிநீர் மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டன. எஸ்.ஆர்.எம்.கல்லூரி, ஆர்ச்சிட் கெமிகல்ஸ் போன்ற சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் காபி, டீ, மாத்திரைகள், போர்வைகள் ஆகியவற்றை வழங்கின.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம், ஊரக வளர்ச்சித்துறைச் செயலர் திருமதி. சாந்த ஷீலா நாயர், இ.ஆ.ப., போக்குவரத்துத்துறைச் செயலர் திரு. இரா.கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப.,ஆகியோர் இடைவிடாது இவர்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் போர்க்கால அடிப்படையில் செய்து கொடுத்தனர். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் அவர்கள் செங்கல்பட்டு, திருக்கழுக் குன்றம், திருப்போரூர் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு முகாமிற்கும் சென்று அனைத்து வசதிகளையும் செய்து தரப்பட்டிருந் தனவா என்பதை உறுதி செய்து கொண்டார். சுனாமியால் பாதிக்கப்பட்டு நிர்கதியாக, வீடு, வாசல்களையும் உடைமைகளையும் உற்றார் உறவினர் களையும் இழந்து, தங்கள் குழந்தை களுடன் நெடுஞ்சாலையில் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு இலவசப் பேருந்து வசதி செய்து கொடுத்துத் தமிழக அரசு அமைத்த முகாம்களுக்கு அனுப்பி வைத்தார். மாவட்ட

நிருவாகத்தின் சார்பில் 15 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி மருந்துகளும் போலியோ தடுப்பு மருந்துகளும் மற்றும் அனைத்து அடிப்படை சுகாதார வசதிகளும் செய்து தரப்பட்டன. இதனால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் காலரா,தட்டம்மை போன்ற தொற்றுநோய்கள் பரவாமல் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் மீட்பு நடவடிக்கைகளை உடன் இருந்து கவனிக்கவும் காணாமல் போனவர்களைப் பற்றி உரிய விவரங்களைச் சேகரித்து மதிப்பிடவும், துணை ஆட்சியர் நிலையில் 6 மாவட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

நிவாரணப்பணிகள்

உய்யாளிக்குப்பம், புதுப்பட்டினக்குப்பம், பெரியக் குப்பம், ஆலிக்குப்பம், சின்னக்குப்பம் உள்ளிட்ட 30 இடங்களில் 20 புல்டோசர்களை ஈடுபடுத்தி, இடிபாடுகளிடையே உடல்கள் ஏதேனும் உள்ளனவா எனத் தேடும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. 4 நாட்களுக்குள் சுனாமியால் உயிரிழந்த 128 உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது உறவினர்களிடம் முறையாக ஒப்படைக்கப் பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குப்பங்களிலும், 31.12.2004க்குள் அனைத்துச் சாலைகளும் சரிசெய்யப்பட்டு, மின்சாரமும் பாதுகாக்கப் பட்ட குடிநீரும் வழங்கப்பட்டன.

அவசர உதவிக்கு

சதுரங்கப்பட்டினம், உய்யாளிக்குப்பம், கல்பாக்கம் உள்ளிட்ட 30 கிராமங்களிலுள்ள பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அவசர உதவிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தலா 60 கிலோ அரிசி, வேட்டி, சேலை மற்றும் 2 போர்வைகள், 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகிய நிவாரண உதவிகளை வழங்கினார்கள். அப்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுனாமி 2ஆவது முறையாகத் தாக்கும் என பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் மாவட்ட நிருவாகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. கடலோரக் கிராம மக்கள் அனைவரையும் அப்புறப்படுத்தி பாதுகாப்பான மையங்களுக்கு அரசு நிருவாகம் அனுப்பி வைத்தது.

மீண்டும் சுனாமி வந்துவிட்டது என்ற புரளியால் பீதியடைந்த மக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒரு ஜீப்பை வரவழைத்து அதில் ஒலிபெருக்கியைப் பொருத்தி மீண்டும் சுனாமி என்பது வீண் வதந்தி; இதில் எந்த உண்மையும் கிடையாது. யாரும் பயப்படத் தேவையில்லை. ஊரை விட்டுச் செல்ல வேண்டாம் என அறிவித்தார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், உடனடியாக ஊர்முழுக்க காவல் துறையினர் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிட்டார்.

ஹெலிகாப்டரில் தேடுதல் பணி

உய்யாளிக்குப்பம் அருகே ஒரு சிறு தீவில் இருந்த ஒரு ஆலமரத்தில் 3 சிறுவர்கள் 3 நாட்களாகத் தொங்கிக்கொண்டிருப்பதாக தகவல் அறிந்த உடனே மாவட்ட ஆட்சித்தலைவர் அந்த இடத்திற்கு விரைந்தார். படகோ, தீயணைப்புத்துறையினரோ நெருங்க முடியாத இடமாக இருப்பதை அறிந்து மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக ஒரு ஹெலிகாப்டரை வரவழைத்தார். கல்பாக்கம் அணுமின்நிலையத்தில் இறங்கியதும் அந்த சிறு தீவை நன்கு அறிந்த ஒரு இளைஞனை, மாவட்ட ஆட்சித்தலைவர் அந்த ஹெலிகாப்டரில் ஏற்றி அனுப்பி வைத்தார். அரை மணி நேரம் அந்தச் சிறு தீவைச் சுற்றிப்பார்த்த பின், அந்த 3 சிறுவர்களையும் காணமுடியாமல் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் பிணம் அங்கு இருப்பதைக் கண்டு எடுத்து வந்தார்கள்.

நிவாரணக்குழு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி சோமசுந்தரம், மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மைத்ரேயன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். சந்திரன் ஆகியோர் கொண்ட நிவாரணக்குழு அமைக்கப்பட்டது.

புயல் வேக நிவாரண உதவிகள்

வரலாறு காணாத சுனாமி கொந்தளிப்பால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 128 ஆகும். இவர்களில் ஆண்கள் 36, பெண்கள் 52, குழந்தைகள் 40. இவர்கள் அனைவருக்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் நிதியுதவி வழங்கிப் பேசும்போது, "துயரச்சம்பவம் நடந்த உடனே தமிழக அரசு மாநில நிருவாகத்தை முழுமையாக முடுக்கி விட்டு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. கடல் கொந்தளிப்பால் இறந்தவர்களின் சடலங்கள் அனைத்தும் மீட்கப்பட்டு விட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த வித சுகாதார பாதிப்பும் இல்லாமல் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எங்கும் காலரா போன்ற தொற்று நோய்கள் அறவே கிடையாது. கடற்கரை ஓரத்தில் நீங்கள் குடியிருந்த காரணத்தால்தான் இத்தகைய பேரழிவு ஏற்பட்டது. படகோட்டிகளாகவும், மீனவ நண்பர்களாகவும் விளங்கும் நீங்கள் மேடான பகுதிகளைத் தேர்ந்தெடுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் மேடான பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பாதுகாப்பான நிரந்த வீடுகளைக் கட்டித்தர தயாராக உள்ளார்'' எனக் கூறினார்.

முற்றிலுமாகவோ, பகுதியாகவோ வீடுகளை இழந்த 7,093 மீனவர்களுக்குக் குடிசை கட்டிக்கொள்ளவும், பாத்திரங்கள் மளிகைப் பொருட்கள் வாங்கவும் தலா ரூ.4,000/-ம், 60 கிலோ அரிசியும், ஒரு சேலை, ஒரு வேட்டி, 2 போர்வைகள், 3 லிட்டர் மண்ணெண்ணெய், எவர்சில்வர் குடம், டிரங்குபெட்டி மற்றும் ஸ்டவ் ஆகியவைகளை மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., ஆகியோர் வழங்கினார்கள். மேலும், 2,289 நபர்களுக்கு மேற்கூறிய பொருட்களும் குடிசைகள் அமைத்துக்கொள்ள ரொக்கம் ரூ.2,000/-மும் வழங்கப்பட்டது. காயமடைந்த 11 நபர்களுக்குத் தலா ரூ.5,000/- மும் வழங்கப்பட்டது. சுனாமி கடல் கொந்தளிப்பின்போது, குடும்ப அட்டைகள் காணாமல் போய்விட்டதாக 1,583 நபர்கள் புது குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பித்தார்கள். தகுந்த விசாரணைக்குப் பிறகு இதுவரை 1,058 நபர்களுக்குத் தற்காலிக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 5,714 மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், தலா 2 சீருடைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. மீன்பிடி வலைகளை இழந்த

மீனவர்களுக்கு உடனடி நிவாரணமாக தலா ரூ.10,000/– (மொத்தம் ரூ.2,90,00,000/–) வழங்கப்பட்டது.

வீடுகளை இழந்த 1,100 மீனவர்களுக்குத் தற்காலிக வீடுகள் (102 சதுர அடி கொண்ட ஒரு வீட்டின் மதிப்பு ரூ.8,000/– ஆகும்) கட்டப்பட்டு வருகின்றன. பொங்கல் தினத்தன்று புது நெமிலிக்குப்பத்தில், மீன்வர்களுடன் பொங்கல் கொண்டாடிய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் 45 தற்காலிக வீடுகளைத் திறந்து வைத்தார். சுனாமி கொந்தளிப்புக்குப் பிறகு முதன்முதலாகச் சாலவான்குப்பத்திலிருந்து 2 படகுகளில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழக சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மைத்ரேயன், திரு. எஸ். எஸ். சந்திரன், எம்.பி., மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு. ம. தனபால், திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. கணிதாசம்பத், சிட்லபாக்கம் திரு. ச. இராஜேந்திரன், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை ஊராட்சித்தலைவர் திரு. பி.வேலாயுதம் ஆகியோர் சுமார் 10 மீனவர்களுடன் அவர்களுக்குத் தைரியத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும் வகையில் கடலுக்குள் சென்றனர். சுமார் ஒரு மணிநேரம் கடலுக்குள் மீனவர்களுடன் பயணம் செய்து திரும்பிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் “சுமார் 10 கிலோ மீட்டர் கடலுக்குள் மீனவர்களுடன் சென்றோம். வழக்கமாக கடலுக்குள் அடியில் மேடான, சகதியான பகுதிகளில் தான் மீன்கள் இருக்கும். ஆனால் அத்தகைய மேடான சகதியான பகுதிகளே இப்பொழுது இல்லை. சுனாமியால் கடலுக்குள் அடியில் பூகோள அமைப்பே மாறிவிட்டது. எனவே, மீன்கள் இப்போது கிடைக்கவில்லை. தற்போது இங்கு ஓடான், தேங்காய்ப்பாறை, சீக்கான் போன்ற மீன்கள் உள்ளன. இத்தகைய மீன்கள் வரும் இடங்களில் வழக்கமாக நாம் சாப்பிடும் மீன்கள் வராது. எனவே நாங்கள் மீன் பிடிக்கச் செல்வதால் எந்தப் பயனும் கிடையாது என மீனவர்கள் தெரிவித்தார்கள். எனவே, மீண்டும் மீன் பிடிக்கச் செல்ல ஏதுவான சூழ்நிலை கடலில் உருவாகும்வரை அவர்களின் புதிய வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் பெற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று ஏற்பாடுகள் செய்வோம்” என்று கூறினார். மேலும் அவர் சேதமடைந்த படகுகளைப் பழுது பார்க்கவும் அதிகமாக பழுதடைந்த படகுகளுக்குப் பதிலாகப் புதிய படகுகள் வாங்கித்தரவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு நிச்சயம் உதவி செய்யும் எனவும் கூறினார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள் உய்யாளிக் குப்பத்தில் 50 வீடுகளையும் புதுப்பட்டினத்தில் 50 வீடுகளையும் நெமிலிக்குப்பத்தில் 135 தற்காலிக வீடுகளையும் புது இடையூர்குப்பத்தில் 45 தற்காலிக வீடுகளையும் திறந்து வைத்தார். உய்யாளிக்குப்பத்தில் 5 படகுகளில் மீனவர்களுடன் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வந்தார். அப்பொழுது பிடிபட்ட மீன்களை ஏலத்தில் விட்டார். தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மைத்ரேயன் இம்மீன்களை ரூ.1,100க்கு ஏலத்தில் எடுத்தார். இத்தொகையை உய்யாளிக்குப்ப மீனவர்களிடம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

26.12.2004 முதல் இடைவிடாது இப்பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண உதவிகளைப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அமைச்சர் பெருமக்களும் மாவட்ட ஆட்சித்தலைவரும் வழங்கினார்கள். 2005 புத்தாண்டு நாளன்று சோகத்தில் மூழ்கியிருந்த மீனவர்கள் தமிழக அரசின் நிவாரண உதவிகளால் பொங்கலன்று மெல்ல புன்னகைக்க ஆரம்பித்தார்கள்.

– ந. இளங்கோ,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.

தமிழுக்கு அதிகாரம் தந்த தமிழன்

■ கவியரசர் இளந்தேவன்

உலகைத் தமிழ்மொழி ஆளுவ தற்கே
உண்டா ஓர்அதி காரம் ?
யார் அதிகாரம் தந்தார் ? அவரை
அறிந்தவர் உண்டா யாரும் ?

வள்ளுவன் என்றொரு வல்லவன் வந்தான்
தந்தான் தமிழ்க் கதி காரம்
ஒன்றா இரண்டா ஒருநூற் றோடு
முப்பது பேரதி காரம் !

தமிழ்எனும் சொல்லை உச்சரிக் காமல்
தமிழ்மறை யாம்குறள் தந்தான்;
இமிழ் கடல் ஞாலப் பொதுமறை தந்தே
இறவாப் பெரும்புகழ் கொண்டான் !

ஒன்றே முக்கால் அடியில், அடடா,
எத்தனை தத்துவ முத்து
உலகத் தமிழர் எல்லோ ருக்கும்
அதுதான் பரம்பரைச் சொத்து !

உலகச் சிந்தனை மலையின் சிகரம்
இந்தியச் சிந்தனை யாகும் !
இந்தியச் சிந்தனை மலையின் சிகரம்
செந்தமிழ்ச் சிந்தனை யாகும் !

செந்தமிழ்ச் சிந்தனை மலையின் சிகரம்
வள்ளுவச் சிந்தனை யாகும் !
வள்ளுவச் சிந்தனை வழியில் நடந்தால்
வையகம் வானகம் ஆகும் !

"சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 'சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குரிய ஆணைகளை நேரில் வழங்கி வாழ்த்தினார்.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இந்தியா மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று விருதுகளைத் தேடித் தருவதற்காக விளையாட்டு வீரர்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த திட்டம் 1991–1996 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2001–ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சி பொறுப்பேற்றதும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் வருங்காலத்தில் பல்வேறு சாதனைகளைப் பன்னாட்டு அளவில் நிகழ்த்துவதற்காக,திறமை வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம், இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு, இவர்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில், தகுதி வாய்ந்தவர்கள் 'சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்களது விளையாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்ள அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு அரசு செய்து தருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 56 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். தற்போது, தடகளம், நீச்சல், டேபிள் டென்னிஸ், ஸ்குவாஷ், டென்னிஸ், படகு ஓட்டுதல் ஆகிய பிரிவுகளில் திறமைப் படைத்த 10 இளம் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். இவ்வாறு தமிழ்நாடு அரசின் 'சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள

ஆர்.எஸ்.பிஜில் (Athletics), எஸ். பிரேம் நாத், எஸ்.ஆர்.சரத், அக்னிஷ்வர் (Swimming), வி.அன்வேஷா ரெட்டி(Squash), கே.கே.நர்மதா (Table Tennis), தாரிக் ஜேக்கப், வந்தனா முரளி, சுதர்சன் (Tennis), கெளரி ஆதப்பா (Rowing) ஆகிய 10 விளையாட்டு வீரர்கள் – வீராங்கனைகளுக்கு இதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

மேலும், எதிர்காலத்தில் பங்குபெற உள்ள பன்னாட்டுப் போட்டிகள் அனைத்திலும் மகத்தான வெற்றி பெற்று நாட்டுக்குப் புகழ் சேர்க்க வேண்டும் என்று அந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளிடம் தனது வாழ்த்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது விளையாட்டு மேம்பாட்டு துறை உறுப்பினர் – செயலர் திரு.பி.டபிள்யு.சி.டேவிதார் உடனிருந்தார்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண சீரமைப்புப் பணிகள்

26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப் பேரலை (சுனாமி) தாக்குதலில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான கன்னியாகுமரி மாவட்டம் 68 கி.மீ. நீளம் கடலோரப் பகுதியைக் கொண்டது. ஆரோக்கியபுரம் முதல் கன்னியாகுமரி வ்ரை வங்களா விரிகுடா கடலும், கன்னியாகுமரியில் வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடல் சங்கமமும், கன்னியாகுமரி முதல் நீரோடி வரை அரபிக்கடலும் சூழப் பெற்றது குமரி மாவட்டம்.

68 கி.மீ. நீளம் கொண்ட கடலோரப் பகுதியில் உள்ள 42 கடலோரக் கிராமங்களில் 33 கடலோரக் கிராமங்கள் 26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலைத் தாக்குதலில் பாதிப்பிற் குள்ளாயின. 33 கிராமங்களிலும் வாழ்ந்து வந்த 31 ஆயிரத்து 175 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 1 இலட்சத்து 87 ஆயிரத்து 650 மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டனர். விலை மதிக்க முடியாத 824 மனித உயிர்கள் ஆழிப்பேரலைக்குப் பலியாகின. 139 நபர்கள் குறித்த தகவல்கள் இல்லை. 617 நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர். 3,326 கால்நடைகள் உயிரிழந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவு

ஆழிப் பேரலை திரும்பு முன்னரே மீட்புப் பணிகளையும், நிவாரணப்பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவிட்டார்கள். பாதிக்கப் பட்டோருக்காக 62 தற்காலிக நிவாரண முகாம்கள் அரசு பள்ளிகள், திருமண மண்டபங்கள், கிறிஸ்தவ

ஆலயங்களில் அமைக்கப்பட்டு சுமார் 41,250 பேர் தங்க வைக்கப்பட்டனர். முகாமில் உள்ள அனைவருக்கும் மூன்று வேளை உணவு உட்பட அத்தியாவசியத் தேவைக்கான அனைத்துப் பொருட்களும் வழங்கப் பட்டன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகை

27.12.2004 அன்று குமரி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கோட்டாறு, புனித சவேரியார் ஆலயம் மற்றும் நாகர்கோவில் ஆசிசி ஆலயம் முகாம்களுக்குச் சென்று பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறியதோடு, காயமடைந்து அரசு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை பெற்று வருவோரை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார். மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் தீவிரப்படுத்த அதிகாரி களுக்கு உத்தரவிட்டார்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பாதிக்கப் பட்டோரிடையே உரையாற்றும்போது, "இன்றைக்கு, துயரமான சம்பவம் நடைபெற்ற நேரத்தில் உங்களைச் சந்தித்து ஆறுதல் கூறவும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவும் வந்துள்ளேன். யாரும் எதிர்பாராத வகையில் கடலில் ஏற்பட்ட ராட்சத அலைகள் பெருத்த உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி உள்ளது. இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தில் 526 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளேன். இம்மாவட்டத்தில் பாதிக்கப் பட்டோரில் பெரும்பாலோர் மீனவ மக்கள் என அறிவேன்.

வீடுகளையும், மீன்பிடி படகுகளையும், மீன்பிடி சாதனங்களையும், வலைகளையும் இழந்து நிர்க்கதியில் நிற்கும் மீனவ மக்களுக்கு, சேதமடைந்ததை மீண்டும் புதுப்பிக்கவும், வீடுகள் கட்டிக் கொடுக்கவும், மறுவாழ்வுக்கும் அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். எதற்கும் கவலைபடத் தேவையில்லை. உற்ற நண்பனாக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும். உடனடித் தேவைகளுக்கான அனைத்து உதவிகளையும் நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்வார்.

உங்களது எதிர்காலம் மீண்டும் வளமானதாக அமைய அனைத்து நடவடிக்கைகளையும் எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்யும்'' என்று தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிறப்பு நிவாரணமாக 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி, 1 சேலை, 2 போர்வைகள் உட்பட வீடிழந்தோருக்கு ரூ.4,912 வீதமும், தொழில் பாதிப்படைந்தோருக்கு ரூ.2,912 வீதமும் நிவாரண உதவிகளை வழங்கவும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் கருணைத் தொகையும் வழங்க உத்தரவிட்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.12.2004 அன்று நேரடியாக நாகர்கோவிலுக்கு வருகை தந்து**, இராமன்புதூர் திருக்குடும்ப ஆலய வளாக நிவாரண முகாமில் நிவாரண உதவிகளை வழங்கி ஆறுதல் கூறினார். நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை முகாம் பணியாற்ற உத்தரவிட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது; "பெரியோர்களே, தாய்மார்களே, உடன்பிறப்புக்களே அனைவருக்கும் வணக்கம்.

2 நாட்களுக்கு முன்பு இங்கு வந்து உங்களை எல்லாம் சந்தித்து நான் ஆறுதல் கூறினேன். இன்று மீண்டும் உங்களுக்கு உதவிகளை வழங்க நேரில் வந்திருக்கிறேன். கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3 கட்டமாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். 3 கட்டங்களாக இந்த உதவிகளைச் செய்கிறோம். முதற்கட்டம் தேடுதல் மீட்புப் பணி ஆகும். கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களைத் தேடி, அவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று அவர்களுக்கு உடனடித் தேவையான மருத்துவ சிகிச்சை, உணவு இவற்றை வழங்குவது தான் முதற்கட்டப் பணி. அதோடு இந்த ராட்சத அலைகளுக்குப் பலியானவர்களின் உடல்களைத் தேடி அந்த உடல்களை மீட்டு அவற்றை அடக்கம் செய்வதும் அந்த முதற்கட்டப் பணியில்

அடங்கும். இந்த முதற்கட்டப் பணியை ஏறக்குறைய செய்து முடித்து விட்டோம்.

2ஆவது கட்டப் பணியைத் தொடங்குவதற்குத் தான் இன்றைக்கு நான் வந்திருக்கிறேன். இன்று உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்காகப் பல உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் ஒவ்வொரு வருக்கும் 1 வேட்டி, 1 சேலை, 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், அடுப்பு, பாத்திரங்கள் வாங்கு வதற்கு 1,000 ரூபாய், பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவற்றை வாங்குவதற்கு 1,000 ரூபாய், தற்காலிகமாக ஒரு குடிசை எழுப்புவதற்கு 2,000 ரூபாய் என்று இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

வேட்டி, சேலையோடு 2 போர்வைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றோடு ஒவ்வொரு குடும்பத்திலும் பலியான ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1 இலட்சம் கருணைத் தொகையாகவும் வழங்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் உடனடி நிவாரண உதவிகளாகும்.

மூன்றாவது கட்டமாக உங்களுக்கு நிரந்தரமான ஒரு புனர்வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம். அந்த 3ஆவது கட்டப்பணியில் தான் உங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், நீங்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான படகுகள், வலைகள், மீன்பிடிச் சாதனங்கள் இவற்றையெல்லாம் வாங்கித் தருதல் போன்ற உதவிகள் மேற்கொள்ளப்படும். ஆகவே மிக விரைவில் இந்த 3ஆவது கட்டப்பணியில் அதாவது உங்களுக்கு நிரந்தரமான ஒரு வளமான புனர்வாழ்வு அமைத்துக் கொடுக்கும் பணியும் நடைபெறும். ஆகவே யாரும் எதற்கும் கவலைப்படவேண்டாம்.

நான் மிகவும் பாதிக்கப்பட்ட சில இடங்களுக்குச் சென்று உதவிகள் வழங்கியபோது பாதிக்கப்பட்ட அந்த மக்கள் சில குறைகளை என்னிடம் தெரிவித் தார்கள். கல்விச் சான்றிதழ்கள் (Education Certificates) தொலைந்து போய் விட்டதாகத் தெரிவித்தார்கள். ஆகவே யாருக்கெல்லாம் அத்தகைய கல்வி சான்றிதழ்கள் தொலைந்து போய் விட்டனவோ அவர்களுக்கெல்லாம் புதிய சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பலபேர் தங்களிடம் இருந்த ரேஷன் கார்டு தொலைந்து போய் விட்டதாகத் தெரிவித்தார்கள். அப்படி ரேஷன் கார்டு தொலைந்து போயிருந்தாலும் கவலைப்பட வேண்டாம். புதிய ரேஷன் கார்டு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே

எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். உங்களுக்கு வளமான ஒரு நல்ல எதிர்காலத்தை ஒரு புனர்வாழ்வை அமைத்துக் கொடுப்பது தமிழக அரசின் கடமை. அந்தக் கடமையை விரைவிலேயே முழுமையாக நிறைவேற்றுவோம் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தைரியமாக இருங்கள். நம்பிக்கையோடு இருங்கள். ஒரு நல்ல எதிர்காலம் உங்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையோடு இருங்கள். தமிழக அரசு மிக விரைந்து இந்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டை இந்த ராட்சத அலைகள் தாக்கிய அதே நேரத்தில்தான் ஸ்ரீலங்கா, இந்தோனேசியா, தாய்லாந்து, அந்தமான் நிக்கோபார் தீவுகள் போன்ற இடங்களுக்கும் இதே விதமான தாக்குதல் நடைபெற்றது. கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அந்த இடங்களில் எல்லாம் பாதிக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீட்கும் முதற்கட்டப் பணி கூட இன்னும் சரிவர முடிவடையவில்லை. நிறைவேற்றப் படவில்லை. ஆனால் தமிழக அரசு மின்னல் வேகத்தில் முதற்கட்டப் பணிகளை முடித்து விட்டு உடனடி நிவாரண உதவிகள் வழங்குகின்ற 2ஆம் கட்டப் பணிகளை இன்றைக்கு போர்க்கால அடிப்படையில் தொடங்கி யுள்ளது. விரைவிலேயே நான் ஏற்கெனவே தெரிவித்தது போல் உங்களுக்கு ஒரு நல்ல மறுவாழ்வை அமைத்துக் கொடுக்கும் பணியையும் தமிழக அரசு செய்யும்.

ஆகவே, எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்படாமல் நம்பிக்கையோடு உங்கள் வாழ்க்கையைத் தொடருங்கள் என்று கூறி உங்களுக்கெல்லாம் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

இந்த மேடையில் அடையாளமாக 10 பேருக்கு இந்த நிவாரண உதவிகளை என் கரங்களாலே வழங்கி யிருக்கிறேன். மீதமுள்ள அனைவருக்கும் இங்குள்ள

அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இப்போதே உரிய உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்று தெரிவித்தார்கள்.

நிவாரண உதவிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மின்சாரம் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் கண்காணிப்பின் கீழ் திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை செயலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், 3 கூடுதல் ஆட்சியர்கள் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகள் 6 மண்டலங்களாகவும், 15 துணை கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு வீடுகளை இழந்த 26,740 நபர்களுக்கு ரூ.4,912 க்கான நிவாரண உதவிகளாக ரூ.13 கோடியே 13 இலட்சத்து 46 ஆயிரத்து 880-ம், தொழில் பாதிக்கப்பட்ட 13,564 நபர்களுக்கு ரூ.2,912/-க்கான நிவாரண உதவிகளாக ரூ.3 கோடியே 94 இலட்சத்து 98 ஆயிரத்து 368ம் வழங்கப்பட்டன. மரணமடைந்த 824 நபர்களில் வாரிசுதாரர்கள் கண்டறியப்பட்ட 747 நபர்கள் குடும்பங்களுக்கு ரூ. 7 கோடியே 47 இலட்சம் கருணைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. காயமடைந்த அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக 7 நாட்களுக்கு மேல் சிகிச்சை பெற்றவர்கள் மற்றும் உடல் உறுப்புகளை இழந்தோர் எண்ணிக்கை 67 என கண்டறியப்பட்டு, இதுவரை 387 நபர்களுக்கு ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.19 இலட்சத்து 5 ஆயிரமும், 2 நபர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதமும் சிகிச்சைக்காக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மீட்புப்பணிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோரின் தீவிர கண்காணிப்பின்கீழ் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மீட்பு பணியில் 52 ஜே.சி.பி., 60 பொக்லைன் இயந்திரங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனை ஆம்புலன்ஸ்கள் ஈடுபடுத்தப்பட்டன. மீட்புப் பணியில் மாவட்ட அலுவலர்களுடன் கூடுதலாக 25 துணை ஆட்சியர்கள், 700 காவல்துறையினர், 400 தீயணைப்பு வீரர்கள், 150 மருத்துவர்கள், 250 சுகாதாரப் பணியாளர்கள், 230 வருவாய்த்துறை அலுவலர்கள், 40 வளர்ச்சித்துறை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். தொற்று நோய்கள் வராமல் தடுக்கவும், மருத்துவப் பணியாற்றவும் அனைத்து முகாம்களிலும் மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன.

கடலோர மக்கள் தங்களின் வாழ்க்கையைப் புத்துணர்வுடன் மீண்டும் தொடங்கும் வகையில் சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களுக்கு இழப்பீடு வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, மீன்பிடிச் சாதனங்கள் கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டன.

மீன்பிடிச் சாதனங்கள் சீரமைப்பு

சுனாமி பேரலையால் சேதமடைந்த 33 கிராமங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு மீன்பிடிச் சாதனங்களைச் சீரமைப்பதற்காக ரூ. 3 கோடியே 48 இலட்சத்து 31 ஆயிரம் பெறப்பட்டு இதுவரை 24 கிராமங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு ரூ. 2 கோடியே 71 இலட்சத்து 24 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிகக் குடியிருப்புகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கும் அரசின் உத்தரவிற்கிணங்க குமரி மாவட்டத்தில் 34 பகுதிகளில் ரூ.6 கோடியே 95 இலட்சத்து 60 ஆயிரத்தில் 3,397 வீடுகள் கட்ட தீர்மானிக்கப்பட்டு 3,212 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். தற்போது 2 தற்காலிக நிவாரண முகாம்களில் 173 நபர்கள் மட்டுமே உள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,596 குடும்ப அட்டைகள் தொலைந்து விட்டதாக மனுக்கள் பெறப்பட்டுத் தற்காலிக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

சான்றிதழ்களை இழந்து 10ஆவது வகுப்பு மதிப்பெண் கோரிய 220 மாணவர்களுக்கும், 12ஆவது வகுப்பு மதிப்பெண் கோரிய 113 மாணவர்களுக்கும் இரண்டாம்படி சான்றிதழ் வழங்க நடவடிக்கை

மேற்கொண்டு முதற்கட்டமாக 10ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் 113 மாணவர்களுக்கும், 12ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் 95 மாணவர்களுக்கும் வழங்கப் பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொங்கலையொட்டி, புதுவாழ்வைத் தொடங்கும் வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 1 டிரங்க் பெட்டி, 1 குடம், 1 மண்ணெண்ணெய் ஸ்டவ் வழங்க உத்தரவிட்டார்கள். இத்திட்டத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய்சுந்தரம் அவர்கள் புத்தளம் அரசு பள்ளி நிவாரண முகாமில் தொடங்கி வைத்தார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் அனைத்துப் பள்ளிகளும் 17.1.2005 முதல் திறக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மேல்நிலைப்பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இலவச மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேரலையால் பாதிக்கப்பட்டு ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தனியாக அரசு இல்லம் நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் பகுதியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்களால் 3.1.2005 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வில்லத்தில் 26 ஆதரவற்ற குழந்தைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 வயது முதல் 18 வயதிலான வளர் இளம் ஆதரவற்ற பெண்கள், 35 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற விதவைகள் மற்றும் பெண்களுக்கென தனியாக சேவை இல்லம் தக்கலை அருகே புலியூர் குறிச்சியில் தொடங்கப்பட்டு 18.1.2005 முதல் 11 ஆதரவற்ற பெண்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட கயிறு தொழில் செய்வோர், பிறதொழில் செய்வோரது சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

தற்காலிகக் குடியிருப்புகள் தரைத்தளத்தில் சலவைக்கல் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 34 குடியிருப்புகளிலும் 64 இடங்களில் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன. நிரந்தரக் குடியிருப்புகள் அமைக்க அரசின் அறிவுரைக்கிணங்க இடம் தேர்வு செய்யும் பணி தொடங்கியுள்ளது.

மின்இணைப்புகள் சீரமைப்பு

ஆழிப் பேரலை அழிவால் ரூ.1.61 கோடிக்கான மின் இணைப்பு இழப்பீடென மதிப்பிடப்பட்டு மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட 193 மின் விநியோக மின் மாற்றிகளும், 1,316 தெரு மின் விளக்குகளும், பள்ளிகளின் மின் இணைப்புகளும் சீரமைக்கப் பட்டுள்ளன. மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்ட 27,294 மின் இணைப்புகளில் 25,277 இணைப்பு களும், 2,601 மின் கம்பங்களில் 2,581 மின் கம்பங்களும், 58 கி.மீ. மின் பாதையில் 57 கி.மீ. மின்பாதையும் சரி செய்யப்பட்டுள்ளன. அனைத்து தற்காலிகக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி செய்யப் பட்டுள்ளது.

பன்னாட்டு சுற்றுலாத்தலமான கன்னியா குமரியில் மீண்டும் பழைய நிலையைக் கொண்டு வரவும், பூம்புகார் படகு போக்குவரத்தை மீண்டும் தொடங்கவும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் புத்துணர்வுடன், தொழிலில் ஈடுபடத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

– கு. தாணப்பா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி.

பெற்றோரை இழந்த பெண்களின் பெயரில் வைப்பு நிதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (4.1.2005)

26.12.2004 அன்று சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டு பாதிப்படைந்த கடலோரப் பகுதிகளில் தங்கள் பெற்றோரை இழந்து நிராதரவாக நிற்கும் குழந்தைகளை அரசே தத்தெடுத்து அவர்களைப் பாதுகாக்கும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். மேலும், அவர்களது பாதுகாப்பான எதிர்கால வாழ்வைக் கருதி, அவர்களின் பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் அவர்களின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டு, 18 வயது நிரம்பும் போது அதன் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் நான் 3.1.2005 அன்று அறிவித்திருந்தேன்..

இவ்வாறு நிராதரவாக்கப்பட்டு அனாதையாக நிற்கின்ற குழந்தைகள் ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருப்பதாக என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, அத்தகைய அனைத்துக் குழந்தைகளின் எதிர்காலத்தையும் உறுதி செய்யும் வகையில் ஒரு குடும்பத்தில் பெற்றோர்களை இழந்த குழந்தைகள் ஒன்றுக்கு மேல் இருப்பார்களேயானால், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

மேலும், சுனாமி பேரலைகளால் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்ற 14 வயது முதல் 18 வயது வரையிலான வளர் இளம் பெண்கள் சேவை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும், அவர்கள் பெயரிலும், பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு 18 வயது நிரம்பும் போது சொந்தத் தொழில் தொடங்கவோ அல்லது உயர் கல்வி கற்கவோ பயன் அளிக்கும் வகையில் இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை வழங்கப்படும் என்றும் 3.1.2005 அன்று நான் அறிவித்திருந்தேன். இத்தகையோரும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருப்பார்களேயான்ால் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் தலா 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக முதலீடு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

சுனாமி பேரலைகளின் பாதிப்பால் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களும் தங்கள் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்றனர். இவர்களுக்கும் ஒரு பாதுகாப்பான எதிர்கால வாழ்க்கையை அளிக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். எனவே, இத்தகைய 18 வயதிற்கு மேற்பட்ட நிராதரவான பெண்கள் சேவை இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். இவர்களும் தங்களது சொந்த காலில் நிற்க வழிவகை செய்யும் வகையில் இவர்களுக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், இவ்வாறு சேவை இல்லங்களில் சேர்க்கப்படுபவர்கள் உயர்கல்வி கற்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதன்மூலம் அவர்கள் தங்களுக்கு ஏற்ற சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு உதவிடும் வகையில் அவர்கள் பெற்றோரை இழந்தமைக்காக வழங்கப்படுகின்ற 3 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக முதலீடு செய்திட நான் உத்தரவிட்டுள்ளேன். அதே குடும்பத்தில் இத்தகைய பெண்கள் ஒருவருக்கு மேற்பட்டு இருப்பார்களேயானால் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 3 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யும் வகையில் நிதி உதவி அளிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். உயர்கல்வி அல்லது தொழில்நுட்பப் பயிற்சியை முடித்த பின்னர் புதிய தொழில் தொடங்கி தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதுவாக இந்த முதலீட்டின் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும். *

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில்

தமிழக அரசின் மின்னல்வேக நிவாரணப் பணிகள்

தமிழகத்தில் 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பால், கடலூர் மாவட்டத்தில் 57 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையில் உள்ள 51 கடலோரக் கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

கடலோரக் கிராமங்களில் உள்ள மீனவர்களின் வீடுகள், உடைமைகள், படகுகள், விசைப் படகுகள், மீன்பிடிச் சாதனங்கள், வலைகள் பெரும் சேதமடைந்தன. 26ஆம் தேதியன்று இறந்தவர்களின் சடலங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அடையாளம் காணப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இச் சடலங்கள் உறவினர்களின் ஒப்புதலோடு ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இதே போன்று சடலங்கள், பரங்கிப்பேட்டை பகுதியில் ஒரே இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வருகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 27.12.2004 அன்று கடலூர் வருகை தந்தார்கள். சுனாமியால் உயிரிழந்த குடும்பத்தின் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ1 இலட்சம் வீதம் நிவாரண உதவித் தொகை வழங்கினார்கள். தாழங்குடா, தேவனாம் பட்டினம், சிங்காரத்தோப்பு, சோனங்குப்பம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிவாரண உதவி வழங்கினார்கள்.

கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் பலர் பலியாகி உள்ளனர். மீனவர்களின் வலைகள், படகுகள், கட்டுமரங்களும் சேதமடைந்தன. இவர்கள் வாழும் வழியை இழந்து பரிதாபத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்கள், தங்களுடைய வாழ்க்கையை மீண்டும் வளமாக்கிக் கொள்ள தமிழக அரசு அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இதன் அடிப்படையில், மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.12.2004 அன்று இரண்டாவது முறையாக கடலூருக்கு வருகை தந்தார்கள். கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு புடவை, ஒரு வேஷ்டி, 2 போர்வை , தற்காலிகக் குடியிருப்பு அமைத்துக் கொள்ள ரூ.2,000, சமையல் பொருட்கள் வாங்கிட ரூ.1,000, ஸ்டவ் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட ரூ.1,000 என மொத்தத்தில் ரூ.5,000–க்கு தொகுப்பு நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிலையில் கடல் கொந்தளிப்பின் கோர நிலையை அறிந்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், கடலூர் மாவட்டத்திற்கு, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி ஆகியோர் விரைந்து வந்து, இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். சடலங்களை நல்லடக்கம் செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோர் கடலூர் பகுதியிலும், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பரங்கிப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பாதிக்கப்பட்ட பகுதிகளான சின்னூர், புதுப்பேட்டை, புதுக்குப்பம், சாமியார்பேட்டை ஆகிய இடங்களில் முகாமிட்டனர்.

நிவாரணப் பணியில் இராணுவம்.

மாவட்ட நிருவாகத்தினால் வெலிங்டன் ரெஜிமெண்ட்டிலிருந்து இராணுவ வீரர்கள் வரவழைக்கப் பட்டனர். இவர்கள், தேவனாம்பட்டினம், தாழங்குடா, சோனங்குப்பம், சிங்காரத்தோப்பு, அக்கரைகோரி,

சின்னூர், புதுப்பேட்டை, புதுக்குப்பம் ஆகிய இடங்களில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தனர். கட்டட இடிபாடுகளை அகற்றினர். சாலைகளைச் சீரமைத்தனர். சுற்றுப்புறப் பகுதிகளைத் தூய்மைப்படுத்தினர். குப்பைக் கூளங்களை அகற்றி சுகாதாரத்தை மேம்படுத்தினர். சிதறுண்டு கிடந்த பொதுமக்களுடைய பொருட்களை மீட்டுக் கொடுத்தனர். பாதுகாப்புப் பணியினை மேற் கொண்டதோடு, மீட்புப் பணியினையும் சிறப்பாகச் செய்தனர்.

தாழங்குடா, தேவனாம்பட்டினம் பகுதிகளில், பாதிக்கப்பட்ட மீனவர்களுடைய படகு என்ஜின்களைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். ஏறத்தாழ 120 என்ஜின்களுக்கும் மேலாக பழுதுநீக்கம் செய்து மீனவர்களிடம் வழங்கினர். இதனால், மீனவர்கள் என்ஜின்களைத் தம் பொறுப்பில் பழுது பார்க்கும் செலவு மிச்சமானது. இந்தப் பணியில், இவர்களுக்குத் துணையாக அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களும், அரசு போக்குவரத்துக் கழக தொழில் நுட்ப வல்லுநர்களும் செயல்பட்டனர்.

நிவாரண பாதுகாப்பு மையங்கள்

பாதிக்கப்பட்ட மக்கள் கடலூர், முதுநகர் மற்றும் பரங்கிப்பேட்டை, கிள்ளை, புதுப்பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட 38 நிவாரண பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டனர். இம்மையங்களில் சுமார் 25,000 நபர்கள் தங்கியிருந்தனர். இவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வேளைதோறும் வழங்கப்பட்டன. முதியோர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆவின் மூலம் பால் மற்றும் பால் பவுடர் வழங்கப்பட்டது. பின்னர், காய்ச்சிய பால் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் ஆவின் மூலம் விநியோகம் செய்யப்பட்டது. யுனிசெப் நிறுவனம் மூலம் குடிநீர் வழங்கிட 200 சின்டெக்ஸ் டேங்குகள் பாதுகாப்பு மையம் மற்றும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டன.

மருத்துவ முகாம்கள்

ஒவ்வொரு நிவாரணப் பாதுகாப்பு மையத்திலும், மருத்துவர்கள் குழு முகாமிட்டது. இம்முகாம்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியோர்களை அவ்வப்போது பரிசோதனை செய்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. தொற்று நோய் பரவா வண்ணம் தடுப்பு ஊசிகளும் மருந்துகளும் வழங்கப்பட்டன. குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பு ஊசியும், போலியோ சொட்டு மருந்தும், வைட்டமின் ஏ திரவமும் வழங்கப்பட்டது. இதுவரை 66 ஆயிரம் நபர்களுக்கு இம்மருத்துவக் குழு மூலம் சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் முகாம்களில் 28,750 கிலோ பிளிச்சிங் பவுடர், 22,350 கிலோ சுண்ணாம்பு மற்றும் 2,625 லிட்டர் பினாயிலும் தெளிக்கப்பட்டன.

நிவாரணப் பணி மேற்கொள்ள குழு அமைப்பு

நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் 22 குழுக்களை அமைத்தார்.

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்வதற்கும், பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி, மின் விநியோகம், சுகாதார வசதி, தங்கும் இடவசதி ஆகியவற்றை மேற்கொள்ள இக்குழு அமைக்கப்பட்டது.

சேத மதிப்பீடு, நிவாரணம் வழங்குதல் ஆகியவற்றை மேற்கொண்டிட, மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழுவும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் வழங்குதல், சிகிச்சை அளித்தல், மருத்துவக் குழுக்களைக் கண்காணித்தல் ஆகியவற்றிற்குத் துணை இயக்குநர் (சுகாதாரம்) தலைமையிலான குழுவும்,

பாதுகாப்பு நிவாரண மையம் மற்றும் கிராமங்களில் பிளிச்சிங் பவுடர், குளோரின் கலந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகியவற்றை மேற்கொண்டுள்ள நகராட்சி ஆணையர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களைக் கொண்ட குழுவும்,

உயிரிழந்த கால்நடைகளைப் பற்றிய விவரங்கள் சேகரித்தல் மற்றும் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தல் ஆகியப் பணிகளை மேற்கொள்ள கால்நடைத்துறை இணை இயக்குநர் தலைமையிலான குழுவும்,

பாதிக்கப்பட்ட மீனவக் கிராமங்கள், காணாமல் போன மற்றும் இறந்துபோன மீனவர்கள் விவரம், மீன்பிடிச் சாதனங்கள், படகுகள், கட்டுமரங்கள், விவரங்கள் சேகரிக்க மீனவளத்துறை உதவி இயக்குநர் தலைமையிலான குழுவும்,

வீடுகள் சேதம், உயிர்கள் சேதம் குறித்த விவரங்களைச் சேகரித்து நிவாரணங்கள் வழங்க வட்டாட்சியர்கள் தலைமையிலான குழுவும்,

நிவாரணப் பணிகள் விரைவாக நடைபெற்றிட அலுவலர்கள், களப்பணியாளர்களுக்கு வாகன வசதி செய்து கொடுத்திட அந்தந்த அதிகாரிகள் தலைமையிலான குழுவும்,

பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மின் விநியோகம், தெரு விளக்குகள் எரிய வைத்தல் ஆகிய பணிகள் மேற்கொண்டிட மின்வாரிய கண்காணிப்புப் பொறியாளர் தலைமையிலான குழுவும்,

பாதுகாப்பான இடத்தில், குடியிருப்பு அமைத்திட தொடர்புடைய பெரியவர்களிடம் ஆலோசனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள கோட்டாட்சியர் தலைமையிலான குழுவும்,

பாதுகாப்பு மையங்களின் பணிகள் மேற்கொள்ளுதல், காணாமல் போனவர்களைத் தேடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டிட காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவும்,

சேதமடைந்த குடிசைகளைக் கணக்கிட்டு நிவாரண உதவிகள் வழங்கிட மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழுவும்,

நோய் பரவும் அபாயம் உள்ள இடங்களில் வசிப்பவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், காலரா தடுப்பு மருந்துகள் வழங்கிட துணை இயக்குநர் தலைமையிலான குழுவும்,

அந்தந்தப் பகுதியில் சேதமடைந்த குடிசைகள் மற்றும் அமைத்து தர வேண்டியக் குடியிருப்பு விவரங்கள் சேகரித்து நிவாரணப் பணிகள் மேற்கொண்டிட கோட்டாட்சியர், வட்டாட்சியர் தலைமையிலான குழுவும்,

38 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளவர்களுக்கு உணவு மற்றும் குடி தண்ணீர் விநியோகம் செய்திட மாவட்ட வழங்கல் அலுவலர் தலைமையிலான குழுவும்,

நிவாரணப் பணிகளை ஒட்டு மொத்தமாக மேற்கொள்ள தனிவட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தலைமையிலான குழுவும் என தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் போர்க்கால வேகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

படகு மீட்புப் பணிகள்

கடலோரம் இருந்த படகுகள், ஆற்றில் இருந்த விசைப் படகுகள், கடல் அலைகளினால் 400–500 மீட்டர் வரை அடித்துச் செல்லப்பட்டன. இவைகள் 20 டன் மற்றும் 80 டன் திறன் கொண்ட பளு தூக்கும் இயந்திரங்கள் மூலமாக லாரிகளில் ஏற்றப்பட்டு கரையோரங்களில் சேர்க்கப்பட்டன. இதற்காக, சென்னை துறைமுகக் கழகத்திலிருந்தும், என்.எல். சியிலிருந்தும் இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டன.

கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 617 நபர்கள் இறந்துள்ளனர். இதில், இதுவரை 566 இறந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.5.66 கோடி நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 11,578 நபர்களுக்கு தலா ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 6,871 நபர்களுக்குத் தலா ரூ.2,000 தொகுப்பு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 517.17 எக்டேர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 15,200 வீடுகள் சேதமடைந் துள்ளன. கால் நடைகள் 1,068 உயிரிழந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட 38 பாதுகாப்பு மையங்களில், தற்போது 2 மையங்கள் மட்டும் செயல்பட்டு வருகிறது. இதில் 900 நபர்கள் இருந்து வருகின்றனர்.

கட்டுமரங்கள், வலைகள் சேதம்

5,250 கட்டுமரங்கள் முழுமையாகவும், 1,048 கட்டுமரங்கள் பகுதியாகவும், இரண்டு மரப்படகுகள் முழுமையாகவும், 175 விசைப்படகுகள் முழுமையாகவும், 74 விசைப்படகுகள் பகுதியாகவும், ஐ.பி. மற்றும் எஸ்.டி.பி. விசைப் படகுகள் முழுமையாகவும், 361 பகுதியாகவும் சேதமுற்றுள்ளன. அதே போன்று 14,285 அனைத்து வகையான வலைகளும் சேதமடைந்துள்ளன.

சேதமுற்ற கட்டுமரங்களுக்குத் தலா ரூ.5,000மும், வலைகளுக்குத் தலா ரூ.10,000மும் அரசு நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 4,970 மீனவர்களுக்கு ரூ.5.35 கோடி தொகை நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவிப்பின்படி பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய நிவாரணப் பொருட்களை வைத்துக் கொள்ள, நஞ்சலிங்கம்பேட்டை நாயக்கர் பேட்டையில் பொங்கல் அன்று ரூ.600 மதிப்பில் ஒரு டிரங்க்பெட்டி மற்றும் ஒரு சில்வர் குடம், ஒரு ஸ்டவ் ஆகியவற்றை மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கித் தொடங்கி வைத்தார்.

அமைச்சர்கள் அளித்த நிவாரண உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை தொடர்ந்து மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.எஸ்.இராமச்சந்திரன் ஆகியோர் தாழங்குடா, தேவனாம்பட்டினம், சோனாங்குப்பம், சிங்காரத்தோப்பு, அக்கரை கோரி, சாமியார்பேட்டை, புதுக்குப்பம், புதுப்பேட்டை, சின்னூர், கிள்ளை உட்பட பல்வேறு கிராமங்களுக்கும் சென்று அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

அனாதை இல்லம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கடலூர், புதுப்பாளையத்தில் அரசு சார்பில் அனாதை இல்லத்தை, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், மாவட்ட ஆட்சியர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

சுனாமி கடல் கொந்தளிப்பால், சின்ன வாய்க்கால், பில்லுமேடு, எம்.ஜி.ஆர்.திட்டு மற்றும் தேவனாம்பட்டினம் ஆகிய கிராமங்கள் பாதிக்கப்பட்டு, தாய் தந்தையரை இழந்த 21 குழந்தைகள் இவ்வில்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாய் அல்லது தந்தையை இழந்த 8 குழந்தைகள் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை அனாதை குழந்தைகள் 139 பேர் உள்ளனர். இவர்களுக்கு நாள்தோறும், மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. காலை, மதியம், இரவு மூன்று வேளையும் முறையே சிற்றுண்டி, சாப்பாடு, சிற்றுண்டி, பால், பிஸ்கட் வழங்கப்படுகிறது. விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தனியார் மூலம் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் குளிர்சாதனப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிக வீடுகள்

பாதிக்கப்பட்ட வீடிழந்த மீனவர்களுக்கு அரசு சார்பில் சின்னூர், கன்னியக்கோயில், புதுப்பேட்டை, புதுக்குப்பம், முழுக்குத்துறை, சிங்காரத்தோப்பு, தாழங்குடா, தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் 4,400 தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிவுற்று அவர்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்பட உள்ளது.

குடிநீர் வசதிகள்

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கடலோரக் கிராமங்களில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. இவர்களுக்குக் குடிநீர் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தாழங்குடாவில் 10 கைப்பம்புகளும், ராசாப்பேட்டையில் 5, சொத்தக்குப்பத்தில் 5, சித்திரைப்பேட்டையில் 3, தம்னாம்பேட்டையில் 4, நாயக்கர்பேட்டையில் 3, நஞ்சலிங்கம்பேட்டையில் 3, பெரியக்குப்பத்தில் 4, பேட்டோடையில் 3, அய்யம்பேட்டையில் 3, ரெட்டியார் பேட்டையில் 3, அண்ணப்பன் பேட்டையில் 3, மடவாப்பள்ளத்தில் 4, குமாரப்பேட்டையில் 5, சாமியார்பேட்டையில் 10, வேளங்கிராயன்பேட்டையில் 2, புதுக்குப்பத்தில் 7, புதுப்பேட்டையில் 7, சின்னூர் வடக்கில் 5, சின்னூர் தெற்கில் 6, முடசலோடை வடக்கில் 5 ஆக மொத்தம் 100 கைப்பம்புகள் ரூ.7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சமுதாய சமையல் கூடம்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தாழங்குடா, தேவனாம்பட்டினம், புதுப்பேட்டை, சாமியார்பேட்டை, குமாரப்பேட்டை, புதுக்குப்பம் போன்ற கிராமங்களில் 24 இடங்களில் சமுதாய சமையல் கூடம் அமைக்கப்பட்டு அரசின் சார்பில் உணவுகள், சமையல் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

கொசு வலை

தற்காலிகக் குடியிருப்புகளில் தங்கியுள்ள மக்களுக்குக் கொசுக்கள் மூலம் மலேரியா போன்ற நோய்கள் பரவா வண்ணம் தடுக்க கொசு வலைகளை மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், அரசு சார்பில் வழங்கினார். இந்த வகையில் 2,500 தற்காலிகக் குடியிருப்புகளுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் நைலான் கொசு வலைகள் வழங்கப்பட்டன.

தொண்டு நிறுவனங்கள்

பாதிக்கப்பட்டவர்களின் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரின் பங்கும் அளப்பரியதாக இருந்தது. டான்பாக், வேர்ல்டு விஷன், சுமனஹள்ளி மருத்துவ நிறுவனம், பாரத் சேவா சங்கம், ஆக்ஸ்பாம் பிராஜக்ட் ஹோப், டாக்ரோஸ், ஆர்க்காட் லூத்தீரன் சர்ச், சாது வாஸ்வாணி மிஷன் (பூனா) மெட்ரோ, சென்னை போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு கடும்பணி ஆற்றினார்கள்.

– என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர் மாவட்டம்.

குஜராத் மாநிலம் உதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 28.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், குஜராத் மாநிலத்தின் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. அசோக்பாய் சந்துலால் பட் அவர்கள் நேரில் சந்தித்து, 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, குஜராத் மாநில அரசின் சார்பாக ஐந்து கோடி ரூபாய் நன்கொடைக்கான காசோலையை வழங்கினார்.

மேலும், கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு வழங்குவதற்காக 3.2 டன் எடையுள்ள ரொட்டி, பிஸ்கட், பால் பவுடர் போன்ற உணவுப் பொருட்கள் குஜராத் மாநில அரசால் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், குஜராத் மாநிலத்தின் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. அசோக்பாய் சந்துலால் பட் அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

தமிழகம் சந்தித்துள்ள வரலாறு காணாத பேரிழப்புக்குக் குஜராத் மாநில அரசு சார்பில் தக்க சமயத்தில் செய்யப்பட்டுள்ள இந்த உதவிக்குத் தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு குஜராத் சட்ட அமைச்சரிடம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொலைபேசி மூலமாக மாண்புமிகு குஜராத் மாநில முதலமைச்சர் திரு. நரேந்திர மோடி அவர்களுடன் தொடர்பு கொண்டு, கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களின் துயரில் பங்கு கொண்டு, அவர்களுக்கு உதவிட 5 கோடி ரூபாய் நிதி உதவி, 3.2 டன் ரொட்டி, பிஸ்கட் மற்றும் பால் பவுடர் முதலான உணவுப் பொருட்களும் வழங்கியமைக்காகத் தமது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ❖

ஹரியானா மாநிலம் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஹரியானா மாநிலத்தின் நிதியமைச்சர் திரு. சம்பத் சிங் அவர்கள் நேரில் சந்தித்து, 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப் பட்ட தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஹரியான மாநிலத்தின் சார்பாக மூன்று கோடி ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 3.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஹரியானா மாநில நிதியமைச்சர் திரு. சம்பத் சிங் அவர்கள் நேரில் வழங்கினார்.

சுனாமி பேரலைகளால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தகவல் அறிந்த மாண்புமிகு ஹரியான மாநில முதலமைச்சர் திரு. ஓம் பிரகாஷ் சௌதாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன் 29.12.2004 அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக, ஹரியானா மாநில அரசின் சார்பாக 3 கோடி ரூபாய் நன்கொடையாக வழங்கப்படும் என்று தெரிவித்தார். இந்த நன்கொடைக்கான காசோலையை, தமிழகம் சந்தித்துள்ள பேரிழப்புக்கு ஹரியானா மாநில அரசின் சார்பில் தக்க சமயத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த நன்கொடைக்காக ஹரியானா மாநில அரசுக்கும், மாநில முதலமைச்சர் மாண்புமிகு ஓம் பிரகாஷ் சௌதாலா அவர்களுக்கும், தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது ஹரியானா மாநில நிதி ஆணையாளரும், வருவாய்த் துறை முதன்மைச் செயலாளருமான திரு. ஆர்.என். பிராஷர் மற்றும் ஹரியானா ரோட்வேஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. தரம் பால் ஆகியோர் உடனிருந்தனர்.

◆ ◆ ◆

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 25-12-2004

"உழைக்கும் கைகளே உலகை உருவாக்கும் கைகள்" என்பதால் உழைக்கும் மக்களின் நலன்களைப் பேணுவதற்கு எப்போதும் முக்கியத்துவம் அளித்து வருகிறது எனது அரசு. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்கள் மக்களுக்கு மேலும் சிறப்பாகப் பணியாற்ற ஊக்கமளிக்கவும் நான் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன்.

எனது கடந்த ஆட்சிக் காலத்தில், அதாவது 1991–லிருந்து 1996 வரை தொழிலாளர் நலன் பேணும் பல்வேறுத் திட்டங்களை நான் கொண்டு வந்தேன். ஆனால், 2001–ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை மேம்படுத்த எந்தவொரு புதிய நடவடிக்கையையும் எடுக்க முடியாத அளவிற்குத் தமிழக அரசு மற்றும் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலைமையை அதல பாதாளத்தில் முந்தைய தி.மு.க. அரசு விட்டுச் சென்றிருந்தது. அதனால், பல்வேறு அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களது மாதாந்திர சம்பளத்தை அளிப்பதே ஒரு பெரும் சவாலாக அமைந்துவிட்டது. பல்வேறு நிதி மற்றும் நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட காரணத்தால் அரசின் நிதி நிலைமை மட்டும் அல்லாமல் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலைமையும் ஓரளவிற்குச் சீர் அடைந்தது. இவ்வாறு நிதி நிலைமை சீரடைந்த உடனேயே, அவ்வாறு சீரடைய உதவி புரிந்த ஊழியர்களைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குப் பல்வேறுச் சலுகைகளை நான் அளித்தேன்.

அண்மையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 250 வீதம் 1.9.2003 முதல் முன் தேதியிட்டு வழங்க நான் ஆணையிட்டேன். அதே போன்று, இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையின் போது வழக்கமாக வழங்கப்படும் 8.33 சதவிகிதம் போனஸுடன் 1.67 சதவிகித கருணைத் தொகையையும் சேர்த்து, மொத்தம் 10 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையை வழங்கினேன் என்பதையும் இங்கு நினைவு கூர விரும்புகிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்த ம்டியாது என்று தெரிந்திருந்த போதிலும், வெற்று அறிவிப்பில் பாராட்டுப் பெறும் எண்ணத்துடன் முந்தைய தி.மு.க. அரசு இந்தத் திட்டத்தை அறிவித்தது. இத்தகைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது எனது தலைமையிலான அரசுக்கு மாபெரும் சவாலாகவும், சங்கடமாகவும் அமைந்தது. தொழிலாளர்களின் நலனைக் கருதி, எவ்வகையிலேனும் ஓய்வூதியத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் ஓய்வூதியப் பொறுப்பாட்சி நிதியத்தின் (Pension Fund Trust) நிதிப் பரிமாற்றங்களுக்கு வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரி விலக்கு வழங்க வேண்டும் என்று மத்தியஅரசை 25.9.2001 அன்று தமிழக அரசு கேட்டுக் கொண்டது. ஆனால்,அப்போது மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசில் அங்கம் வகித்த தி.மு.க. பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள் இது பற்றி ஒரு சிறிதும் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக, எனது அரசின் கோரிக்கையை ஏற்காமல் வருமான வரி விலக்கு அளிக்கப்பட மாட்டாது என்று திட்டவட்டமாக

மத்திய அரசின் நிதி அமைச்சகம் 13.8.2003 அன்று பதில் அளித்தது. இதன் வாயிலாக, அறிவிக்கப்பட்ட ஒய்வூதியத் திட்டம் எந்த வகையிலும் செயல்படுத்த முடியாத அபாயகரமான கட்டத்திற்குத் தள்ளப்பட்டது. இதே காலகட்டத்தில், மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி வகுத்த பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் ஒய்வூதியப் பொறுப்பாட்சி நிதியத்தின் வைப்பு நிதிக்குப் பெறக்கூடிய வட்டி விகிதம் கணிசமாகக் குறைக்கப் பட்டது. ஆகவே, ஆழ்ந்த சிந்தனையும் தொலைநோக்குப் பார்வையும் இன்றி, போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் நீண்டகால நலனை ஒரு சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், ஆரவாரமான அறிவிப்புக் காகவே உருவாக்கப்பட்ட அந்தஅரைகுறைத் திட்டம் செயல்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர் களின் ஒய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை எடுத்துக் கூறி, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஒய்வு பெற்ற தொழிலாளர்களின் நலன் காப்பது தொடர்பாக ஒரு சிறப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் 24.12.2004 அன்று கடிதம் ஒன்று எழுதி உள்ளேன்.

அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் நலன் எக்காலத்திலும் காக்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். எனவே, முந்தைய தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட, தொடர்ந்து நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ள ஒய்வூதியத் திட்டத்தை, செயல்படுத்தும் வகையில் அதன் அடிப்படையை உறுதிப்படுத்தி, போக்குவரத்துக் கழக தொழிலாளர் களின் நலனைக் காக்கும்வகையில் தேவையான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். இதற்காகத் தான், ஒய்வூதியப் பொறுப்பாட்சி நிதியத்தின் நிதிப் பரிமாற்றங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளேன். இந்த வரி விலக்கைக் கட்டாயமாக மத்திய அரசு வழங்க வேண்டும். இந்த அடிப்படையில் ஒய்வு பெற்ற அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய ஒய்வூதியப் பலன்களைத் தொடர்ந்து வழங்க நான் ஆணையிட்டு உள்ளேன்.

பணி ஒய்வுக்குப் பிறகும் தொழிலாளர்களின் வளமான வாழ்க்கைக்கு உறுதுணை புரிவதில் எனது தலைமையிலான அரசு முன் நிற்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் பொதுமக்களுக்கு மேலும் சிறப்பான சேவையை அளிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ★

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு 15.1.2005 அன்று சென்னை மெரீனா கடற்கரையில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஒ. பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

கடலோரத்தில் தடுப்புச் சுவர் அமைக்க ரூ.5,000 கோடி வழங்க வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிக் குழுவிடம் வலியுறுத்தல்

தமிழ்நாட்டில் 26.12.2004 அன்று சுனாமி அலைகள் ஏற்படுத்திய பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டங்கள் பற்றி ஆலோசிக்க உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் மைக்கேல் எப் கார்ட்டரும், ஆசிய வளர்ச்சி வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் லூயிஸ் டி ஜாங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 18.1.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், சந்தித்துப் பேசினார்கள்.

சுனாமி அலைகள் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடற்கரையையும் கடுமையாகத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்திவிட்டது. அதனால் மிகப்பெரிய அளவில் மறுவாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி அதிகாரிகளிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இந்தப் பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையினர் மீனவர்கள்தான். இவர்கள் வாழ்க்கை ஆதாரங்களான படகுகள், மீன்பிடி வலைகளை இழந்ததுடன் வீடுகளையும் இந்தப் பேரழிவில் இழந்துவிட்டுத் தவிக்கின்றனர்.

போதிய அளவு தாராளமான திட்டத்தின் மூலம்தான் இவர்களுக்கு முழுமையான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வினை உறுதிப்படுத்த முடியும். பாதிக்கப்பட்ட மீனவ மக்களின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பான இடங்களில் அவர்களுக்கு நிரந்தரமான மறுவாழ்விற் கான வீடுகளைக் கட்டிக்கொடுக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காகக் கடற்கரையில் இருந்து பாதுகாப்பான தூரத்தில் இடங்கள் அடையாளம் காணப்பட்டு வருகிறது. விரைவில் நிரந்தரமான வீடுகளைக் கட்டும் பணி தொடங்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்கள்.

தமிழக அரசின் இந்தத் திட்டத்தை வரவேற்ற வங்கி அதிகாரிகள் மிக மோசமாகப் பேரழிவு ஏற்பட்டுள்ளதால் இவ்வளவு பெரியத் திட்டத்தை நிறைவேற்ற தனிச் சலுகைகள் கொண்ட கடனுதவி தேவைப்படுகிறது என்பதையும் ஏற்றுக் கொண்டனர்.

மேலும், தமிழக கடற்கரை முழுவதையும் பாதுகாக்கத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்தத் திட்டம் கடற்கரையில் மாங்குரோவ் காடுகளையும், மற்ற மரங்களையும் வளர்க்கும் திட்டம் மற்றும் குறிப்பிட்ட இடங்களில் கிரையான்ஸ் போடுவது, தடுப்புச் சுவர் அமைப்பது உள்ளிட்ட திட்டங்களைக் கொண்டதாக பெரிய செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட திட்டத்திற்கு ரூ.5,000 கோடி செலவாகும். இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தத் துவங்கினால் மட்டுமே பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் நம்பிக்கை ஏற்படுத்த முடியும். தமிழக அரசின் இந்த கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு உலக வங்கியும், ஆசிய வங்கியும் உதவ முன் வர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

சுனாமி அலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் நாகை மாவட்டம். இந்த மாவட்டம் காவேரி ஆற்றின் கழிமுகப் பகுதியாகும். சராசரி கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள இந்த மாவட்டம் புயல் காற்றுக்கு உள்ளாகும் பகுதி. இந்த மாவட்டத்தின் கழிவுநீர் அகற்றும் பணி பெரும் சவாலான பணியாக உள்ளது என்று எடுத்துக் கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கியும், ஆசிய வங்கியும் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க பன்னாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன் மிகப்பெரிய கழிவுநீர் அகற்றும் திட்டத்தை அமைக்க வேண்டியுள்ளது பற்றி வலியுறுத்தினார்கள். இந்தத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று வங்கி அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

கடலோர மீனவர்களின் மறுவாழ்வுத் திட்டம் அவர்கள் இழந்தவற்றை மீட்டுக்கொடுத்து மீண்டும் அவர்கள் பழைய இயல்பு நிலைக்குத் திரும்ப உதவ வேண்டும் என்பதற்கும் மேலாக அவர்களின் மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்த உதவுவதுடன் அதிக மீன் பிடிக்க உதவுவதற்கும் அதற்கானச் சந்தையை விரிவுபடுத்த உதவுவதாகவும் அமைய வேண்டும். அதன் மூலம் கடற்கரை பொருளாதாரத்தையே மேம்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்தார்கள். கடற்கரை பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவதாக வங்கி அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

உலக வங்கியின் இந்திய இயக்குநரும், ஆசிய வங்கியின் இந்திய இயக்குநரும் கடந்த ஜனவரி 17, 18 தேதிகளில் சுனாமி பாதித்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு வந்ததாகக் கூறினார்கள். அப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதல் கட்டமாகச் சடலங்களை மீட்பது, பாதிக்கப்பட்டவர்களைத் தங்க வைப்பது, அவர்களுக்கு உடனடி உதவிகள் செய்வது, காணாமல் போனவர்களைத் தேடுவது, உடனடி மருத்துவ சிகிச்சைகள் அளித்தது, இரண்டாம் கட்டமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளித்தது ஆகிய பணிகள் திட்டமிட்டு மிகச் சரியாக பாராட்டத்தக்க வகையில் நடந்துள்ளது. குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மீண்டும் வாழ்க்கையைத் தொடங்க அவர்களுக்கு தற்காலிகக் குடியிருப்புகள் போர்க்கால அடிப்படையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த நடவடிக்கைகள் மிகவும் பாராட்டத்தக்க வகையில் உள்ளது. ஏற்பட்டுள்ள பேரழிவை நாங்கள் நேரில் சென்று கண்டோம். இந்தப் பேரழிவில் இருந்து மக்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தி கொடுக்கவும், புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உலக வங்கியும், ஆசிய வங்கியும் தேவையான எல்லா உதவிகளையும் செய்யும் என்றும் இயக்குநர்கள் உறுதியளித்தனர்.

மேலும் இப்போது பார்வையிட்டது முதல் கட்ட ஆய்வுப் பணிதான். அடுத்தகட்டமாக ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் புனரமைப்பு தேவைக் குறித்து தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வை உலக வங்கி, ஆசிய வங்கி, ஐக்கிய நாடுகள் அமைப்பும் இணைந்து மேற்கொள்ளும்.

அதன்பின் இந்திய அரசு மற்றும் தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப்படும். இந்த வகையில் தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்திற்கு உலக வங்கி முழு ஆதரவு அளிக்கும். குறிப்பாக வாழ்க்கை ஆதாரங்களை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது, துறைமுகம், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை மீண்டும் மேம்படுத்தி உருவாக்குவது, கடற்கரை பாதுகாப்புத் திட்டமான மாங்குரோவ் காடுகள், மரங்கள் வளர்ப்பது, கடற்கரையில் தடுப்புச் சுவர் அமைத்தல், கிரையான்கள் அமைத்தல் மற்றும் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை உருவாக்குவது ஆகிய திட்டங்களுக்கு உதவ முடியும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் உறுதி அளித்தனர்.

தமிழ்நாடு வறுமை ஒழிப்புத் திட்டம், நகர்ப்புற நீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டம், கிராமப்புற மேம்பாடு திட்டம், தமிழக நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்பு திட்டம் III, மூன்றாவது சென்னை குடிநீர் விநியோகத் திட்டம் போன்ற நிலுவையில் உள்ள திட்டங்கள் விரைந்து முடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி இந்திய இயக்குநரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

மேற்கண்ட திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்படும் என்று உலக வங்கி இயக்குநர் உறுதி அளித்தார். தமிழகத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மேம்படுத்தும் வகையில் புதிய திட்டங்களை ஆசிய வளர்ச்சி வங்கி மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று உடனடியாகப் பரிசீலிப்பதாக வங்கி அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

இந்தச் சந்திப்பில் உலக வங்கியின் பொருளாதார நிபுணர் மோகன் நாகராஜன், ஷாமல் சர்கார், ஆசிய வளர்ச்சி வங்கி அலெக்ஸ் ஜார்கென்சன் ஆகியோரும் பங்கேற்றனர். மாண்புமிகு தமிழக பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிரானேஷ், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மை செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., வருவாய்த்துறை ஆணையர் திரு. சந்தானம், இ.ஆ.ப., மற்றும் அதிகாரிகளும் உடன் இருந்தனர். ◆

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட

சென்னை மாவட்டப் பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள்

இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா தீவின் மையப்பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் எதிரொலியாக தமிழ்நாட்டில் 26.12.2004 அன்று கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான கடலோரப்பகுதிகளில் ஏற்பட்ட பேரலைகளின் அதிபயங்கரத்தாலும் எதிர்பார்க்காத சூழ்நிலையில் திடீரென்று பாய்ந்த இயற்கைச் சீற்றத்தைக் கண்டு ஒட்டு மொத்தத் தமிழகமும் அதிர்ச்சியில் உறைந்து போயின.

ஆசியாவிலேயே மிக நீண்ட கடற்கரை, உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை என பெயரும் புகழும் பெற்ற சென்னை மெரினா, இந்தக் கொந்தளிப்பால் சின்னாபின்னமானது. தென்சென்னையில் மெரினா, அயோத்திக்குப்பம், பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம், திருவான்மியூர் பகுதிகளிலும், வடசென்னையில் காசிமேடு, ராயபுரம், திருவொற்றியூர் மீன்பிடித் துறைமுகம், எண்ணூர் பகுதிகளிலும் 39 அடிக்கும் அதிக உயரத்திற்கு அலை எழும்பியது. இதில் தென் சென்னை சீனிவாசபுரத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான குடிசைகளும் கடற்கரையை ஒட்டியுள்ள குடிசை மாற்று வாரியம் மற்றும் குடிசைகளில் வசித்தவர்கள் இந்த அலையில் சிக்கிப் பலியானார்கள். இச்சம்பவம் நடந்து முடிந்த அரைமணி நேரத்தில் கடற்கரையெங்கும் சடலங்களாகக் காணப்பட்டது. சம்பவ இடத்துக்கு தீயணைப்புத் துறையினரும் காவல்துறையினரும் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கையில் உடனடியாக ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டில் கடல்கொந்தளிப்பால் கடல் நீர் புகுந்து சேதம் ஏற்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரில் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாதிப்பு ஏற்பட்ட சிலமணி நேரத்திலேயே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை பட்டினப் பாக்கத்தில் உள்ள கடற்கரைப் பகுதிக்குச் சென்று நேரில் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறினார். அவருடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், நிதித்துறை செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் நட்ராஜ், ஆயுதப்படை போலீஸ் ஐ.ஜி. பாலச்சந்திரன், துணை ஆணையர் சண்முகராஜேஸ்வரன், சென்னை மாவட்டாட்சியர் திரு. வெ.கண்ணுச்சாமி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் அதிகாரிகள் உடன் வந்திருந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உடனடியாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு, உதவிகளை விரைந்து வழங்குமாறு உத்தரவிட்டார்.

பின்னர், அங்கிருந்து கடல் கொந்தளிப்பால் சீரழிந்து கிடந்த மெரினா கடற்கரையில் தண்ணீரில் மூழ்கி அழிந்துவிட்ட கடற்கரை ஓரமிருந்த கடைகள், மீனவர் குடிசைகள் ஆகிய பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். பின்பு நொச்சிக்குப்பம் பகுதிகளையும் பார்வையிட்டார்.

அதன்பின், அங்கிருந்து சென்னை விமான நிலையம் சென்று ஹெலிகாப்டரில் பறந்தபடியே சேதங்களைப் பார்வையிட்டார்.

சென்னை மெரினா கடற்கரை, எண்ணூர், பழவேற்காடு, கோவளம், மாமல்லபுரம் போன்ற இடங்களிலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டார்.

மேலும், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளையும், இறந்தோரின் உடல்களையும் நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கும். இறந்தோரின் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினார். இறந்தவர்களின் உடல்களைப் பிரேத பரிசோதனை யில்லாமல் உடனடியாக ஒப்படைக்கும்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதற்கிடையில் மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்



திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். விஸ்வநாதன், குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. நா.பாலகங்கா, துணை மேயர் திரு. கராத்தே தியாகராஜன், சுற்றுலா வாரியத்தலைவர் திரு. ஆதிராஜாராம், சென்னை மாவட்டாட்சியர் திரு. வெ.கண்ணுச்சாமி ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைப்படி அரசு மருத்துவ மனைகளுக்குச் சென்று இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி முதலமைச்சர் அவர்களின் சார்பில் ஆறுதலையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் வைக்கப்பட்ட உடல்களைப் பார்வையிட்டு இறந்தவர்களின் உறவினர்களுக்கும் அமைச்சர்கள் ஆறுதல் கூறினர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், “மக்கள் யாரும் பீதி அடைய வேண்டாம். தமிழகம் முழுதும் முழுவீச்சில் நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன. கடலோர மாவட்டாட்சியர்களுக்கு உரிய உத்தரவும் அறிவுரைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன' என்று தெரிவித்தார். மேலும், இதுவரை ஏற்பட்ட சேதத்திற்கு, மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணிகளுக்காக அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி, மாவட்டாட்சி யர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இராணுவம், கடற்படை, கடலோர காவற்படை ஆகிய மத்திய அமைப்புகள் முழுவீச்சில் நமக்கு நிவாரணப் பணிகளில் உதவிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு மத்திய அரசிலிருந்து என்ன உதவி கோரினாலும், அதைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். மேலும், மாநில நிருவாகமும் மாவட்ட நிருவாகமும் முழுவீச்சில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளன. பாதிக்கப்பட்ட இடங்களுக் கெல்லாம் அமைச்சர்களையும் அனுப்பி வைத்துள்ளேன். ஆகவே, மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக அளிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் பீதியடையாமல் தைரியமாக இருக்கலாம்” என்று கூறி மக்களுக்குத் தைரியமும் ஆறுதலும் கூறினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, சென்னை மாநகராட்சி நிர்வாகத்தினர் மூலம் பாதிக்கப்பட்ட பொதுமக்களை உடனடியாக மாநகராட்சிப் பள்ளிகள், திருமண மண்டபங்களில் தங்க வைக்கஏற்பாடு செய்து, அங்கு உணவு, மருத்துவ வசதி,குடிநீர் மற்றும் மின்வசதி ஆகியவை செய்து தரப்பட்டது.

சுனாமியால் சென்னை மாவட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 204. இதில் அடையாளம் காணப்பட்ட 198 நபர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக் கிணங்க அடையாளம் காண்பிக்கப்பட்ட 198 நபர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.1,00,000/– வீதம் மொத்தம் ரூ.1.98 கோடி வழங்கப்பட்டது. மேலும், கடலோரப் பகுதியில் கடல் கொந்தளிப்பால் வீடுகள் பாதிக்கப்பட்ட 17,744 குடும்பங்களுக்குத் தலா ரூ.4,000/–, 60 கிலோ அரிசி, 1 புடவை, 1 வேட்டி, 2 போர்வை மற்றும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க 14.1.2005 அன்று மயிலை–திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கண்ட குடும்பங்களுக்கு மேலும் ஒரு டிரங்க் பெட்டி, ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ், ஒரு குடம் ஆகியவை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில்

வழங்கப்பட்டது. அதே போல் வீடுகள் இழப்பு இல்லையென்றாலும், கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல இயலாது தவிக்கும், சுங்கச்சாவடி முதல் திருவான்மியூர் வரை உள்ள 18,144 மீனவக் குடும்பங்களுக்குத் தமிழக அரசு துயர்த் துடைப்பு நிதியாக குடும்பத்திற்குத் தலா ரூ.2,000/– 60 கிலோ அரிசி, 1 வேட்டி, 1 புடவை, 2 போர்வைகள், 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆக மொத்தம் ரூ.3 கோடியே 62 இலட்சத்து 88 ஆயிரம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிவாரணம் கோட்டை தண்டையார் பேட்டை வட்டத்தில் 5 மையங்களிலும்,, மயிலை திருவல்லிக்கேணி வட்டத்தில் 6 மையங்களிலும் போர்க்கால அடிப்படையில் வழங்கப்பட்டது. சென்னை அலுவலகத்தில் இதற்கான டோக்கனைப் பெற்றுக் குடும்ப அட்டை மூலமாக வழக்கமாக வாங்கும் பொது விநியோகக் கடைகள் மூலம் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என சென்னை மாவட்டாட்சியர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழக அரசு சென்னை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.5.82 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் பகுதி இழப்பாகக் கட்டுமரம் மற்றும் வலை ஆகியவைகளை இழந்த 2806 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.2.32 கோடி காசோலையாக இதுவரை வழங்கப்பட்டுள்ளது என மாவட்டாட்சியர் அறிவித்துள்ளார். 40க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அவரவர் தகுதிக்கு ஏற்ப நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொண்டு நிறுவனங்களின் பங்கு பாராட்டுதலுக்குரியது. பாதிக்கப்பட்ட குடும்பத்திலுள்ள இளம் பெண்களுக்கு இரவில் தங்க வைக்க தனி இடம் ஏற்பாடு செய்து, தாய் தந்தை யற்ற குழந்தைகளைத் தாய் அல்லது தந்தையுடன் தத்து எடுத்து அவர்கள் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்த மாவட்டாட்சியரின் அறிவுரைப்படி அனைத்து உதவிகளும் செய்யப் பட்டது.

மாவட்டத்தின் நிவாரண ஒருங்கிணைப்பாளரும் குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரும் ஆகிய திரு. அம்புஜ்சர்மா, இ.ஆ.ப, அவர்கள் மேற்பார்வையின் கீழ் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 35,888. குடும்பங்களுக்குக் கூடுதல் எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க ஆணையிட்டதின் பேரில் ஏற்கெனவே டோக்கன் பெற்று நிவாரணப் பொருட்களைப் பெற்றவர்கள் தங்களின் எல்லைக்குட்பட்ட தாலுகா

தமிழ்நாட்டில் சுனாமியால் உயிரிழந்தோருக்குத் தமிழ்நாடு மக்கள் அனைவரின் சார்பாக இரங்கலையும், அனுதாபத் தையும் தெரிவித்து அஞ்சலி செலுத்தும் வகையில் 12.1.2005 அன்று , மாநில அரசின் சார்பில் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் காலை 10.30 மணிக்கு இரண்டு நிமிட நேரம் மவுனம் கடை பிடிக்கப்பட்டது. தலைமைச் செயலகத்திலும், மாவட்டாட்சியர் அலுவலகத்திலும் மற்றும் வழக்கமாகத் தேசியக் கொடி ஏற்றப்படுகின்ற ஏனைய இடங்களிலும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

– டி.ஆர்.ஜெயஸ்ரீ
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை.



சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுத் தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் 12.1.2005 அன்று காலை 10.10 மணிக்கு தமிழக அமைச்சரவைக் கூடி, 26.12.2004 அன்று சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டு தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தியது. பின்னர், கீழ்க்காணும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

“26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சற்றும் எதிர்பாராத வகையில், சுனாமி பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில், கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்ததுடன், பல ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்துள்ளனர்.

சுனாமி பேரலைகளின் தாக்குதலால் ஏறத்தாழ 8 ஆயிரம் பேர் விலை மதிப்பற்ற தங்களது இன்னுயிரை இழந்தது குறித்து, தமிழக அமைச்சரவை தனது ஆற்றொணாத் துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அமைச்சரவை தனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இயற்கையின் சீற்றத்தால் முன் எப்போதும் இல்லாத வகையில், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் திறமுடன் சமாளித்திட, இந்த அமைச்சரவை உறுதி பூணுகிறது. பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அனைவருக்கும், ஒளி மிகுந்த ஒரு புதிய வாழ்வை நிர்மாணித்திட அனைத்துத் தரப்பினரும் தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று தமிழ்நாடு அமைச்சரவை இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறது”.

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் அமைச்சர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் ஆகியோர் சுனாமி பேரலைகளால் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தினார்கள். ❖

கோ-ஆப்டெக்ஸ்

- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!

சட்டீஸ்கர் மாநிலம் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சட்டீஸ்கர் மாநிலத்தின் முதலமைச்சர் டாக்டர் ராமன் சிங் அவர்கள் நேரில் சந்தித்து, 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் உயிரிழந்த தமிழக மக்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலையும், உடைமைகளை இழந்த மக்களுக்குத் தமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டார்.

அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக சட்டீஸ்கர் மாநில அரசின் சார்பில் 2,235 டன் அரிசி அனுப்பியமைக்காகத் தமது உளப்பூர்வமான நன்றியை டாக்டர் ராமன் சிங் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், சட்டீஸ்கர் மாநில அரசின் முதலமைச்சர் டாக்டர் ராமன் சிங் அவர்கள் சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் பல உதவிகளை வழங்க முன் வந்துள்ளார். தமிழகத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகள் குறித்து சட்டீஸ்கர் மாநில தலைமைச் செயலாளரும், தமிழக தலைமைச் செயலாளரும் விரிவான ஆலோசனை மேற்கொள்வார்கள். இதன் அடிப்படையில் சட்டீஸ்கர் மாநில அரசு இந்த உதவிகளை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

கர்நாடக மாநிலம் உதவி

தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குக் கர்நாடக மாநிலத்தின் சார்பில் அம்மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. எம்.பி. பிரகாஷ் அவர்கள் 2.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களிடம் 2 கோடி ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

26.12.2004 அன்று தமிழகக் கடற்கரைப் பகுதியில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. தரம்சிங் அவர்கள், கர்நாடக மாநில அரசின் சார்பில் அம்மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. எம்.பி. பிரகாஷ் அவர்களைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். தமிழகம் வந்துள்ள கர்நாடக அரசின் வருவாய்த் துறை அமைச்சர் திரு. எம்.பி. பிரகாஷ் அவர்கள், தமிழக நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களை 2.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து, ஆழிப் பேரலையால் ஆற்றொணாத் துயருக்கு ஆளான தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில், கர்நாடக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள். அப்போது, தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காகக் கர்நாடக மாநிலத்தின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள நிதியுதவிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் தமிழக நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ✶

பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிதியுதவி

தமிழ்நாட்டில் 2004ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுதல், மின்சாரத்தால் தாக்கப்படுதல், ஆற்றில் மூழ்குதல், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுதல், இடி மின்னல் தாக்குதல் முதலான பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 102 நபர்களின் குடும்பங்களுக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் மொத்தம் 51 இலட்சம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவியாக வழங்கியுள்ளேன்.

2004ஆம் ஆண்டு-அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின் போது, மேலும் 23 நபர்கள் மரணமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், வறுமையில் வாடுகின்ற இவர்களது குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றும் அந்தந்த மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், எஸ். சந்திராபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னசாமி என்பவரது மகள் செல்வி தேவி என்பவர் கடந்த 13.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், தூக்கணாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வாழ்முனி என்பவரது மகன் வி. ஏழுமலை என்பவர் கடந்த 10.11.2004 அன்று ஆற்றில் மூழ்கியும், செல்லன்சேரி கிராமம், மந்தைவெளி காலனியைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரது மகன் ஆர். முனுசாமி என்பவர் கடந்த 13.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும்,

நாகப்பட்டிணம் மாவட்டம், சீர்காழி வட்டம், கீழ்மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகையன் என்பவரது மனைவி திருமதி. கோவிந்தம்மாள் என்பவர் கடந்த 20.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, பெரிய கோட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கப்ப உடையார் மகன் ராஜேந்திரன் என்பவர் 27.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும், ஒரத்தநாடு, வடக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரது மகன் பஞ்சாட்சரம் என்பவர் 20.10.2004 அன்று மின்சாரம் தாக்கியும்,

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சின்னசேலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னத்துரை என்பவரது மகன் நவீன்குமார் மற்றும் மகள் பேபி பவித்ரா ஆகிய இருவரும் கடந்த 31.10.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும், விழுப்புரம் வட்டம், கணம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ரோமன் என்பவரது மகன் ஜோசப் என்பவர் கடந்த 7.11.2004 அன்று ஏரியில் மூழ்கியும், அய்யூர் அகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரது மகன் பாண்டுரங்கன் என்பவர் கடந்த 9.11.2004 அன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், கள்ளக்குறிச்சி வட்டம், அந்தியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பன் என்பவரது மகன் அய்யாகண்ணு என்பவர் கடந்த 11.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும், திண்டிவனம் வட்டம், டி. பாஞ்சாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சங்கரன் என்பவரது மகன் கண்ணு என்பவர் கடந்த 13.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும்,

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமம், பாடசாலை தெருவைச் சேர்ந்த திரு. பிரம்மபிள்ளை என்பவரது மனைவி திருமதி பாப்பா என்பவர் 24.10.2004 அன்று ஆற்றில் மூழ்கியும், நாங்குநேரி வட்டம், ஏர்வாடி பகுதி–1 கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரது மனைவி திருமதி. பன்னீர்செல்வம் என்பவர் கடந்த 13.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம், ஆறுமுகம்பட்டியைச் சேர்ந்த திரு. பாபநாச நாடார் என்பவரது மகன் அன்பழகன் என்கிற சேகர் என்பவர் 27.10.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும்,

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை சாலை, ராணி அண்ணா காலனியைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரது மனைவி திருமதி. ராணி என்பவர் கடந்த 24.10.2004 அன்று ஆற்றில் மூழ்கியும், ராஜபாளையம், சொக்கலிங்கபுரம், சிவலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமர் நாயக்கன் என்பவரது மனைவி குருபாக்கியம் என்பவர் கடந்த 19.10.2004 அன்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும்,

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பழமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்ப பிள்ளை என்பவரது மகன் வெங்கடேசன் என்பவர் கடந்த 11.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஆமிதாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோதண்டன் என்பவரது மகன் சிவலிங்கம் என்பவர் கடந்த 31.10.2004 அன்று மின்சாரம் தாக்கியும்,

மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆனைக்கவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜு என்பவரது மகன் அர்ஜுனன் என்பவர் கடந்த 27.10.2004 அன்று மின்சாரம் தாக்கியும்,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பொன்னமராவதி (மேற்கு) கிராமத்தைச் சேர்ந்த திரு. சரவணன் என்பவரது மனைவி திருமதி. அகிலா என்பவர் கடந்த 18.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

தேனி மாவட்டம், பெரியகுளம், அழகர்சாமிபுரம், வடகரை கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்பவரது மனைவி திருமதி. புஷ்பம் என்பவர் கடந்த 10.10.2004 அன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும்,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், சித்தலகுண்டு கிராமத்தைச் சேர்ந்த திரு.கன்னியப்பக் கோனார் என்பவரது மகன் மாரிக் கோனார் என்பவர் கடந்த 14.11.2004 அன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமானவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/– ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 18–1–2005

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 109ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 22–1–2005 அன்று சென்னையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் இரண்டு மீன் இறங்கு தளம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டிலும், கடலூர் மாவட்டம் முடசலோடையிலும் அனைத்து 'உட்கட்டமைப்பு வசதிகளுடன் மொத்தம் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள இரண்டு மீன் இறங்கு தளங்களை (Fish Landing Centres) திறந்து வைத்தார்கள்.

கடலுக்குள் சென்று இயற்கையுடன் போராடி மீன் பிடித்து வருகின்ற மீனவர்கள், தாங்கள் பிடித்து வரும் மீன்களை எளிதாகக் கரையிறக்க வேண்டும். சுகாதாரமான முறையில் அவற்றைக் கையாள வேண்டும். கடலுக்குள் சென்று மீன் பிடித்து வரத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர்கள் ஒரே இடத்தில் பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மீன் இறங்கு தளங்களை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இந்த ஆணையின்படி திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பழவேற்காடு, கடலூர் மாவட்டத்திலுள்ள முடசலோடை ஆகிய இரண்டு இடங்களில் மொத்தம் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மீன் இறங்கு தளங்களில் நவீன முறையில் அமைக்கப்பட்ட மீன் இறங்கு சாய்தளம், உலர்கூடம், மீன் விற்பனைக்கான ஏலக் கூடம், குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த மீன் இறங்கு தளங்களில் மின் வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சாலை வசதிகள் முதலான உள்கட்டமைப்பு வசதிகளும் சிறப்பாகச் செய்யப் பட்டுள்ளன. பழவேற்காடு மீன் இறங்கு தளத்தில் மீன் பிடி விசைப் படகுகளுக்கு என்று தனியே ஒரு எரி எண்ணெய் நிரப்பும் நிலையம் (Diesel Fuel Station) அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் மொத்தம் ரூபாய் 2 கோடியே 58 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள, திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மற்றும் கடலூர் மாவட்டம் முடசலோடை மீன் இறங்கு தளங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தொடங்கி வைத்தார்கள்.

பழவேற்காடு மீன் இறங்கு தளத்தின் மூலம் அப்பகுதியில் உள்ள 14 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 3,000 மீனவர்களும், முடசலோடை பகுதியில் 7 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 2,000 மீனவர்களும் பயனடைவார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம், தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் ஆகிய இடங்களில் இத்தகைய மீன் இறங்கு தளங்கள் கட்டி முடிக்கப்பட்டுக் கடந்த ஆண்டு (2003) அவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டியன்பட்டினம், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மற்றும் சோழியக்குடி, நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் மற்றும் ஆற்காட்டுத்துறை ஆகிய இடங்களில் மீன் இறங்கு தளங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. எம்.ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்ங்கர் இ.ஆ.ப., மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் திரு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★

உடல் ஊனமுற்றோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 2003–ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உடல் ஊனமுற்றோருக்கான பிரிட்டிஷ் ஓப்பன் தடகள விளையாட்டில் பங்கேற்ற ஊனமுற்ற விளையாட்டு வீரர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ. 1 இலட்சம், பீகாரில் கள்வர்களால் சுடப்பட்டு 2 கண்களையும் இழந்த திருவண்ணாமலை மாவட்டம் தஸ்தகீர் அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ரூ.1 இலட்சம், காவல் துறை ஆயுதப் படையில் பணியாற்றி மரணமடைந்த திரு. பன்னீர்செல்வம் அவர்களது குடும்பத்திற்கு நிதி உதவியாக ரூ.1 இலட்சம், காவல் துறையில் தலைமைக் காவலராகப் பணியாற்றி மரணமடைந்த திரு. ஜெயராமன் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம், கட்டுமானப் பணி, நிலச்சரிவு, சுவரிடிதல், மின் தாக்குதல், விஷ வாயுத் தாக்குதல், தீ விபத்து முதலியவற்றால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த 19 பேர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூபாய் 4 இலட்சத்து 29 ஆயிரம், கல்வி உதவியாக 3 பேர்களுக்கு ரூ.85,000, மருத்துவச் சிகிச்சைக்காக 6 பேர்களுக்கு ரூ.1,05,000, சுய தொழில் தொடங்கி வர்ழ்க்கை நடத்துவதற்கு 4 பேர்களுக்கு ரூ.70,000 ஆக மொத்தம் ரூபாய் 10 இலட்சத்து 89 ஆயிரம் நிதி உதவிக்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில், தாங்கள் படும் இன்னலை எடுத்துக் கூறி, தங்களது துயர் நீங்கும் வகையில் நிதியுதவி வேண்டி, நேரில் அளிக்கப்பட்ட மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்காணும் நிதி உதவியை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்கள்.

இந்த நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்ட அனைவரும், தங்ளது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்துக் கொண்டனர்.

❖ ❖ ❖

பாதிக்கப்பட்டோர் புது வாழ்க்கைத் தொடங்க நிவாரணப் பொருட்கள் வழங்கல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (11.1.2005)

26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சற்றும் எதிர்பாராத வகையில் சுனாமி பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில், கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும், நகரங்களிலும் வாழுகின்ற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இந்தப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் தங்களது உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டன.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மீண்டும் புதிதாக வாழ்க்கைத் தொடங்குவதற்கு ஏதுவாக இதுவரை 302 கோடியே 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து பல்வேறு நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிகளை எனது அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டு, வீடு மற்றும் உடைமைகளை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5,000 ரூபாய் மதிப்பிலும், வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும் தங்களது பிழைப்பு ஆதாரங்களை இழந்து விட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 8,000 ரூபாய் மதிப்பிலும் உடனடி நிவாரண உதவிகள் எனது ஆணையின் பேரில் வழங்கப்பட்டுள்ளது.

வீடுகளை இழந்து நிவாரண முகாம்களில் தங்கியுள்ள மக்கள் புது வாழ்வு தொடங்கிட அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித்தரப்படும் வரையில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 8,000 ரூபாய் மதிப்பில் தற்காலிகக் குடியிருப்பு ஒன்றை ஒரு வார காலத்திற்குள் கட்டித்தர நான் ஆணையிட்டுள்ளேன்.

அரசு வழங்குகின்ற பல்வேறு நிவாரண உதவிப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் டிரங்குப் பெட்டி ஒன்றை வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமையல் செய்வதற்காக ஒரு மண்ணெண்ணெய் அடுப்பும் (ஸ்டவ்) குடிதண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வதற்காக ஒரு எவர்சில்வர் குடமும் வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன். சுனாமி பேரலைகளின் பாதிப்பால் வீடு மற்றும் அனைத்து உடைமைகளையும் இழந்துள்ள 1.5 இலட்சம் குடும்பங்களுக்கும் டிரங்குப் பெட்டி, மண்ணெண்ணெய் ஸ்டவ், எவர்சில்வர் குடம் ஆகிய இந்த உதவிப் பொருட்களை வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். இந்தப் பொருட்களை வழங்கும் பணி, இம்மாதம் (ஜனவரி)14–ஆம் தேதி, அதாவது பொங்கல் திருநாள் அன்று தொடங்கப்பட்டு, வரையறுக்கப்படுகின்ற கால மற்றும் இட அட்டவணைப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு மற்றும் உடைமைகளை இழந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டு வீடு மற்றும் உடைமைகளை இழந்துள்ள 1.5 இலட்சம் குடும்பங்கள் பயன் அடையும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 600 ரூபாய் மதிப்பிலான இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு 9 கோடி ரூபாய் ஆகும். □

தமிழரசு
R.N.I. No.21446/70
RGN No TN/PMG (CCR) 836/03-05, WPP-518



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
தை – மாசி
மலர்: 36 இதழ்: 8
பிப்ரவரி 2005
விலை ரூ.10

இந்த இதழில்...

★ இந்த அரசின் மகத்தான சாதனைகளை எண்ணி நியாயமான பெருமிதம் கொள்கிறேன்
(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை) 2

★ மனிதநேயத்தோடு எப்போதும் விளங்கவேண்டியது காவலர்களின் கடமையாகும். 15

★ சென்னையில் 56ஆவது குடியரசு தின விழா 19

★ மீனவர்கள் இழந்துவிட்ட மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகள் ஆகியவற்றுக்கு
மத்திய அரசு நூறு சதவிகித மானியத்தை வழங்க வேண்டும் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, புதிய கட்டுமரம்
வலைகள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி 24

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுப் பணிகளுக்கான
நிதி உதவி, மாநில அரசு மூலமாகத்தான் அளிக்கப்பட வேண்டும் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25

★ கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்திடும் எண்ணெய்ப்பனை சாகுபடி 27

★ கோடையிலும் சென்னைக்குத் தண்ணீர் கிடைத்திட புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் 29

★ பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட – சீர்மரபினைச் சார்ந்த அனைத்து
மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் 32

★ சுனாமிப் பேரழிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு
ரூ.137 கோடியில் புதிய தொகுப்பு உதவித் திட்டம் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு 33

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விசைப்படகுகள் வாங்க மானிய உதவி -
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள் 36

★ ஒவ்வொரு நாளும் தமிழக முன்னேற்றம் – ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை
– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 37
சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய பதிலுரை 49

★ தோட்டக்கலை வளர்ச்சியில் சிவகங்கை மாவட்டம் ....

★ 13 கடலோர மாவட்டங்களில் மாவட்ட – ஊராட்சி – வார்டு அளவிலும் சுனாமிப் பேரலை நிவாரணக் குழுக்கள் 51

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணையின்படி 55
சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகம் உருவாக்கம் 57

★ சீர்மிகு சென்னை -- சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ....

★ சுனாமி நிவாரண உதவிகளில் சிறிய மீன்பிடிப் படகுகள் விஷயத்தில் காட்டும் அணுகுமுறை
விசைப்படகுகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் 62
– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதம் ....

★ கிராமப்புறங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் 64

★ அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் 66

★ திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் 70

★ இந்தியாவிலேயே மிகப்பெரிய காற்றாலை 72

★ தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதி உதவி 80

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் உரையாற்றுதல்.

இரண்டாம் பக்க அட்டை : பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட – சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தல்.

நான்காம் பக்க அட்டை : இந்தியக் குடியரசுத்தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழா

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., ஆணையர் மற்றும் இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு சிறப்புச் செயலர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

இந்த அரசின் மகத்தான சாதனைகளை எண்ணி நியாயமான பெருமிதம் கொள்கிறேன்

மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,

2005ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய மனமார்ந்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களின் வளமான வாழ்க்கைக்கும், இம்மாநிலத்தின் விரைவான வளர்ச்சியை உறுதி செய்யவும் நான் என்னுடைய அயராத ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளிப்பேன் என்று உறுதி அளிக்கிறேன்.

2. வலுவான மனஉறுதியுடனும், அசையாத நம்பிக்கையுடனும், எடுத்த கடமையைத் திறம்பட நிறைவேற்றும் ஒருமித்த குறிக்கோளுடனும் செயல்படுவதன் மூலம் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்குச் சான்றாக அமைந்த மகத்தான வெற்றிகளைக் கண்ட குறிப்பிடத்தக்க ஆண்டாக கடந்த 2004ஆம் ஆண்டு அமைந்திருந்தது. பலரைக் கதிகலங்கச் செய்து வந்த கடத்தல் கொள்ளையன் வீரப்பனை 18.10.2004 ஆம் நாளன்று ஒழித்துக்கட்டியதும், சென்னைக்குக் குடிநீர் வழங்க 31.5.2004ஆம் நாளன்று புதிய வீராணம் திட்டத்தைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வந்ததும் நாம் அனைவரும் மகிழத்தக்க வரலாறு படைக்கும் சம்பவங்கள் ஆகும்.

3. காட்டுக் கொள்ளையன் வீரப்பன் தமிழ்நாட்டில் மட்டுமின்றி கர்நாடக மாநிலத்திலும், அரசுக்குச் சவாலாகவும் நவீன ஆட்சி முறைக்குப் பின்புலமாக விளங்கும் நெறிமுறைக் கோட்பாட்டிற்கே ஒரு கேள்விக்குறியாகவும் இருந்து வந்தான் என்பதை மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். வீரப்பனும், அவனுடைய கூட்டத்தினரும், அளித்துவந்த அச்சுறுத்தலை ஒழித்துக்கட்ட, சிறப்பு அதிரடிப் படையினருக்கு ஒரு தெளிவான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்திருந்தார்கள். இந்தச் சிறப்பு அதிரடிப்படை, கட்டுக்கோப்பாகவும், கர்நாடக அரசு இதற்கென அமைத்திருந்த சிறப்புப் படையுடன் சிறந்த முறையில் ஒருங்கிணைந்தும், முழு அதிகாரத்துடன், சுதந்திரமாகச் செயல்படுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்தார். இது, எதற்கும் துணிந்த வீரப்பன் மற்றும் அவனுடைய கூட்டத்தினரைப் பிடிக்க பத்தாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த தேடுதல் வேட்டையை, வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தது. கவனமாக உளவுப் பணியில் ஈடுபட்டு விரிவாகத் திட்டமிடப்பட்டு, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளினால் பழங்குடியினரைத் தோழமையாக்கிக் கொண்ட அணுகுமுறை மற்றும் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் தான் வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழிப்பது சாத்திய மாகியது.

4. சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த அதிகாரிகளும் பணியாளர்களும் தங்களுடைய இல்ல சுகங்களையும் பாதுகாப்புகளையும் துறந்து, பழி பாவங்களுக்கு அஞ்சாத கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் பிடிக்க, இயல்பான வாழ்க்கைக்கு இலாயக்கற்ற அடர்ந்த காடுகளில் பல ஆண்டுகள் இடையறாத வேட்டையில் தங்களுடைய வாழ்வை அர்ப் பணித்ததை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது. வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் பழங்குடியினர் மத்தியில், தாம் பழிவாங்கப்படுவோம் என்கிற அச்ச உணர்வை ஏற்படுத்தியதையும் சிறப்பு அதிரடிப்படை மற்றும் ஏனைய துறைப் பணியாளர்களைக் கொடூரமாகத் தாக்கிக் கொன்றதையும் கருதிப் பார்க்கையில் இந்த நினைவை விட்டகலாத மாபெரும் வெற்றி இரட்டிப்புப் பாராட்டுக் குரியதாகிறது.

5. நாட்டிலேயே மிகச்சிறந்த காவல் படை எனப் பெயரெடுத்த தமிழ்நாடு காவல் படையின் தொழில்ரீதியான அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவற்றின்மேல் அசையாத நம்பிக்கை வைத்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழித்துக்கட்டும் தனது இலட்சியத்தில் ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை. கொலை, கொள்ளை மற்றும் சொத்துக்களைச் சீரழித்தல் மேலும் விலை மதிப்பற்ற பாரம்பரியச் சொத்தான, வளமான நம்முடைய உயிரின வாழ்க்கைச் சூழலைச் சூறையாடுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு, தீர்வுகாண முடியாமல் இத்தனை காலம் நடமாடிய கொலை வெறிப்பிடித்த இந்தத் தீயச் சக்தியை நமது சமுதாயத்திலிருந்து அறவே ஒழித்துக் கட்டும் ஆபத்து மிகுந்த பணியில் வெற்றியின் சிகரத்தையே எட்டிப்பிடித்த சிறப்பு அதிரடிப்படையினரை நான் பாராட்டுகிறேன். இப்படையினரின் தீரம், அர்ப்பணிப்பு உணர்வு, தொழில் ரீதியான அணுகுமுறை ஆகியவற்றைப் போற்றி பாராட்டும் வகையில் அரசு அவர்களுக்கு அளித்த சிறப்பான வெகுமதிகளுக்கும் பாராட்டுகளுக்கும் அவர்கள் முழுத் தகுதியுடையவர்களாவர்.

6. எப்பொழுதும் போலவே, இந்த அரசு, சட்டம் ஒழுங்கு சீரியமுறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்து வருகிறது. மிகவும் இடர்ப்பாடான கால கட்டங்களிலும் இவ்வரசு சட்டத்தின் ஆட்சியையும், சட்டத்தின் மாட்சியையும் பேணிக்காத்து வருகிறது. ரூ.30 கோடி செலவில் காவல்துறைத் தலைவர் அலுவலக வளாகம் அமைப்பது, ரூ.48 கோடி செலவில் புதியதொரு காவலர் பயிற்சி நிலையம் அமைப்பது ஆகியன,

காவல் துறையை நவீனமயமாக்கி தக்க தளவாடங்களை வழங்கும் இந்த அரசின் முயற்சிகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

7. இதற்கு முன் எப்போதும் ஏற்பட்டிராத வகையில் வட கிழக்குப் பருவமழை 2003 ஆம் ஆண்டில் பொய்த்தது என்பதையும் இதனால், சென்னை மாநகரில் மிக மோசமான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது என்பதையும் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரில் மிகக்கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் நகரை விட்டே வெளியேறக் கூடிய நிலைமையும் உருவானது. ரூ.720 கோடி செலவில் 2004 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள்ளாக மிகக் குறுகிய காலத்தில், புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றித் தொடங்கி வைத்தது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் மூலம் இந்த மாபெரும் தண்ணீர்ப் பஞ்சத்தைச் சமாளித்த பெருமை இந்த அரசையே சாரும். இந்தப் புதிய வீராணம் திட்டத்தின் கீழ் பண்ருட்டி நீர் ஊற்றுப் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதன்மூலம் சென்னை மாநகருக்கு முதற்கண் நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டது. இதனால், மாநகரின் நீர்த் தேக்கங்கள் அனைத்தும் முற்றிலுமாக வறண்டுபோன நிலையிலும், மிகத் துல்லியமாகத் திட்டமிட்டுச் சென்னை மக்களுக்கு நாளொன்றுக்கு மொத்தம் 205 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க முடிந்தது. 2003 பிப்ரவரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கிய போது, இத்திட்டம் வெற்றி பெறுமா எனும் சந்தேகம் எழுப்பப்பட்டது. இத்திட்டம்தான் சென்னை மாநகரைக் காப்பாற்றியது என்பது 2004ஆம் ஆண்டில் தெள்ளத் தெளிவாகியது. ஒவ்வொரு தெருவிற்கும் லாரிகள் மூலம் வாரத்தின் ஒவ்வொரு நாளும், குறிப்பிட்ட நேரத்தில் திறம்பட குடிநீரை எடுத்துச்சென்று வழங்கியதால் அடிப்படைத் தேவைகளுக்கு வேண்டிய அளவிற்கு குடிநீர் தொடர்ந்து மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய முடிந்தது. ரூ.316 கோடி செலவில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் மகத்தானதும் பொறுப்புமிக்கதுமான இப்பணியை, அரசு மேற்கொண்டது.



8. வீராணம் ஏரிக்குப் புதிய நீர் வரப்பெற்று, ஏரி விரைவாக நிரம்பிய பின்னர், புதிய வீராணம் திட்டத்தின் மூலம், 13.10.2004 அன்று சென்னைக்கு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுவது தொடங்கியது. அப்போது, சென்னையின் மூன்று நீர்த் தேக்கங்களும் முற்றிலுமாக வறண்டு காணப்பட்ட நிலையிலும், 13.10.2004 அன்றிலிருந்து மீண்டும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கும் பணி துவக்கப்பட்டது. புதிய வீராணம் திட்டத்தை முழுமையாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றி முடித்ததாலேயே இது சாத்தியமாயிற்று. கொள்ளிடம் நதியில் கல்லணையிலிருந்து அதிக அளவில் நீர் அனுப்பப்பட்டு, அதன்மூலம், வீராணம் ஏரியில் கூடுதலாக நீர் சேகரித்து வைக்கப்பட்டு, புதிய வீராணம் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டதால், விவசாயிகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலிருப்பது உறுதி செய்யப்பட்டது. கொள்ளிடம் ஆற்றுப் படுகையில் நீர் சேகரிப்புக் கிணறுகளை அமைத்து வீராணம் திட்டக் குழாய்களைப் பயன்படுத்தி சென்னை மாநகருக்கு கோடையில் தண்ணீர் வழங்கும் வீராணம் விரிவாக்கத் திட்டம் ரூ.300 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில், கொள்ளிடம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள கிராமங்களில் உள்ள விவசாயக் கிணறுகளைப் பாதுகாப்பதற்கு குறிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் உறுதிபடுத்தப்படும்.

9. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு நாளொன்றுக்கு 840 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. வடசென்னையிலுள்ள மூன்று நீர்த் தேக்கங்கள், வடசென்னையிலுள்ள கிணற்று வயல்கள்,

கிருஷ்ணா நதி நீர், புதிய வீராணம் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவற்றைக் கொண்ட கூட்டு நீராதாரத்தின் மூலம் இந்தக் குடிநீர்த் தேவையைச் சமாளிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.10.2004 அன்று மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களை ஹைதராபாத்தில் சந்தித்து, சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இந்த முயற்சியின் பயனாக 28.11.2004 அன்று சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் வரப்பெற்றது. 12 டி.எம்.சி. கன அடி தண்ணீர் கிடைத்திருக்க வேண்டிய நிலையில், இதுவரை 2 டி.எம்.சி. கன அடி தண்ணீர் மட்டுமே வரப்பெற்றுள்ளது. கண்டலேறு நீர்த்தேக்கத்தில் தற்போதுள்ள சேமிப்பிலிருந்து சென்னை நகருக்கு இப்பருவ காலத்தில் அதிகபட்ச அளவு நீரை ஆந்திரப் பிரதேச அரசு விடுவிக்கும் என்று நம்பப்படுகிறது.

10. வடிவமைத்து, கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, மாற்றும் (DBOOT) அடிப்படையில் சென்னையில் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் பெருந்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த இந்த அரசு, உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதையும், 16.2.2005க்குள் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படவிருக்கின்றன என்பதையும் அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் இத்திட்டத்தின் அளவு முடிவு செய்யப்படும். இத்திட்டத்தை 2006ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் படிப்படியாக நிறைவேற்ற இந்த அரசு கருதியுள்ளது. இத்திட்டம், புதிய வீராணம் திட்டத்தோடு இணைந்து, சென்னை மாநகரின் நீண்டகாலக் குடிநீர்த் தேவையை நிரந்தரமாகச் சமாளிக்கப் பேருதவியாக இருக்கும்.

11. தமிழ்நாட்டு மக்கள் இந்த மகத்தான வெற்றிகளின் மகிழ்ச்சியில் திளைத்திருந்தபோது, 2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று "சுனாமி" ஆட்கொல்லிப் பேரலைகள் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி, தமிழ்நாட்டுக் கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கின. இது முன் எப்போதும் கண்டிராத வகையிலான பேரிடராகும். 7,993 நபர்களின் உயிரைப் பறித்து, இலட்சக்கணக்கான மக்களை உறைவிடமிழக்கச் செய்து, கடற்கரைப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களின் வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்தி சிதைத்த இப்பேரலைகள், கடற்கரையோரம் நெடுகிலும் பேரழிவை ஏற்படுத்தின. இந்தப் பேரிடரினால் ஏற்பட்ட சேதத்தின் அளவை மதிப்பீடு செய்யவும், உடனடி நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடற்கரையோரப் பகுதி முழுவதையும் பார்வையிட உடனே விரைந்தார். முதல் நாளன்றே ராணுவத்தின் உதவி கோரப்பட்டது. நிவாரணப் பணிகள் தடையின்றி மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. காணாமல் போனவர்களைத் தேடுதல், மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோரைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தல், சடலங்களை எரிக்க/புதைக்க ஏற்பாடுகள் செய்தல் மற்றும் நிவாரண முகாம்களை அமைத்தல் ஆகியன முதல் கட்டத்தில் அடங்கும். உடனடி நிவாரண உதவி அளிப்பது இரண்டாம் கட்டமாகும்; நிரந்தர மறுவாழ்வு அளிப்பது மூன்றாம் கட்டமாகும். முதல் இரண்டு கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. மூன்றாம் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

12. ஒரே நேரத்தில் பல நாடுகளைப் பாதித்த இந்த சுனாமியினால் ஏற்பட்ட சோகச் சம்பவம், வரலாற்றில் முன் எப்போதும் நிகழ்ந்திராத மிக மோசமான பேரழிவாகும். சிக்கலான இப்பிரச்சினையைச் சமாளிக்க பல நாடுகள் தவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், சுனாமி சோகச் சம்பவம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய கடுமையான சவாலைத் திறம்பட இந்த அரசு சமாளித்துள்ளது என்பது தற்போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நான் கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டபோது ஒருங்கிணைந்த முறையில் மிகச் சிறப்பாக நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை நானே நேரில் பார்த்தேன்.

13. மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் பேரில் மாண்புமிகு அமைச்சர்களின் பொறுப்பில் அலுவலர் குழுக்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு விரைந்து அனுப்பப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாமல் எதிர்பாராத வகையில் இந்த நிகழ்வு நேர்ந்தபோதிலும், பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நிருவாகங்கள் உடனடி நிவாரணப் பணிகளை மிகுந்த பொறுப்பு உணர்வுடனும், முழு ஈடுபாட்டுடனும் மேற்கொண்டன. மாநில முழுவதிலுமிருந்து துப்புரவுப் பணியாளர்களைத் திரட்டி, இறந்தோரின் சடலங்களை மீட்டு, அடையாளம் கண்டு, பின் அச்சடலங்களைப் புதைப்பதற்கு அல்லது எரிப்பதற்கான மிகப் பெரிய பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி விரைவாக முடிக்கப்பட்டு, மருத்துவர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் திறம்படச் செயலாற்றியதன் மூலம், பெருமளவில் தொற்றுநோய் பரவும்

அபாயம் தவிர்க்கப்பட்டது. இலட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் ஆடைகள் வழங்கப்பட்டன.

14. முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, பொதுநலனில் அக்கறை கொண்ட நல்ல எண்ணம் படைத்த மக்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நிதியுதவி அளித்துள்ளனர். மேலும், இந்தப் பேரிடரினால் உறைவிடங்களையும் வேலைவாய்ப்புகளையும் இழந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் விதமாக நேரடி நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டனர். நிதியுதவியாகவும், பொருளாகவும் அளிப்பதற்கு முன்வந்து, இந்த மாபெரும் நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணியில் பங்கேற்ற தனிநபர்களுக்கும் மற்றும் அமைப்புகளுக்கும் இந்த அரசு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

15. முதலமைச்சர் அவர்கள், இறந்த ஒவ்வொருவரின் உடனடி உறவினருக்கும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1 இலட்சம் உடனடியாக வழங்க உத்தரவிட்டார். சுனாமியின் திடீர் தாக்குதலால், பெற்றோர் இருவரையும் இழந்து பல குழந்தைகள் அனாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு அனாதைகளாக ஆக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்யப்படும் என்று அரசு உடனடியாக அறிவித்தது. 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத அனாதையான ஆதரவற்ற ஒவ்வொரு பெண்ணின் பெயரிலும் ரூ.3 இலட்சம் வைப்பீடு செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பெண்களுக்கான சேவை இல்லங்கள் தொடங்கப் பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுடன் அளவளாவி, அவர்கள் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்த மருத்துவர்கள், உளவியலாளர்கள் மற்றும் தன்னார்வப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்ட குழுக்கள் அனுப்பப்பட்டன. இத்தகைய முயற்சிகள் மறுவாழ்விற்கான மனோ தைரியத்தை அளிப்பதற்குப் பெரிதும் உதவியுள்ளன. உடல் உறுப்புகளை இழந்தோருக்கும், பல்வேறு வகையான காயமுற்றோருக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

16. வீடிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 60 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், மூன்று லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் ரொக்கம் ரூ.4,000 ஆகியவற்றை உள்ளடக்கிய, ரூ.5,000 மதிப்பிலான உடனடி நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்பட்டது. மேலும் உறைவிடத்திற்குப் பாதிப்பு ஏற்படாவிடினும் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும், இதே போன்ற பொருட்கள் மற்றும்

ரூ.2,000 ரொக்கம் உள்ளிட்ட சுமார் ரூ.3,000 மதிப்பிலான நிவாரண உதவி வழங்கப்பட்டது. வீடு இழந்த நபர்களுக்குக் குடும்பம் ஒன்றிற்கு, ரூ.8,000 செலவில் தற்காலிகக் குடியிருப்புக் கட்டும் பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இரும்பு டிரங்க்பெட்டி ஒன்று, மண்ணெண்ணெய் அடுப்பு ஒன்று மற்றும் எவர்சில்வர் குடம் ஒன்று ஆகியனவும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் அவர்களுடைய வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலை, மீண்டும் துவங்கும் பொருட்டு, கட்டுமரங்களையும், வள்ளங்களையும் பழுதுபார்க்கவும், சேதமடைந்த மீன்பிடி வலைகளுக்குப் பதிலாகப் புதிய வலைகள் வாங்கிக் கொள்ளவும் ரூ.65 கோடி மதிப்பிலான தொகுப்புதவித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டு ஓரளவு இயல்பு நிலை விரைவில் திரும்ப வகை செய்யப்பட்டுள்ளது.

17. மன உறுதியோடும் ஒருமித்த அர்ப்பணிப் புணர்வோடும் அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பன்னாட்டு நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஐரோப்பிய பொருளாதார குழுமம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளன. இது போன்ற பேரிடர் நிவாரணப் பணிகளில் அரசுடன் குடிமக்கள், தன்னார்வக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் நெருக்கமான ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. இந்த அரசு, இத்தகு பணியில் அரசு மற்றும் தனியார் பங்கேற்புக்கான திட்டம் ஒன்றை வகுத்துப் பள்ளிக் கட்டடங்கள் போன்ற பொதுச் சொத்துக்களை மீண்டும் உருவாக்குதல், உறைவிடங்களைப் புனரமைத்தல் ஆகிய பணிகளில் பங்கேற்குமாறு பல்வேறு அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

18. ரூ.4,800 கோடி நிதியுதவியும், 54,000 மெட்ரிக் டன் அரிசியும் வழங்குமாறு கோரி, கோரிக்கை மனு ஒன்றை மாநில அரசு மத்திய அரசிடம் அளித்தது. 7.1.2005ஆம் நாளன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சருக்கும் மாண்புமிகு பிரதமருக்கும் இடையில் நடந்த கூட்டம் ஒன்றில் இது கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், முதலமைச்சர், கடலோர பசுமைத் தடுப்புகள், மாங்குரோவ் காடுகள், கடற்தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் (groynes) ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.5,000 கோடி செலவிலான, கடற்கரைப் பாதுகாப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சிறிது அவகாசம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சுனாமி எச்சரிப்பு ஏற்பாடு ஒன்றினை நிறுவவேண்டுமென்பதையும் முதலமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்கள். பிரதமர் அவர்கள் இந்த யோசனையை உடனடியாக ஏற்றுக்கொண்டார்கள். முதல் கட்டமாக ரூ.250 கோடிக்கான நிதியுதவியினை அறிவித்த பின்னர் மத்திய அரசு அண்மையில் மாநில அரசுக்கான தொகுப்புதவித் திட்டம் ஒன்றையும் அறிவித்துள்ளது. இந்தத் தொகுப்புதவியைக் கொண்டு, பாதுகாப்பான இடங்களில். நிலையான வீடுகளைக் கட்டுதல், சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளை மாற்றிக்கொடுத்தல், வாழ்வாதாரங்களை முழு அளவில் புதுப்பிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் நிரந்தரமாக மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகளை அரசு மேற்கொள்ளும். சிறிய மீன்பிடி படகுகளை மாற்றிக் கொள்வதற்காக மேலும் தாராளமாக நிதியுதவி வழங்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது. வணிக வங்கிகளுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்கும் மீனவர்கள் செலுத்த வேண்டிய அனைத்துக் கடன் பாக்கிகளையும், வட்டியுடன் சேர்த்துத் தள்ளுபடி செய்யப்படுமென அறிவிக்குமாறு, இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. கட்டமைப்பு வசதிகளை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்காகவும், வாழ்வாதாரங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்காகவும், கடலோரப் பகுதிகளுக்கு நிரந்தரமான பாதுகாப்பை அளிப்பதற்காகவும் மேலும் நிதி உதவி வழங்கப்படும் என்று நம்புகிறோம்.

19. பன்னிரண்டாவது நிதி ஆணையம், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தனது அறிக்கையை அளித்துள்ளது. தற்போது, மத்திய அரசு, அதன் பரிந்துரைகளைப் பரிசீலித்து வருகிறது. 2005–2010 ஆம் ஆண்டுக் கால அளவில், தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும், மத்திய நிதியிலிருந்து மாற்றப்படும் நிதி ஆதாரத்தின் அளவை நிர்ணயிப்பதில் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு, வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறுவதற்குக் கூடுதலான நிதியாதாரங்கள் இந்த பரிந்துரைகளின்மூலம் கிடைக்கப்பெறும் என்று நம்பப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதை ஆராய மூன்றாவது மாநில நிதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

20. இந்த அரசு பொறுப்பேற்றபோது நிலவிய நிதி நெருக்கடி, எவ்வாறு வளர்ச்சி நடவடிக்கைகளை முற்றிலும் முடமாக்கியது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். முன்னெப்போதும் இல்லாத வகையிலான நிதி நெருக்கடியினால் 2001–2002 ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.6,040 கோடியிலிருந்து ரூ.5,200 கோடியாகக் குறைக்கப்பட்டது என்பதை இந்த அவை நினைவுகூரலாம். இந்த அரசு மாநிலத்தின் நிதி நிலைமையைச் சீரமைத்ததோடு மட்டுமல்லாது, ஒட்டு மொத்த வளர்ச்சி நடவடிக்கைகளின் நம்பகத் தன்மையையும் மீண்டும் நிலை நிறுத்தியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.8,001 கோடி, முழு அளவில் எய்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையான நிதி செயல்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும், நிதிச் சீர்திருத்த உதவித் தொகையைத் தொடர்ந்து நான்காவது ஆண்டாகத் தமிழ்நாட்டிற்கு வழங்கியதன் மூலம் மத்திய அரசு இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பான பொது நிதி நிருவாகத்தினை அங்கீகரித்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட ஒருசில மாநிலங்களுக்கு மட்டுமே இப்பெருமை கிடைத்துள்ளது.

21. இந்த வியத்தகு சாதனை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2005–2006 ஆம் ஆண்டில் அதிக மதிப்பீட்டிலான திட்டத்தை மேற்கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளது. மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் 30.11.2004 அன்று புதுடில்லியில் நடைபெற்ற ஆண்டுத் திட்டம் குறித்த விவாதத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.40,000 கோடி என்ற பத்தாவது ஐந்தாண்டு கால திட்ட ஒதுக்கீட்டை எய்த வழிவகுக்கும் விதமாக 2005–2006 ஆம் ஆண்டிற்கு சாதனை இலக்காக ரூ.9,100 கோடியைத் திட்ட ஒதுக்கீடாகப் பெற்றுள்ளார். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மாநிலத்தைக் கவ்வியிருந்த பொது நிதி மற்றும் வளர்ச்சியைப் பாதித்த நெருக்கடி களிலிருந்து மாநிலம் மீட்கப்பட்டு, விரைவான மேம்பாடு மற்றும் உயர் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு மீண்டும் வீறு நடைபோடுவது மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

22. இந்த ஆண்டு 18 சதவிகிதம் என்ற அளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள வணிகவரி வசூலில் சிறப்பான முன்னேற்றத்தின் பயனாகவும் இந்த நிதி நிலை மீட்சி சாத்தியமாயிற்று. தற்போது உள்ள வரி வீதங்களின் அடிப்படையிலேயே மேம்பட்ட முறையில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. சொத்து விற்பனை குறித்த பத்திரப் பதிவில் காணப்படும் நிலுவையைப் போக்கி கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் நோக்கத்துடன் புதிய "சமாதானத்" திட்டம் ஒன்று 28.12.2004 அன்று துவக்கப்பட்டுள்ளது.

23. அனைத்து மாநிலங்களிலும் தற்போதுள்ள விற்பனைவரி முறைகளுக்குப் பதிலாகப் புதிய மதிப்புக் கூட்டு வரி திட்டத்தை 1.4.2005 முதல் அறிமுகப் படுத்துவதற்கான கருத்துரு பற்றி மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவார்கள். இது குறித்து எட்டப்பட்ட ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சட்டம் கொண்டுவர இந்த அரசு உத்தேசித்துள்ளது. இந்தப் புதிய வரி விதிப்பு முறையை செயற்படுத்துவதால் ஏற்படும் நிதி இழப்பினை, ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மத்திய அரசு ஈடுசெய்யும் என்பதன் அடிப்படையிலும், கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெறும்வகையில் மத்திய விற்பனை வரிச் சட்டத்திற்குத் தக்க திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்பதன் அடிப்படையிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

24. உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட "புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள்" குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இவற்றை, இலக்கு ஆண்டான 2015க்கு முன்னரே எய்த இந்த அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏழ்மை நிலையைக் குறைப்பதில் நல்ல முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், 6 முதல் 10 வயது தொகுதியில் உள்ள பள்ளிக்குச் செல்லும் சிறார்களின் சதவிகிதம் 96 ஆக உயர்ந்துள்ளது. வரும் ஆண்டில் 100 சதவிகிதம் இலக்கும் எய்தப்பட்டுவிடும். மக்கள் தொகையில் 90 சதவிகிதத்தினருக்குப் பாதுகாப்பான குடிநீர் வசதி அளிக்கப்பட்டு, அனைவருக்கும் குடிநீர் வழங்கும் இலக்கை எய்துவதற்கான முன்னேற்றப் பாதையில் மாநில அரசு சென்று கொண்டிருக்கிறது. சுகாதாரப் பாதுகாப்பில், இந்த அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளின் பயனாக, சிறார்களிடையே ஊட்டச் சத்துக் குறைவை முற்றிலுமாக அகற்றுதல், சிசு இறப்பு வீதத்தைக் குறைத்தல் ஆகியவை தொடர்பான இரண்டு இலக்குகளையும் இம்மாநிலம் எய்திவிடும். கல்வியறிவு நிலையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே

காணப்படும் இடைவெளியைக் குறைப்பது என்ற ஆறாவது இலக்கை எய்த, மகளிருக்குக் கல்வியறிவு புகட்டுவதற்கான திட்டத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப் பட்டுள்ளது.

25. 2004 ஆம் ஆண்டு பருவநிலை, கடந்த பல ஆண்டுகளைக் காட்டிலும் மேம்பட்டதாக இருந்தது. இதனால் இந்த ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் அதிக வளர்ச்சி ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட வேளாண்மை உள்ளிட்ட முதன்மைத் துறையின் வளர்ச்சி விகிதம் 2004–2005 ஆம் ஆண்டில், 16 சதவிகிதத்தைத் தாண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். 2004–2005 ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தி, 90 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விஞ்சிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியும் அடங்கும். இது, 32.23 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உள்ளிட்ட முந்தைய ஆண்டின் மொத்த தானிய உற்பத்தி அளவான 43.12 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விடக் கணிசமான அளவு அதிகம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். மேம்பட்ட பருவநிலைகளின் காரணத்தினால் ஊரகப் பகுதிகளில் மீண்டும் செழிப்பு ஏற்பட்டு அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சி உருவெடுத்துள்ளது.

26. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தி இஸ்ரேல் நாட்டில், வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுவரும் நடை முறைகளின் அடிப்படையில், இம்மாநிலத்தில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முன்னோடித் திட்டங்களாக புதிய துல்லிய பண்ணை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்திலிருந்து கிடைக்கக் கூடிய அனுபவத்தின் அடிப்படையில் பெரும் திட்டம் ஒன்றை வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில், 1.48 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் கால்நடைத் தீவன நாற்றுகள் உட்பட 58.35 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

27. காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு போன்ற குறைவாக நீர் தேவையுடைய மாற்றுப் பயிர் திட்டத்தை ஊக்குவிப்பதற்கான அரசின் கொள்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். விவசாயிகளுக்கு விற்பனை

வாய்ப்புகளை உறுதி செய்து இந்தப் பயிர்ச் சாகுபடிகளை ஊக்குவிக்கும் பணிகளுக்காகப் பெரும் நிறுவன அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வேளாண்மை விரிவாக்க செயல்பாடுகளின் மூலம் இந்தப் புதிய பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு அரசு ஆதரவு அளித்து வருகிறது.

28. கடந்த காலத்தில், தொடர்ச்சியாக நிலவிய வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு முழு அளவில் ஆதரவு அளித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு அக்டோபர் – நவம்பர் திங்களில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தக்க உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. புதிதாக நிதியாதாரங்களை வழங்கி, கூட்டுறவுக் கடன் அமைப்புகள் முற்றிலுமாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளன. 31.3.2004 ஆம் நாள் நிலவரப்படி, மொத்தம் ரூ.2,598 கோடி அளவிற்கு, கூட்டுறவு வங்கிகளுக்கு நிலுவையாக இருந்த பயிர்க் கடன்கள் மற்றும், அக்கடன்களுக்கான வட்டி, ஆகியவற்றின் திருப்பிச் செலுத்துவதற்கான காலக் கெடுவை மாற்றியமைத்து விவசாயிகள் புதிய பயிர்க் கடன்களைப் பெறுவதற்கு வகை செய்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். இரண்டாண்டு காலத்திற்கு கடன் திருப்பிச் செலுத்துவது ஒத்திவைக்கப்பட்ட 5 ஆண்டு கால கடன்களாக இது மாற்றியமைக்கப் பட்டுள்ளது. புதிய பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கான நிலுவைத் தொகை அனைத்தும் வழங்கப்படுவதை உறுதி செய்ததோடு, கரும்பிற்குரிய சட்டப்படியான குறைந்தபட்ச விலையை டன் ஒன்றுக்கு ரூ.695 என்பதிலிருந்து ரூ.730 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

29. தமிழ்நாடு நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம்–II க்கான, செயற்குறிப்புகள் உலக வங்கியின்

ஒப்புதலை எதிர்நோக்கி இருக்கும் நிலையில், இந்த அரசு, தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில், மாதிரித் திட்டங்களை தொடங்கியுள்ளது. தீபகற்ப நதிகளான மகா நதியையும், குண்டாற்றையும் இணைத்தல் என்ற குறிப்பான கோரிக்கையுடன், நதிகள் இணைப்புத் திட்டத்தை, விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளார். 2003 ஆம் ஆண்டு மின்சார சட்டத்தினால் இடர்பாடுகள் எழுந்துள்ளபோதிலும், இந்த அரசு, அனைத்துப் பண்ணை பம்பு செட்டுகளுக்கும் குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்துள்ளது. வீட்டு உபயோகத்திற்கான மின்சாரக் கட்டணத்திற்குச் சலுகை வழங்கி, அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.910 கோடி அளவுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. விவசாயிகள் தங்களது பழைய செயல்திறன் குறைந்த பம்புசெட்டுகளுக்குப் பதிலாக குறைந்த அளவு மின்சாரம் செலவாகும் புதிய பம்புசெட்டுகளைப் பொருத்திக் கொள்வதற்குத் தக்க உதவிகளை அளிப்பதற்கான புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

30. ரூ.567.42 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு காடுகள் வளர்ப்புத் திட்டம்–II சர்வதேசக் கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது என்பதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். காடுகளை ஒட்டிய குடியிருப்புப் பகுதிகளில் வாழும் ஊரகப் பகுதி மக்களின் உணர்வுகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே நேரத்தில், இயற்கை வளங்கள் தக்க முறையில் பேணிப் பாதுகாக்கப் படுவதையும் இந்தத் திட்டம் உறுதி செய்யும்.

31. கால்நடைகளுக்கு மேம்பட்ட மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்படுவதற்கு, 234 கால்நடை சுகாதார துணை மையங்கள், அனைத்து வசதிகளையும் கொண்ட கால்நடை மருத்துவ நிலையங்களாக நிலை

உயர்த்தப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்கள் பயனடைவதை உறுதி செய்யும் வகையில் இந்த அரசு பாலின் கொள்முதல் விலையை 2004 ஜுன் முதல் மேலும் 1 ரூபாய் அதிகரித்துள்ளது. நுகர்வோருக்கு எவ்வித கூடுதல் சுமையும் ஏற்படாத வகையில் இது செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

32. சுனாமி பேரழிவின் பின்னணியில் மீனளத் துறையை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்து செயல்படுத்தும். இவ்வரசு, 3.66 இலட்சம் மீனவர்களையும், 78,809 மீனவப் பெண்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த ஈட்டுறுதித் திட்டம் ஒன்றை ஏற்கெனவே செயற்படுத்தி வருகிறது. இந்த அரசு எப்போதுமே மீனவர்களுக்குப் பேராதரவு அளித்து வந்துள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.51 கோடி அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படுகின்ற நிலையிலும், மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மீதான விற்பனை வரியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்திருப்பதிலிருந்து இது புலனாகும்.

33. ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு உள்ளிட்ட ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அனைத்து ஊராட்சிகளையும் உள்ளடக்கும் வகையில் ரூ.200 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய "நமது கிராமம்" என்ற புதியதொரு திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. அனைத்து கிராமங்களுக்கும் இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், பொதுமக்களின் பங்கேற்புடன், பள்ளிகளில் 100 சதவிகித மாணவர் சேர்க்கை, வறுமைக் குறைப்பு, சிசு இறப்பைக் குறைத்தல், பெண் சிசுக் கொலையை முற்றிலுமாக ஒழித்தல், கிராமத் துப்புரவை மேம்படுத்தல் ஆகிய இலக்குகளை எய்துவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

34. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் விரைவான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதுவரை, ரூ.132.26 கோடி முதலீட்டில் 204 தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. ரூ.103.32 கோடி முதலீட்டில் துவங்கப்பட்ட 158 தொழில்களில் உற்பத்தி விரைவில் துவங்கிவிடும். ரூ.109.70 கோடி முதலீட்டிலான மேலும் 145 தொழிற் திட்டங்கள் குறித்து நிதி நிறுவனங்கள் பரிசீலித்து வருகின்றன.

35. ஊரக துப்புரவுப் பணிகளில் மாநில அரசு குறிப்பிடத் தகுந்த வகையில் நன்கு செயலாற்றியுள்ளது.

2001ஆம் ஆண்டில் முறையான துப்புரவு வசதிபெற்ற மக்கள் தொகை 15 சதவிகிதமாக இருந்தது. நடப்பாண்டில் இது 43 சதவிகிதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், ரூ.154.31 கோடி ஒதுக்கீட்டில் 37,676 புதிய வீடுகள் கட்டுதல், 19,265 கச்சா வீடுகளை நிலை உயர்த்துதல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்படும்.

36. சுயஉதவிக் குழு இயக்கம் பெருமளவில் வலுவடைந்துள்ளது. 1.87 இலட்சம் சுய உதவிக் குழுக்களில் 31.43 இலட்சம் மகளிர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி

அடைவார்கள். இவர்கள் ரூ.585.84 கோடி அளவிற்கு சேமித்துள்ளனர். மேலும் இவர்கள் ரூ.1020.48 கோடி அளவிற்கு கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

37. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்கள், நிலம் மற்றும் ஏனைய விவசாய இடுபொருட்களை வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கும் வகையில் புதியதொரு திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 7,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின குடும்பங்கள் பயனடையும். வர்த்தக வங்கிகள் தேவையான கடன் வசதிகளை அளித்து இப்புதுமைத் திட்டத்திற்கு முழு ஆதரவு அளிக்க வேண்டும்.

38. முதலமைச்சர் அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில், 49,31,757 குடும்ப அட்டைக்கான புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றுள் தகுதியான 37,70,446 விண்ணப்பதாரர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்படும். மேலும் போலி குடும்ப அட்டைகள் அனைத்தும் நீக்கப்படும்.

39. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்கு இந்த அரசு பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது துவக்கப்பட்ட 111 இலட்சம் பெண்களுக்கு இலவச சேலைகளும் 111 இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டிகளும் வழங்கும் மாபெரும் திட்டம், 2005ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போதும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம், வறியோருக்கு ஆடை கிடைப்பதை உறுதி செய்வதோடு பல்லாயிரக் கணக்கான நெசவாளர்களுக்கு வருமானப் பாதுகாப்பையும் அளிக்கிறது. 1.1.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள உலக வர்த்தக நிறுவன (WTO) விதிமுறைகளின் கீழ் துணித் தொழில் துறைக்கான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளன. இச்சூழலில் உருவாகிவரும் புதிய வாய்ப்புகளைக் கண்டறியவும் அதற்குத் தக்க செயல்திட்டங்களை வகுக்கவும் பணிக்குழு ஒன்றை இவ்வரசு அமைக்கும். 76,096 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.98.93 இலட்சம் செலவில் ஒரு விரிவான ஈட்டுறுதிக் காப்புத் திட்டத்திற்கு இந்த அரசு அனுமதி அளித்துள்ளது.

40. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், தமிழ்நாட்டில் வித்திடப்பட்டு தற்பொழுது, கூடுதலாக வாரம் ஒருமுறை ஒரு முட்டை, உருளைக் கிழங்கு மற்றும் பருப்பு வகைகள் வழங்கப்பட்டு, மேன்மையுறச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 844.97 கோடி செலவு ஆகிறது. இதில் மத்திய அரசு ரூ. 287.17 கோடி வழங்குகிறது. முதலமைச்சர் அவர்கள், 30.11.2004 ஆம் நாளன்று ஆண்டுத் திட்டம் குறித்து விவாதிக்கையில், இத்திட்டத்திற்கு மத்திய அரசு கூடுதல் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

41. சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் நிலையினை உயர்த்தும் இயக்கத்தை வழிநடத்திச்

செல்வதில் முதலமைச்சர் அவர்கள் முன்னணியில் இருக்கிறார். பெரும் புகழ் பெற்றுள்ள பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, 23,000 பெண் குழந்தைகள் பயன்பெறும்வகையில் கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கல்வி கற்றலில் மாணவிகளுக்குச் சமவாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், அரசு, பதினோராம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் ஒரு முன்னோடித் திட்டத்தைத் துவக்கியது. இந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 49,194 ஆதிதிராவிட, பழங்குடியின மாணவிகள் பயன்பெறுவதோடு இத்திட்டத்தினை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவிகளும் பயனடையும்படி விரிவாக்கியதன் மூலம் இந்த சமுதாயங்களைச் சார்ந்த 2,96,000 மாணவிகளும் பயனடைவர் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். ஊரக பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மூன்றிலிருந்து ஆறாம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பயிலும் 1,80,000 மாணவிகள் தற்போது பயன்பெற்று வருகின்றனர்.

42. ஆதிதிராவிட மாணவர்களுக்கான கல்விக் கடனுதவித் திட்டம் முழு மானியத் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மாணவர்களுக்கான மாணவரில்லங்கள் கட்டும் திட்டம் முடிவுறும் தருவாயில் உள்ளது.

43. இந்த அரசு நடப்புக் கல்வி ஆண்டில், 1,031 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியதன்மூலம், தொடக்கப் பள்ளிகளில் அனைவரும் சேர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்தது மட்டுமின்றி, நடுநிலைப் பள்ளிகளிலும் 100 சதவிகித மாணவர் சேர்க்கையை உறுதிசெய்து, இதன் மூலம் அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு மெய்ப்பொருள் வழங்கியுள்ளது. மாநிலத்தில் 11 தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.63.21 கோடி செலவில் உலக வங்கி நிதியுத வியுடன் தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். 32 சட்ட நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் திட்டமும் துவக்கப்பட்டுள்ளது.

44. தேனி, வேலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசாரிப்பள்ளம் ஆகிய மூன்று இடங்களிலும் துவங்கப்பட்ட புதிய மருத்துவக் கல்லூரிகளிலும், ஏனைய பிற மருத்துவக் கல்லூரிகளிலும் கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்தித்தர



ரூ.241.40 கோடி செலவில் மாபெரும் திட்டமொன்று துவங்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தின் வரையறைகளின்படி இந்த மருத்துவக் கல்லூரிகள் அமைவதற்கு இத்திட்டம் பேருதவியாக இருக்கும். ரூ.104.47 கோடி செலவில் 1,650 படுக்கைகள் வசதி கொண்டு சென்னை பொது மருத்துவமனை வளாகத்தில் உருவாகிவரும் மாபெரும் இரு கோபுரக் கட்டடங்களும் விரைவில் திறந்து வைக்கப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். சென்னை மாநகர், நாட்டின் "மருத்துவப் பணிகளின் தலைநகராக" உருவெடுத்துள்ளது. சுமார் ரூ.600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுகாதாரப் பணிகள் திட்டத்திற்கு உலக வங்கி தனது ஒப்புதலை அண்மையில் அளித்துள்ளது. உலக வங்கி உதவியுடன் ரூ.426 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை இந்த அரசு விரைவில் துவக்கவுள்ளது. ஊனமுற்றோர் மறுவாழ்வில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளது. உடல் உறுப்பு பாதிக்கப்பட்டோரின் நலம் காக்கும் செயல்பாடுகளுக்காக, இம்மாநிலம், தேசிய அளவிலான பதினான்கு விருதுகளைப் பெற்றுள்ளது.

45. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் குடிசைப்பகுதி மக்களின் மறுவாழ்விற்காக ரூ. 49 கோடி செலவில் 5,172 குடியிருப்புகளைக் கட்டும் திட்டம் ஒன்றை இவ்வரசு செயற்படுத்தி வருகிறது. ரூ.93.20 கோடி செலவில் மேலும் 10,632 வீடுகளைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி இந்த நிதியாண்டில் முடிக்கப்படும். மேலும் ரூ.19 கோடி செலவில், தற்போதுள்ள குடியிருப்புகளில் இருப்பிட வசதிகளை மேம்படுத்துவதற்கான பழுதுபார்ப்புப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

46. ரூ.2,172 கோடி மதிப்பீட்டுச் செலவில் 15,442 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளிலும், 104 நகரங்களிலும் உள்ள 1.4 கோடி மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய 256 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் சேடப்பட்டி – ஆண்டிப்பட்டி, மணப்பாறை – மருங்காபுரி ஒன்றியம் ஆகியவை

உள்ளிட்ட 40 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் முடிக்கப் பட்டுள்ளன என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். ரூ.844 கோடி மதிப்பீட்டுச் செலவில் 16,500 ஊரகக் குடியிருப்புப் பகுதி ஒவ்வொன்றிலும் மின்விசை பம்பு அமைக்கும்

திட்டத்தை இந்த அரசு செயற்படுத்தியுள்ளது. ரூ.202 கோடி செலவில் 33,821 கைப்பம்புகளை சிறு விசைப் பம்புகளாக மாற்றும் திட்டத்திற்கு இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத் தயாரிப்புப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

47. ரூ.1,050 கோடி செலவில் மாநில நெடுஞ்சாலைகளையும், முக்கிய மாவட்டச் சாலைகளையும், ஏனைய மாவட்டச் சாலைகளையும் மேம்படுத்துவதற்கும் பாலங்களை மீண்டும் கட்டுவதற்கும் வகை செய்யும், ஒட்டுமொத்த சாலை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த நிதியாண்டின் இறுதியில் முடிக்கப்படும். ரூ.2,160 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் சென்ற ஆண்டு இவ்வரசால் துவங்கப்பட்ட தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்தின் கீழ் பணிகள் வெகு விரைவாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

48. கடந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருவாரூருக்கு அருகே ஒரு பேருந்தின் பழுதடைந்த நிலையின் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தில் ஒரு பெண் குழந்தை தனது அரிய உயிரை இழக்க நேரிட்டது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். பயன்பாட்டிலுள்ள அனைத்துப் பேருந்துகளையும் பழுதுபார்த்துப் புதுப்பிக்கவும், பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் வாங்குவதற்குமான விரைவுத் திட்டமொன்றை உடனடியாக இந்த அரசு மேற்கொண்டது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நடப்பாண்டில் 1,325 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குகின்றன என்பதையும் அடுத்த நிதியாண்டில் மேலும் 2,000 பழைய பேருந்து களுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்பதையும் அறிவதில் மதிப்பிற் குரிய பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். 4,848 பழுதடைந்த பேருந்துகள் ரூ.30.48 கோடி செலவில் சரி செய்யப்பட்டுச் சாலைப் போக்குவரத்திற்கும் பாதுகாப்பான பயணத்திற்கும் உகந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவை முழுமையாக மேம்படுத்தப் பட்டுள்ளது. மத்திய அரசு, டீசல் விலையைக் கடுமையாக உயர்த்தியதால் தாங்கமுடியாத நிதிச் சுமை ஏற்பட்டுள்ளபோதிலும், பயணக் கட்டணங்களை

உயர்த்தாமலேயே சேவைகளின் தரம் உயர்த்தப் பட்டுள்ளது.

49. ரூ.62.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்ட டைசல் உயிரி–பூங்காவைக் கடந்த 10.11.2004 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கிவைத்தார்கள். மத்திய அரசால் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உயிரி–தகவல் தொழில் நுட்பப் பூங்காவினைச் சென்னையில் அமைக்க வேண்டுமென இவ்வரசு கோரியுள்ளது. 2003 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய தொழிற் கொள்கையினைத் தொடர்ந்தும், அதனால் முதலீட்டுச் சூழலில் ஏற்பட்ட மேம்பாட்டினாலும் பல புதிய முதலீடுகள் இறு[illegible] செய்யப்பட்டு வருகின்றன.

50. சென்னை மற்றும் தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த பணிகளுக்கான முதலீடுகளுக்கு விருப்பத் தேர்வு இடங்களாகத் திகழவேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் கனவு நனவாகி வருகிறது என்பது நாஸ்காம் (NASSCOM) மற்றும் கார்ட்னர் (GARTNER) நிறுவனங்கள் அண்மையில் நடத்திய ஆய்வுகளிலிருந்து புலனாகிறது. மிகப் பெரிய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள், சென்னையைத் தங்களது மையங்களை நிறுவுவதற்கான அனைத்து வசதிகளும் படைத்த இடமாகக் கருதுகின்றன. மிகப் பெரிய இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் தங்களது தொழில்களைப் பெரிய அளவில் விரிவுபடுத்தி வருகின்றன. அறிவு சார் தொழில் நகரியம் (Knowledge Industry Township) விரைவிலேயே உருவாக்கப்படும். இந்நகரியத்திற்குச் செல்ல 6 வழி தடத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை அமைக்கும் பணிகள் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

51. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அமைந்துள்ள 6,275 கோயில்களை ரூ.15.69 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பழனி கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 3.11.2004 அன்று ஒரு புதிய 'கம்பிவட ஊர்தி' (Rope Car) சேவையைத் தொடங்கி வைத்தார்கள்.

52. வீடியோ திருட்டை ஒழிப்பதற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவது உள்பட, இம்மாநிலத்தில் திரைப்படத் துறைக்குப் புத்துயிரூட்டுவதற்கான பல்வேறு தொகுப்பு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. கேளிக்கை வரி அமைப்பு முழுவதையும் அரசு மாற்றியமைத்துள்ளது; வரி விகிதங்களும் குறைக்கப் பட்டுள்ளன. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான திரைப்படங்கள் ஒவ்வொன்றிற்கும் அளிக்கப்படும் உதவித் தொகையை அரசு 2003 ஆம் ஆண்டு முதல் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தியுள்ளது. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. 3.12.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள். இந்த நடவடிக்கைகளினால், திரைப்படத் தொழில் புத்துயிர் பெற்றுள்ளது.

53. புதுமையான மின் ஆளுகை நடவடிக்கைகளின் மூலம் நல்லாட்சி வழங்குவதில் இந்த

அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் 30–ஆவது மாவட்டமாகக் கிருஷ்ணகிரி மாவட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.2.2004 அன்று துவக்கிவைத்தார்கள்.

54. இந்த அரசின் கொள்கைகளையும் திட்டங் களையும் பற்றி நான் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். 2004 ஆம் ஆண்டில் இந்த அரசின் மகத்தான சாதனைகளை எண்ணி நியாயமான பெருமிதம் கொள்வதோடு, 2005 ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் மகத்தான சாதனைகள் படைக்கப்படும் என எதிர்நோக்குவோம். தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை வளம் பெறத் தேவையான மிகவிரைந்த முன்னேற்ற நடவடிக்கைகளைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அவையில் நடக்கும் விவாதங்கள் நடுநிலைமை கொண்டதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், பொருளார்ந்த தாகவும் அமையும் என நான் நம்புகிறேன்.

வணக்கம்.

ஜெய்ஹிந்த்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
31.1.2005 அன்று மேதகு தமிழக ஆளுநர்
திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

மனிதநேயத்தோடு எப்போதும் விளங்கவேண்டியது காவலர்களின் கடமையாகும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று பதக்கங்களை வழங்கியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைத்துறை மற்றும் ஊர்க்காவல் படை ஆகிய சீருடைப் பணிகளில் ஏற்றமிகு பணி புரிந்தும், வீர தீரச் செயல் புரிந்தும், பதக்கங்கள் பெற்றுள்ள அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கடமை உணர்வைப் பாராட்டுவதும், வீர உணர்வைப் போற்றுவதும், அந்தப் பண்புகளை மேலும் வளர்க்கும் என்பதால் அவ்வாறு பாராட்டுவதும் போற்றுவதும் நமது கடமை என்று நான் எப்போதும் நினைக்கிறேன். எனவேதான் உரிய காலத்தே காவலர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நான் முனைப்பாக உள்ளேன். பதக்கங்கள் வழங்கப்படும் இந்த விழா 26.12.2004 அன்றே நடத்தப்பட முடிவு செய்யப்பட்டது. ஆனால், முன்னாள் பாரதப்பிரதமர் திரு.பி.வி. நரசிம்மராவ்

அவர்களின் மறைவினால் அரசு முறை துக்கம் அனுசரிக்கப்பட்டதன் காரணமாக இந்த விழா ஒத்தி வைக்கப்பட்டு இன்று நடத்தப்படுகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு காவல்துறை வரலாற்றிலேயே மறக்க முடியாத ஆண்டு. ஏன், தமிழக வரலாற்றிலேயே மறக்க முடியாத ஆண்டு. கொடுமையின் வடிவமாக இருந்து மனித உயிர்களை மலிவாகக் கருதிக் கொன்று குவித்த காட்டுக் கொள்ளைக்காரன் வீரப்பனையும், அவனுடைய கூட்டாளிகளையும் ஒழித்துக்கட்டிய வீரச் செயல் நடந்த ஆண்டு. அந்த வீரச் செயலை நிகழ்த்திய அதிரடிப் படையினரைப் பாராட்டி மகத்தான விழா ஒன்றை எனது தலைமையிலான அரசு 30.10.2004 அன்று நடத்தியது.

தமிழக மக்களின் நன்றி உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில், தமிழ்நாடு அரசால் அன்று நடத்தப்பட்ட விழாவில், தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை உயர் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் அவர்களோடு இணைந்து பணியாற்றிய வனத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கியும், வீரப் பதக்கங்கள் வழங்கியும் நான் கௌரவித்தேன். அதைப்போலவே வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கையில் கடந்த காலத்தில் பங்கு பெற்ற அனைவருக்கும், அவரவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கும் இந்த விழாவில் சிறப்புச்

செய்யப்படும் என்று நான் அறிவித்தேன். அவ்வாறே அவர்களுக்கு இன்று உரிய பரிசுகளை வழங்கி இருக்கிறேன்.

இதன்மூலம் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட எவரும் பரிசளிக்கப் படாமல் விட்டுவிடப் படவில்லை என்பதை மன நிறைவோடு இந்த வேளையில் உங்களிடம் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

என்ற புகழையும் நாம் அடைந்துள்ளோம் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காவலர்கள் நலமாக இருந்தால்தான் அவர்கள் தங்கள் கடமையை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும். எனவே காவலர் உடல் நலன் காப்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. 1995ஆம் ஆண்டு என்னால் தொடங்கப்பட்ட காவலர் நல்வாழ்வு நிதியின் மூலம், மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை தேவைப்படும்

காவலர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியத்திற்கு ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் மானியம் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 17.6.2002 முதல் மருத்துவ உதவியின் அளவை 1 இலட்சம் ரூபாயிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாயாக உயர்த்தி நான் ஆணையிட்டேன். 2004-ம் ஆண்டு மே முதல் இதுவரை, மொத்தம் 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் அளவிற்கு 722 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்று இருக்கிறார்கள் என்பதை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும் என்றால் இரவு பகல் பாராமல் கடமை உணர்வுடன் பணியாற்றும் காவலர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள் வசிக்கும் குடியிருப்புகள் கூட நேர்த்தியாக அமைய வேண்டும் என்று நான் ஆணையிட்டேன். அதன்படி, காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்பின் பரப்பளவு, இதற்கு முன்னர் இருந்த 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தற்போது மிக விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2001ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல் தற்போது வரை 6,354 குடியிருப்புகள் மொத்தம் 226 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 1,945 குடியிருப்புகள் 78 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. அகில இந்திய அளவில், காவல் துறையினருக்குக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் தமிழ்நாட்டில் மிகச்சிறந்த அளவில் அமைந்துள்ளன

காவல்துறையினருக்கு உரிய வசதிகள் கிடைப்பதற்கு முக்கியத்துவம் அளித்துவரும் எனது அரசு அதே வேளையில் காவலர்கள் தங்களது பணியைச் சிறப்பாக ஆற்றுவதற்கு ஏற்ற வகையில் அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாறிவரும் காலத்திற்கு ஏற்பவும், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்பவும், மாறிவரும் சூழல்களுக்கு ஏற்பவும் பணியாற்றும் வகையில் காவலர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். எனவே, அதற்குத் தேவையான வாகன வசதி, ஆயுதங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், தடய அறிவியல் கூடங்கள், கணினி வசதிகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றைக் காவல்துறைக்கு எனது அரசு வழங்கி வருகிறது. 2001–ஆம் ஆண்டு முதல் இதுவரை மொத்தம் 427 கோடியே 59 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மனிதர்களின் போக்கை அறிந்து கொள்ள வேண்டிய திறமை மற்றவர்களைக் காட்டிலும் காவலர்களுக்கு மிகவும்

தேவை. அவ்வாறு மனிதர்களின் மனப்போக்கை அறிந்து கொள்கின்ற திறமை நமது காவலர்களுக்கு நிறையவே உண்டு. அதே நேரத்தில், மனித நேயத்தோடு எப்போதும் விளங்க வேண்டியதும் காவலர்களின் கடமை ஆகும். மனித நேயம் என்ற உடன் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு கோயில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு தங்கத் தட்டு கோயில் முற்றத்தில் விழுந்தது. 'தகதக' என மின்னும் அந்தத் தங்கத் தட்டைப்

வருகிறேன்" என்றார்.

அவருடைய அன்பு நெஞ்சத்தை உணர்ந்த கோயில் நிர்வாகி, அவருக்கே தங்கத் தட்டை அளித்தார்.

சிலருக்குச் சந்தேகம்! அதைச் செய்தேன் இதைச் செய்தேன் என்று பொய் சொல்லிக்கூடத் தங்கத் தட்டைத் தட்டிச் சென்றுவிடலாமே! இந்தப் பணக்காரர் ஏராளமாகத் தானம் செய்கிறார் என்பதை எப்படி நம்புவது? அதற்கு என்ன சாட்சி?

இப்படி, அவர்கள் தங்களுக்குள் பேசிக்



பார்த்ததும், எல்லோரும் அதை நோக்கி ஓடினார்கள். யாருக்கு அந்தத் தங்கத் தட்டு? கோயிலுக்கா, இல்லை பக்தர்களில் ஒருவருக்கா?

கோயில் நிர்வாகி வந்தார். தட்டைக் கையில் எடுத்தார். அதிலே ஏதோ வாசகம் காணப்பட்டது. 'அன்பில் சிறந்தவர் யாரோ, அவருக்கு ஆண்டவன் பரிசு' என்று அந்தத் தங்கத் தட்டில் எழுதப்பட்டிருந்தது. "அன்பில் சிறந்தவர் யார்? – "அவரா? இல்லை இவரா?, "நான் தான்" நான் தான்!" என்று ஏராளமான குரல்கள் எழுந்தன.

கோயில் நிர்வாகி ஓர் அறிவிப்பைச் செய்தார்! அடுத்த நாள் பகல் 12 மணிக்கு பக்தர்கள் வந்து தாங்கள் செய்த அன்புச் செயலைச் சொல்லி தங்கத் தட்டைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த அறிவிப்பைக் கேட்டுவிட்டுப் போன மக்களில் பலருக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. என்ன சொல்லித் தங்கத் தட்டைத் தட்டிச் செல்லலாம் என்பதே எல்லோருடைய சிந்தனையாகவும் இருந்தது.

மறு நாள் பகல் 12 மணி! எள் போட்டால் எள் கீழே விழாதபடி ஏகப்பட்ட கூட்டம். ஒவ்வொருவரும் தங்களது அன்புச் செயலை விவரிக்க வந்தார்கள்.

ஒரு பணக்காரர் வந்தார்! "நான் எனது சொத்தில் ஏராளமான பங்கை ஏழைகளுக்குத் தர்மம் செய்து

கொண்டிருந்தபோதே பணக்காரர் கையில் இருந்த தங்கத் தட்டு திடீரென்று தகரத் தட்டாக மாறிவிட்டது.

"ஓகோ! தகுதியில்லாதவர் கைக்குப் போனால், தங்கத் தட்டு இப்படித் தகரத் தட்டாகப் போய்விடும் போலும்!" என்று எல்லோரும் பேசத் தொடங்கினார்கள்.

அந்த ஊருக்குப் பெரும் பணக்காரர்கள் எல்லாம் வந்து அங்கே இருந்த ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கினார்கள். அடித்தது யோகம் பிச்சைக்காரர்களுக்கு! அந்தக் கோயிலை நோக்கி அடுத்த நாட்டுப் பிச்சைக்காரர்களும் வரத் தொடங்கினார்கள். ஏழைகள் எல்லோருக்கும் பொருள் ஏராளமாகக் கிடைத்தது; எந்தக் குறைவும் இல்லை! பாவம்! பணக்காரர்கள் தான் வந்து வந்து பணத்தைத் தந்து தந்து, நொந்து போனார்கள். அவர்கள் கையில் சென்றதுமே தங்கத் தட்டு தகரத் தட்டு ஆனது!

நாட்கள் நகர்ந்தன. பல நாட்கள், பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், தகுதியான ஒருவர் வரவும் இல்லை; தங்கத் தட்டைப் பெறவும் இல்லை. ஆனால், தினசரி கோயிலில் கூட்டத்துக்கு மட்டும் குறைச்சலே இல்லை.

ஒரு நாள் கிராமத்தான் ஒருவன் வந்தான். அவனுக்கு இந்தத் தங்கத் தட்டுச் சமாச்சாரம் எதுவும் தெரியாது.

கோயிலில் சாமி கும்பிட வந்தவன் வெளியில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரர்கள் கூட்டத்தைப் பார்த்து, "ஐயோ! என் நாட்டில் இத்தனை ஏழைகளா? பார்க்கவே பரிதாபமாக இருக்கிறதே" என்று சொல்லி அழுதான்.

கை கால் இழந்தவர்கள், கண் பார்வை இல்லாதவர்கள், ஊமைகள் – இவர்களை எல்லாம் பார்த்து அவன் உள்ளம் உருகிற்று. அவன் கதறி அழுதான். கோயிலில், சாமியைப் பார்த்து இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் விமோச்சனமே இல்லையா என்று கேட்க உள்ளே ஓடினான். உள்ளே கோயில் நிர்வாகி இருந்தார். அவரது கையில், தங்கத் தட்டு இருந்தது. அப்போது, கோயில் நிர்வாகி கூட்ட நெரிசலில் தங்கத் தட்டைத் தவறவிட்டார். கீழே வந்து நின்ற கிராமத்தான் கையில் விழுந்தது தங்கத் தட்டு! உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தங்கத் தட்டு தகரத் தட்டாக ஆகவில்லை! முன்னைவிட மூன்று மடங்கு ஜொலித்தது. கோயில் நிர்வாகிக்கு மட்டற்ற மகிழ்ச்சி! "ஐயா, நீ தான் உண்மையான அன்பின் வடிவம், உனக்குத் தான் இந்தத் தங்கத் தட்டு சொந்தம்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

யாருடைய உள்ளம் ஏழை எளியவர்களுக்காக உருகுகிறதோ, யாருடைய நெஞ்சம் மனிதாபிமானத்தின் ஊற்றுக் கண்ணாக இருக்கிறதோ, அவரே அன்பிற் சிறந்தவர் என்பதுதான் இந்தக் கதையின் கருத்து.

நான் கூறிய கதை, மனிதாபிமான உணர்வே தலை சிறந்தது என்பதை வலியுறுத்துகிறது. அந்த மனிதாபிமான உணர்வை, மனிதாபிமானச் செயல்பாட்டை, உங்களிடம் நான் நிறைய எதிர்பார்க்கிறேன்.

தமிழகக் காவல் துறை கடமையில் சிறந்தது; வீரத்தில் சிறந்தது; விவேகத்தில் சிறந்தது. அதைப் போலவே, தமிழகக் காவல் துறை மனிதாபிமானத்திலும் சிறந்தது என்னும் பெருமையைப் பெற வேண்டும் என்பது தான் எனது எதிர்பார்ப்பு.

இந்த வகையிலும், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக, தமிழக காவல்துறை விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இங்கு பதக்கங்களையும், பரிசுகளையும் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் மீண்டும் தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்!

– 18.2.2005 அன்று சென்னை
ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு
அரங்கில் நடைபெற்ற இந்தியக்
குடியரசுத் தலைவர் மற்றும்
தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள்
வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
அவர்கள் ஆற்றிய உரை.

குரல்

நாம் எவ்வாறு குரல் எழுப்புகிறோம் தெரியுமா? நம் தொண்டையின் அடிப்புறத்தில் குரல்வளை என்ற உறுப்பு இருக்கிறது. நாம் மூச்சை உள்ளே இழுக்கும்போது குரல்வளை வழியாகத்தான் காற்று உள்ளே செல்கிறது; வெளிவிடும்போது குரல் வளையின் வழியாகவே வெளியேறுகிறது. குரல்வளையில் குரல்நாண்கள் என்ற இரண்டு மெல்லிய தோல்கள் இருக்கின்றன. குரல்வளையின் வழியாகக் காற்று செல்லும்போது குரல்நாண்கள் V–வடிவில் விரிந்து கொடுக்கின்றன. நாம் பேசும்போது இந்தக் குரல் நாண்களின் தசைகள் நெகிழ்ந்து விடுகின்றன. நுரையீரல்களிலிருந்து வரும் காற்று குரல் நாண்களை அதிரச் செய்கிறது. குரல் நாண்களின் அதிர்வால் ஒலி உண்டாகிறது.

இவ்வாறு பிறக்கும் ஒலி வலுவற்று மெலிந்து இருக்கும். இதைக் குரல்வளை, மூக்கு, வாய், மார்பு முதலியவை ஒத்ததிர்வு (Resonance) முறையால் மாற்றி, பெருக்குகின்றன.

ஒலியை மிருகங்களும் எழுப்புகின்றன. ஆனால் மனிதனால் மட்டுமே பேச முடியும். பேசும் வார்த்தைகளை உருவாக்க உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் தேவை. குரல்வளையிலிருந்து வாயின் வழியே வெளிவருவது உயிரெழுத்து. குரல்வளையால் உருவாக்கப்பட்ட ஒலி நாக்கு, பல், உதடு, மேல்வாய், மூக்கு முதலியவைகளால் மாற்றமடைந்து வெளிவருவது மெய்யெழுத்து. இவைகளை கட்டுப்படுத்தி இயக்குவது மனிதனின் மூளை.

சென்னையில்
56ஆவது குடியரசு தின விழா

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களைச் சுனாமி பேரலைகள் அண்மையில் கடுமையாகத் தாக்கியதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்பைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு குடியரசு நாள் விழாவை எளிமையான முறையில் கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள்.

அதன்படி சென்னை மெரீனா கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே எளிமையான முறையில் குடியரசு தின விழாவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

26.1.2005 அன்று காலை காவல்துறையினர் அணி வகுத்து முன் செல்ல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடற்கரை சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்களைப் பார்த்து கையசைத்து வாழ்த்து தெரிவித்தார்கள். குடியரசு தினவிழா நிகழ்ச்சியினை காணவந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

காலை **7.54** மணிக்கு காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் மேதகு ஆளுநர் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டார். மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்றார்கள். ஆந்திரம், தமிழ்நாடு,

கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமை படைத்தலைவர் மேஜர் ஜெனரல் திரு. பரம்ஜித்சிங், விஎஸ்எம்., கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் திரு. டி.ஹரி, ஏவிஎஸ்எம்., தாம்பரம் வான்படை அதிகாரி ஏர் கமோடர் திரு.எம்.எஸ். அலுவாலியா, தமிழக காவல்துறை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்–ஒழுங்கு) திரு.கே.வி.எஸ்.மூர்த்தி, இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு. ஆர். நடராஜ், இ.கா.ப., ஆகியோரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சரியாக காலை 8.00 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். பின்னர் நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.. அதனைத் தொடர்ந்து காவல்துறை மற்றும் பல்வேறு துறைகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

மேஜர் திரு. நிசாந் பாரியர் தலைமையில் இராணுவப் படை அணிவகுப்பும் மற்றும் ஹவில்தார் திரு. சதீஸ்குமார் தலைமையில் இராணுவ கூட்டுக் குழல் முரசு இசைக்கும் அணிவகுப்பையும் தொடர்ந்து, இராணுவ ஊர்தி, ஹவில்தார் திரு. விக்ரம் சிங் தலைமையில் வந்தது.

லெப்டினன்ட் கிரண் குமார் தலைமையில் கடற்படை அணிவகுப்பும், வான்படை – I, II முறையே பிளைட் லெப்டினன்ட் திரு. அனுஜ் பரத்வாஜ், பிளைட் லெப்டினன்ட் திரு.சேத்தன் சிங், தலைமையில் அணிவகுப்பும், வான்படை கூட்டுக் குழல் முரசிசை திரு. ஏ.எஸ்.பிள்ளை தலைமையில் இசைக்க வான்படை ஊர்தி – I மற்றும் போர் விமானங்கள் திரு. டி.என்.மணிகண்டன் தலைமையில் அணிவகுத்து வந்தது.

பின்னர், தபேதார் திரு. ஆனந்தராஜ் தலைமையில் முன்னாள் ராணுவத்தினர் படைப் பிரிவு அணி வகுப்பும், திரு. சைலேந்திரயாதவ் தலைமையில் சி.ஆர்.பி.எப். படைப்பிரிவு அணிவகுப்பும், உதவி பாதுகாப்பு ஆணையர் திரு. டபிள்யு தங்கராஜ் தலைமையில், ரயில்வே பாதுகாப்புப் படை அணிவகுப்பும் நடைபெற்றது.

காவல்படை முதன்மைத் தளவாய் துணை ஆணையர் திரு. ஆசீர்வாத உடையார் தலைமையில் தமிழக காவல் துறை அணிவகுப்பு நடைபெற்றது. இதில் முதலில் சென்னை மாநகர காவல் உதவி ஆணையர் திரு. எஸ்.சிவானந்தம் காவல்படை அணிவகுத்துச் செல்ல, சென்னை மாநகர காவல் கூட்டுக் குழல் முரசிசை அணிவகுப்பை தலைமைக் காவலர் திரு. பெருமாள் நடத்தி வந்தார்.

இதனைத் தொடர்ந்து காவல் குதிரைப்படை தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (ஆண்கள்), தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (பெண்கள்), ரெஜிமெண்டல் மைய கூட்டுக் குழல் முரசிசை, பெண்கள் கமாண்டோ படை, கடலோரப் பாதுகாப்புக் குழு, தமிழ்நாடு கமாண்டோ படை (ஆண்கள்), நீலகிரி காவலர் படைப் பிரிவு, தமிழ்நாடு தீயணைப்புத் துறை முரசிசை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை, ஊர்க்காவல் படை (ஆண்கள்), ஊர்க்காவல் படை (பெண்கள்), தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (தரைப் படை), தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (வான்படை), தேசிய மாணவர் படை கூட்டுக் குழல் முரசிசை, தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (கடற்படை), தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (பெண்கள்), சாலைக் காப்பு சுற்றுக் காவல் (பெண்கள்), சாலைக் காப்பு சுற்றுக் காவல் (கூட்டுக் குழல் முரசிசை), சாலைக் காப்பு சுற்றுக் காவல் (ஆண்கள்) படைப் பிரிவு அணிவகுப்பு நடைபெற்றது.

இறுதியாக ஒட்டுமொத்த பாரத சாரண சாரணியர் இயக்க முதன்மைத் தளவாய் திரு. எம். கருப்பையா தலைமையில் பெண்கள், ஆண்கள் பிரிவு அணிவகுப்பு நடைபெற்றது.

அண்ணா விருது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வீரதீரச் செயல்புரிந்த 4 பேருக்கு அண்ணா



விருதினை வழங்கினார்கள். இவ்விருது காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மண்டல துணை வட்டாட்சியர் மறைந்த ஏ.ஆர்.வெங்கடேசன் மனைவி நிர்மலா, திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் மறைந்த ஜி. புண்ணிய கோட்டி மனைவி ஆதிலட்சுமி, காஞ்சிபுரம் வட்ட வருவாய் ஆய்வாளர் மறைந்த ஆர். சண்முகசுந்தரம் மனைவி சுலோச்சனா, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.எஸ்.நடராஜன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இவ்விருது பெற்றோருக்கு ரூபாய் 2 ஆயிரம் மதிப்புள்ள தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும், ரூ. 10 ஆயிரத்திற்கான காசோலையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கோட்டை அமீர் விருது

மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்ட திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். சாகுல் அமீதுக்கு (வயது 56) கோட்டை அமீர் விருதினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள். இவ்விருது ரூபாய் இரண்டாயிரம் மதிப்புள்ள பதக்கத்தையும், ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் சான்றிதழும் கொண்டதாகும்.

மகாத்மா காந்தி காவல் பதக்கம்

கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதில் ஆற்றிய சிறப்புமிக்க பணியினைப் பாராட்டி, செங்கை கிழக்கு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்குப் பிரிவு) செல்வி பி.கே. செந்தில்குமாரி, விழுப்புரம் மாவட்டம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்குப் பிரிவு) திருமதி. எஸ். லட்சுமி, கோவை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் (மது விலக்குப் பிரிவு) திரு. ஆ.சி. நந்தகுமார்,

சென்னை மத்தியப் புலனாய்வுப் பிரிவு (மதுவிலக்கு) ஆய்வாளர் திரு. இரா. சுசீல்குமார் ஆகியோருக்கு மகாத்மா காந்தி காவல் பதக்கமும் தலா ரூ. 10 ஆயிரத்திற்கான ரொக்கத் தொகையையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அரசு உயர் அலுவலர்கள் உட்பட ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

விழா இறுதியில் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது.

❖ ❖ ❖

மீனவர்கள் இழந்துவிட்ட மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகள் ஆகியவற்றுக்கு மத்திய அரசு நூறு சதவிகித மானியத்தை வழங்க வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலம் வலியுறுத்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார மறுவாழ்வுக்கானத் திட்டங்களுக்கு அளிக்கப்படும் மானியம் அளிக்கும் பிரச்சினை குறித்த தங்களது 31.1.2005 தேதியிட்ட கடிதம் முன்னதாக பேக்ஸ் மூலம் கிடைக்கப் பெறவில்லை. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு–தலைமைச் செயலகத்தில் இருந்து திரும்பிய பின் நேற்று மாலைதான் தபால் மூலம் கிடைத்தது. இன்று காலை (4.2.2005) சட்டப்பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கப் புறப்படும்போதுகூட எனக்குக் கிடைக்கப் பெறவில்லை.

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், 3.2.2005 அன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் மற்றவர்களுக்கும் 3 மாதங்களுக்கான நிவாரணத் தொகுப்புத் திட்டத்தை அறிவித்தேன். அப்போது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 தேதியிட்ட உத்தரவின்படி மீனவர்களுக்கான மறுவாழ்வுக்கான மானியத் தொகை முழுவதும் மாநில அரசால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததை சட்டப்பேரவையில் தெரிவித்தேன். இந்த உத்தரவு, தமிழக அரசின் நிலையை ஏற்றுக்கொண்டு, 30.1.2005 தேதியிட்ட எனது கடிதத்தைப் பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்தது.

மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் உத்தரவை சட்டப்பேரவையில் மீண்டும் 4.2.2005 அன்று படித்தேன். அந்த உத்தரவின் 4ஆவது பத்தியில் மீனவர்களுக்கான மானியத் தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.356.54 கோடியையும் முழுமையாக மாநில அரசால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அனைத்து உதவிகளும் மாநிலங்களிடமே வழங்கப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் நிலைப்பாட்டை ஒப்புக்கொள்வதாகவே அந்த உத்தரவு அமைந்திருந்தது.

தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைத் தாங்கள் பாராட்டி வரவேற்றுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 31.1.2005 அன்றைய மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவு கடைப்பிடிக்கப்படும் என்றும் நம்புகிறேன். திடீரென சுனாமிப் பேரழிவு ஏற்படுத்திய பாதிப்பைக் கருத்தில் கொண்டு, மீனவர்கள் இழந்துவிட்ட உடைமைகளைத் திரும்பவும் அளிக்கும் வகையில் தங்கள் வாழ்வாதாரத்திற்குத் தேவையான மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் ஆகியவற்றுக்கு மத்திய அரசு நூறு சதவிகித மானியத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மீனவர்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்துவிட்ட இந்த சூழ்நிலை முற்றிலும் வழக்கத்திற்கு மாறானது என்பதால், மீன்பிடிப் படகுகள், வலைகள் ஆகியவைகளை மாற்றிக் கொடுத்தல், சீர்செய்து கொடுத்தல் மற்றும் நிலை உயர்த்துதல் ஆகியவற்றுக்கான முழுச் செலவையும் மானியமாக வழங்கும் வகையில் உதவித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளேன்.

எப்படியிருப்பினும், எந்தவொரு உதவித் தொகையாக இருந்தாலும் மாநில அரசாங்கம் புறக்கணிக்கப்படக்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை தலைமைச் செயலகத்தில் 27.1.2005 அன்று இந்தியாவிலுள்ள அமெரிக்க வர்த்தக சபையின் (ஆம்காம்–இந்தியா) தமிழகத் தலைவரும், ஃபோர்டு நிறுவன நிருவாக இயக்குநருமான டேவிட் ஃபிரைட்மேன் உள்பட 13 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத்தூதர் டாக்டர் ரிச்சர்ட் ஹெய்ன்ஸ் தலைமையில் சந்தித்துப் பேசினார்கள்.

கூடாது என்பது மிகவும் முற்றிலும் அவசியமானதாகும். இதுகுறித்து 30.1.2005 அன்று தங்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலும் வலியுறுத்தியுள்ளேன். மீனவர்களுக்கு வங்கிகள் கடன் வழங்கத் திட்டமிட்டால் கூட அதற்கான மானியம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசால் மட்டுமே பெறப்பட்டு அதன்பிறகு கடன் வழங்க விரும்பும் வங்கிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். இதுதான் மாநிலங்களில் மத்திய அரசால் அமல்படுத்தப்படும் பெரும்பாலான திட்டங்களுக்கு இருந்து வந்த நடைமுறையாகும்.

மீனவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களுக்கு மட்டும் தனியானதொரு நடைமுறை பின்பற்ற வேண்டிய அவசியம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. தனியானதொரு நடைமுறை பின்பற்றப்படுவதற்கான எந்த அவசியமும் இல்லை என்பதோடு, முழுத்தொகையும் மாநிலங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதை மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 உத்தரவு நிரூபிக்கிறது. தமிழக சட்டப்பேரவையில் இந்த விவரம் குறித்து தெளிவாக விளக்கியிருக்கிறேன்.

மத்திய அமைச்சரவைச் செயலரிடம் இருந்து வந்த அழைப்பின் பேரில், தமிழக அரசின் தலைமைச் செயலாளரும், அதிகாரிகள் குழுவும் டெல்லியில் 4.2.2005 அன்று அவரைச் சந்தித்துள்ளனர். மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 அன்றைய உத்தரவில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளபடி மானியத் தொகை முழுவதும் மாநில அரசிடம் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை நூறு சதவிகிதம் மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளதையும் மத்திய அமைச்சரவைச் செயலரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்துள்ளனர்.

மீனவர்களின் மறுவாழ்வுக்கான திட்டத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் இதுபோன்ற தேவையற்ற சர்ச்சைகள் வளர மத்திய அரசு அனுமதிப்பது ஏன் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மீனவர்களுக்காக வழங்கப்படும் முழுத்தொகையும், 31.1.2005ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மாநிலங்களால் அமல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை தனிப்பட்ட மீனவர் ஒருவர் வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்து அதைப் பெற்றால் அதற்கான மானியத்தை சம்பந்தப்பட்ட வங்கிக்கு கொடுக்கத் தேவையான ஏற்பாடுகளை மாநில அரசு செய்யும்.

எனவே, 31.1.2005ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மாநிலங்களுக்கே அனைத்து நிதியையும் வழங்குவதுதான் பொருத்தமானதாகும். எனவே, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மீனவர்களின் மறுவாழ்வுத் திட்டத்திற்கு அளிக்கப்படும் தொகை மாநிலங்களுக்கே முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்பதைத் தாங்கள் உறுதிசெய்ய வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ❖

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, புதிய கட்டுமரம், வலைகள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை 26.12.2004 அன்று சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடலோர கிராமங்களில் வசித்து வந்த மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டு மொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்த துயர நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் உடனடியாக தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்று, கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக மீனவர்களுக்கான தொகுப்பு உதவித் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார நிவாரணங்களுக்காக 65 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரணத் தொகை உதவித் திட்டம் ஒன்றை 28.12.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். மேலும், 396 கோடி ரூபாய் செலவில் கூடுதல் தொகுப்பு உதவிகளை வழங்கிட 29.1.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, பாதிக்கப்பட்ட மீனவர்கள் முழுமையாகச் சேதமடைந்த தங்களது மரத்திலான கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டு மரங்களையோ அல்லது கண்ணாடி இழையிலான கட்டுமரங்களையோ தங்களது விருப்பப்படி வாங்கிக்கொள்ள அரசு மானிய உதவி வழங்கும் என்றும், அதன் அடிப்படையில் புதிய மரக்கட்டுமரங்களை வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய் முழுமையும் அரசு மானியமாக வழங்கிடவும் அல்லது சேதமுற்ற மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக கண்ணாடி இழை கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு கண்ணாடி இழை கட்டுமரம், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவை வாங்க 35 சதவிகிதம் மானியம் வழங்கிடவும், இதற்கு அதிகபட்சமாக 52,500 ரூபாய் மானியம் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

முழுவதுமாகச் சேதமடைந்த தங்களது மரக்கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரம் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, மரக்கட்டுமரம் மற்றும் வலையின் விலையாக 32,000 ரூபாய் முழுமையும், அரசு மானியமாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டவாறு 2.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட திரு. பச்சை என்பவரது மகன் திரு. பாஸ்கர், திரு. சின்னப்பிள்ளை என்பவரது மகன் திரு. செல்வக்குமார், திரு. சின்னமாணிக்கம் என்பவரது மகன் திரு. தேவன், திரு. ஆறுமுகம் என்பவரது மகன் திரு. புலேந்திரன், திரு. ஏழுமலை என்பவரது மகன் திரு. நாகூரான் ஆகிய 5 மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புதிய கட்டுமரம் மற்றும் வலை வாங்குவதற்காக அதன் மொத்த விலையான 32,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்த மீனவர்கள் தங்களது வாழ்வு ஆதாரங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் வழங்கப்பட்ட முழு மானிய நிதி உதவிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன், கால்நடை மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் திரு. எ.விஷ்வநாத் ஷெகாவ்கார்,இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் திரு. எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப ஆகியோர் உடனிருந்தனர்.

☐ ☐ ☐

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுப் பணிகளுக்கான நிதி உதவி, மாநில அரசு மூலமாகத்தான் அளிக்கப்பட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 24.2.2005

26.12.2004 அன்று சுனாமி பேரலையின் கோரத் தாக்குதலால் விளைந்த துயரச் சம்பவங்களை அடுத்து, தமிழக அரசு, துரிதமாகச் செயல்பட்டு, மிகச் சிறப்பான முறையில் நிவாரணப் பணிகளையும், மறுவாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செவ்வனே செயல்படுத்தியதை அனைவரும் அறிவர். இந்த உயிர்க்கொல்லிப் பேரலை எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி, தமிழகக் கடலோரப் பகுதிகளைத் திடீரெனத் தாக்கி, அளப்பரிய நாசத்தையும், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்திய போதிலும் ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் ஒருங்கு திரட்டப்பட்டு அதிவேகத்தில் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நான் உறுதி செய்தேன். முதல் கட்ட நடவடிக்கையான, தேடுதல், மீட்பு, மீட்கப் பட்டவர்களை பத்திரமான இடங்களில் தங்க வைத்தல், சடலங்களை புதைத்தல் / எரித்தல், நிவாரண முகாம்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றி சாதனை படைக்கப்பட்டது. உடனடி நிவாரணம் அளிப்பதான இரண்டாம் கட்டப் பணிகளும் செவ்வனே நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், தமிழக அரசு மேற்கொண்ட நிவாரண மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன.

நாம் தற்போது நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்தில் உள்ளோம். இதனை முன்னிட்டே நான், 4.1.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் ஒரு விரிவான கோரிக்கை மனு அளிக்கப்படுவதை உறுதி செய்தேன். இந்தக் கோரிக்கை மனுவில், அனைத்து நிவாரண மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஏதுவாக, மாநில அரசுக்கு, 4,800 கோடி ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட வேண்டும் என மத்திய அரசிடம் கோரப்பட்டது. இச்செயற் குறிப்புகள் குறித்தும், குறிப்பாக, மீனவர்களுக்கான மறுவாழ்வு தொகுப்பு உதவி பற்றியும், 7.1.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடனான சந்திப்பிலும், பின்னர் அன்றே, மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடனான சந்திப்பிலும் விரிவாக விவாதிக்கப் பட்டது. மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் குறித்து நான் மீண்டும் 15.1.2005 அன்று மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சருடன் விவாதித்தேன். மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்காக, அவர்களுக்கு 100 சதவிகித மானிய உதவி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன். நிரந்தர மறுவாழ்வுப் பணிகளுக்கான நிதி உதவி, மாநில அரசிடம் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்தினேன்.

இயந்திரப் படகுகள் மற்றும் 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள சிறிய மீன்பிடிக் கலன்களை புதுப்பித்துக் கொள்ளவும், மீள வாங்கிக் கொள்ளவும், மானிய உதவி அளிப்பது உட்பட, மீனவர்களுக்கான நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக, தமிழ்நாடு அரசுக்கு, 356.54 கோடி ரூபாய் அனுமதித்து, மத்திய உள்துறை அமைச்சகம், 31.1.2005 அன்று விரிவான ஆணைகள் வெளியிட்ட போதிலும், மத்திய நிதியமைச்சர் இதற்கான நடைமுறைகளைத் திடீரென மாற்றி ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதாவது, இந்த இரண்டு வகை மீன்பிடிக் கலன்களுக்கான மானியத் தொகை மாநில அரசிடம் வழங்கப்படாமல்; நேரடியாக, பொதுத் துறை வங்கிகளிடம்

வழங்கப்படும் என்று அறிவித்தார். நான், உடனடியாக, மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்கு 100 சதவிகித மானியம் வழங்கப்பட வேண்டும் என்றும், அந்த மானியமும் மாநில அரசின் மூலமாகத் தான் அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி 4.2.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

இதனை அடுத்து, 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள சிறிய மீன்பிடி கலன்களுக்காக வழங்கப்படும் உதவித் தொகையில், மானியத்தின் அளவு 35 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்றும், அந்தத் தொகை, மாநில அரசு மூலமாக வழங்கப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதற்கிடையில் துரதிருஷ்டவசமாக, மீண்டும், மத்திய அரசு, சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்குப் பதிலாக வேறு படகுகள் வாங்கிக் கொள்வதற்கு அளிக்கப்படும் மானியத்தின் அளவு தொடர்ந்து 35 சதவிகிதமாகவே இருக்கும் என்றும், அந்த மானியமும் மாநில அரசு மூலமாக அல்லாமல் பொதுத் துறை வங்கிகள் மூலமாகவே வழங்கப்படும் என்றும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதனைக் கேள்வியுற்றதும் நான், உடனடியாக, மீண்டும் 17.2.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இதனை அவரது கவனத்துக்கு எடுத்துச் சென்றேன். இப்பிரச்சினை மேலும் நீடித்துக் கொண்டே செல்ல அனுமதிக்கக் கூடாது என்றும், 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள சிறிய மீன்பிடிக் கலன்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அதே நடைமுறை, இயந்திரப் படகுகளின் நேர்விலும் பின்பற்றப்பட வேண்டும் என்றும், இந்த நிதி உதவி மாநில அரசுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் நான் கேட்டுக் கொண்டுள்ளேன். இது தொடர்பாக, மத்திய அரசின் முடிவான கருத்து என்ன என்று இன்னமும் தெரியவில்லை.

இவ்வரசு முழு வீச்சில் நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், மத்திய அரசு அறிவித்த இந்த நடைமுறை மாற்றத்தால் நிரந்தர மறுவாழ்வுப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது துரதிருஷ்டவசமானது. மத்திய அரசு, 31.1.2005 அன்று நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தை அறிவித்து மூன்று வாரங்களுக்கு மேலாகி விட்டது. மீனவர்கள் இயன்ற விரைவில், மீண்டும் தங்களுடைய இயல்பான வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஏதுவாக, மறுவாழ்வுத் தொகுப்பு உதவிகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இப்பிரச்சினையில் மேலும் காலந்தாழ்த்தக்கூடாது. எனவே, 17.2.2005 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில், மாநில அரசுக்கு ஏற்படுகின்ற செலவை மத்திய அரசு ஈடு செய்யும் என்ற நம்பிக்கையுடன், இயந்திரப் படகு மீனவர்கள் உள்ளிட்ட அனைத்து வகை மீனவர்களுக்குமான நிரந்தர மறுவாழ்வு தொகுப்பு உதவித் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு செயல்படுத்துவது என நான் முடிவு செய்துள்ளேன்.

அதன்படி, தமிழக அரசு, மீனவர்களுக்கான திருத்தி அமைக்கப்பட்ட தொகுப்பு உதவித் திட்டத்தைச் செயல்படுத்தும். இத்திட்டத்தின்படி, சிறிய மீன்பிடி கலன்கள் மற்றும் இயந்திரப் படகுகளுக்காக பின்வரும் உதவிகள் வழங்கப்படும்.

★ உயர் அளவாக 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள, முற்றிலுமாகச் சேதமடைந்த கண்ணாடி இழை கட்டுமரம் மற்றும் வள்ளங்களுக்குப் பதிலாக மாற்றுக் கலன்கள் வாங்கிக் கொள்ள 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சம் 75,000 ரூபாய் ஆக இருக்கும்.

★ முழுமையாகச் சேதமடைந்த / இழந்துவிட்ட இயந்திரப் படகுகளுக்கு மாற்றாக புதிய இயந்திரப் படகுகளை வாங்கிக் கொள்ள மொத்த விலையில் 35 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் மானியம் படகு ஒன்றுக்கு அதிகபட்சம் 5 இலட்சம் ரூபாயாக இருக்கும்.

★ பழுதுபட்ட இயந்திரப் படகுகளைச் செப்பனிட, மதிப்பிடப்பட்ட சேதத்தில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். இயந்திரப் படகு ஒன்றுக்கு இவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சம் 3 இலட்சம் ரூபாயாக இருக்கும்.

★ பாதிக்கப்பட்ட மீனவர் ஒவ்வொருவருக்கும் நேரடியாக மானியத் தொகை வழங்கப்படுவது உறுதிப்படுத்தப் படும். வாழ்வாதாரங்கள் உடனடியாக வாங்கப்படுவதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்கள் விரும்பினால், பொதுத்துறை வங்கிகள் எஞ்சியத் தொகையைக் கடனாக வழங்குவதற்கு ஏதுவாக, அவர்களுடைய விண்ணப்பங்களை வங்கிகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறாக, அத்தகைய இனங்களில், மானியத் தொகை, வங்கிக் கடனோடு இணைந்ததாக இருக்கும்.

சுனாமி பேரழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள், தங்களின் நிரந்தர மறுவாழ்வுக்கு வழிகோலும் இந்த அறிவிப்பினைப் பெரிதும் வரவேற்பார்கள். இந்தத் தொகுப்பு உதவியையும் சேர்த்து, மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்காக இதுவரை மொத்தம் 550.27 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ❖

கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்திடும் எண்ணெய்ப்பனை சாகுபடி

வளமான நாட்டிற்கு வலிமையான வேளாண்மை தேவை. வேளாண்மையை மையமாகக் கொண்டுதான் ஒவ்வொரு நாடும் முன்னேற்றம் காண இயலும். தமிழ்நாட்டில் வேளாண்மையில் முக்கிய இடம் பெற்றிருப்பது நெல், வாழை, கரும்பு போன்ற பயிர்களாகும். ஆனால் அவ்வப்போது ஏற்படும் காலச் சூழ்நிலை, நீர் வளம், சமுதாயத் தேவையைப் பொறுத்து சாகுபடி முறைகளும் மாறுபடுகின்றன.



அந்த வகையில் காலச் சூழ்நிலையைப் பார்க்கும் போது, முன்பிருந்ததை விட தற்போது மழையின் அளவு குறைந்து விட்டது. இதனால் நிலத்தடி நீர் வளமும் குறைந்து விட்டது. எனவே நீர்வளம் குறையும்போது அதற்கேற்றவாறு பயிர்ச் சாகுபடி முறையிலும் நாம் மாற்றம் காண வேண்டும். சாகுபடியில் நாம் மாற்றம் காண முற்படும்போது நமது தேவையையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

தற்போது சமையல் எண்ணெய்ப் பற்றாக்குறை நம்மைச் சூழ்ந்துள்ளது. சமையலுக்காக நாம் காலம், காலமாகப் பயன்படுத்தி வருவது கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய். இது போன்றே சமீப காலமாக "பாமாயில்" என்கிற எண்ணெய் சமையலுக்குப் பயன்படுத்த அறிமுகப்படுத்தப்பட்டுத் தற்போது வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பனை மரத்தின் ஒரு வகையான எண்ணெய்ப் பனை மரத்திலிருந்து "பாமாயில்" உற்பத்தி செய்யப்படுகிறது.

எண்ணெய்ப் பனைக்கு நீர்வளம் அதிகம் தேவையில்லை. இது வறட்சிப் பகுதியிலும் பயிராகும் தன்மையுடையது. தற்போது தமிழ்நாட்டில் பரவலாக எண்ணெய்ப் பனை பயிரிடப்படுகிறது. இதற்கு அதிக முதலீடு தேவையில்லை.

போதிய மழையின்மையால் பாதித்த கிராமப் பகுதிகளில் வாழும் விவசாயிகள் பிழைப்பைத் தேடி நகரங்களை நாடுகிறார்கள். இதனால் கிராமப் பொருளாதாரம் ஓரளவு பாதிக்கப்படுகிறது. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், போதிய நிலத்தடி நீர் இன்மையால் வாடும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தவும், எண்ணெய்ப் பனை உற்பத்தியை அதிகப்படுத்த, விவசாயிகளைத் தமிழக அரசு ஊக்குவிக்கிறது.

பாமாயில் அதிகமாகப் புழக்கத்திற்கு வந்துவிட்ட படியால் இதன் தேவை அதிகமாகி விட்டது. ஆனால், உற்பத்தி குறைவாக உள்ளது. இந்த அதிகத் தேவையைச் சரிசெய்ய நாம் வெளிநாட்டிலிருந்து பாமாயில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கு மாற்றாக நாம் நம் நாட்டிலேயே எண்ணெய்ப் பனை உற்பத்தியை அதிகப்படுத்தினால் நம் கிராமப் பொருளாதாரமும் மேம்படும். விவசாயிகள் மகிழ்ச்சியுடனும், வளமுடனும் வாழலாம். இந்த உயரிய நோக்கில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்பவர்களுக்குச் சலுகைகள் அறிவித்துள்ளார்கள்.

அந்தச் சலுகைகள் பற்றிய விவரங்களையும், அதன் பயனையும் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்பவர்கள் அறிந்துகொள்ளும் வகையில், திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வை. பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்களும் கலந்து கொண்ட கருத்தரங்க நிகழ்ச்சி 9.12.2004 அன்று நடைபெற்றது.

கருத்தரங்கில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் தொழில்நுட்பக் கையேட்டை வெளியிட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் "இந்தியாவில் எண்ணெய்ப் பற்றாக்குறை உள்ளது. உணவுக்குப் பயன்படும் எண்ணெய் மற்றும் வாகனங்களுக்கு எரிபொருளுக்குப் பயன்படும் எண்ணெய்த் தேவையில் பாதியைக் கூட சுயமாக உற்பத்தி செய்யாததால் நமது பணம் அந்நிய நாட்டுக்குச் செல்கிறது" என்று தெரிவித்தார்.

மேலும், அவர் தொடர்ந்து, "வல்லரசு நாடுகளைப் போல் நாம் முன்னேற முடியவில்லை. எனவே, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த எண்ணெய்யை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டும்.

ஒரு மனிதனுக்கு ஒரு ஆண்டுக்குச் சராசரியாக 8 கிலோ உணவு எண்ணெய் தேவைப்படுகிறது. இதில் 4 கிலோ எண்ணெய்தான் நாம் உற்பத்தி செய்கிறோம். 103 கோடி மக்கள் தொகையின் பாதி தேவையைத்தான் நாம் உற்பத்தி செய்கிறோம்.

மீதி எண்ணெய்யை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். இந்த நிலை மாற வேண்டும். மற்றப் பயிர்களைவிட எண்ணெய்ப் பயிரில் கூடுதல் வருமானம் கிடைக்கிறது. இந்தியாவில் 8 இலட்சம் எக்டேரில் எண்ணைப் பனை பயிராகிறது. தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 344 எக்டேரில் எண்ணைப் பனை சாகுபடி செய்கிறோம்.

கிராமப்புறங்களில் விவசாய உற்பத்திப் பொருளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காததால் கிராம மக்கள் பெருமளவில் நகரங்களில் குடியேறி விட்டனர். இதைத் தடுக்க கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்த ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கவும், உற்பத்திப் பொருளுக்குக் கூடுதல் விலை கிடைக்கவும், எண்ணைப் பனை பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.23,000 வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மானியத் தொகை வழங்குகிறார்.

கூட்டுப் பண்ணைத் திட்டம் மூலம் எண்ணெய்ப் பனை வளர்ப்புக்கு உரிய அறிவிப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைவில் அறிவிக்க இருக்கிறார். மத்திய அரசு கடந்த ஆட்சியின்போது பாமாயில் இறக்குமதி வரியைக் குறைத்ததால் உள்நாட்டில் உற்பத்தியாளர்களுக்கும், கொள்முதல் நிலையங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

தற்போது உள்ள மத்திய அரசு பாமாயில் இறக்குமதி வரியை 75 சதவிகிதத்தில் இருந்து 150 சதவிகிதமாக உயர்த்தினால்தான் தமிழ்நாட்டில் எண்ணைப் பனை சாகுபடி செய்யும் விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்'' என்று தெரிவித்தார்.

மேலும், எண்ணைப் பனை உற்பத்தியில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே. பாண்டுரங்கன் அவர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

கருத்தரங்கில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி அவர்கள்,

"தமிழ்நாட்டில் எண்ணெய்ப் பனை உற்பத்தி 1993ஆம் ஆண்டே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்றாலும், 1996 – 2006 வரையிலான ஆட்சிக்காலத்தில் இத்திட்டம் உரிய கவனம் பெறவில்லை. அதனால் சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டது'', என்று தெரிவித்தார்.

கருத்தரங்கில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் தலைவர் திரு. மு. பரஞ்சோதி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஆர். சரோஜா, திருமதி. மல்லிகா சின்னசாமி, திரு.எஸ்.எம். பாலன், மற்றும் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. என். நெடுமாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

– ச. பாண்டியன்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
திருச்சிராப்பள்ளி

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை (28.1.2005)

கோடையிலும் சென்னைக்குத் தண்ணீர் கிடைத்திட புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம்

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகர் பல ஆண்டுகளாகச் சந்தித்து வருகின்ற ஒரு பெரும் பிரச்சினை, தண்ணீர்ப் பிரச்சினை ஆகும். சென்னை மாநகரத்தில் வசித்து வரும் ஏறத்தாழ 60 இலட்சம் மக்கள் குடிப்பதற்கும், சமைப்பதற்கும் மற்றும் பிற பயன்பாடுகளுக்குமாக தினசரி 840 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவை உள்ளது.

இந்த நீர்த் தேவையை நிறைவு செய்ய, சென்னை நகருக்கு நீர் வழங்கி வரும் பூண்டி, சோழவரம் மற்றும் புழல் ஏரிகளில் மழைக்காலங்களில் தேங்கும் நீர் போதுமானதாக இல்லை. மேலும் பருவமழை குறைவாகப் பெய்யும் ஆண்டுகளில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்தப் பற்றாக்குறையைப் போக்கிட நிறைவேற்றப்பட்ட தெலுங்கு கங்கைத் திட்டமும், கடந்த ஆண்டுகளில் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. தமிழ்நாடு ஆந்திர மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் 12 டி.எம்.சி. நீர் மாநில எல்லையில் கிடைக்க வேண்டும். ஆனால் அதிகபட்சமாக 2000–ஆம் ஆண்டில் 3.591 டி.எம்.சி நீர் மட்டுமே கிடைத்தது. 2003–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் நீர் எதுவும் கிடைக்கவில்லை. 2004–2005 ஆம் ஆண்டில் 2.055 டி.எம்.சி. நீர் மட்டுமே இதுவரை சென்னை நகருக்குக் கிடைத்துள்ளது.

எனவே, பல ஆண்டுகளாக சென்னை மாநகரைப் பாதித்துள்ள கடுமையான தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்க கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்று உணர்ந்து, 1991 ஆம் ஆண்டில் முதல் முறையாக நான் தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதுமே ஒரு புதிய நீர் ஆதாரத்தை உருவாக்க விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, அதன் நடைமுறைச் சாத்தியக் கூறுகளை நன்கு ஆராய்ந்து, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த 1993 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்ததுடன், இதை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கு உலக வங்கியின் ஒப்புதலையும் பெற்றேன். ஒப்பந்தங்கள் கோரிப் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட இருந்த நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக அடுத்து வந்த ஆட்சியினரால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

மீண்டும் கடந்த 2001–ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், சென்னை மாநகரை வாட்டி வரும் கடுமையான நீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் வகையில் நீர் ஆதாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டேன். அதன்படி 2003–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புதிய வீராணம் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தேன். மிகத் துரிதமாக இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. 2004ஆம் ஆண்டு மே மாதத்தில் பண்ருட்டி நிலத்தடி நீர்ப் படுகையில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தினசரி 90 மில்லியன் லிட்டர் வரை நீர் எடுக்கப்பட்டு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மற்றும் கட்டமைப்புகள் மூலமாக சென்னை நகருக்குக் கொண்டு வரப்பட்டு, கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை சமாளிக்கப்பட்டது. இவ்வாறு வீராணம் திட்டத்தின் மூலம் தண்ணீர் பெறப்பட்டிருக்கவில்லை என்றால் சென்னை

நகரை விட்டே மக்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார்கள்.

பின்னர் 2004 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் வீராணம் ஏரியில் நீர்வரத்து அதிகரித்து ஏரி நிரம்பிய நிலையில் கடந்த 13.10.2004 முதல் புதிய வீராணம் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தினசரி கிடைக்கும் 180 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் வரை பண்ருட்டி நிலத்தடி நீர்ப்படுகையில் இருந்து நீர் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறையவில்லை என்பதும், நீரின் தன்மை மாறவில்லை என்பதும் புள்ளி விவரங்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல கடந்த அக்டோபர் முதல் வீராணம் ஏரியில் இருந்து சென்னை நகருக்கு தினசரி 180 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்ட போதும், அப்பகுதி விவசாயிகளுக்கு எந்தவிதமானப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது.

கோடைக் காலங்களில் சென்னைக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் வீராணம் விரிவாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டது. பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள நிலத்தடி நீர்க் குழுமம், நீர் ஆராய்ச்சி நிலைய பொறியியல் வல்லுநர்கள், தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் சென்னைக் குடிநீர் வாரியம் ஆகியவற்றின் பொறியியல் வல்லுநர்கள் அடங்கிய குழு கொள்ளிடம் ஆற்றில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. கடந்த 50 ஆண்டுகளில் கொள்ளிடம் ஆற்றில் நீர் வரத்து, நீர் மட்டம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு தண்ணீரை எடுப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் எவ்வகையிலும் குறையாது என்பதை உறுதி செய்து தொழில் நுட்ப அறிக்கை வழங்கியது. அதன் அடிப்படையில் குறைவாக மழை பெய்யும் ஆண்டுகளிலும், கோடைக் காலத்திலும் புதிய வீராணம் திட்டத்திற்கான நீர் ஆதாரத்தினை மேலும் உறுதி செய்யும் வண்ணம் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கினேன்.

மேலும் கொள்ளிடம் ஆற்றின் இருபுறங்களிலும் அமைந்திருக்கும் விவசாய நிலங்களின் நீர்ப்படுகைகள், கொள்ளிடம் ஆற்றின் உட்பகுதி நீர்ப்படுகையை சார்ந்திருக்கவில்லை என்பதும் வல்லுநர் குழுவால் கண்டறியப்பட்டது. கொள்ளிடம் ஆற்றின் மேற்பரப்பிலும், ஆற்றின் அடிமட்டத்திலும் கிடைக்கப் பெறும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 2,360 மில்லியன் லிட்டர் எனவும், தொழில் நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு 150 மில்லியன் லிட்டர் நீரையும் சேர்த்து, மொத்தம் தினசரி 350 மில்லியன் லிட்டர் நீர் மட்டுமே இப்பகுதியிலிருந்து எடுக்கப்படும். இவ்வாறு 350 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுப்பதால் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் வற்றி விடும் என்பதற்கோ, அல்லது நீரின் தன்மை மாறி உப்பு நீர் ஆகிவிடும் என்ற அச்சத்திற்கோ எந்த வித அடிப்படை ஆதாரமும் இல்லை.

விவசாயிகளுக்கோ, விவசாய நிலங்களுக்கோ எந்தவிதப் பாதிப்பும் எதிர் காலத்திலும் நேராது என்று உறுதி செய்த பிறகே 14.12.2004 அன்று பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவில் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்திற்கு நான் அடிக்கல் நாட்டினேன். வீராணம் ஏரியில் போதுமான அளவு நீர் இருப்பு இல்லாத காலங்களில் மட்டுமே கொள்ளிடம் ஆற்றில் வீராணம் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள நீர் சேகரிப்புக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்படும் என்பதையும் இந்த நிலத்தடி நீரை எடுப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர் அளவு எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்பதை அந்த அரசு விழாவில் நான் தெளிவாக எடுத்துக் கூறினேன்.



ஆனால், "கரைக்கின்ற படி கரைத்தால் கல்லும் கரையும், அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதைப் போல, ஒரு சிலரது தூண்டுதலின் பேரில் பல வகையான தவறான பிரச்சாரங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, இப்பகுதி விவசாயிகளின் ஒரு பிரிவினரிடையே இத்திட்டம் பற்றிய அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தை முழுமையாக நீக்கும் வகையிலும், இத்திட்டம் குறித்த சரியான விவரங்கள் பொதுமக்களிடமும், விவசாயிகளிடமும் தெளிவாக எடுத்துக் கூறும் வகையிலும், கடந்த டிசம்பர் மாதம் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் இப்பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன். இவர்கள் இக்கிராமங்களிலுள்ள விவசாயிகளை நேரில் சந்தித்து புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை விளக்கினார்கள். அதே நேரத்தில், இதன் மூலம் சென்னைக் குடிநீர்த் தேவையை ஓரளவுக்கு நிறைவு செய்ய முடியும் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். அப்போது இப்பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள் தங்களது ஒரு சில கோரிக்கைகளை எனது கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு அக்கோரிக்கைகளை அமைச்சர்களிடம் வழங்கி உள்ளனர். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் தங்களது அச்சம் விலக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். விவசாயிகளின் இந்தக் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து விரிவாகவும், விளக்கமாகவும் நான் ஆய்வு மேற்கொண்டேன். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நான் ஆணைகள் பிறப்பித்துள்ளேன்.

1. கல்லணைக்குக் கீழே 42ஆவது மைல் (ஏலக்குறிச்சி) 54/4ஆவது மைல் (அறங்கோட்டை) மற்றும் 60ஆவது மைல் (வாழக்குறிச்சி) ஆகிய மூன்று இடங்களில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ஒவ்வொன்றும் சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று தடுப்பணைகள் உடனடியாகக் கட்டப்படும். மொத்தம் 75 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள இந்த மூன்று தடுப்பணைகளிலும் தேக்கப்படுகின்ற மழை நீரின் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் பாதுகாக்கப்படும் என்பதுடன், நிலத்தடி நீர் மட்டம் உயரவும் வாய்ப்பாக அமையும். இதனால் விவசாயிகளின் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் மட்டம் உயர வாய்ப்பு ஏற்படுத்தப் படுகிறது. இது தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பணிகளை விரைந்து நிறைவேற்றும்படி பொதுப்பணித்துறை உயர் அலுவலர்களுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.
2. காவிரி டெல்டா பகுதியில் தற்போது முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மின்சார மோட்டார்கள் மூலமாக நிலத்தடி நீர் எடுத்து விவசாயம் செய்வதால் விவசாயத்திற்கான செலவு குறையும் என்பதால், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாறு மற்றும் பாபநாசம் ஆகிய காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள நடைமுறையைப் பின்பற்றி, பெரம்பலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனம் பெறும் டி.பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதன் அடிப்படையில், 31.12.2004 வரை மின் இணைப்புக் கோரி பதியப்பட்டு நிலுவையிலுள்ள 4,886 விண்ணப்பங்களும் உடனடியாக தமிழ்நாடு மின் வாரியத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்புகள் உடனடியாக வழங்கப்படும்.
3. ஆற்றில் மணலின் ஆழம் அதிகமாக இருந்தால் அப்பகுதியில் அதிகமாக நீர் தேக்கி வைக்க இயலும். கொள்ளிடம் ஆற்றில் தற்போது மணல் எடுக்கப்படுவதால், அந்த ஆற்றின் உட்பரப்பில் தேங்கக்கூடிய நீரின் அளவு குறைந்து விடும் என்ற அச்சம் இப்பகுதி விவசாயிகளிடையே உள்ளது. இந்த அச்சத்தைப் போக்கும் விதமாக, கல்லணைக்கும் கீழணைக்கு இடைப்பட்ட ஆற்றுப் பகுதியில் மணல் எடுப்பது முற்றிலுமாக உடனடியாக நிறுத்தப்படும்.

இப்பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன்கள் எக்காலத்திலும் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இப்பணிகளை உடனடியாக நிறைவேற்றிட நான் ஆணையிட்டுள்ளேன். எனவே, இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வகையான தவறான வழிகாட்டுதலுக்கும் ஆட்பட்டுவிடாமல் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்திட முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* * *

பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் (+1 மற்றும் +2) பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன், தமிழ்நாட்டில் உள்ள மாணவியர் கல்வி கற்க ஊக்கம் அளிக்கும் வகையில், இந்தியா விலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக, மேல்நிலைக் கல்வி அதாவது, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை 2001ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.9.2001 அன்று தொடங்கி வைக்கப்பட்ட இந்த இல்வச சைக்கிள் வழங்கும் திட்டம், மாணவிகள் தங்களது பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கம் அளிப்பதுடன், சமுதாயத்தில் சுதந்திர மாகவும், தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தருவதால், இதனை மேலும் விரிவுபடுத்தி தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்துப் பள்ளிகளிலும், மேல்நிலைக் கல்வி அதாவது 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

சென்னை கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, சைதாப் பேட்டை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலுகின்ற எம். அனீஷாபானு, எம். சுசீலா, ஜி. அனிதா, கே.சி.எஸ். சங்கரலிங்க நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஏ. பல்கீஸ் பேகம், முருக தனுஷ்கோடி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் வி.சுதா, ஜெய்கோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் என். தங்கமலர் ஆகிய மாணவிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இலவச சைக்கிள்களை வழங்கி இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதே நிகழ்ச்சியில் சென்னையின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மேல்நிலைக் கல்வி பயிலும் மேலும் 120 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின்படி தமிழகத்திலுள்ள 2,254 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த 2,49,750 மாணவிகள் பயன்பெறுவார்கள். இதற்கான மொத்தச் செலவினம் 44 கோடியே 76 இலட்சம் ரூபாய் ஆகும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம.வேலுசாமி, தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என்.நாராயணன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு.ஏ. நாகராஜன் இ.ஆ.ப., மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் திரு. என்.பி. குப்தா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் திரு.ஈ. தசரதன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். □

சுனாமிப் பேரழிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.137 கோடியில் புதிய தொகுப்பு உதவித் திட்டம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 3.1.2005 அன்று சட்டப்பேரவையில் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களின் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டு மொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்தனர்.

சுனாமியால் வீடுகள் மற்றும் உடைமைகள் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், சமைப்பதற்குத் தேவையான பருப்பு, எண்ணெய் முதலான பொருட்கள் வாங்க 1,000 ரூபாய், பாத்திரங்கள், அடுப்பு முதலியன வாங்குவதற்கு 1,000 ரூபாய் மற்றும் தற்காலிகக் குடிசைகள் அமைப்பதற்காக 2,000 ரூபாய் ஆக மொத்தம் 5,000 ரூபாய் மதிப்பில் உடனடி நிவாரண உதவித் தொகுப்பை வழங்கிட நான் 28.12.2004 அன்று ஆணையிட்டேன்.

சுனாமியால் வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சிறு வியாபாரிகள் மற்றும் கடல்சார் தொழில்களை நம்பி இருந்த, சுமார் 1.5 இலட்சம் குடும்பங்களுக்கும் ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், மளிகைச் சாமான்கள், பாத்திரங்கள் முதலியவற்றை வாங்க 2,000 ரூபாய், ஆக 3,000 ரூபாய் மதிப்பிலான உடனடி நிவாரண உதவித் தொகுப்பை வழங்கிட நான் 31.12.2004 அன்று ஆணையிட்டேன். இந்த இரண்டு தொகுப்பு உதவித் திட்டங்களுக்காக 120 கோடி ரூபாய் செலவிட ஆணையிட்டேன்.

சுனாமியால் வாழ்வு ஆதாரங்களை முற்றிலுமாக இழந்த மீனவர்களின் துயர நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்று கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக, 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட 28.12.2004 அன்றே நான் ஆணையிட்டேன்.

மீனவர்கள், சேதமடைந்த தங்களது கட்டு மரங்களையும், வள்ளங்களையும், விசைப் படகுகளையும் பழுது பார்க்கவும் புதிய படகுகள் வாங்குவதற்கும் மற்றும் சுனாமியால் வாழ்வாதாரங்களை இழந்த இதர குடும்பங்கள், தங்களது தொழிலை முழுவதுமாகத் தொடங்குவதற்கும் ஏறத்தாழ இன்னும் மூன்று மாதங்கள் ஆகும்.

எனவே, அதுவரை இக்குடும்பங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திட தக்க உதவிகள் வழங்க வேண்டியது அவசியமாகும். ஆகவே, சுனாமியால் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் உடனடி நிவாரண உதவித் தொகுப்பினைப் பெற்ற சுமார் மூன்று இலட்சம் குடும்பங்களுக்கும் மேலும் ஒரு நிவாரண உதவித் தொகுப்பை வழங்க நான் முடிவெடுத்துள்ளேன். **இந்த தொகுப்பு உதவித் திட்டத்தின்படி மேற்குறிப்பிட்ட சுமார் மூன்று இலட்சம் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி; மற்றும் 350 ரூபாய் மதிப்புள்ள, 3 லிட்டர் மண்ணெண்ணெய், பாமாயில், துவரம் பருப்பு, மஞ்சள் பொடி, புளி, மிளகாய் வத்தல், சாம்பார் பொடி, அயோடின் கலந்த உப்பு, சர்க்கரை, தேயிலைத் தூள் ஆகிய பொருட்களும்; 1,000 ரூபாய்**

ரொக்க உதவியும், மேலும் மூன்று மாதங்களுக்கு வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1,526 ரூபாய் மதிப்புள்ள இந்தத் தொகுப்பு உதவி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும். இந்த உதவித் திட்டம் சுமார் 137 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

சென்ற மாதம் இந்த அரசு வழங்கிய நிவாரண உதவித் தொகுப்பைப் பெற்ற ஒரு சில குடும்பத் தலைவர்கள் அந்த உதவிகளைத் தங்களது இல்லங்களுக்கு முழுமையாகக் கொண்டு போய் சேர்க்கவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இத்தகைய உதவித் தொகுப்பை அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்களிடம் நேரடியாக வழங்கினால் இது போன்ற புகார்கள் அறவே எழாது என்று நான் கருதுகிறேன். எனவே, தற்போது வழங்கப்படும் நிவாரணத் தொகுப்பு உதவிகளை சம்பந்தப்பட்ட குடும்பங்களின் இல்லத் தலைவிகளிடம் நேரடியாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி அந்தந்தக் குடும்பத் தலைவரின் மனைவி அல்லது தாய் அல்லது அவரது மூத்த மகளிடம் இந்த உதவிகள் வழங்கப்படும்.

தற்போது வழங்கப்படும் இந்த நிவாரண உதவிகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலமாக அந்தந்த கிராமங்களில்/வார்டுகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைக்கப்பட்டுள்ள சுனாமி நிவாரண ஆலோசனைக் குழுக்களின் முன்னிலையில் வழங்கப்படும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், பொதுச் சொத்துக்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை சீர்ப்படுத்தவும், 4,800 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கும்படியும்; கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர், தூண்டில் வளைவுகள் ஆகியவை கட்டுவதற்காக மேலும் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு அளிக்கவும் மத்திய அரசை நான் கோரியிருந்தேன். இதில் மீனவர்கள் மறுவாழ்வுக்கும், மீன்பிடித் துறைமுகங்களை மீளக் கட்டுவது போன்ற உள்கட்டமைப்புக்காகவும், மத்திய அரசிடம் கோரப்பட்ட மொத்தத் தொகை 1,030.93 கோடி ரூபாய் ஆகும். இத் தொகையில் மீனவர் மறுவாழ்விற்காக மட்டும் கோரப்பட்ட மானியத் தொகை 907.53 கோடி ரூபாய் ஆகும்.

19.1.2005 அன்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற பின் மத்திய நிதி அமைச்சர் மற்றும் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் அளித்த பத்திரிகைப் பேட்டியில் மத்திய அரசால் மீனவர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு உதவி பற்றி தெரிவித்தார்கள். எனினும் மத்திய அரசிடமிருந்து அது பற்றிய அதிகாரபூர்வமான ஆணைகள், 29.1.2005 அன்று வரை பெறப்படாத நிலையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தேவையான, வாழ்வாதாரத் தொகுப்பு உதவிகள் வழங்குவதில் மேலும் தாமதம் ஏற்படுவது, மிக விரைவாக நடைபெற்று வரும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு ஒரு பின்னடைவாக அமைந்துவிடும் என்பதால், 19.1.2005 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட மாநிலங்களுக்கான நிதி உதவி குறித்த தகவலின் அடிப்படையில், மீன்பிடிக் கலன்களை புதிதாக வாங்கிக் கொள்வது உள்ளிட்ட மீனவர்களின் வாழ்வாதார நிவாரணங்களுக்காக 396 கோடி ரூபாய் அளவுக்கு கூடுதல் தொகுப்பு உதவித் திட்டத்தை நான் 29.1.2005 அன்று அறிவித்தேன்.

இந்நிலையில், 29.1.2005 அன்று மத்திய நிதியமைச்சர் அவர்கள் பொதுத்துறை வணிக வங்கிகளுக்கு ஒரு ஆணை பிறப்பித்துள்ளதாக பத்திரிகை செய்தி வெளியானது. இதில் மீனவர்களுக்கு சிறு படகுகள், விசைப் படகுகள் புதிதாக வாங்குவதற்கும், விசைப் படகுகள் பழுது பார்ப்பதற்கும், மானியத் தொகை மற்றும் கடன், பொதுத் துறை வணிக வங்கிகள் வாயிலாக மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இது மாநில அரசை புறக்கணித்து விட்டு செயல்படுத்தும் திட்டமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்தில், மாநில அரசின் தலைமைச் செயலர், நிவாரண ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், மீனவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று பொதுத் துறை வணிக வங்கிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நேரடியான ஆணையும் வெளியிடப்பட்டிருந்தது. மாநில அரசு என்ற ஒன்று இருப்பதாகவே கருதாமல் அது அறவே புறக்கணிக்கப்படும் வகையில் உள்ள இச்செயல் சரியான அணுகுமுறையாக அமையாது என்று 30.1.2005 அன்றே விளக்கமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் மூலமாக எடுத்துரைத்தேன்.

தற்போது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத் திலிருந்து சுனாமி நிவாரண உதவிகள் பற்றிய தெளிவான அரசாணை 31.1.2005ஆம் நாளிட்டு வெளியிடப்பட்டுள்ளது. 29.1.2005 அன்று மத்திய நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை யிலிருந்து 31.1.2005 நாளிட்ட ஆணை மாறுபட்டுள்ளது. அதாவது, மத்திய நிதி அமைச்சர் மீனவர்களுக்கு வழங்கக்கூடிய படகுகளுக்கான மானிய உதவி, பொதுத் துறை வங்கிகள் வாயிலாகத்தான் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், அதற்கு நேர் மாறாக, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 30.1.2005 அன்று எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி இந்த மானியத் தொகை மாநில அரசு வாயிலாகத்தான் வழங்கப்படும் என்று 31.1.2005 நாளிட்ட ஆணையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மீனவர் வாழ்வாதாரங்களுக்கு 356.54 கோடி ரூபாய் மானிய உதவியாக வழங்கும் என்றும் இது மாநில அரசுக்கு வழங்கப்படும் என்றும் அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, நான் எடுத்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசிற்கு உரிய அதிகாரம் மற்றும் பொறுப்புகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், முழுவதுமாகச் சேதமடைந்த மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய் முழுவதும் மானியமாக வழங்கப்படும் திட்டத்தை நான் நேற்று அதாவது – 2.2.2005 அன்று துவக்கி வைத்தேன். அடுத்த கட்டமாக, முழுவதுமாகச் சேதமடைந்த விசைப் படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப்படகுகள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, அதிகபட்ச மானியத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தை நாளை, அதாவது – 4.2.2005 அன்று நான் தொடங்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைப்படகுகள் பழுது நீக்கம் செய்வதற்கும், கண்ணாடி இழைக் கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகுகள் ஆகியவற்றைப் புதிதாக வாங்குவதற்கும் மானியம் போக எஞ்சியுள்ள தொகை வங்கிகள் மூலம் கடனாகப் பெறப்பட வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு முழு மானியத் தொகை எதிர்பார்த்த மீனவர்களுக்கு முழு திருப்தி அளிக்கவில்லை. மீனவர்களின் மீன்பிடிக் கலன்களுக்கும், அவர்களது வீடுகளுக்கும் ஏற்பட்டுள்ள பெரும் இழப்பைக் கருத்தில் கொண்டு, எவ்வித கடனோடும் இணைக்காமல் முழுத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று நான் மத்திய அரசிடம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறேன். மத்தியக் குழுவிடமும் இது குறித்து நான் வலியுறுத்தினேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்த போதும், மத்திய உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்த போதும், தொடர்ந்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சருடன் கலந்து ஆலோசித்த போதும், மீண்டும் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சரோடு நடந்த கூட்டத்தின் போதும், மீனவர்களுக்கு முழு மானியத்துடன் மறுவாழ்வுத் தொகுப்பு உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தினேன். தற்போது 31.1.2005 நாளிட்ட மத்திய அரசின் ஆணையில் மானியம் மற்றும் கடனுடன் தான் மீனவர்களுக்கான மறுவாழ்வு நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

மீனவர்கள், தங்களது வாழ்வாதாரங்களை முழுவதுமாகத் திரும்பப் பெறத் தேவையான மொத்தத் தொகை 923.01 கோடி ரூபாய் என கணக்கிடப் பட்டுள்ளது. இதில் மத்திய அரசு 356.54 கோடி ரூபாய் மானியமாக தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அதாவது – National Calamity Contingency Fund-லிருந்து வழங்கும் என்று தெரிவித்துள்ளது. மாநில அளவிலான பேரிடர் நிவாரண நிதி, அதாவது, Calamity Relief Fund, முழுவதும் செலவிடப்பட்டுவிட்ட நிலையில் தான் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்த நிவாரணத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். இது போன்ற அசாதாரண பேரிடருக்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தான் நிதி உதவி வழங்கப்பட வேண்டும். எனவே பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதற்கான முழுச் செலவையும் மானியமாக வழங்க வேண்டும் என்று மத்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். □

செஞ்சிலுவைச் சங்கம்

RED CROSS SOCIETY

செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணமாக இருந்தவர் சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த 'ஹென்றி டுனான்ட்' (Henry Dunant) என்பவர் ஆவார். 1859இல் பிரான்ஸுக்கும் ஆஸ்திரியாவுக்குமிடையே நடந்த போரில் மருத்துவ உதவியின்றி உயிரிழந்த வீரர்களின் நிலையைக் கண்டு இவர் வருந்தினார். துணைக்குச் சிலரை அழைத்துக் கொண்டு சாகும் நிலையிலிருந்த பல வீரர்களுக்கு, மருந்து கொடுத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றினார். இந்நிகழ்ச்சியை விவரித்து இவர் எழுதிய ஒரு நூல், செஞ்சிலுவைச் சங்கத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது.

ஹென்றி டுனான்ட்டின் திட்டத்தைச் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் ஏற்றுக்கொண்டு 1864இல் ஒரு பன்னாட்டு மாநாட்டைக் கூட்டியது. இம்மாநாட்டில்தான் செஞ்சிலுவைச் சங்கம் அமைக்க முடிவு எடுக்கப்பட்டது. இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளன. இந்திய செஞ்சிலுவைச் சங்கம் 1920ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பன்னாட்டுச் சங்கத்தின் தலைமைச் செயலகம் சுவிட்ஸர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் உள்ளது. உலகெங்கும் இதன் கிளைகள் இருக்கின்றன. இச்சங்கத்தின் கொடியில் வெள்ளைப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை பொறிக்கப்பட்டிருக்கும். அதனால் இது செஞ்சிலுவைச் சங்கம் என அழைக்கப்படுகிறது. முஸ்லிம் நாடுகள் சிலவற்றில் சிலுவைக்குப் பதிலாகப் பிறை சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் இவை செவ்விளம்பிறைச் சங்கம் (Red Crescent Society) என்ற பெயரில் இயங்குகின்றன. போரில் கைதிகளாகப் பிடிபட்ட வீரர்களின் நலனையும் இது பாதுகாக்கிறது. போர் இல்லாத காலத்தில் இது பொதுமக்களின் சுகாதாரத்தைக் கவனித்து, மருத்துவ வசதிகளை அளிக்கிறது. புயல், வெள்ளம், பூகம்பம் போன்றவை நிகழும் போது இது மக்களுக்குத் தொண்டாற்றுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விசைப்படகுகள் வாங்க மானிய உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்

தமிழ்நாட்டின் 26.12.2004 அன்று கடலோர மாவட்டங்களை சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடலோரக் கிராமங்களில் வசித்து வந்த மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுத் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டுமொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்த துயர நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்று கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக மீனவர்களுக்கான தொகுப்பு உதவித் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார நிவாரணங் களுக்காக 65 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரணத் தொகை உதவித் திட்டம் ஒன்றை 28.12.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். மேலும் 396 கோடி ரூபாய் செலவில் கூடுதல் தொகுப்பு உதவிகளை வழங்கிட 29.1.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி பாதிக்கப்பட்ட மீனவர்கள் முழுமையாகச் சேதம் அடைந்த தங்களது விசைப் படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப் படகுகளை வாங்க விரும்பினால் அதற்கு அரசு மானிய உதவி வழங்கும் என்றும், விசைப்படகின் மொத்த விலையில் 35 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும் என்றும், இவ்வாறு வழங்கப்படும் மானியத் தொகை அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாயாக இருக்கும் எனவும் தெரிவித்திருந்தார்கள். மேலும் பகுதி சேதம் அடைந்த விசைப் படகுகளைச் சீரமைக்க அதன் சேத மதிப்பீட்டில் 60 சதவிகித மானிய உதவி வழங்கப்படும் எனவும், அதிகபட்ச மானிய அளவு 3 இலட்சம் ரூபாயாக இருக்கும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித் திருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 4.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சுனாமியால் பாதிக்கப் பட்ட விசைப்படகு மீனவர்களான கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ராமச்சந்திரன், ஜி.சங்கர், எம்.ஏ. காஜா மொய்னுதீன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கே. விஜயன், வி. அந்தோணி பிள்ளை ஆகிய 5 மீனவர்களுக்கும் முழுமையாகச் சேதமடைந்த தங்களது விசைப்படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப்படகுகள் வாங்குவதற்கு ஒவ்வொருவருக்கும் அதிகபட்ச மானியமாக 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்த மீனவர்கள் தங்களது வாழ்வாதாரங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் வழங்கப்பட்ட மானிய உதவி நிதிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன் மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் திரு. எஸ்.கே. பிரபாகர் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

□ □ □

ஒவ்வொரு நாளும் தமிழக முன்னேற்றம் ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை

சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் பதிலுரை

7.2.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைக்கின்ற சாதனைகளைக் கடந்த ஆண்டில் தமிழக அரசு படைத்திருக்கிறது.

குறுகிய காலத்தில் எத்தனை எத்தனை சாதனைகளைப் படைக்க முடியும் என்பதற்கு நாட்டுக்கு நாம் நல்லதொரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறோம்.

எந்தச் சாதனையும் எளிதாக நிறைவேற்றப் படவில்லை. அவ்வாறு நிறைவேற்ற மற்றவர்கள் விடவும் இல்லை. அளவிலாத பொறுமை, ஓய்விலாத உழைப்பு, முடிவிலாத முயற்சி – இந்த மூன்றால், முடிக்க முடியாது என்று பிறர் முடிவு செய்தவற்றை, நாம் முடித்துக் காட்டியிருக்கிறோம்.

எதிர்ப்புகளே நமக்கு ஊக்கம் அளித்திருக்கின்றன. ஏளனங்களே நமக்கு உரம் ஊட்டியிருக்கின்றன. ஏகடியங்களே நமக்கு வலிமை அளித்திருக்கின்றன.

நாம் அயரவில்லை; அயர மாட்டோம். 'எதையும் தாங்கும் இதயம்' என்று பேரறிஞர் அண்ணா சொன்னாரே அந்த இதயம் நமக்கே உண்டு. இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் நாம் தாண்டினோம். 2004–ஆம் ஆண்டு ஒரு விசித்திரமான ஆண்டு!

பல வெற்றிகளைத் தந்த இந்த ஆண்டு விடை பெறும் நேரத்தில் நம்மைச் சோகத்திலும் ஆழ்த்தியது! சுனாமி ஆழிப் பேரலைகளின் ஊழித் தாண்டவத்தால் ஏற்பட்ட இழப்புகள் எத்தனை! எத்தனை!

எத்தனை இழப்புகளையும் ஈடு செய்யலாம்; எத்தனை அழிபாடுகளையும் மறு நிர்மாணம் செய்து கொள்ளலாம்!

ஆனால் அன்பிற்கினிய நமது மக்களை இழந்தோமே – அந்த இழப்பை எப்படி ஈடு செய்வது? மறக்க முடியுமா, அந்த மாபெரும் அழிவை ?

கடலோரத் தமிழகத்தைச் சுனாமி சின்னாபின்னம் ஆக்கியது ஒரு பக்கம்!

எந்தப் பக்கமும் நகர முடியாதபடி, ஆக்கப் பணிகளில் அக்கறை இல்லாத அடாவடித்தனங்களின் தடை ஒரு பக்கம்!

இவற்றுக்கு நடுவே நாம் படைத்த சாதனைகள், இதயம் இருப்போரால் பாராட்டப்படுகின்றன. ஆனாலும் கூட, இன்னும் சில பேரால் இவற்றை ஒப்புக் கொள்ள முடியவில்லை.

நல்லதை நடக்க விடாமல் தடுக்க முயன்றோர் –

நன்மையைத் தீமை என்று தலைகீழாகப் பார்த்துத் தர்க்கம் செய்தோர் –

நாளொரு பொய்யும் பொழுதொரு புளுகும் ஆக அவதூறு பரப்பியோர் –

இவர்களை எல்லாம் தாண்டித்தான் நாம் சாதனை படைத்தோம் என்பதை நாடறியும்; நல்லவர்கள் அறிவார்கள்!

இந்தியாவின் அமைதிப் பூங்கா எது ? தமிழகம் தானே! இது எல்லோரும் அறிந்தது! ஆனால், அமைதியை அராஜகம் என்று அர்த்தப்படுத்திக் கொள்கிற அரசியல் தலைவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எதற்காகப் போராடுகிறோம் என்பதே தெரியாமல் போராட்டத்துக்காகவே போராட்டம் நடத்துகிற பொறுப்பற்ற மனிதர்களுக்கும் தமிழகத்தில் பஞ்சமில்லை.

இந்த இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் தாண்டிய வளர்ச்சி வரலாறே இந்த ஆட்சியின் வரலாறு என்பதை இந்தப் பேரவையில் கூறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

எனக்கும் எனது அரசுக்கும் ஒரே குறிக்கோள் – அது தமிழக முன்னேற்றம்!

'இந்தியாவில் முதன் மாநிலமாகத் தமிழகத்தை ஆக்குவோம்' என்பது உணர்ச்சி முழக்கம் அன்று – கண்ணெதிரே உருவாகி வரும் சரித்திரம்!

இதைக் காண முடியாதவர்களுக்காக நான் இரக்கப்படுகிறேன். காணமாட்டேன் என்று அடம் பிடிப்போர்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன்.

கோடானு கோடி மக்களின் நம்பிக்கைக்கு உரியது இந்த அரசு. அந்த நம்பிக்கை தருகிற சக்திதான் எங்களது அசைக்க முடியாத வலிமை என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

சுனாமி நிவாரணப் பணிகள்

26.12.2004 அன்று தமிழகம் இதுவரை சந்தித்திராத சுனாமிப் பேரலைகள் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களைத் தாக்கியதில் ஏறத்தாழ 8,000 பேர் தங்களது இன்னுயிரை இழந்ததுடன் லட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் மற்றும் தங்களது வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்து விட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் இந்த இயற்கைச் சீற்றத்திலிருந்து மீண்டு தங்கள் இயல்பு வாழ்க்கையை மீண்டும் அடைய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மூன்று கட்டங்களாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது முதல் இரண்டு கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைப் போலவே சுனாமியால் பாதிக்கப்பட்ட பிற நாடுகளிலும், பிற மாநிலங்களிலும் முதற் கட்டப்பணிகள் முடிக்கப்படாமல், அவை போராடிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இவை முடிக்கப்பட்டு, உடனடி நிவாரண உதவி வழங்கும் இரண்டாம் கட்டப் பணிகளை 30.12.2004 அன்றே நாம் தொடங்கி விட்டோம்.

சுனாமிப் பேரலைகளின் தாக்குதலுக்கு இலக்கான மக்கள் இயல்பு வாழ்க்கையை அடைவதற்குத் தேவையான பல்வேறு உதவித் தொகுப்புகளை நான் தொடர்ந்து வழங்கி உள்ளேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாகப் பல்வேறு உதவித் தொகுப்புகளின் கீழ்

இதுவரை மொத்தம் 398.37 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வு ஆதாரங்களை மீண்டும் பெற்றிடும் வகையில் 461 கோடி ரூபாய் மதிப்பிலான உதவித் தொகுப்பை வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

தற்போது, நாம் மேற்கொள்ள வேண்டிய மிகப் பெரும் பணி சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களும் மற்றும் ஏனையோரும் அவர்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்யும் மூன்றாம் கட்டப் பணிகளாகும். இதன்படி, அவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தர வேண்டும்; வாழ்வு ஆதாரங்களை அவர்கள் திரும்பப் பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசுடன் அனைத்துத் தரப்பினரும், அரசு சாரா அமைப்புகளும் இணைந்து இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

மீனவர்கள் தங்கள் வாழ்வு ஆதாரங்களைத் திரும்பப் பெற்றிட மானியம் மற்றும் கடனுடன் இணைந்த நிவாரண உதவி வழங்கப்படுவது மீனவர்கள் மனதில் முழு திருப்தியை ஏற்படுத்தவில்லை. ஆகவே மீனவர்களுக்கான வாழ்வு ஆதார உதவிகளை 100 சதவீதம் முழு மானியத்துடன் வழங்க வேண்டும் என்று நான் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

நான் 4.2.2005 அன்று இந்த அவையில் மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தின் 31.1.2005–ஆம் தேதியிட்ட ஆணை 30.1.2005 அன்று நான் பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு ஒரு பதிலாக அமைந்துள்ளது என்றும் இந்த ஆணையில் மீனவர்கள் மறுவாழ்விற்காக வழங்கப்பட்டுள்ள மொத்த மானியத் தொகையும் மாநில அரசுக்கே வழங்கப்படும் என்று குறிப்பிட்டு இருந்ததையும் தெரிவித்தேன்.

30.1.2005 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்குப் பாரதப் பிரதமரின் 31.1.2005 தேதியிட்ட பதில் கடிதம் 4.2.2005 அன்று மாலை தான் அஞ்சல் தபால் மூலம் எனக்குக் கிடைக்கப் பெற்றது. அந்தக் கடிதத்தில், 31.1.2005 தேதியிட்ட உள் துறை அமைச்சகத்தின் ஆணைக்கு நேர்மாறான ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, கடன் மற்றும் மானியம் வழங்கப்படும் இனங்களில் அவை வங்கிகள் மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்திற்கு நான் 4.2.2005 அன்றே பதில் எழுதியுள்ளேன். இதில் நான் இந்த மாமன்றத்தில் 3.2.2005 மற்றும் 4.2.2005 அன்று தெரிவித்துள்ள அனைத்துக் கருத்துக்களையும் எடுத்துக் கூறி சுனாமி நிவாரணப் பணிகளை முழு வீச்சுடன் செயல்படுத்த வேண்டிய இத்தருணத்தில் தேவையில்லாமல் இப்பிரச்சனை சர்ச்சையாக ஏன் வளர்க்கப்படுகிறது என்பது புரியவில்லை என்றும்; மத்திய உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 தேதியிட்ட ஆணையின்படி மாநில அரசுக்குத் தான் மொத்த மானியத் தொகையும் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். மேலும், இந்தக் கடிதத்தில் 4.2.2005 அன்று மத்திய அமைச்சரவைச் செயலாளர் விடுத்த அழைப்பின் பேரில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் இதர அலுவலர்கள் டெல்லியில் கலந்து கொண்ட கூட்டத்தில் மீனவர்களுக்கு வழங்கும் உதவித் தொகை முழு மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று

வலியுறுத்தியதோடு, மொத்த மானியத் தொகையும் மைய அரசின் ஆணைப்படி மாநில அரசுக்கே வழங்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினர்.

எங்கள் கோரிக்கை, மீனவர்களுக்கு வழங்கக் கூடிய உதவித் தொகை முழு மானியமாக இருக்க வேண்டும் என்பதும் வழங்கக் கூடிய மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். ஒரு வேளை, மானியத் தொகையுடன் வங்கிக் கடன் பெற வேண்டிய அவசியம் நேரிட்டால் அப்பொழுதும் கூட அந்த மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். நான் மீண்டும் கூற விரும்புவது, தேவையில்லாமல் இதனை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சனையாக மேலும் வளர்க்கக் கூடாது என்பதும் நான் 4.2.2005 அன்று விடுத்துள்ள கோரிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

தமிழகம் சந்தித்துள்ள இந்த இயற்கைச் சீற்றம் தமிழக மக்கள் இதுவரை கண்டும் கேட்டும் இராத ஒரு பேரிடர் ஆகும். இதில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அவர்களது இயல்பு வாழ்க்கையை மீண்டும் நிலை நிறுத்தித் தர எனது அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசின் துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் இறுதி நிலையில் உள்ள துப்புரவுப் பணியாளர்கள் வரை உள்ள அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருகிறார்கள்.

சுனாமிப் பேரலைகளால் தாக்குண்டு இறந்தவர்களின் உடல்களை – மணலிலும், புதர்களிலும், இடிபாடுகளிலும் சிக்கிக் கிடந்த சடலங்களை – மீட்டு அடக்கம் செய்யும் பணியில், மாநிலம் முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் சிறப்பு ஊராட்சிகளில் பணிபுரிந்து வரும் 4,799 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் வழக்கமாகத் தாங்கள் ஆற்றும் கடமைக்கு அப்பாற்பட்டு மிகுந்த சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி உள்ளனர். இதனைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம் இந்த 4,799 துப்புரவுப் பணியாளர்களுக்கும் மொத்தம் 1.2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலும் நிவாரண உதவிகளை வழங்குவதிலும் அரசியல் என்பது கிஞ்சித்தும் இல்லாத வகையில் செயல்பட்டு வருகிறோம். எனவே, தேவையற்ற அரசியல் சாயம் பூசி அந்தப் பணிகளைக் கொச்சைப்படுத்திட வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கட்சி மாச்சரியங்களை மறந்து, மன வேறுபாடுகளைத் துறந்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் மகத்தான பணியில் அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வீரப்பன் கொடுமைக்கு முடிவு

வீரத்திலும் தீரத்திலும் சிறந்தது தமிழ்நாடு. இந்த உண்மை, வரலாற்றில் காலந்தோறும் நிரூபிக்கப்படுகிறது. அவ்வாறு அண்மையில் நிரூபிக்கப்பட்ட நிகழ்ச்சிதான் வீரப்ப வதம்.

வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கரக் காட்டுக் கொள்ளைக்காரன் – மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன் – யானைகளை இரக்கமின்றிக் கொன்று குவித்த அசுரன் – ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன் – தமிழ்நாட்டை மட்டும் அல்லாமல் கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாகப் பீடித்திருந்த இழிவான சாபக்கேடு – இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பனின் கொடுமைகளுக்கு எல்லாம் 18.10.2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப்படை மேற்கொண்ட துணிவான சாகச நடவடிக்கையால் அன்றைய தினம் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். 20 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட மனித வேட்டை இதன் மூலம் ஒரு முடிவுக்கு வந்தது.

அசாதாரண ஆற்றலோடு, அசாதாரணப் பொறுமையுடன், அசாதாரண விவேகத்தின் துணையோடு, அசாதாரண வீரத்தால், அசாதாரண வெற்றியைப் படைத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டு மனை, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் ஆகியவற்றை நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு அளித்தேன். மேலும், சிறப்பு அதிரடிப்படையுடன் இணைந்து பணியாற்றிய வனத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு உரிய பரிசுகளை வழங்கியுள்ளேன்.

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் வீரப்பனை வீழ்த்திய அதிரடிப்படை வீரர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர் என்ற செய்தியை இம்மாமன்றத்தில் பகிர்ந்து கொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறப்பு அதிரடிப்படை வீரர்களுக்கு பாராட்டும், பரிசும் வழங்கக்கூடாது என்று உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொது நல வழக்கில் 2.2.2005 அன்று தீர்ப்பு வழங்கிய மாண்புமிகு நீதியரசர் திரு. எம். கற்பகவிநாயகம் மற்றும் நீதியரசர் திரு. ஏ.ஆர்.ராமலிங்கம் ஆகியோர் –

"We also applaud the action of the Government, in arranging the function to give away the awards, in appreciation of the services rendered by the police personnel. In our view, the efforts made by the Tamil Nadu STF, which proved the success, has gained a good name not only for Tamil Nadu Police, but has secured fame and name for whole India, at the International level.....

"In our view, the Tamil Nadu STF deserves every appreciation not only by the Government of Tamil Nadu, but also the Government of India." என்று கூறியுள்ளனர்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்திய சாதனை சாதாரண சாதனை அல்ல. அனைவராலும் பாராட்டப்படவேண்டிய சாதனை. ஆனால், இந்தச் சாதனைக்கு மத்திய அரசிடமிருந்து உரிய பாராட்டுக் கிடைக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. வீரப்பன் தமிழ்நாட்டை மட்டுமே பீடித்திருந்த கேடு அல்ல; இரண்டு மாநிலங்களைப் பிடித்து இருந்த சாபக்கேடு அவன். ஒட்டு மொத்த இந்தியாவுக்குமே அவன் ஒரு களங்கமாக இருந்தான். அப்படிப்பட்ட ஒரு தீயவனைத் திட்டமிட்டு ஒழித்துக் கட்டிய தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு அரசின் காவல் துறையையும், காவல் துறை அதிகாரிகளையும் மத்திய அரசு பாராட்ட வேண்டாமா? ஆனால், அதற்கு நேர் மாறாக மத்திய அரசு செய்தது என்ன?

வீரப்பனை வீழ்த்திய இந்த அரிய சாதனையை நிகழ்த்திய தமிழக காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு ஒரு படி பதவி உயர்வை நான் வழங்கினேன். இந்தியக் காவல் பணி, அதாவது I.P.S. அந்தஸ்தில் உள்ள அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் பதவி உயர்வை மத்திய அரசுதான் உறுதி செய்ய வேண்டும். எனவே, அதிரடிப்படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்குக் காவல் துறை தலைமை இயக்குநர்–DGP என்ற நிலைக்கும்; திரு. செந்தாமரைக்கண்ணன் மற்றும் திரு. சண்முகவேல் ஆகியோருக்குக் காவல் துறை துணைத் தலைவர்–DIG என்ற நிலைக்கும் பதவி உயர்வு வழங்கி அதற்கான ஒப்புதல் வழங்க மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். ஆனால், மத்திய உள்துறைச் செயலர் தனது 4.1.2005 நாளிட்ட கடிதத்தின் மூலம் இந்தப் பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை நிராகரித்துத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்குக் கடிதம் எழுதி உள்ளார். அவர்களது பதவி உயர்வு ஆணைகளை ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதன் பின்னர் நான் மத்திய உள்துறை அமைச்சருக்கு 27.1.2005 அன்று எழுதிய கடிதத்திற்கு இதுவரை எந்த பதிலும் பெறப்படவில்லை.

தங்களது உயிரைத் துச்சமாக மதித்துக் கருத்தூன்றி கடமை ஆற்றியவர்களுக்குத் தக்க மரியாதையும், கவுரவமும் அளிக்க வேண்டியது நமது கடமை ஆகும். அவ்வாறு செய்யவில்லை என்றால், அவர்களது உண்மை

உழைப்பை அவமானப்படுத்துவதாக ஆகி விடும். தமிழகத்தில் மட்டும் அல்லாமல், இந்தியா முழுவதிலும் உள்ள காவல் துறையினருக்கு மனச்சோர்வு அளிப்பதாக இது அமைந்து விடும். மாநில அரசு பதவி உயர்வு அளித்து அவர்களுக்கு உரிய மரியாதையை வழங்கிய நிலையில் மத்திய அரசு அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கூறுவது, உணவு பரிமாறப்பட்ட பந்தியில் உட்கார்ந்த ஒருவரை அவர் சாப்பிட எத்தனிக்கும் தருணத்தில் எழுப்பி வெளியேற்றுவதற்குச் சமம் ஆகும். இது மிகவும் வருந்தத்தக்கதும் துரதிர்ஷ்டவசமானதும் ஆகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதியரசர்களே மத்திய அரசு, தமிழ்நாடு அதிரடிப் படை வீரர்களுக்கு சிறப்புச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டதை மத்திய அரசு கருத்தில் கொள்ள வேண்டும். இப்போதாவது மத்திய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு உரிய பதவி உயர்வு அளித்து தக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையை நிகழ்த்திய அதிரடிப்படை வீரர்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டும். ஆனால், மத்திய அரசோ இது பற்றி சிந்தனை செய்ததாகவே தெரியவில்லை. மத்திய உள்துறை அமைச்சர் திரு.சிவராஜ் பாட்டீல் அவர்கள் ஒருவரைத் தவிர இந்தியாவின் மிக உயர்ந்த பதவிகளில் உள்ள வேறு எவரும் மத்திய அரசைச் சார்ந்த வேறு எவரும் பாராட்டுக் கடிதமும் அனுப்பவில்லை, குறைந்த பட்சம் தொலைபேசியில் கூட வாழ்த்தோ, பாராட்டோ தெரிவிக்கவில்லை.

வீரப்பனை ஒழித்துக் கட்டி சாதனைப் படைத்த அதிரடிப்படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து இந்தச் சாதனை படைக்க காரணமாக இருந்த காவல்துறை அதிகாரிகளுக்கும் இந்த ஆண்டு தேசிய விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பாக நான் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தேன். அதிரடிப் படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கு 'பத்மஸ்ரீ' விருதும்; திரு.செந்தாமரைக் கண்ணன் அவர்களுக்கு 'அசோக சக்ரா' விருதும்; அதிரடிப்படை வீரர்கள் திரு.எஸ். வெள்ளதுரை, திரு.எம். சரவணன், திரு. வி. குமரேசன் ஆகியோருக்கு 'கீர்த்தி சக்ரா' விருதும் வழங்கிட வேண்டும் என்று பரிந்துரைத்து எனது அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. ஆனால், மத்திய அரசு குடியரசு தினத்தன்று அறிவித்த விருதுகள் பட்டியலில் அதிரடிப்படை வீரர்கள் எவரது பெயரும் இடம் பெறவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. குடியரசு தின விருதுகள் யார் யாருக்கோ வழங்கப்பட்ட நிலையில் அதிரடிப்படை வீரர்கள் விருதுகளுக்குத் தகுதியற்றவர்களா என்பதை இந்த மாமன்றம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வீரப்பனை வீழ்த்திய சாதனை தமிழகக் காவல்துறை வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும். இந்தச் சாதனையை நிகழ்த்தத் துணை புரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை இந்தப் பேரவையில் மறுபடியும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வீராணம் திட்டம்

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கும், அதனை நிறைவேற்ற மேற்கொண்ட தளராத முயற்சிக்கும் கிடைத்த தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி!

அயராத உழைப்பும், குலையாத உறுதியும் ஒன்று சேர்ந்தால், இயலாத செயல் என்ற ஒன்று எப்போதும் இல்லை என்ற தத்துவத்திற்குத் தக்கதொரு எடுத்துக்காட்டுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி!

சென்னை மாநகரில் ஏற்படக் கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சனையைச் சமாளிக்க வேண்டும் எனில் கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை 1993–ஆம் ஆண்டிலேயே நான் உணர்ந்த காரணத்தால், அதற்கு ஒரு தீர்வு காண நான் புதிய வீராணம் திட்டத்தை உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த முனைந்தேன். தமிழகத்தில் 1996ல் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. குறுகிய அரசியல் மாச்சரியங்களுக்காக இத்திட்டத்தைக் கைவிட்டது.

2003–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை நான் தொடங்கி வைத்தேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் 'வீராணம் திட்டம் வீணான திட்டம்' என்று வீம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்களது இடையூறுகளைத் தகர்த்து, இடர்ப்பாடுகளைத் தவிடுபொடியாக்கி புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால்தான் 2004-ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டது.

பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் 2004 ஜூன் மாதத்திலிருந்து தண்ணீரின் அளவைப் படிப்படியாக அதிகரித்து நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் அளவில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெரும் அளவுக்குத் தணித்தது.

13.10.2004 அன்று முதல் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்துச் சென்னைக்கு வழங்கப்பட்டு வருகிறது.



கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீர் சென்னை மாநகருக்கு இந்தத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. ஆகையால், வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

கோடைக் காலத்தில் வீராணம் ஏரியில் நீரின் அளவு குறையும்போது கொள்ளிடம் ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட இருக்கின்ற 6 நீர் சேகரிக்கும் கிணறுகளிலிருந்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 150 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க வகை செய்யும் வகையில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீராணம் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தப் புதிய வீராண விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கோ, கொள்ளிடம் பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் அளவுக்கோ எந்தவித பாதிப்பும் நேராது என்பதைப் புள்ளி விவரங்களுடன் கடந்த 2, 3 மற்றும் 4–ஆம் தேதிகளில் இந்த அவையில் நடந்த விவாதத்தின் போது நான் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன்.

விவசாயிகள் நலனைக் காப்பதில் வேறு எவரைக் காட்டிலும் அதிக அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விவசாயிகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாத வகையில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்று நான் உறுதியிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள காவேரிப் பாசன விவசாயிகளிடையே திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தை ஒரு சிலர் மேற்கொண்டதால் ஏற்பட்ட அச்சத்தைப் போக்கிட, தற்போது, கல்லணைக்குக் கீழே மூன்று இடங்களில் மொத்தம் 75 கோடி ரூபாய் செலவில் மூன்று தடுப்பணைகள் கட்டவும்; டி.பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கவும்; மற்றும் கொள்ளிடம் ஆற்றில் கல்லணை முதல் கீழணை வரை மணல் எடுக்கப்படுவதை நிறுத்தவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

எனவே, அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வகையான தவறான வழிகாட்டுதலுக்கும் ஆட்பட்டுவிடாமல் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்திட முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இந்த அவையின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் நலன்

கடந்த மூன்று ஆண்டுகளில் நிலவிய கடும் வறட்சி காரணமாகவும், காவேரி நீரில் நமக்குரிய பங்கைக் கர்நாடக அரசு விடுவிக்க மறுத்த காரணத்தாலும் தமிழகத்தில் வேளாண்மை உற்பத்தி பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. 1.6.2004 முதல் 3.2.2005 வரை கர்நாடக அரசு விடுவித்திருக்க வேண்டிய 196.331 டி.எம்.சி. அடி (TMC ft.) தண்ணீருக்குப் பதிலாக 158.271 டி.எம்.சி. அடி (TMC ft.) தண்ணீரே மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நீரும் காவேரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெரு மழை பெய்து கபினி அணை நிரம்பிய காரணத்தால்தான் நமக்குக் கிடைத்துள்ளது. உரிய நேரத்தில் கர்நாடக அரசு காவேரி நீரை விடுவிக்காத காரணத்தால் குறுவைச் சாகுபடியை நாம் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

காவேரி நதி நீர் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமையை நிலை நிறுத்தவும், தமிழக விவசாயிகளின் நலனைக் காப்பாற்றுவதிலும் எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் துன்பத்திற்கு உள்ளாகும் போதெல்லாம் அவர்களைப் பாதுகாக்கும் கேடயமாக எனது அரசு விளங்கி வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது

பல்வேறு நிவாரண உதவிகள் எனது அரசால் வழங்கப்பட்டதை நினைவுகூற விரும்புகிறேன்.

நடப்பாண்டில் வடகிழக்குப் பருவமழை நன்றாக பெய்துள்ள காரணத்தால் உணவு தானிய உற்பத்தி 90 லட்சம் டன் ஆக உயரும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் வாழ்வில் வளம் சேர்க்கும் நடவடிக்கையாக விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் அதே நேரத்தில், காட்டாமணக்கு, இனிப்புச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இதற்காகத் தொழில் முனைவோர் விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தக்க தொழில் நுட்பங்களையும், இடு பொருட்களையும் வழங்குவதோடு விளை பொருட்களை வாங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புற மேம்பாட்டு வளர்ச்சிக்காகப் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கிராமப்புற வேலை வாய்ப்பு வசதிகள் பெருகி உள்ளன. கிராமப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனை மேம்பாட்டிற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கு என 15 மாவட்டங்களில் தனித்த வர்த்தகப் பெயர்கள் மாவட்ட வாரியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுடன் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் உடல் நலனிலும், சுற்றுப்புறச் சூழலிலும் இவ்வரசு மிகுந்த அக்கறையும் ஆர்வமும் செலுத்தி வருகிறது. முழுமையான சுகாதார இயக்கம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் முழுமையான சுகாதாரத் திட்டத்தை ஒரு இயக்கமாகச் செயல்படுத்த ஊக்கமளிக்கும் நோக்கத்தோடு, சுத்தமான கிராம இயக்க விருது - Clean Village

Campaign Award என்ற பெயரில் நான் ஒரு விருதை ஏற்கெனவே ஏற்படுத்தி சிறந்த ஊராட்சிகளுக்கு இவ்விருதினை வழங்கி வருகிறேன்.

தற்போது மத்திய அரசு தேசிய அளவில் முழுமையான சுகாதாரத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய 38 கிராம ஊராட்சிகளையும் 1 ஊராட்சி ஒன்றியத்தையும் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுக்காக Nirmal Gram Puraskar Award-க்காகத் தெரிவு செய்துள்ளது. இவற்றுள், தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 13 ஊராட்சி அமைப்புகள் – 12 கிராம ஊராட்சிகள் – மற்றும் 1 ஊராட்சி ஒன்றியம் – தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. 24.2.2005 அன்று புது தில்லியில் நடைபெற உள்ள விழாவில் இவ்விருதுகள் வழங்கப்பட்டு விருது பெற்ற ஊராட்சி ஒன்றியத் தலைவர், *ஊராட்சி மன்றத் தலைவர்கள் /* தலைவிகள் ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்துறை

சட்டம் – ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்படும் மாநிலம்; தொடர்ந்து அமைதி காக்கப்படும் மாநிலம், மக்களிடையே நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கும் மாநிலம்; இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாகத் திகழும் மாநிலம் – அதுவே நம் தமிழகம்.

“கள்வர் இலாமைப் பொருள் காவலும் இல்லை”

– என்ற இலக்கணம் கம்பர் பெருமான் காட்டுகின்ற அன்றைய அயோத்திக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட ஒரு நாடு உலகத்தின் எந்த மூலையிலும் இருக்க வாய்ப்பில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

குற்றங்கள் நடக்கலாம்; அந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றம் புரிந்தோருக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் ஆற்றல் உள்ளதாகக் காவல் துறை இருக்க வேண்டும்; குற்றங்கள் குறைய நடவடிக்கை எடுக்கும் ஆற்றல் உள்ளதாக இருக்க வேண்டும். அத்தகையதொரு காவல் துறைதான் தமிழ்நாடு அரசின் காவல் துறை.

குற்ற நிகழ்வுகளில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் விருப்பு வெறுப்பு எதுவுமின்றி, வேண்டியவர் வேண்டாதவர் என்று வேறுபடுத்திப் பார்க்காமல் சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தந்தால்தான் காவல் துறை தன் கடமையைச் சிறப்புற ஆற்றியதாகக் கருத முடியும். தமிழகக் காவல்துறை அவ்வாறு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நான் பெருமையுடன் இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக் கொள்ள முடியும்.

இதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் கூற விழைகிறேன். 2.11.2004 அன்று வடபழனி அருகே கொலை முயற்சி நடத்தப்பட்டதில் தாக்கப்பட்டவர் 3.11.2004 அன்று இறந்து விட்டார். இந்தக் கொலை வழக்கை விசாரித்த காவல் துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 44 நாட்களில் அதாவது 16.12.2004 அன்று விரைவு நீதிமன்றம் இக்குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட 4 குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்கியுள்ளது. இவ்வாறு, ஒரு கொலைக் குற்றத்தில் 44 நாட்களிலேயே தண்டனை பெற்றுத் தந்தது இந்தியாவிலேயே இது முதல் முறை என்பதை இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் 2.2.2005 அன்று பேசியபோது, காவல் துறையில் ஒரு புதிய போக்கைப் பார்ப்பதாகவும் குற்றப் பத்திரிகையைக் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்று தாக்கல் செய்வதற்கு முன்னால் கோயிலுக்கு எடுத்துச் சென்று பூஜை செய்கின்ற ஒரு புதிய முறையை பார்ப்பதாகவும், இது யாருடைய உத்தரவின் பேரில் நடைபெறுகிறது என்று கேட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் நாத்திகவாதி அல்ல, அவர் ஒரு கடவுள் பக்தர் என்றே நான் நம்புகிறேன். அதனால்தான் இதனை அவர் தெரிந்து தான் பேசினாரா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. முக்கியமான எதையும் செய்வதற்கு முன்னால் ஆண்டவனின் அருள் வேண்டி வணங்குவது நமது நாட்டின் பாரம்பரியம் என்பதை அவர் மறந்து விட்டாரா ? மாணவ-மாணவிகள் தாங்கள் தேர்வு எழுதப் போவதற்கு முன் தாங்கள் சார்ந்துள்ள சமயத்தின்படி கோவில்களுக்கோ, தேவாலயங்களுக்கோ, மசூதிகள் அல்லது தர்காக்களுக்கோ சென்று வணங்கி வழிபடுகின்றார்கள். அதே போல, வணிகர்கள் புதிய வியாபாரங்களைத் தொடங்கும் போதும், தொழில் அதிபர்கள் புதிய தொழில்கள் தொடங்கும் போதும் தாங்கள் நம்பிப் பின்பற்றும் மதங்களைச் சார்ந்த கடவுள்களை வணங்கித்தான் தொடங்குவது வழக்கம். எடுத்த காரியம் யாவினும் வெற்றி அருள்க என்று ஆதிசக்தியாம் மஹா காளியின் பாதம் பணிந்து மகாகவி பாரதியே பாடல் இயற்றியுள்ளார். ஆக, தாங்கள் மேற்கொள்கின்ற செயல் வெற்றிகரமாக அமைந்திட வேண்டும் என்று ஒவ்வொருவரும் எண்ணுவதும் அதன் அடிப்படையில் ஆண்டவனின் அருள் வேண்டுவதும் இயற்கை இல்லையா ? இந்த வகையில் பார்த்தால் ஒரு காவல் துறை அதிகாரி, தான் மேற்கொண்ட புலனாய்வில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் முன் தான் நம்புகின்ற கடவுளை வணங்கி அந்தப் பணியைத் தொடர்வதில் என்ன தவறு இருக்க முடியும் ?

இது அரசின் உத்தரவா என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி கேட்டார். காவல் துறை வழக்குகளில் சட்டம் தன் கடமையைச் செய்யுமே தவிர, யாரும் யாருக்கும் எந்த உத்தரவும் பிறப்பிப்பதில்லை. மக்கள் தங்களது கடவுள் நம்பிக்கைக்குரிய திருத்தலத்திற்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் எந்த சட்டமும் இல்லை. மசூதிக்கோ, தர்காவுக்கோ ஒரு முஸ்லிம் செல்வதையோ, குருதுவாராவுக்கு ஒரு சீக்கியர் செல்வதையோ, மாதா கோவிலுக்கு ஒரு கிறித்துவர் செல்வதையோ, தவறு என்று எவரும் சொல்வது கிடையாது. அதே போல, ஒரு இந்துவும், தான் விரும்புகின்றபடி கோவிலுக்குச் செல்வது அவரது தனிப்பட்ட உரிமையாகும்.

மதச்சார்பின்மை என்ற கொள்கையை கொலை செய்ததற்கு ஒப்பான செய்கை இது என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் கூறினார். மதச்சார்பின்மை என்பதற்கு என்னதான் பொருள் ?

மதச்சார்பின்மை என்பது மதங்களை மறுப்பதோ அல்லது கடவுளை மறுப்பதோ அல்ல. மதச்சார்பற்றவர் என்றால் அவர் நாத்திகவாதி என்று பொருள் ஆகாது. மதச்சார்பின்மை என்றால் இப்படித்தான் என்று பலர் தவறான கண்ணோட்டத்தில் இருக்கிறார்கள். மதச்சார்பின்மை என்பது அனைத்து மதங்களும் ஒன்றே என்று எண்ணுவதுதானே தவிர, மதங்களை மறுப்பதோ, கடவுள்களை மறுப்பதோ அல்ல. தான் வணங்குகின்ற தெய்வத் திருத்தலத்திற்கு ஒருவர் செல்வதை விவாதத்திற்கு உரிய ஒன்றாக ஆக்கக் கூடாது.

காவல் துறை அதிகாரிகளோ, காவலர்களோ தங்களது தெய்வத் திருத்தலத்திற்குச் செல்லக் கூடாது என்று தடுத்திட சட்டம் எதுவும் கிடையாது. காவலர்களும் நாட்டின் மற்ற குடிமக்களைப் போன்றவர்கள்தான். தாங்கள் நம்புகின்ற தெய்வத் திருத்தலத்திற்குச் செல்ல அவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4.2.2005 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் பேசும் போது, தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் அதிகரித்துள்ளன என்று ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறினார். 2004-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன என்பதுதான் உண்மை. கொலைக் குற்றங்கள் 4.6 சதவீதமும், கூட்டுக் கொள்ளை 17 சதவீதமும், கன்னக் களவு மற்றும் திருட்டு 10 சதவீதத்திற்கு மேலும் குறைந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள், 2004 ஆம் ஆண்டில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 2.7 சதவீதம் அதிகரித்துள்ளது என்று ஒரு செய்தி வெளிவந்துள்ளதாகக் கூறியுள்ளார். கற்பழிப்பு, மானபங்கம், ஆட்கடத்தல், வரதட்சணைக் கொலை, கணவராலும், உறவினராலும் துன்புறுத்தப்படுதல், பெண்களைக் கடத்துவது, வரதட்சணைக் கொடுமைச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் ஆகியவை பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்று வரையறுக்கப்படும். இவை இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் ஆகும். உண்மையில் 2004–ஆம் ஆண்டில் இக்குற்றங்களின் எண்ணிக்கை 0.68 சதவீதம் குறைந்துள்ளது.

பாலியல் துன்புறுத்துதல், அதாவது, sexual harassment என்பது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்னும் வகைப்பாட்டின் கீழ் வராமல் தனிப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இழைக்கப்படும் இந்தத் தீங்கு எனது அரசால் இயற்றப்பட்ட '2002 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற திருத்தச் சட்டத்தின்' கீழ் வகைப்படுத்தப்பட்ட தண்டனைக்குரிய குற்றம் ஆகும். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் காவல் நிலையங்களில் பெண் காவலர் பணி அமர்த்துதல் போன்ற பெண்களின் பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்தும் பல நடவடிக்கைகள் என்னுடைய அரசால் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, பாலியல் துன்புறுத்துதல் நடைபெறும் போது அது காவல் நிலையத்தில் புகார் செய்யப்படுவது ஊக்குவிக்கப்படுகிறது. பெண்கள் தைரியமாகச் சென்று புகார் செய்கிறார்கள். மேலும், காவல் துறையினர், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்தில், பேருந்து நிறுத்தங்கள், பெண்கள் கல்லூரிகள், மற்றும் திரை அரங்குகள் அருகில் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டு இக்குற்றங்களில் ஈடுபடுவோர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கின்றனர். இதன் அடிப்படையில் தான் இந்தப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட புகார்கள் 2003 ஆம் ஆண்டில் 881 ஆக இருந்தது 2004 ஆம் ஆண்டில் 1081 ஆக உயர்ந்துள்ளது. எனவே, இந்தப் பிரிவில் புகார்கள் பதிவு செய்யப்படுவது அதிகரித்திருப்பதை ஒரு குறைபாடாகக் கருத இயலாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் கூறியது போல் மகளிருக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கையுடன் இதனையும் சேர்த்துக் கணக்கிட்டு ஒப்பிடுதல் சரியான அணுகுமுறையாக இருக்காது. எனது தலைமையின் கீழ் இயங்கும் இந்த அரசு, பெண்களைப் பாதுகாப்பதிலும், பெண்களின் உரிமையை நிலைநாட்டுவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கும் போது சரியான முறையில் ஒப்பீடு செய்யாமல் குற்றம் சுமத்துவது அழகல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் நலன்

அடித்தளத்து மக்களின் வாழ்வு மேம்பாடு அடைய மகத்தான முயற்சிகளை நான் மேற்கொண்டு வருகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையும் வண்ணம் அவர்களுக்கான பல்வேறு புதிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் நோக்குடன் 2 இலட்சம் ரூபாய் மதிப்பில், 50 சதவீதம் மானியமும், 50 சதவீதம் கடனாகவும் வழங்கி, ஆதி திராவிட மகளிர் நிலம் வாங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தை 2004–ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நான் அறிமுகப்படுத்தினேன்.

2004 ஜனவரி திங்களில் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் பயன்பெற இதுவரை 11,077 மகளிர் விண்ணப்பித்துள்ளனர். இதுவரை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள 6,970 விண்ணப்பங்களில் 818 விண்ணப்பங்களுக்கு மட்டுமே வங்கிகள் இதுவரை ஒப்புதல் அளித்துள்ளன. இது போன்ற பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வங்கிகள் உடனடியாகக் கடன் வழங்க முன் வர வேண்டும். வங்கிகளது ஒத்துழைப்புடன் நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் 7,000 பேருக்கு இந்த உதவிகள் வழங்கப்படும்

என்பதைப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன் தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பள்ளிக்கு வருவதைப் பாதியிலே நிறுத்துகின்ற நிலையைத் தவிர்த்து தாங்கள் தொடர்ந்து கல்வி பயில வேண்டும் என்ற ஊக்கத்தை அவர்களுக்கு அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக, மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 2001–ஆம் ஆண்டில் நான் கொண்டு வந்தேன். கடந்த 2001 முதல் 2004 வரையிலான மூன்று ஆண்டுகளில் மொத்தம் 1,54,410 மாணவிகளுக்கு 22.52 கோடி ரூபாய் செலவில் இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் 8.8 கோடி ரூபாய் செலவில் 49,194 சைக்கிள்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

சிறந்த கல்வி அறிவை அளிப்பதன் மூலம் ஆதி திராவிட, பழங்குடி மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தர மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதால் கல்வி வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளிக்கிறது. எனவே, மாணவ / மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதிகள், அவர்கள் கல்வி கற்க ஊக்கமளிக்கும் வகையில் சிறப்புற அமைய வேண்டும் என்பதில் நான் தனிக் கவனம் செலுத்தி வருகிறேன்.

ஆதிதிராவிட மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகளின் மொத்த எண்ணிக்கை 1,076 ஆகும். 2001–ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இதில் தனிக் கவனம் செலுத்தி, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த 574 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் அமைய வேண்டும் என முடிவெடுத்து கடந்த நான்கு ஆண்டுகளில் 155.30 கோடி ரூபாய் செலவில் 493 விடுதிக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொண்டேன். இதில் 264 விடுதிகளுக்குப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் முடிவில் சொந்தக் கட்டடங்கள் அற்ற ஆதி திராவிட மாணவ மாணவிகள் விடுதிகளே இல்லை என்ற நிலை உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்தவர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகள் தங்களது பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கமளித்து அவர்கள் சமுதாயத்தில் சுதந்திரமாகவும் தன்னம்பிக்கையுடனும் துணிவோடும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தரும் வகையில், மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்பு படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும் இலவச சைக்கிள்களை வழங்கும் திட்டத்தை நான் சமீபத்தில் தொடங்கி வைத்தேன். 2004–2005–ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 2,254 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலுகின்ற 2,49,750 மாணவிகளுக்கு 44.76 கோடி ரூபாய் செலவில் இலவச சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவ–மாணவிகள் தங்கும் வசதிக்காக மொத்தம் 972 விடுதிகள் இயங்குகின்றன. கடந்த 2001–ஆம் ஆண்டு நான் தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பு ஏற்ற போது இவற்றில் 202 விடுதிகள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. மீதமுள்ள 770 விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் தான் இயங்கி வந்தன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அத்தனை விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட நான் ஆணையிட்டேன். இதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 99.99 கோடி ரூபாய் செலவில் 314 விடுதிகள் கட்ட

ஆணையிட்டு, 190 விடுதிகளின் கட்டடப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 124 விடுதிகளின் கட்டுமானப் பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் தற்போது ஆணையிட்டு உள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடும், உள்ள நிறைவோடும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 100 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இந்தப் பணி 2005–2006–ஆம் நிதியாண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன்

ஒரு மாநிலம் மனித வளத்தில் மேம்பட்டு இருக்க வேண்டும் எனில், அங்குள்ள மக்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

'அனைவருக்கும் நல்வாழ்வு' என்ற எங்கள் இலட்சியத்தை இன்னும் முனைப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்றால், அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் மருத்துவர் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்பட்டு இருக்க வேண்டும்.

எனவே தான், இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது காலியாக உள்ள 2,322 மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நான் ஆணையிட்டு உள்ளேன். இப்பணியிடங்கள் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நிரப்பப்பட்டுவிடும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் ஏதோ சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த திமுக மட்டும்தான் மிகுந்த ஆர்வம் கொண்டு உள்ளது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தார். நான் ஏற்கெனவே இத்திட்டம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று விரிவாகக் கூறியுள்ளேன். இத்திட்டத்திற்கு வித்திட்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். நானும் ராஜ்ய சபாவில் உறுப்பினராக இருக்கும்போது இதனைச் செயல்படுத்த வலியுறுத்தி இருக்கிறேன். தற்போது இத்திட்டம் செயல்படுத்த வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய சுற்றுப்புறச் சூழல் அனுமதி பெற வேண்டும். இது சம்பந்தமான பொது மக்களின் கருத்துக்களை நேரடியாகக் கேட்டறியும் கூட்டங்கள் முழுவதுமாக நடைபெற்று முடிந்துவிட்டன. தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து வரக்கூடிய அறிக்கையின் அடிப்படையில் மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதனைப் பரிசீலிக்க வேண்டும். இதுதான் தற்போதைய நிலை.

தமிழக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் எங்களது பணி தொடர்கிறது. மக்களின் கனவுகள் எங்களால் திட்டங்களாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன. திட்டங்கள் உடனடியாகச் செயல்வடிவம் பெற்று வருவதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். அதைவிட முக்கியமாகச் செயலாக்கம் பெற்ற திட்டங்களின் பயன்கள் உரியவர்களைச் சென்று சேர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இலக்குகளை நிர்மாணிக்கிறோம்! அந்த இலக்குகளை அடைவதற்குக் கணக்கியல் நுட்பத்தோடு, அதாவது, Mathematical precision-ஒடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

எதையும் திறம்படச் செய்வதே எங்களது இலட்சியம்! அதை விரைவில் செய்ய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்!

மனம் கலங்காது, ஆராய்ந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல், காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும் – இது தெய்வத் திருமறை வழங்கிய திருவள்ளுவப் பெருமானின் வாசகம்:

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்

இந்தக் குறளின் பொருளே எனது செயல்பாட்டின் கோட்பாடு.

'தூக்கங் கடிந்து செயல்' என்பதற்கு 'காலம் தாழ்த்தாமல்' என்பது பொருள். அந்த வரியின் வார்த்தைப் பொருளில் in the literal sense of the term எடுத்துக் கொண்டால் தூக்கத்தை நீத்துச் செயல்பட வேண்டும் என்று சொல்லப்படுவதாக எடுத்துக் கொள்ளலாம். அப்படித்தான் நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் நான் கண்விழித்துச் செயல்படுகிறேன். அதிலே மகிழ்ச்சியும் அடைகிறேன்.

காரணம், ஒவ்வொரு நாளும் தமிழகம் முன்னேற வேண்டும்; ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை கிடைக்க வேண்டும் என்பதே எனது இதயத் துடிப்பாக என்றும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

தோட்டக்கலை வளர்ச்சியில் சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டத்தில் 2.20 இலட்சம் எக்டேர் பரப்பளவில் 16,500 எக்டேரில் மட்டும் தோட்டப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் மலர்ப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

முந்திரி அபிவிருத்தித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் முந்திரிப் பயிர் பரப்பு விரிவாக்கத்திற்காக ரூ.14,40,000 பெறப்பட்டு 450 எக்டேர் பரப்பளவில் ஒரு எக்டேருக்கு ரூ.3,200 மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மத்திய அரசு திட்டங்களின் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள முன்னோடி விவசாயிகளுக்குத் தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த தொழில்நுட்பப் பயிற்சிக்கு வெளிமாநில மற்றும் மாநிலத்தில் உள்ள பயிற்சி நிலையங்களிலும், அழைத்துச் செல்லப்பட்டு நவீன சாகுபடித் திட்டங்கள் குறித்துப் பயிற்சி அளித்து திட்டங்கள் பெறப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேவகோட்டை அரசு தோட்டக்கலைப் பண்ணை

தேவகோட்டை அரசு தோட்டக்கலைப் பண்ணை 1985ஆம் ஆண்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 200 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆண்டுதோறும் 4.30 இலட்சம் ஒட்டுச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் செடிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் முக்கியமாக முந்திரி ஒட்டுச் செடிகள் 2,75,000 எண்கள், மா ஒட்டுச் செடிகள் 40,000 எண்கள், சப்போட்டா ஒட்டு 25,000 எண்களும், நெல்லி ஒட்டு 20,000 எண்கள், கொய்யா, பதியன்கள் 30,000 எண்கள், புளி ஒட்டு 10,000 எண்கள் மற்றும் பொருளாதார அழகுச் செடிகள் 30,000 எண்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 2002–03 ஆம் ஆண்டு மாநிலத்திலேயே சிறந்த முதல் பண்ணையாகத் தேர்வு செய்யப்பட்டு அதற்காகக் கேடயமும், சான்றிதழும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப் பட்டுள்ளது. இப்பண்ணையில் தினமும் 150 தினக்கூலி பணியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

நேமம் அரசு தோட்டக்கலைப் பண்ணை

நேமம் அரசு தோட்டக்கலைப் பண்ணை 1982 – 83ஆம் ஆண்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையில் ஆண்டுதோறும் 1,80,000 செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு ஆண்டு வருமானமாக ரூ.23 இலட்சம் பெறப்பட்டு நிகர லாபமாக ரூ. 3 இலட்சம் வரை ஈட்டப்படுகிறது. முக்கியமாக மா ஒட்டு 20,000 எண்களும், சப்போட்டா ஒட்டு 15,000 எண்களும், பலா ஒட்டு 3,000 எண்களும், புளி ஒட்டு 2,000 எண்களும், கொய்யா பதியன்கள் 15,000 எண்களும், முந்திரி ஒட்டு 25,000 எண்களும், நெல்லி ஒட்டு 20,000 எண்கள் மற்றும் இதரப் பழ, பொருளாதார அழகுச் செடிகள் 80,000 எண்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள 50 தினக்கூலிப் பணியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது



அரசின் மூலம் நடைபெறும் திட்டங்கள்

அரசுத் திட்டத்தின் கீழ் பழச் செடிகளுக்காக ரூ.6,26,000மும் காய்கறி விதைக்காக ரூ.6,47,900மும் செலவிடப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பழப்பயிர் சாகுபடியில் 95 எக்டேர் பரப்பளவு அதிகரிக்கவும் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு காய்கறி பரப்பளவு 679 எக்டேர் பரப்பில் 4.95 மதிப்பில் அதிகரிக்கவும் நடப்பு ஆண்டு திட்டம் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நடப்பு மாதம் பெய்த மழையினைப் பயன்படுத்தி 64 சதவிகிதம் வரை சாதனை அடையப்பட்டுள்ளது.

பழப்பயிர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 12,15,500 மதிப்பில் 461 எக்டேர் பரப்பில் 25 சதவிகிதம் மானியத்தில் மா, எலுமிச்சை மற்றும் கொய்யா பழப் பயிர்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

சுவை தானியப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் மானியத்தில் விவசாயப் பயிர் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம் 100 எக்டேர் பரப்பளவில் ரூ.50,000 மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வணிக மலர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாதிரித் திடல் அமைத்திட 8 விவசாயிகளுக்கு 25 சதவிகித மானியமாக ரூ.65,000 வழங்கப் பட்டுள்ளது.

மூலிகை மற்றும் நறுமணப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாதிரித் திடல் அமைத்திட 53 விவசாயிகளுக்கு 25 சதவிகித மானியமாக ரூ.1,30,000 வழங்கப்பட்டுள்ளது.

கிழங்குப் பயிர் உள்ளடக்கிய காய்கறிப் பயிர் அபிவிருத்தித் திட்டமானது ரூ.4,80,000 மதிப்பில் 55 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 25 சதவிகிதம் மானியமாகும்.

புதுமைத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் உள்ள இரண்டு கல்வி நிறுவனங்களில் ரூ.10,000 மானியத்தில் தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

காளான் வளர்ப்பில் 50 நபர்களுக்கு ரூ.25,000 செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- ஆ. கோபாலன்,
செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை.

குறிஞ்சி மலர்

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலரில் 200 வகைகள் உள்ளன. தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மலரும் குறிஞ்சி மலர் நீலம் அல்லது வெண்மை நிறத்தில் இருக்கும். சிறுசெடியாகவோ, குறுமரமாகவோ இது வளரும்.

13 கடலோர மாவட்டங்களில் மாவட்ட - ஊராட்சி - வார்டு அளவிலும் சுனாமிப் பேரலை நிவாரணக் குழுக்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
24.1.2005

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை, 26.12.2004 அன்று சுனாமி பேரலைகள் பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 8,000 பேர் உயிரிழந்ததுடன், இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்து சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானார்கள். இதுபற்றிய விவரம் கிடைத்தவுடனேயே நான் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாகப் பார்வையிட்டு தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ஆணையிட்டேன்.

சுனாமி நிவாரணப் பணிகளில் முதற்கட்டப் பணிகளான தேடுதல், மீட்பு, சடலங்களைப் புதைத்தல் மற்றும் எரியூட்டுதல், தப்பிப் பிழைத்தவர்களை நிவாரண முகாம்களில் தங்க வைத்து உணவு மற்றும் அடிப்படைத் தேவைகள் வழங்குதல் ஆகியப் பணிகள் அனைத்தும் 30.12.2004—க்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

இதனையடுத்து மீட்கப்பட்டவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் வழங்கும் இரண்டாம் கட்டப் பணியை 30.12.2004 அன்று நான் தொடங்கி வைத்தேன். இந்த உதவிகள் தற்போது வழங்கப்பட்டு விட்டன.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் மூன்றாம் கட்டப் பணிகளை முழு வீச்சுடன் மேற்கொள்ள பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுக்குத் தகுந்த ஆணைகளையும், அறிவுரைகளையும் வழங்கி உள்ளேன். இதன்படி, பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாகத் தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணி முடிய முடிய பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அந்தத் தற்காலிக வீடுகளில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். தொடர்ந்து, சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் முழுமையான மறுவாழ்வு அளிக்கும் வகையில் நிரந்த வீடுகள் கட்டவும், தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்கவும், தக்க நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு முனைப்புடன்

மேற்கொண்டுள்ளது. அரசு சாராத அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச மறுவாழ்வு அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் துணையுடனும் மறுவாழ்வுப் பணிகளைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சுனாமி தாக்குதலையடுத்து, மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் சுணக்கமின்றி, சீராக நடைபெறுவதை நான் உறுதி செய்துள்ளேன். அமைச்சர்களுடனும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனும் தொடர்ந்து ஆலோசித்து தேவையான ஆணைகளை அவ்வப்போது பிறப்பித்து வருகிறேன். தமிழக அரசு மேற்கொண்டு வரும் சுனாமி நிவாரணப் பணிகள் எவ்வித குறைகளும் இன்றி செவ்வனே நடைபெற்று வருகின்றன. நிவாரணம் வழங்கும் பணிகளில் எந்த ஒரு முறைகேட்டுக்கும் இடம் கொடுக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான உதவி கிடைக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் நடைபெறுகின்ற நிவாரணப் பணிகளை அனைத்துத் தரப்பினரும் பாராட்டி வருகின்றனர். சுனாமி பாதித்த பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய அரசின் உயர் மட்ட அலுவலர் குழு, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகள், தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய பல்வேறு தரப்பினரும் தமிழக அரசு செயல்படுத்தி வரும் நிவாரணப் பணிகளை மனதாரப் பாராட்டி உள்ளனர்.

தமிழகம் இதுவரை சந்தித்திராத சுனாமி பேரலைகளால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து 7.1.2005 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி அவர்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டு அறிந்தேன். இந்தக் கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவித்த அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைகள் கருத்தில் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் பேரிடர் மேலாண்மை ஆணையம் (State Disaster Management Authority) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையத்தில் மாநில நிவாரண ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் செயலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். சுனாமி நிவாரணப் பணிகள் மேற்கொள்வதைத் தீவிரமாகக் கண்காணிக்கும் பொறுப்பு இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்திட மிகுந்த முனைப்போடும், உத்வேகத்தோடும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்ற நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுத்திட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் தகுந்த ஆலோசனைகளை வழங்கிட, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஏற்படுத்தியதைப் போன்ற ஆலோசனைக் குழுக்கள் அமைத்திட நான் முடிவெடுத்துள்ளேன். இக்குழுக்கள் மாவட்ட அளவிலும், ஊராட்சி / வார்டு அளவிலும் அமைக்கப்படும்.

இதன்படி, சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களில் மாவட்ட அளவிலான சுனாமி பேரலை நிவாரணக் குழுக்கள் அமைக்கப்படும். இந்தக் குழுக்களில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராகவும், அந்த மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர், சம்பந்தபட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை அதிகாரிகள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிந்தெடுக்கப்படும் இரண்டு அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு சுனாமி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு, தகுந்த ஆலோசனைகளை வழங்கும்.

இதே போல், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும்/ வார்டிலும், ஊராட்சி / வார்டு அளவிலான சுனாமி பேரலை நிவாரணக் குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் / வார்டு உறுப்பினர் இருப்பார். அந்தந்தப் பகுதியைச் சார்ந்த மீனவர் பஞ்சாயத்து சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிந்தெடுக்கப்படும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஊராட்சி / வார்டு அளவிலான இந்தக் குழுக்கள் தேவைக்கேற்ப அவ்வப்போது கூடி பணிகளை ஆய்வு செய்யும்.

* * *

கணினிமயமாகும் தஞ்சை மண்டல நகராட்சி நிருவாகம்

திரு. டி.ஜே. தினகரன்,
நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்,
தஞ்சாவூர்.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நகராட்சிகள் 7 மண்டலங்களையும் மற்றும் 5 மாநகராட்சிகளையும் உள்ளடக்கியது.

ஒவ்வொரு மண்டலத்திலும் 3 முதல் 5 மாவட்டங்களை உள்ளடக்கி அதிகபட்சம் 20 நகராட்சிகள் அடங்கியுள்ளது.

நகராட்சி நிருவாகத்தையும் பொதுமக்கள் நகர்ப்புற சேவையும் 1999ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுதவியின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—II மூலம் கணினிமயமாக்குதல் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூார் மாவட்டங்களை உள்ளடக்கிய தஞ்சாவூர் நகராட்சி நிருவாக மண்டல இயக்குநரகம் மாநிலத்திற்கே முன்னோடியாக நகராட்சிகளில் கணினிச் சேவையை அறிமுகப்படுத்தி- உலக வங்கி மற்றும் அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது.

தஞ்சாவூர் மண்டலத்தில் 14 நகராட்சிகளும், தற்போது புதிதாகச் சேர்க்கப்பட்ட 5 மூன்றாம் நிலை நகராட்சிகளும் சேர்த்து 19 நகராட்சிகளைக் கொண்டதாகும்.

மாண்புமிகு தமிழக முதல[illegible]மைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், நகராட்சி நி[illegible]கம் மற்றும் குடிநீர் வழங்கு துறை மூலமாக ரூ.37.38 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு, தஞ்சாவூர் மண்டலத்திலுள்ள நகராட்சிகளின் நிருவாகம் கணினி மயமாக்கப்பட்டு கீழ்காணும் சேவைகள் பொதுமக்களுக்கு கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

★ பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

★ சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம், கணினி மூலம் நகராட்சி வசூல் மையங்களிலும் தேசிய மயமாக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மூலமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

★ தொழில் வரி, வரியில்லா இனம், உணவு கலப்படத் தடை உரிமம் மற்றும் அபாயம் மற்றும் அருவருக்கத்தக்க பொருட்கள் விற்பனை உரிமம் ஆகியவை தற்போது கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

★ புதிய கணக்கு முறை

★ திடக்கழிவு மேலாண்மை

★ கட்டட அனுமதி

★ அசையும் மற்றும் அசையாப் பொருட்கள்

★ இதர வருவாய்கள்

மேலும் பொதுமக்கள் தங்களது குறைகளைப் பதிவு செய்யத் தனியே இணையதளங்கள் உருவாக்கப் பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்புக்கென தனியே இணையதளம் ஏற்படுத்தியதும் தஞ்சாவூர் மண்டலமே.

அரசால், தற்போது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் வழங்கப்பட்ட மென்பொருட்களுடன் கீழ்காணும் மென்பொருட்கள் இம்மண்டலத்திலேயே உருவாக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் கணக்கெடுப்பு

★ இதர வருவாய்கள் வசூல்

★ தன் பதிவேடு

★ வழக்குகள்

★ சம்பளப் பட்டியல்

நகராட்சிகளில் அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் பொறியாளர், நகரமைப்பு அலுவலர்கள், நகர்நல அலுவலர் மற்றும் மேலாளருக்கு கணினி வழங்கப்பட்டு அவை நகராட்சி ஆணையர் மற்றும் நகர் மன்றத் தலைவர்களுடன் உள் இணைப்பு மூலம் (LAN) இணைக்கப்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாக தஞ்சாவூர் மண்டலத்திலுள்ள நகராட்சிகள் அனைத்தும் தொலைதூர இணைப்பு மூலம் (Wide Area Network) மண்டல இயக்கத்தோடு ரூ.27.38 இலட்சத்தில் 64 KBPs இணையதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இப்பணி BSNL நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிதியுதவி செய்த உலக வங்கியின் பிரதிநிதி திரு. முகுந்தன் 7.11.2004 அன்று ஆய்வு செய்தார்.

இந்த மண்டல இணைப்பின் மூலம் (Regional Connectivity) அனைத்து நகராட்சிகளின் பணிகள் மற்றும் வரிவசூல் குறித்து மண்டல அலுவலகத்திலிருந்து உடனுக்குடன் ஆய்வு செய்ய இயலும்.

நகராட்சி அலுவலர்களின் பணிகள் இங்கிருந்தவாறு கண்காணித்து அறிவுரைகள் வழங்க இயலும். மேலும், ஆய்வுக்கூட்டங்கள் பெருமளவில் குறைந்திட வழி செய்கிறது.

நகராட்சி அலுவலர்களும் அங்கிருந்தபடியே அறிவுரைகள் பெற்றுச் செயல்பட ஏதுவாகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை செலவிடப்பட்ட மனித ஆற்றல் மற்றும் எரிபொருள் செலவினம் மீதமாகும்.

இத்திட்டத்தை மேலும் செம்மையாக்க நகராட்சி அலுவலர்களுடன் மண்டல இயக்குநர் நேரிடையே வீடியோ மூலம் கலந்தாய்வு நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கணினி மயமாக்குதலின் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக வீடியோ கலந்தாய்வு (Video Conferencing) உயரிய டிஜிட்டல் தொழில் நுட்ப கேமரா மற்றும் தொலைக்காட்சி ஒளி மற்றும் ஒலியுடன் மூலம் ISDN தொலைபேசி இணைப்பு அனைத்து வினாடிக்கு 384 KBPs வீதம் BSNL நிறுவனம் மூலம் ரூ.30.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. ❖

கூடைப்பந்து

டாக்டர் நய் ஸ்மித் என்னும் அமெரிக்கர், 1891இல் கூடைப்பந்து ஆட்டத்தை அமைத்தார். முதலில் இரண்டு கூடைகளைச் சுவரில் அடித்து அவற்றை 'கோல்' (Goal) களாகப் பயன்படுத்தினர். தொடக்கத்தில் ஒரு குழுவில் 40 முதல் 50 பேர் வரை விளையாடினார்கள். 1892ஆம் ஆண்டு இவ்விளையாட்டுக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

கூடைப்பந்தாட்டக் களம் 25 மீட்டர் நீளமும், 14 மீட்டர் அகலமும் கொண்டதாக இருக்கும். இதன் எதிரெதிர்ப் பக்கங்களில் கம்பங்கள் நட்டு அதில் சுமார் 2 மீட்டர் நீளம், 1¼ மீட்டர் அகலமுடைய பலகைகளைப் பொருத்தியிருப்பார்கள். இப்பலகைகளின் நடுவில் ஒரு வளையம் இருக்கும். இவ்வளையம் தரையிலிருந்து மூன்று மீட்டர் உயரத்தில் இருக்கும். இந்த வளையத்திற்குள் பந்து போகும்படி பந்தைப் போடுவது 'கோல்' ஆகும்.

கூடைப்பந்தாட்டத்தை விளையாட இரு குழுக்கள் வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் 5 பேர் இருப்பர். ஒவ்வொரு குழுவினரும் எதிர்க் குழுவினரின் கூடையில் பந்து போடுவதுடன், தங்கள் கூடையில் எதிர் குழுவினர் பந்து போடாமலும் தடுக்க வேண்டும். பந்து காலில் படக்கூடாது. அதிகமான கோல்கள் போட்டவரே வென்றவராவர். நம் நாட்டிலும் இந்த ஆட்டம் எல்லா ஊர்களிலும் ஆடப்படுகிறது. இன்று ஒலிம்பிக் ஆட்டங்களில் கூடைப்பந்து முக்கிய இடம் பெற்றுள்ளது.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணையின்படி

சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகம் உருவாக்கம்

மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு, மக்களிடையே நல்லிணக்கம் பேணிக் காக்கப்பட்டு, அமைதிப் பூங்காவாகத் தமிழகம் திகழ்கிறது. குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றம் புரிந்தோருக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் ஆற்றல் உள்ளதாக, குற்றங்கள் குறைய நடவடிக்கை எடுக்கும் திறன் படைத்ததாக, தமிழகக் காவல்துறை விளங்குகிறது.



தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில், அன்றாடம் பெருகி வரும் வாகனங்கள், தினம் தினம் வந்து செல்லும் ஏராளமான மக்கள், கணினி யுக விஞ்ஞான வளர்ச்சி, உருவாகி வரும் பலவகைத் தொழிலகங்கள், தலைமை அலுவலகங்கள், பெருகி வரும் வியாபார நிறுவனங்கள் முதலான பல்வேறு காரணங்களால் ஏற்படும் சவால்களையும், பிரச்சினை களையும் சென்னைப் பெருநகர் காவல்துறை மிகவும் திறமுடன் சமாளித்து வருகிறது.

சென்னை மாநகரை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளில் விமான நிலையம் மற்றும் பெரும் தொழில் வளாகங்கள் முதலியன அமைந்துள்ளன. மேலும், புதிய புதிய தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் முதலானவையும் தொடர்ந்து உருவாகி வருகின்றன. அது மட்டுமன்றி, நகர மக்கள் தங்களது வாழ்விடமாக சென்னைப் புறநகர்ப் பகுதிகளை நாடி, வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியேறுவதால் அப்பகுதிகளில் மக்கள் தொகை மிக விரைந்து பெருகி வருகிறது. எனவே, சென்னையை ஒட்டியுள்ள பகுதிகள் புறநகர் என்ற தன்மையிலிருந்து மாறி, மாநகரின் அங்கமாக உருவெடுத்து வருகின்றன. இந்த வளர்ச்சியோடு இணைந்து காவல்துறை சமாளிக்க வேண்டிய சவால்களும், பிரச்சினைகளும் வளர்ந்து வருகின்றன. இதை எல்லாம் கருத்தில் கொண்டு தான், கடந்த ஆண்டு, அதாவது 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்,

சென்னையை ஒட்டியுள்ள செங்கை (கிழக்கு) காவல் மாவட்டத்தைச் சார்ந்த 31 காவல் நிலையங்களைத் தரம் உயர்த்தவும், உரிய அதிகாரிகள், காவலர் மற்றும் பணியாளர் பணியிடங்கள் உருவாக்கவும், தேவையான தளவாடங்கள் வாங்கவும் 22 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நான் ஆணையிட்டேன்.

மிக விரைவாக வளர்ந்து வரும் சென்னைப் புறநகர்ப் பகுதிகள் சென்னை மாநகரின் அங்கமாக வளர்ந்து உள்ளதால் ஏற்படும் சவால்களையும், பிரச்சினைகளையும் திறம்பட சமாளித்து, மக்களுக்குப் பாதுகாப்பையும், அமைதியையும் வழங்கிட, சென்னைப் பெருநகர் காவல் துறையின் அதிகார எல்லைக்குள், செங்கை (கிழக்கு) காவல் மாவட்டம் முழுமையும் உள்ளடக்கி விரிவு படுத்தவும், இப்பகுதிகளில் மொத்தம் உள்ள 41 காவல் நிலையங்களும் சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிடவும் நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இதனை அடுத்து, புதிதாக உருவாகும் சென்னைப் பெருநகர் காவல்

ஆணையரகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 155 காவல் நிலையங்கள் இயங்கும். இவற்றில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 34 ஆகும். சென்னையின் வடக்கே எண்ணூர் வரையிலும், தெற்கே வண்டலூர் வரையிலும், கிழக்குக் கடற்கரைச் சாலையில் முட்டுக்காடு வரையிலும், மேற்கே திருநின்றவூர் வரையிலும் சென்னைப் பெருநகர் காவல் துறை ஆணையரக அதிகார எல்லை விரிவுபடுத்தப்படும். அதன் காரணமாக, மாதவரம், அம்பத்தூர், புனித தோமையார் மலை ஆகிய இடங்களை தலைமை இடங்களாகக் கொண்ட மூன்று சட்டம் – ஒழுங்கு துணை ஆணையரக மாவட்டங்களும் ஏற்படுத்தப்படும். மத்திய சென்னை, அம்பத்தூர், ஆவடி உள்ளடங்கிய ஒரு துணை ஆணையரக போக்குவரத்து மாவட்டமும், தாம்பரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு காவல் உட்கோட்டமும் ஏற்படுத்தப்படும்.

புதிய சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகத்தின் ஒட்டுமொத்தக் கண்காணிப்பு, செயலாக்கம் மற்றும் மேற்பார்வை ஆகிய பணிகளைச் சென்னைப் பெருநகர் காவல் துறை ஆணையாளர் கவனித்துக் கொள்வார். இவருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் இருந்து செயல்படும் வகையில் ஒரு கூடுதல் சென்னைப் பெருநகர் காவல்துறை ஆணையாளர் இருப்பார். சட்டம் – ஒழுங்கைப் பராமரிக்க வடக்கு இணை ஆணையர், மத்திய இணை ஆணையர் மற்றும் தெற்கு இணை ஆணையர் என மூன்று காவல் இணை ஆணையர்கள் இருப்பார்கள். வடக்கு இணை ஆணையரின் கீழ், பூக்கடை, வண்ணாரப்பேட்டை, புளியந்தோப்பு, மாதவரம் ஆகிய துணை ஆணையரக காவல் மாவட்டங்களும் – மத்திய இணை ஆணையரின் கீழ் திருவல்லிக்கேணி, கீழ்ப்பாக்கம், அண்ணாநகர், அம்பத்தூர் ஆகிய துணை ஆணையரக காவல் மாவட்டங்களும் – தெற்கு இணை ஆணையரின் கீழ் மயிலாப்பூர், தியாகராயநகர், அடையார், புனித தோமையார் மலை ஆகிய துணை ஆணையரக காவல் மாவட்டங்களும் இயங்கும். சாலைகளில் இயங்கும் வாகனங்களை முறைப்படுத்தி, சென்னைப் பெருநகரில் சீரான சாலைப் போக்குவரத்து வசதியை வழங்கிட போக்குவரத்துக் காவல் இணை ஆணையர் ஒருவர் இருப்பார். இவரின் கீழ் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு என மூன்று போக்குவரத்து காவல் துணை ஆணையர்கள் செயல்படுவார்கள். இதுவன்றி, தலைமையகம், நுண்ணறிவு, தலைமைச் செயலகப் பாதுகாப்பு, மத்திய குற்றப் பிரிவு, ஆயுதப் படை மற்றும் காவல் துறை வாகனங்கள் ஆகியவற்றைத் தனித் தனியே கவனிக்க 6 காவல் துணை ஆணையர்கள் இருப்பார்கள்.

இதற்கென, காவல் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் மாநகர காவல் ஆணையாளர் பதவி புதிதாக ஏற்படுத்தவும், மாநகர காவல் ஆணையரகத்தில் ஒரு போக்குவரத்துத் துணை ஆணையர் பதவியும், காவல் துறைக் கண்காணிப்பாளர் நிலையில் மூன்று துணை ஆணையாளர் பதவிகளும், துணைக் காவல் கண்காணிப்பாளர் நிலையில் ஒரு உதவி ஆணையாளர் பதவியும் கூடுதலாக உருவாக்க நான் உத்தர விட்டுள்ளேன். மேலும், புதிய ஆணையரக மாவட்டங்களுக்குத் தேவையான வாகனங்கள், அறைக்கலன்கள், கணினிகள் மற்றும் இதரத் தளவாடங்கள் வாங்கவும் 25.89 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன்.

எனது ஆணையின் பேரில் தற்போது புதிதாக உருவாகும் சென்னைப் பெருநகர் காவல் துறை ஆணையரகத்தில் மொத்தம் 4 காவல் மண்டலங்களும், 16 காவல் மாவட்டங்களும், 36 காவல் உட்கோட்டங்களும், 155 காவல் நிலையங்களும் அமைந்திருக்கும். இவ்வாறு விரிவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகம், இந்தியாவில் உள்ள மிகப் பெரும் மாநகர் காவல் ஆணையரகங்களில் ஒன்றாக அமையும். இதன் மூலம் புறநகர்ப் பகுதிகளுக்கு மாநகர காவல் முறையின் (City Pattern of Policing) பயன்கள் கிடைக்கும். இந்த விரிவாக்கத் திட்டம், குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றவாளிகளை ஒடுக்குவதற்கும், போக்குவரத்து நெரிசலை சீரமைப்பதற்கும், ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் எடுக்க வழி வகுக்கும்.

உலக நாடுகளுக்கு, இந்தியாவின் கிழக்கு வாயில் ஆக சென்னை மாநகர் அமைய வேண்டும் என்பது எனது தொலைநோக்குத் திட்டம் ஆகும். இந்த நோக்கத்தை எய்தும் வகையில்தான் சென்னைப் பெருநகரில் ஒட்டுமொத்த வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறேன். மாநகரில் சட்டம் – ஒழுங்குப் பிரச்சினை எதுவுமின்றி அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை அமைவதே அனைத்து வளர்ச்சிப் பணிகளின் வெற்றிக்கு ஆதாரம் ஆகும். சென்னை மாநகர காவல் துறை ஆணையரக எல்லையை விரிவுபடுத்தி வலிவூட்ட, நான் எடுத்துள்ள இந்த நடவடிக்கை இதற்கு உறுதுணையாக அமையும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 17.2.2005

சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

திரு. ஜி. சந்தானம், இ.ஆ.ப.,
உறுப்பினர் – செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு, நீண்டகாலத் திட்டம் தயாரித்தல், திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட பெரிய மதிப்பீடுள்ள திட்டங்களைச் செயலாக்குதல், பெருநகர்ப் பகுதியில் ஒருங்கிணைந்த வளர்ச்சிகளை உறுதி செய்ய நெறிப்படுத்துதல் ஆகியப் பணிகளை மேற்கொள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1972–இல் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரகத் திட்டமிடல் சட்டம் 1971–இல் திருத்தம் செய்யப்பட்டு, 1975–ஆம் ஆண்டு இந்நிறுவனம் சட்டப்பூர்வமான அமைப்பாக உருவாக்கப்பட்டது.

அனைத்து நவீனகால வசதிகளைக் கொண்ட, ஆசியாவிலே பெரிய சந்தை வளாகம் அழுகும் பொருட்களுக்கும், விமான நிலையத்திற்கு ஈடான, மிகப் பெரிய பேருந்து முனையம் மற்றும் இந்தியாவிலேயே தனியார் ஒப்பந்த பேருந்துகளுக்கென அரசு உருவாக்கிய தனியார் ஒப்பந்த பேருந்து முனையம், ஆகிய திட்டங்கள் இக்குழுமத்தின் சிறப்பான செயல் திட்டங்களில் சிலவாகும். நகரின் விளிம்பைத் தொட்டுச் செல்லும், உள்வட்டச் சாலை, உருவாக இருக்கும் வெளிவட்டச் சாலை, தேசிய நெடுஞ்சாலைகளை விலக்கிச் செல்லும் இணைப்புச் சாலை, ஆகிய போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள், சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுடன் இணைந்து திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பணிகளை ஒருங்கிணைப்பு செய்யும் இக்குழுமத்தின் மற்றொரு முக்கியப் பணியின், கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களாகும். தவிர மறைமலை துணை நகர், மணலி புதுநகர், ஆகிய நகர்களின் செயலாக்கம், இக்குழுமம் தயாரித்த முதன்மைத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டத் திட்டங்களாகும்.

சென்னை மாநகராட்சி, 15 நகராட்சிகள், 21 சிறப்பு நிலை ஊராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கும் 200–க்கும் மேற்பட்ட கிராம உள்ளாட்சிகளை உள்ளடக்கிய 1,170 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி சென்னைப் பெருநகராகும். வடக்கே மீஞ்சூர், தெற்கே வண்டலூர், மேற்கே பாக்கம் மற்றும் கிழக்கே உத்தண்டி கிராமம் வரையிலுள்ள வங்காள விரிகுடா கடற்கரை எல்லை இதன் எல்லைகளாகும். இப்பெருநகர்ப் பகுதிக்கு தொலை நோக்குப் பார்வையுடன், நகர மற்றும் நகர்ப்புற வளர்ச்சிகளால் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு முதன்மைத்



திட்டம் தயார் செய்வது இக்குழுமத்தின் அடிப்படையான முதன்மைப் பணியாகும்.

பெருநகருக்கான முதலாம் முதன்மைத் திட்டம் 1975–இல் அரசினால் ஒப்புதல் பெறப்பட்டது. நகரின் மையப்பகுதியில் செறிந்துள்ள அடர்த்தியான வர்த்தகச் செயல்பாடுகளை, நகரின் புறப்பகுதிக்குக் கொண்டு சென்று, திட்டமிட்ட நவீன அங்காடி வளாகங்களை உருவாக்கி அதில் வணிகச் செயல்பாடுகளை உறுதி செய்வது இத் திட்டத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். இதன் அடிப்படையிலேயே, அங்காடி வளாகங்களுக்கு அருகில் உள் வட்டச்சாலையை ஒட்டி, ஆசியாவிலேயே பெரிய பேருந்து முனையம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. உள்வட்டச்சாலை, வெளிவட்டச்சாலை, தேசிய நெடுஞ்சாலைகளை விலக்கிச் செல்லும் இணைப்புச் சாலை முதலியன முதலாம் முதன்மைத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களாகும்.

வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் முதன்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். சென்னைப் பெருநகரின் பொருளாதார வளர்ச்சிக்கு தகவல் தொழில் நுட்பத்துறையின் தற்போதைய தாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, அரசு ஆணையின்படி தகவல் தொழில் நுட்பக் கட்டடங்கள் (ஐடி பில்டிங்) மற்றும் உயிரி தொழில்நுட்பக் கட்டடங்கள் (பையோடெக் பில்டிங்) போன்றவற்றிற்கு வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் சில அம்சங்களைத் தளர்த்தி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திட்ட அனுமதியை இக்குழுமம் வழங்கி வருகின்றது.

பூகோள தகவல் அமைப்புத் திட்டம்

இதனைத் தொடர்ந்து, 2011–இல் பெருநகரின் தேவைகளை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இரண்டாம் முதன்மைத் திட்டத்தின் வரைவு அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு தற்சமயம் அதனை நடப்பு நிலவரத்திற்கு ஏற்றவகையில் புதுப்பித்துச் சமர்ப்பிக்க, அரசு பணித்துள்ளது. இப்பணி 2005 ஆமாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு அரசிற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நகர்ப்புற நிலங்களைக் குடியிருப்புப் பணியின் உச்சநிலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த விழையும் புதிய நில உபயோகக் கொள்கை இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். பூகோள தகவல் அமைப்புத் திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகவல் அமைப்பு, முதன்மைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பில் முக்கியப் பங்கு வகிக்க உள்ளது.

மெரினா கடற்கரை அழகுப்படுத்தும் திட்டம்

உலகிலேயே இரண்டாம் நீண்ட அழகான கடற்கரை சென்னையின் மெரினா கடற்கரையாகும். இதன் அழகிற்கு அழகு சேர்க்கும் வகையில் மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2003–இல் தொடங்கி வைக்கப்பட்டது. மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் விரிவான திட்டத்தை இக்குழுமம் தயார் செய்துள்ளது. இதன் பரிந்துரைப்படி தமிழக கடற்கரை மேலாண்மைக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் தனியாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் முடிய உள்ள 3.2 கி.மீ. மணற்பாங்கான மெரினா கடற்கரைப் பகுதியை ஆண்டிற்கு ரூ.36 இலட்சம் செலவில் இயந்திரத்தின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்

சென்னை நகர விளிம்பில் கோயம்பேடு கிராமத்தில் 295 ஏக்கர் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் அழுகும் பொருள்களான காய், கனி, மலர்களுக்கான மொத்த விற்பனை அங்காடி வளாகம் அனைத்து நவீன வசதிகளுடன் ரூ.40 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, இயங்கி வருகின்றது. குளிர்பதனக் கிடங்குகள், துணை மின் நிலையங்கள், காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், தபால்தந்தி அலுவலகம், சிற்றுண்டியகங்கள், எடை இயந்திர நிலையங்கள், நகரப் போக்குவரத்து பேருந்து நிறுத்துமிடம் ஆகிய வசதிகளை உள்ளடக்கிய இத்திட்டம் இக்குழுமத்தின் செயல் திட்டங்களின் மணி மகுடமாகும்.

கோயம்பேடு சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்

37 ஏக்கர் பரப்பளவில் ரூ.103 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய ஆசியாவிலேயே பெரிய புறநகர் பேருந்து நிலையம் 18.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இட நெருக்கடி நிறைந்த பகுதிகளில் செயல்பட்டுவந்துள்ள அனைத்துப் புறநகர் பேருந்து நிலையங்களின் செயல்பாடுகள் இங்கு மாற்றப்பட்டு அவ்விடங்களில் நெருக்கடி குறைக்கப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையத்திற்கு இணையாக இப்பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்

தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்கிவரும் சீரிய பணியை ஆற்றிவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலின்படி, கோயம்பேட்டில் புறநகர் பேருந்து நிலையம் அருகிலேயே முதன் முதலாக தனியார் ஒப்பந்த ஊர்திகளுக்கான பேருந்து முனையம் ரூ.3 கோடி செலவில் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22.09.2003 அன்று திறந்து வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

காய்கறிக் கழிவினை மூலப் பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் திட்டம் :

கோயம்பேடு மொத்த விற்பனை அழுகும் பொருட்களுக்கான அங்காடி வளாகத்தில் நாளொன்றுக்கு 80 டன் திடக் கழிவுகள் கிடைக்கின்றன. இவைகளை அப்புறப்படுத்தி அழிக்கும் பணி பெரும் சுமையான ஒன்றாகும். இந்நிலையில் இக்கழிவுகளை மூலப் பொருளாக்கி அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் மாதிரித் திட்டம் ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு செயலாக்கம் பெற்றுள்ளது. இந் நிதியாண்டின் இறுதிக்குள் இத்திட்டத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுவிடும். ஆண்டிற்கு 17.2 இலட்சம் யூனிட்டுகள் மின்சாரம் தயாரிக்கும் வண்ணம் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 200 கிலோ வாட் மின் சக்தி உற்பத்தியுடன் 3 டன் இயற்கை உரக் கட்டிகளும் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும்.

திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் – இரண்டாம் நிலை:

கடற்கரை நிலையத்திலிருந்து திருமயிலை வரை உள்ள 8.55 கி.மீ. தூரத்தில் ஏற்கெனவே முதல்நிலை திட்டம் செயலாக்கம் பெற்று பொதுமக்கள் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். இரண்டாவது நிலையில் திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீ. தூரத்தை மேம்படுத்தி இரயில் போக்குவரத்து ஏற்பாட்டினைச் செய்ய மத்திய மாநில அரசுகள் 33 : 67 என்ற விகிதாச்சாரத்தில் செலவிட ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.706.35 கோடிகளாகும். இரண்டாம் நிலையில் 3.317 கி.மீ. தூரம் தரையிலும் 7.85 கி.மீ. தூரம் பாலத்தின் மீதும் செல்வதாக அமையும். இதில் 9 நிலையங்கள்



185429.

அமைய உள்ளன. அவைகளில் 7 நிலையங்கள் பாலத்தின் மேல் அமையும். தடங்கல் இல்லாத இருவழிப் பாதையில் இப்போக்குவரத்து அமையத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, கடற்கரையிலிருந்து திருவான்மியூர் வரை இரயில் போக்குவரத்து இயக்கப்பட்டு வருகிறது.



உள்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளைத் துரித வேகத்தில் மேம்படுத்துவதற்காக இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வீட்டுவசதி, போக்குவரத்து, குடிநீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் மழைநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய அடிப்படைக் கட்டமைப்புகளை, தனியார் மற்றும் பொது நிறுவனங்களின் உதவியோடு ஓராண்டு, மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு செயல் திட்டங்களாக இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. சென்னைப் பெருநகரத்தில் வீட்டுவசதி, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி, சாலை வசதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2004–2005–ஆம் நிதியான்டில் ஓராண்டுத் திட்டத்தின் கீழ் ரூ2007.12 கோடி முதலீடு செய்ய திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

வரன்முறைப்படுத்தும் திட்டம்

31.03.2002–க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குபடுத்தும் திட்டத்தை 2000, 2001 மற்றும் 2002–ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து 59,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வரன்முறை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.220 கோடியினை வரன்முறைப்படுத்தும் கட்டணமாக வசூல் செய்து, வட்டித்தொகை ரூ.8.19 கோடியுடன் ரூ.228.19 கோடியினை அரசின் தொகு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதி உதவித் திட்டப்பிரிவு

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில், உள்ளாட்சி நிதி உதவித் திட்டத்தின் மூலம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதியில் அடங்கிய உள்ளாட்சிகளுக்கு, சேவைத் திட்டங்களை மேம்படுத்த, மானிய உதவி 1982 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் (அதாவது 1998–99 நிதியாண்டிலிருந்து) ரூ.150 இலட்சம் மானியம் ஒதுக்கப்படுகிறது. ஒரு திட்டத்திற்கு ஒரு நேரத்தில், திட்ட மதிப்பீட்டில் 90 சதவிகிதம் அல்லது அதிகபட்சம் ரூ.10 இலட்சம் கொடுக்கப்படும். கீழ்கண்ட திட்டங்களுக்கு மானிய உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

1. சாலை மேம்பாடு
2. சுடுகாடு அல்லது இடுகாடு மேம்பாடு
3. தெருவிளக்குகள் அமைத்தல்
4. குடிநீர்ப் பணி
5. கழிவுநீர் அகற்றும் பணி
6. மழைநீர்க் கால்வாய் அல்லது கழிவு நீர்க்கால்வாய்
7. குப்பை அகற்றும் பணிக்கு வாகனம் வாங்குதல்

சமுதாயம் சார்ந்த சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளின் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான அந்தந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடன் உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் "சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம்" செயலாக்கப்படுகின்றது. சமுதாய மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு அதற்கான திட்டங்கள் வகுக்கப்பெற்று, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் நிதிப்பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

நடப்பு நிதியாண்டில் ரூ.100 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகளின் திட்ட மதிப்பீட்டில் 80 சதவிகிதத்தை குழுமம் மானியமாக அளிக்கின்றது. மீதமுள்ள நிதி 20%–இல் (10%) உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும், சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடமிருந்தும் (10%) பெற்று நிறைவு செய்யப்படுகின்றது.

செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

மொத்த விற்பனை உணவு தானிய அங்காடி அமைத்தல்:

சென்னை நகரின் மொத்த வியாபாரப் பகுதியான வள்ளலார் நகரில் (ஜார்ஜ் நகரில்) நெரிசலைக் குறைக்கும் வகையில் ஏற்கெனவே காய், கனி மற்றும் மலர் ஆகிய அழுகும் பொருட்களுக்கு மொத்த விற்பனை அங்காடிகள் கோயம்பேட்டில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கோயம்பேடு மொத்த விற்பனை வணிக வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் உணவு தானிய அங்காடி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

துரித இரயில் போக்குவரத்து நிலையங்களின் வான்வெளிப் பகுதியை வர்த்தகப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் திட்டம்

இரண்டாம் நிலையில் அமைக்கப்படவுள்ள துரித இரயில் போக்குவரத்து நிலையங்களின் வான்வெளிப் பகுதிக்ளை வர்த்தகப் பயன்பாட்டிற்கு உபயோகப்–படுத்துவதற்கானத் திட்டத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிச் குழுமம் தயாரித்துள்ளது. அதன்படி இரண்டாம் நிலையில் அமைய உள்ள ஒவ்வொரு நிலையமும் கலையம்சத்துடன் எல்லாவித வசதிகளுடன் கூடிய அலுவலக / வணிக மையங்களைக் கொண்டதாக அமைய உள்ளது. ஒவ்வொரு நிலையமும் சுமார் 20,000 சதுர மீட்டர் வர்த்தகப் பயன்பாட்டிற்கான தளப்பரப்பினைக் கொண்டதாக அமையும். மொத்தத்தில் சுமார் 2,00,000 சதுர மீட்டர் தளப்பரப்பளவு இத்திட்டத்தில் வர்த்தகப் பயனுக்காக அமைக்கப்பட உள்ளது. இதற்கான பூர்வாங்கப் பணிகளை குழுமம் ஆரம்பித்துள்ளது. ஆலோசனை வல்லுநர்கள் இறுதி வரைபடங்களைச் சமர்ப்பிக்க உள்ளனர். இவ் வரைபடங்களின்படி திட்டம் செயல்படுத்தப்படும்.

வெளிவட்டச் சாலை

நகரின் மையப்பகுதியின் நெருக்கடியைக் குறைக்கும் முகமாகச் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டப் பரிந்துரைகளின் ஒன்றான உள்வட்டச் சாலையினைத் தொடர்ந்து, வெளிவட்டச் சாலை அமைக்கும் பணியில் முனைப்புடன் நடவடிக்கைகளை குழுமம் மேற்கொண்டு வருகின்றது. வடக்கு எல்லையான மீஞ்சூரையும் தெற்கிலுள்ள வண்டலூரையும் இணைக்கும் வெளிவட்டச் சாலை 62 கிலோ மீட்டர் நீளத்தில் அமைய உள்ளது; இதற்கான நில எடுப்புப் பணி துரிதமாகச் செயலாக்கம் பெற்று வருகின்றது.

கடந்த டிசம்பர் 26–ஆம் நாள் சுனாமி பேரலைகளால் தமிழக கடற்கரைப்பகுதிகளில் ஏற்பட்ட பேரிடர் துயர் நீக்க, நன்கொடைகள் வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாளிதழ்களில் 16.01.2005 அன்று வேண்டுகோள் வெளியிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளை ஏற்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவரும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அமைச்சருமான திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் 19.01.2005–இல் ரூ.3 கோடிக்கான காசோலையை குழுமத்தின் சார்பில் வழங்கினார்.

சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு திட்டமிடல் முறைமை மற்றும் நகர வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மூலம் சென்னைப் பெருநகர் பகுதியின் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகிய பணித்தத்துவத்துடன் மேற்காணும் திட்டங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இக்குழுமம் செயலாற்றி வருகின்றது. ❖

சுனாமி நிவாரண உதவிகளில், சிறிய மீன்பிடிப் படகுகள் விஷயத்தில் காட்டும் அணுகுமுறை விசைப்படகுகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதம் (17-2-2005)

சுனாமி தாக்குதலில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்க உதவி செய்வது குறித்து சில பிரச்சினைகள் சம்பந்தமாக கடந்த 4.2.2005 அன்று நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தின் தொடர்ச்சியாக இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறேன்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலான மீன்பிடி படகுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு வழங்கப்படும் மானியம் 35 சதவிகிதத்தில் இருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது என்றும், இந்த மானியத் தொகை மாநில அரசு மூலமாக வழங்கப்படும் என்றும் 17.2.2005 அன்று மத்திய அரசு அமைச்சரவைச் செயலாளர் தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மானியம் போக, படகு வாங்க தேவைப்படும், மீதி பணத்துக்கு வங்கிகளுக்குச் செல்வதோ அல்லது வேறு ஏதாவது வ்கையில் பணத்தை ஏற்பாடு செய்வதோ அந்தப் பயனாளியின் விருப்பத்தைப் பொருத்தது என்று இருப்பதாக அறிகிறேன். ஆனால், பயனாளிகளுக்கு தேவைப்படும் வங்கிக் கடனை மாநில அரசே ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 100 சதவிகித மானியம் வழங்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

விசைப்படகுகளை பொறுத்தவரை வேறு விதமான அணுகுமுறையை மேற்கொண்டுள்ளீர்கள். விசைப் படகுகளுக்கான மத்திய அரசின் மானியம் பொதுத்துறை வங்கி மூலமே வழ்ங்கப்படும் என்று தலைமைச் செயலாளரிடம் மத்திய அமைச்சரவைச் செயலாளர் தெரிவித்திருப்பதாக அறிந்தேன்.

வங்கிகளுக்கு அந்த மனுக்களை மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும். ஏற்கெனவே மானியம் சம்பந்தமாக அறிவிக்கப்பட்டுள்ளதில் எந்த மாற்றமும் இப்போது செய்யப்படவில்லை என்பதையும் அறிந்தேன்.

சிறிய மீன்பிடிப் படகுகள் விஷயத்தில் காட்டும் அணுகுமுறை விசைப்படகு விஷயத்தில் காட்டாதது ஆச்சரியம் அளிக்கிறது. இந்த விஷயத்தில் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும்.

தங்கள் மாவட்டத்தின் அருகே புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள காரைக்காலில் பின்பற்றும் நடைமுறையை ஏன் இங்கு பயன்படுத்தக்கூடாது என்று நாகப்பட்டினம் விசைப்படகுகாரர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இந்தப் பிரச்சினையில் புதுவை மாநில அரசு விரிவான உத்தரவை பிறப்பித்துள்ளதை தங்களது தனி கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரைக்கால் பகுதியில் பாதிக்கப்பட்ட விசைப்படகு மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு விட்டது.

இதேபோன்று எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறதோ அதனை வங்கிக் கடனுக்கு தொடர்புபடுத்தாமல் மீனவர்களுக்கே வழங்க வேண்டும் என்று நாகப்பட்டினம் மீனவர்கள் கூறுகிறார்கள்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ரூ. 7 இலட்சத்து 17 ஆயிரத்து 559 – க்கான காசோலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம், 28.2.2005 அன்று செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வ. ராமதாஸ், இ.ஆ.ப., செய்தி – மக்கள் தொடர்புத்துறை ஆணையர் மற்றும் இயக்குநர் மற்றும் அலுவலால் சிறப்புச் செயலாளர் திரு. வ. கனகராஜ், இ.ஆ.ப., ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த விஷயத்தை நான் மேலும் நீடித்துக் கொண்டு போக விரும்பவில்லை. எளிதாக தீர்வு காணக் கூடிய பிரச்சினை இது. சிறிய படகுகள் விஷயத்தில் இப்போது என்ன அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதோ அதே அணுகுமுறை விசைப்படகுகள் விஷயத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். விசைப்படகுகளுக்கான நிதியையும் மாநில அரசிடமே வழங்க வேண்டும். விசைப்படகு மீனவர்கள் வங்கிக் கடன் வேண்டும் என்று விரும்பினால் தேவையான ஏற்பாடுகளை மாநில அரசு செய்யும்.

வங்கிகள் மூலமாகவோ அல்லது அவர்கள் சொந்த முயற்சி மூலமாகவோ கடன் பெற்று விசைப்படகுகளைப் பழுதுபார்க்கவோ அல்லது வேறு புதிய படகுகளை வாங்கவோ விரும்பினால் அவர்களுக்கு வழங்கப்படும் மானியமானது பலனளிக்கும் சொத்தாக அமைய வேண்டும். தகுந்த பாதுகாப்புடன் நிரந்தரச் சொத்தாக இருக்கும் வகையில் வழங்கப்படும்.

நான் தெரிவித்த யோசனைகளை ஏற்று சிறிய படகுகள் விஷயத்தில் சில மாற்றங்களைச் செய்ததற்காக மீண்டும் ஒருமுறை தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய படகுகள் விஷயத்தில் காட்டப்பட்ட அதே அணுகுமுறையை விசைப்படகு விஷயத்திலும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டு விடும். மறுவாழ்வுப் பணிகளிலும் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வசதியாக இருக்கும். பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால் மீண்டும் இந்த யோசனைகளை நான் தெரிவித்துள்ளேன்.

எனவே இப்போது தெரிவித்துள்ள இந்த யோசனைகளை ஏற்றுத் தீர்வு காணுவீர்கள் என்று நம்புகிறேன்.

❖ ❖ ❖

கிராமப்புறங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டத்தை 24.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் இரண்டு தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும் என்று "உலக தென்னை மர தினமான" 2.9.2004 அன்று அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்ற தென்னங் கன்றுகளை அக்குழந்தைகளின் பெற்றோர் தங்களுக்குச் சொந்தமான விளை நிலத்திலோ அல்லது தங்களது வீட்டின் அருகிலோ வளர்க்கலாம். பெண் குழந்தைகளுடன் இணைந்து வளர்கின்ற இந்தத் தென்னங்கன்றுகள் ஐந்து ஆண்டுகளில் மரமாகி அதன்பின் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஆயிரம் ரூபாய் அளவிற்குத் தேங்காய் விளைச்சலைத் தரும். இவ்வருமானத்தை அந்தப் பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும், இதர முன்னேற்றத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்னும் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தப் புதுமைத் திட்டத்தை அறிவித்தார்கள்.

இதன்படி, 24.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரோஜா–ஆறுமுகம் அவர்களது மகள் யுவஸ்ரீ, தாமரைச்செல்வி–அருண்குமார் ஆகியோரது மகள் கனிகாஸ்ரீ, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜோஸ்லைன்–அமல்ராஜ் ஆகியோரது மகள் சிந்து, ஜெயலட்சுமி–செல்வராஜ் ஆகியோரது மகள் ஜெசியாள், மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்மலா–மலையப்பன் ஆகியோரின் மகள் ஆகிய ஐந்து பெண் குழந்தைகளுக்கும் தலா இரண்டு தென்னங்கன்றுகளை அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின்படி சென்னை மற்றும் நீலகிரி ஆகிய இரு மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் 2.9.2004க்குப் பிறகு பிறக்கும் அனைத்துப் பெண் குழந்தைகளும் பயனடைவார்கள். இதன் மூலம் நடப்பு ஆண்டில் சுமார் 2,286 எக்டேர் நிலத்திற்குச் சமமான அளவில் தென்னை மர சாகுபடி அதிகரிக்கும். இந்தத் திட்டத்தின் மூலம், பெண் குழந்தைகளின் பொருளாதாரப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன், இந்தியாவிலேயே தென்னை சாகுபடிப் பரப்பளவில் இரண்டாவது இடத்திலும், தென்னை உற்பத்தியில் முதல் இடத்திலும் உள்ள தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரிக்கவும் இத்திட்டம் உதவும்.

* * *

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி



தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சென்னை மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்கள் பயன் பெறும் வகையில் சிறந்த வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய 28 பயிற்சிகள் கீழ்க்கண்ட 7 மிகச் சிறந்த நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

1) மத்திய பிளாஸ்டிக் இன்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி (சிப்பெட்) கிண்டி (பிளாஸ்டிக் பிராசஸிங் டெக்னாலஜி, கேட் கேம், சிஎன்சி, ஆட்டோகேட் பயிற்சிகள்),

2) ஆடை வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனம் (ஏடிடிசி) கிண்டி, (அப்பேரல் மேனுபாக்சரிங் டெக்னாலஜி, பேட்டன் கட்டிங், புரொடக்ஷன் சூப்பர்வைசர், தையல் மிஷன் ஆப்பரேட்டர் பயிற்சிகள்)

3) இன்ஸ்டிட்டியூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மண்ட் கேட்டரிங் டெக்னாலஜி மற்றும் அப்ளைடு நியூட்ரிசியன், தரமணி (புட் பிவேரேஜ், ஹவுஸ் கீப்பிங், கேட்டரிங் பேக்கரி மற்றும் கன்பெக்ஷனரி பயிற்சிகள்)

4) டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக், தரமணி (நகை உற்பத்திப் பயிற்சி, அழகுக் கலை, செக்ரேட்ரியல் பிராக்டிஸ் பயிற்சிகள்)

5) இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் லெதர் புராடெக்ட்ஸ், குரோம்பேட்டை (காலணி தயாரித்தல், தோல் பொருட்கள் உற்பத்தி பயிற்சிகள்)

6) அல்ட்ரா சிஸ்டம், அசோக் நகர் (கணினி வன்பொருள் பயிற்சி)

7) இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் பியூட்டி தெரப்பி, திருவல்லிக்கேணி (அழகுக் கலைப் பயிற்சி).

மொத்தம் 1,210 நபர்கள், 2005 பிப்ரவரி மாதம் 21, 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் அந்தந்த பயிற்சி நிறுவனங்களில் நேர்முகத் தேர்வு நடத்தி பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். மேலும் பயிற்சி வகுப்புகள் 2005 மார்ச் முதல் வாரத்தில் தொடங்கப்படும். பயிற்சி நிறுவனங்களுக்கான பயிற்சிக் கட்டணம் தாட்கோவினால் வழங்கப்படும். மற்றும் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக தலா ரூ.500 வழங்கப்படும். மேற்படி பயிற்சி முடித்தவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கிடைக்கவும், சொந்தமாகத் தொழில் நிறுவனங்கள் தொடங்கிட வழிவகுக்கும். ❖

அனைத்து மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு அரசு, செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக்கூட்டம் 23–2–2005 அன்று, சென்னை, தரமணியில் அமைந்துள்ள திரைப்படக் கல்லூரி அரங்கில் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களால் மேற்கொள்ளப் பட்ட 2004ஆம் ஆண்டிற்கான பல்வேறு களவிளம்பரப் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வ. ராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள், செய்தி– மக்கள் தொடர்புத்துறை ஆணையர் மற்றும் இயக்குநர் மற்றும் அலுவலால் சிறப்புச் செயலாளர் திரு.வ.கனகராஜ், இ.ஆ.ப., ஆகியோர், அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாவட்டங்களில் மேற்கொண்ட பல்வேறு களவிளம்பரப் பணிகள், அரசுத் திட்டங்களை விளக்கிடும் வீடியோ படக்காட்சிகள், பல்துறைப் பணி விளக்க முகாம்கள், பொருட்காட்சிகள், திரையரங்க ஆய்வு மற்றும் நினைவகப் பராமரிப்பு உட்பட பல்வேறு விளம்பரப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள், அவ்வப்போது உடனுக்குடன் கிராமப்புற மக்களுக்குச் சென்றடையும் விதத்தில், செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களின் களப்பணிகள் அமைந்திட வேண்டும் என்றும், மாவட்டங்களில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளுவதில் அனைத்து அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், கள விளம்பரப்பணிகளை மேற்கொள்வதில் கையாளப்பட வேண்டிய புதிய அணுகுமுறைகள் குறித்தும், அரசுத் திட்டங்களை மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய யுக்திகள் குறித்தும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் திரு. இரா. பரதன் அவர்கள், துணை இயக்குநர்கள் திரு. மு. அண்ணாமலை, திரு.சி.என்.ஏ.ராஜேந்திரன், திரு.நா.தில்லைகோவிந்தன், சார்புச் செயலாளர் திரு. கே. இராமச்சந்திரன், உதவி இயக்குநர்கள் திரு. கே. டி. புகழேந்தி, திரு. என். ஆர். ஹரிகுமார், திரு.கே.பி.ஆர். சுகுமாறன், திரு. பி. நாராயணமூர்த்தி மற்றும் அனைத்து செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களும் கலந்து கொண்டனர். ❖

படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் வணிக வரித்துறை, சிறு தொழில் துறையின் மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகிய துறைகளின் பயன்பாட்டுக்கென மொத்தம் 52 புதிய வாகனங்களை வழங்கினார்கள்.

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் 151–ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 19.02.2005 அன்று சென்னையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காவல்துறையினர் குடும்பங்களுக்கு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை (10.2.2005)

செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், மணலி புதுநகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. இரா. பழனி 9.12.2004 அன்றும், கோயம்புத்தூர் மாவட்டம், மங்கலம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. அ. ரவீந்திரன் 5.1.2005 அன்றும், சென்னை மாநகர காவல் ஆயுதப்படை, 33ஆவது அணி "E" நிறுமத்தைச் சேர்ந்த இரண்டாம் நிலைக் காவலர் திரு.ஆர். பாஸ்கர் 9.1.2005 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, 7ஆவது அணியில் தற்காலிக ஹவில்தாராக பணியாற்றிய திரு. கிஷோர்குமார் 14.1.2005 அன்றும் சாலை விபத்து காரணமாக காலமானார்கள் என்ற செய்தியையும்,

கோயம்புத்தூர் மாநகர், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் குற்றப் பிரிவு தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆர்.போஸ் 17.1.2005 அன்று இரயில் தண்டவாளத்தைக் கடக்கும் போது இரயில் மோதி காலமானார் என்ற செய்தியையும்,

சென்னை மத்திய இரயில்வே இருப்புப் பாதை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ந. கஜேந்திரன் 4.12.2004 அன்றும், சென்னை, துறைமுகம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சி. சந்திரன் மற்றும் தருமபுரி மாவட்டம், மதிகோண்பாளையம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. டி. சுரேந்திரன் ஆகியோர் 19.12.2004 அன்றும், திருவாரூர் மாவட்டம், ஆயுதப்படைப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ப.தீனதயாளன் 23.12.2004 அன்றும், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வடக்குக் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. கோ. முத்துசாமி மற்றும் சென்னை, தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. பி. சீனிவாசன் ஆகியோர் 1.1.2005 அன்றும், தஞ்சாவூர் மாவட்டம், பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ்.துரை 5.1.2005 அன்றும், தூத்துக்குடி மாவட்டம் பகவந்தனை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ப. நாகராஜன் 7.1.2005 அன்றும், சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கு. சுப்பராயன் 9.1.2005 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. இரா. கரியமால் 10.1.2005 அன்றும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ்.தாமஸ் 12.1.2005 அன்றும், சென்னை, புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ். மோகன் 16.1.2005 அன்றும், வடக்குக் கடற்கரை போக்குவரத்துக் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. கே. தவசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ராஜ்குமார் ஆகியோர் 17.1.2005 அன்றும், புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. என். இலட்சுமணன், 22.1.2005 அன்றும், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. டி. ராஜன் 26.1.2005 அன்றும், நாமக்கல் மாவட்டம், பேளுகுறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ரா. பரமசிவம் 28.1.2005 அன்றும் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. க. வேதாச்சலம் 26.12.2004 அன்றும், நீலகிரி மாவட்டம், மேல் குன்னூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. மு. சந்திரசேகரன் 27.12.2004 அன்றும், தேனி மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் முதல்நிலைக் காவலராகப் பணியாற்றி வந்த திரு. மா. சேகர் 28.12.2004 அன்றும், இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆர். ஜெயபாலன் 6.1.2005 அன்றும், சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.எஸ். ஜெயகுமார் 10.1.2005 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.பெ. சக்திவேல் 16.1.2005 அன்றும் மாரடைப்பால் காலமானார்கள் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

சாலை விபத்துகளிலும், உடல்நலக்குறைவாலும், மாரடைப்பாலும் காலமான காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன். □

சிறப்பான நிவாரணப் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பன்னாட்டு சுனாமி மாநாடு பாராட்டு

தமிழ்நாட்டில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயலாக்கிய தமிழக அரசுக்கு, தாய்லாந்தில் நடந்த பன்னாட்டு சுனாமி மாநாட்டில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

ஆசியாவின் கடலோர நாடுகளை, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி சுனாமி என்னும் ஆழிப்பேரலை தாக்கியதால், பெரும் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டது.

இதையடுத்து, இனிவரும் காலங்களில் சுனாமி வராமல் தடுப்பது எப்படி ? என்பது பற்றியும், சுனாமி தாக்கினால் நிவாரணப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது? என்பது பற்றியும் விவாதிக்க, பன்னாட்டு சுனாமி மாநாடு, தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் அண்மையில் நடைபெற்றது.

அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும், அம் மாநாட்டில் பங்கேற்ற நிபுணர்கள், தமிழ்நாட்டில் சுனாமி தாக்கிய பகுதிகளில் நிவாரணப் பணிகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதாகப் பாராட்டினார்கள் என்று அம் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றுத் திரும்பிய செஞ்சிலுவைச் சங்க நிருவாகி திரு. ராஜ மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு, சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளலாம் என, அம் மாநாட்டில் அறிவுரை வழங்கப்பட்டதாகவும், திரு. ராஜமகேந்திரன் தெரிவித்தார்.

□ □ □

திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்

26.12.2004 அன்று இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா அருகில் ஏற்பட்ட பூகம்பத்தினால் மிகப்பெரிய சுனாமி என்னும் ஆழிப் பேரலைகள் உருவாகி தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் பாதிக்கப் பட்டபோது, திருவள்ளூர் மாவட்டத்தில் திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் பழவேற்காடு ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டன.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

திருமதி. பா. வளர்மதி, அவர்கள் தமிழக அரசு தலைமைக் கொறடா திரு. பி.எம். நரசிம்மன், அவர்கள் சுனாமி நிவாரண உதவி ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் திருமதி. பி. சோசம்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் திரு. ஆதி ராஜாராம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொன்னேரி சார் ஆட்சியர் திருமதி. சுஜிதா மஸ்வைத்யன், ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் திருவொற்றியூரில் 7 திருமண மண்டபங்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டன. அரசு மற்றும் தனியார் மருத்துவர்களைக் கொண்டு மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டன. அதேபோல் பழவேற்காடு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் பொன்னேரியில் 6 திருமண மண்டபங்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வசதியும் மருத்துவ வசதியும் 4 நாட்களுக்கு வழங்கப்பட்டன.

சுனாமியால் திருவொற்றியூர் பகுதியில் 17 நபர்களும், பழவேற்காடு பகுதியில் 12 நபர்களும் ஆக மொத்தம் 29 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுனாமியினால் உயிரிழந்தவர்களுக்குத் தலா ரூபாய் ஒரு இலட்சம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் உயிரிழந்த 29 நபர்களுக்கு

தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் வழங்கினார்.

மேலும் சுனாமியால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட 4,413 குடும்பங்களுக்கு தலா ரூ. 4 ஆயிரம் ரொக்கப் பணமும், 60 கிலோ அரிசி, வேட்டி, சேலை, இரண்டு போர்வைகள் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டன. இதனுடைய மொத்த மதிப்பு ரூ.1 கோடியே 65 இலட்சத்து 72 ஆயிரம் ஆகும்.

அதேபோல் சுனாமியால் தொழில் பாதிக்கப்பட்ட 12 ஆயிரத்து 455 குடும்பங்களுக்கு தலா ரூ. 2 ஆயிரம் மற்றும் வேட்டி, சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி மற்றும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவைகள் வழங்கப்பட்டன. இதன் மொத்த மதிப்பு 2 கோடியே 91 இலட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

ஆகமொத்தம், திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் முழுமையாக பாதிக்கப்பட்ட 4,143 குடும்பங்களுக்கும், தொழில் ரீதியாக பாதிக்கப்பட்ட 12 ஆயிரத்து 455 குடும்பங்களுக்கும், சுனாமியால் உயிரிழந்த 29 நபர்களின் குடும்பத்திற்கும் நிவாரண உதவியாக இதுவரை ரூ. 2 கோடியே 49 இலட்சத்து 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

சுனாமியால் வீடு இழந்த குடும்பங்களுக்கு திருவொற்றியூர் பகுதியில் கார்கில் நகரிலும், பழவேற்காடு பகுதியில் தோணிரேவு கிராமத்திலும் மொத்தம் 512 தற்காலிகக் குடிசைகள் அமைக்கப் பட்டுள்ளன. அக்குடிசைகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. பா.-வளர்மதி அவர்களும், தமிழக அரசு தலைமைக் கொறடா திரு. பி.எம். நரசிம்மன் அவர்களும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் திரு. ஆதி ராஜாராம் அவர்களும், மாவட்ட ஆட்சியர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப. அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.எஸ்.கண்ணன் மற்றும் திரு. டி. ஆறுமுகம் அவர்களும், சார் ஆட்சியர் திருமதி. சுஜிதாமஸ் வைத்யன், இ.ஆ.ப. அவர்களும் வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி அவர்கள், வட்டாட்சியர்கள் திரு. ஜேக்கப் அவர்கள், திரு. கேசவன் அவர்கள், மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. குணாளன் அவர்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

– எம். அசோகன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவள்ளூர்.

வெப்ப இரத்த உயிரினங்கள்

மனிதனைப் போலவே உடல் வெப்பத்தை ஒரே சீரான நிலையில் வைத்துக் கொள்ளும் சில உயிரினங்கள் உள்ளன. சுற்றுப்புற வெப்ப நிலைக்கு ஏற்ப மாறாமல் ஒரே நிலையாக வெப்ப நிலையையுடைய உயிரினங்கள் "வெப்ப இரத்த உயிரினங்கள்" என அழைக்கப்படுகின்றன. குதிரை, நாய், பூனை போன்ற குட்டிப் போட்டுப் பால்கொடுக்கும் உயிரினங்களும் பறவைகளும் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய காற்றாலை



ஆசியாவின் மிகப்பெரிய காற்றாலை நிறுவனமான சுஸ்லான் (தனியார் நிறுவனம்) இந்தியாவிலேயே முதன் முறையாக 2 மெகாவாட் திறனுடைய மிகப்பெரிய காற்றாலையை திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, செட்டிகுளத்தில் நிறுவியுள்ளது. இந்தக் காற்றாலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 8–12–2004 அன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய இக்காற்றாலையின் உயரம் 80 மீட்டர்; ரோட்டார் விட்டம் 88 மீட்டர் ஆகும். இந்தக் காற்றாலை சுழலும் போது பிளேடு உயரம் சேர்ந்து 124 மீட்டர் வரை உயரம் இருக்கும். கின்னஸ் சாதனையில் பதிவு செய்யப்பட்டுள்ள குதுப்மினார் உயரமான 72 மீட்டரை விட 1.75 மடங்கு இது அதிகமாகும். இந்த 2 மெகாவாட் காற்றாலையின் மொத்த எடை 260 டன் ஆகும். டர்பைன் 70 டன், பிளேடுகள் 32 டன். நீளமான டவர் 160 டன் எடை கொண்டதாகும். குஜராத்திலிருந்து கன்னியாகுமரிக்கு 2,100 கி.மீட்டர் தூரத்தைக் கடந்து கொண்டு வரப்பட்டது. 150 அடி நீள டிரெய்லரில் இதன் பிளேடுகள் கொண்டு வரப்பட்டன.

இந்த ராட்சத 2 மெகாவாட் காற்றாலை ஆண்டுக்கு 72 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்கும் திறன் வாய்ந்தது. ஆண்டுக்கு 260 மெகாவாட் மின்சாரம், காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்குகிறது. இந்தியாவில் மட்டும் இந்தத் தனியார் நிறுவனம் 9,000 எக்டேர் நிலத்தில் காற்றாலைகளை நிறுவி உள்ளது.

உலக அளவில் தமிழ்நாட்டைக் காற்றாலைத் துறையில் முன்னிறுத்துவதுடன் தேசிய அளவில் தொழில் நிறுவனங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழ்நாட்டில் காற்றாலைகள் தொழில்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக உள்ளன. இந்த அளவில் முன்பு குஜராத் மாநிலம் டெக்ஸ்டைல் மாநிலமாக இருந்தது. தமிழ்நாட்டில் மின்சாரம் தட்டுப்பாடின்றி கிடைப்பதால் தமிழ்நாடு, டெக்ஸ்டைல் மாநிலமாக வேகமாக மாறி வருகிறது.

இந்தக் காற்றாலைகள் வேலைவாய்ப்புகளை வழங்குவதால் வறண்ட நிலப்பகுதிகள் வேகமாகச் சிறு நகரங்களாக உருவாகி வருகின்றன. நாட்டின் வளர்ச்சிக்குக் காற்றாலை எரிசக்தி பெருமளவில் உறுதுணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

– உல. இரவீந்திரன்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

* * *

பால் உற்பத்தித்திறனை அதிகரித்திட வம்சாவழி சோதனைத் திட்டம்

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு பால் மிகவும் அத்தியாவசியமானது. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப பால் உற்பத்தியை அதிகரிப்பது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறு பால் பெருக்கத்தை அதிகரிக்க விவசாயிகளிடையே அதிக அளவில் பால் தரும் இன பசுக்களை அறிமுகப்படுத்தி உற்பத்தித் திறன் உள்ள இனவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் காளைகளைப் பரிசோதனை செய்து தேர்வு செய்யும் திட்டம்தான் வம்சாவழி சோதனைத் திட்டமாகும். அந்தத் திட்டம் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் 1976ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போது நாட்டின பசுக்கள், எருமைகள் மட்டுமே இருந்தன. அவைகள் மிகக் குறைந்த அளவே பால் கொடுக்கும் திறன் கொண்டவையாக இருந்தன. கறவையின மாடுகளின் பால் உற்பத்தித் திறன் அதிகமாவதால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு குறைகிறது.

கறவைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டுமானால் அதிக உற்பத்தித் திறன் உள்ள முர்ரா இன காளைகளைக் கொண்டு எருமைக் கிடாரிகளையும், ஜெர்ஸி, ஹோல் ஸ்டீன், பிரீசியஸ் போன்ற பசு இனங்களின் காளைகளைக் கொண்டு பசு இன கிடாரிகள் உருவாக்குதல் மிகவும் அவசியம். இதற்கு இன விருத்திக்குப் பயன்படுத்தும் காளைகள் பால் உற்பத்தித் திறன் அதிகம் உள்ள கிடாரிகளை உருவாக்கும் தகுதி உடையவையா என பரிசோதிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு காளைகளைப் பரிசோதனை செய்து தேர்வு செய்யும் திட்டம்தான் வம்சாவழி சோதனைத் திட்டம் ஆகும். இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் இந்திய பால் வள நிறுவனம் தீவிர பால்பெருக்குத் திட்டத்தை செயல்படுத்தும் இணையங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தை வம்சாவழி சோதனைத் திட்டத்தை செயல்படுத்துவதற்காகத் தேர்வு செய்தது.

எருமையின காளைகளுக்கு இத்திட்டம் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டத்திலும், பசுவின காளைகளுக்கு கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சி, வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும் செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இத்திட்டம் 1986–இல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஆறாவது மற்றும் ஏழாவது தொகுப்புக் காளைகளுக்கான வம்சாவழி சோதனைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. ஆறாவது தொகுப்பில் 10 காளைகளும், ஏழாவது தொகுப்பில் 20 காளைகளும், சோதனையில் உள்ளன. ஆறாவது தொகுப்பில் 6,350 சினை ஊசிகளும், ஏழாவது தொகுப்பில் 15,950 சினை ஊசிகளும் வழங்கப்பட்டு அவற்றின் மூலம் பிறந்த கிடாரி கன்றுகளின் பால் கறக்கும் அளவுகள் பதிவு செய்யப்பட்டு வந்தது. பிறந்த அனைத்து கிடாரிகளின் பால் அளவுகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் அதிக பால் உற்பத்தி செய்த கிடாரிகளின் தந்தை காளைகள் எவை என புள்ளியியல் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு தேர்வு செய்யப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட காளைகளின் மூலம் பெறப்பட்ட சினை ஊசிகள் மாநிலம் முழுவதும் உள்ள எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்ய விநியோகிக்கப்படும். இத்திட்டம் ஈரோடு மாவட்டம் வேட்டைக்காரன் கோயில், அய்யம்புதூர், ஒட்டர்காட்டு பாளையம், நாகதேவன்பாளையம், கணபதிபாளையம், காசி பாளையம் மற்றும் வடுகபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சுமார் 600–க்கும் மேற்பட்ட கிடாரி கன்றுகள் மற்றும் சிறந்த காளைகள் வம்சாவழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் 725 கூட்டுறவுச் சங்கங்களை கொண்டதாகும். இதன்மூலம் நாள் ஒன்றிற்கு 2,25,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. இதில் உள்ளூர் விற்பனை 44,000 லிட்டர். சென்னைக்கு அனுப்பப்படுவது 35,000 லிட்டர், கேரள இணையத்திற்கு அனுப்பப்படும் பாலின் அளவு 20,000 லிட்டர் ஆகும். மேலும் தமிழ்நாட்டில் முதன்முறையாக டெல்லியில் உள்ள மதர் டைரிக்கு வாரம் இருமுறை இரயில் மூலம் திடப்படுத்தப்பட்ட பால் சுமார் 80,000 லிட்டர் அனுப்பப்பட்டு வருவது, இந்த ஒன்றியத்தின் சிறப்பு அம்சமாகும். மேலும் பால் உற்பத்தியைக் கொண்டு வெண்ணெய், நெய் மற்றும் பால் பவுடர் போன்றவை தயாரித்து பல்வேறு மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. ஈரோடு பால் பண்ணையில் தயாராகும் பால் பவுடர் தரம் வாய்ந்தது என்பதற்குச் சான்றாக ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் அளிக்கப் பட்டுள்ளது. நாடு தழுவிய பாலின் தர விவரங்களின் தகவல் தொகுப்புத் திட்டத்தில் 15 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தேசிய பால்வள வாரியத்தினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் கால்நடை தீவனத் தொழிற்சாலைகள் மூலம் தரமான கால்நடை தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான தரமான கால்நடைத் தீவனங்களை நேரடியாக விற்பனை செய்தும், வம்சாவழி சோதனைத் திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு அதிக அளவு பால் உற்பத்தி செய்யும் ஒன்றியம் என்ற பெருமைக்குத் தயாராக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்றால் அது மிகையாகாது.

– எம்.ஆர்.லிங்கம்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு.

* * *

குளிர் இரத்த உயிரினங்கள்

அரணை, பாம்பு, ஓணான், ஆமை, முதலை, தவளை, தேரை போன்ற ஊர்வனவும், மண்புழு, ஈ, எறும்பு, தேள், சிலந்தி போன்ற முதுகெலும்பற்ற உயிரினங்களும், மீன்களும் "குளிர் இரத்த உயிரினங்களாகும்". சுற்றுப்புற வெப்பநிலைக்கேற்ப இவற்றின் உடல் வெப்பநிலை மாறுபடும் தன்மையுடையதாகும்.

தேனி மாவட்டத்தில் முதன் முதலாக வானிலை ஆய்வுக்கூடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சி காரணமாகத் தேனி மாவட்டம் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வானிலை ஆய்வுக்கூடம் அமைக்கப் பட்டுள்ளது.

வானியல் துறையின் துணை இயக்குநர் ஜெனரல் திரு. எஸ். ஸ்ரீதரன், சென்னை மண்டல வானியல் மையத்தின் இயக்குநர் திரு. எஸ். நடராஜன் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. இராமசாமி ஆகியோரின் சீரிய முயற்சியால் பெரியகுளம் தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வானிலைக் கூடமொன்று அமைக்க உடன்படிக்கை ஏற்பட்டது.

தேனி மாவட்ட ஆட்சியர் திரு. சுனில் பாலீவால், இ.ஆ.ப., அவர்களால் 3.1.2005 அன்று இவ்வானிலைக் கூடம் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி வளாகத்தில் தொடங்கப்பட்டு முதல் வானிலை காரணிகள் காலை 8.30 மணியளவில் பதிவு செய்யப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட தோட்டக்கலைக் கல்லூரியில் பணிபுரியும் விஞ்ஞானிகளையும், மாணவர்களையும் கல்லூரி முதல்வர் முனைவர் செ. அன்பு அவர்கள் வரவேற்று பேசினார். இத்தகைய ஆய்வுக்கூடம் தேனி மாவட்டத்தில் முதன்முதலாகப் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

வானிலைக் கூடத்தில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பமானிகள், குளிர் குமிழ் மற்றும் காய்ந்த குமிழ் வெப்பமானிகள், சாதாரண மற்றும் தானியங்கி மழைமானிகள், காற்று திசை காட்டும் கருவி,

காற்றின் வேகத்தை அறியும் கருவி, காற்றழுத்தமானி ஆகிய கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை சென்னையைச் சார்ந்த உதவி வானிலை வல்லுநர் திரு. வி. கோவிந்தன் மற்றும் குழுவினர் மேற்பார்வையில் வானிலைக் கூடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இக்கருவிகள் மூலம் தினசரி பதிவாகும் உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெப்பம், காற்றின் ஈரப்பதம், பனியை ஏற்படுத்தும் வெப்பத்தின் அளவு, மழையளவு, மழையின் தீவிரம், காற்றின் திசை, காற்றின் வேகம் மற்றும் காற்றழுத்தம் ஆகியவற்றைக் கண்டறியலாம். இந்த வானிலைக் காரணிகள் தேனி மாவட்டத்தில் வானிலை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைச் சேகரிக்க பெரிதும் பயன்படுகின்றன.

வானிலைக் காரணிகள் தினமும் காலை 8.30 மணியளவிலும் மாலை 5.30 மணியளவிலும் எடுக்கப்பட்டுச் சென்னையிலுள்ள மண்டல வானிலை மையத்திற்கு கணினி மூலம் மின் அஞ்சலாகவோ, தந்தி மூலமாகவோ அனுப்பி, பல்வேறு இடங்களிலிருந்து பெறப்படும் இத்தகைய புள்ளி விவரங்களைக் கொண்டு வானிலை முன் அறிவிப்பு செய்யப்படுகின்றது.

இந்தியாவில் அறுவடைக்கு முன் வானிலைக் காரணிகளால் ஏற்படும் சேதாரம் 10 சதவிகிதத்திலிருந்து 100 சதவிகிதமாகவும், அறுவடைக்குப் பின் ஏற்படும் சேதாரம் 10 சதவிகிதமாகவும் உள்ளது. எனவே, இத்தகைய வானிலைக் காரணிகளை முன்கூட்டியே தெரிந்து அறிவித்தால் விவசாயிகள் பெரிதும் பயனடைவர். குறிப்பாக, விவசாயிகள் விதைப்பு, அறுவடை போன்ற முக்கியப் பணிகளைத் துரிதப்படுத்தவோ அல்லது தாமதித்துச் செய்யவோ இத்தகைய வானிலை முன்னறிவிப்பு பயன்படுகின்றது.

மேலும், வானிலைக் காரணிகளை முன்கூட்டியே தெரிந்து எச்சரிக்கை செய்வதால் இடுபொருள்களான விதை, உரங்கள், களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி மருந்துகள், எரிபொருள், தண்ணீர் போன்றவற்றின் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும், மழையின் அளவு, மழை பெய்யும் காலம் போன்றவற்றைத் தெரிந்து முன்னறிவிப்புச் செய்வதால் விவசாயிகள் அதற்கேற்றாற் போல் தங்கள் வேலைகளைக் குறிப்பாக நிலம் தயாரித்தல், உரமிடுதல், களையெடுத்தல், தானியங்களைப் பிரித்தெடுத்தல், உலர வைத்தல் போன்றவற்றை அமைத்துக் கொள்ளலாம். தேனி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வானிலை ஆய்வுக்கூடம் பொதுமக்களுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும் பெரும் பயனாக அமையும் என்பது உறுதி.

– ச. செல்வராஜ்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

✪ ✪ ✪

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி



சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம் 1909ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு உதவுவதற்காகவே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இப்போது இம்மையம் மாணவச் சமுதாயத்திற்குப் பலவித சேவைகளை ஆற்றி வருகிறது. அவைகளில் சில பின்வருமாறு:–

இம் மையம் 1985 முதல் மாணவச் சமுதாயத்திற்கு; மத்திய, மாநில அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன் பயிற்சிகளை நடத்தி வருகின்றது. மேலும் மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்தபின் எளிதில் வேலைவாய்ப்புப் பெறக்கூடிய வகையில் பலவகையான பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது.

ஐ.ஏ.எஸ். அதிகாரியாகி மாவட்ட ஆட்சியாளராக வேண்டும் என்பது பல மாணவர்களது கனவு. மத்திய தேர்வாணை நடத்தும் அகில இந்தியக் குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு என்ற பல படிக்கட்டுகளைத் தாண்டினால்தான் ஐ.ஏ.எஸ். போன்ற அனைத்திந்தியப் பணிகளில் சேரமுடியும்.

இத்தேர்வு எழுதுவதற்குப் பட்டம் பெற்றிருந்தாலே போதும், என்றாலும்கூட. கடும் உழைப்பும் இடைவிடாத முயற்சியும் இருந்தால் மட்டுமே இத்தேர்வுகளில் வெற்றி பெற முடியும். இந்திய ஆட்சிப் பணிகளில் முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை முடிவுகளை எடுத்து நிருவகிக்கும் பணிகளை மேற்கொள்ளும் சிறந்த நிருவாகிகளைத் தேர்வு செய்வதற்கேற்ற வகையில் இத்தேர்வு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்வுக்குப் பயிற்சி அளிக்க பல தனியார் நிறுவனங்கள் கணிசமான கட்டணம் வாங்கிக் கொண்டு பயிற்சி அளிக்கின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் அகில இந்தியக் குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம் வரும் மே மாதம் 15ஆம் தேதி நடைபெறவுள்ள சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு (UPSC Civil Service Pre-Exam - 2005) – எழுதும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினத்தைச் (SC/OBC/Minorities) சேர்ந்த 50 மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்க மத்திய அரசு (Ministry of Social Justice & Empowerment, Govt. of India, New Delhi.) நிதியுதவியுடன் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் சேர்ந்த மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வும் அதையடுத்து நேர்முகத் தேர்வு மூலமாகவும் 50 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 23.2.2005 அன்று முதல் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு முதல்நிலைத் தேர்வை சிறப்பாக எழுதுவதற்கேற்ப பயிற்சி அளிக்கப்பட்டதுடன் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள், முதல் நிலைத்தேர்வு எழுதுவதற்கு நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஐ.ஏ.எஸ். போன்ற அகில இந்தியக் குடிமைப்பணி தேர்வுகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ச்சி பெறுவது என்பது தனிப்பட்ட முறையில் அவர்களது வாழ்க்கை உயர்வுக்கான வெற்றி; அதேசமயம், உயர் நிருவாகப் பணிகளில் நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் இடம் பெறுவது நமக்குப் பெருமை அளிக்கும் விஷயம் என்கிறார் சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மைய இயக்குநர் திருமதி சுசீலா மாரியப்பன்.

கல்வித்தகுதி

இளங்கலைப் பட்டம் பெற்று பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 50,000/–க்குள் இருக்க வேண்டும். வரும் மே மாதம் 15ஆம் தேதி நடைபெறவுள்ள சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு (UPSC Civil Service Pre-Exam - 2005) எழுத விண்ணப்பித்தவர்களுக்கு இந்த பயிற்சிக் காலங்களில் உள்ளூர் 35 மாணவர்களுக்கு ரூ.225/– வீதமும், வெளியூர் 15 மாணவர்களுக்கு ரூ.700/– வீதமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

மேலும் சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம் மார்ச் மாதம் கீழ்க்கண்ட பயிற்சியினை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

1. வேலையில்லா 60 பட்டதாரி பெண்களுக்கு நூற்பாலை மற்றும் தோல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப் பயிற்சியின் மூலம் பெண்களின் சுயவேலைவாய்ப்பு தொடங்குவதற்கு பெறும் பயன் உள்ளதாக இருக்கும். இப் பயிற்சி National Institute of Fashion Technology and Central Leather Research Institute நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சிக்கு மாநில அரசின் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ளன.

2. எளிதில் வேலைவாய்ப்பு பெறக்கூடிய வகையில் கால் சென்டர் நிருவாகப் (Call Centre Executive Training) பயிற்சி நடத்தப் படவுள்ளது. இப் பயிற்சியில் 50 மாணவர்கள் (ஆண், பெண்) தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவர். இப்பயிற்சி மாநில அரசின் – பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை துறையின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ளன.

3. விமானப் பயணச்சீட்டு மற்றும் பயண மேலாண்மை (Air Ticketing & Travel Management) என்ற மூன்று மாத காலப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகளில் சேர ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். பயிற்சிக் கட்டணம் ரூ.3,000/–. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ரூ.2,000/–. மூன்று மாத காலப் பயிற்சிக்கு பின் Campus Interview மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஏர் இந்தியாவில் உதவித் தொகையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

4. மேலும் சென்னைப் பல்கலைக்கழக தொழில் நிருவாகக் கூட்டு (University Industrial Consultancy) மையத்தின் கீழ் 20 பல்வேறு விதமான கணினி பயிற்சிகள் (Computer Training) குறைந்த கட்டணத்தில் நடத்தப் படுகின்றன. (viz. Tally, 2D, 3D Aanimation, Graphic Designing & Editing, Web Developer, E-commerce, Network Admn. C++ etc.). மேற்கண்ட பயிற்சியின் விவரங்களை அறிய இயக்குநர், சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம், சேப்பாக்கம், சென்னை–5. 25392255 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். ❖

கோதுமை



இந்தியாவில் அரிசிக்கு இணையாக உணவுக்காகப் பயன்படும் கோதுமை 7,000 ஆண்டுகளுக்கு முன்பே பயிரிடப்பட்டதாம். இந்தியா, அபிசீனியா, ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்துதான் கோதுமைப் பயிர் உலகின் பிற நாடுகளுக்குச் சென்றுள்ளது. கோதுமையில் 30 ஆயிரம் ரகங்களும், வெள்ளை, மஞ்சள், சிவப்பு என நிறங்களும், மிருது, கடினம், மிகக் கடினம் என பல தரங்களும் உள்ளன.

பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வி பயில உண்டு உறைவிடப் பள்ளிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது சீரிய முயற்சியால், கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (Kasturba Gandhi Balika Vidyalaya - KGBV) திட்டத்தின்கீழ், தமிழகத்தில் கல்வியில் பின்தங்கிய 28 ஊராட்சி ஒன்றியங்களில், பெண் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி புகட்டும் 37 உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential Schools) இந்த நிதியாண்டில் (2004–2005) நிறுவப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, தமிழக மக்கள் அனைவரும் கல்வியறிவு பெற்றவர்களாக விளங்கிட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டி, கல்வித் துறைக்கு, குறிப்பாக, ஆரம்பக் கல்விக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. 2004–2005ஆம் ஆண்டில் பள்ளிக் கல்விக்காக மட்டும் 4,203 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சர்வ சிக்ஷா அபியான் (Sarva Shiksha Abhiyan), அதாவது, அனைவருக்கும் கல்வித் திட்டம் தமிழகத்தில் மிகவும் சிறப்புடன் செயல்படுத்தப்படுவதை மத்திய அரசு தொடர்ந்து பாராட்டி வருகிறது. மேலும், இந்தியாவிலேயே கல்வியறிவைப் புகட்டும் இயக்கத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்று மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகமே தெரிவித்துள்ளது.

முறை சார்ந்த பள்ளிகளுக்கு (Regular Schools) செல்ல முடியாத பெண் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி வழங்கும் வகையில், இந்தியா முழுவதிலும் கல்வியில் பின்தங்கியுள்ள ஊராட்சி ஒன்றியங்களில், பெண் குழந்தைகள் தங்கிப் பயிலும் வகையில் அறிமுகப்படுத்தப்படும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) என்னும் திட்டத்தின்கீழ், ஆரம்பக் கல்வி புகட்டும் உண்டு உறைவிடப் பள்ளிகளை (Residential Schools), தமிழகத்தில் கல்வியில் பின்தங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டார்கள். இதுகுறித்து, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்சிங் அவர்களுக்கு 29.9.2004 அன்று கடிதம் எழுதினார்கள்.

தமிழகத்திலுள்ள பெண்கள் அனைவரையும் கல்வியறிவு பெற்றவர்களாக உருவாக்கிட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்று, தமிழகத்திலுள்ள கல்வியில் பின்தங்கிய 28 ஊராட்சி ஒன்றியங்களில், ஆரம்பக் கல்வி புகட்டும் 37 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா பெண் குழந்தைகள் உண்டு உறைவிடப் பள்ளிகளை (KGBV Schools) அமைத்திடவும், இதற்கென, 2004–2005ஆம் ஆண்டிற்கு 8.59 கோடி ரூபாய் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்சிங் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தமிழகத்திலுள்ள கல்வியில் பின்தங்கிய 28 ஊராட்சி ஒன்றியங்களில், பெண் குழந்தைகள் தங்கிப் பயிலுகின்ற 37 உண்டு உறைவிடப் பள்ளிகள் உடனடியாக அமைக்கப்படும். இதன்மூலம் முறைசார்ந்த பள்ளிகளுக்குச் சென்று பயில இயலாத பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வி பெற்றிட வாய்ப்பாக இது அமையும்.

❖ ❖ ❖

தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 1992 ஆம் ஆண்டு கள்வர்களால் தாக்கப்பட்டு, தனது இடது கால் மற்றும் இடதுகை எலும்பு முறிவு ஏற்பட்டுப் பலத்த காயமடைந்த, தற்போது நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி நிறுவன அனல்மின் நிலைய காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வரும் திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்களுக்கு செயற்கை கால் மற்றும் செயற்கை முன் கை பொருத்திக் கொள்ளவும் மற்றும் இதர மருத்துவச் செலவுகளுக்காகவும், தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதியிலிருந்து 1.5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

கடந்த 1992ஆம் ஆண்டில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி நிறுவன அனல் மின் நிலைய காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றிய போது, நெய்வேலி அருகே உள்ள விஜயரங்கம் என்ற கிராமத்தில் திருட்டுக் கும்பல் ஒன்று பதுங்கியிருப்பதாகத் தகவலறிந்து அந்தக் கும்பலைப் பிடிக்கச் சென்றபோது கள்வர்களால் கடுமையாகத் தாக்கப் பட்டதில் இடது கால் மற்றும் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு பலத்த காயமடைந்து, பின்னர் அந்தக் காலில் தகடுகள் பொருத்தி அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்காக அன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலிருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது கடமையில் இவர் காட்டிய அளவற்ற ஈடுபாட்டையும், துணிவையும் பாராட்டியதுடன், கள்வர்களால் தாக்கப்பட்ட இவருக்கு 1994ஆம் ஆண்டு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவியும், காவல் துறையிலிருந்து கருணைத் தொகையாக 20,000/– ரூபாயும் வழங்கினார்கள். இந்த உதவி தனக்குப் பேருதவியாக இருந்தது என்ற போதிலும், தற்போது போதிய பண வசதியற்ற காரணத்தால் செயற்கைக் கால் மற்றும் முன் கை பொருத்திக் கொள்ள இயலாத நிலையில் இருப்பதாகவும், இதற்கென 1.5 இலட்சம் ரூபாய் நிதி வழங்கி உதவிட வேண்டும் என்றும் வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருந்தார். இந்த மனுவைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமைக் காவலர் திரு. எஸ். சுப்பிரமணியன் உடனடியாக செயற்கைக் கால் மற்றும் செயற்கை முன் கை பொருத்திக் கொள்ளவும், மருத்துவச் செலவுக்காகவும் தற்போது மேலும் 1.5 இலட்சம் ரூபாய் நிதி வழங்கிட ஆணையிட்டார்கள்.

இதன்படி, தலைமைக் காவலர் திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்களுக்கு14.2.2005 அன்று தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதியிலிருந்து 1.5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட தலைமைக் காவலர் திரு. எஸ். சுப்பிரமணியன் தனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார். ◆



தமிழரசு
மார்ச் 2005



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
மாசி – பங்குனி
மலர்: 36 இதழ்: 9
மார்ச் 2005
விலை ரூ.10

இந்த இதழில்...

★ நிதி நிலை அறிக்கை 2005–2006 2

★ தொழில் உற்பத்தித்துறையில்அந்நிய முதலீட்டை ஈர்த்து வரும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உயர்ந்துள்ளது (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) 38

★ சுனாமியால் குழந்தைகளை இழந்தோர் மீண்டும் குழந்தைப்பேறு பெற்றிட இலவச அறுவை சிகிச்சை (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை 28.2.2005) 60

★ நல்லன்போடு வாரி வழங்கிய நெஞ்சங்களுக்கு உள்ளன்போடு நன்றியை உரித்தாக்குகிறேன் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நன்றி அறிவிப்பு) 62

★ எச்ஐவி இறப்புகளைக் குறைத்திட எச்ஐவி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப் பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்கும் திட்டம் 63

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மகளிர் தின வாழ்த்துச் செய்தி 64

★ சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு பன்னாட்டுத் தரச் சான்றிதழ் 65

★ பல்வேறு துறைகளின் பயன்பாட்டுக்கென 52 புதிய வாகனங்கள் 66

★ தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடம் 68

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நிர்மல் கிராம் புரஸ்கார் விருது பெற்றவர்கள் சந்திப்பு 69

★ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு புதிய வலைதளம் 71

★ திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் கணினிமயமான மின்தடை நீக்கப் பணி மையங்கள் 72

★ தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை 73

★ கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 76

★ மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை 78

★ அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் வென்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசுகள் 79

★ மாணவ – மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி 80

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை :	2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைச் சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் வருகை தரும் மாண்புமிகு நிதியமைச்சர்.
இரண்டாம் பக்க அட்டை :	மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நிர்மல் கிராம் புரஸ்கார் விருது பெற்ற ஊராட்சித் தலைவர்கள் சந்திப்பு.
நான்காம் பக்க அட்டை :	மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பன்னாட்டு ரோட்டரி சங்கம் "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கும் விழா

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **சி. முத்துக்குமாரசாமி,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

நிதிநிலை அறிக்கை 2005 - 2006

மாண்புமிகு நிதியமைச்சர்
திரு. சி. பொன்னையன் அவர்கள்,
2005-2006 ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்டத்தை,
2.3.2005 அன்று
சட்டமன்றப் பேரவை முன் வைத்து
ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப்படும்.

(நீதி தவறாத, நேர்மையான ஆட்சிமூலம்,
குடிமக்களின் நலன்களைப் பேணிகாக்கும் மன்னன்,
மனித உருவிலான தெய்வமாகக் கருதப்படுவான்).

நுண்மாண் நுழைபுலமும், வாரி வழங்கும் வள்ளல் தன்மையும், தொலை நோக்குச் சிந்தனையும் கொண்ட, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியைச் சித்தரிக்கும்



வண்ணம் அமைந்துள்ள, வள்ளுவர் பெருந்தகையின் இச்சொற்களை நினைவு கூர்ந்து, 2004-2005 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 2005-2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மாமன்றத்தின் முன்வைக்க நான் விழைகின்றேன். திண்ணிய மன உறுதியுடனும், திடமான நம்பிக்கையுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெள்ளத் தெளிவான சிந்தனையுடனும், தான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வாயிலாக, முந்தைய ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் நிலவிய நம்பிக்கையற்ற, இருள் கவ்விய படுகுழியிலிருந்து தமிழகத்தை மீட்டு, மாநில மக்கள் அனைவருக்கும் வளமான வாழ்க்கையினையும், அளப்பரிய வாய்ப்புகளையும் அளித்து, இந்தியாவிலேயே முதல் நிலை மாநிலம் என்ற இலக்கை எய்திடும் நோக்கோடு, வலுவான வளர்ச்சி நிறை மாநிலமாகத் தமிழகத்தை மாற்றியுள்ள, நமது ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாசியுடன் நான் என் பணியைத் தொடர்கின்றேன்.

2. முந்தைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் நமது மாநிலம் சந்தித்த நிதிச் சீரழிவு, பொருளாதாரத் தேக்கநிலை, பாதுகாப்பற்ற, தடம்புரண்ட நிலை ஆகியவற்றிலிருந்து மாநிலத்தை மீட்கும் பொறுப்பை, தமிழ்நாட்டு மக்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு அபார வெற்றிமூலம் அளித்தார்கள். தமிழ்நாட்டின் முன்னைப் பெருமை, பலமுனை வளர்ச்சி, வளமை ஆகியவற்றை மீட்டுத்தந்து, வன்முறை மற்றும் அமைதியின்மை பற்றிய அச்சம் ஏதுமின்றி மக்களுக்கு மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கையை மீண்டும் தந்ததன் மூலம் இன்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், மக்களிட்ட இந்தக் கட்டளையை நிறைவேற்றி யுள்ளார்கள். பெரும் குழப்பத்திற்கும், துயரங்களுக்கும் வித்திட்ட, முந்தைய ஆட்சியின் எழுச்சியற்ற, களையிழந்த, நெஞ்சுறுதியற்ற நிருவாகத்தால் ஏற்பட்ட கட்டுத்தளைகளைத் தகர்த்து, தமிழகம், எங்களது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றலும், எழுச்சியும்மிகு தலைமையின்கீழ் முன்னேறிவருகிறது. நிதிநிலையைச் சீர்செய்து தமிழ்நாட்டை ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லவும், தமிழ்நாட்டு மக்களுக்கு அமைதியுடன் கூடிய வளமான வாழ்க்கையை அமைத்துத் தருவதற்கும் நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளப்பரிய முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். இத்தகைய பலதரப்பட்ட சிக்கலான, பாதகமான சூழ்நிலைகளில், இந்தப் பெரும் சவாலானப் பணியை வேறு எவரொருவராலும் வெற்றிகரமாகச் சாதித்திருக்க முடியாது. இன்று, ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து தனது இலக்கு நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றான் என்பதே, தடைகள்

அனைத்தையும் தகர்த்தெறிந்து வியத்தகு சாதனைகள் புரிந்துள்ள, தொலைநோக்குப் பார்வை கொண்ட, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குக் கிடைத்துள்ள மிகச் சிறந்த பாராட்டாகும்.

3. இந்த அரசு, 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மாநிலத்தைச் சூழ்ந்திருந்த, முற்றிலும் சீர்குலைந்திருந்த நிதி நிலைமையை இம்மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூரவிழைகின்றேன். வளர்ச்சிப் பணிகள் கைவிடப்பட்டதாலும், பட்டிகளுக்குத் தொகை வழங்கப்படாததாலும், அரசின் நம்பகத் தன்மையே முற்றிலுமாகப் பாதிக்கப் பட்டிருந்தது. இத்தகைய நிதி நெருக்கடியால், படுகுழியில் தள்ளப்பட்டிருந்த நமது மாநிலத்தை மீட்பது என்பது நடைமுறையில் சாத்தியப்படாத ஒரு சவாலாகவே இருந்தது. நிதிச் சீர்திருத்தம் என்பது ஒரு இலக்கு மட்டுமல்லாமல், அதிக வேலைவாய்ப்பு, மேம்பட்ட வருமானம் மற்றும் மக்களுக்கு நல்ல தரமான வாழ்க்கை ஆகியவற்றை உறுதி செய்வதற்குத் தேவையான ஒரு வழிமுறையும் ஆகும் என்பதை இம்மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். விரைவான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு, நிதிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டபோது, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், நிதிநிலை விரைந்து சீர் செய்யப்படுவதையும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட காலக் கட்டம் முழுமையிலும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்தார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் பட்டினிச் சாவுகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டன. இவ்வளவு குறுகிய காலத்திலும், அதே நேரத்தில், இத்தகைய நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளின் தீவிரத்திலிருந்து ஏழை எளிய மக்கள் முற்றிலுமாகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கின்ற விதத்திலும், வேறு எந்தவொரு மாநிலத்திலும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நிதிச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதிலும், விரைந்த வளர்ச்சி மற்றும் வளமான பாதையில் மாநிலத்தை மீண்டும் இட்டுச் செல்வதிலும் நமது அரசு கண்ட வெற்றிக்கு நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் துணிச்சலான, 'ஆற்றல்மிக்க, உறுதியான, தயாள குணமுடைய தலைமைதான் முழுமுதற் காரணம் ஆகும்.

மக்களைப் பேணிக்காக்கும் முதலமைச்சர் அவர்களின் அயராதசேவை

4. சாதாரணக் காரணங்களுக்காகக் கூட, சட்டம் – ஒழுங்கு நிலைமை சீர்குலைவது ஒருபுறம் இருக்க, பயங்கரவாதம், கிளர்ச்சி, வன்முறை, போராட்டப் போக்குகள், தீவிரவாதம் போன்ற காரணங்களினால் பல மாநிலங்களின் வளர்ச்சிப் பணிகள் முற்றிலுமாக முடங்கிப் போனதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டில் மக்களின் பாதுகாப்பிற்கும், பத்திரமான வாழ்வுக்கும் உத்திரவாதம் அளிக்கப் பட்டுள்ளது. இதனை ஒரு சாதாரண நிகழ்வாக எண்ணத்தோன்றும். ஆனால், மாநில எல்லைக்கு அப்பால் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது, அவ்வாறு எண்ணுவது பெருந்தவறு என்பது புலனாகும். நமது சமூகக் கட்டமைப்பைத் தகர்த்தெறியும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும், தீங்கு விளைவிக்கக் கூடிய, பிளவு சக்திகளை எதிர்கொண்டு மாநிலத்தின் இறையாண்மையைத் தனது தளர்வற்ற, தீரமிக்க, உறுதியான, துணிச்சலான தலைமையின் கீழ் கட்டிக் காத்து வருவதற்காக, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களை மனமாரப் பாராட்டுவதில் அனைவரும் பங்கேற்க வேண்டும். இவைதான் நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களைத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராகவும், ஒப்பற்றத் தலைவராகவும், உறுதியான கொள்கை உடையவராகவும், பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் சமரசத்திற்கு இடமளிக்காதவராகவும், மிக நுணுக்கமாகத் திட்ட மிடுபவராகவும், மதிநுட்பம் மிக்க செயலாக்கம் கொண்டவராகவும், அச்சுறுத்தல்களுக்கு அடிபணியும் ஆட்சிகளால் ஏற்படும் வேதனைகளிலிருந்து குடிமக்களைப் பாதுகாக்கும் திறன் கொண்ட அமைப்பாக, தமிழகக் காவல் துறை உருவாக வேண்டும் என்பதில் தீவிர நம்பிக்கை உடையவராகவும், திகழச் செய்கின்றன. நமது தலைவியின் தயக்கமற்ற, மனம் தளராத உறுதிப்பாடு மற்றும் செயலாக்கத்தின் காரணமாகத் தான், பயங்கரக் கொலைகாரன், காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும், அவனுடைய கும்பலையும் ஒழித்துக் கட்டி, தீய சக்திகளிடமிருந்து மாநிலத்தைக் காத்து மாபெரும் சாதனை படைக்க முடிந்தது. தமிழ்நாட்டு மக்களைப் பேணிப் பாதுகாப்பதில், நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் அயராத, அர்ப்பணிப்பு கொண்ட சேவையை, எப்படிப் பாராட்டினாலும் மிகையாகாது.

நடுத்தரக் கால நிதி நிலைத் திட்டம்

5. 2004 பிப்ரவரியில், 2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் நான் தாக்கல் செய்த நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டம் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மாநிலத்தின் நிதி நிலைமையை, மிகச் சிறந்த முறையில் நிருவகித்ததன் காரணமாகத்தான், 2004-2005ஆம் ஆண்டுக்கான நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டத்தில் தெரிவிக்கப் பட்டிருந்த இலக்குகளை முழுமையாக எய்த முடிந்தது என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சீரானதும் சாத்தியமானதுமான நிதி நிலைமையை நிலை நிறுத்தி, ஏழை எளிய மக்களுக்கு அதிக அளவு பாதுகாப்பு அளித்தல், அதே வேளையில், வளர்ச்சியையும் மேம்பாட்டையும் ஊக்குவித்தல் ஆகிய இரு நோக்கங்களையும் மனதில் இருத்தி, நாளது வரையான நடுத்தரக் கால நிதி நிலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இந்த நிதிநிலை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நிதி நிலையை மேலும் சீரமைக்க வழிவகுக்கும் நோக்கில், 2005-2006ஆம் ஆண்டிலும், நிதிநிலைமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நிலைநிறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை, இந்த நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். 2008-2009ஆம் ஆண்டுவாக்கில், வருவாய்க் கணக்கில் உபரி நிலையை எட்டுவதை நோக்கமாகக் கொண்டு, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைக்கும் போக்கு தொடர்ந்து கடைபிடிக்கப்படும். 2008-2009 ஆம் ஆண்டுவாக்கில் மத்திய அரசும் மாநில அரசுகளும் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ஏதும் இல்லாத நிலையை அடையவேண்டும் என்று பன்னிரண்டாம் நிதிக் குழுவும் குறிப்பிட்டுள்ளது.

6. 2003ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தையும், 2004 ஆம் ஆண்டு, இச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 2008ஆம் ஆண்டு, மார்ச்31 வாக்கில், மொத்த வருவாயில், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையின் விகிதாச் சாரத்தை, 5 சதவிகிதத்திற்கும் கீழ் குறைப்பதன் நோக்கம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறியுள்ளவாறு, நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிதிநிலை குறிப்பிடத்தக்க அளவு சீரடைந்துள்ளது என்பதையும், 2003ஆம் ஆண்டு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கும், போக்கிற்கும் உட்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடும் வகையில், 2005-2006 ஆம் ஆண்டில், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 4.64 சதவிகிதம் என்ற நிலையை அடையும் என்பதை 2005-2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. இதுபோன்ற நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தை 5 மாநிலங்கள் மட்டுமே செயல்படுத்தியுள்ளன என்பதும், அவற்றுள் தமிழ்நாடும் ஒன்று என்பதும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய சட்டத்தைச் செயல்படுத்தி, நிலையான அடிப்படையில் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைக்கும் விதத்தில் நிதிநிலையை நிருவகிக்கும் மாநிலங்கள் மட்டுமே, கணிசமான நிதியுதவியைப் பெறத்தகுதி உடையவையாக இருக்கும் என்பதை பன்னிரெண்டாம் நிதிக் குழு தற்போது தெளிவாகக் கூறியுள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையால்தான், சரியான நேரத்தில், தமிழ்நாட்டில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது தற்போது கண்கூடாகிறது.

7. பதினோராவது நிதிக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 2000-2005 ஆம் ஆண்டு கால அளவிற்கு, மத்திய அரசு கொண்டுவந்த 'நிதிச் சீர்திருத்த உதவி நிதி' பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர் என்பதில் ஐயமில்லை. நிதிநிலையை நிருவகிப்பதில், நல்ல சாதனை படைக்கும் மாநிலத்திற்கு, இந்த நிதிச் சீர்திருத்த உதவி நிதியிலிருந்து ஆண்டு மானியமாக ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் நிதிநிலை சிறந்த முறையில் நிருவகிக்கப்படுவதை மத்திய அரசு அங்கீகரித்து, தொடர்ந்து நான்காவது ஆண்டிற்கும் தமிழ்நாட்டிற்கு நிதிச் சீர்திருத்த ஊக்க உதவி மானியத்தை வழங்கியுள்ளது. இத்தகைய பெருமையைப் பெற்ற ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இம்மாநிலத்தின் நிதிநிலையைச் சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், 2000-2001ஆம் ஆண்டு இறுதியில் இம்மாநிலத்தில் காணப்பட்ட நிதி நிலைச் சிக்கலும், குழப்பமும் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் நான் தெளிவாக விவரித்துள்ளேன். 2000-2001ஆம் ஆண்டில் வளர்ச்சிப் பணியை முற்றிலும் நிலை குலையச் செய்தது போன்ற சீர்கேடு மீண்டும் ஏற்படாத வண்ணம் தடுத்து நிறுத்த நிதிச் சீர்கேட்டினைச் சரிசெய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

நிதிநிலையைச் சீரமைப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சீரிய கவனத்தினால், மாநிலத்தின் வளர்ச்சிக்கான இலக்குகளை எய்துவதில், இம்மாநிலம் தீவிரமாக முன்னேற்றம் காண இயலும் என்பது உறுதியாகியுள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதாரம்

8. 2000-2001 ஆம் ஆண்டு இறுதியில் நிலவிய நிதி நெருக்கடியோடு, வளர்ச்சியில் ஏற்பட்ட முட்டுக்கட்டையும் சேர்ந்து, பொருளாதாரத்தில் தேக்கநிலை ஏற்பட வழிவகுத்தன. தொடர்ந்து 3 ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சி நிலையினால், இத்தேக்க நிலையிலிருந்து மீள்வது மேலும் சிக்கலாகியது. தமிழகத்தை உயர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்திட்ட 15 அம்சத் திட்டத்தைப் பற்றி மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் அறிவர். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்த புதிய அணுகுமுறை, வறட்சி நிலையை மாநிலம் திறம்படச் சமாளிக்க வழிவகுத்தது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்த, குறைந்த வளர்ச்சி நிலையிலிருந்து, மீண்டுவருவதற்கும் வகை செய்துள்ளது. தமிழ்நாட்டை ஒரு உயர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்வதற்கேற்ப, இந்த அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சமசீர் வளர்ச்சிக்கான முன் முயற்சிகள், விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புதிய அணுமுறைக்கு வழிவகுக்கும். மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு (Gross State Demestic Product), நடப்பாண்டில், நிலையான விலைகளில் 8 சதவிகிதத்திற்கு மேல் அதிகரிக்கும் என்று அண்மைக்கால புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இவ்வாறாக, பொருளாதாரத்தில், வளர்ச்சி வேகத்தை நாங்கள் மீண்டும் கொண்டு வந்துள்ளதும், இதனால் தமிழ்நாட்டு மக்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிக்கும் வண்ணம், உயரிய வளர்ச்சிப் பாதையில் மாநிலம் மீண்டும் முன்னேறிச் செல்ல இயலும் என்பதும் தெளிவாகிறது. முதன்மைத் துறை, வலுவான முறையில் புத்துயிர் பெற்றதாலும், தயாரிப்புத் துறையில் புதிய தொழிலகங்கள் தொடங்கும் வண்ணம் நல்ல முதலீட்டுச் சூழ்நிலை நிலவுவதாலும், மூன்றாம் நிலைத் துறையில் உயரிய வளர்ச்சி நிலவுவதாலும் தமிழ்நாடு, ஒரு புதிய வளர்ச்சிமிகு முன்னேற்றப் பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

ஆண்டுத் திட்டம்

9. இந்த அரசு, 2001ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, வளர்ச்சிப் பணிகளில் செயலாக்கம் எவ்வாறு முற்றிலும் சீர்குலைந்திருந்தது என்பதை இம் மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இம்மாநிலத்தைக் கடுமையாகப் பாதித்து, தீவிரமாகப் பல்கிப் பெருகிய நிதிநெருக்கடி நிலை, இந்தச் சீர்கேட்டிலிருந்து மாநிலம் மீள்வதைச் சாத்தியமற்றதாக்கியது. தொடர்ச்சியாக ஏற்பட்ட வறட்சி நிலையும் அதை மேலும் சிக்கலாக்கியது. 'புத்தாயிரம் கால வளர்ச்சி இலக்குகள்' போன்ற முக்கியமான இலக்குகளை, எய்துவதற்கான திட்டமிட்ட வளர்ச்சிப் போக்கே முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது. நிதி நெருக்கடிக்கு ஈடுகொடுக்கும் முதலீட்டுத் திறனை மாநிலம் கொண்டிருக்காததால், 2001-2002 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 6,040 கோடி ரூபாய், எவ்வாறு 5,200 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூரலாம். மாநிலத்தை வேகமான வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டுவர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்தார்கள். பாதகமான பல சூழ்நிலைகள் நிலவிய போதிலும், இது நிறைவேற்றப்பட்டது. 2002-2007ஆம் ஆண்டு கால அளவிற்கான பத்தாவது திட்ட ஒதுக்கீடு, 40,000 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. அது, தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் வளமிக்கதாக இட்டுச் செல்லும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நம்பிக்கையையும் உறுதியையும் பிரதிபலிக்கிறது. இது சாத்தியமற்றது என்று பலரும் ஐயப்பாடு தெரிவித்தனர். இந்த பின்னணியில்தான், 2004-2005 ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 8,001 கோடி ரூபாய், முற்றிலும் எய்தப்படும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வரவு–செலவுத் திட்டத்தின்போது அதிக அளவிற்கான திட்ட ஒதுக்கீடுகளை அறிவித்துவிட்டு, நடைமுறையில் அதை எய்த முடியாமல் இருக்கும் பல மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ்நாட்டில், நாங்கள் 2002–2003 ஆம் ஆண்டு முதற்கொண்டு, ஒவ்வோராண்டும் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கும்மேல், நடைமுறையில் விஞ்சியுள்ளதை உறுதி செய்துள்ளோம்.

10. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 30.11.2004 ஆம் நாளன்று, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் நடத்திய கலந்தாய்வில், திட்ட இலக்குகளை எய்துவதில் கண்ட வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு, அதிகத் திட்ட

ஒதுக்கீட்டிற்கான வலுவான வாதங்களை முன்வைத்து, 2005-2006ஆம் ஆண்டிற்கு சாதனை இலக்காக, 9,100 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றார். 2005–2006 ஆம் ஆண்டில் இந்த அதிக அளவிலான திட்ட ஒதுக்கீடு 9,100 கோடி ரூபாயை எய்தும் வகையில் 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தொண்ணூறாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நிலவிய நெருக்கடிகளிலிருந்து மீண்டு, திட்டமிட்ட, ஒரு புதிய, வேகமான வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு முன்னேறி வருகிறது என்பது தெள்ளத் தெளிவு. ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, 2001-2002 ஆம் ஆண்டு அளவைவிட 75 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இவ்வியத்தகு திருப்புமுனை நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் செயலாக்கத்திறன் ஆகியவற்றால் மட்டுமே சாத்தியமாயிற்று.

பன்னிரண்டாவது நிதிக் குழு

11. திறமையோடு சிறப்பாகச் செயல்பட்டு வரும் மாநிலங்களுக்கான நிதி ஆதாரங்களைக் குறைத்து விட்டு, செயல்திறன் குறைந்த மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் போக்கு நிறுத்தப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை, பன்னிரண்டாவது நிதிக் குழு, 2004 பிப்ரவரியில், தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் அந்தக் குழுவின் முன் வைத்தார்கள் என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த வலுவான வாதத்தை கருதிப்பார்த்து, ஏற்றுக்கொண்ட, புகழ்பெற்ற பொருளாதார வல்லுநரான டாக்டர் சி. ரங்கராஜன் தலைமையிலான பன்னிரண்டாவது நிதிக் குழு, அதனுடைய பரிந்துரைகளை அளித்துள்ளது. இதனை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, அண்மையில், மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளது. பதினொன்றாவது நிதிக் குழு, மத்திய வரிகளின் தொகுப்பில் மாநிலங்களுக்கான பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கை எவ்வாறு, 6.637 சதவிகிதத்திலிருந்து பெருமளவிற்கு, அதாவது 18.86 சதவிகிதம் குறைத்து, 5.385 சதவிகிதமாக நிர்ணயித்தது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். முந்தைய அரசு, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோதும், இந்த நிதி நிலைமையில் ஏற்பட்ட பேரிடரைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டது. மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடியான, நிதிப் பகிர்வுக் கொள்கை குறித்த பன்னிரெண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளிலிருந்து, 2005-2010ஆம் ஆண்டுக் கால அளவில், மத்திய வரிகளில் பிரித்துக் கொடுக்கத் தக்க தொகுப்பில், தமிழ்நாட்டின் பங்கு, 5.305 சதவிகிதமாக இருக்கும் என்பது தெரியவருகிறது. இது, முந்தைய அளவைவிட சற்று குறைவே என்றாலும், முன்னர் நாம் அஞ்சியபடி, பெருமளவிற்குக் குறையவில்லை. இவ்வாறு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டை மற்றுமொரு கண்கூடான நிதி இடர்பாட்டிலிருந்து காப்பாற்றி யுள்ளார்கள்.

12. மாநிலங்களுக்குகிடையேயான நிதிப் பகிர்வுமுறை தற்போது பின்வரும் கோட்பாட்டின்படி அமைகிறது:

- மாநிலத்தின் நபர்வாரி வருமானத்திற்கும் அதிகபட்ச நபர்வாரி வருவானத்திற்கும் இடையான வித்தியாசத்தின் அடிப் படையில் 50 சதவிகிதம்.
- மக்கள் தொகைக்கு 25 சதவிகிதம்.
- புவியியல் பரப்பளவின் அடிப்படையில் 10 சதவிகிதம்.
- வரி விதிப்பு அடிப்படையில் 7.5 சதவிகிதம்.
- நிதி பொறுப்புணர்வின் அடிப்படையில் 7.5 சதவிகிதம்.

13. மத்திய வரிகளில் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பில் அனைத்து மாநிலங்களுக்கான மொத்தப் பங்கினை 29.5 சதவிகிதத்திலிருந்து, 30.5 சதவிகிதமாக உயர்த்த பன்னிரண்டாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. இவ்வரசு இதனை, 29.5 சதவிகிதத்திலிருந்து, 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமெனக் கோரியிருந்தது. இவ்வாறாக, பன்னிரண்டாவது நிதிக் குழு பரிந்துரைத்திருக்கும் இந்த உயர்வு, ஏமாற்றமளிப்பதாக உள்ளது. ஆனாலும், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படக் கூடிய இழப்புகளைச் சரிசெய்யவும், மறுவாழ்வு அளிக்கவும் ஆகக் கூடிய செலவுகளுக்கான மானியத்தை உயர்த்தியும், உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்களை உயர்த்தியும், சாலைகள், கட்டடங்களின் பராமரிப்பிற்கான மானியங்களுக்கு வகை செய்தும், இந்த பன்னிரண்டாவது நிதிக் குழு, அளித்துள்ள

பாராட்டத்தக்க பரிந்துரைகள் ஆறுதல் அளிப்பனவாக உள்ளன. இவை, வரவேற்கத்தக்க நடவடிக்கைகள் ஆகும்.

14. பன்னிரண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளில் தமிழ்நாடு போன்ற மாநிலங்களை விட்டுவிட்டு, பற்றாக்குறை மானியமாக 15 மாநிலங்களுக்கு மட்டும் கணிசமான அளவு மானியம் வழங்கியிருப்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் தங்களது அரிதான நிதி ஆதாரங்களைக் கொண்டு நல்ல வளர்ச்சிகளைக் கண்டுள்ள தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களை, ஒதுக்கித் தள்ளிவிட்டு, குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு மட்டும் இத்துறைகளின் மேம்பாட்டிற்காக பெருமளவில் மானியங்களை பன்னிரண்டாம் நிதிக்குழு பரிந்துரைத்திருப்பது மீண்டும் ஏமாற்றமளிக்கும் ஒரு போக்காகும். இந்தத் துறைகளில், அனைத்து மாநில அரசுகளும், கணிசமான அளவிற்கு இன்னும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒருசில மாநிலங்களுக்கு இந்த நிதிகளை அளிக்க மறுப்பதானது, இத்தகைய மாநிலங்களுக்கு அளிக்கப்படும் ஒரு தண்டனையாகவே அமைகிறது. குறிப்பிட்ட தேவைகளுக்கான மானியங்களில் தமிழ்நாட்டிற்களிக்கப்படும் பங்கு ஏமாற்றமளிப்பதாக உள்ளது. தேசிய நலனைக் கருத்திற்கொண்டு, பன்னிரண்டாவது நிதிக்குழு இந்த நிதியாதாரங்களைச் சமமாகவும் நியாயமாகவும் பகிர்ந்தளித்திருக்க வேண்டும்.

15. மாநிலங்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வகை செய்யும், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, 31.3.2004 வரை பெறப்பட்டு, 31.3.2005 ஆம் நாள் நிலவரப்படி, மத்திய அரசுக்கு, மாநில அரசுகள் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள கடன் நிலுவைகள் அனைத்தும், ஒரு புதிய கடனாகத் தொகுக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு 7.5 சதவிகித வட்டியுடன், 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த நிவாரணம், நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தைப் பின்பற்றும் மாநிலங்களுக்கு மட்டுமே என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையை ஒவ்வோர் ஆண்டும் குறைத்து, நிதிப்பற்றாக்குறையை 2004-2005ஆம் ஆண்டு நிலையைப் பராமரிப்பதோடு இணைந்த கடன் தள்ளுபடித் திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கவேண்டும் என்ற நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வலுவான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைப்பது மற்றும் நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக புதிய கடன்களைக் கட்டுப்படுத்துவதுமான கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிய வேண்டும்.

16. மொத்தத்தில், இந்தப் பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள், பின்தங்கிய மாநிலங்கள் என்று சொல்லப் படுகின்றவற்றுக்கு அதிக நிதிகளை அளிக்கும் வாலாயமான பழைய போக்கினைத் தவிர்த்து, நிதி ஆதாரப் பகிர்வுகளைத் தீர்மானிப்பதில் திறமையையும் நல்லாளுமையையும் கொண்ட மாநிலங்களை ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

சுனாமி நிவாரண நடவடிக்கைகள்

17. 2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று "சுனாமி" ஆட்கொல்லிப் பேரலைகள், எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி தமிழ்நாட்டுக் கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கின. இது முன் எப்போதும் கண்டிராத வகையிலான பேரிடராகும். சுமார் 8,018 நபர்களின் உயிர்களைப் பறித்து, இலட்சக் கணக்கான மக்களை உறைவிடமிழக்கச் செய்து, கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களின் வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்தி, சிதைத்த இப்பேரலைகள் கடற்கரையோரம் நெடுகிலும் அளப்பரிய பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணப் பணிகளையும் தொடங்குவதற்காக, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்றே சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்தார். நமது தலைவி 27.12.2004 அன்று மீண்டும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றதோடு, கடலூர், நாகப்பட்டினம், நாகர்கோவில் ஆகிய இடங்களில், 30.12.2004 அன்று உடனடி நிவாரணத் தொகுப்பு உதவிகளையும் வழங்கினார்.

18. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகளை மூன்று கட்டங்களாக மேற்கொண்டார். காணாமல் போனவர்களைத் தேடுதல், மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோரை பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தல், சடலங்களை எரிக்க/புதைக்க ஏற்பாடுகள் செய்தல் மற்றும் நிவாரண முகாம்களை அமைத்தல் ஆகியன முதல் கட்டப்பணியில் அடங்கும். உடனடி நிவாரண உதவி அளிப்பது இரண்டாம்

கட்டப் பணியாகும். நிரந்தர மறுவாழ்வு அளிப்பது மூன்றாம் கட்டப் பணியாகும். முதல் இரண்டு கட்டப்பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பின், தற்போது நாம் நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் மூன்றாம் கட்டப் பணியைத் தொடங்கியுள்ளோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு உதவிகளை அளிக்கும் செயல்திறன் கொண்டதாக ஒட்டுமொத்த நிருவாக இயந்திரத்தை முடுக்கி விட்டவிதம், உலக அளவில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. மாநிலம் முழுவதுமுள்ள துப்புரவுப் பணியாளர்களைத் திரட்டி, இறந்தோரின் சடலங்களை மீட்டு, அடையாளம் கண்டு, பின் அச்சடலங்களைப் புதைப்பதற்கு அல்லது எரியூட்டுவதற்கான பணிகளைத் திறம்பட மேற்கொண்டதன்மூலம் தொற்று நோய் பரவும் அபாயம் தவிர்க்கப்பட்டது. தொற்று நோய் பரவும் அபாயத்தைத் தவிர்த்திட, மருத்துவர்களும் பொதுச் சுகாதாரப் பணியாளர்களும் விரைந்து செயலாற்றினார்கள். இலட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, ஆடைகள் மற்றும் இருப்பிட வசதிகள் அளிக்கப்பட்டன.

19. பேரழிவு மற்றும் சேதங்களை விவரித்து, நிவாரணம் வழங்குதல் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசிடமிருந்து 4,800 கோடி ரூபாய் நிதியுதவி கோரி, இந்த அரசு விரிவான கோரிக்கை மனு ஒன்றை அளித்தது. இத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 5,000 கோடி ரூபாய் செலவில், கடலோர பசுமைத் தடுப்புகள், மாங்குரோவ் காடுகள், கருங்கற்களிலான கடற் தடுப்புச் சுவர்கள் மற்றும் கான்கிரீட் கடற்தடுப்புச் சுவர்கள் ஆகியவற்றை அமைப்பது உள்ளடக்கிய கடலோரப் பாதுகாப்புத் திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார். இதுவரையில், மத்திய அரசு, 31.1.2005 ஆம் நாளிட்ட அனுமதி ஆணை ஒன்றின் மூலமாகவும் 24.2.2005 ஆம் நாளிட்ட மற்றொரு ஆணையின் மூலமாகவும், 1,726.72 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முன்பணமாக 250 கோடி ரூபாய் வழங்கப்பட்டதைத் தவிர, இதுவரையிலும் மாநில அரசுக்கு நிதி ஏதும் விடுவிக்கப்படவில்லை. நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக தேசிய இயற்கைச் சீற்றங்கள் குறித்த எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட நிதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென, இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது. மீனவர்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, நூறு சதவிகித உதவித் தொகை வழங்கவேண்டும் என்றும் மாநில அரசுக்கு நேரடியாக நிதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் இந்த அரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. மேலும், சுனாமி பேரழிவினால் இழந்துபோன சொத்துக்களை மீள உருவாக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக, கூடுதல் நிதி வழங்க வேண்டுமெனவும் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது. மீனவர்கள், வணிக வங்கிகளுக்கும், கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து மத்திய அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

20. தற்காலிக நிவாரணப் பணிகளுக்காகவும், நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், இந்த அரசு, இதுவரையிலும், 895.18 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. நிவாரண உதவி அனைத்தும் மாநில அரசு மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் மத்திய அரசுக்குத் தெளிவுபடக் கூறியுள்ளார். கொள்கைப்பூர்வமான இந்த நிலைப்பாடு, பரவலாக அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், புதிய நிலையான வீடுகள் கட்டுதல், குறிப்பாக, மீனவர்களுக்கு வாழ்வாதாரங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேதமடைந்த கட்டமைப்பு வசதிகளை மீண்டும் உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய, நிவாரணம் மற்றும் நிரந்த மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக சிறப்பு உதவி வழங்கவேண்டும் என்று ஆசிய வளர்ச்சி வங்கியையும் உலக வங்கியையும் நாம் அணுகியுள்ளோம். அரசு சாரா அமைப்புகள், தன்னார்வக் குழுமங்கள் மற்றும் நிறுவன அமைப்புகள் ஆகியன நிவாரணப் பணிகளுக்குப் பேராதரவு அளித்து வருகின்றன. நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளில் இந்த அமைப்புகள் தொடர்ந்து பங்குபெறுவதற்காக, நமது அரசு, தெளிவான திட்டமொன்றை வகுத்துள்ளது.

21. மீனவர்களுக்கு நிரந்தர மறு வாழ்வளிப்பது தொடர்பான பிரச்சினைகளை, பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். மீனவர்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கும் பணி, தற்போது, முழுவீச்சில் நடைபெற்றுவருகிறது. 2005 ஏப்ரல் திங்கள் இறுதிக்கு முன்னர் இதில் அதிகபட்ச முன்னேற்றம் எய்தப்படும். பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு, 2005, பிப்ரவரி திங்கள் தொடங்கி,

மாதமொன்றுக்கு குடும்பம் ஒன்றிற்கு 1,526 ரூபாய் வீதம், மொத்தம் 137 கோடி ரூபாய் தொகுப்பு உதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த உதவி, 2005 ஏப்ரல் திங்கள் கடைசிவரையில் தொடரும்.

நாட்டிலேயே மிகச் சிறந்த காவல்படை

22. 2005-2006 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில், காவல் துறைக்கு 1339.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை செயல்பாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாடு காவல் படை, நாட்டிலேயே மிகச் சிறந்த படை என்ற நிலையை உருவாக்கிட, பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். பயங்கரக் காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழித்துக் கட்டியதானது, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ், தமிழ்நாடு காவல் படை, தொழில் ரீதியான அணுகுமுறை, வீரம், திறமை மற்றும் சாதனை ஆகியவற்றில் தன்னிகரற்ற ஒரு படையாக விளங்குகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

நவீனமயமாகும் காவல்துறை

23. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தில், அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இத்திட்டம், 427.59 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், கணினிகள், வீடியோ கேமிராக்கள், நவீன ஆயுதங்கள், உயர் தொழில்நுட்பத் தகவல் தொடர்பு சாதனங்கள், நிகரி (FAX), போட்டோ படிபெருக்கிகள் (Photo Copier) முதலியன போன்ற அலுவலகப் பயன்பாட்டுச் சாதனங்கள் வழங்கப்பட்டு, அவை முழுமையாக நவீன மயமாக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, காவல் துறை, தற்போது, குற்றங்களைக் கண்டு பிடித்து, சட்டம்–ஒழுங்கைப் பேணிக்காத்து அமைதியை நிலை நாட்டிடத் தேவையான அனைத்து நவீன வசதிகளையும் பெற்றுள்ளது. 961 பெண் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 10,737 காவலர் பணி இடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்து நியமனம் செய்யும் பணி 2004-2005 ஆம் ஆண்டில் முடிவடைந்துவிட்டது. காவலர் பணியிடங்களில் மேலும், உள்ள 2,219 காலி இடங்களை நிரப்புவதற்கான ஆட்தேர்வுப் பணி தொடங்கிவிட்டது. இது, காவல் துறையை மேலும் வலுப்படுத்த பெரிதும் உதவும்.

24. அனைத்து வசதிகளும் கொண்ட காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசியம் என நீண்ட காலமாகவே உணரப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள், 48 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். வண்டலூருக்கு அருகில் ஒணமாஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள இக்கழகம், தமிழ்நாடு காவல் துறை, திறமை, கட்டுப்பாடு மற்றும் திறம்பட்ட செயல்பாடு ஆகியவற்றில் எப்போதும் முன்னிலை வகிக்கும் வகையில், நவீன வசதிகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ளது.

25. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் காவல் படையில் மகளிரைச் சேர்த்துக் கொள்வதில் எப்போதும் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இதுவரையிலும், 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. நாட்டிலேயே முதலாவதாக, அனைத்து மகளிர் படைப் பிரிவையும், அனைத்து மகளிர் அதிரடிப்படையையும் கொண்டிருக்கும் ஒரே மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. இதனால் பொது மக்கள், குறிப்பாக, மகளிர் தங்களுடைய குறைகள் திறம்படக்

களையப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் காவல் துறையினரை அணுகலாம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.



26. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாடு காவல் படையினருக்கு மிகச் சிறந்த வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில் தனி அக்கறை காட்டி வருகிறார்கள். 2001-2004 ஆண்டுகளில் 6,000 புதிய வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும். காவல் படையினரின் ஒழுக்க நெறி எப்போதும் உயர்நிலையில் இருக்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

27. காவல் துறைத் தலைமை இயக்குநர் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளின் அலுவலகங்களுக்காக, தரமணியில், 30 கோடி ரூபாய் செலவில் புதிய அலுவலக வளாகம் ஒன்று கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்துள்ளார். இது, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் துணிச்சல் மற்றும் ஆற்றல் மிகுந்த தலைமையின் கீழ், தமிழ்நாடு காவல் துறை, புதிய சிகரங்களை எட்டியுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சிறைச்சாலைகள்

28. சிறைவாசிகள் விரைவில் திருந்தி, மறுவாழ்வு பெற்று, மீண்டும் நவீன சமுதாய நீரோட்டத்தில் கலந்து வாழ்வதற்கு தகுந்த உதவிகளை அரசு அளித்து வருகிறது. சிறைவாசிகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை முற்றிலுமாகக் கைவிடுவதற்கான, பல புதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு முற்போக்கு நடவடிக்கையாக, 10 கிளைச் சிறைகள் / தனி கிளைச் சிறைகள், முற்றிலும் பெண்களாலேயே நிருவகிக்கப்படும் மகளிர் கிளைச் சிறைகளாக / தனி கிளைச் சிறைகளாக மாற்றப்பட்டுள்ளன. மாநிலத்தில், முதல் முறையாக, கைதிகளின் காவல் வைப்பு, தனித்தன்மை வாய்ந்த தொலைக்காட்சி வழி கலந்துரையாடல் ஏற்பாட்டின் மூலம் (video conferencing system) நீட்டிக்கப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டின் கீழ் 62 நீதிமன்றங்களையும், 16 சிறைச் சாலைகளையும் இணைக்கும் இத்திட்டம் 8.61 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் சிறைத் துறைக்கு 91.41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத் துறைக்கு 96.08 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். இதற்காக, 11.78 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. புழலில் புதிதாக சிறைச்சாலை அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. விரைவில் இப்பணி முடிவடையும்.

தீத்தடுப்பும் – மீட்புப் பணிகளும்

29. தீத்தடுப்பு–மீட்புப்பணித் துறையை நவீனப்படுத்தி, தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேலும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு

ஏற்றவாறு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கும் நோக்குடன், இப் பணிகள் குறித்த அனைத்து அம்சங்களையும் பரிசீலிப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே.எஸ். பக்தவச்சலம் தலைமையில் தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம் ஒன்று அமைக்கப் பட்டது. இந்த ஆணையம், அதன் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இதன் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பழைய தீயணைப்புச் சாதனங்களுக்குப் பதிலாக, புதிய, நவீன சாதனங்களை வாங்குவதற்கான பெருந்திட்ட மொன்றைச் செயற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. பேரிடர்கள் ஏற்படும்போது, தீயணைப்புப் படை வீரர்கள், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற உயரிய திறனைப் பெற்றிருக்கின்ற வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும், சுமார் 20 அதிரடிப்படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தீவிரப் பயிற்சி பெற்று, இத்துறைக்கு அரியதொரு சொத்தாக விளங்கி வருகிறார்கள். கும்பகோணம் பள்ளியில் ஏற்பட்ட தீவிபத்து துயரச் சம்பவத்தைக் கருத்திற்கொண்டு, பயிற்சி, தீத்தடுப்பு மாதிரி செயற்பயிற்சிகள் அளித்தல், தீ விபத்து குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளுக்கு, தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறைக்கு 2004-2005 ஆம் ஆண்டுத் திருத்த மதிப்பீட்டில் 61.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 68.55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நீதித் துறைக்கு கூடுதல் நிதி

30. மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற தென் தமிழ்நாட்டு மக்களின் நீண்டநாள் கனவு 2004 ஜூலையில் நிறைவேறியுள்ளது. இந்த அரசு, 65.45 கோடி ரூபாய் செலவில் இதற்கான வளாகத்தைக் கட்டி முடித்துள்ளது. நீதிமன்றக் கட்டடங்களைப் பராமரிப்பதற்கென ஒரு சிறப்புத் திட்டம் 7.58 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தையும், ஏனைய நீதிமன்றங்களையும் கணினிமயமாக்குவதற்குத் தனி முக்கியத்துவம் அளிப்பதுடன், தேவையான அனைத்துக் கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளையும், அரசு செய்துவருகிறது. திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் புதிதாக மாவட்ட முன்சீப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றம் ஒன்று ஏற்படுத்தப்படும். நீதி நிருவாகத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டுத் திருத்த மதிப்பீட்டில் 178.88 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அது 193.79 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

31. நீதித் துறையின் திறம்பட்ட செயலாக்கத்திற்கு வேண்டிய சிறந்த, திறமையான வழக்குரைஞர்களை உருவாக்க, சட்டக் கல்லூரிகளுக்கும், சட்டப் பல்கலைக்கழகத்திற்கும் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் அரசு வழங்கி வருகிறது. அரசு சட்டக் கல்லூரிகளில் அதிகரித்துவரும் மாணவர்களுக்குத் தேவையான இடவசதி செய்து கொடுக்கும் நோக்குடன், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக வளாகத்தில், சிறப்பு சட்ட கல்வி மையத்திற்காக 1.30 கோடி ரூபாய் செலவில் தனிக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக சட்டக் கல்லூரி கட்டுவதற்காக, அப்பல்கலைக் கழகத்திற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அங்கு கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டில் 1.18 கோடி ரூபாய் செலவில், திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவிகளுக்காக, மாணவியர் இல்லம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புத்துயிர் பெற்ற முதன்மைத் துறையை நோக்கி வேளாண்மை

32. என்னுடைய சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், முதன்மைத் துறைக்கு, குறிப்பாக வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கான இந்த அரசின் புதிய உத்திகள் குறித்து கோடிட்டுக் காட்டியிருந்தேன். இந்த உத்திகளைச் செயல்படுத்தியதன் பயனாக, முதன்மைத் துறை புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது. நடப்பு ஆண்டில், முதன்மைத் துறை, கடந்த ஆண்டில் இருந்ததைவிட, நடப்பு விலைகளில் 16 சதவிகித வளர்ச்சி அடையும் என்பதை அறிந்து மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். மொத்தத்தில், நடப்பாண்டில் உணவுத் தானிய உற்பத்தி, 90 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விஞ்சும். இவ்வாறு வேளாண்மை புத்துயிர் பெற்றிருப்பதுகண்டு ஊரகப் பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

33. இந்த அரசு பின்பற்றிவரும் உத்திகளில், மாற்றுப் பயிர்த் திட்டம், ஒட்டுமொத்தத் தரிசு நில

மேம்பாட்டின் மூலம் மேலும் அதிக நிலங்களைச் சாகுபடியின் கீழ் கொண்டுவருதல், நீரைத் திறம்படப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், துல்லிய பண்ணை முறையைப் பின்பற்றுதல், புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பரப்புதல் மற்றும் பின்பற்றுதல், விவசாயிகளுக்கு, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க சிறப்பான அங்காடி வசதி, வேலைவாய்ப்பைப் பெருக்க பண்ணை சாரா ஊரகத் துறையில் அதிக கவனம் செலுத்துதல், விவசாயிகளுக்குச் சிறப்பாகச் சேவையாற்ற, கூட்டுறவுக் கடன் வசதி அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்டுதல் ஆகியவை அடங்கும். இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் பல்வேறு கூறுகளின் கீழ் விரைவான முன்னேற்றம் கண்டுள்ளோம்.

மாற்றுப் பயிர்த் திட்டம்

34. மாற்றுப் பயிர்த் திட்டம், நல்ல உத்வேகத்தைப் பெற்றுள்ளது. தக்க விலையும், உறுதியான விற்பனை வாய்ப்புகளும் கிட்டுமாயின், குறைவான நீரே தேவைப்படும் மாற்றுப் பயிர்களைப்



பயிரிட விவசாயிகள் தயாராக உள்ளனர். இனிப்புச் சோளம், சர்க்கரைக் கிழங்கு, காட்டா மணக்கு போன்ற குறைவான நீரில் விளையக்கூடிய பயிர்களைப் பயிரிடுவதற்கான மாற்றுப் பயிர் உத்திகளை, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்துள்ளார்கள். சர்க்கரை ஆலைகளிலும் உயிரி எரிபொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகளிலும், இந்த விளை பொருள்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உறுதியான இணைப்பு வசதியுடனேயே இந்தப் பயிர்கள் பயிரிடப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தப் பண்ணை ஏற்பாடுகளால், சிறந்த தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டு, நிலையான விற்பனை வாய்ப்புகள் உருவாகும். தோட்டக் கலைக்கு முக்கியத்துவம் அளிப்பதும், மாற்றுப்பயிர் திட்டத்தின் ஓர் அங்கமே. 2011-2012 ஆம் ஆண்டுக்குள் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியை இருமடங்காக்குவதே நமது குறிக்கோளாகும். தோட்டக்கலை இயக்கத்தின் ஓர் அங்கமாக மாதிரி கிராமத் திட்டம் செயற்படுத்தப்பட்டு, தோட்டக்கலைப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதன் பயனாக, அதிக அளவில் நீரைப் பயன்படுத்தி, குறைந்த மதிப்புள்ள பயிர்களைச் சாகுபடி செய்கின்ற நிலைமாறி, குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிக மதிப்புள்ள தோட்டக்கலை பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலை உருவாகி வருகிறது. இதற்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும்.

35. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களைப் பசுமைச் சாகுபடியின் கீழ் கொண்டு வந்துள்ளனர். நடப்பாண்டில், இதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டம், 35 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். 1.5 இலட்சம் ஏக்கர் நிலங்களில், மர வகைகள் மற்றும் தீவனப் பயிர்கள், இச் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்படும்.

துல்லியப் பண்ணைத் திட்டம்

36. பாசனத்திற்கு நபர்வாரி நீர் அளவு மிகக் குறைவாகவே இருப்பதாலும், தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியினால் உருவான நீர் நெருக்கடியினைக் கருத்தில் கொண்டும், இம்மாநிலத்தில் உழவர்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறை மூலம் இது பிரபலப்படுத்தப்படும். சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறையைப் பின்பற்றும் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு 50 சதவிகித உதவித் தொகை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. பெரும் உழவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் 25 சதவிகித உதவித் தொகை தொடரும். இந்த மாநிலத் திட்டத்திற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. ஒரு முன்னோடி அடிப்படையில், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இந்த அரசு தொடங்கிவைத்த துல்லியப் பண்ணைத் திட்டம், நன்கு செயல்பட்டுவருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில், 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

37. வேளாண்மைப் பணியில் புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றுவது மிகவும்

இன்றியமையாத ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் அதிக உற்பத்தித் திறனை எய்தும் வகையில் முதன்மைப் பயிர்களுக்கான தனித் திட்டங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்படும். தற்போது, 12 மாவட்டங்களில் உழவர் பயிற்சி மையங்கள் உள்ளன. வரும் ஆண்டில், மேலும் 11 மாவட்டங்களில், உழவர் பயிற்சி மையங்களை ஏற்படுத்த இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் சேர்க்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உழவர்கள் புதிய தொழில்நுட்ப உக்திகளையும், நடைமுறைகளையும் தெரிந்து கொள்ள, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான ஒரு புதிய திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். விரிவாக்கப் பணிகள் உழவர்களுக்கு உடனுக்குடன் கிடைக்கச் செய்வதற்காக, வட்டார அளவிலான விரிவாக்க மையங்கள் மீண்டும் ஏற்படுத்தப்படும். இதனால் உழவர்கள் தங்களுக்குத் தேவையான தகவல் மற்றும் வசதிகளை வட்டார அளவிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

38. உழவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க, அவர்களுக்கு முறையான அடிப்படையில், புதிய அங்காடி வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. இதன் காரணமாகத்தான், இந்த அரசு, 65.34 கோடி ரூபாய் செலவில், ஒசூர், ஊட்டி, தேனி ஆகிய இடங்களில், வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தியுள்ளது. 10.36 கோடி ரூபாய் செலவில், கடலூரில், முந்திரிக்கான புதிய வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தும்.

39. 1.1.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள உலக வர்த்தக நிறுவனத்தின் விதிமுறைகளின் காரணமாக, துணித்தொழிலுக்கு உருவாகியுள்ள வளமான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, ஒப்பந்தப் பண்ணை அடிப்படையில், பருத்தி பயிரிடுவோரை, அதனைப் பயன்படுத்தும் ஆலைகளுடன் இணைப்பதற்கான முயற்சி தீவிரப்படுத்தப்படும். ஆதாயம் தரும் வேளாண்மை என்னும் அடிப்படையிலும், நுகர்வோரிடையே, குறிப்பாக, நகர்ப்புற அங்காடிகளில் நிலவும் விருப்ப உரிமையைக் கருத்திற்கொண்டும், உயிரிப் பண்ணைமுறை (Organic Farming), தற்போது முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த உயிரிப் பண்ணைமுறை, நகர்ப்புற அங்காடிகளை ஒட்டிய பகுதிகளில், முனைப்பாக ஊக்குவிக்கப்படும்.

நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

40. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்த மழைநீர் சேகரிப்பு இயக்கத்தைச் செயல்படுத்தியதன் மூலம் கிடைத்துள்ள பயன்களை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த இயக்கம், பெரிய அளவிலான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதன்படி, மாநிலம் முழுவதையும், சிறுசிறு நீர்வரத்துப் பகுதிகளாகப் பிரித்து, மழைநீர் சேகரிப்பு பணி மேற்கொள்ளப்படும். மண்ணின் ஈரத் தன்மையைக் காத்து வறட்சியிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பண்ணைமுறையோடு சேர்ந்து தமிழ்நாட்டில் இந்தச் சிறிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஊரகப் பகுதிகளில் நிலையான பயனை அளிக்கும். மாநிலம் முழுவதும், 126 பெரிய அளவிலான நீர்வரத்துப் பகுதிகளாகவும், 19,206 சிறிய அளவிலான நீர்வரத்துப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 20 ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ், இங்கும் அங்குமாக, 6,000 சிறிய அளவிலான நீர்வரத்துப் பகுதித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் 66 இலட்சம் எக்டேர் பரப்பளவு நிலத்தை உள்ளடக்கிய 13,206 நீர்வரத்துப் பகுதித் திட்டப்

பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அனைத்து வளங்களையும் ஆதாரங்களையும் பயன்படுத்தி மக்களின் பங்கேற்புடன், இந்த நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பெரிய அளவில், நிறைவேற்ற வேண்டியது முக்கியம் ஆகும்.

41. தற்போது, பல்வேறு திட்டங்களின் கீழ், ஓராண்டில், 300 சிறிய நீர்வரத்துப் பகுதித் திட்டப் பணிகளை மேற்கொள்வது மட்டுமே சாத்தியம் என்ற நிலை உள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், புதிதாக 1000 சிறிய நீர்வரத்துப் பகுதித் திட்டப் பணிகளை மேற்கொள்ள இயலும் வகையில், இந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன், அரசு சாரா மற்றும் தன்னார்வ அமைப்புகளையும் ஈடுபடுத்தி, பெரிய அளவில், நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள, நபார்டு நிதியுதவியுடன், ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும். மக்களின் முழுப் பங்கேற்புடன் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம், சமுதாயத்திற்கு நிலையான பயன் கிடைப்பதை உறுதி செய்வதோடு, வேளாண்மைக்குப் பாதுகாப்பையும் அளிக்கும். 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வேளாண்மைக்கான மொத்த ஒதுக்கீடு 854.41 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாசனம்

42. நமது நாட்டில், நபர்வாரி நீரின் அளவு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. ஒரு சில ஆண்டுகளில், ஒரு சில வடிநிலப் பகுதிகளில், கடலில் சென்று கலக்கின்ற மிகக் குறைந்த அளவிலான நீரைத் தவிர, மற்றபடி, பாசனத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் வகையில் கிடைக்கின்ற மேற்பரப்பு நீரின் அளவு மிகச் சொற்பமே என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில்தான், நதிகளை இணைக்கும் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகா நதியைக் குண்டாறுடன் இணைக்கும், தீபகற்ப நீர்க் கட்டமைப்புப் பணியை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். தென்னக மாநிலங்களின் வளர்ச்சிக்குப் புதிய உத்வேகத்தை அளிக்கக்கூடிய இந்த முக்கியமான திட்டம் குறித்து, மத்திய அரசு நடவடிக்கை எதுவும் எடுக்காதது மிகவும் துரதிருஷ்டவசமானதாகும். நாட்டின் ஏனைய பகுதிகளில் இத்தகைய பன் மாநிலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும்போது, தென்னகத்திற்கு, அதிக பயன் அளிக்கக்கூடிய இத்தகைய ஒரு பெருந்திட்டம் தள்ளிப்போடப்பட்டு வருவது ஏன் எனத் தெரியவில்லை. இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக இதனை விரைவுத் திட்டங்களின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துவதில் அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேருவர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

காவிரி ஆற்றில் முறையான நீர்வரத்தை உறுதி செய்யத் தக்கதொரு திட்டம்

43. கருநாடகா போதிய அளவு தண்ணீரைத் திறந்துவிடாததால், 2004-2005ஆம் ஆண்டில்கூட காவிரி வடிநிலப்பகுதியில் குறுவையைப் பயிரிட முடியவில்லை என்பதை இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். அம்மாநில நீர்த் தேக்கங்களின் உபரி நீர் மட்டுமே தமிழ்நாட்டை வந்தடைய அனுமதிக்கப்பட்டது. நல்வாய்ப்பாக, நல்ல பருவமழை பெய்ததால், சம்பா பயிர்ச் சாகுபடியை மேற்கொள்ள முடிந்தது. அப்படி இருந்தும், காவிரி நீர்த் தகராறு நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, கருநாடகம் வழங்காத தண்ணீரின் மொத்தப் பற்றாக்குறை அளவு, 28.2.2005 நிலவரப்படி 39.62 டி.எம்.சி கன அடி ஆகும். உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளையொத்த அதிகாரமுடையவை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள 'நடுவர்மன்ற ஆணைகளை' நிறைவேற்ற, போதிய அதிகாரங்களைக் கொண்ட முறையான ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. காவிரி நதிநீர்த் தகராறு நடுவர் மன்றம், விரிவானதொரு திட்டத்தை வகுத்தளித்து, நடுவர் மன்ற ஆணைகள் செயல்படுத்தப்படும்போது, இந்தத் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் தெளிவாக வரையறுத்துக்கூற வேண்டும் என்று இவ்வரசு காவிரி நதிநீர்த் தகராறு நடுவர் மன்றத்தில் நீர் ஒதுக்கீடு குறித்து நடைபெற்ற இறுதியான வாதத்தின்போது வலியுறுத்தியுள்ளது. காவிரி வடிநிலப் பகுதியில் ஒவ்வோர் ஆண்டும் குறுவை மற்றும் சம்பாப் பயிர்களைச் சாகுபடி செய்ய ஏதுவாக, காவிரி ஆற்றில் முறையான நீர் வரத்தை உறுதி செய்ய தக்கதொரு திட்டத்தை வகுத்தளிக்க வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது.

44. தற்போது, கிடைக்கக்கூடிய நீராதாரங்களைச் சிறந்தமுறையில் நிருவகிப்பதை உறுதி செய்வதற்குரிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையின் கீழ்தான், தமிழ்நாட்டில் நீராதார ஒருங்கிணைப்புத் திட்டம்–I ஐச் செயல்படுத்த உலக வங்கி ஒப்புதல் அளித்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். கிடைக்கக்கூடிய நீராதாரங்களை ஒருங்கிணைத்து, நிருவகிக்க, இத்திட்டத்தின் கீழ் 17 பெரிய அளவிலான வடிநிலப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. நவீனப் படுத்துதல், திறன்மேம்பாடு, சிறந்த மேலாண்மை நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் மூலம், நீராதாரங்களைச் சிறந்த முறையில் நிருவகிக்கும் இந்தக் கோட்பாடு, திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி வடிநிலப் பகுதியில் அநுமான் நதி துணை வடிநிலப் பகுதியில் செயற்படுத்தப்பட்டது. இந்த முன்னோடித் திட்டத்தின் பயன்களின் அடிப்படையில், நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்–II–க்கு விரைவில் ஒப்புதலளிக்குமாறு உலக வங்கி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. உலக வங்கியிடமிருந்து அனுமதியை எதிர்பார்த்து, இத்திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு, படிப்படியாகச் செயல்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். 20 கோடி ரூபாய் செலவில் பாலாறு வடிநிலத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பாசனத் திட்டங்கள்

45. பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற்காக, 'நபார்டு' நிறுவனத்திடமிருந்து நிதியைப் பெற, இவ்வரசு எடுத்துள்ள தனி முயற்சிகளை இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நபார்டு நிறுவனத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்று, 209.07 கோடி ரூபாய் செலவில், அத்தகைய 28 பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் 42.38 கோடி ரூபாய் செலவாகக்கூடிய மேலும் 16 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவை தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

46. பாசன ஏரிகளை ஆழப்படுத்தி, நவீனமாக்க வேண்டியதன் அவசியத்தை இம்மன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். பொதுப்பணித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பாசன ஏரிகளை ஆழப்படுத்தி, செம்மையுடன் சீரமைப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக, 2005-2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 62.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஏரிகளை முறையாகவும், முழுமையாகவும் ஆழப்படுத்த, மண் அகற்றும் இயந்திரம் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு ஏரியும் முறையான ஒரு நீர்த்தேக்கமாகப் பயன்படும் வகையில், முழுமையானச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். 62,500 ஏக்கர் பண்ணை நிலங்கள் பயனடையும் இந்தப் புதிய முயற்சிகளை இம்மன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பர் என நம்புகிறேன்.

கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களுக்குப் புத்துயிர்

47. கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்கள், பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உழவர்களுக்கும், பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள, ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து நபர்களுக்கும் கடன் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 2001 மே திங்களில், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, எதிர்கொண்ட கடுமையான பிரச்சினைகளில், கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களின் மிக மோசமான நிதிநிலையும் ஒன்றாகும். அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சி, இந்த நிறுவனங்கள் எதிர்கொண்ட நிதிப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியது. கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள் புத்துயிர்பெற இயலும் வகையில், அவற்றிற்குக் கூடுதல் நிதிகளை வழங்க இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தப் பெருமுயற்சியின் அடிப்படையில்தான், கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள், நடப்பாண்டில் 1,037.68 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க் கடன்களை வழங்க முடிந்தது. 2003-2004 ஆம் ஆண்டில், 616.59 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டது. இவ்வாறாகக்



கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள் புத்துயிர் பெறுவதை, இந்த அரசுதான் உறுதிப்படுத்தியது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறியலாம். 31.3.2004ஆம் நாள் நிலவரப்படி, கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்களுக்கு, உழவர்கள் வட்டியுடன் சேர்த்து கொடுக்க வேண்டிய கடன் பாக்கியான மொத்தம் 2,598 கோடி ரூபாயைப் புதிய கடனாக மாற்றியதால், அவர்கள் புதிய பயிர்க்கடன்களைப் பெற முடிந்துள்ளது. இத் தொகையை, அவர்கள், கடன் தவணை நீட்டிப்புக் கால அளவான 2 ஆண்டுகளையும் சேர்த்து 5 ஆண்டுக்கால அளவில் திருப்பிச் செலுத்தவேண்டும். ஒரு சில மாநிலங்கள் மட்டுமே உழவர்களிடமிருந்து வரவேண்டிய இந்தக் கடன்களைப் பெரிய அளவில் புதிய கடனாக மாற்றி அமைத்துள்ளன.

48. உழவர்களின் கடன்களை இவ்வாறு மாற்றியமைத்ததனால், கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்களுக்குப் பெரும் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள், தங்களுடைய செயல்பாடுகளைத் தொடர இயலும் வகையில், அவற்றுக்குப் புதிய சமவிகிதப் பங்குத் தொகையை அளிப்பதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில், 50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் சேர்க்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து எவ்வித நிதியுதவியும் பெறாமலேயே, கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் இந்த நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். வறட்சியினால் பாதிக்கப்பட்ட உழவர்களின் கடன்களைத் தள்ளுபடிச் செய்வதற்குத் தக்கதொரு திட்டத்தைச் செயல்படுத்துமாறு, மத்திய அரசை, இந்த அரசு வலியுறுத்துகிறது. இதில், கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் மட்டுமல்லாது, வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களும் அடங்கும்.

கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் விரிவாக்கம்

49. 'ஆரோக்கியமான கால்நடைகளே ஒரு நாட்டின் செல்வம்' என்ற கூற்றிற்கிணங்க, இந்த அரசு, கால்நடை வளர்ப்பிற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளது. கால்நடை மருத்துவ வசதிகள் போதுமான அளவிற்கு அமையப்பெறாத குக்கிராமங்களுக்கும் அந்த வசதி சென்றடைய வேண்டும் என்ற இலக்கோடு, 2004-2005 ஆம் ஆண்டிலும் கால்நடை சிறப்புப் பாதுகாப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 1.85 கோடி ரூபாய் செலவில், அத்தகைய 5,005 முகாம்கள் நடத்தி முடிக்கப்படும். இத்திட்டம், வரும் ஆண்டிலும் தொடரப்படும்.

50. இந்த அரசு, மிகப் பெரிய அளவில் கால்நடை மருத்துவப் பராமரிப்பு வசதிகளை விரிவுபடுத்தி வருவது குறித்து மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2001 ஆம் ஆண்டிலிருந்து, 316 கால்நடை மருத்துவத் துணை நிலையங்கள், 'கால்நடை மருந்தகங்களாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. இதனால், மாநில முழுவதிலும் மேம்பட்ட கால்நடை மருத்துவ வசதிகள் கிடைத்து வருகின்றன. நடப்பாண்டில், அனைத்து வசதிகளையும் பெற்றுள்ள 234 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கால்நடைகளுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவப் பராமரிப்பு வழங்கும், கால்நடை மருந்தகங்களின் மொத்த எண்ணிக்கை 1,156 ஆக உயர்ந்துள்ளது.



பால் கொள்முதல் அதிகரிப்பு

51. கால்நடைகளின் தர மேம்பாட்டில், தமிழ்நாடு விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது. இனப்பெருக்க நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகவரமைப்பு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. செயற்கைக் கருவூட்டல் திட்டச் செயலாக்கத்தில், இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது. மாநிலத்தில் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், 2001-2004 ஆம் ஆண்டு கால அளவில், 114 இலட்சம் செயற்கைக் கருவூட்டல்கள் நடத்தப்பட்டன. 2003ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட கால்நடை கணக்கெடுப்பிலிருந்து, கலப்பினக் கால்நடைகளின் விகிதாச்சாரம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருப்பது தெரியவருகிறது. நடப்பாண்டில், பால் கொள்முதல் வெகுவாக அதிகரித்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் சராசரி தினசரி பால் கொள்முதல் 20.37 இலட்சம் லிட்டராக இருக்க, இது 2004-2005ஆம்



ஆண்டில் 23.86 இலட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது. நுகர்வோர் மீது சுமையை ஏற்றாமல், பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலையை, லிட்டர் ஒன்றுக்கு ரூ.1/- அதிகரித்துக் கொடுத்ததால் இது சாத்தியமாயிற்று. பால் பதப்படுத்துதலில், மேம்பட்ட நடைமுறைகளும் சிறந்த சுகாதார வழிமுறைகளும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதன் வாயிலாக, தூய்மையான பால் உற்பத்திக்குத் தற்போது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. 8 மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில், 12.72 கோடி ரூபாய் செலவில், ஏனைய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் அனைத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.

வீட்டுப் பண்ணை முறை

52. கால்நடைத் தீவனப் பயிருடன், புன்செய் வேளாண் நிலங்களின் சீரிய மேலாண்மை மற்றும் உயர்தர வெள்ளாட்டு இனங்களுடன் ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணைகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வீட்டுப் பண்ணை முறை ஊக்கப்படுத்தப் பட்டு வருகிறது.

53. 2005-2006 ஆம் ஆண்டில், கால்நடைத் தீவனத் தயாரிப்பு, பால் பண்ணை, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, வீட்டுப் புழக்கடைகளில் கோழி வளர்ப்பு முதலியவற்றில், சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

54. 2005-2006ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணை வளர்ச்சிக்கான மொத்த ஒதுக்கீடு 178.01 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

மீனவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள்

55. கடற்கரையோரம் நெடுகிலும், பல்வேறு மாவட்டங்களில், மீனவர்களின் வாழ்வாதாரங்களைச் சீரழித்துவிட்ட சுனாமி துயரச் சம்பவத்தின் பின்னணியில், இம்மாநிலத்தில், மீனள மேம்பாட்டிற்காக விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். மீனளத் துறையை மிகவிரைவாக மேம்படுத்துவது குறித்து, புதிய அணுகுமுறைகளைப் பரிந்துரைப்பதற்காக, வல்லுநர்களைக் கொண்ட ஒரு பணிக்குழு அமைக்கப்படும். சுனாமி துயரச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு, 2005-2006 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படும். சுனாமி துயரச் சம்பவத்தையடுத்து, மறுவாழ்வுப் பணிகளுக்காக, வரவு–செலவுத் திட்டத்தில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையான 1,000 கோடி ரூபாயில், பெரும்பகுதி, மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கவும், கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவும், நிரந்தரமான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஒதுக்கப்படும்.



56. சேமிப்புடன் கூடிய நிவாரண திட்டம், கடல்சார் மீனவப் பெண்களுக்கும் நீட்டிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில், 1,68,198 கடல்சார் மீனவர்களுக்காக 16 கோடி ரூபாயும், 50,993 மீனவப் பெண்களுக்காக 6.05 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 28 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மீன்களைக் கரை சேர்க்கும் தளங்கள்

57. பழவேற்காடு மற்றும் முடசலோடை ஆகிய இடங்களில் 2.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட

இரண்டு புதிய, 'மீன்களைக் கரை சேர்க்கும் தளங்களை' (Fish landing centres), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20.12.2004 அன்று தொடங்கி வைத்தார்கள். 12.48 கோடி ரூபாய் செலவில் மேலும், இது போன்ற ஏழு தளங்கள் கட்டப்படும். சென்னை மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்களில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று 12.42 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். சுனாமி பேரலைகளால் சேதமடைந்த மீன்பிடி துறைமுகங்களைச் சீரமைக்கும் பணி, 9.94 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். நதி முகத்துவாரங்களில் தூர்வாரி, செப்பனிட 1 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இது முறையான மீன் வளர்ப்பினை மேற்கொள்ளப் பெரிதும் உதவும்.

58. நம்முடைய கடல்சார் மீனள ஆதாரங்களைப் பெருக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. கடல்சார் பண்ணை வளர்ப்பு மற்றும் கடல் அடிமட்டத்தில் செயற்கைப் பாறைகளை நிறுவுதல் போன்ற தொழில்நுட்ப உத்திகளை நாம் பின்பற்ற வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் அத்தகைய ஒரு திட்டம், தொடங்கப்பட வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் குறிப்பாக உள்ளார்கள். கடல்சார் மீனள வாயில்களைப் பெருக்குவதற்கான இத்திட்டம், 2.78 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதில் காணும் முன்னேற்றத்தின் அடிப்படையில், இத்திட்டம், சாத்தியமான ஏனைய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

59. நம்மிடம் 8 பெரிய மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. 12.42 கோடி ரூபாய் செலவில் சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் 2 மீன்பிடி துறைமுகங்களை உலகத்தர அளவுக்கு மேம்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. அனைத்து மீன்பிடி துறைமுகங்களையும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்டம் ஒன்றைத் தொடங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

60. மீனளத் துறைக்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்தம் 79.91 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வனப்பகுதிகள் பராமரிப்பு

61. பன்னாட்டுக் கூட்டுறவிற்கான ஜப்பான் வங்கியின் நிதியுதவி பெறும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் நிலை–II 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து 567.42 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 85.89 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிலை–I பணிகள் முடிவடைந்த நிலையிலும், இந்த அரசு, 2004-2005ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். 2004-2005 ஆம் ஆண்டில், 69.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதால், இத்திட்டத்தைத் தொய்வின்றித் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாகியது. இது, அனைவரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், வனப் பகுதியை ஒட்டியுள்ள 135 கிராமங்களும், பழங்குடியினர் கிராமங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். ஏற்கெனவே உருவாக்கப்பட்ட வனப் பகுதிகளைப் பராமரிப்பதுடன், காடுகள் அழிந்துவிட்ட சுமார் 72,000 ஏக்கர் பரப்புடைய வனப் பகுதி நிலங்களிலும், ஏனைய நிலப்பகுதிகளிலும் மீண்டும் காடுகள் வளர்க்கப்படும்.

மாங்குரோவ் காடுகள் உருவாக்கம்

62. கடலோரப் பசுமைத் தடுப்புகள் மற்றும் மாங்குரோவ் காடு வளர்ப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம், தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதிகளை சுனாமி அலைகள் தாக்கியபோது, பெரிதும் உணரப்பட்டது. பசுமைத் தடுப்புகளை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று தொடங்கப்பட வேண்டும் என்றும், சாத்தியமான இடங்களிலெல்லாம் மாங்குரோவ் காடுகளை வளர்க்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை இட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்காக, தொடக்க நிதியொதுக்கமாக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7.48 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. தேவைகளின் அடிப்படையில் இது அதிகப்படுத்தப்படும்.



நீரின் தரத்தை மேம்படுத்தும் புதிய திட்டம்

63. நிலையான வளர்ச்சி என்பது வெறும் கோட்பாடாக மட்டும் அல்லாமல், தற்போது ஒரு அத்தியாவசியத் தேவையாகவும் உருவெடுத்துள்ளது. நமது நீராதாரங்கள் அனைத்தும் தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டியதையும், குறிப்பாக, குடியிருப்புப் பகுதிகளை ஒட்டிய நீர் வரத்துக் கால்வாய்கள் மாசுபடாமல் இருக்க வேண்டியதையும் நாம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. குடியிருப்புப் பகுதிகளை ஒட்டியிருக்கின்ற அனைத்து நீர்நிலைகளையும் சீரமைத்து, மக்களுக்கு நீராதாரமாகப் பயனளிக்கக் கூடிய வகையில், நீரின் தரத்தை மேம்படுத்தும் புதிய திட்டம் ஒன்றை நமது தலைவி முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கியுள்ளார். இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

64. தொழில் பிரிவுகள் மாசுக் கட்டுப்பாடுடன் கூடிய மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதை உறுதி செய்ய, அவற்றோடு, பேச்சு வார்த்தை நடத்தி, தொழிற்சாலைகளால் ஆற்றுநீர் மாசுபடும் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்கக் கருதப்பட்டுள்ளது. தொழில் பிரிவுகளின் முழு அளவிலான பங்கேற்புடன் இத்தகைய திட்டத்தைச் செயற்படுத்த இயலும் பொருட்டு சிறப்புப் பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும். சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு 228.44 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நமது கிராமம் திட்டம்

65. நமது தலைவி மாண்புமிகு முதல்மைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.8.2004 ஆம் நாளன்று 'நமது கிராமம்' திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார் என்பதை பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின் கீழ், அனைத்துக் கிராமங்களும் பயனடையும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராமத்திற்கும் தெருவிளக்குகள், சிமெண்ட் சாலைகள் முதலியவை போன்ற கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்; தவிர, பள்ளிகளில் 100 சதவிகித மாணவர் சேர்க்கை, குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல், கருவிலிருக்கும் பெண் சிசுக் கொலையை ஒழித்தல், வறுமைக் குறைப்பு மற்றும் கிராமத் துப்புரவு ஆகியவை போன்ற குறிப்பிட்ட சமூக நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் நன்கு செயல்படும், ஊராட்சி ஒவ்வொன்றும், ரூபாய் 3 இலட்சம் வரையிலான செயல்பாட்டு அடிப்படையிலான கூடுதல் நிதியுதவி பெறுவதற்குத் தகுதிபெறும். பொது மக்களின் பங்கேற்புடன் அனைத்து சமூகப் பணித் துறைகளிலும் முன்னேற்றம் காணப்படுவதை உறுதி செய்கின்ற ஊராட்சி ஒவ்வொன்றையும் ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். 2004-2005 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 200 கோடி ரூபாய் ஆகும். 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதே அளவு ஒதுக்கீடு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சமுதாயப் பிரச்சினைகளில் கிராம ஊராட்சிகளை ஈடுபடுத்த இந்த அரசு எடுத்துள்ள சிறப்பு முயற்சிகளைப் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பாராட்டுவர்.

ஊரகப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு

66. ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளை நிலையுயர்த்துவதற்கும், புதிய வீடுகளைக் கட்டுவதற்கும் இந்த அரசு கணிசமான நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்துவருகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த அரசு, 2001 மே திங்களில் பொறுப்பேற்ற பின்னர், 498.81 கோடி ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்களின் கீழ், 1,48,000 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 66.96 கோடி ரூபாய் செலவில் 70,942 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப் பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிதியொதுக்கம் 35.13 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, 2005-2006 ஆம் ஆண்டில் 37,676 புதிய வீடுகள் கட்டப்படுவதையும், 19,265 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படுவதையும் உறுதி செய்யும்.



67. ஊரக மக்களுக்கு மேம்பட்ட குடியிருப்பு வசதியைச் செய்து கொடுப்பதற்காக, கூரை மற்றும் கச்சா வீடுகளை நிலையுயர்த்துவதற்கான புதிய திட்டமொன்றை நாங்கள் இறுதி செய்துள்ளோம். தகுதியுடைய குடும்பங்கள் அனைத்திற்கும் நிதியுதவி கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், இத்திட்டம் ஊரக சுயஉதவிக் குழுக்கள் மூலம் செயற்படுத்தப்படும். வீடு ஒன்றை நிலையுயர்த்துவதற்கான செலவு 10,000/- ரூபாயாக இருக்கும். இச்செலவு, முக்கியமாக, அரசு வழங்கும் 2,500/- ரூபாய் உதவித் தொகையைக் கொண்டும், வர்த்தக வங்கி வழங்கும் 7,000/- ரூபாய் கடனைக் கொண்டும் மேற்கொள்ளப்படும். பயன்பெறுவோர் தமது சிறு பங்களிப்பாக 500/- ரூபாய் மட்டும் இதற்கு அளிக்க வேண்டி இருக்கும். 2005-2006 ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு இலட்சம் வறிய குடும்பங்கள் பயனடைகின்ற வகையில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது: இதற்கு மானியம் வழங்குவதற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25 கோடி ரூபாய் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை

68. தடை செய்யப்படாத புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு, அதற்கான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகிறது என்பதை பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். தற்போதுள்ள அரசு நிலங்களைக் கொண்டு, வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவது மிகவும் கடினமாகி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் மொத்தச் செலவில், ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் முடிவு செய்துள்ளார். இத்திட்டத்தின் கீழ், வீட்டு மனைகள் தேவைப்படும் ஊரக ஏழை மக்கள் கண்டறியப்பட்டு, தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அவர்களுக்குத் தக்க வீட்டுமனைகள் வழங்கப்படும். புதிய குடியிருப்புகளுக்கு முறையான துப்புரவு வசதிகளுடன், தேவையான கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இத்திட்டம், ஊரக மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இந்தப் புதிய பெருந் திட்டத்தின் கீழ், 2005-2006 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும். உள்ளூரில் நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டுமனைகள் வழங்குவது குறித்து முடிவுகள் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும். பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், இந்தப் புதிய திட்டத்தைப் பெரிதும் வரவேற்பர் என நம்புகிறேன்.

ஊரகச் சாலைகளின் மேம்பாடு

69. ஊரகப் பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், வேளாண் விளை பொருட்களை அங்காடிகளுக்கு எளிதில் எடுத்துச் செல்வதற்கான வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், ஊரகச் சாலைகளின் முக்கியத்து வத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்குஅறிவர். தமிழ்நாட்டில், நெடுஞ்சாலைத் துறையால் மேம்படுத்தப்பட்டு, முக்கியமாக ஊரகப் பகுதிகளுக்குப் பயன் அளித்து வரும் 41,192 கிலோ மீட்டர் ஏனைய மாவட்டச் சாலைகளும், 5,850 கிலோ மீட்டர் ஏனைய சாலைகளும் உள்ளன. 1,635 கிலோ மீட்டர் கரும்பாலைப் பகுதி சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறை பராமரித்து வருகிறது. கிராம ஊராட்சிகளை இணைக்கும் 32,053 கிலோ மீட்டர் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. 56,544 கிலோ மீட்டர் கிராமச் சாலைகளின் பராமரிப்பு, கிராம ஊராட்சிகளின் பொறுப்பு ஆகும். இத்தகைய அனைத்து வகையான சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்குரிய ஒட்டுமொத்தத் திட்டமொன்றை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

70. மொத்தமுள்ள 41,192 கிலோ மீட்டர் ஏனைய மாவட்டச் சாலைகளில், 2001 ஆம் ஆண்டு முதல், இதுவரை 23,156 கிலோ மீட்டர் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள சாலைகள் போக, எஞ்சிய 5,018 கிலோ மீட்டர் சாலைகளும் 2005-2006ஆம் ஆண்டில் தரத்துடன் மேம்படுத்தப்படும். 2005-2006ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இதற்காக, 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு நிதியுதவியுடன் 214 கோடி ரூபாய் செலவில் ஏனைய மாவட்டச் சாலைகளையும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் தரத்துடன் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரும்பாலைப்



பகுதிகளில் 246 கிலோ மீட்டர் சாலைகளைத் தரத்துடன் மேம்படுத்தும் பணி 29 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலைகள் மேம்பாடு

71. நெடுஞ்சாலைத் துறையால் நிலை யுயர்த்தப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளான ஏனைய வகைச் சாலைகள் கடந்த காலத்தில் சரிவரப் பராமரிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தன. 300 கோடி ரூபாய் செலவில் இச்சாலைகளைச் சரி செய்வதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று தற்போது நிறைவேற்றி முடிக்கப்பட்டு வருகிறது. பிரதமரின் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் 160 கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத் துறையினால் செயல்படுத்தப்படும். ஒட்டுமொத்தச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் செலவில் தற்போதைய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தரத்துடன் மேம்படுத்தும் சிறப்புத் திட்டம் ஒன்று 2005-2006 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

72. கிராம ஊராட்சி சாலைகளைப் பராமரிப்பது கிராம ஊராட்சிகளின் பொறுப்பாகும். 'நமது கிராமம்' திட்டத்தின் கீழ், சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்குக் கிராம ஊராட்சிகளுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது. முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (SGRY), கிராம ஊராட்சி சாலைப்பணிகளும் மேற்கொள்ளப்படும்.

73. ஊரக மக்களுக்கு மேம்பட்ட தரமானதொரு வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதற்காகவும், ஊரகப் பகுதிகளில் கூடுதலாக வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குவதற்காகவும்,' ஊரகச் சாலைகளை மேம்படுத்த இவ்வரசு எடுத்துவரும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத்தரும் என நம்புகிறேன்.

ஊரகப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

74. அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குவது, புத்தாயிரம் ஆண்டின் ஒரு முக்கியமான வளர்ச்சி இலக்காகும். மாநிலத்தில் உள்ள 81,787 குடியிருப்புகளில், 74,546 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு குடிநீர் வழங்கல்– வடிகால் வாரியம் மேற்கொண்ட ஒரு புதிய ஆய்விலிருந்து தெரியவருகிறது. இவ்வாறாக, மக்கள் தொகையில் 90 சதவீதத்திற்கு அதிகமானோர் பயனடைந்து வருகின்றனர். எஞ்சியுள்ள மக்களும் பயனடையும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள்

75. 2004-2005 ஆம் ஆண்டில், தனித்தனி மின்விசைப் பம்புகள் அமைக்கும் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 6500 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், ஊரகக் குடும்பங்களுக்கு மேம்பட்ட குடிநீர் வழங்கலுக்கு வகை செய்வதற்காக, தற்போதுள்ள கைப்பம்புகளை மாற்றிவிட்டு, 10,000 சிறு மின்விசைப்பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. 'ஸ்வஜல்தாரா' திட்டத்தின் கீழ், 23.85 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், 569 குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குடிநீர் வழங்கல் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, 2004-2005 ஆம் ஆண்டில், 24.76 கோடி ரூபாய் செலவில், ஊரகப் பகுதிகளில் உள்ள 9,772 மரபுவழி குடிநீர் ஆதாரங்கள் புதுப்பிக்கப்பட்டு, 923 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.



76. இவ்வரசு, 2005-2006 ஆம் ஆண்டில், கூடுதலாக 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கலை உறுதி செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளும். 2005-2006 ஆம் ஆண்டில், மேலும் 5,000 சிறு மின்விசைப் பம்புகள் நிறுவப்படும்; 2005-2006 ஆம் ஆண்டில், 21 கோடி ரூபாய் செலவில் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, 1250 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் அமைக்கப்படும்.

குடியிருப்புப் பகுதிகளுக்கு நெருக்கமாக அமைந்துள்ள நீர் ஆதாரங்கள் சீரமைக்கப்பட்டுப் புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்திடும் வகையில், முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (SGRY) மற்றும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் பயன்படுத்தப்படும்.

77. 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலான உலக வங்கி நிதியுதவி பெறும், தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத் தயாரிப்புப் பணி, இறுதிக் கட்ட நிலையில் உள்ளது. இது, 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். தேவையின் அடிப்படையிலான அணுகுமுறையில், குடிநீர் வழங்கல் திட்டங்கள் குறித்து திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் சமுதாயப் பங்கேற்புக் கொள்கைகளின் அடிப்படையில், இத்திட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

முழுத் துப்புரவு இயக்கம்

78. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊரகத் துப்புரவு, உடல் நலன் மற்றும் தூய்மை உணர்வு ஆகியவற்றை, பெரிதும் வலியுறுத்தி வருவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். மேம்படுத்தப்பட்ட துப்புரவு வசதித் திட்டத்தினால் பயனடையும் ஊரக மக்கள் தொகையின் சதவிகிதம் 2001ஆம் ஆண்டில் 15 சதவிகிதமாக இருந்தது. இது, 2004 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 43.83 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. முழுத் துப்புரவு இயக்கம் மற்றும் தூய்மையான கிராம இயக்கத் திட்டம் ஆகியவை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 கிராம ஊராட்சிகளுக்கும் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தேசிய அளவில், துப்புரவு மற்றும் தூய்மை குறித்த சிறந்த செயல்பாட்டிற்கான நிர்மல் கிராம புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

79. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது ஒரு முக்கியமான வளர்ச்சி இலக்காகும். முதன்மைத் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், இந்த அரசு, முழுமையான கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைச் (SGRY) செயல்படுத்தி வருகிறது. 2004-2005ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில், பயனுள்ள சொத்துகளை உருவாக்குவதற்கும் 4.33 கோடி மனித உழைப்பு நாட்கள் அளவிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் 1.24 இலட்சம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக, 2.28 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2004-2005ஆம் ஆண்டில், மொத்தம் 273.84 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

80. 2004ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்ட முன்வடிவினை மத்திய அரசு அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சட்ட முன்வடிவு, ஊரக வளர்ச்சிக்கான பாராளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பயிற்சித் திறன் தேவையற்ற உடலுழைப்புப் பணியினை, தாமாகவே முன்வந்து செய்ய விரும்பும் ஊரகப் பகுதிகளில் உள்ள குடும்பம் ஒவ்வொன்றுக்கும், ஒரு நிதியாண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் உத்தரவாதமளிக்கப்பட்ட வேலைவாய்ப்பிற்கு வகை செய்யும் நோக்கத்தினை நாங்கள் வரவேற்கிறோம். இருப்பினும், அத்தகைய வேலைவாய்ப்பை அளிக்க முடியாத போது, வேலைவாய்ப்பின்மைக்கான உதவித் தொகை அளிப்பதால் ஏற்படும் நிதிச் சுமை முழுவதும் மாநில அரசுகளின் மீதே சுமத்தப்படுகிறது. அத்தகைய வேலைவாய்ப்பின்மைக்கான உதவித் தொகை அளிப்பதற்கு, மத்திய அரசு முழுமையாக நிதியளிக்க வேண்டும் என்பதே நமது ஆய்ந்த கருத்தாகும். ஊதியம் வழங்குவது உட்பட திட்டச் செலவில் 25 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இது மாநிலங்களுக்குப் பெருமளவு நிதிச் சுமையை ஏற்படுத்தும். மாநிலங்களின் பங்கு 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும். எளிதாக இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் பல்வேறு ஊரகப் பணிகளையும் உள்ளடக்கியதாக வேலைவாய்ப்பின் தன்மை விரிவாக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோரில் குறைந்தது 50 சதவிகிதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும்.

81. ஊரகப் பகுதிகளில் பண்ணை சாராத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, கூடுதல் வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குவதற்காக, ஊரகத் தொழில் மற்றும் சிறிய வணிக நிறுவனங்களை ஊக்குவிப்பது மிகவும் அவசியமாகிறது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஊரகத் தொழில் மயமாக்கலுக்குப் புத்துயிரூட்டுவதில் பெரிதும் உதவியுள்ளது. இதுவரையிலும், 138.43 கோடி

ரூபாய் முதலீட்டிலான, 213 தொழில் பிரிவுகள், உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இதன் மூலம், 5,638 ஊரக மகளிர் உட்பட 8,335 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. 103.16 கோடி ரூபாய் மூலதனச் செலவிலான, 159 திட்டங்கள் விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். மொத்தம் 108.51 கோடி ரூபாய் செலவாகக்கூடிய, மேலும் 146 திட்டங்கள், இன்னும் வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பரிசீலனையில் உள்ளன. இந்தத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதை விரைவுபடுத்துமாறு வங்கிகளை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்.

82. ஊரக வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான நமது அணுகுமுறையில், ஊரகப் பண்ணை சாராத் துறையில் கிடைக்கப் பெறும் வாய்ப்புகளை அதிகரிப்பதும், உடலுழைப்புப் பணிக்கு அடிப்படை உத்தரவாதம் அளிப்பதும் அடங்கும். சுய உதவிக்குழு இயக்கம் உள்ளிட்ட, பல்வேறு வறுமைக் குறைப்புத் திட்டங்கள், பெரிய அளவில் ஊரகப் பண்ணை சாரா வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கும். இவற்றால், ஊரகக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன், ஊரகப் பகுதிகளில் பெரிய அளவில் கூடுதல் வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

83. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தற்போது ஒவ்வொரு தொகுதிக்கும், 82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீடு நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கு ஏற்ப, 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். 2004–2005 ஆம் ஆண்டில், 192.70 கோடி ரூபாயாக இருந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கம், 2005–2006ஆம் ஆண்டில் 235 கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும், 2005–2006 ஆம் ஆண்டு முதல், கீழே கொடுக்கப்பட்டுள்ள திருத்திய முறை பின்பற்றப்படும்:–

(ரூபாய் இலட்சத்தில்)

குடிநீர் வழங்கல் பணிகள்	- 10.00
நமது கிராமம் திட்டம்	- 15.00
மாணவரில்லங்கள் கட்டுதல்	- 10.00
கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள்	- 10.00
தெரு விளக்குகள்	- 5.00
இதரப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு	- 50.00
மொத்தம்	-100.00

84. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப் படுவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நான் நம்புகிறேன்.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு புதிய மின் இணைப்பு

85. ஊரகப் பகுதிகளில் மின்சாரம் தரமான முறையில் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய, தமிழ்நாடு மின்சார வாரியம், 2005-2006 ஆம் ஆண்டில், 247.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலான, திட்டங்களை மேற்கொள்ளும். ஊரகப் பகுதிகளில் மின்சாரம் தரமான முறையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, தமிழ்நாடு மின்சார வாரியம், 21 புதிய துணை மின் நிலையங்களை நிறுவும்; 20 துணை மின் நிலையங்களில், மின் அழுத்த மாற்றியின் திறனை அதிகரிக்கும். மேலும் 2,300 புதிய மின் பகிர்வு மின் அழுத்த மாற்றிகளை நிறுவும். 2005-2006ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் 45,000 விவசாயப் பம்புசெட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு அளிக்கப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர்.

முதலீட்டுச் சூழலில் முன்னேற்றம்

86. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிற்கான 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையினை அறிவித்துள்ளார்கள். இந்தக் கொள்கை, உற்பத்தித் துறையினை முன்னிறுத்தி, மாநிலத்தின் முதலீட்டுச் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தை வகுத்துள்ளது. தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், தரமான எரிசக்தி வழங்குதல், நடைமுறைகளை எளிமையாக்கி விதிகளைத் தளர்த்தல், மாநில அளவிலான வரிவிதிப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், தொழிலாளர் துறை சீர்திருத்தங்கள் போன்றவற்றிற்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில்

மேம்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டுச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இத்தகைய அம்சங்கள் ஒவ்வொன்றும் குறித்துத் திட்டவட்டமான நடவடிக்கையை எடுப்பதற்கு, இந்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. தொழில் முனைவோர் விவர அறிக்கையின்படி (Industrial Entrepreneur Memorandum (IEM), 2003 அக்டோபரிலிருந்து 2004 செப்டம்பர் வரையிலான ஓராண்டு காலத்தில் மட்டுமே, தமிழ்நாட்டில் தொழில் முனைவோரின் உத்தேசிக்கப்பட்ட புதிய முதலீடுகள் கணிசமாக உயர்ந்துள்ளன என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என நம்புகிறேன். மாநிலத்தில் முதலீட்டுச் சூழலில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இது தெளிவாகக் காட்டுகிறது. ஹுண்டாய் மோட்டார் நிறுவனம், சென்னையில் தனது தொழில் வளாகத்தில், 500 மில்லியன் அமெரிக்க டாலர் அல்லது சுமார் 2,200 கோடி ரூபாய் முதலீட்டில் இரண்டாவது கார் தொழிற்சாலையை நிறுவுவதாக அண்மையில் அறிவித்துள்ளது. இரண்டாம் நிலை துறையில் குறிப்பாக விரைந்த வளர்ச்சி அடைய, முதலீட்டுச் சூழலை மேலும் மேம்படுத்துவதே எங்களது முயற்சியாக இருக்கும்.

நெடுஞ்சாலை மேம்பாடு

87. சாலைக் கட்டமைப்பு வசதி பணிகளிலான முதலீடு, பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநில நெடுஞ்சாலைகளையும், மாவட்ட பெருஞ்சாலைகளையும், மாவட்ட ஏனைய சாலைகளையும் மேம்படுத்தவும், அவற்றில் பாலங்களைப் புதுப்பித்துக் கட்டவும், அகலப்படுத்தவும், 1,050 கோடி ரூபாய் செலவில், ஒட்டுமொத்த சாலை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், 2005-2006 ஆம் ஆண்டில், 2,064 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகள், 2,114 கிலோ மீட்டர் மாவட்ட பெருஞ்சாலைகள், 5,018 கிலோ மீட்டர் மாவட்ட ஏனைய சாலைகள் மற்றும் 1,600 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள் ஆகியவற்றில் பணிகள் மேற்கொள்ளப்படும். வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக 750 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது அமைக்கப்பட்டுவரும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், 2005-2006 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக, 100 கோடி ரூபாய் நிதி திரட்டும்.

88. உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு சாலைத் துறை திட்டம், 2160 கோடி ரூபாய் மொத்தச் செலவில் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், இரண்டு சாலைப் பெருவழிகளில், 742 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்தி நிலை உயர்த்துவதோடு, 2,000 கிலோ மீட்டர் சாலைகளை தரமாகவும், செம்மையாகவும் சீரமைத்துப் பராமரிக்கவும் வகை செய்யும். 954 கோடி ரூபாய் செலவில், 624 கிலோ மீட்டர் சாலைகளை உள்ளடக்கிய மூன்று பெரும் திட்டப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. முதல் ஆண்டுப் பராமரிப்புத் திட்டத்தின் கீழ், 180 கோடி ரூபாய் செலவில் 634 கிலோ மீட்டர் சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சிறப்பான முறையில் நடந்தேறி வருகின்றன. இரண்டாம் ஆண்டு பராமரிப்புத் திட்டத்தின் கீழ், 2005-2006 ஆம் ஆண்டில், 158 கோடி ரூபாய் செலவில், மேலும் 450 கிலோ மீட்டர் சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

89. மாநிலத்தில், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பின் பராமரிப்பில், இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இது, கடந்த தொன்னூறுகளின் பிற்பகுதிகளில் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப் பட்டிருந்தது. மாநிலத்தில், சாலைப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம், 2001-2002 ஆம் ஆண்டில் 114.21 கோடி ரூபாய் என்றிருக்க, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 463.71 கோடி ரூபாயாகக் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. சாலைகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய, இந்த அரசு எடுத்துள்ள இந்தச் சிறப்பான நடவடிக்கையை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன். 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 2104.46 கோடி ரூபாயாக இருக்கும் நெடுஞ்சாலைகளுக்கான நிதி ஒதுக்கம், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், முன் எப்போதும் இல்லாத அளவுக்குக் கணிசமாக உயர்த்தப்பட்டு 2991.47 கோடி ரூபாயாக இருக்கும்.

போக்குவரத்துக்குப் புதிய பேருந்துகள்

90. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், 2003-2004 ஆம் ஆண்டில் சிறிய அளவில் லாபம் ஈட்டியுள்ளன. தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகங்கள், நடப்பாண்டில், 1325 பழைய பேருந்துகளுக்குப்பதிலாக, புதிய பேருந்துகளை வாங்குகின்றன என்பதையும், அடுத்த நிதியாண்டில் மேலும், 2000 பழைய பேருந்துகளுக்குப்பதிலாக, புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்பதையும் அறிவதில் மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன். 4848 பழுதடைந்த பேருந்துகள் 30.48 கோடி ரூபாய் செலவில், சரிசெய்யப்பட்டு, சாலைப் போக்குவரத்திற்கும், பாதுகாப்பான பயணத்திற்கும்

உகந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. இதன் மூலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவை முழுமையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசு டீசல் விலைகளைக் கடுமையாக உயர்த்தியதால், தாங்கமுடியாத சுமையை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும், பயணக் கட்டணங்களை உயர்த்தாமலேயே சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கான இப்பெரும் திட்டத்தை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம்.

கோடையிலும் தண்ணீர் வழங்கிய புதிய வீராணம் திட்டம்

91. நகர்ப் பகுதிகளில், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதானது, சவால் மிகுந்த பணியாக உள்ளது. இதற்குக் கணிசமான அளவு புதிய முதலீடுகள் தேவைப்படுவதோடு, அவற்றைப் பராமரிப்பதிலும் முறையான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த அரசு, நகர்ப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்களை வெற்றிகரமாகத் திட்டமிட்டு, செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, புதிய வீராணம் திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றி, சென்னை மாநகருக்குக் குடிநீர்



வழங்கும் பணி பெருமளவில் மேம்படுத்தப்படுவதை, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். சென்ற ஆண்டில் மக்கள் நகரைவிட்டு வெளியேற வேண்டியிருந்த அச்சுறுத்தலான நிலையை சென்னை மாநகரம் எதிர்கொண்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 720 கோடி ரூபாய் செலவில் புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு, அதனைச் செவ்வனே செயல்படுத்தியது இவ்வரசுதான். இத்திட்டம் விரைவாக முடிக்கப்பட்டதால், முதற்கண், 2004 மே திங்களில் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 205 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க முடிந்தது. அதன் பிறகு 2004 அக்டோபரில் நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இல்லாத நிலையிலும், குழாய்கள் மூலமாகக் குடிநீர் மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இது, இந்த அரசின் மிகவும் உன்னதமான வெற்றிச் சாதனையாகும். சென்னை மாநகரில் தொடர்ந்து நிலவிய கடும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் மேற்கொண்ட இந்த உறுதியான நடவடிக்கை சென்னை மக்களின் நினைவில் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய சிறப்பினைப் பெற்றதாகும். புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் 2005-2006 ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்படும். இதனால், வீராணம் ஏரியில் தண்ணீர் மட்டம் குறையும்போது, கோடைக் காலங்களில், சென்னை மாநகருக்குக் கொள்ளிடம் ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீரை வழங்க இயலும். இத்திட்டத்தை மேற்கொள்வதற்கும், கொள்ளிடம் ஆற்றங்கரை நெடுக அமைந்திருக்கும் கிராமங்களில் கிடைக்கக் கூடிய நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

92. சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள், 16.2.2005 அன்று திறக்கப்பட்ட போது அதற்கு நல்ல வரவேற்பு இருப்பது தெரியவந்தது. ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும். சென்னையின் மொத்தத் தண்ணீர் தேவை, நாளொன்றுக்கு 840 மில்லியன் லிட்டராகும் என்பதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் முடிக்கப்பட்ட புதிய வீராணம் திட்டம் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் உள்ளிட்ட, பல்வேறு நீராதாரங்களை ஒருங்கிணைத்து, இத்தேவை நிறைவு செய்யப்படும்.

கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள்

93. 2004-2005 ஆம் ஆண்டில் பின்வரும் பெருந்திட்டங்கள் உட்பட, 40 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

- 74 கோடி ரூபாய் செலவில், 4.03 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ஆண்டிபட்டி மற்றும் உசிலம்பட்டி நகராட்சிகள், மூன்று சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 406 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 69.20 கோடி ரூபாய் செலவில், 2.95 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 674 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கும் மணப்பாறை மற்றும் மருங்காபுரி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 133.05 கோடி ரூபாய் செலவில், 4.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி நகராட்சிகள், 3 சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 642 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 12.47 கோடி ரூபாய் செலவில், 1.01 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, நல்லம்பட்டி, பெத்தம்பாளையம், காஞ்சிகோயில் மற்றும் பள்ளப்பாளையம் சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள் மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள 64 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 54.70 கோடி ரூபாய் செலவில், 2.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 295 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

94. 2005-2006 ஆம் ஆண்டில், பின்வரும் பெருந்திட்டங்களை நிறைவேற்றி முடிக்கக் கருதப்பட்டுள்ளது:–

- 85 கோடி ரூபாய் செலவில், 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 816 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 98.85 கோடி ரூபாய் செலவில், 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, நாகப்பட்டினம் நகராட்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 890 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 126.85 கோடி ரூபாய் செலவில், 7.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, நாமக்கல் மாவட்டத்திலுள்ள 1,399 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 6 சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 78.70 கோடி ரூபாய் செலவில், 4.60 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலுள்ள சங்கரன்கோயில், சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகராட்சிகள், திருவேங்கடம் சிறப்பு நிலை ஊராட்சி, மானூர் மற்றும் 400 ஊரகக் குடியிருப்புகளை, உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

95. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை, கரூர் மற்றும் இனாம்கரூர் ஆகிய நகரங்களில் ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை, 2005-2006 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். எஞ்சியுள்ள 24 மாவட்டத் தலைமையிட நகரங்களில், பாதாளச் சாக்கடை வசதிகள் செய்து கொடுப்பதற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில், 800 கோடி ரூபாய் மொத்தச் செலவில் மேற்கொள்ளப்படும்.

கூடுதல் மின் உற்பத்தியுடன் வலுவடையும் மொத்த நிறுவுதிறன்

96. தமிழ்நாட்டில் மின்சக்தி நிலைமை மனநிறைவு அளிப்பதாக உள்ளதை பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மதிநுட்பமான மின் வழங்கல் நிருவாகம் மற்றும் திட்டமிட்ட முறையில் புதிய மின் உற்பத்தித் திறனைக் கூட்டுதல் ஆகியவற்றின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 263 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தியுடன் மொத்த நிறுவு திறன் மேலும் வலுப்படுத்தப்படும் என்பதை அறிந்து பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். தமிழ்நாடு மின்வாரியத்தின் சொந்த மொத்த நிறுவுதிறன் 5,531 மெகாவாட் வரை உயர்ந்துள்ளது. கொள்முதல் செய்யப்படும் மின்சக்தித் திறனையும் சேர்த்து, தமிழ்நாட்டில் மொத்த மின்சக்தி உற்பத்தித் திறன் 9,657 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

97. வருமாண்டுகளில், புதிய மின்சக்தித் திறனை அதிகரிப்பது குறித்து திட்டமிடுவதற்காக, இந்த அரசு, உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



இவ்வகையில், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனை மேலும் 4,000 மெகாவாட் அதிகரிப்பதற்கான திட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னையில், தேசிய அனல் மின் நிறுவனத்துடன் (NTPC) கூட்டுத் துறையில் ஏற்படுத்தப்படவுள்ள 1,000 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் உற்பத்தி நிலையம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டுத் துறையில் தூத்துக்குடியில் நிறுவப்படவுள்ள 1,000 மெகாவாட் திறன்கொண்ட ஒரு மின் உற்பத்தி நிலையம், கூடங்குளத்தில் அமைந்துவரும் 2,000 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் உற்பத்தி நிலையம் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டத்திற்குப் புத்துயிரூட்டப் பட்டுள்ளது என்பதையும், தமிழ்நாடு மின்சார வாரியம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாக இது நிறைவேற்றப்படும் என்பதையும் இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இத்திட்டம் 5,000 கோடி ரூபாய் செலவில், மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

98. புதுப்பிக்கத்தக்க எரி சக்தியை (Renewable energy) உற்பத்தி செய்து பயன்படுத்துவதில் தமிழகம் நாட்டிலேயே முதன்மை வகிக்கிறது. புதுப்பிக்கத்தக்க அனைத்து வகை எரிசக்தி ஆதாரங்களிலிருந்தும் மொத்தம் 1,920 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் நிறுவு திறன் பெற்று, தமிழ்நாடு, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக விளங்கும் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. இதில், காற்று எரிசக்தித் திறன் மட்டும் 1,664 மெகாவாட் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. 31.3.2004 ஆம் நாள் நிலவரப்படி, நாட்டின் மொத்தக் காற்று எரிசக்தி உற்பத்தித் திறனில், இம்மாநிலத்தின் திறன், 55 சதவிகிதமாகும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒட்டு மொத்தக் கால அளவிற்கும் 500 மெகாவாட் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தில், 2005, ஜனவரி வரையிலான மூன்றாண்டு கால அளவில் மட்டுமே, மின் நிறுவுதிறன் 807 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர்.

99. சர்க்கரை ஆலைகளின் இணை-மின்சார (Co-generation) உற்பத்தியிலும், தமிழகம் முன்னிலை வகிக்கிறது. தமிழகத்தின் மொத்த இணை மின் உற்பத்தித் திறன் 275 மெகாவாட் ஆகும். இவற்றின் சுய தேவைகளுக்குப்போக, 165 மெகாவாட் மின்சாரம் உபரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தம், 259 மெகாவாட் திறன் கொண்ட 37 உயிரினக் கழிவு எரிசக்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில், 145.5 மெகாவாட் திறன் கொண்ட 15 திட்டங்களுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இனிவரும் ஆண்டுகளிலும், மரபுசாரா எரிசக்தி உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்.

100. தமிழ்நாடு மின்சார வாரியம், 2004-2005 ஆம் ஆண்டில் 1,255.53 கோடி ரூபாயாக இருக்கும் மொத்த மூலதனச் செலவை 2005-2006 ஆம் ஆண்டில் 1,495.30 கோடி ரூபாயாக உயர்த்தும். மின் அனுப்புகை மேம்பாடு மற்றும் மின் இழப்பினைக் குறைப்பதில் கவனம் செலுத்தப்படும். எரிசக்தியின் நம்பகத் தன்மையையும் தரத்தினையும் மேம்படுத்துவது குறித்தும் அதிக கவனம் செலுத்தப்படும். 2005-2006ஆம் ஆண்டில் 596 கோடி ரூபாய் செலவில் சென்னைப் பெருநகர் பகுதியில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப் பட்டுள்ளது.

101. நுகர்வோர் எளிதாக மின்கட்டணம் செலுத்தும் வகையில், சென்னை மாநகரத்திலும் அனைத்து மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் குறைவழுத்த மின் கட்டணங்களுக்கான பட்டி மற்றும் வசூலிப்பு நடைமுறைகளைக் கணினிமயமாக்கும் பணி, 120 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

துறைமுகங்கள் மேம்பாடு

102. பொதுத்துறை - தனியார் துறை பங்கேற்பின் வாயிலாக, ஒரு முன்மாதிரியாக, 250 கோடி ரூபாய் செலவில், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்த, தமிழ்நாடு கடல்சார் வாரியம் உத்தேசித்துள்ளது. நாகப்பட்டினம் துறைமுகத்தை இரண்டு கட்டமாக மேம்படுத்த இவ்வாரியம் கருதியுள்ளது. முதற்கட்டமாக, கடலுக்குள் தற்போதுள்ள அலைத் தடுப்புச் சுவர் (break water) வலுப்படுத்தப்படும். இரண்டாம் கட்டமாக, இந்த அலைத் தடுப்புச் சுவரை விரிவுபடுத்தல், தூர்வாருதல், கடல்சேரும் ஆற்றுத் தடத்தைச் சீரமைத்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும். முதல்கட்டப் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. சுனாமி பேரலைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு துறைமுகங்களையும் மேம்படுத்துவதற்காக, 70 கோடி ரூபாய் செலவாகக்கூடிய, விரிவான செயற்குறிப்புகளை அரசு தயாரித்துள்ளது. இப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள, தேவையான நிதியினை மத்திய அரசு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர் நலன்

103. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள், வேலைவாய்ப்புத் துறையின், பயனடைவோர் பங்கேற்புடன் கூடிய வேலைவாய்ப்புத் தகவல் செயற்பாட்டு வலைதளம் (Inter active website-cum-job portal) ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்கள். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த உயர் தகுதி வாய்ந்த தொழில்முறை வல்லுநர்களுக்கும், முதுகலைப் பட்டதாரிகளுக்கும் நல்ல வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில், இந்த வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொறியாளர்கள், மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய 202 பல்கலைக்கழக பாடப் பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் குறித்த நம்பகமான மிகப் பெரிய தகவல் விவரத் தொகுப்பு இந்த வலைதளத்தில் இடம் பெற்றிருப்பது சிறப்பு அம்சமாகும். வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்துள்ள நபர்களின் மொத்த எண்ணிக்கை 2003 இறுதியில் 48.76 இலட்சமாக இருந்தது என்பதையும், அது, 2004 இறுதியில் 41.51 இலட்சமாகக் குறைந்துள்ளது என்பதையும் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து வரப்பெற்றுள்ள தகவல் விவரங்கள் தெரிவிக்கின்றன.

மகளிருக்கென தனி தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

104. வலுவான செயல் திறம் வாய்ந்த மனிதவள ஆதாரத்தை, தமிழ்நாடு மேலும் பெருக்க வேண்டியுள்ளது. 7 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும், தொழிற் பயிற்சி நிறுவனங்களில் (ITIs) அங்காடித் தேவைகளுக் கேற்ப புதிய தொழில் பாடப் பிரிவுகளை அறிமுகப் படுத்துவதையும் இவ்வரசு உறுதிசெய்து வருகிறது. மகளிருக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தில், ஆண்டிபட்டி, கரூர், நாமக்கல் ஆகிய இடங்களில் மகளிருக்கென் தனி தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒசூர், தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில், தற்போதுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களில் மகளிருக்கெனத் தனிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. உலகத் தரம் வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கும் வகையில், இந்தியா முழுவதிலும் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களை, முதல்நிலை மையங்களாக உருவாக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. முதல் தொகுதியில், தமிழ்நாட்டில் உள்ள 4 தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிலையுயர்த்தப்படும்.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

105. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 15 அம்சத் திட்டத்தில், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதும், ஓர் அம்சமாகும். இதற்கு, அரசின் பல துறைகள், ஏனைய நிறுவனங்கள், குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவைப்படுகிறது. மாநிலத்தில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக, மாநிலச் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டத்தை மேற்கொண்டு செயற்படுத்துவதற்காக, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

106. கட்டுமானத் தொழிலாளர்களின் பயனுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என இவ்வரசு குறிப்பிட்டிருந்ததை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். இத்திட்டத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், 2005-2006 ஆம் ஆண்டில் இது செயல்படுத்தப்படும் என்பதையும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனைய அமைப்பு சாரா துறைத் தொழிலாளர்களின் நல்வாழ்விற்காக இதுபோன்ற திட்டத்தை வகுக்கவும் இவ்வரசு கருதியுள்ளது.

சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோருக்கு தொழில்நுட்பப் பூங்கா

107. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், இரண்டாம் நிலைத் துறையின் முதுகெலும்பாக விளங்குவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். உலகமயமாக்கல் நடைமுறைக்கு வந்தபிறகு உருவாகியிருக்கும் மாறிய சூழ்நிலையில் சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. மாநிலத்தின் நிதியுதவி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிதியத்தின் கீழ், சலுகை வட்டி விகிதங்களில் கடன்களை வழங்கி வருகிறது. நடப்பாண்டில், 200 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதும், இது முந்தைய ஆண்டை விட 25 சதவிகிதம் அதிகம் என்பதும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத்தரும் என்று நம்புகிறேன். சிறு தொழில் பிரிவுகள், சிறந்த முறையில் சந்தைப் போட்டியை எதிர்கொள்வதற்காக, அவற்றின் திறன் மேம்படுத்தப் படுவதை இந்த அரசு உறுதி செய்துவருகிறது. இதற்கென சிறந்த கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. தொழில் கட்டமைப்பு வசதி நிலையுயர்த்தல் திட்டத்தின் (Industrial Infrastructure Upgradation Scheme) கீழ், சென்னை, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், சென்னையில் அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளும் நிலையுயர்த்தப் படவுள்ளன. ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவன (UNIDO) நிதியுதவியுடன், கோயம்புத்தூரில் இலகு ரகப் பொறியியல் (light engineering cluster) தொகுப்புத் தொழிலக மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்றையும் அரசு செயல்படுத்தி வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், மேலும் இரண்டு மகளிர் தொழில் பூங்காக்களையும், ஓரளவு நகரப் பகுதிகளில் சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோருக்காக இரண்டு தொழில் நுட்பப் பூங்காக்களையும் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்

108.2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் தரமற்ற முறையில் நிருவகிக்கப்பட்டுவந்ததாகக் கருதப்பட்ட சென்னை மாநகரம், நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் திறமைவாய்ந்த, ஆற்றல்மிகு தலைமையின் கீழ், துடிப்பான நிருவாகமும் பல்முனை வளர்ச்சியும் கொண்ட மாநகராகத் தன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளது என்பதை அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர் என்பதில் ஐயமில்லை. சென்னை மாநகரின் இவ்வியத்தகு மாற்றம், உலகளாவிய பாராட்டுதலைப் பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 18,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னைப் பெருநகரப் பகுதி மேம்பாட்டுக்கான பத்தாண்டுப் பெருந்திட்டமொன்றை, 2003ஆம் ஆண்டில் தொடங்கிவைத்தார்கள். இத்திட்டம், கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் உருவாக்குவதற்குத் தேவையான ஒட்டுமொத்த முதலீடுகளுக்கு வகை செய்கிறது. இத்திட்டம், சென்னை மாநகர், நாட்டிலேயே சிறந்த விருப்பத் தேர்விடமாக உருவாவதற்கு வகை செய்துள்ளது. இத்திட்டம் மொத்தம் 2054.09 கோடி ரூபாய் முதலீட்டில், 2005-2006ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

என்றென்றும் சென்னை – ஒரு புதிய திட்டம்

109.நிலையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு, நகர்ப்புற அழகுணர்வை மேம்படுத்தியும், தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பேணிக்காக்கும் வகையிலும், இப்பணிகள் சிறப்பாகச் செயற்படுத்தப்படுவது உறுதி செய்யப்படவேண்டும். நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை மாநகர் பராமரிப்பில் மக்களின் நெருக்கமான பங்கேற்பிற்கும், அதனை மேலும் சிறந்த உறைவிடமாக உருவாக்குவதற்கும் ஏற்றதொரு வழிமுறையாக "என்றென்றும் சென்னை – ஒரு புதிய திட்டம்" ("Chennai Forever Initiative") என்ற இயக்கத்தினை அண்மையில் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்தில், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், சாலையோர நடைபாதைகள், சாலை மையத் தடுப்பு, துப்புரவு, தூய்மை, குப்பை அகற்றுதல், நீர்வழிகள் மற்றும் சாலைப் போக்குவரத்து மேலாண்மை முதலியவற்றின் அனைத்து அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். மக்களின் முழுமையான பங்கேற்புடன், குறிப்பிட்ட கால அளவிற்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடுகள் பற்றி, தொடர்ந்து விவாதிக்க பொருத்தமான அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

110.சென்னை மாநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சாலைக் கட்டமைப்பில், அவசியமான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, இந்த அரசு, ஏற்கெனவே 369.97 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என நம்புகிறேன். சென்னை மாநகரில் விரைந்து பெருகிவருகின்ற போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, பெரிய விரைவுப் போக்குவரத்துத் திட்டம் உள்ளிட்ட, மக்களுக்கான பல்வேறு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. "RITES" (Rail India Techno Economic Services) நிறுவனத்துடன் இணைந்து, டெல்லி பெருநகர் இரயில் நிறுவனம் (DMRC), சென்னையில் பெருநகர இரயில் போக்குவரத்து மேம்பாட்டுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது என்பதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என நம்புகிறேன். இதனை அடுத்து, சென்னைக்கானப் பெருநகர இரயில் திட்டத்தை 5086.85 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில், விரிவான கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை ஏனைய ஆதாரங்களிலிருந்து திரட்டுவதற்கு ஏதுவாக, கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்திலிருந்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு வழங்குவதற்காக, நாங்கள் 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 200 கோடி ரூபாய் ஆதார நிதியாக (seed money) ஒதுக்கியுள்ளோம். உலக வங்கி நிதியுதவியுடன், மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்–III ன் கீழ், 540 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுக்கான சிறப்புக் கூறுத் திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், மாநகரில் சாலைப் போக்குவரத்து மற்றும் வாகன நெறிமுறைப் (Traffic and Transportation Services) பணிகளை மேம்படுத்த இது பெரிதும் உதவும்.

நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள்

111. தமிழ்நாட்டின் பெரும்பகுதிகள் நகரமயமாகி வருகின்றன. இம்மாநிலத்தில் உள்ள நகர்ப்பகுதிகள் திட்டமிட்ட முறையில் வளர்ச்சி அடைவதற்குத் தேவையான உரிய கொள்கைகளை வகுக்கவும், 10ஆவது திட்ட காலத்தில் நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், இந்த அரசு உறுதிபூண்டுள்ளது.

112. நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகைகளுக்கும் மேலாக பெருமளவில் நிதியாதாரங்கள் தேவைப்படுவதால், இந்நோக்கத்திற்காக உலக வங்கி மற்றும் உள்நாட்டு மூலதனச் சந்தைகள் போன்ற பலதரப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறும் முயற்சியில், இவ்வரசு வெற்றி கண்டுள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும், இந்நோக்கத்திற்காக பயனுள்ள நிறுவன ரீதியிலான அமைப்புகளை உருவாக்குவதற்கும், மாநில அரசு மேற்கொண்ட ஒரு பெரும் முயற்சியாக உலக வங்கியின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் I மற்றும் II வடிவமைக்கப்பட்டன.

113. 750 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் II, 2004 நவம்பரில் இறுதிக் கட்டத்திற்கு வந்தது. திட்டங்களை வடிவமைத்து, செயல்படுத்த, கணிசமான அளவு திறனை உருவாக்குதல், நவீன கணக்கு வைப்பு முறைகளைக் கொண்டுவருதல், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் மின்னாளுகையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை, இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் II–ன் கீழ், 675 கோடி ரூபாய் செலவில், குடிநீர் வழங்கல், துப்புரவு, அகச்சாலைகள், திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றிற்கும், பேருந்து நிலையங்கள், சுடுகாடு போன்ற ஏனைய இன்றியமையாத குடிமை வசதிகளைச் செய்து கொடுப்பதற்குமான பணிகள், மேற்கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டன. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதையடுத்து, இம்மாநிலத்தில் உள்ள சென்னைப் பெருநகரப் பகுதியும் ஏனைய நகர்ப்பகுதிகளும் பயனடையும் வகையில், 1,650 கோடி ரூபாய் என்ற பெருமளவிலான ஒதுக்கீட்டில், இத் திட்டத்தின் III ஆம் நிலை பணிக்கு அனுமதியளிக்கக் கோரி இந்த அரசு உலக வங்கியை அணுகியுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கியின் அனுமதி விரைவில் கிடைக்கும் என நம்புகிறோம்.

114. நகரங்களில், குடிசைப் பகுதி மக்களின் உறைவிடங்களின் தரம் மேம்படுத்தப்பட்டு, நகரக் கட்டமைப்போடு ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு எப்போதும் உறுதியாக இருந்து வருகிறது. தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தின் நகர்ப்பகுதியிலுள்ள குடிசைப் பகுதிகளில், 2004-2005 ஆம் ஆண்டில், 54.57 கோடி ரூபாய் செலவில் குடிமை வசதிகள் மற்றும் குடியிருப்புகளின் நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டிலும் இது தொடரும்.

குடிசைவாழ் மக்களுக்குப் புதிய குடியிருப்புகள்

115. சென்னையில் ஆற்றோரங்களில் வசித்து வரும் குடிசைவாழ் மக்களை, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகளில் குடியமர்த்தும் பொருட்டு, 18.25 கோடி ரூபாய் செலவில், செம்மாஞ்சேரியில் 1,404 குடியிருப்புகளைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ், 552 குடும்பங்களுக்கு 6.90 கோடி ரூபாய் செலவில் புதிய குடியிருப்புகளைக் கட்டவும்

உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற நகரங்களில் 23.30 கோடி ரூபாய் செலவில் வறிய குடும்பங்களுக்காக 5,000 தனி வீடுகள் கட்டப்படும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இத்திட்டத்தை 2005-2006ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டிய அனைத்துக் குடியிருப்புகளும் 19 கோடி ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்படும் என்று இந்த அரசு ஏற்கெனவே உறுதியளித்துள்ளது.

116. சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும், சுகாதார இடர்பாடுகளைத் தடுக்கவும், திடக்கழிவு மேலாண்மையை மேற்கொள்வது, நகர உள்ளாட்சி மன்றங்களின் ஒரு கட்டாயமான பணி ஆகும். உச்சநீதிமன்றம் ஏற்படுத்திய ஒரு குழு, திடக்கழிவு மேலாண்மை குறித்து, தொலை நோக்குடைய பரிந்துரைகளை அளித்துள்ளது. வாகனங்கள் வாங்குதல், மக்கு உரம் தயாரிக்கும் இடங்கள் மற்றும் திடக் கழிவு மாற்று நிலையங்களின் மேம்பாடுகள், செய்தி, கல்வி, தகவல் தொடர்பு நடவடிக்கைகள் (Information, Education and Communication) ஆகியவை போன்ற, திடக்கழிவு மேலாண்மைக்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்காக, சென்னையைச் சுற்றிலும் உள்ள நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கும் வகையில், 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

117. நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களில் மின் ஆளுகையை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அனைத்திலும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், சொத்து வரி மற்றும் தண்ணீர்க் கட்டணங்கள் செலுத்துதல், கட்டட வரைபடத்திற்கு ஒப்புதலளித்தல், திடக்கழிவு மேலாண்மை, நிதிக் கணக்கிடும் முறை, பணியாளர் மேலாண்மை முறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு, மருத்துவமனை மேலாண்மை முதலான சிறப்பு அம்சங்களைக் கொண்ட, 18 தொகுப்புகளுடன் (modules) கூடிய பயன்பாட்டு மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு நிறுவப் பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஊக்கம்

118. மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த ஐந்து தெளிவான கோட்பாடுகளுடன் கூடிய, 2002ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பக் கொள்கை, இம்மாநிலத்தின்பால் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கும் கலங்கரை விளக்கமாகச் செயல்படுவதோடு, மின் ஆளுகை சிறப்பு முயற்சிகளுக்குத் தேவையான ஒரு உந்து சக்தியாகவும் விளங்குகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் விரைவான வளர்ச்சிக்கு முக்கிய ஊக்கு சக்தியாகத் திகழும் தகவல் தொழில்நுட்பம் சார் பணிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வன்பொருள் ஆகியவற்றுக்கான முதலீடுகளை அதிகரிக்க, உரிய துறைவாரியான கொள்கைகளை வகுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தொழில் முனைவோரின் விருப்பத் தேர்விடமான சென்னை

119. இந்த அரசு எடுத்த தொடர்ச்சியான முயற்சிகளின் பயனாக, இம்மாநிலத்தின் ஏற்றுமதி, சுமார் 8,000 கோடி ரூபாயை எட்டி, ஏற்றுமதியின் வாயிலாக அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்த அரசு வகுத்துள்ள இசைவான கொள்கைகள் மற்றும் ஊக்க உதவிகளின் காரணமாக, பல பன்னாட்டு நிறுவனங்கள், அவற்றின் அலுவலகங்களைச் சென்னையில் ஏற்படுத்தியுள்ளன என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவருக்கும் உவகைத்தரும் ஒரு செய்தியாகும். இந்த அரசு, சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உலகத் தரம் வாய்ந்த பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான வசதிகளை உருவாக்கித் தந்துள்ளது. இதனால், உலகத்தரம் வாய்ந்த தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் ஏனைய கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய, ஆறு மில்லியன் சதுர அடி பரப்பில் தகவல் தொழில்நுட்ப இடவசதி கூடுதலாக உருவாகும். மேலும், இதனால் கூடுதலாக ஒரு இலட்சம் தொழில் முறை வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும். சென்னை மாநகரம், தற்போது தொழில் முனைவோரின் விருப்பத் தேர்விடமாகியுள்ளது என்பது தெளிவாகி இருப்பதால், ஹெவ்லெட் பேக்கார்டு(Hewlett Packard), பிலிப்ஸ் (Philips), அக்சென்சர் (Accenture), ஜெனரல் எலெக்ட்ரிக் (General Electric) மற்றும் விர்சுசா (Virtusa) ஆகிய நிறுவனங்கள் சென்னைக்கு வந்துள்ளன. கோயம்புத்தூரும் இரண்டாம் நிலை நகரங்களும் வேகமான முன்னேற்றதுடன், வளர்ச்சி பெற்று வருகின்றன.



அறிவுசார் தொழில் நகரியம்

120. சென்னை அருகே, சோழிங்கநல்லூரில் அறிவு சார் தொழில் நகரியத்தை (Knowledge Industry Township) ஏற்படுத்துவதற்கான பணியை இந்த அரசு தொடங்கியுள்ளது. 500 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும் இந்த நகரியம், தனித் தனி வளாகங்களில் தகவல் தொழில்நுட்ப முன்னணி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உட்பட பல்வேறு வகை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சிக்கான வசதிகளைக் கொண்டிருக்கும். உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அறிவுசார் தொழில் நகரியம் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இணைக்கும் 6 வழித் தடத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப விரைவுப்பாதை (IT Express way) அமைக்கும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

121. இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஐம்பெறும் நிறுவனங்களாகிய, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், விப்ரோ, இன்போசிஸ், சத்யம் மற்றும் எச்.சி.எல். ஆகியவை சென்னையில் தங்களின் செயல்பாடுகளைப் பெருக்குவதற்கான மாபெரும் விரிவாக்கத் திட்டங்களை அறிவித்துள்ளன. பன்னாட்டு ஆலோசனை நிறுவனமான கார்ட்னர் (GARTNER) நிறுவனம், அண்மையில் நடத்திய ஆய்வுகளில், சென்னை மாநகரம், தகவல் தொழில்நுட்பத்திற்கான முதன்மைத் தேர்விடமாக உருவாகும் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. சென்னை மாநகரை, இந்தியாவின் உலகக் கிழக்கு நுழைவாயிலாக (India's Eastern Gateway to the World) உருவாக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாகத்தான், இவை அனைத்தும் சாத்தியமாகியுள்ளன.

சுற்றுலா வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு உயர்வு

122. 2003ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட ஏழு அம்ச செயல் திட்டம், 2004-2005 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை குறித்த திட்டங்களுக்கு வழிகாட்டியாகத் தொடர்ந்து விளங்குகிறது. செட்டிநாடு (காரைக்குடி உட்பட), பிச்சாவரம் மற்றும் பழவேற்காடு ஆகியவற்றை 3.65 கோடி ரூபாய் செலவில் சுற்றுலா மையங்களாக மேம்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. தென்னிந்திய சுற்றுலா மன்றம் (South India Tourism Council) தோற்றுவிக்கப்பட்டிருப்பது, சுற்றுலா மேம்பாட்டிற்கான தென் மாநிலங்களின் கூட்டு முயற்சிகளுக்கு ஒரு பெரும் உத்வேகம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு, உள்ளூர் சேவைப்பணித் தொழிலுக்கும் பெரிய அளவில் ஊக்கம் அளிக்கும். 2000-2001ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான ஒதுக்கீடு வெறும் 5



கோடி ரூபாயாக இருக்க, 2005-2006 ஆம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு 32.42 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஓட்டல்களில் தங்கும் அறைகளை முன் பதிவு செய்வதற்கும், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய தொகுப்புப் பயணத்திற்கு (Package Tour) முன்பதிவு செய்வதற்கும் –இணையதள வழி முன்பதிவு மற்றும் கட்டணம் செலுத்தும் வசதிகளைத் தொடங்கியுள்ள முதல் மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற சிறப்பை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. சுற்றுலாவுக்கான மொத்த ஒதுக்கீடு 32.42 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சிக்கான மின் ஆளுகை

123. முக்கியத் துறைகளில், சிறந்த பணி வசதியை வழங்குவது தமிழ்நாட்டின் சிறப்பம்சமாகும். மின் ஆளுகையின்மூலம், இதை மேலும் மேம்படுத்த முடியும். பொதுமக்களுக்குச் சிறந்த பணி வசதியை அளிப்பதற்காக, மின் ஆளுகைத் திட்டங்களை மேம்படுத்துவதற்குப் பொதுமக்கள் பெருமளவில் தொடர்பு கொள்கின்ற பத்துத் துறைகளை/ முகவரமைப்புகளை அரசு இனங்கண்டறிந்துள்ளது. இந்தத் துறைகள், தங்களது செயல்முறைகளை மறு ஆய்வு செய்து, மக்களுக்குப் பணி வசதிகளை அளிப்பதற்கு ஆகும் செயல்பாட்டுக் கால அளவைக் குறைக்கும். இந்த மறுஆய்வு செய்யப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில், துறைகள், திருத்தியமைக்கப்பட்ட மக்கள் சாசனங்களை வெளியிடும். மாவட்ட நிருவாகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், வணிகவரித் துறை, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுத் துறை, கருவூலத்துறை மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சிகள் போன்ற சேவைத் துறைகள், இவ்வாறு இனங்கண்டறியப்பட்ட துறைகள் ஆகும். மின் ஆளுகைக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு (Tamil Nadu Statewide Area Net Work) வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இது, மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்தகைய புதிய முயற்சிகள் அனைத்தும், மக்களுக்குப் பயனளிக்கும் வகையில், சேவைத் துறையில் சிறந்த முன்னேற்றங்களை உருவாக்கும்.

ஆடைகள் பூங்கா

124. 1.1.2005 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ள உலக வர்த்தக நிறுவன (WTO) விதிமுறைகளின் கீழ், துணித் தொழில் துறைக்கான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதனால், தமிழ்நாட்டில் உள்ள துணித் தொழில் பிரிவுகள் தங்களுடைய தொழிலை விரிவுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பெரும் வாய்ப்புகள்



உருவாகியுள்ளன. திருப்பூரில், 15.51 கோடி ரூபாய் செலவில், ஆடைகள் பூங்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது. காஞ்சீபுரம் மற்றும் மதுரைக்கு அருகில் புதிய ஆடைகள் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 49.83 கோடி ரூபாய் செலவில் பல்லடம், குமாரபாளையம் மற்றும் ஆண்டிபட்டி ஆகிய இடங்களில், நாடா இல்லா புதிய விசைத் தறிப் பூங்காக்கள் நிறுவப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இந்த அரசு, 21.81 கோடி ரூபாய் செலவில், காஞ்சீபுரத்தில் துணித் தொழில் மைய கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைச் (Textile Centre Infrastructure Development Scheme) செயற்படுத்தி வருகிறது.

125. புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் குறித்து, வளர்ச்சி ஆணையாளர் தலைமையிலான பணிக்குழு, துணித் தொழில் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. கடலூருக்கு அருகில் "சிப்காட்" நிறுவனத்தின் மூலம் "துணித் தொழில் செய்முறைப் பூங்கா" (textile processing park) ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெசவாளர் குழந்தைகளுக்கு படிப்பு உதவித்தொகை

126. பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக சீருடை வழங்கும் திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் 42 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இலவசச் சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் 175 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 111 இலட்சம் பெண்களுக்குச் சேலைகளும், 111 இலட்சம் ஆண்களுக்கு வேட்டிகளும் இலவசமாக வழங்கப்படும். நெசவாளர் சங்கங்கள் இலாபகரமாக இயங்குவதற்கும், உலக சந்தையில் போட்டியிட இயலும் வகையிலும், புதிய வடிவமைப்புகளை அறிமுகப் படுத்துவதற்கான புதிய திட்டமொன்று தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டங்கள் ஏழை எளியோருக்கு ஆடைகள் கிடைப்பதை உறுதி



செய்வதோடு, மாநிலத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலைவாய்ப்பிற்கும் வழிவகைசெய்யும். நெசவாளர்களுக்காகப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டம், விபத்து காரணமாக அல்லது இயற்கையாக மரணம் ஏற்படும் நேர்வில், அக்குடும்பத்தினருக்கு மிகத் தேவையான பாதுகாப்பை அளிக்கிறது. இத்திட்டம் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலுகின்ற நெசவாளர்களின் குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை வழங்கவும் வகை செய்கிறது.

துணித் தொழில் பூங்கா

127. ஒரே வளாகத்தில் நெசவு செய்தல், தைத்தல், வடிவமைத்தல், செயல்முறைப்படுத்தல் ஆகியவற்றிற்கு அதி நவீன வசதிகளை வழங்கும் வகையில், ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி (UNIDO) நிறுவனத்தின் நிதியுதவியுடன், 60 கோடி ரூபாய் செலவில் கரூரில் ஒருங்கிணைந்த துணித் தொழில் பூங்கா ஒன்றை இந்த அரசு உருவாக்கும்.

128. மாசுக் கட்டுப்பாட்டுடன் கூடிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றும் செயல்முறைப் பிரிவுகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், 5 சதவிகித வட்டி உதவித் தொகை அளிக்கும் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும். பயன்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இந்த வட்டிவகையிலான உதவித் தொகை, தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறும் சிறிய–நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய மூலதன உதவித் தொகையோடு கூடுதலாக இந்தத் தொகை வழங்கப்படும்.

தறிகளை நிலையுயர்த்தும் திட்டம்

129. விசைத்தறி துறையை நவீனப்படுத்தும் பணி, புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். துணித் தொழில் மேம்பாட்டு நிதித் திட்டம் தமிழ்நாட்டின் நெசவுப் பிரிவுகளை நவீனமயமாக்க இதுவரை உதவிடவில்லை. பழமையான தானியங்கித் தறிகளே இன்னும் தமிழகத்தில் இயங்கும் நிலை உள்ளது. தொகுப்பு அடிப்படையில் தறிகளை நிலையுயர்த்தும் திட்டமொன்றைச் (Cluster based Loom Upgradation Scheme) செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், சொந்தமாகத் தறி வைத்திருப்போர்

மற்றும் நெசவாளர்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ இணைந்து, தானியங்கி அல்லது நாடா இல்லா தறிகளைத் தொகுப்பாக நிறுவி தறிகளை நவீனப்படுத்திக்கொள்ள முடியும். நாடா இல்லாத தறியாக இருந்தால், பொருளாதார ரீதியில் ஆதாயகரமாக இயங்க குறைந்தபட்சத் தொகுப்பு 6 தறிகளாகவும், தானியங்கித் தறிகளாக இருந்தால், குறைந்தபட்சத் தொகுப்பு 12 தறிகளாகவும் இருக்கவேண்டும். இத்திட்டத்தின் கீழ், வணிக வங்கிகளிடமிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெற வசதி செய்து கொடுக்கப்படும். இதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அவர்களுடைய தறிகளை நவீனப்படுத்துவதற்காகப் பெறும் குறித்தகால கடன்களில், பயன்படுத்தப்படும் கடனுக்குண்டான வட்டியில், 5 சதவிகிதத் தொகையை உதவித் தொகையாக அரசு வழங்கும். இவ்வாறு விசைத்தறித் துறையை நவீனப்படுத்த இந்த அரசு தக்க ஊக்கம் அளிக்கும்.

ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம்

130. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஏழை எளியோரைப் பாதுகாப்பதற்காக ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு எப்போதும் அதிக முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார்கள். 1991ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதை அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1992 ஆம் ஆண்டில், இத்தகைய சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஏற்படுத்தும் கொள்கையை அறிவித்தார்கள். இதனால், பொருளாதாரம் சீரமைக்கப்படுகிற அதே வேளையில், ஏழை எளிய மக்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. நிதிநிலைச் சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலும், இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களின் அடிப்படையில் பொருளாதாரம் மேலும் சீரமைக்கப்பட்டுவரும் சூழ்நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இக்கோட்பாட்டிற்கு மீண்டும் புத்துயிரூட்டியுள்ளார்கள். 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்புறுதி வளையத்திற்கான நிதியொதுக்கம் முன்னெப்போதும் இருந்திராத அளவாக 7,528.09 கோடி ரூபாயாக இருக்கும். இதில், உணவுப் பாதுகாப்பு, தொடக்கச் சுகாதார உதவி, உடை, தொடக்கக் கல்வி, தங்குமிடம் மற்றும் வாழ்வாதார உதவி மற்றும் நலன் ஆகியவை அடங்கும். இவ்வாறாக, தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களைப் பாதுகாப்பதோடு நின்றுவிடாமல், அவர்களுக்கு மேம்பட்ட வாழ்க்கை அளிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரிக்கவும் இவ்வரசால் பெரு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

பொது விநியோக முறை மூலம் சீரிய அரிசி விநியோகம்

131. இந்த அரசு, மக்களின் ஒவ்வொரு தேவையையும் அறிந்து நிறைவு செய்யும் மக்களின் அரசாக இப்போதும், எப்போதும் நிலைத்திருக்கும். கடுமையான வறட்சியினால் அண்டைய மாநிலங்களில் பட்டினிச் சாவுகள் ஏற்பட்ட வேளையில்கூட, இந்த அரசு, தமிழ்நாட்டில் மிகவும் திறன் வாய்ந்த, சீரிய கட்டமைப்பு கொண்ட, பொது விநியோக முறையின் மூலம், எவ்விதத் தங்குதடையுமின்றி அரிசியை விநியோகித்து, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது. எளிதில் சென்றடைதல், பயன்பாடு, வாடிக்கையாளர் மன நிறைவு, மற்றும் தேவைக்கேற்ற இருப்பு ஆகிய அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு, நாட்டிலுள்ள பொது விநியோக முறை குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தனி ஆய்வு ஒன்று, தமிழ்நாட்டின் பொது விநியோக முறை, நாட்டிலேயே மிகச் சிறந்ததென அறிவித்துள்ளதைப் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.



132. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பையடுத்து, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக 49,31,757 மனுக்கள் வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டன. இதில், 37,70,446 மனுக்கள், புதிய குடும்ப அட்டைகளைப் பெறத் தகுதியுடையவை எனக் கண்டறியப்பட்டன. இத்தகைய தகுதியுடைய அனைத்து குடும்பங்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும்

..... தொடர்ச்சி 45ஆம் பக்கம்

பன்னாட்டு
ரோட்டரி மாவட்டம் 3230

கூர்த்த மதியும் நல்லிதயமும்
ஒரு சேர வாய்க்கப் பெற்று
தன்னுடைய சாதனைகளால் வரலாற்றில் தொடர்ந்து
தடம் பல பதித்து வரும்,
தொலைநோக்குப் பார்வை கொண்ட
தலைவி, தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**
அவர்களுக்கு வழங்கும்

பாராட்டு இதழ்

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், ஓடிச் சென்று உதவும் இரக்க சிந்தை; தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் சிசுக் கொலைத் தடுப்பு; அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் உருவாக்கம்; நாட்டிலேயே முதன்முதலாகப் பெண்கள் அதிரடிப்படையை அறிமுகப்படுத்தியது; பெண் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி ஆகிய மகளிரை மையமாகக் கொண்ட திட்டங்களின் வாயிலாக, சமுதாயத்தில் மகளிர் ஏற்றம் பெற வழிவகுத்த பாங்கு; மாநிலத்தில் பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவதில் காட்டிய தீரம்; சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினைக்கு, தொலைநோக்குச் சிந்தனையுடன், நிரந்தரத் தீர்வு காண்பதில் காட்டிய உறுதிப்பாடு; சுற்றுச்சூழல் மீதும் வருங்காலத் தலைமுறையினர் மீதும் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடாய் அமைந்த மழைநீர் சேகரிப்புத் திட்டம்; இயற்கைச் சீற்றம் ஏற்பட்டபோதெல்லாம், அது எவ்வளவு சிறியதாக இருப்பினும், பாதிக்கப்பட்டவர்கள்பால் அவர் காட்டிய பரிவு; அண்மையில் சுனாமி என்னும் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி புரிவதில் காட்டிய கடுவேகம்; திருட்டு வீடியோ ஒழிப்புச் சட்டம் என்னும் துணிகரச் சட்டம் இயற்றி திரைப்படத்துறைக்குப் புத்துயிரூட்டியது; சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டில் அவர் காட்டும் உறுதி ஆகிய அவருடைய சீர்சால் பண்புகளைப் பாராட்டி, கௌரவிப்பதை நாங்கள் பெற்ற பேறாகக் கருதிப் பெருமை கொள்கிறோம்.

இன்று, 100 அகவை காணும் உலகின் முதலாவது சேவை அமைப்பான பன்னாட்டு ரோட்டரி சங்கம், 2005ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23ஆம் நாளான இன்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு இந்த வாழ்நாள் சாதனையாளர் விருதினை** அளித்து கௌரவிப்பதில் பேருவகை அடைகிறது.

ரோட்டேரியன் **பெஞ்சமின் செரியன்**
மாவட்ட கவர்னர்
பன்னாட்டு ரோட்டரி சங்கம்

தொழில் உற்பத்தித் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்த்துவரும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உயர்ந்துள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

ரோட்டரி அமைப்பின் நூற்றாண்டு விழாவில் உங்களோடு கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நூறாண்டுகள் மனித சேவையில் ஈடுபட்டுள்ள ஓர் அமைப்பின் மாபெரும் விழாவில் கலந்து கொள்வது உண்மையிலேயே பெருமைக்குரியது. அதிலும் இந்த விழாவில் சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கான வாழ்க்கையை மேம்படுத்த நான் எடுத்த நடவடிக்கைகளை அங்கீகரித்து எனக்கு ரோட்டரி அமைப்பு வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதையும், பால் ஹாரிஸ் சேவையாளர் அங்கீகார விருதையும் ஏற்றுக் கொள்வது மிகவும் பெருமைக்குரியது என்று நான் கருதுகிறேன்.

பெண்கள் சுயபலத்தைப் பெறும் வகையில் அவர்களின் தொய்வில்லாத முன்னேற்றத்திற்கு நான் வகுத்து நடைமுறைப்படுத்திய திட்டங்களுக்காகவும், இயற்கைச் சூழலைப் பாதுகாக்க மழைநீர் சேமிப்புக்காக நான் நடைமுறைப்படுத்திய திட்டங்களுக்காகவும் இந்த விருதை எனக்கு அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. உண்மையில், மனித குல மேம்பாட்டிற்காக பலருடன் இணைந்து முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் உயர்ந்த மாண்புகளை உறுதியாகக் கடைப்பிடித்து. மனித குலத்திற்கு அயராது உழைத்துவரும் ஒரு மாபெரும் அமைப்பிலிருந்து இப்படி ஒரு விருதைப் பெறுவது உண்மையிலேயே பெருமைக்குரிய விஷயமாகும். ரோட்டரி அமைப்பின் நோக்கங்களும் என்னுடைய பொதுவாழ்க்கையில் வடிவமைத்த நோக்கங்களும் ஒருவகையில் ஒன்றுபட்டவைதான்.

எல்லாப் பிரிவினருக்கும் நீதி

தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் என்னிடம் தமிழக அரசின் முதலமைச்சர் பொறுப்பைக் கொடுத்துள்ளனர்.

என்னுடைய வாழ்க்கையில் தமிழக மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொள்ளத் தமிழக மக்கள் மீண்டும் எனக்கு இந்த வாய்ப்பை அளித்துள்ளனர் என்றே நான் கருதுகிறேன். இது மிகவும் அபூர்வமான வாய்ப்பாகும். உண்மையில் நான் எனது பொதுவாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் உண்மை, நம்பகத்தன்மை, எல்லாப் பிரிவினருக்கும் நீதி கிடைக்க வேண்டும்– குறிப்பாக எளியவர்களில் எளியோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அர்ப்பணித்து வாழ்ந்து வந்துள்ளேன். ஒருவிதத்தில் இக்கோட்பாடுகளுக்கு நான் கடமைப்பட்டுப் பணியாற்றி வருவது ரோட்டரி அமைப்பின் நோக்குகளை நிறைவு செய்வதாகவும் உள்ளது.

அதாவது, நாம் செய்வது உண்மையா? எல்லோருக்கும் நலன் தரக்கூடியதா?

எல்லோரிடமும் நம்பகத்தன்மையையும் நட்பையும் வளர்க்கக்கூடியதா?

எல்லோருக்கும் பயனளிக்கக்கூடியதா? என்பதை ஆய்ந்தே செயல்பட்டு வந்துள்ளேன். இந்த வகையில் ரோட்டரி அமைப்பின் இந்த உன்னதக் கோட்பாடுகள் மகாத்மா காந்தி இறுதியாக எழுதி வழிகாட்டிய கோட்பாட்டுடன் ஒத்திருப்பதைப் பார்க்க முடியும். மகாத்மா காந்தி 1948இல் எழுதிய கோட்பாடு வருமாறு : "உனக்கு எப்போதெல்லாம் சந்தேகம் வருகிறதோ? எப்போதெல்லாம் உன் செயல் மீதே உனக்கு நம்பிக்கையின்மை ஏற்படுகிறதோ? அப்போது நீ ஒரு விஷயத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். நீ சந்தித்த மிக மிக எளிதான ஏழ்மையான முகத்தை நினைவு கூர்ந்துகொள். செய்யப் போகும் செயல் அதற்குப் பயனுள்ளதா? அதன்மூலம் அவருக்கு இலாபம் உள்ளதா? அவரின் சொந்த வாழ்க்கையில் அவர் உயர முடியுமா? வேறு வகையில் கூறினால் அதன்மூலம் பசியாலும் மனோரீதியாகவும் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு சுயராஜ்யம் ஏற்பட வழிவகுக்குமா? என்று உன்னை நீயே கேட்டுக் கொள்" என்று கூறியுள்ளார்.

ஊக்கமளிக்கும் விருது

நான் எனது சொந்த வாழ்க்கையில் மகாத்மா காந்தியின் இந்த உயர்ந்த கோட்பாடுகளை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறேன். இப்போது ரோட்டரி அமைப்பு அதன் நூற்றாண்டு விழாவில் எனக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதையும் பால் ஹாரிஸ் சேவையாளர் அங்கீகார விருதையும் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு நான் செய்த சேவைகள் ரோட்டரி அமைப்பின் நான்கு உயர்ந்த கோட்பாடுகளை நிறைவேற்றியுள்ளதால் தான் எனக்கு இந்த விருது வழங்கப்படுகிறது என்று நான் நம்புகிறேன். இந்த நேரத்தில் இந்தப் பெருமைக்குரிய விருதை தாழ்மையுடன் ஏற்றுக் கொள்கிறேன். இந்த உயர்ந்த விருதை எனக்கு அளித்ததற்காக இந்த உயர்ந்த அமைப்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்களுக்கும் தேசத்திற்கும் மேலும் அர்ப்பணிப்புடன் செயல்பட இந்த விருது எனக்கு ஊக்கமளிக்கிறது; உற்சாகத்தை ஏற்படுத்துகிறது; உத்வேகத்தையும் ஏற்படுத்துகிறது.

போலியோ ஒழிப்பில் தமிழகம் முதலிடம்

மனிதக் குலத்திற்கு ரோட்டரி அமைப்பு செய்துவரும் மிக உயர்ந்த சேவை, போலியோ நோயை 2005க்குள் ஒழிக்க எடுத்துவரும் உறுதியான நடவடிக்கைகள்தான். உலகில் வேறு எந்தத் தன்னார்வ அமைப்பும் போலியோ நோயை ஒழிப்பது போன்ற இவ்வளவு பெரிய நோக்கத்தோடு உறுதியேற்றுச் செயல்பட்டது இல்லை. தமிழ்நாட்டில் போலியோ நோயை ஒழிக்க அரசு மேற்கொண்ட போலியோ சொட்டு மருந்து இயக்கத்திற்கு அடித்தளமாக ஆயிரக்கணக்கான ரோட்டரி ஊழியர்கள் அரசுடன்

இணைந்து பணியாற்றியது பிரமிக்கத்தக்கது. இந்தத் தருணத்தில் அரசின் இந்த இமாலயச் சேவையில் தோள் கொடுத்த ரோட்டரி அமைப்பிற்கு நான் நன்றி சொல்லவும், பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன். போலியோவை ஒழிக்கும் இந்தத் திட்டத்தில் தமிழகம் முதல் மாநிலமாக திகழ்வதுடன், போலியோவை ஒழித்த மாநிலமாகவும் திகழ்கிறது.

ரோட்டரி அமைப்பின் சேவை

கடந்த 2004 டிசம்பர் 26 அன்று சுனாமி அலைகள் தமிழகக் கடற்கரையைத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தியது. சுனாமி அலைகளின் வேகமும், அதன் அசுர பலமும் மிக அதிகமானது. அதனால் தமிழகக் கடற்கரையோரத்தில் இருந்த எல்லா கிராமங்களும், நகரங்களும் அழிக்கப்பட்டு விட்டன. இதுபோன்ற ஒரு பேரழிவு இதற்கு முன் எப்போதும் தமிழகத்தில் நடந்ததில்லை. சுனாமி அலைகள் தமிழ்நாட்டின் 8,010 உயிர்களைப் பலிவாங்கி உள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர். தமிழ்நாட்டின் கடற்கரைப் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்பட்டது. மீனவர் சமுதாயம் அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வீடுகள், உடைமைகள் என அனைத்தையும் இழந்தனர்.

இப்படிப்பட்ட பேரழிவு நேரத்தில் செயலாற்ற எண்ணற்ற தன்னார்வ நிறுவனங்கள் சேர்ந்து அரசின் நிவாரண நடவடிக்கைகளிலும், மறுவாழ்வுப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. தமிழ்நாட்டின் ரோட்டரி அமைப்புகள் தாமாக முன்வந்து பெருமளவில் தாராளமாக பொருளாதார உதவிகள், உணவு, தண்ணீர், உடைகள், தற்காலிக உறைவிடங்கள் என பலவகையான நிவாரணப் பொருள்களையும் வாரி வழங்கியது. ரோட்டரி மாவட்டம் 3230 முன்வந்து குக்கிராமமான சூளேரிகாட்டுக் குப்பம் கிராமத்தை முழுமையாகத் தத்தெடுத்துக் கொண்டது.

சுனாமி பாதித்த சில மணி நேரங்களிலேயே தமிழக அரசு மிகத் திறமையுடன் மீட்பு நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொண்ட விதத்தை எல்லோரும் பாராட்டினார்கள். இந்தியா மட்டுமின்றி உலகில் எல்லாப் பகுதியினரும் பாராட்டினார்கள். இந்த நிவாரணத் திட்டங்கள் குறித்து நான் இங்கு விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால் தனியார் ஒத்துழைப்புடன் மாதிரி கிராமங்களை உருவாக்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர மறுவாழ்வை ஏற்படுத்த உருவாக்கிய திட்டத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தன்னார்வ நிறுவனங்களின் சேவைகள்

இந்தத் திட்டத்தின் சிறந்த அம்சமே இந்தத் திட்டத்தில் ஈடுபட விரும்பும் தன்னார்வ நிறுவனங்கள் அந்த நிறுவனங்களின் விருப்பத்திற்கேற்ப எந்த வகையான நிரந்தர மறுவாழ்வுத் திட்டத்தையும் ஏற்று நடத்த வகை செய்யப்பட்டுள்ளது என்பதுதான் பாதிக்கப்பட்ட வர்களுக்கு தனிப்பட்ட வீடுகள் கட்டித்தருவதுடன் சமூக சேவைகளான வீடுகள், பள்ளிகள், நீர் வழங்கும் அமைப்புகள், சுகாதார மையங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தர முடியும். இப்பணியில் ஏராளமான தன்னார்வ நிறுவனங்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றன. ரோட்டரி அமைப்புகளும் நிரந்தர மறுவாழ்வுத் திட்டத்தில் இணைந்து செயல்பட முன்வரவேண்டும்.

மக்கள் இயக்கமான
மழைநீர் சேகரிப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் ரோட்டரி அமைப்பு பல்வேறு திட்டங்களைத் தாங்களாகவே நிறைவேற்றி வருகின்றன. ரோட்டரி மாவட்டம் 3230, அதன் திறமையான தலைவர் கவர்னர் ரோட்டோரியன் பெஞ்சமின் செரியன் தலைமையில் பணியாற்றும் ஏராளமான ஊழியர்கள் பாராட்டத்தக்க நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் எடுத்து வருகின்றனர். ஏழை பள்ளிச் சிறுவர்களுக்கு சத்துணவு வழங்குவது, தையற் பயிற்சிப் பள்ளிகள் நடத்துவது, மாதந்தோறும் கண் சிகிச்சை முகாம் நடத்துவது, புற்றுநோயாளிகளுக்கு உற்ற துணையாக அவர்களுக்கு கவுன்சிலிங் வழங்குவது, போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வுப் பள்ளிகள் நடத்துவது, அவர்களின் ஊனங்களைப் போக்க உதவுவது, சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை அளிப்பது, வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பது அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கோவில் குளங்களை மறுசீரமைக்கும் பணிகளிலும், ஆகாயகங்கை திட்டம் என்ற மழைநீர் சேமிப்புத் திட்டத்திலும் ஈடுபட்டிருக்கும் ரோட்டரி அமைப்பை இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.

மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் நான் அறிவித்தேன். 2001 முதல் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் காரணமாக தண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் மோசமானது. இதைத் தொடர்ந்து மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாட்டில் 15,000 உள்ளாட்சித் தலைவர்களுக்கும் நானே கைப்பட கடிதம் எழுதினேன். மாவட்ட ஆட்சியர்கள் மூலம் தமிழகம் முழுவதும் மாபெரும் விழிப்புணர்வு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. இது மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என நான் நினைத்தது நடந்தது. மேலும் இந்த வறட்சியைத் தொடர்ந்து தமிழகத்தின் விவசாய உற்பத்தியையும் மாற்றியமைக்கத் திட்டமிட்டோம்.

இதற்காகக் குறைந்த தண்ணீர்த் தேவையில் நிறைந்த பலன்களைத் தரும் இனிப்புச் சோளம், சர்க்கரைக் கிழங்கு, காட்டாமணக்கு போன்ற பயிர்

வகைகளைப் பயிர்செய்யத் திட்டமிட்டோம். இதன்மூலம் தொடர்ச்சியான விவசாயமும் உயிரி எரிபொருள்களும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. மேலும் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. தமிழகம்தான் இந்தியாவிலேயே தனிநபர் தண்ணீர் உபயோகம் மிகக் குறைந்த மாநிலம். இந்த நிலைமையைக் கணக்கில் கொண்டு நிறைவேற்றப்பட்டு வரும் திட்டமாகும்.

அந்நிய முதலீட்டை ஈர்த்த தமிழகம்

உலக அரங்கில் போட்டியிடும் தொழில் துறையாக தமிழகத் தொழில்துறையை உயர்த்தும் நோக்கத்துடன் 2003இல் புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. இதனால் இன்று இந்திய அளவில் தொழில் உற்பத்தித் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்த்துவரும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உயர்ந்துள்ளது. 2004 ஜூலை வரை மொத்த அந்நிய முதலீட்டில் 8.4 சதவிகிதத்தை ஈர்த்த மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. இன்று 2,621 அந்நிய நிறுவனங்கள் மூலம் ரூ.25,100 கோடி முதலீடு பெற்ற மாநிலமாகத் தமிழகம் நிமிர்ந்து நிற்கிறது.

மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. இதன் ஆண்டு ஏற்றுமதி 1.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை எட்டியுள்ளது. அரசின் இந்த நடவடிக்கையின் மூலம் வங்கி, நிதித்துறை, ஆயுள்காப்பீடு, சுகாதாரம், கணினி வடிவமைப்பு, கணினி உதவியுடன் பொறியியல் ஆகிய துறைகளில் தமிழ்நாடு தனித்திறமையுடன் வளர்ந்துள்ளது.

சென்னையை அழகுபடுத்தும் திட்டம்

உலகத்தின் முன் இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை மாநகரத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் சில திட்டங்களைக் கொண்டு வந்துள்ளேன். சென்னைக்கு என பத்தாண்டுத் திட்டத்தை உருவாக்கியுள்ளேன். இதற்காக ரூ.18,000 கோடி முதலீடு தேவைப்படும். குடிநீர் வழங்கல், சாலை, மின்சாரம், போக்குவரத்து, வீட்டுவசதி என்ற உள்கட்டமைப்பு சேவைகளுக்கு இந்த முதலீடு தேவை. சென்னையில் பூங்காக்கள் அமைப்பது, நடைபாதைகள், சாலைகள் நடுவே தடுப்புச்சுவர், விளையாட்டு அரங்குகள், தூய்மையான நகரம், குப்பை அகற்றுதல், கழிவுநீர் அகற்றுதல், மழைநீர் வடிகால், போக்குவரத்து போன்ற அம்சங்களை உள்ளடக்கிய சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்திற்கு ரோட்டரி அமைப்புகளும் முழு ஆதரவு அளிக்க வேண்டும்.

உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனை

ஏழைகளைப் பட்டினிபோடும் பொருளாதார வளர்ச்சி அர்த்தமற்றது. வளரும் பொருளாதாரத்தில் அவர்களின் வாழ்க்கை நலமும் மேம்படுத்திக் கொள்ளும்

வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என நான் உறுதியாக நம்புகிறேன். நடந்தாக வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். இதனால் தமிழகம் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) கடந்த பத்தாண்டுகளில் 7ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. இது குறிப்பிடத்தக்க சாதனையாகும். உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனையாகும்.

பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஆண்களைவிடச் சிறந்து விளங்க முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். இதற்காக நான் மேற்கொண்ட சில திட்டங்களின் வெளிப்பாடுகள் அதை நிரூபித்துள்ளது.

இந்நிலையிலும் இலட்சக்கணக்கான பெண்கள் நமது நாட்டில் குடும்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் நிலையிலும் அவர்கள் அடக்கி வைக்கப்பட்டும், சுரண்டலுக்கும், அவமானத்திற்கும், இழிவு படுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டே வருகிறார்கள் என்பது கசப்பான உண்மையாகும். உலக அரசியல் இயக்க வரலாற்றில் பெண்களுக்குக் கட்சிப் பதவிகளில் 33 சதவிகித ஒதுக்கீட்டைக் கொடுத்து அவர்களை பொறுப்புள்ள அரசியல்வாதிகளாக உருவாக்கி உள்ளேன் என்று நான் மிகவும் பெருமையுடன் கூறிக் கொள்வதுடன் மேலும் தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்தியுள்ளேன் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் சில இடங்களில் நடைபெற்று வந்த பெண் சிசுக்கொலைகளைத் தடுத்து நிறுத்த தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தேன். மேலும் பெண் சிசுக்கொலையைத் தடுத்து நிறுத்த மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்த தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டேன். மேலும் பள்ளிகளில் மாணவிகள் பாதியில் படிப்பை நிறுத்துவதைத் தடுத்து நிறுத்த பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தேன். இதன்மூலம் பொருளாதார ரீதியாகப் பெண்கள் குடும்பத்திற்குப் பாரமாக மாற மாட்டார்கள் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சி எடுத்தேன். இதற்காக நீண்ட தூரம் பள்ளிக்குச் செல்லும் மாணவிகளின் துயர்துடைக்க தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கினேன். இதன்மூலம் மாணவிகளுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்த முடிந்துள்ளது. இதனைத் தமிழகம் முழுவதும் இப்போது உண்மையில் கண்டு உணர முடிகிறது. இந்தத் திட்டம் பள்ளி மாணவிகள் படிப்பை நிறுத்தும் விகிதத்தைக் குறைத்துள்ளது.

பெண்கள் சுயமாக நிமிர்ந்து நிற்பது என்பது அவர்களின் ஒன்றுபட்ட கூட்டுச் செயல்பாட்டால் உருவாக்க முடியும் என்பதுதான் உண்மை. இதைத்தான் இந்தியக் கண்ணோட்டத்தில் 'சக்தி' அல்லது சாதகமான வாழ்க்கையின் வலிமை என்கிறோம். இதை மையமாக வைத்துதான் 1992இல் பெண்கள் தன்னார்வக் குழுக்களை உருவாக்கினேன். இன்று இந்த அமைப்புகள் நம்பிக்கை, வளர்ச்சி, சுயமேம்பாடு என்ற சொற்களின் உண்மைச் செயல்பாடாகச் செயல்பட்டு வருகின்றன. இவை இலட்சக்கணக்கான பெண்களைக் கூட்டுச் செயல்பாட்டில் மேம்படுத்தி உள்ளது. கூட்டாக பேரம் பேசும் சக்தியைப் பெண்கள் உணர்ந்து கொண்டனர். சந்தைக்குச் செல்லவும், கடன் பெறவும் பெண்கள். தயாராகிவிட்டனர். இப்போது பஞ்சாயத்து தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகளைப் பற்றி முடிவுகளை மேற்கொள்ளும் நிலையில் பெண்கள் மேம்பட்டு வருகின்றனர். இவை பத்தாண்டுகளுக்கு முன் நினைத்துப் பார்க்க முடியாத விஷயங்களாகும்.

வன்முறை மூலம் அமைதியை ஏற்படுத்த முடியாது

சமூகத்தின் எந்த முன்னேற்றத்திற்கும் முழு முதல் தேவை அந்தச் சமூகத்தில் அமைதி, சட்டம் ஒழுங்கு சீராக இருப்பதுதான். சமூகத்தில் அமைதியும், சட்டம் ஒழுங்கும் சீர்குலைந்தால் நிஜவாழ்க்கையே பாதித்துவிடும். அனைத்துப் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கையையும் தகர்த்துவிடும். எனவே, தமிழகத்தில் தீவிரவாதத்தின் சவாலை அடியோடு ஒழித்துக்கட்ட நான் கடுமையான – உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இன்று உலக அளவில் பயங்கரவாதம் அச்சுறுத்திக் கொண்டுள்ளது. வரலாறு எல்லாக் காலங்களிலும் எல்லா நாகரிகங்களிலும் வன்முறையை எதிர்கொண்டே வந்துள்ளது. ஆனால் வன்முறையை ஒடுக்க எப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதுதான் முக்கியம். இன்று பன்னாட்டு அளவில் வர்த்தகம் மட்டும் ஏற்றுமதியாகவில்லை; பயங்கரவாதமும் ஏற்றுமதியாகிறது.

இன்றைய உலகில் பயங்கரவாதம் என்பது பலமுனைகளைக் கொண்ட பயங்கர மிருகமாக தலைவிரித்தாடுகிறது. இந்தப் பயங்கரவாதம் போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதக் கடத்தலுடன் இணைந்து செயல்படுகிறது. இன்று பயங்கரவாதத்தை ஒழிக்க பல்வேறு நாடுகள் பல்வேறு விதத்தில் சட்டப்பூர்வமாகவும், உறுதியாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளையில் அரசியல் சுயலாபங்களுக்காக பயங்கரவாதத்தின் அர்த்தம் திரித்து விளக்கமளிக்கப் படுகிறது. தேவையில்லாமல் ஆயுதம் ஏந்திய போராட்டங்களுக்கும் தீவிரவாதத்திற்கும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

அழிவு ஏற்படுத்தக்கூடிய எந்தவித வன்முறை நடவடிக்கையும் பயங்கரவாதமாக கருதப்பட்டால்தான் அதனை ஒடுக்க முடியும். ஒரு மனிதனின் பயங்கரவாதம் – அடுத்த மனிதனின் சுதந்திரப் போராட்டம் என்ற கண்ணோட்டத்தில் தான் விடுதலைப்புலிகள் உலகிற்கு எடுத்து வைத்துள்ளனர்.

சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுவது என்பதை ஆயுதப் போராட்டத்தையும், இன ஆதிக்கத்தையும் நியாயப்படுத்த பயன்படுத்திக் கொள்ள முடியாது. உலகில் வன்முறை தீர்வாக முடியாது என்பது வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று. வன்முறை மூலம் உலகில் நீண்ட அமைதியை ஏற்படுத்த முடியாது.

பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்

இன்றைய நிலையில் உலகில் எல்லா நாடுகளும் பயங்கரவாதம் என்பதன் பொருள் குறித்து குழப்பம் இல்லாமல் முடிவுக்கு வரவேண்டும். அரசியல் நோக்கங்களை வலியுறுத்துவதற்காக– முன்னெடுத்துச் செல்வதற்காக அச்சுறுத்தும் நிலைமையை ஏற்படுத்தி அப்பாவிப் பொதுமக்கள் மீது தொடுக்கப்படும் வன்முறை நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாதம் என்று அறிவிக்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அப்போதுதான் உலக நாடுகளிடையே பயங்கரவாதம் குறித்த தகவல்கள் பரிமாற்றமும், பயங்கரவாதக் குழுக்களுக்கு மறைமுக ஆதரவு அளிக்கும் நாடுகளையும் குழுக்களையும் தனிமைப்படுத்த முடியும்.

இதன்மூலம்தான் உலகில் பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்த முடியும். துரதிருஷ்டவசமாக உலக அளவில் இந்த விஷயத்தில் ஒத்த கருத்து ஏற்படவில்லை.

இன்றைய நவீனத் தொழில்நுட்ப உலகில் பயங்கரவாத அமைப்புகளின் வீச்சும், தாக்கமும் இன்று எல்லோரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு உள்ளது. எனவே, இரும்புக்கரம் கொண்டு இவற்றை அடக்கினால்தான் இதனை ஒழிக்க முடியும். இந்த விஷயத்தில் மெத்தனமாக இருந்தால் அது பயங்கரவாத அமைப்புகளின் கரத்தை வலுப்படுத்தும். அரசு அதன் முன்பாக பலவீனப்படுத்தப்பட்ட அமைப்பாக நிற்கும். பயங்கரவாதக் குழுக்கள் தைரியமாக அழிவு வேலைகளில் தயக்கமில்லாமல் ஈடுபடும்.



தீவிரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை

தேசிய அளவில் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டம் மத்திய – மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கையாக இருக்க வேண்டும். இதற்காக தீவிரவாதத்தை கட்டுப்படுத்தும் அமைப்புகளுக்கு எல்லாவித நவீன ஆயுதங்களும் தளவாடங்களும் வழங்கப்பட வேண்டும். தீவிரவாதம் குறித்த தகவல்களை எல்லா உளவு அமைப்புகளிடம் இருந்தும் ஒருமுனைப்படுத்த வேண்டும். இராணுவம், மத்திய உளவுத்துறை, மாநில உளவுத்துறை, 'ரா' உள்ளிட்ட எல்லா அமைப்புகளும் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

இத்தகைய தீவிரவாதத்தை ஒழிக்க நான் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். இன்றைய நவீன காலகட்டத்தில் குற்றம் மற்றும் தீவிரவாதம் நாடுகளைக் கடந்து தொடர்புகளைக் கொண்டுள்ளது. இவற்றை ஒழித்தால்தான் சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் சாத்தியப்படும்.

நடப்பு ஆயிரமாண்டு ஆசியாவின் காலமாகக் கூறப்படுகிறது. இதில் இந்தியா உலகின் வல்லரசாக வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியாவின் மிகப்பெரிய மக்கள்தொகையும், மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற பலமும் இந்தியாவுக்குச் சாதகமான அம்சங்களாக அமைந்துள்ளன. உலகின் வளர்ந்த நாடுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தகவல் தொழில்நுட்பம், கணினித் தொழில்நுட்ப அறிவுத்துறையும் இந்தியாவில் வேகமாக வளர்ந்துள்ளதே இதற்குக் காரணம். நாம் அமைதியை விரும்பும் நாடு என்று உலகிற்கு அறிமுகமாகி இருக்கிறோம்.

உலகின் வல்லரசுகள் பிரிந்து நின்றபோது நாம் அணிசேரா நாடுகளுக்குத் தலைமையேற்றோம். உலக அரங்கிலும் நாம் எந்த வல்லரசையும் சாராமல் உலகப் பிரச்சினைகளில் சுயமான நிலைப்பாட்டை மேற்கொண்டோம். உலக வர்த்தக அமைப்பு 1995இல் ஏற்பட்டபோதும் இந்தியாதான் வளரும் நாடுகளுக்குத் தலைமையேற்றது. குறிப்பாக உருகுவே நாட்டில் நடைபெற்ற ஜவுளித் துறைக்கான ஒப்பந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்று வளரும் நாடுகளுக்காகப் போராடி ஜனவரி 1, 2005 முதல் அமலாக வேண்டிய ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகித்தது. வரும் காலத்திலும் உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளிலும் இந்தியா முக்கியப் பங்கு வகிக்க வேண்டும்.

நீண்ட தூரத்தில் உலக அமைதி

அணு ஆயுத விஷயத்தில் இந்தியா தன் திறமையை உலகிற்குப் பறைசாற்றிய போதும், தொழில்நுட்பத் துறையில் வேகமான வளர்ச்சியைப் பெற்று உலகத் தொழில் உற்பத்திச் சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றாக வேண்டும். அதுவரை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர இடத்தைப் பிடிக்கும் அம்சம் என்பது தாமதப்படுத்தப்படும். மேலும், நாம் விரைவில் நமது அண்டை நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்மூலம்தான் நாம் ஆசிய நாடுகளின் மத்தியில் முக்கிய இடத்தைப் பிடிக்க முடியும்.

அதேவேளையில் ஒவ்வொரு நாட்டின் நிலைப்பாடும் அதன் சுயநலனை உட்படுத்தியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் சுயநலன் அந்நாட்டின் பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கணக்கில் கொண்டவை.

அணு ஆயுத ஒழிப்பு விஷயத்தில் உலக நாடுகளிடையே கருத்தொற்றுமை உருவாக்கப்படவில்லை. உலகின் அச்சுறுத்தும் மையங்கள் ஏராளமாக உள்ளன.

உலக அமைதி இன்னும் நீண்ட தூரத்தில் உள்ளது. இந்த நிச்சயமற்ற நிலையிலும்கூட நாடுகளிடையே மோதல்களைக் குறைக்க இந்தியா முக்கியப் பங்கு வகிக்க முடியும். இப்போதும் மக்களிடையே ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க இரண்டாம் வழி ராஜிய நடவடிக்கையின் மூலம் இந்தியா தனிப் பங்கு வகிக்க முடியும்.

உலக அமைதிப் பணி

இந்த வகையில் ரோட்டரி போன்ற பன்னாட்டு அமைப்புகள் பன்னாட்டு அளவில் நல்ல புரிதலையும் நல்ல நம்பிக்கைகளையும் உலக அமைதியையும் ஏற்படுத்த பணியாற்ற முடியும். ரோட்டரி அமைப்பினர் தேசப்பற்றையும் மீறி உலக அமைதிக்குப் பணியாற்றிட முடியும். மக்களிடையே கூட்டுச் செயல்பாடு மூலம் உலக அமைதி என்ற கனவை நனவாக்க முடியும்.

இந்த வேளையில் எனக்குத் தனிப் பெருமைக்குரிய விருதை வழங்கி உங்களுடன் எனது கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பை அளித்த ரோட்டரி அமைப்பினருக்கு நான் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் 23-2-2005 அன்று,
ரோட்டரி சங்கம் சார்பில் வழங்கப்பட்ட
வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்று
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.

36ஆம் பக்கத் தொடர்ச்சி ....

பணி மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்பெரும் பணியை, மிகக் குறுகிய காலத்தில் செய்து முடித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. பழைய குடும்ப அட்டைகளுக்கு பதிலாக புதிய குடும்ப அட்டைகள் ஜூன் 2005க்குள் வழங்கப்படும். மேலும், போலி குடும்ப அட்டைகள் அனைத்தும் ஒழிக்கப்படும். பொது மக்களிடமிருந்து மேற்கொண்டும் கோரிக்கைகள் வரப்பெற்றதன் பேரில் புதிய குடும்ப அட்டைகளுக்கான இந்த விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய கடைசிநாள் 6.3.2005 வரை நீட்டிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை உயர்ந்து, மாதாந்திர விநியோக அளவு அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், உணவு மானியத்திற்கான நிதியொதுக்கம், 1,000 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் முன்மாதிரியாகத் திகழும் அனைவருக்கும் கல்வித் திட்டம்

133. "அனைவருக்கும் கல்வி"த் திட்டத்தின் கீழ் (Sarva Shiksha Abhiyan), தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றியானது, தேசிய அளவில் பின்பற்றத்தக்க ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. ஆரம்பப் பள்ளி அளவில் மட்டுமல்லாது, அதற்கு மேற்பட்ட, அதாவது, நடுநிலைப்பள்ளி அளவிலும், 100 சதவிகிதம் மாணவர்கள் பள்ளிக்கு வருகின்ற சூழ்நிலையை அரசு உறுதி செய்துள்ளது. 2001-2004 கால அளவில் 1,112 புதிய ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்பட்டதன் மூலமாகவும், 2001-2005 ஆம் ஆண்டு கால அளவில் 2,106 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டதன் மூலமாகவும், இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இந்த வசதிகள் அளித்ததன் மூலமாக, ஆரம்பப் பள்ளிகளில் படிப்பைப் பாதியில் விட்டுச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 2001-2002 ல் 16 சதவிகிதமாக இருந்த நிலைமாறி, 2003-2004இல் 8 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கான ஒதுக்கீடு 2005-2006 ஆம் ஆண்டில் 500.42 கோடி ரூபாயாக இருக்கும்.

பள்ளிகள் நிலை உயர்வு

134. இந்த அரசு, 2005-2006 ஆம் ஆண்டில், 90 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 60 உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தும். 605 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள், 182.74 கோடி ரூபாய் செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 549 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை 232.10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2005-2006ஆம் கல்வியாண்டில், 300 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆய்வகக் கூடங்களை நிறுவி, பள்ளி செல்லும் சிறார்களின் மொழித் திறன் மேம்படுத்தப்படும். 2005-2006ஆம் ஆண்டில், மேலும் 90 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விருப்பத் தேர்வுப் பாடங்களில் ஒன்றாக, கணினி அறிவியல் பாடம் சேர்க்கப்படும்.



135. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான கல்வியறிவு இடைவெளியைப் போக்குவது, புத்தாயிரமாண்டின் முக்கியமானதொரு வளர்ச்சி இலக்காகும். 2004-2005 ஆம் ஆண்டில், கல்வியறிவில் பின்தங்கியுள்ள 6 மாவட்டங்களில், மகளிருக்காக, சிறப்புக் கல்வியறிவுத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. படிப்பறிவில்லாத பெண்களுக்குக் கல்வி போதிக்கும் பொருட்டு, மாவட்டங்களில் கல்வியறிவில் பின்தங்கியுள்ள 43 வளர்ச்சி வட்டாரங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். வட்டார அளவில் ஊரக மகளிரின் கல்வியறிவு விகிதம், தேசியக் கல்வியறிவு விகிதத்தை விடக் குறைவாகவும், பாலினக் கல்வியறிவு இடைவெளி விகிதம் தேசிய சராசரி அளவைவிடக் குறைவாகவும் உள்ள 10 மாவட்டங்களைச் சேர்ந்த, கல்வியறிவில் பின்தங்கிய 28 வளர்ச்சி வட்டாரங்களில் "கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா" (Kasturiba Gandhi Balika Vidyalaya) என்ற புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 8.59 கோடி ரூபாய் செலவில்

அவசியமான அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய, மாணவிகளுக்கான 37 உறைவிடப் பள்ளிகள் நிறுவப்படும். இந்தத் திட்டங்கள், ஆண்–பெண் கல்வியறிவின் இடைவெளியை மிக வேகமாகக் குறைக்க உதவும். 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில், பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு 3,800.65 கோடி ரூபாயாக இருக்க, 2005-2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இது 4,348.01 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

136.இந்த அரசு, 63.21 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், 8 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 3 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில், உலக வங்கியின் நிதியுதவியுடன் தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. உயர்கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கம், 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 645.64 கோடி ரூபாயாக இருக்க, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 741.77 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

137.மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விளையாட்டு மேம்பாட்டிற்கு உயர் முக்கியத்துவம் அளித்துவருவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னையில் விளையாட்டு மேம்பாட்டிற்கான வசதிகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகர், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் இடங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெரு முயற்சியாலேயே, 2005 ஜனவரியில், சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டி, பெரியதொரு பன்னாட்டு நிகழ்ச்சியாக இங்கு நடத்தப்பட்டது. 2005ஆம் ஆண்டில், சேம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டி விளையாட்டுகள் சென்னையில் நடத்தப்படும். இதற்குத் தேவையான வசதிகள் தயாராகி வருகின்றன. உலக அளவில் வெற்றிகாணும் திறமையாளர்களைக் (World Beaters Scheme) கண்டறியும் திட்டம் மற்றும் திறமைசாலிகள் மேம்பாட்டுத் திட்டம் (Champions Development Scheme) ஆகியவை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னைப் பகுதியில் உலகத் தரத்தில் மிதிவண்டி போட்டிக்கான விசைத் தடகளம் (Velodrome) மற்றும் துப்பாக்கிச் சுடுதளம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன என்பதை அறிவிப்பதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன். 2005-2006 ஆம் ஆண்டில், புதிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் உள் விளையாட்டு அரங்கங்களைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. வருகைதரும் விளையாட்டுக் குழுக்களுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, விளையாட்டு வளாகம் ஒவ்வொன்றிலும், உரிய இடவசதியும் உணவும் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கம், 33.97 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



மொழிப்பற்றை வளர்க்கும் அறிவியல் தமிழ்

138.அனைத்துப் பள்ளிகளிலும், எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அறிமுகம் செய்யப்பட்ட அறிவியல் தமிழ் அனைத்து மாணவர்களிடையேயும் தமிழ் மொழிப்பற்றை வளர்க்க உதவியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், 4.37 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், இத்திட்டம் தொடரப்படும். இதன்மூலம், அனைத்து மாணவர்களுக்கும், அறிவியல் தமிழ் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும். செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலியைத் தொகுத்து வெளியிடும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், இந்த அகராதியின் அனைத்துப் பாகங்களையும் தொகுக்கும் பணியை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுக்கான மொத்த ஒதுக்கீடு, 39.41 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

139.உலகெங்கும் பரந்துள்ள தமிழின மக்கள், அனைத்து நிலைகளிலும், தமிழைக் கற்பதற்கும், அதன் பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு குறித்து அறிந்து கொள்வதற்கும், இணையதளம் மூலமாக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அதன் மையங்களை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இவ்வாண்டில், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் லீயூனியன் ஆகிய நாடுகளில் இப்பல்கலைக் கழகம், தனது ஒருங்கிணைப்பு மையங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், புதிய மையங்களை ஏற்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. தமிழ்ச்சொல் இணையம் (word net), தமிழ் கணினி இயக்க முறைமை (Tamil Linux) முதலியவை போன்ற மென்பொருள்களை உருவாக்கும் பணி முடிவுறும் நிலைகளில் உள்ளது. அனைத்து வகை தமிழ் எழுத்து வரிவடிவங்களையும் தெரிந்து கொள்வதற்கு உலகளாவிலான தமிழ் தேடுபொறி (Search Engine) ஒன்று இன்னும் ஒரு சில மாதங்களில் தயாராகிவிடும்.



சென்னை பொது மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள்

140.2001ஆம் ஆண்டில், இந்த அரசு பொறுப்பேற்றபோது, குழந்தை இறப்பு விகிதம், மகப்பேறின்போது தாய் இறப்பு விகிதம் போன்ற முக்கியமான சுகாதாரக் குறியீடுகள், முன்னேற்றமின்றித் தேக்கநிலையில் இருந்தன என்பதை, இந்தப் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இலக்குகளை எய்துவதற்கு இவற்றுக்கு மீண்டும் உயிரோட்டம் அளிக்கப்படுவதை நமது அரசு உறுதி செய்துள்ளது. சுகாதாரத் துறைக்கான புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள் அனைத்தையும் எய்தும் வகையில், தமிழ்நாடு தற்போது முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வருகிறது. 2000–ல், உயிருடன் பிறந்த குழந்தைகளில் குழந்தை இறப்பு வீதம் (Infant Mortality Rate) ஆயிரத்திற்கு 51 ஆக இருந்தது, இது, 2002-2003ஆம் ஆண்டிற்குரிய மாதிரிப் பதிவு ஆய்வின்படி, ஆயிரத்திற்கு 44 ஆகக் குறைந்துள்ளது. இதேபோன்று, இதே கால அளவில், மொத்தப் பிறப்பு வீதம் (Crude Birth Rate) ஆயிரத்திற்கு 19.3 என்ற அளவிலிருந்து, 18.5 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. பேறுகால இறப்பு வீதம் (Maternal Mortality Rate) உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 1.4 என்ற அளவில் உள்ளது.

141.நமது நாட்டிலேயே மருத்துவ வசதிகளின் தலைநகராக சென்னை, தன்னை நிலைநிறுத்தித் திகழ்கின்றது. மிகச் சிறந்த மருத்துவ வசதிகள், தகுதிவாய்ந்த சிறப்பு மருத்துவர்கள் மற்றும் செவிலியர் பேணுகை வசதி ஆகியவற்றின் காரணத்தால், சென்னை, உலக அளவில் மருத்துவ வசதிக்கான மக்களின் விருப்பத் தேர்விடமாக, மிக வேகமாக மாறிவருகிறது. சென்னை பொது மருத்துவமனை வளாகத்தில் உருவாகிவரும், மாபெரும் இரு கோபுரக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் திறக்கப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இந்த அரசு, இத்திட்டத்தை 104.47 கோடி ரூபாய் செலவில் வெற்றிகரமாக முடித்துள்ளது. 1,650 படுக்கை வசதிகள் கொண்ட, இந்த இரு கோபுரக் கட்டடங்களுக்கு, 5.39 கோடி ரூபாய் செலவில் புதிய சாதனங்களும் அறைகலன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவக் கல்லூரிகளில், தனிச் சிறப்பு மையங்களை ஊக்குவிக்கும் நமது கொள்கையின் ஓர் அங்கமாக, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் குடல்நோய் அறுவை சிகிச்சைத் துறையில், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். இது, தென்னிந்தியாவில், பொதுத் துறையின் கீழ், இந்த வகையில் அமையும் முதலாவது மையம் ஆகும். முக்கியமாக, ஹெபடைடிஸ்–பி ('Hepatitis-B') வைரஸ் கிருமியினால், கல்லீரல் பாதிக்கப்பட்டு, இறப்பு வீதம் அதிகரித்திருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த



நோய்க்கான சிகிச்சைக்கு 5 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படவுள்ள, இந்தக் கல்லீரல் மாற்று மையம், இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த செலவில் சிகிச்சை அளிக்கும். இந்திய மருத்துவக் கழகம் வரையறுத்துள்ள கோட்பாடுகளை முழுமையாக நிறைவு செய்யும் வகையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில், அனைத்து வசதிகளும் செய்யப்படுவதையும், முழுமையான அளவில் பணியாளர்கள் பணிபுரிவதையும் உறுதிசெய்திடும் வகையில், இந்த அரசு, சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக, இந்த அரசு, கன்னியாகுமரியில் ஆசாரிப்பள்ளத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கும், தேனி மற்றும் வேலூரில் உள்ள புதிய மருத்துவக் கல்லூரிகள் இரண்டிற்கும், 187.92 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரிகள், 53.48 கோடி ரூபாய் செலவில், இந்திய மருத்துவக் கழகத்தின் நெறிமுறைகளுக்கு இணங்க, நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன.

தாய் சேய் நலன் மேம்பாடு

142. 597.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கி நிதியுதவி பெறும், தமிழ்நாடு சுகாதாரப் பணிகள் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில், மதிப்பிற்குரிய அவை உறுப்பினர் மகிழ்ச்சியடைவர். இதுவரை இல்லாத பெரு முயற்சியாக, 29 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளையும், 241 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளையும் உள்ளடக்கிய, மொத்தம் 270 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, இத்திட்டத்தால், தாய்-சேய் நலனை மேம்படுத்துதல், மகப்பேற்றின்போது, தாயின் இறப்பு விகிதத்தைக் குறைத்தல், பழங்குடியினர் பகுதிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் அளிக்கப்படும் சுகாதாரச் சேவையை மேம்படுத்தல், அவசர சிகிச்சை, தொற்று நோய்கள் அல்லாத பிற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான முன்மாதிரி சிகிச்சை முறைகளை உருவாக்குதல் ஆகியவை சிறந்த முறையில் மேம்பாடடைந்து நல்ல பலன்கள் கிடைத்திட வழி வகுக்கும்.

சுகாதார மையங்களுக்கு இன்றியமையாச் சாதனங்கள்

143. இந்த அரசு, இம்மாநிலம் முழுவதிலும் உள்ள, 90 தொடக்கச் சுகாதார மையங்களில், இருபத்து நான்கு மணிநேர மகப்பேறு சிகிச்சை சேவையைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்திற்கொண்டு, மகப்பேறு-குழந்தைகள் நலத் திட்டத்தின் இரண்டாம் நிலையில், இந்த ஏற்பாட்டு முறைக்கு மத்திய அரசு, ஒப்புதல் அளித்துள்ளது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத் தரும். தாய்-சேய் இறப்பு விகிதத்தை மேலும் குறைப்பதற்காக, ஒருங்கிணைந்த அவசர, பேறுகால மருத்துவம் மற்றும் பிறந்த சிசுகளுக்கான மருத்துவப் பேணுகை ஆகியவற்றை, 24 மணி நேரமும் அளிக்க, மாநிலத்திலுள்ள 51 அரசு மருத்துவமனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொலைதூர, பழங்குடியினர் பகுதிகளில் அமைந்துள்ள 50 சுகாதாரத் துணை நிலையங்களுக்கும், 25 தொடக்கச் சுகாதார மையங்களுக்கும் இன்றியமையாச் சாதனங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

144. இந்த அரசு, மொத்தம், 80.48 கோடி ரூபாய் செலவில், 403 சுகாதாரத் துணை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வகை செய்துள்ளதோடு, 104 தொடக்கச் சுகாதார நிலையங்களையும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தியுள்ளது. நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில், மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துக்காக, 1,317.83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இது, 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், 1,652.24 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

145. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் உதித்த, தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக் குழு இயக்கம், ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்களின் முக்கியத் தேவையான பொருளாதாரப் பாதுகாப்பை அளித்துள்ளதோடு மட்டுமல்லாது, அவர்களிடையே

நிலவிய புண்பட்ட மற்றும் சக்தியற்ற மனநிலையை அறவே நீக்கியுள்ளது. தற்போது, 1.93 இலட்சம் சுய உதவிக் குழுக்களில், 32.44 இலட்சம் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத்தரும் என நம்புகிறேன். இந்தப் பெண்கள், 621.92 கோடி ரூபாய் அளவிற்குச் சேமித்து, 1,055.19 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

146. 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மகளிர் திட்டத்திற்கு நாம் 20 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இது, பயிற்சித் திட்டங்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், புதிய சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உதவும். குறைந்த அளவு தொகையைக் கூட சேமிக்க இயலாத கடும் வறுமையில் வாடும் பெண்களுக்கு, ஆதார உதவித் தொகை (seed money) வழங்கப்படுவதன் மூலம், அவர்கள் சுய உதவிக் குழுக்கள் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவர். சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு விற்பனை வசதிகளை உருவாக்கித் தருவதற்கான, செயல் திட்டம் ஒன்றைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 4.74 இலட்சம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1.58 இலட்சம் பெண்கள், சொந்தமாக குறுந்தொழில்களைத் தொடங்க உதவும் வகையில், வாழ்க்கைத் தொழில் மற்றும் திறன் பயிற்சி பெற்றுள்ளனர்.

வறுமையைக் குறைக்க முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

147.2015 ஆம் ஆண்டு வாக்கில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகையின் சதவிகித அளவு பாதியாகக் குறைவதை உறுதி செய்வதே, புத்தாயிரமாண்டு வளர்ச்சியின் ஒரு முக்கிய இலக்காகும். ஆதார ஆண்டான 1990-91ஆம் ஆண்டில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் தொகையின் அளவு, 40.90 சதவிகிதம் என மதிப்பிடப்பட்டிருந்தது. மேற்சொன்ன வளர்ச்சி இலக்கின்படி, இது 2015ஆம் ஆண்டிற்குள் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும். தற்போது மேற்கொண்டுவரும் முயற்சிகளின் பயனாக, 2015 ஆம் ஆண்டுக்கான புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்கு விரைவிலேயே எட்டப்பட்டுவிடும் என நான் நம்புகிறேன்.

148.வறுமையை இன்னும் வேகமாக குறைப்பதை உறுதி செய்ய புதிய உத்தி ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்த உத்தியின் ஒரு பகுதியாக, முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, 2005-2006 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அதிகாரமளித்தல் மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டத்தை மேற்கொள்வதற்காக, உலக வங்கியுடன் விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி அளிக்கும். இத்திட்டம், 15 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும், வறிய குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கு ஆதரவு நல்கும் வகையிலும், கிராம வாழ்வாதார நிதி (village livelyhood fund) ஒன்று ஏற்படுத்தப்படும். வாய்ப்புரிமை இழந்த குடும்பங்களின்பால், தனிக் கவனம் செலுத்தப்படும். மொத்தம் 715 கோடி ரூபாய் செலவில் அமையும் இத்திட்டத்தின் தயாரிப்புப் பணி, முடிவுறும் தருவாயில் உள்ளது. இதற்கு உலக வங்கியின் அனுமதி, கூடிய விரைவில் கிடைத்துவிடும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

சமூகப் பாதுகாப்புறுதி வளையத் திட்டம்

149.சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களைப் பற்றிய விரிவான ஆய்வு ஒன்றை

இவ்வரசு மேற்கொண்டது. மிக வறிய நிலையிலுள்ள 3 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்தத் திட்டத்தின் கீழ், அக்குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு வகை செய்யப்படும். மேலும், மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்கள் பயனடையும் வகையில், உணவுப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு போன்ற பல்வேறு வசதிகள் மற்றும் உரிமைகள் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய, ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். 2005-2006 ஆம் ஆண்டில், 3 இலட்சம் குடும்பங்கள் அனைத்தும் இப்பயனைப் பெறவேண்டும் என்பதே இலக்காகும். மிக வறிய நிலையிலுள்ள பரம ஏழைக் குடும்பங்களுக்கு உதவ, இத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும். மாநிலத்தில் வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கான, இத்தகைய புதிய முயற்சிகளை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் பாராட்டுவர் என நம்புகிறேன்.

தேசிய முன்மாதிரித் திட்டமான சத்துணவுத் திட்டம்

150.நன்கு உருவாக்கப்பட்டு, சீரிய முறையில் செயற்படுத்தப்பட்டுவரும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தற்போது, தேசிய அளவில் ஒரு முன்மாதிரித் திட்டமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் இந்த முன்மாதிரித் திட்டம், நாட்டிலேயே மிகச் சிறந்தது எனப் பாராட்டப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான மொத்த நிதியொதுக்கம்

742.44 கோடி ரூபாய் ஆகும். மதிய உணவு மையங்களில், 74 இலட்சத்திற்கு மேற்பட்ட சிறார்களுக்கு உருளைக்கிழங்கு, வேகவைத்த முட்டை ஒன்று, பயறுகள் ஆகியவற்றைக் கொண்ட ஊட்டச் சத்து நிறைந்த உணவு வாரந்தோறும் வழங்கப்பட்டு, இத்திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வறிய, ஏழ்மையான குடும்பங்களில் இருந்துவரும் சிறார்களிடையே காணப்படும் புரதச்சத்துக் குறைபாடு இதன்மூலம் சரிசெய்யப்பட்டுவிடும். கறிவேப்பிலைப் பொடி அல்லது முருங்கைக்கீரைப் பொடியைச் சத்துணவில், சேர்ப்பதற்கான திட்டம், தமிழ்நாட்டில், தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில், முன்னோடித் திட்ட அடிப்படையில், அறிமுகப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால், சிறார்களிடையே காணப்படும் வைட்டமின்-A குறைபாடு நீங்குவதாகத் தெரியவருகின்ற பயன் மதிப்பீட்டின் அடிப்படையில், இத்திட்டம் அனைத்து மதிய உணவு மையங்களுக்கும் நீட்டிக்கப்படும் என்பதை நான் இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் காக்கும் ஊரக மாணவியர் ஊக்க உதவித் திட்டம்

151.ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குத் தரமான கல்வி, தரமான சொத்துக்கள், வருமானம் ஈட்டுவதற்கான திறன் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை அளிப்பதன் மூலம், அவர்களுக்குச் சமூக, பொருளாதார அதிகார உரிமையை அளிக்க, இந்த அரசு, உறுதி பூண்டுள்ளது. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் அனைத்து ஆதிதிராவிடர் நல மாணவரில்லங்களுக்கும், புதியக் கட்டடம் கட்ட இந்த அரசு ஏற்கெனவே, அனுமதி வழங்கியுள்ளது என்பதை, இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நடப்பாண்டில், 44.10 கோடி ரூபாய் செலவில், 140 புதிய மாணவரில்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன்மூலம், தனியார் வாடகைக் கட்டடங்களில் இதுவரை செயல்பட்டு வந்த மாணவரில்லங்கள் அனைத்திற்கும் நல்ல கட்டடங்களும், வசதிகளும் கிடைக்கும். இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு 2,03,566 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில், 8.82 கோடி ரூபாய் செலவில், 50,600 மிதிவண்டிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில்,



பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுவிடும், வறிய ஆதி திராவிட, பழங்குடியின மாணவிகளின் எண்ணிக்கையைக் குறைக்க, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 'ஊரக மாணவியர் ஊக்க உதவித் திட்டம்' செயல்படுத்தப்பட்டுள்ளது. 6 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் கூடிய, இந்தப் புதுமையான திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிட – பழங்குடியின மாணவிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த பேருதவியாக இருக்கும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்காக, இந்த அரசு, ஏற்கெனவே, பட்டமேற்படிப்புவரை இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன்.

152.2004-2005 ஆம் ஆண்டில், நிலக் கொள்முதல் புதுமைத் திட்டத்தின் வாயிலாக, 7,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் பயனீட்டாளர்கள் பயனடைவர். 2005-2006 ஆம் ஆண்டில், இதே அளவில் பெண் பயனீட்டாளர்கள் பயனடைவர். நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார திட்டங்கள் வாயிலாக, 15 கோடி ரூபாய் மானிய உதவி வழங்கப்பட்டு, 6,000 தனிநபர் பயனீட்டாளர்கள் பயனடைவர். இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், 10 கோடி ரூபாய் மானிய

உதவித் தொகையுடன், 4,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்குப் பயனளிக்கும் வகையில், செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் தாட்கோ மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக, 1.5 இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனீட்டாளர்கள் பயனடைவர். 2005-2006ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 453.91 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

153.பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மை இன மக்களின் நலனுக்கான ஒதுக்கீடு, 2005-2006ஆம் ஆண்டில், 287.23 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமுதாயத்தினர் சமூக பொருளாதார மற்றும் கல்வி வசதி ஆகியவற்றிற்கான அதிகார உரிமை பெறுவதில் தேவையான முயற்சிகளை, இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

154.2005-2006 ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் செலவில் 318 புதிய மாணவரில்லக் கட்டடங்கள் கட்டப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்கென, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 80 கோடி ரூபாய் நிதியொதுக்கம் சேர்க்கப் பட்டுள்ளது. எஞ்சிய தொகை, சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செலவிடப்படும்.

155.பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் முன்னோடித் திட்டம், 24.50 கோடி ரூபாய் செலவில் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். இதனால் 1,26,800 மாணவிகள் பயனடைவர். இந்த இனங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் தொழில் படிப்புகளில் சேர்ந்து இலவசமாகப் பயில இயலும் வகையில், 5.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும் மூன்று முதல் ஆறாம் வகுப்புகளில் பயிலும் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த இந்த இன மாணவியருக்கு, ஊக்க உதவி அளிக்கும் திட்டம், 6 கோடி ரூபாய் நிதியொதுக்கத்துடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2005-2006 ஆம் ஆண்டில், 20.11 கோடி ரூபாய் கூடுதல் செலவில், கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு ஆகியவை

வலுப்படுத்தப்படுவதோடு, அப்பள்ளி மாணவர் இல்லங்களுக்காக புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

அரசுப் பணியாளர் மற்றும்
ஆசிரியர்களுக்குச் சலுகைகள்

156. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசு சிறந்த முறையில் செயலாற்றுவதற்கும், மக்களுக்குச் சிறந்த சேவையாற்றுவதற்கும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் மிகவும் முக்கியம் என்பதை எப்பொழுதும் கருதி வந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் நிலவிய மோசமான நிதி இடர்பாட்டில் இருந்து மாநிலத்தை மீட்பதற்கு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான இவ்வரசு நிதிநிலை மேம்பாடடைந்த பிறகு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சிறந்தப் பணிப் பயன்களை வழங்க வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளது. அக்டோபர் 2004–ல் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல சலுகைகளை அறிவித்தார்கள். இவை அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டன. இந்த அறிவிப்புகள் அரசின் நிதிச் சீர்திருத்தத்தின் கட்டாயத்திற்கும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பிற்கும் இடையே ஒரு புதிய புரிந்துணர்வு உருவாக வழி வகுத்துள்ளது. இந்தப் புதிய புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழக மக்களின் நலனை மேம்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

157. மத்திய அரசு, தனது ஊழியர்களுக்கு ஒவ்வொரு அகவிலைப்படி தவணையையும் வழங்கும் நாளிலிருந்து அகவிலைப்படி தவணையை இவ்வரசு வழங்குவதை இந்தக் கடுமையான நிதி நெருக்கடி மேலும் சிக்கலாக்கியது. அகவிலைப்படி தவணைகளை வழங்குவதில் உள்ள கால இடைவெளியைப் படிப்படியாகக் குறைப்பதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்டோபர் 2004–ல் குறிப்பிட்டிருந்தார்கள். இந்தக் கொள்கை முடிவின் அடிப்படையில் 1.4.2005 முதல் அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத்தில் 3 சதவிகிதமுடைய ஒரு கூடுதல் அகவிலைப்படி தவணை வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இது அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள், குழந்தை நலப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் பொருந்தும். இந்த அகவிலைப்படி தவணை, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் வழங்கப்படும். இதனால் ஆண்டிற்கு 211.83 கோடி ரூபாய் செலவில், அனைத்து 12.33 இலட்சம் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரும், 4.80 இலட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள்.

158.2004 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் நாள் நடந்த பேச்சுவார்த்தையை அடுத்து 25.7.2003–ல் மீண்டும் பணியில் சேர்ந்த அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 வரையான காலம் "வேலை செய்யாத நாட்களுக்குச் சம்பளம் இல்லை" என்ற அடிப்படையிலும், 5.7.2003 முதல் 24.7.2003 வரையான காலம் பணிக் காலமாகவும் கருதப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் அறிவித்தார்கள். நீதிபதிகளின் குழு அளித்த தீர்ப்பிற்குப் பிறகு மேலும் சில அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியில் மீண்டும் சேர்ந்துள்ளது அரசின் கவனத்திற்கு வரப்பட்டு இறுதி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய பணியாளர்களின் பணிக்கு வராத கால அளவை வேலை நாட்களாகக் கருத வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டன. பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியில் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவிர ஏனையோருக்கும், ஏற்கெனவே ஆணைகள் வழங்கப்பட்ட பணியாளர்களைப் போன்றே பணிக்கு வராத காலம் வேலை நாட்களாக ஒழுங்கு செய்யப்படும் என்று நல்லெண்ண அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். இது பணியில் இருந்து ஓய்வுபெறும் இத்தகைய சில பணியாளர்களுக்கு முழு ஓய்வூதியப் பயன்களைப் பெற உதவும்.

159. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சுகாதார நல நிதித் திட்டத்தை மேலும் பல மருத்துவமனைகளையும், நோய்களையும் சேர்த்து விரிவாக்க வேண்டும் என்று அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கோரி வருகிறார்கள். மருத்துவ வசதிகளின் அடிப்படையில் கூடுதல் மருத்துவ மனைகளைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1.4.2005 முதல் அமலுக்கு வரும் வகையில் விரிவாக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியலும், நோய்களும் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசுப் பணியாளர்கள் சுகாதார நல நிதித் திட்டத்தின் கீழ்வரும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உள்ளது போன்ற பொதுவான மருத்துவமனைகள் மற்றும் நோய்களின் பட்டியலை தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் சுகாதார நலநிதித் திட்டத்திற்கும் வழங்க வேண்டுமென்று ஓய்வூதியதாரர்களின் சங்கங்களும் கோரி வருகின்றன. இந்த கோரிக்கையை இந்த அரசு கவனத்துடன் பரிசீலித்து 1.4.2005 முதல் அமல்படுத்த உத்தேசித்துள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்குச் சலுகை

160.1.1.1996 முதல் 31.3.1998 வரையில் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணிக்கொடை, ஓய்வூதியத்தினை ஒப்படை செய்து பணம்பெறும் திட்டம் மற்றும் ஏனைய பயன்களின் 60 சதவிகித நிலுவைத் தொகையை 2003ஆம் ஆண்டுக்குப் பிறகு வழங்கும் வகையில் முந்தைய அரசு தள்ளிவைத்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதற்குப் பிறகு, மாநில அரசு மாபெரும் நிதி நெருக்கடியில் மூழ்கியது. இந்த அரசு இத்தகைய நிலைமையைச் சரிசெய்து 60 சதவிகித நிலுவைத் தொகையை வட்டியுடன் சேர்த்து ஒவ்வொன்றும் 20 சதவிகிதமுடைய 3 ஆண்டுத் தவணைகளில் 2004-2005ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்படும் வகையில் 2004ஆம் ஆண்டு ஜூலையில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன்படி, அடுத்த தவணைத் தொகை 2005-2006 ஆம் நிதியாண்டிலும், மூன்றாவது மற்றும் கடைசித் தவணைத் தொகை 2006-2007ஆம் நிதியாண்டிலும் வழங்கப்படும். ஓய்வூதியதாரர்களின் வயது முதிர்வைக் கருத்தில் கொண்டு, நிதிச்சுமை அதிகம் ஏற்படினும், கருணை அடிப்படையில், மீதமுள்ள 40 சதவிகித தொகை முழுவதையும் 2005-2006 ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்தமாக வழங்குமாறு பலதரப்பட்ட ஓய்வூதியதாரர்களின் சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. நமது தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், கருணை அடிப்படையில் அனைத்து நிலுவைத் தொகையும் 2005 ஜூலை தொடங்கி ஒரே தவணையில் 2005-2006ஆம் நிதியாண்டில் வழங்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதற்கு 2005-2006ஆம் ஆண்டில் 583.51 கோடி ரூபாய் செலவு பிடிக்கும்.

161.கடைநிலைகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களின் பணி நிலைமையை மேம்படுத்துவதில் நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் எப்பொழுதும் ஆர்வம் கொண்டுள்ளார்கள். தற்பொழுது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக்கு முந்தைய நிலையில் உள்ள குழந்தைகள் அங்கன்வாடிக்கும், பள்ளிக்குச் செல்லும் வயதுடைய குழந்தைகள் பள்ளிக்கும் செல்கிறார்கள். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. அங்கன்வாடியிலுள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் மூலம் இது செயல்படுத்தப் படுகிறது. சத்துணவுப் பள்ளி மையங்களில் அமைப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் சமையல்காரர்கள் இதைச் செயல்படுத்துகிறார்கள்.

அங்கன்வாடி உதவியாளர்களுக்கு
தொகுப்பூதியம் உயர்வு

162.உதவியாளர்கள் மற்றும் சமையல்காரர் களுக்கு மேம்பட்ட வாழ்க்கைதரத்தை அளிக்கும் வகையில் அவர்களின் தொகுப்பு மதிப்பூதியம் உயர்த்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு மாதமொன்றிற்கு ரூபாய் 450 தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை–I மற்றும் மதிய உணவுத் திட்ட சமையல்காரர்களின் அடிப்படைத் தொகுப்பு மதிப்பூதியத்தில் மேலும் 330 ரூபாய் உயர்த்தப்படும் என்று அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதனால், இத்தகைய பணியாளர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் 1,100 ரூபாய் என்ற அளவிற்கு உயரும். தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு

மாதமொன்றிற்கு 400 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை-II மற்றும் சத்துணவுக் கூடத்தில் உள்ள உதவியாளர்களைப் பொறுத்த வரையில் கூடுதல் மதிப்பூதியமாக மாதம் 290 ரூபாய் வழங்கப்படும். இதனால் இவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சாராசரியாக மாதமொன்றிற்கு 850 ரூபாய் என்ற அளவிற்கு உயரும். அகவிலைப்படி உயர்வு வீதம் இந்த இரண்டு பிரிவினருக்கும் தற்போதைய நிலையிலேயே தொடரும். இது 1.4.2005 முதல் அமலுக்கு வரும். இதற்கு ஆண்டிற்கு 47.97 கோடி ரூபாய் செலவாகும். தொகுப்பூதியம் பெறும் கடைநிலையில் பணியாற்றும் பணியாளர்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்த முக்கிய புதிய நடவடிக்கைகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டம்

163. பணி ஓய்வு பெறும் பொழுது பயன் பெறும் வகையில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நீண்ட நாள் வேண்டுகோளாகும். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் பணியாற்றும் அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் சமையற்காரர்கள் போன்ற ஓய்வூதியம் இல்லாத பணிகளைச் சார்ந்த பணியார்கள் பயன்பெறும் வகையில் ஒரு திட்டம் தயாரிக்கப்படும் என்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004 அக்டோபரில் அறிவித்திருந்தார்கள். ஓய்வூதியத் திட்டம் வழங்க வேண்டும் என்ற நீண்டகாலக் கோரிக்கையை

நிறைவேற்றும் வகையில் இப்பணியாளர்கள் ஓய்வுபெறும் பொழுது ஒட்டு மொத்த தொகை அளிக்கும் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்படி வரையறுக்கப்படாத ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடி பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் போன்ற பணியாளர்களுக்கு அவர்கள் பணி ஓய்வுபெறும் பொழுது அரசு 50,000 ரூபாய் ஒட்டுமொத்த தொகையாக அளிக்கும். தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர் ஒவ்வொருக்கும் அவர்கள் ஓய்வுபெறும் பொழுது அரசு 20,000 ரூபாய் ஒட்டுமொத்த தொகையாக அளிக்கும். இந்த ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டத்தினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள். இத்திட்டம் 1.4.2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

164. பணியில் இருந்து ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் சிறப்பு வருங்கால வைப்புநிதி மற்றும் பணிக்கொடை திட்டத்திற்கான அரசின் பங்களிப்பை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் மற்றொரு கோரிக்கையாகும். இவர்களின் அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்படும் என்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.10.2004 அன்றே குறிப்பிட்டிருந்தார்கள். அதன்படி 1.4.2005 முதல் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை திட்டத்திற்கான அரசின் பங்களிப்பு, அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போன்று 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதற்கான செலவு, ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நிதிநிலைமைக் கணிப்புகள்

165. இப்போது இந்த மாமன்றத்தின் முன் நான் 2004-2005 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளை வைக்க விழைகிறேன். 2003-2004ஆம் ஆண்டில் எய்திய நிதி நிலைத் திருப்புமுனை சாதனையைத் தொடர்ந்து, 2004-2005 ஆம்

ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் 3,336.43 கோடி ரூபாயாக இருந்த வருவாய்க் கணக்குப் பற்றாக்குறை, 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 1,687.39 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கு செலவுகள் அதிகரித்துள்ள போதிலும், இந்த அரசு, மேற்கண்ட வியத்தகு சாதனையை எய்தியுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 590.47 கோடி ரூபாயாக இருந்த மொத்தப் பற்றாக்குறையும், 2004-2005ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 124.98 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

166. 2004-2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 24,792.30 கோடி ரூபாயாக இருந்த மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள், 2004-2005ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 27,049.40 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, 2003-2004



ஆம் ஆண்டுக் கணக்குகளை ஒப்பிடுகையில், 14.10 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்தத் தனிச் சிறப்புமிக்க சாதனையை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் முழு மனதுடன் வரவேற்பர் என நம்புகிறேன். முக்கியமாக, மாநிலச் சொந்த வரிவருவாயின் கீழ், அதிக வரவுகள் கிடைத்ததன் காரணமாக, வருவாய்க் கணக்கிலான மொத்த வரவுகள் அதிகரித்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் செலவு, 28,128.73 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், இது 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 28,736.79 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய ஆண்டுக் கணக்குகளுடன் ஒப்பிடுகையில், 13.71 சதவிகித உயர்வைக் காட்டுகிறது.

167. மின்சார மானியம், உணவு மானியம் முதலியவை உட்பட, வறியோர் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த செலவுகள் அதிகரித்ததாலும், சுனாமி தொடர்பான நிவாரணப் பணிகள் குறித்த செலவுகளாலும், வருவாய்க் கணக்கில் செலவு உயர்ந்துள்ள போதிலும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. வறியோர் நலனுக்கான ஒதுக்கீடு உயர்த்தப்பட்டிருப்பினும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, கணிசமான அளவிற்குக் குறைந்துள்ள மகத்தான இந்தச் சாதனையை, இந்தப் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பாராட்டுவர் என நம்புகிறேன். பணக் கையிருப்பு மேலாண்மை, இந்த ஆண்டில் சிறப்பாகக் கையாளப்பட்டது. மேலும், பொறுப்பேற்றுக் கொண்ட செலவுகளுக்குத் தொகை பட்டுவாடா செய்யப்படாத சிக்கலான நிலைமை, பழங்கதையாகிவிட்டது. தொலைநோக்குச் சிந்தனைமிக்க தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களைத் தவிர வேறு எவராலும் இந்த மகத்தான திருப்புமுனைச் சாதனையைப் படைத்திருக்க முடியாது.

168. 2005-2006ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள், இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் 30,251.53 கோடி ரூபாயாக இருக்க, வருவாய் கணக்கில் செலவு 31,655.53 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 1,404 கோடி ரூபாயாக இருக்கும். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, மொத்த வருவாய் வரவுகளில் 4.64 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். 2003ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை முன்கூட்டியே எய்தும் நிலையில் நமது மாநிலம் உள்ளது என்பதையே இது காட்டுகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் அரசின் நிதிப் பற்றாக்குறை 6,350.57 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், கடந்த காலங்களில், வரவு–செலவுத் திட்டம் சாரா வகையில், கடன்கள் பெற்று, செலவு செய்யப்பட்ட 232.30 கோடி ரூபாயும் அடங்கும். 2005-2006ஆம் ஆண்டு

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதிப் பற்றாக்குறை, (முந்தைய காலச் செலவு நீங்கலாக) மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.86 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

வரிச் சீர்திருத்தங்கள்

மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax - VAT)

169. மாநில விற்பனை வரிக்கு மாற்றாக, மாநில மதிப்புக் கூட்டு வரியை, 1.4.2005 முதல் நடைமுறைப்படுத்துவது என்ற முடிவை, மத்திய அரசும், மாநில நிதியமைச்சர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவும் எடுத்துள்ளதை மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள். 1999 ஆம் ஆண்டு நவம்பர் 16, அன்று அப்போதைய மத்திய நிதியமைச்சரால் கூட்டப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து முதலமைச்சர்களின் மாநாட்டில், மாநில மதிப்புக் கூட்டு வரியைத் தக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பின், அமல்படுத்துவதற்கு மாநிலங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவைச் செயல்படுத்துவதற்காக, அதிகாரம் அளிக்கப்பட்ட மாநில நிதியமைச்சர்களின் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் பின்னர், அக்குழு அடிக்கடி கூட்டப்பட்டு, மாநில அளவில் மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்துவதற்கான படிப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

170. மாநில மதிப்புக் கூட்டு வரியை 1.4.2003 முதல் அமல்படுத்துவதென முதலில் முடிவு செய்யப்பட்டது. எனினும், இம்முடிவு தள்ளி வைக்கப்பட்டது. மதிப்புக் கூட்டு வரி முறையில் பல முக்கிய அம்சங்களை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தியுள்ள தமிழகத்தில், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதனால், பெருமளவில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று, அதிகாரமளிக்கப்பட்டக் குழுவின் கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் மாநிலம் பெரும் நிதி இடர்பாட்டினை எதிர்கொள்ள நேரிடும் எனவும் இக்கூட்டங்களில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

171. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதனால், மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏதேனும் ஏற்பட்டால் அதனை மத்திய அரசு 2005-2006ஆம் ஆண்டில் 100 சதவிகிமும், 2006-2007இல் 75 சதவிகிதமும், 2007-2008இல் 50 சதவிகிதமும் ஈடுசெய்யும் என மத்திய நிதியமைச்சர், நவம்பர் 2004இல் அறிவித்தார். மதிப்புக் கூட்டு வரி முறையில் வருவாய் ஒரு நிலைப்படும் வரைக்கும், இழப்பீட்டுத் தொகை முழு அளவில் வழங்கப்பட வேண்டுமென நாம் கேட்டோம். ஆனால், மதிப்புக் கூட்டு வரியால் ஏற்படும் இழப்பீடு தொடரும் காலம் வரை, முழு இழப்பீட்டுத் தொகையைத் தொடர்ந்து தர மைய அரசு ஒத்துக்கொள்ளாத நிலையில், மாண்புமிகு மேற்கு வங்காள நிதியமைச்சரின் தலைமையின் கீழான மாநில நிதியமைச்சர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, மேற்கூறிய நிதி இழப்பை ஈடுசெய்யும் ஏற்பாட்டின் அடிப்படையில், பெரும்பான்மை முடிவாக 1.4.2005 முதல் அனைத்து மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்துவதற்கான கால அட்டவணையை தயாரித்துள்ளது. அமல்படுத்தப்படவுள்ள மதிப்புக் கூட்டு வரி முறையின் சிறப்பு அம்சங்களை விளக்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, 30.1.2005 அன்று சென்னையிலும் ஒரு கூட்டத்தை நடத்தியது.

172. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கான தேசிய அளவில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்காக உறுதியான முயற்சிகள் ஒருபுறம் எடுக்கப்பட்டபோதிலும் மதிப்புக் கூட்டு சங்கிலித் தொடரில் (value chain) வரக்கூடிய பல்வேறு பிரிவினர் எவ்வாறு பாதிக்கப்படுவர் என்பதில் சில ஐயப்பாடுகளும் எழுகின்றன. மத்திய அரசுடன் இணைந்து மாநில நிதியமைச்சர்களைக் கொண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு உருவாக்கியுள்ள மதிப்புக் கூட்டு வரியின் முக்கிய அம்சங்களை விளக்குவது இன்றியமையாததாகும். வரி மீது வரி என்பதைத் தவிர்க்க வேண்டியது மாநில மதிப்புக் கூட்டு வரி முறையின் அடிப்படை அம்சமாகும். பலமுனை வரி விதிப்பு முறையில், ஏற்கெனவே வரி செலுத்தப்பட்ட பொருளுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட வரியினையும் உள்ளடக்கி ஒவ்வொரு முனையிலும் வரி விதிக்கப்படும். ஆனால், மதிப்புக் கூட்டு வரி முறையில் ஒவ்வொரு விற்பனை நிலையிலும் அந்தந்த நிலைகளில் கூட்டப்பட்ட மதிப்பின் மீது மட்டுமே வரி விதிக்கப்படுகிறது. மேலும், முந்தைய நிலையில் செலுத்தப்பட்ட வரியினைக் கழித்துக் கொள்ளமுடியும். இந்த கோட்பாட்டின் அடிப்படையில்தான் மாநில மதிப்புக் கூட்டு வரிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

173. மாநில மதிப்புக் கூட்டு வரி முறை அமல்படுத்தப்படும்பொழுது, கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, மறு விற்பனை வரி போன்ற வரிகள் அனைத்தும் நீக்கப்படும். செலுத்தப்படும் நுழைவு வரி முழுவதும் மதிப்புக் கூட்டு வரியின் கீழ் செலுத்த வேண்டிய வரியில் முழுமையாகச் சரிக்கட்டிக் கொள்ளப்படும். நாடு முழுவதும் ஒரே பொதுவான வரி விகிதம் இருக்கும். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களுக்கு 4 சதவிகித வரியும், இதரப் பொருட்களுக்கு 12.5 சதவிகித வரியும் இருக்கும். தங்கம், வெள்ளி, நகைகள் போன்றவற்றின் மீது சிறப்பு விகிதமாக ஒரு சதவிகித வரி விதிக்கப்படும். பெட்ரோல், டீசல், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் (IMFS) போன்ற சில பொருட்கள், மதிப்புக் கூட்டு வரி முறையின் ஆய்வு வரம்பிலிருந்து எடுக்கப்பட்டு, அவைகளுக்குச் சிறப்பு விகிதங்களில் வரி விதிக்கப்படும்.

174. வரி விலக்கிற்கான பொருட்களைப் பொருத்தமட்டில், அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, முதலில் 36 பொருட்களைக் கொண்ட ஒரு பட்டியலை தெரிவித்தது. அப்பட்டியலில், தற்பொழுது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் வரி விலக்களிக்கப்பட்ட சில முக்கிய பொருட்கள் சேர்க்கப்படவில்லை. பின்னர், நமது கோரிக்கையை ஏற்று, அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, 46 பொருட்களை உள்ளடக்கிய கூடுதல் பட்டியலை அனுப்பி, அதில் மாநிலங்கள் 10 பொருட்களை மட்டும் தேர்வு செய்து கொள்ளலாமென தெரிவித்தது. இவ்வாறாக, தமிழ்நாட்டிற்கு தனித் தன்மை வாய்ந்த சில பொருட்கள், விலக்களிக்கப்பட்ட பட்டியலிலிருந்து விடுபட்டுவிட்டன. தமிழ்நாடு பொது விற்பனை வரியின் கீழ் விலக்களிக்கப்பட்ட சில பொருட்களுக்கு 4 சதவிகிதம் அல்லது 12.5 சதவிகிதம் மதிப்புக் கூட்டு வரியின் கீழ் வரி விதிக்க வேண்டியிருப்பது நமக்குக் கவலை அளிக்கிறது. பெரும்பான்மை முடிவின் காரணமாக, அதிகாரமளிக்கப்பட்ட குழு, விலக்களிப்பிற்கான 46 பொருட்களின் கூடுதல் பட்டியலில் 10 பொருட்களை தெரிவு செய்து கொள்ளலாம் என எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி விட்டதால் தமிழ்நாட்டில் விலக்களிக்கப் பட்டுள்ள சில முக்கியப் பொருள்கள் விடுபட்டுள்ளன. தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசியைக்கூட வரி விலக்களிக்கப்படும் பொருள்களின் பட்டியலில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு சேர்க்கவில்லை. அரிசியை வரி விலக்களிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டுமென நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். இறுதியாக, உணவு தானியங்களை 0 சதவிகிதம் வரிக்குட்பட்ட இனத்தில், ஒரு ஆண்டிற்கு மட்டும் வைத்துக் கொள்ள ஜனவரி 2005--ல், மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட அதிகாரமளிக்கப்பட்ட குழு இசைவளித்தது. இந்த முடிவு ஓராண்டிற்கு பிறகு ஆய்வு செய்யப்படும் என அறிவித்துள்ளது.

175. மதிப்புக் கூட்டு வரி முறையில், ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்புக் கூடுதலுக்கு வரி விதிக்கப்படுவதால், மாநிலத்திற்குள் செலுத்தப்பட்ட வரியைக் கழித்துக்கொள்ள வகை செய்யப்பட வேண்டும். மாநிலத்திற்குள் ஒரு பொருளைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களின் மீது கொள்முதலின் போது செலுத்தப்பட்ட வரி அனைத்தையும், அப்பொருளின் விற்பனையின்போது செலுத்தப்பட வேண்டிய வரியில் இருந்து கழித்துக் கொள்ள வகை செய்யப்பட வேண்டும். இவ்வரியைக் கழிப்பதாலும், கூடுதல் விற்பனை வரி, மேல்வரி, மறு விற்பனை வரி ஆகியன நீக்கப்படுவதாலும், குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்படும் வருவாய் இழப்பை, பல கட்டங்களில் ஏற்படும் மதிப்புக் கூடுதல்களுக்கு விதிக்கப்படும் வரியின் வாயிலாக ஓரளவு ஈடுசெய்ய இயலும். ஆனாலும், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதனால், தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவிற்கு நிகர வருவாய் இழப்பு இருக்கும் என்பதே எங்கள் கருத்தாகும். இதன் காரணமாகவே, வருவாய் இழப்பிற்கு முழுப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையில், தகுந்ததொரு இழப்பீட்டுக் கொள்கை வகுக்கப்படல் வேண்டுமென மாநில அரசின் சார்பாக, வலியுறுத்திக் கூறப்பட்டது. மத்திய அரசு இழப்பீட்டுத் தொகையை முதல் ஆண்டில் 100 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 75 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டில் 50 சதவிகிதமும் அளிக்குமென தெரிவித்துள்ளது. முதல் ஆண்டில் ஏற்படும் இழப்பு முழுவதுமாக ஈடுசெய்யப்பட்டாலும், இரண்டாம் ஆண்டு முதற்கொண்டு ஏற்படும் வருவாய் இழப்பு கணிசமாக இருக்கும். இது தொடர்ந்து நமக்குக் கவலை தரக்கூடிய அம்சமாக உள்ளது.

176. சிறு வணிகர்கள் கணக்குகளைப் பராமரித்தல், வரி மதிப்பீட்டிற்கு உட்படுதல் போன்ற சிக்கல்களுக்கு உட்படுத்தப்படாத வகையில், மதிப்புக் கூட்டு வரி முறையில், தமிழ்நாடு பொது விற்பனை வரிச்

சட்டத்தின் கீழ் வணிகராகப் பதிவு செய்துகொள்ள வேண்டிய விற்பனைத் தொகை வரம்பு தற்பொழுது நடைமுறையில் உள்ள ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், சுமார் 76,000 வணிகர்கள் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள். இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 55 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படக்கூடும் என்றாலும், சிறு வணிகர்களுக்கு உதவும் பொருட்டு மதிப்புக் கூட்டு வரி முறையில், இந்த ஏற்பாட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், ஆண்டிற்கு ஐம்பது இலட்சம் ரூபாய் வரை மொத்த விற்பனைத் தொகை உள்ள அனைத்து மறு விற்பனையாளர்களும் தங்களது விற்பனைத் தொகைக்கு ஒரு சதவிகித வரி மட்டும் செலுத்தக் கூடிய, இணக்க வரி விதிப்பு முறையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், மேலும் 74,000 வணிகர்கள் பயன்பெறுவர். இவ்வாறாக, சிறு வணிகர்களுக்குப் பயனளிக்கும் எளிமையான முறை மதிப்புக் கூட்டு வரிமுறையில் உள்ளது. அத்துடன், அனைத்து வணிகர்களும் தாங்களே சுய வரிவிதிப்பு செய்துகொள்ளும் வசதி அளிக்கப்பட்டு, இவ்வரி முறையை அனைவரும் எளிதில் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வழிவகை செய்யப்படும். மதிப்புக் கூட்டு வரி முறையில் உத்தேசிக்கப்பட்ட கடுமையான தண்டனை விதிமுறைகள் கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள அதே விதிமுறைகள் பின்பற்றப்படும்.

177. மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைக்கு கொண்டுவரப்படும் நாளுக்கு முற்பட்ட பன்னிரெண்டு மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்டு, நடைமுறைக்கு வரும் நாளில் ஆரம்ப இருப்பாக இருக்கும் பொருட்களுக்குப் பொது விற்பனை வரிச் சட்டத்தில் ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரி, (set off) கழித்துக் கொள்ளப்படும். மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு கொள்முதல் செய்யப்பட்ட மூலதனப் பொருட்களுக்கும் இடுபொருளின் மீது செலுத்தப்பட்ட வரி வரவு (input tax credit) வசதி அளிக்கப்படும். இது உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் அளிக்கப்படும். மாநிலத்தில் செலுத்தப்பட்ட உள்ளூர் வரி மற்றும் மத்திய விற்பனை வரி, ஆகியவற்றிற்கு வரி ஈடுசெய்துகொள்ளும் வசதி (set off) அளிக்கப்படும். மதிப்புக் கூட்டு வரி முறையில் கூடுதலாக செலுத்தப்பட்ட இடுபொருள் மீதான வரி வரவு (input tax credit) திருப்பி அளித்தல் உள்ளிட்ட வரியை திருப்பி அளிக்கும் ஏற்பாடு ஒரு சிறப்பு அம்சமாகும்.

178. மதிப்புக் கூட்டு வரிமுறை, வரி அமைப்பில் ஒரு பெரிய சீர்திருத்தம் என்பதால், அதன் முக்கிய அம்சங்களை நான் உங்களுக்கு விளக்கியுள்ளேன். சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பினரிடையேயும், இதுபற்றிய தகுந்ததொரு ஒருமித்த கருத்தை உருவாக்கிட வேண்டியது அவசியமாகும். நமது அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி ஆகியவற்றில் மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆளுநர் உரையில், மாநில மதிப்புக் கூட்டு வரியை 1.4.2005 முதல் அமல்படுத்தும் எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தாலும் கூட, இவ்வரி முறை மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமாதலால், தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு வணிகர்கள், சிறு வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோரை அரவணைத்துச் செல்ல வேண்டியது இன்றியமையாததாகும்.

179. மேலும், மாநில மதிப்புக் கூட்டு வரியானது, மாநிலத்தின் முழு ஆளுகைக்குட்பட்ட விற்பனை வரிக்கு ஒரு மாற்று ஏற்பாடாகும். மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்துவதாக இருந்தால், மாநிலத்திற்குள் அனைத்து தரப்பினரிடையே ஒரு கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டியது அரசின் கடமையாகும். மதிப்புக் கூட்டுவரி முறையின் முக்கிய அம்சங்களை இங்கு நான் எடுத்துரைத்திருக்கிறேன். அத்தகைய ஒருமித்த கருத்தை எய்துவது நமது பெருமுயற்சியாகும். அதன் பின்னரே, மாநில மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கான சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில், மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்புக் கூட்டு வரியைப் பற்றிய தங்களது கருத்துகளை தெரிவித்தால், அது அரசின் முயற்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

ஏனைய வரிகள்

180. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பனை செய்வதற்காக, இம்மாநிலத்திலுள்ள தனியார் மின் திட்டங்களில் மின்உற்பத்திக்கு எல்.எஸ்.ஹெச்.எஸ். (Low Sulphur Heavy Stock) பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொருட்களுக்கான நுழைவு வரிச் சட்டத்தின் கீழ் இதற்கான நுழைவு வரி, 1.12.2001 முதற்கொண்டு 16 சதவிகிதமாகும். இத்தகைய மின்திட்டங்களிலிருந்து மின்சாரத்தை வாங்குகிற தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த வரியை இறுதியாக ஏற்க வேண்டியுள்ளது. இதனால், எரிசக்தியின் கொள்முதல் விலை உயர்வதோடு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மீதான நிதிச் சுமையும் அதிகரிக்கிறது. இந்த வரியின் தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன், 1.4.2002 முதல் 31.3.2003 வரையில் ஓராண்டுக் காலத்திற்கு, இந்த வரி 16 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதத்திற்குக் குறைக்கப்பட்டது. எல்.எஸ்.ஹெச்.எஸ். (Low Sulphur Heavy Stock) மீது மிகக் குறைவாக 3 சதவிகித நுழைவு வரியை 1.4.2003 முதற்கொண்டு தொடர்ந்து செயல்படுத்த தற்போது கருதப்பட்டுள்ளது.

முத்திரைத் தீர்வை

181. வங்கிகள், சொத்துகளைப் பிணையமாகப் பெற்று கடன்கள் வழங்குகின்றன. சில நேரங்களில், இந்தக் கடன்கள் முறையாக திருப்பிச் செலுத்தப்படாததால், இவை பயனளிக்காத சொத்துக்களாக (Non-Performing Assets) ஆகிவிடுகின்றன. இதுபோன்ற பயனளிக்காத சொத்துக்களைப் புனரமைக்கும் வகையிலும், அச்சொத்துக்களைப் புனரமைக்கும் நிறுவனங்களுக்கு மாற்ற ஏதுவாகவும் மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் பிணைய உரிமையை செயலாக்கும் சட்டத்தை (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002) இயற்றியுள்ளது. இத்தகைய சொத்து மாற்றத்திற்கு தமிழ்நாட்டில் 6 சதவிகித முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இந்த உயரளவு முத்திரைத் தீர்வையால் இது போன்ற ஆவணங்கள் தமிழ்நாட்டில் பதிவுக்கு வருவதில்லை. இவ்வாறான ஆவணங்களின் பதிவினை ஊக்குவிக்கவும் மாநிலத்தின் முத்திரைத் தீர்வை வருவாயினை அதிகரிக்கவும், இவ்வாறான உரிமை மாற்றத்திற்கான முத்திரைத் தீர்வை விகிதத்தை 0.1 சதவிகிதமாகக் குறைத்திடவும் அதிகபட்ச முத்திரைத் தீர்வை 1 இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுக் கட்டண விகிதத்தையும் 0.1 சதவிகிதமாகக் குறைத்திடவும் அதிகபட்சக் கட்டணமாக 20,000 ரூபாய் என நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வரிவிதிப்புகளே இல்லாத வரவு–செலவுத் திட்டம்

182. இந்த வரவு–செலவுத் திட்டம், வரி விதிப்புகளே இல்லாத ஒரு வரவு–செலவுத் திட்டம் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன். 2005-2006ஆம் ஆண்டு இறுதியில், ஒட்டுமொத்தப் பற்றாக்குறை, 260.41 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், வரி விகிதங்களில் எவ்வித மாற்றமும் இன்றி, வரி செலுத்துவதற்கான இணக்கமான சூழலை உருவாக்குவதன் மூலமும், இந்தப் பற்றாக்குறை ஈடு செய்யப்படும். மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகளை தரமுடன் மேம்படுத்தும் நோக்கோடும், தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் பயனடையும் வகையிலும் நல்ல பல அரிய திட்டங்களை உள்ளடக்கிய சிறந்ததொரு தொகுப்பை நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்த்துள்ளார்கள். நான் தற்போது அறிவித்துள்ள வளர்ச்சித் திட்டங்களை இம்மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பர் என நம்புகிறேன்.

183. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான செயல் திட்டம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். ஏற்கெனவே எய்தப்பட்ட நிதிச் சமன்பாட்டைப் பேணிக்காத்து, நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைவழிப் பயணிப்பதே இவ்வரசின் முயற்சியாக இருக்கும்.

184. இந்த வரவு–செலவுத் திட்டம் தொடர்பாக, அரிய ஆலோசனைகளையும், உயரிய வழிகாட்டுதல் களையும் நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

185. இந்த வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பெரிதும் உதவிய, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய அலுவலர் குழுவிற்கும், இத்தருணத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

186. இத்துடன், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம் *

சுனாமியால் குழந்தைகளை இழந்தோர் மீண்டும் குழந்தைப்பேறு பெற்றிட இலவச அறுவை சிகிச்சை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
28.2.2005

26.12.2004 அன்று தமிழகத்திலுள்ள கடலோர மாவட்டங்களில் சுனாமி பேரலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கியதின் விளைவாக எட்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிர் இழந்ததுடன், இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் மற்றும் தங்களது அனைத்து வாழ்வாதாரங்களையும் இழந்தனர். இயற்கையின் இந்தக் கடும் சீற்றத்தில் உயிர் இழந்த ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவியும், வீடுகள், உடைமைகள் வாழ்வாதாரங்களை இழந்தோருக்கு மறுவாழ்வு அளிக்க பல்வேறு உதவி தொகுப்புகளையும் எனது ஆணையின் கீழ் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

சுனாமியால் தங்களது பெற்றோர்களை இழந்து நிராதரவான குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற திருமணம் ஆகாத பெண்கள் ஆகியோரின் பாதுகாப்பான எதிர்கால வாழ்விற்கு பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டுள்ளது. நிராதரவான குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகிய ஒவ்வொருவர் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியுதவி, திருமணம் ஆகாத பெண்கள் ஒவ்வொரு பெயரிலும் 3 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியுதவி, மற்றும் குழந்தைகள் காப்பகங்களிலும், அரசு சேவை இல்லங்களிலும் தங்க வைத்துப் பாதுகாப்பாக வளர்த்திட ஏற்பாடு என அனைத்து நடவடிக்கைகளையும் நான் மேற்கொண்டுள்ளேன்.

பல பெற்றோர்கள் சுனாமியின் சீற்றத்திற்குத் தங்களது குழந்தைகளைப் பறிகொடுத்துள்ளனர். சுனாமியின் கொடுமையால் உயிரிழந்த குழந்தைகள் மற்றும் இளம் சிறார்களின் எண்ணிக்கை மட்டும் 2,500-க்கும் மேல் ஆகும். சுனாமி பேரலைகளின் கடும் சீற்றத்திற்கு ஆளாகி, தங்களது வீடுகள், உடைமைகள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்ததுடன், தங்களது உற்றார் உறவினர்களையும் இழந்ததால் ஏற்பட்ட மன உளைச்சலை நீக்கி, வாழ்க்கையில் அவர்களுக்குப் பற்றுதலை ஏற்படுத்தவும், தங்களது செயல்பாடுகளில் நம்பிக்கையை அவர்களுக்கு அளிக்கவும், உளவியலாளர்களை (Counsellors) அனுப்பி, தேவையான உளவியல் ஆலோசனைகளை வழங்கிட நான் நடவடிக்கை மேற்கொண்டேன்.

இந்தக் கலந்தாலோசனைகளின் போது, ஏற்கெனவே குடும்ப நல அறுவை சிகிச்சை – அதாவது, ட்யூபெக்டமி (Tubectomy) செய்து கொண்ட, மகளிர் பலர் சுனாமியில் தங்களது குழந்தைகளை இழந்துள்ளனர் என்பதும், அவர்களில் பலர் தங்களது மன உளைச்சல் நீங்கி வாழ்க்கையில் ஒரு பற்றுதல் ஏற்படவும், தங்களது சந்ததி தொடரவும் தங்களுக்குப் பிள்ளைச் செல்வம் வேண்டும் என்று மிகவும் விரும்புகின்றனர் என்பதும் என் கவனத்திற்கு வந்தது.

இதனை அறிந்ததும் உடனடியாக இது குறித்த விவரங்களைச் சேகரிக்குமாறு நான் ஆணையிட்டேன். அதன் அடிப்படையில், இவ்வாறு குடும்ப நல அறுவை சிகிச்சை – அதாவது, ட்யூபெக்டமி செய்து கொண்ட மகளிர் பலர்,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை தலைமைச் செயலகத்தில் 18.3.2005 அன்று ஜெர்மனியிலுள்ள டோர்னியர் கன்சல்ன்டிங் நிறுவனத்தைச் சேர்ந்த நிருவாகி திரு. ஹினர் ஷ்மெக் சந்தித்துப் பேசினார். அப்போது சென்னையிலுள்ள ஜெர்மன் துணைத்தூதர் திரு. ஹெய்ன்ஸ் கோப், டோர்னியர் கன்சல்ன்டிங் நிறுவனத்தின் சென்னைப் பிரதிநிதி திரு. ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்.

சுனாமியில் தங்களது குழந்தைகளை இழந்த நிலையில், மீண்டும் குழந்தைப்பேறு பெற்றிட ஆர்வத்துடன் இருப்பது கண்டறியப்பட்டது. எனவே, இத்தகையோர் மீண்டும் பிள்ளைப்பேறு பெறும் வகையில், கருப்பாதை மறு இணைப்பு அறுவை சிகிச்சை (Re-canalisation) செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினால், அவர்களுக்கு இந்த மறு இணைப்பு அறுவை சிகிச்சையை அரசு மருத்துவமனைகளில் இலவசமாகச் செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

இத்தகைய பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சை (Re-canalisation) அரசு மருத்துவமனைகளில், சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனையிலும் மட்டுமே தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள், இவ்வளவு தொலைவு வந்து இந்தப் பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏற்படும் சிரமத்தைக் குறைத்து, அருகிலேயே இந்த மருத்துவ வசதியை அவர்கள் பெற்றிடும் வகையில், கூடுதலாக கடலூர் அரசு பொது மருத்துவமனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் இந்த மறு இணைப்பு அறுவை சிகிச்சைகளை அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். இதற்கு வசதியாக, தேவைப்படும் சிறப்பு அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்களையும், உபகரணங்களையும் உடனடியாக அந்த மருத்துவ மனைகளுக்கு அனுப்பிடவும் நான் ஆணைகள் பிறப்பித்துள்ளேன்.

மேலும், இத்தகைய பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சையைத் தனியார் மருத்துவமனைகளிலும் செய்து கொள்ள அனுமதிப்பது எனவும் நான் முடிவு எடுத்துள்ளேன். எனவே, சுனாமியில் குழந்தைகளைப் பறிகொடுத்த மகளிர், பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சையைத் தாங்கள் விரும்புகின்ற தனியார் மருத்துவமனைகளிலும் மேற்கொள்ளலாம். அவ்வாறு தனியார் மருத்துவமனையில் பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு அறுவை சிகிச்சைக்குரிய தொகையான 25,000 ரூபாயை நிதி உதவியாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

ஒருவேளை, குடும்பத்தலைவர் குடும்ப நல அறுவை சிகிச்சை – அதாவது வாசெக்டமி (Vasectomy) செய்து கொண்டிருந்து, அக்குடும்பத்தில் உள்ள குழந்தைகள் சுனாமிக்குப் பலியாகி இருந்தால் அத்தகைய ஆண்களுக்கு குழாய் இணைப்பு மறு அறுவை சிகிச்சை (Re-canalisation) செய்து கொள்ளவும் மேற்சொன்ன உதவிகள் வழங்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் துன்பங்கள் நீங்கி மறுவாழ்வு பெற்றிடவும், மன உளைச்சல் நீங்கி நிம்மதியுடன் வாழ்க்கையைத் தொடரவும் ஒல்லும் வகையெல்லாம் உதவுகின்ற அரசாக எனது அரசு என்றும் விளங்கும்.

□ □ □

நல்லன்போடு வாரி வழங்கிய நெஞ்சங்களுக்கு உள்ளன்போடு நன்றியை உரித்தாக்குகிறேன்

26.12.2004 அன்று தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை, முன் எப்போதும் இல்லாத வகையில் திடீரெனவும், கடும் சீற்றத்துடனும் சுனாமிப் பேரலைகள் தாக்கியதின் விளைவாக கடலோரப் பகுதிகளில் மிகுந்த உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டன. இதனால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களுடைய வீடுகளையும், உடைமைகளையும் இழந்தனர்; நூற்றுக்கணக்கான குழந்தைகள் நிராதரவாயினர். ஒட்டுமொத்தத் தமிழகமே துயரத்தில் மூழ்கியது.

இத்தகைய ஒரு கொடுந்துயரம் மாநில அரசால் மட்டுமன்றி சமுதாயத்தின் ஒட்டுமொத்த துணையோடும் எதிர்கொண்டு வெற்றி கொள்ளப்பட வேண்டிய ஒன்று ஆகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், மறுவாழ்வு வழங்கவும், தமிழக அரசு மேற்கொண்டு வரும் சீரிய பணிகளுக்குத் தாராளமாக நிதி வழங்குமாறு நான் வேண்டுகோள் விடுத்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று, பல்வேறு தரப்பினரும் மகத்தான அளவில் நிதி உதவி வழங்கியுள்ளது எனக்கு மன நிறைவையும், மன நெகிழ்வையும் அளித்துள்ளது. இந்த நன்கொடைகள், நமது நாட்டின் அழிக்க முடியாத ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்பதோடு, நாட்டு மக்களிடையே நிலவும் சகோதரத்துவத்துக்கும் இதுவே ஒரு நல் உதாரணம் ஆகும்.

பல்வேறு மாநில அரசுகள், அரசியல் இயக்கங்கள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வணிகர்கள், திரை உலகத்தினர், பல்வேறு பணியாளர் சங்கங்களைச் சேர்ந்தோர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், இல்லத்தரசிகள், மருத்துவத்துறை சார்ந்தோர் போன்ற சமூகத்தின் பல பிரிவினரும் உள்ளன்போடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு என்னிடம் வாரி வழங்கி உள்ளீர்கள். பலர் என்னிடம் நேரடியாகவே நிதி உதவி வழங்கி உள்ளனர். இன்னும் ஏராளமானோர் அஞ்சல் மூலம் நிதி உதவி வழங்கி உள்ளனர்.

தமிழகத்திலும், இந்தியாவிலும் மட்டுமல்லாமல் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களும் தங்கள் நெஞ்சத்து அன்பையும், பரிவையும் நிதி உதவி மூலம் புலப்படுத்தி உள்ளார்கள். உடலால் பல்லாயிரம் கிலோ மீட்டர் தொலை தூரத்தில் இருந்தாலும், அவர்களது உள்ளம் தாய்த் தமிழகத்தில் வாழும் சகோதர சகோதரிகளுக்காக உருகி இருப்பது என் நெஞ்சை நெகிழச் செய்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு இதுவரை மொத்தம் 137.16 கோடி ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது. இந்த நிதி முழுமையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு இனி பெறப்படுகின்ற நிதி, இயற்கை இடர்பாடுகளால் பாதிப்புக்கு உள்ளாகும் மக்களுக்கும், பல்வேறு இன்னல்களுக்கு இலக்காகும் நலிவுற்ற மக்களுக்கும் மற்றும் ஏழை எளிய மக்களுக்கும் நிதி உதவி வழங்கிடப் பயன்படுத்தப்படும். இதற்கு உதவிடும் வகையில் தயாள சிந்தனையோடு நலிந்த மக்கள் மீது பரிவு காட்டுகின்ற பண்பாளர்களும், கொடை உள்ளம் படைத்தவர்களும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தொடர்ந்து நிதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆழிப் பேரலையால் அவலத்திற்கு உள்ளான மக்களுக்கு ஆதரவு அளித்து அன்புக் கரம் நீட்டி வாரி வழங்கிய ஒவ்வொருவருக்கும் எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நல்லன்போடு உதவிய உங்கள் அனைவருக்கும் உள்ளன்போடு நான் நன்றி உரைக்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

எச்ஐவி இறப்புகளைக் குறைத்திட எச்ஐவி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப்பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் எச்ஐவி பாசிட்டிவ் என்று கண்டறியப்பட்டுள்ள குடும்பங்களில் எச்ஐவி தொடர்பான இறப்புகளைக் குறைத்திடவும், குழந்தைகள் ஆதரவற்றவர்களாக ஆக்கப்படுவதைத் தடுத்திடவும், தமிழ்நாடு அரசு, இங்கிலாந்து நாட்டின் குழந்தைகள் மூலதன நிதி நிறுவனத்துடன் இணைந்து "தமிழ்நாடு எச்ஐவி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப் பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்கும் திட்டத்தை" செயல்படுத்திட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் எச்ஐவியால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவச் சிகிச்சை அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் எச்ஐவி சிகிச்சையை முன்வந்து மேற்கொள்ளவும், அதுகுறித்த விழிப்புணர்வு சமுதாயத்தில் ஏற்படவும் இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும்.



இதற்கான ஒப்பந்தம் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. தமிழ்நாடு அரசின் சார்பாக சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைச் செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத் இ.ஆ.ப., அவர்களும், இங்கிலாந்து நாட்டின் குழந்தைகள் மூலதன நிதி நிறுவன அமைப்பின் சார்பில் அதன் காப்பாளர் திரு.கிறிஸ் கூப்பர் ஆன் (Mr.Chris Cooper-Hohn. Trustee of the Children's Investment Fund Foundation, London) அவர்களும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் 1,000 நபர்களுக்கு கூட்டு மருந்து சிகிச்சை அளிப்பது, 4,000 நபர்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் தருவது, 4,000 நபர்களுக்கு சிடி 4 அளவு பரிசோதனை செய்வது, திட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது, மருத்துவ ஆராய்ச்சித் துறையின் அண்மைக் கால கண்டுபிடிப்புகள் பற்றி கருத்தரங்குகள் நடத்துவது, அரசு சாரா அமைப்புகள் மூலம் சமுதாயப் பணிகள் மேற்கொள்வது, எச்ஐவி பாதிப்புக்குள்ளானோர் ஒருங்கிணைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைப்புகளை மேற்கொள்வது ஆகிய பணிகள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கான 7.96 கோடி ரூபாய் நிதியை இங்கிலாந்து நாட்டின் லண்டனில் உள்ள குழந்தைகள் மூலதனம் நிதி நிறுவனம் வழங்கும். இதனைச் சிறந்த முறையில் செயல்படுத்திடத் தேவையான மருத்துவர்களையும், ஏனைய அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு அரசு வழங்கும். இத்திட்டம் மூன்றாண்டு காலம் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு அரசின் சார்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் இயங்கும். இத்திட்டம், சேலம், திருநெல்வேலி மற்றும் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என்.தளவாய்சுந்தரம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எஸ். விஜயகுமார் மற்றும் Solidarity and Action Against the HIV Infection in India-SAATHI அமைப்பினைச் சார்ந்த திருமதி. சுபா ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

மகளிர் விடுதலைச் சுடரை முன் எடுத்துச் செல்லுங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் "சர்வதேச மகளிர் தின" வாழ்த்துச் செய்தி

'**சர்வதேச மகளிர் தினம்**', உலகெங்கிலும் உள்ள மகளிரும், மகளிர் அமைப்புகளும் தங்களுடைய நாடு, இனம், மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு, சமத்துவம், நீதி, கண்ணியம், வளர்ச்சி ஆகிய தங்களது இலட்சியங்களை எய்திட தங்களை மறு அர்ப்பணம் செய்து கொள்கிற ஒரு தினம் ஆகும்.

மகளிருக்கு நியாயமான வாய்ப்புகள் கிடைக்கப் பெற வேண்டும் என்பது என்னுடைய நெஞ்சுக்கு நெருக்கமான ஒரு கொள்கையாகும். அனைத்துப் பொதுக் கொள்கைகளுமே, மகளிர் தங்களது உரிமைகளையும், அதிகாரங்களையும் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவனவாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை ஆகும். கொள்கைகளை வகுத்து, திட்டங்களைச் செயல்படுத்தும்போது, மகளிர் பிரச்சினைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பது எப்போதுமே என்னுடைய முயற்சியாக இருந்து வந்துள்ளது. இதுவே, தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கம், நாட்டிலேயே முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அனைத்து மகளிர் அதிரடிப்படை, அனைத்து மகளிர் காவலர் அணி ஆகியவற்றை உருவாக்கியதற்கும், மகளிருக்கான தொழிற்பேட்டைகள் போன்ற பல முன்னோடித் திட்டங்களை நான் அறிமுகப் படுத்தியதற்கும், மகளிரிடையே நம்பிக்கை உணர்வையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்திட மகளிருக்கான சேவைகளின் தன்மையை உயர்த்தி பல்வேறு நடவடிக்கைகளை நான் மேற்கொண்டதற்கும் ஆதாரச் சுருதியாக விளங்கியது. தமிழ்நாட்டிலுள்ள தாய்மார்களுக்கும், பெண் இனத்திற்கும் முன் எப்போதும் இல்லாத வகையிலான ஒரு முக்கியத்துவத்தை வழங்கும் வகையில், குழந்தைகளின் தலைப்பெழுத்தாக அந்தக் குழந்தையுடைய தாயின் பெயரையும் வைத்துக் கொள்ள நான் ஆணையிட்டேன்.

சம வாய்ப்புகளும், நியாயமான சந்தர்ப்பங்களும் அளிக்கப்படுமேயானால், எல்லாத் துறைகளிலுமே பெண்கள் ஆண்களை விஞ்சிவிட முடியும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கையாகும். ஆண்களின் கோட்டைகள் என இதுவரை கருதப்பட்டு வந்த பல துறைகளில் இன்றைக்கு மகளிர் வியத்தகு சாதனைகள் பல படைத்து வருவதை அன்றாடம் நாம் கண்டு வருகிறோம். இந்தச் சாதனையின் விளைவாகப் பிறந்த புதிய நம்பிக்கையை ஆக்கப்பூர்வமான வழிகளில் மேலும் வலுப்படுத்த, மகளிர் விடுதலைச் சுடரை முன் எடுத்துச் சென்று, மிகவும் நலிந்த, உரிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறாத தங்கள் சகோதரிகளின் முன்னேற்றத்திற்கு தங்களுடைய அறிவு, திறன், ஆற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, எனது அனைத்து சகோதரிகளுக்கும் என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சோதனைகளும், சவால்களும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் சமத்துவம், கண்ணியம், வாய்ப்பு மற்றும் வாழ்க்கையின் முழுமையான வளங்களைப் பெறுவதற்கான உரிமை ஆகியவற்றைப் பெற்றிட நம்மை நாமே மறு அர்ப்பணம் செய்து கொள்வோமாக!

சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு பன்னாட்டுத் தரச் சான்றிதழ்

மிகச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்ற முதன்மை நிறுவனங்களை ஆய்வு செய்து தரம் மற்றும் சான்றினை நிர்ணயிக்கும் உலகளாவிய அமைப்பான, ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் The International Organisation for Standardization & Certification அமைப்பு, உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சையையும், மருத்துவக் கல்வி முறையையும் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனைக்கு ISO 9001 : 2000 என்னும் பன்னாட்டுத் தரச் சான்றிதழை வ்ழங்கி உள்ளது. இச்சான்றைப் பெற்றதன் மூலம் சென்னை மருத்துவக் கல்லூரியும் அரசு பொது மருத்துவமனையும் உலகளாவிய அங்கீகாரமும், மிகச் சிறந்த மருத்துவ சேவை வழங்குகின்றது என்பதற்கான சான்றும், மிகவும் சிறப்பான உயர்தர மருத்துவக் கல்வி வழங்கப் படுகின்றது என்பதற்கான ஒப்புதலும் பெற்று பெருமை அடைந்துள்ளது.

ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்ற உலகளாவிய நிறுவனமான The International Organisation for Standardization & Certification என்னும் அமைப்பு, உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சையும், கல்வி முறையையும் வழங்குவதன் அடிப்படையில் சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ISO 9001 : 2000 என்னும் பன்னாட்டுத் தரச் சான்றிதழை வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தச் சான்றிதழை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள் வழங்கினார்.

இந்த பன்னாட்டுத் தரச் சான்றிதழ், அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கிட அயராது பாடுபட்டு வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடின உழைப்பிற்கும், மேன்மை சிந்தனைக்கும் கிடைத்திருக்கும் வெற்றி ஆகும். ✱

பல்வேறு துறைகளின் பயன்பாட்டுக்கென 52 புதிய வாகனங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரித் துறை, சிறுதொழில் துறையின் மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகிய துறைகளின் பயன்பாட்டுக்கென மொத்தம் 52 புதிய வாகனங்களை வழங்கினார்கள்.

வணிகவரித்துறை

அரசுக்குப் பெருமளவு வருவாய் ஈட்டித் தரும் வணிகவரித் துறையின் வரி வசூல் பணிக்காக அலுவலர்கள் பயன்படுத்தி வரும் வாகனங்களில் மிகவும் பழமையான வாகனங்கள் சாலைகளில் செல்வதற்குத் தகுதியற்றவை எனக் கண்டறியப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்பட வேண்டுமென கோரப்பட்டு வந்தது. வணிகவரி அதிகாரிகள் வரி வருவாயினைத் திறம்பட வசூலிக்க ஏதுவாக மிகப் பழமையான இந்த வாகனங்களுக்குப் பதிலாக 31 புதிய வாகனங்கள் வாங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களின் வணிக வரி உதவி ஆணையர்களுக்கும், சென்னை, திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் வரி அமலாக்க வணிக வரி உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர்களுக்கும் வழங்கப்படுகின்ற இந்த 31 புதிய வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1-3-2005 அன்று வழங்கினார்கள். வணிகவரித் துறையின் ஓட்டுநர்களான திரு. எஸ். லூர்துசாமி, திரு. வி.கே. ஏழுமலை, திரு.கே. ஹரி, திரு. என். தனபால் ஆகியோரிடம் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

சிறுதொழில் துறை

தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி நமது மாநிலத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளில் சிறுதொழில் துறையைச் சார்ந்த தொழில் வணிகத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் 216 வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள் உருவாக்கப் பட்டுள்ளன. 138.43 கோடி ரூபாய் செலவில் 144 ஊராட்சி ஒன்றியங்களில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலைகளின் மூலம் 5,638 மகளிர் உட்பட 8,335 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழகத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் இதுபோன்ற தொழில்களை உருவாக்க இந்தத் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள், உள்ளடங்கிய கிராமப்புறங்களுக்கும் சென்று முனைப்புடன் செயல்படவும், அரசுத் திட்டங்கள் பற்றிய விளக்கங்களை அப்பகுதியில் உள்ள மக்களுக்கு எடுத்துக்கூறி புதிய தொழில் முனைவோரை உருவாக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த ஆண்டில் 16 மாவட்டங்களில் உள்ள மாவட்ட தொழில் மையங்களுக்கு புதிய வாகனங்களை வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, தேனி, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, நீலகிரி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், திருவள்ளூர், வேலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 16 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்களுக்கும் 16 வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று வழங்கினார்கள். மாவட்டத் தொழில் மையங்களில் ஓட்டுநர்களாகப் பணியாற்றுகின்ற தேனி மாவட்டம் திரு. கே. சுப்பையா, காஞ்சிபுரம்-மாவட்டம் திரு. எம். கேசவன், நாமக்கல் மாவட்டம் திரு. என். சித்தேஸ்வரன் ஆகியோரிடம் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை

அரசின் சாதனைகள், கொள்கை முடிவுகள், நலத்திட்டங்கள் முதலியவற்றை நவீன தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு விளக்கும் பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறை மேற்கொண்டு வருகிறது. இதற்கென கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு புதிய வீடியோ வாகனங்களை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த வாகனங்களுக்கான சாவிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை வாகன ஓட்டுநர்களான கிருஷ்ணகிரி மாவட்டம் திரு. எஸ். பாக்யநாதன், திண்டுக்கல் மாவட்டம் திரு. சி. தங்க பாண்டி ஆகியோரிடம் இந்த வாகனங்களை 1.3.2005 அன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வணிகவரித் துறை செயலாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) திரு. எஸ். ராஜரத்தினம், இ.ஆ.ப., சிறுதொழில் துறை செயலாளர் திரு. டி. ராஜேந்திரன், இ.ஆ.ப., செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செயலாளர் திரு.வ.ராமதாஸ், இ.ஆ.ப., தொழில் ஆணையரும் தொழில் வணிகத் துறை இயக்குநருமான திரு. என். வாசுதேவன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு சிறப்புச் செயலாளர் திரு. வ. கனகராஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாகனங்களுக்கான சாவிகளைப் பெற்றுக் கொண்ட வணிக வரித்துறை, சிறுதொழில் துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஓட்டுநர்கள் மற்றும் அலுவலர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2 கோடி ரூபாய் செலவில், சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் முதற்கட்டமாகக் கட்டப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தை, 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தினுள், தமிழ் வளர்ச்சித் துறைக்கெனவும் மற்றும் தமிழ் வளர்ச்சி – பண்பாடு சார்ந்த துறைகளின் அலுவலகங்கள் அமைந்திடவும் 6.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு அடுக்கு மாடிகளுடன் உருவாக்கப்படும் தமிழ் வளர்ச்சி வளாகத்தின் முதற்கட்டப் பணியாக 2 கோடி ரூபாய் செலவில், தரைக்குள் தளம், தரைத்தளம், முதல் தளம் ஆகியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தரைக்குள் தளம் 3,751 சதுர அடி, தரைத்தளம் 9,611 சதுர அடி, முதல் தளம் 9,775 சதுர அடி என மொத்தம் 23,137 சதுர அடிப் பரப்பில் இக்கட்டடம் அமைந்துள்ளது. அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புடனும் இந்தப் புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. ம.இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போது சென்னை குறளகம் கட்டடத்தில் 55,198 ரூபாய் மாத வாடகையில் இயங்கி வரும் தமிழ் வளர்ச்சி இயக்கக அலுவலகம், இனி தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தில் இயங்கும். இந்தப் புதிய கட்டடத்தின் தரைக்குள் தளத்தில் தொல்லியல் துறையின் அச்சகப் பிரிவும், தரைத் தளத்தில் தொல்லியல் துறை இயக்ககமும், முதல் தளத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககமும் செயல்படும். ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதினைப் பெற்றவர்கள் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் ஊரக சுகாதாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக, இந்த ஆண்டு, தூய்மை மற்றும் சுகாதாரத்திற்காக மத்திய அரசு வழங்கும் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதினை (Nirmal Gram Puraskar Award) பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 கிராம ஊராட்சிகளின் தலைவர்கள், ஒரு ஊராட்சி ஒன்றியம் மற்றும் அதனைச் சார்ந்த 10 ஊராட்சிகளின் தலைவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றார்கள்.

தூய்மை கிராமங்களுக்கு நிர்மல் கிராம் புரஸ்கர் விருதுகள் வழங்கும் மத்திய அரசின் இந்தத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மத்திய அரசு வழங்கிய 39 விருதுகளில், 13 விருதுகளை தமிழகமே பெற்றுள்ளது என்பதும், இதன் மூலம், இதற்கென மத்திய அரசு வழங்குகின்ற ரொக்கப் பரிசில் 35 சதவிகிதத்தை தமிழகமே பெற்று பெருமை சேர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊரக சுகாதாரத்தில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன் மாநிலமாக மாற்றிட பல்வேறு முனைப்பான திட்டங்களைத் தீட்டி சுகாதாரப் புரட்சிக்கு வித்திட்டுள்ளார்கள். சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் சமுதாயப் பங்கேற்புடன் கூடிய "தூய்மை கிராம இயக்கம்" (Clean Village Campaign) எனும் உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்த 2003–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

தூய்மை கிராம இயக்கத்தின் கீழ் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஊராட்சிக்கும் 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

அறிவித்தார்கள். அதன்படி, 15.8.2004 சுதந்திரத் திருநாள் அன்று 15 ஊராட்சிகளுக்கு 75 இலட்சம் ரூபாய் பரிசுகள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முழு சுகாதார இயக்கத்தை முழு வீச்சில் செயல்படுத்தி அதனை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார்கள். 2001ஆம் ஆண்டு 15 சதவிகிதமாக இருந்த சுற்றுப்புற சுகாதாரம், தற்போது 50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

ஊரக சுகாதாரத்தை மேம்படுத்த தமிழக அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளை மத்திய அரசு பாராட்டியுள்ளது. முழு சுகாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முன்னிலை வகிக்கிறது என்று யுனிசெஃப் நிறுவனமும் பாராட்டி உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் தூய்மையான கிராமங்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவித்து, 13 மாவட்டங்களில் உள்ள இத்தகைய 15 ஊராட்சிகளுக்கு 15.8.2004 சுதந்திரத் திருநாள் அன்று ப்ரிசுகளை வழங்கினார்கள். இதே ஆண்டில் மத்திய அரசும், இந்தியா முழுமையும் உள்ள தூய்மையான கிராமங்களுக்கு "நிர்மல் கிராம் புரஸ்கார்"என்னும் பெயரில் விருதுகள் வழங்கப்படும் என்றும், அந்த ஊராட்சிகளுக்கு ரொக்கப் பரிசு அளிக்கப்படும் என்றும் அறிவித்தது.

இந்தத் திட்டத்தின்படி, கிராமங்களில் திறந்தவெளியில் மலங்கழித்தலைத் தவிர்த்தல், ஒவ்வொரு வீட்டுக்கும் தனி நபர் கழிவறை கட்டுவதுடன் அதனைப் பயன்படுத்துதல், பள்ளி மற்றும் அங்கன்வாடி கழிப்பறை கட்டுதல் ஆகியவற்றை முழுமையாகச் செயல்படுத்தியதற்காக மத்திய அரசு இந்த ஆண்டு இந்தியா முழுமையும் 39 உள்ளாட்சி அமைப்புகளைத் தேர்வு செய்தது. இதில், தமிழகத்திலிருந்து 12 கிராம ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் (10 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கியது) மத்திய அரசின் "நிர்மல் கிராம் புரஸ்கார் விருது"க்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. இதன் மூலம் மொத்த ரொக்கப் பரிசுத் தொகையில் 35 சதவிகிதத்தை மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெற்று பெருமை சேர்த்துள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றிய தலைவரும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து 24.2.2005 அன்று புதுதில்லியில் உள்ள விஞ்ஞான பவனில் நடைபெற்ற விழாவில் விருதுகள் பெற்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் சுகாதாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைச் செயல்படுத்தியதன் காரணமாக, இவ்வாறு தேசிய விருது பெற்றுள்ள தமிழகத்தின் ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

விருது பெற்ற ஊராட்சிகளின் தலைவர்கள் அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், "நீங்கள் தொடங்கி வைத்த தூய்மை கிராமம் திட்டம் (Clean Village Campaign) மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாகவே நாங்கள் தேசிய விருது பெற முடிந்தது" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர். அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "இந்தியாவின் இதயம் கிராமங்களில் தான் உள்ளது என்று மகாத்மா காந்தியடிகள் கூறியதை நீங்கள் மெய்ப்பித்து விட்டீர்கள்" என்று கூறி அவர்களைப் பாராட்டினார்கள். மேலும், கிராமங்களின் தூய்மையைத் தொடர்ந்து பராமரித்து ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற விருதுகளைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ்,இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை முதன்மைச் செயலாளர், திரு. என். நாராயணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை செயலர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் மூ. இராசாராம், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு புதிய வலைதளம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தொடர்பான தகவல்கள் அடங்கிய புதிய வலைதளத்தினைத் (Website) தொடங்கி வைத்தார்கள். இதன் முகவரி http://www.assembly.tn.gov.in என்பதாகும்.

இவ்வலைதளத்தில், சட்டமன்றப் பேரவை வரலாறு குறித்து விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆளுநர் உரைத்தொகுப்பு, நிதிநிலை அறிக்கைகள், அமைச்சரவை, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் விவரங்கள் பெயர் வாரியாகவும், தொகுதி வாரியாகவும், கட்சி வாரியாகவும் மற்றும் சட்டமன்றப் பேரவை விதிகள், சட்டமன்றக் குழுக்களின் விவரங்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவ்வலைதளத்தினைத் தொடங்கி வைத்து, ஜனநாயக அமைப்பின் செயல்பாட்டில் ஆர்வம் உள்ள அனைவருக்கும் இந்த வலைதளம் பேருதவியாக அமையும் என்று தெரிவித்து தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வரகூர் அருணாசலம் அவர்கள், பேரவை முன்னவரும், மாண்புமிகு நிதியமைச்சருமான திரு. சி. பொன்னையன் அவர்கள் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. வெ. ராசாராமன் ஆகியோர் உடனிருந்தனர். ★

திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் கணினிமயமான மின்தடை நீக்கப் பணி மையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

சென்னை மாநகரில் உள்ள 18 இலட்சம் மின் நுகர்வோர்களின் மின் இணைப்புகளில் ஏற்படும் தடங்கல் மற்றும் மின் தடைகளைச் சீர் செய்திட பல முகவர்களைக் கொண்டு கணினி மூலம் அழைப்புகளை வரிசைப்படுத்தி பிரித்து வழங்குகின்ற பல இணைப்புகள் உடைய தொலைபேசி அமைப்புடன் கூடிய கணினி அடிப்படையிலான மின் தடை நீக்கும் பணி மையம் ஒன்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று தொடங்கி வைத்தார்கள். இதே போன்ற கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் பணி மையங்கள் (Computerised Power Failure Redressal Centres) திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களிலும் ஏற்படுத்தப்படும் என்று 8.12.2004 அன்று நடைபெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலைய வெள்ளி விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

இதன்படி, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் 66.08 இலட்சம் ரூபாய் செலவில் கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கப் பணி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று மையங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வீடியோ கலந்தாய்வு முறையில் மதுரை மாநகரத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கப் பணி மையத்துடன் தொடர்பு கொண்டு தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த கணினிமய மின் தடை நீக்கும் பணி மையங்களை அந்தந்த மாநகரங்களில் உள்ள அனைத்து மின் நுகர்வோர்களும் 12660 என்ற ஐந்து இலக்க தொலைபேசியின் மூலம் எளிதில் தொடர்பு கொள்ளலாம். ஒவ்வொன்றும் பத்து தொலைபேசி இணைப்புடன் கூடிய இணைப்பகம் மூலம் மின் தடை பற்றிய புகார்கள் பெறப்பட்டு மின் பழுது பார்ப்பு முழுமையாகவும் திறமையாகவும் கையாளப்படும். எந்த நாளிலும், எந்த நேரத்திலும் மின் நுகர்வோர் தங்களது புகார்களைப் பதிவு செய்யும் வகையில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து இந்தப் பணி மையங்களில் இருப்பார்கள். புகார் பெறப்பட்டதும் மின் வாரியப் பணியாளர்கள் மின் தடை ஏற்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று சீர்படுத்துவார்கள். மின் நுகர்வோரின் மின் தடை புகாருக்கு உடனடியாக ஒரு பதிவு எண் வழங்கப்படும். இதன் மூலம் அந்தப் புகார் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையின் நிலையினை நுகர்வோர் அறிய முடியும்.

இந்த கணினிமய மின்தடை நீக்கும் பணி மையங்கள் திருச்சி மாநகரில் தலைமைப் பொறியாளர், திருச்சி வளாகம், தென்னூர், மதுரை மாநகரில் தலைமைப் பொறியாளர், மதுரை வளாகம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரில் 110 K.V. துணை மின் நிலைய வளாகம், டாடாபாத் ஆகிய இடங்களில் இயங்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், எரிசக்தித் துறை செயலாளர் திரு. ஆர். சதபதி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு.கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ❖

தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், புகழ்மிக்க தமிழறிஞர்களின் படைப்புகள் அனைத்தும் எளிதில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் அந்தச் சான்றோர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி அவர்களது குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகைகளை வழங்கிச் சிறப்பித்து வருகிறார்கள். இவ்வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மிகப் பெரும் எழுத்தாளரான புதுமைப்பித்தன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது வாரிசுரிமைதாரருக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகையையும், மற்றும் திருமதி. கு.ப. சேது அம்மாள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவருக்கு பரிவுத் தொகையாக ரூ. 3 இலட்சமும் 25.9.2002 அன்று வழங்கிச் சிறப்பித்தார்கள். தற்போது, தமிழறிஞர்கள் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. ந.பிச்சமூர்த்தி, திரு. க. நா. சுப்பிரமணியம் ஆகியோரின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி இந்த மூவரின் குடும்பத்தாருக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்க ஆணையிட்டார்கள்.

தஞ்சை மாவட்டம், நடுக் காவேரியில் பிறந்த திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார், வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம் முதலிய நூல்களையும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய பல இலக்கியங்களுக்கு உரைகளையும் எழுதித் தமிழுக்கு அணி சேர்த்துள்ள சிறந்த படைப்பாளர் ஆவார். இவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கி,

அதன் பரிவுத் தொகையான ரூபாய் 5 இலட்சத்தை நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் மகன் திரு. வே. நடராசன் மற்றும் மரபுரிமை வாரிசுகளான தையல்நாயகி, அம்புஜம், அகிலா, திருஞானசம்பந்தம், சிதம்பரநாதன் ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

தமிழிலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய 'மணிக்கொடி' எழுத்தாளர்களில் ஒருவரும், புதுக்கவிதை வடிவத்தைச் செழுமையோடு நிலை நிறுத்தியவருமான நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி திரு. ந. பிச்சமூர்த்தி அவர்கள், 130 கவிதைகள், 130 சிறுகதைகள், 10 நாடகங்கள், 40 கட்டுரைகள் முதலியவற்றைப் படைத்து தமிழுக்கு வளம் சேர்த்தவர் ஆவார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவரது நூல்களை நாட்டுடைமையாக்கி அதன் பரிவுத் தொகையான ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை அவரது மகள்களான அலமேலு, ராஜலட்சுமி, மீனாட்சி, சிந்தாமணி ஆகியோரிடம் 1.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

சிறந்த நாவலாசிரியராகவும் சிறுகதை ஆசிரியராகவும், திறனாய்வாளர் மற்றும் மொழி பெயர்ப்பாளராகவும் பல வகைகளில் தன்னை வெளிப்படுத்தி, 100க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 20 புதினங்கள், 10க்கும் மேற்பட்ட திறனாய்வு நூல்களை எழுதியதோடு, பல கவிதை, கட்டுரைத் தொகுதிகள், நாடகங்கள், மொழி பெயர்ப்பு நூல்களை எழுதி தமிழுக்கு வளம் சேர்த்தவர் திரு. க.நா. சுப்பிரமணியம் அவர்கள். தமிழின் தொன்மை இலக்கியங்களான சிலப்பதிகாரம் மற்றும் குறுந் தொகைப் பாடல்களையும் புதுமைப் பித்தன், கு.ப.ரா., ஜெயகாந்தன் போன்ற நவீன எழுத்தாளர்களின் படைப்புகளையும் இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கி அதற்குரிய பரிவுத் தொகை ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை திரு. க.நா. சுப்பிரமணியம் அவர்களின் மனைவி திருமதி எஸ். இராஜி அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

நூல்களை நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், திரு. ந. பிச்சமூர்த்தி, திரு. க.நா. சுப்பிரமணியம் ஆகியோரின் குடும்பத்தினர் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஔவையார் சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் 8.3.2005 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரக அலுவலகத்திற்கென, கிண்டியில் 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரக அலுவலகம் தற்போது சென்னை சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் உள்ளது. இந்த அலுவலகங்களுக்கு கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் 3046.16 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில், தரைத் தளம் மற்றும் மூன்று மாடிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள். இந்தப் புதிய கட்டடத்தில் தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரக அலுவலகமும், மண்டல இணை இயக்குநர், சென்னை அவர்களது அலுவலகமும் செயல்படும். சிறப்பான கூட்ட அரங்கம் ஒன்றும், முழுமையான கணினிப் பிரிவு ஒன்றும் இதன் சிறப்பு அம்சமாக அமைந்திருக்கிறது. அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்போடும் இந்தப் புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.பி. பிராணேஷ், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திரு. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ★

கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்துகின்ற புங்கர் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில், ஒருவருக்கு 900 ரூபாய் வீதம் 9,473 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் 85 இலட்சத்து 25 ஆயிரத்து 700 ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன் அடையும் வகையில், ஏற்கெனவே செயல்பட்டு வந்த சுய காப்பீட்டுத் திட்டத்தை மாற்றி அமைத்து புங்கர் பீமா யோஜனா என்ற பெயரில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து ஒரு புதிய காப்பீட்டு திட்டத்தை மேலும் அதிக சலுகைகளுடன் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.6.2004 அன்று ஆணையிட்டார்கள்.

இந்த புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெசவாளர் ஒருவருக்கு, மத்திய அரசின் பங்காக ரூ.150/–, ஆயுள் காப்பீட்டுக் கழகப் பங்காக ரூ.100/–, நெசவாளரின் பங்காக ரூ.130/– ஆக மொத்தம் ரூ.380/– பிரீமியத் தொகையாக செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.130/–ஐ தமிழக அரசே செலுத்திடும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

அறிவித்திருந்தார்கள். இதன்படி சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தற்போது உறுப்பினர்களாக உள்ள 75,565 கைத்தறி நெசவாளர்கள் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய மொத்த பிரீமியத் தொகையான 98 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் தொகையையும் தமிழக அரசே இந்த ஆண்டு செலுத்தி உள்ளது.

இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்கள் 60 வயதுக்கு முன்னர் இயற்கையாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/–, விபத்தில் மரணம் அடைந்தால் ரூ.80,000/–, விபத்தில் முழுவதும் செயல் இழக்க நேரிட்டால் ரூ.50,000/–, பகுதி செயல் இழப்பு ஏற்படின் ரூ.25,000/– இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுவதுடன் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ.300/– என கல்வி உதவித் தொகை வழங்கப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தேனி மாவட்டம், செக்கம்பட்டி இந்து உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவி எம். சத்தியா, ஆண்டிபட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவி வி. நாகஜோதி, காஞ்சிபுரம் மாவட்டம் டாக்டர் பி.எஸ். சீனிவாசன் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவன் எஸ். ஜெயசந்திரன், காஞ்சிபுரம் மாவட்டம் பி.எம்.எஸ். அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவன் எஸ். ரவிகுமார் ஆகிய ஆறு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக தலா 900 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி பள்ளியில் பயிலுகின்ற கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு புங்கர் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. சோமசுந்தரம், கைத்தறி, கைவினை துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திரு. இளங்கோவன், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளான 9,473 பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறுவார்கள். மேலும், இவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மொத்தம் 85 இலட்சத்து 25 ஆயிரத்து 700 ரூபாய் இந்த ஆண்டில் வழங்கப்பட உள்ளது.

* * *

மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தனது சம்பளத்தை தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ஓர் திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, 2004 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் 2005–ஆம் ஆண்டு ஜனவரி ஆகிய மாதங்களுக்குரிய தனது சம்பளத் தொகை மொத்தம் ரூ.30 ஆயிரத்தை, தலா ரூ.10 ஆயிரம் வீதம் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு முண்டககன்னியம்மன் திருக்கோயில், தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் மற்றும் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக, அருள்மிகு முண்டககன்னியம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. டி. மோகனசுந்தரம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் திரு. ஜி. தென்னரசு, அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் திரு. எல். மாரியப்பன் ஆகியோரிடம் 3.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

★ ★ ★

அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் வென்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசுகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்

அகில இந்திய காவல் துறை பணித்திறன் போட்டிகள் (All India Police Duty Meet, Dergaon, Assam) சென்ற 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை அஸ்ஸாம் மாநிலம் டெர்கான் நகரில் நடைபெற்றன. இந்த காவல் பணித் திறன் போட்டிகளில் 21 மாநில அணிகளும், ஒரு யூனியன் பிரதேச (Union Territory) அணியும், 8 மைய அரசு காவல் அமைப்புகளும் என 30 காவல் துறைக் குழுக்கள் கலந்து கொண்டன. இதில், குற்றப் புலானய்வுக்கு அறிவியல் கருவிகளைப் பயன்படுத்துதல், கணிப்பொறி விழிப்புணர்வு, தொழில் முறை நிழற்படக் கலை மற்றும் வீடியோ படக்கலை முதலான காவல் பணி சார்ந்த பல்வேறு பணித் திறன் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாடு காவல் துறை குழு இரண்டு தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் 5 வெண்கலப்பதக்கங்கள் உட்பட, 11 பதக்கங்கள் மற்றும் இரண்டு முதலிட கோப்பைகளையும் ஒரு இரண்டாமிட கோப்பையயும் வென்று 3488.97 மதிப்பெண்கள் பெற்று இப்போட்டியில் முதலிடத்தை அடைந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. இவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.3.2005 அன்று ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

மேலும், தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் 1.12.2004 முதல் 5.12.2004 முடிய 13ஆவது ஆசிய விற்பன்னர் தடகளப் போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் தமிழகக் காவல்துறை தடகள அணி பங்கேற்று ஒரு தங்கம் 4 வெள்ளி மற்றும் 5 வெண்கலம் ஆக மொத்தம் 10 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது. சர்வதேச அளவிலான தடகளப் போட்டி ஒன்றில், இத்துணைப் பதக்கங்களை தமிழகக் காவல் துறை வென்றுள்ளது இதுவே முதல் முறையாகும். இவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.3.2005 அன்று ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

அஸ்ஸாம் மாநிலம் டெர்கான் நகரில் 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற 48–ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளிலும், தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் 1.12.2004 முதல் 5.12.2004 முடிய நடைபெற்ற ஆசிய விற்பன்னர் தடகளப் போட்டிகளிலும் தங்கம், வெள்ளி, மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழகக் காவல் துறை வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து மேலும் பல சாதனைகள் புரிய தனது மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் திரு.பவன் ரெய்னா, இ.ஆ.ப., காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர். ★

மாணவ, மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தங்களது கல்வி செலவுக்குப் போதிய நிதி வசதி இல்லாது தவித்த மருத்துவம், கால்நடை மருத்துவம், பொறியியல், பி.எஸ்.சி (வேளாண்மை), செவிலியர் மற்றும் பிசியோதெரபி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகள் 19 பேருக்கு, தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம், மொத்தம் "4 இலட்சத்து 75 ஆயிரத்திற்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

கோவை மாவட்டம் எஸ். நாகராஜன், விருதுநகர் மாவட்டம் கே. ஜீவா ஆகியோர் மருத்துவம் (M.B.B.S.) பயிலவும், ஈரோடு மாவட்டம் ஆர். மைதிலி, பெரம்பலூர் மாவட்டம் பி. சத்தியா ஆகியோர் கால்நடை மருத்துவப் படிப்பு பயிலவும், கோவை மாவட்டம் ஜி. தர்மராஜ், காஞ்சிபுரம் டி. வந்தனாதேவி, நாமக்கல் மாவட்டம் ஆர். கௌரி சங்கர், பி. திவ்ய பாரதி, ஆர். மோகன ராணி, பி. தமிழ்செல்வி, ஜி. யோகமணிகண்டன், மதுரை மாவட்டம் எஸ். முனியசாமி, தஞ்சாவூர் மாவட்டம் ஏ. மணிவண்ணன், தேனி மாவட்டம் பி. விவேக், திருநெல்வேலி மாவட்டம் எம். கலாராணி மற்றும் வேலூர் மாவட்டம் இ. மணிகண்டன் ஆகியோர் பொறியியல் படிப்புப் பயிலவும், மதுரை மாவட்டம் ஜி. கார்த்திகை ஜோதி பி.எஸ்.சி – வேளாண்மை (Agriculture) பயிலவும், கோவை மாவட்டம் ஜெ. அருணா பி.எஸ்.சி – செவிலியர் (Nursing) பயிலவும், திருநெல்வேலி மாவட்டம் எஸ். தபசு நாதன் பிசியோதெரபி பயிலவும், நிதி உதவி வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

இவர்களது கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதி வசதி இல்லாமல் தவித்த இந்த 19 மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள்.

இந்த ஆணையின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இதற்கான காசோலைகளை 28.2.2005 அன்று அந்த மாணவ, மாணவிகளிடம் நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களது குடும்ப சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் நிதி உதவி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *

இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தமிழரசு
R.N.I. No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

தமிழரசு
ஏப்ரல் 2005

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
பங்குனி – சித்திரை
மலர்: 36 இதழ்: 10
ஏப்ரல் 2005
விலை ரூ.10

இந்த இதழில்...

★ ஊனமுற்றோருக்கு புதிய வேலைவாய்ப்புகள் 2
★ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் 5
★ சத்துணவுத் திட்டப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு 7
★ உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் 9
★ காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினருக்கு புதிய சலுகைகள் 11
★ முந்திரி விவசாயிகள் பயன்பெற முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் 15
★ சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக் கூடிய புதிய வீடுகள் 17
★ பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் மாணவ–மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள் 21
★ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ–மாணவியருக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்படும் 22
★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் "தமிழ்ப் புத்தாண்டு" வாழ்த்துச் செய்தி 25
★ வேளாண் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு 26
★ அறிவுச் சுடரொளி அம்பேத்கர் 29
★ விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் 30
★ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் 31
★ குமரி மாவட்டத்தில் முழுச் சுகாதாரம் 33
★ தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் 35
★ தமிழக அதிரடிப் படையின் சாதனையால் இந்தியாவின் காவல் துறைக்கு உலக அளவில் கௌரவம் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை 37
★ தமிழ்நாட்டில் நோக்கியா செல்பேசித் தொழிற்சாலை 45
★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் இயந்திரப் படகுகள், மோட்டார் மற்றும் இதரப் பொருள்களுக்கு முழு வரிவிலக்கு 47
★ அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் தமிழகம் முதலிடம் 49
★ வணிக வரி வருவாய் வளர்ச்சி விகிதம் உயர்வு 51
★ கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் தொகுப்பு வீடுகள் செப்பனிடப்படும் 54
★ தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக தீயணைப்பு ஊர்திகள் 56
★ ஊராட்சிகளில் பணிபுரியும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு 57
★ தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா 59
★ திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரப் பூங்கா 63
★ விவசாயிகளின் பயிர்க்கடன் வட்டி தள்ளுபடி 65
★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் 'விஷு' திருநாள்' வாழ்த்துச் செய்தி 69
★ ஆண்டிபட்டியில் பல்துறை பணிவிளக்கக் கண்காட்சி 70
★ விருதுநகர் மாவட்டத்தில் காட்டாமணக்குப் பயிர் சாகுபடி 73
★ சென்னையில் மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைக்க திட்டம் 77
★ கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரையண்ட் பூங்கா 79

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் வழங்கும் விழா

இரண்டாம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தார்கள். (14.4.2005)

நான்காம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நோக்கியா (Nokia) செல்பேசி நிறுவனத்தினர் சந்திப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **சி. முத்துக்குமாரசாமி,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 நிகரி : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 16.3.2005

ஊனமுற்றோருக்கு புதிய வேலைவாய்ப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊனமுற்றோர்கள் மீது, நான் எப்பொழுதும் மாறாத பரிவும், அவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்ற உளமார்ந்த விருப்பமும் கொண்டுள்ளேன். இதன் அடிப்படையில் தான் எனது முந்தைய ஆட்சிக் காலத்தின் போது அதாவது 1992ஆம் ஆண்டு ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென ஒரு தனித் துறையையே நான் ஏற்படுத்தினேன். அதுமட்டுமன்றி, ஊனம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் – மீறி ஊனம் ஏற்பட்டோருக்கு உரிய நேரத்தில் உதவ வேண்டும் – சமுதாயத்திலும், குடும்பத்திலும் சாதாரண மனிதர்கள் போல அவர்களும் வாழ்க்கை நடத்திட வேண்டும் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, 1994ஆம் ஆண்டில் முதன் முறையாக எனது அரசுதான், ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கையை வகுத்தது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக நான் திருத்தி வெளியிட்ட 18 அம்சத் திட்டத்தில் 6–ஆவது அம்சமாக குழந்தைகளுக்கு இளம் பிராயத்தில் ஊனம் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் தொடக்கத்திலேயே ஊனத்தைக் கண்டறிந்து உரிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதை சிறப்பு அம்சமாகக் கொண்டு எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஊனமுற்றோருக்கு சம வாய்ப்பு அளிக்கவும் அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்துடன் அவர்கள் இணைந்து முழுவதுமாக பங்கு பெறும் வகையிலும் தமிழ்நாடு ஊனமுற்றோர் விதிகள் 2002 எனது அரசால் இயற்றப்பட்டது.

அது மட்டுமன்றி, ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள், ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை, பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள், ஊனமுற்றோருக்கு இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோர்க்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவி, ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்குச் சலுகைகள், இலவச பேருந்துச் சலுகை என பல்வேறுத் திட்டங்களின் கீழ் ஊனமுற்றோருக்கு உதவிகளையும், சலுகைகளையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு எனது முந்தைய ஆட்சிக் காலத்திலும் சரி 2001–ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற தற்போதைய ஆட்சிக் காலத்திலும் சரி ஊனமுற்றோருக்கான சிறப்பான பல திட்டங்களை வகுத்து அவற்றை செயல்படுத்துவதில் தமிழக அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வாறு செயல்படுத்துவதன் பயனாகவே 2004ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நாளன்று மேதகு குடியரசுத் தலைவர் வழங்கிய 58 தேசிய விருதுகளில் 14 விருதுகளைத் தமிழகம் பெற்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தவிர, 2004ஆம் ஆண்டில், இவ்வாறு, வேறு எந்த மாநிலத்தையும் விட அதிக எண்ணிக்கையில் தேசிய விருதுகளைப் பெற்று அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகித்தது என்பதை நினைவுபடுத்துவதில் மிக்க பெருமிதம் அடைகிறேன்.

இந்நிலையில் பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் 7.3.2005 அன்று தங்களது பல்வேறு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் போராட்டம் மேற்கொண்டனர். இவ்வாறு போராட்டம் மேற்கொண்ட பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் என்னை நேரில் சந்தித்து தங்கள் குறைகளை முறையிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததை அறிந்த நான் 9.3.2005 அன்று, சென்னை, தலைமைச் செயலகத்திற்கு அவர்களை வரவழைத்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். இந்தக் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலிப்பதாகவும், இது குறித்த உரிய அறிவிப்புகளை விரைவில் வெளியிடுவதாகவும் அப்போது நான் அவர்களிடம் உறுதி அளித்திருந்தேன்.

இதன்படி, ஊனமுற்றோர் பால் தனி அக்கறை யோடும், மிகுந்த பரிவோடும், அந்தக் கோரிக்கைகளை பரிசீலனை செய்து, பார்வையற்றோர் நலனுக்காகவும் மற்றும் பிற ஊனமுற்றோர் நலனுக்காகவும் கீழ்க்காணும் முடிவுகளை நான் தற்போது அறிவிப்பதில் மன நிறைவு அடைகிறேன்.

1. கடந்த 2001ஆம் ஆண்டு இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்ற போது இருந்த மிகவும் மோசமான நிதி நிலையைக் கருத்தில் கொண்டு 2001ஆம் ஆண்டு நவம்பரில் அரசுப் பணியிடங்களை நிரப்புவதற்குப் பொதுவானதொரு தடை விதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நுழைவு நிலைப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்தி 150 ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியிடங்களை பார்வையற்றோர் உள்ளிட்ட ஊனமுற்றோரைக் கொண்டு நிரப்ப நான் தற்போது முடிவு செய்துள்ளேன். இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், வரவேற்பாளர், தொலைபேசி இயக்குபவர், நூலக உதவியாளர், இசை ஆசிரியர், சுருக்கெழுத்தர், தையல் பயிற்றுநர், தொழில் ஆசிரியர், மின்தூக்கி இயக்குபவர், புத்தகம் கட்டுபவர், பொருத்துநர் மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் பயனீட்டு கணக்கீட்டாளர் ஆகிய பதவிகள் தொடர்பான இந்த 150 பணியிடங்கள் உடல் ஊனமுற்றோரை மட்டுமே கொண்டு நிரப்பப்படும்.

2. அரசுத் துறைகளில் ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவுகளைச் சார்ந்த பணி வகைகளில் ஊனமுற்றோருக்கு மிகவும் ஏற்ற பணியிடங்களைக் கண்டறியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் பார்வையற்றோர், கை, கால் ஊனமுற்றோர், செவித்திறன் குறைந்த மற்றும் வாய் பேச இயலாதவர்களைக் கொண்டு நிரப்பப்படுவதற்கு ஏற்றவை என 117 வகையான பணியிடங்கள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட 117 வகையான பணியிடங்களின் விவரங்களை எனது அரசு வெளியிடும். இந்த 117 வகையான பணியிடங்களுக்குப் புதிதாக நியமனம் செய்யும்போது ஊனமுற்றவர்களுக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

3. தகுதி வாய்ந்த, பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றவர்களிடையே 2:1 என்ற விகிதாச்சாரத்தில் ஐந்தாண்டு ஒப்பந்த அடிப்படையில் அரசு உறுப்பு கல்லூரிகளில் 20 இளநிலை விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் தொகுப்பு ஊதியமாக, மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். ஒப்பந்தக் காலம் முடிந்த பின்னர், காலச் சம்பள ஏற்ற முறையில் நிரந்தரமாக பணியில் அமர்த்தப்படுவார்கள்.

4. ஒரு சிறப்புத் தேர்வின் மூலம் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோரிடையே இருந்த 2:1 என்ற விகிதாச்சார முறைப்படி 150 இளநிலை பள்ளி உதவி ஆசிரியர்கள், ஐந்தாண்டு கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு தொகுப்பு ஊதியமாக மாதம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம்

வழங்கப்படும். ஒப்பந்த காலம் முடிந்த பின்னர் காலச் சம்பள ஏற்ற முறையில் அவர்கள் நிரந்தரமாக பணி அமர்த்தப்படுவார்கள். பார்வையற்றோர் பெரிதும் தமிழ் மற்றும் வரலாறு பாடப் பிரிவுகளிலேயே கல்வித் தகுதி பெற்றுள்ளதால் இப்பாடப் பிரிவுகளில் அதிக அளவில் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

5. தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தற்போது ஊனமுற்றோருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு உள்ளது. ஊனமுற்றோருக்கு ஆசிரியர் பணியில் உள்ள கூடுதல் வாய்ப்புகளை கருத்தில் கொண்டு தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதலுடன், ஒவ்வொரு அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் 5 கூடுதல் இடங்கள் வீதம் 7 அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆண்டுக்கு 35 இடங்கள் வீதம் 3 ஆண்டுகளுக்கு கூடுதல் இடங்கள் ஊனமுற்றோருக்கென ஏற்படுத்தப்படும்.

6. வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம், 1981ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டத்தின்படி தற்போது, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஓராண்டிற்கும் மேல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள, பார்வையற்றோருக்கு 10ஆம் வகுப்பு மற்றும் அதற்குக் கீழ் எனில், மாதம் ஒன்றுக்கு 200 ரூபாயும், மேல்நிலை வகுப்பு தேர்ச்சி அல்லது பட்டப் படிப்பிற்குக் கீழ் எனில் மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயும், பட்டதாரிகள் அல்லது முதுநிலைப் பட்டதாரிகள் எனில் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நிவாரணத் தொகை தற்போது 5 ஆண்டுகளுக்குத் தான் வழங்கப்படுகிறது.

இவ்வாறு, வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகை இனி 50 சதவிகிதம் உயர்த்தப்படும். அதன்படி 10ஆம் வகுப்பும் அதற்கும் கீழும் கல்வித் தகுதி உடையவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதமும்; மேல்நிலை வகுப்பு தேர்ச்சி பெற்ற அல்லது பட்டப் படிப்பிற்குக் கீழ் படித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 375 ரூபாய் வீதமும், பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 450 ரூபாய் வீதமும் வழங்கப்படும். மேலும், இந்தச் சலுகை, 10 ஆண்டுகள் வரை அல்லது அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படும்.

7. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையில், அலுவலர்கள் நிலையில் ஊனமுற்றோருக்கென சில பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென, தேர்ந்தெடுக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 4 வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் பார்வையற்றோர் இருவரும்; கை, கால் ஊனமுற்றோர் இருவரும் நியமனம் செய்யப்படுவர். இந்த அலுவலர்கள், ஊனமுற்றோர், ஊனமுற்றோரின் பெற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்கான தனியார் சமூக சேவை நிறுவனங்கள் ஆகியோருக்கு, ஆலோசனைகளும், வாழ்க்கைத் தொழில் பற்றி வழிகாட்டுதல்களும் வழங்குவார்கள். இப்பதவிகள் ரூ.5000-150-8000 என்ற சம்பள விகிதத்தைக் கொண்ட நுழைவு நிலைப் பதவிகளாக இருக்கும்.

பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நலனைக் கருத்தில் கொண்டு இன்று நான் அறிவித்துள்ள இச்சலுகைகளும் உதவிகளும் ஊனமுற்றோர் புது நம்பிக்கையுடனும், புது தெம்புடனும் தங்களது வாழ்க்கையைத் தொடர வழி வகுக்கும். ஊனமுற்றோர் நலனைக் காக்கும் அரணாக எனது அரசு என்றென்றும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

சாக்லேட் ஹெர்னன் கார்ட்டஸ் (Hernan Cartes) என்ற ஸ்பெயின் நாட்டு வீரர் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மெக்சிக்கோவை வென்று திரும்பியபோது, அங்கிருந்த ஆஸ்டெக் மக்கள் விரும்பி அருந்தும் 'சாக்கலட்டல்' (Chocolat) என்ற பானத்தின் இரகசியத்தைக் கண்டறிந்து கொண்டுவந்தார். அரைத்த கோக்கோ விதை, நீர், மிளகு ஆகியவற்றிலிருந்து அந்த பானம் தயாரிக்கப்பட்டது. ஸ்பெயின் நாட்டினர் மிளகுக்குப் பதிலாக சர்க்கரையைக் கலந்து குடித்தனர். இப்பானத்தின் இரகசியம், 100 ஆண்டுகள் வரை வெளியே தெரியாமலேயே இருந்தது. 17ஆம் நூற்றாண்டில்தான் இதன் இரகசியம் தெரியவந்தது. பின்னர் பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு இப்பானம் பரவியது. தின்பதற்கான சாக்லேட் 19ஆம் நூற்றாண்டில்தான் விற்க ஆரம்பித்தது. வறுத்த கோக்கோ பருப்புடன், பால்பவுடர், சர்க்கரை முதலியவற்றைச் சேர்த்து அரைத்தால் ஒரு கூழ் கிடைக்கிறது. இதை வார்ப்பிலிட்டுக் குளிர வைத்து சாக்லேட் தயாரிக்கப்படுகிறது.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.3.2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசின் கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், விழுப்புரம், மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கும் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குமாக மொத்தம் 101 புதிய பேருந்துகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து இந்தப் புதிய பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார்கள்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பழுதுபட்ட பேருந்துகளால் பொது மக்களுக்கு பல இடையூறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், இவற்றை சீர்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பழுதுபட்ட அனைத்துப் பேருந்துகளையும் மாற்றி புதிய பேருந்துகள் வாங்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, பழுதுபட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 2,375 என்று கண்டறியப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக, 2003-2004ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு போக்குவரத்து நிதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ஏறத்தாழ 105 கோடி ரூபாய் கடனுதவி பெற்று 1,050 பேருந்துகள் வாங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அனுமதி அளித்திருந்தார்கள். இந்த 1,050 பேருந்துகளில் 860 பேருந்துகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு சாலைகளில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள பேருந்துகளில் தற்போது 101 பேருந்துகளில் முழுமையான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன. மேலும், எஞ்சியுள்ள 89 பேருந்துகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த 101 புதிய பேருந்துகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.3.2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில் கும்பகோணம், சேலம், கோயம் புத்தூர், விழுப்புரம், மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், சென்னை மாநகரப் போக்கு வரத்துக் கழகத்திற்கும் மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் ஆகிய அரசுப் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கி அவற்றின் இயக்கத்தை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், இதே விழாவில், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனத்தின் சார்பில் வழங்கப் படுகின்ற 2004–2005ஆம் ஆண்டிற்கான சிறந்த வாடிக்கையாளர்கள் விருதுகளை கும்பகோணம், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.3.2005 அன்று வழங்கினார்கள்.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சிகளுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. வாங்கிய கடனை உரிய நேரத்தில் தானாக முன்வந்து திருப்பிச் செலுத்தும் போக்குவரத்துக் கழகங்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு முதல் இந்நிறுவனத்தின் சார்பில் சிறந்த வாடிக்கையாளர் விருது வழங்கப்படுகின்றது. இவ்வகையில், அதிக லாபம் ஈட்டி, தங்கள் நிதியிலிருந்து தாங்கள் பெற்ற கடன் மற்றும் வட்டித் தொகையை, திருப்பிச் செலுத்தி முதல் இடத்தைப் பெற்றுள்ள கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. வி. திராவிடமணி அவர்களுக்கும், இரண்டாமிடத்தைப் பெற்றுள்ள சேலம் அரசுப் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. ஆர். வெள்ளைப்புதியவன் அவர்களுக்கும், மூன்றாமிடத்தைப் பெற்றுள்ள கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு. சி. ரெங்கசாமி அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவ்விருதுகளை 24.3.2005 அன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில்,மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை செயலாளர் திரு. இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

செய்தித்தாள்

அச்சு எந்திரம் 16ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே உலகில் செய்தித்தாள்கள் தோன்றின. இந்தியாவில் 1780–ல் முதலாவது செய்தித்தாளை வில்லியம் போல்ட் என்பவர் கல்கத்தாவில் தொடங்கினார்.

அதற்கடுத்ததாக இந்தியாவில் செய்தித்தாள் தோன்றியது தமிழ்நாட்டில்தான். சென்னையில் 1785–இல் வார இதழ் ஒன்றை ரிச்சர்டு ஜான்ஸ்டன் என்பவர் தொடங்கினார். 1857–ல் முதலாவது இந்தியக் கிளர்ச்சி ஏற்பட்ட பின்னர் நாடெங்கும் அரசியல், சமூகத் துறைகளில் புதிய எழுச்சியை செய்தித்தாள்கள் தோற்றுவித்தன. செய்தித்தாள்கள் பல மொழிகளில் வெளிவரலாயின. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் செய்தித்தாள்கள் பல மொழிகளில் வெளிவரலாயின.

* * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 17.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 2004ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பல்வேறு சலுகைகளை நான் அறிவித்தேன். அப்போது ஒய்வூதியமில்லா பணிகளைச் சேர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆயாக்கள், சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள்

சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு அறிவிப்புகள் தனியே வெளியிடப்படும் என்று நான் அறிவித்திருந்தேன். அதன் அடிப்படையில், 2005–2006ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

1. தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு மாதம் ஒன்றுக்கு, 450 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை – I மற்றும் மதிய உணவுத் திட்ட சமையல்காரர்கள் ஆகியோரின் அடிப்படைத் தொகுப்பு மதிப்பூதியம் மேலும் 330 ரூபாய் உயர்த்தப்படும். இதன் மூலம், இப்பணியாளர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 1,100 ரூபாய் என்ற அளவிற்கு உயரும்.

2. தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு, மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை – II மற்றும் சத்துணவுக் கூட உதவியாளர்கள் ஆகியோருக்கு கூடுதல் மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு 290 ரூபாய் வழங்கப்படும். இதனால், இவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 850 ரூபாய் என்ற அளவிற்கு உயரும்.

ஆண்டு ஒன்றுக்கு 47.97 கோடி ரூபாய் செலவாகக்கூடிய இந்த மாற்றங்கள் 1.4.2005 முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப் பட்டது.

3. மேலும், வரையறுக்கப்படாத ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் போன்ற பணியாளர்களுக்கு அவர்கள் பணி ஒய்வு பெறும் பொழுது அரசு 50,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கும் என்றும், தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் ஒய்வு பெறும் பொழுது அரசு 20,000 ரூபாய் ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் செலவாகக்கூடிய இந்தப் புதிய ஒட்டுமொத்த ஒய்வூதியப் பயன் திட்டம், 1.4.2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

4. 1.4.2005 முதல் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்திற்கான அரசின் பங்களிப்பு அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போன்று 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் 2005–2006ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டது.

அனைத்து சத்துணவுத் திட்டப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் ஆகியோர் இந்த அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். தங்களது எதிர்பார்ப்பையும் விட மிகத் தாராளமாக சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமைக்கும், தங்களது நீண்ட காலக் கோரிக்கையான ஒட்டுமொத்தத் தொகை அளிக்கும் ஓய்வூதியத் திட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கும் தங்களது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

தற்போது, தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் அமைப்புகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்களும், அடித்தட்டுப் பணியாளர்களே; எனவே, அவர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளன. ரூபாய் 600–10–700–20–1100 என்ற ஊதிய விகிதத்தில் இப்பணியாளர்களில் பெரும்பாலோர் தற்போது அடிப்படைச் சம்பளமாக 940 ரூபாயும், அதற்கு உரிய அகவிலைப்படியாக 573 ரூபாயும், ஆக மொத்தம் 1,513 ரூபாய் ஊதியமாகப் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாட்டில்,தற்போது சத்துணவு அமைப்பாளர்கள் 40,209 பேரும், அங்கன்வாடிப் பணியாளர்கள் 44,264 பேரும், ஆக மொத்தம் 84,473 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, ஒட்டுமொத்த மதிப்பூதியம் 1,063 ரூபாய் ஆக இருக்க வேண்டும் என்று மைய அரசு நிர்ணயித்துள்ளது. இதர மாநிலங்களிலும், இதனை ஒட்டித்தான் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. அண்டை மாநிலங்களான கேரளாவில் 1,063 ரூபாயும்; ஆந்திரப் பிரதேசத்தில் 1,200 ரூபாயும்; கர்நாடகாவில் 1,450 ரூபாயும், மாத மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில்தான் தற்போது அதிகபட்சமாக, மாதம் ஒன்றுக்கு 1,513 ரூபாய் ஊதியமாக வழங்கப்படுகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவை தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோருக்கு மிக அதிகமான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் தங்கள் பணியில் மேலும் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து அவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க நான் தற்போது முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோருக்குத் தனி ஊதியமாக – Personal Pay – 200 ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். தவிர, இந்தத் தனி ஊதியத்திற்கும் தற்போது வழங்கப்படும் அளவான 61 சதவிகிதம் அகவிலைப்படி வழங்கவும் ஆணையிட்டுள்ளேன். இவ்வகையில், சத்துணவு அமைப்பாளர் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு மொத்தம் 322 ரூபாய் ஊதிய உயர்வு பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, இந்தத் தனி ஊதிய வகையிலான உயர்வைச் சேர்த்து இவர்கள் பெறும் மாத ஊதியம் 1,513 ரூபாயிலிருந்து 1,835 ரூபாயாக உயரும். 84,473 சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் இதனால் பயன் பெறுவர். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 32.64 கோடி ரூபாய் செலவு ஆகும். இந்தத் தனி ஊதியம், 1.4.2005 முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணிபுரிவோர் மேலும் சிறப்புடன் பணி புரிய இந்தச் சலுகைகள், ஊக்கமும் உற்சாகமும், ஊட்டுவதாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன்.

★ ★ ★

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,21.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 597.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்த உள்ள "தமிழ்நாடு சுகாதாரத் திட்ட"த்தை (Tamil Nadu Health Systems Project) தொடங்கி வைத்தார்கள். அப்போது இத்திட்டத்திற்கென வடிவமைக்கப் பட்டுள்ள புதிய இணைய தளத்தினைத் தொடங்கி வைத்ததுடன் இந்தத் திட்டத்திற்கான விளக்கக் கையேட்டினையும் வெளியிட்டார்கள். இந்த இணைய தளத்தின் முகவரி www.tnhsp.org ஆகும்.

மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள், மாவட்ட, வட்ட அளவிலான மருத்துவமனைகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை உயர்த்திடவும், இருதய நோய், சர்க்கரை நோய், புற்று நோய் போன்ற நோய்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தவும், நோய்த் தடுப்பு முறைகளை விரிவுபடுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு, உலக வங்கி உதவியுடன் 'தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்' (Tamil Nadu Health Systems Project) என்ற புதிய திட்டத்தினைச் செயல்படுத்துகிறது. மொத்தம் ரூபாய் 597.15 கோடி மதிப்பிலான இந்தப் புதிய சுகாதாரத் திட்டத்திற்கு உலக வங்கி ரூபாய் 502.94 கோடியும், தமிழக அரசு ரூபாய் 94.21 கோடியும் வழங்கும். இத்திட்டம் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப் படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 21.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசு மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி அறுவைச் சிகிச்சை அரங்கம், பிரசவப் பகுதி, உள் நோயாளிகள், வெளி நோயாளிகள் பகுதி, அவசரச் சிகிச்சைப் பகுதி ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டப்படும். நவீன மருத்துவக் கருவிகள், ரத்தச் சுத்திகரிப்புக் கருவி, வெண்டிலேட்டர்கள், அவசரச் சிகிச்சைப் பகுதி உபகரணங்கள், எக்ஸ்ரே கருவிகள், அல்ட்ராசோனாகிராம் போன்ற கருவிகள் வழங்கப்படும். மேலும் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை தேவைப்படுவோரையும் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வகையில் 385 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கும், நோயாளர் ஊர்திகள் வழங்கப்படும். அனைத்து பின்தங்கிய மாவட்டங்களிலும், மற்ற மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளிலும், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளிலும் உள்ள ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கருவுற்ற தாய்மார்கள் 30 நிமிட நேரத்தில் சென்றடைந்து சிகிச்சை பெறும் வகையில், 24 மணி நேர மகப்பேறு

மற்றும் சிசு கவனிப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் கருவுற்ற தாய்மார் இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதம் குறையும்.

மேலும், இந்த நிகழ்வின் போது Tata Consultancy Services நிறுவனத்தால் இத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்டுள்ள புதிய இணைய தளத்தினையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அப்போது, இந்தத் திட்டத்திற்கான கையேட்டினையும் வெளியிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் திருமதி. சுப்ரியா சாகு, இ.ஆ.ப., புதுடெல்லியில் உள்ள உலக வங்கியின் ஆலோசகர் திரு. ரஜித் பென்மேசூத் (Mr. Rachid Benmessoud, Operations Advisor, World Bank, New Delhi) மற்றும் தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கான உலக வங்கியின் திட்டப் பணிக் குழுத் தலைவர் டாக்டர் பிரீத்தி குடேசியா (Dr. Preeti Kudesia, Task Team Leader, Tamil Nadu Health Systems Project, World Bank, New Delhi), ஆகியோர் உடன் இருந்தனர். ✶

சித்தார்

வீணையைப் போன்று தோற்றமளிக்கும் சித்தார் என்னும் இசைக்கருவி இந்துஸ்தானி இசையை சிறப்பாக இசைப்பதற்கு ஏற்ற கருவியாகும். குடம் என்ற இதன் பகுதி மரம் அல்லது சுரைக் காயினால் செய்யப்படுகிறது. வீணைக்கும் சித்தாருக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. வீணையில் மெட்டுகள் மெழுகின் மேல் நிலையாகப் பதிக்கப்பட்டிருக்கும். சித்தாரில் மெட்டுகளை நகர்த்திக் கொள்ளலாம். மெட்டுகள் சற்று வளைவாகவும் இருக்கும். சித்தாரில் ஏழு உலோகத் தந்திகள் உள்ளன. வலக்கை விரல்களால் மீட்டி, இடக்கை ஆள்காட்டி விரலையும் நடு விரலையும் தந்தியில் வைத்து இதனை வாசிக்கிறார்கள்.

சாம்பிராணி

ஜாவா, சுமத்ரா முதலிய தீவுகளில் வளரும் ஸ்டைராக்ஸ் பென்சாயின் (Styrax Benzoin) என்ற மரத்திலிருந்து கிடைக்கும் பிசின் தான் சாம்பிராணி ஆகும். இம்மரத்தின் பட்டையை துளைத்தால் வெண்மையான பால் போன்ற திரவம் வெளிவந்து இறுகிப் பிசினாகிறது. இப்பிசின் மணம் நிறைந்தது. இது பூசைப் பொருட்களாகவும், வீட்டை மணம் கமழச் செய்யும் பொருளாகவும் தொன்று தொட்டுப் பயன்பட்டு வருகிறது. சாம்பிராணிப் புகை சுவாச நோய்க்கும், சரும நோய்களுக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. இதிலிருக்கும் முக்கிய கரிமப்பொருள் பென்சோயிக் அமிலம் (Benzoic Acid) ஆகும்

காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையினருக்கு புதிய சலுகைகள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 23.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து 15.3.2005 அன்று, இந்த அவையில் நான் பேசும் போது, நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது காவல் துறை என்பதைத் தெளிவுபட தெரிவித்தேன்.

வலிமையான நாடாக இந்தியா இருக்க வேண்டும்; அதில் வளம் மிக்க மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டும் என்ற இலட்சியம் ஈடேற வேண்டும் என்றால் தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும். எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியான சூழ்நிலைதான். அத்தகைய அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதிலும், அதனைக் கட்டிக் காப்பதிலும் காவல் துறையின் பணி இன்றியமையாதது. இதன் அடிப்படையில்தான், காவல் துறையை நவீனப்படுத்தவும், காவல் பணியை மேம்படுத்தவும், காவலர்கள் நலன் பேணவும், பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகள் ஆகியவற்றை நான் அறிவித்தேன்.

தமிழக மக்களுக்கு அமைதியான வாழ்க்கையை உறுதி செய்திட தமிழகக் காவல் துறை 24 மணி நேரமும் ஆயத்த நிலையிலேயே இருக்கிறது. காவலர்களுக்கு வாரத்தில் 6 நாட்கள் பணி நாட்கள் என்றும்; ஒரு நாள், வார விடுமுறை நாள் என்றும் உள்ள போதும்; சட்டம்–ஒழுங்கு பிரச்சினை, வழக்குகள் புலன் விசாரணை, வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களுக்கு சென்று வருதல் முதலான பல்வேறு பணிகள் காரணமாக சில நேரங்களில் வார விடுமுறையை காவலர்கள் துய்க்க முடியாத நிலை உள்ளது. அவ்வாறு, வார விடுமுறை நாட்களிலும் தவிர்க்க இயலாத காரணங்களால் பணி மேற்கொள்ளும் காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு விடுமுறை அன்று பணி செய்தமைக்கு ஈடாக வார விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட்டு வருகிறது. 50 ரூபாயாக இருந்த இந்த வார விடுப்பு ஈட்டுப் படியை நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தி 2002ஆம் ஆண்டு நான் ஆணையிட்டேன். அதன்படி, தற்போது இவர்கள் வார விடுப்பு ஈட்டுப் படியாக 100 ரூபாய் பெற்று வருகின்றனர்.

அவசரப் பணிகள் நிமித்தமாக வார விடுமுறை துய்க்காமல் பணியில் ஈடுபடுகின்ற காவலர்களுக்கு, நிறைவான விடுப்பு ஈட்டுப் படி வழங்கப்பட வேண்டும். எனவே, தற்போது வழங்கப்படுகின்ற வார விடுப்பு ஈட்டுப் படியை உயர்த்தி வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன்.

இதன்படி, காவல் துறையில் பணியாற்றுகின்ற காவலர், முதல் நிலைக் காவலர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியோருக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 100 ரூபாயை 150 ரூபாயாக உயர்த்தி வழங்க, நான் ஆணையிட்டுள்ளேன்.

அதே போல, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நிலைய அலுவலர் நிலைக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு வார விடுப்பு ஈட்டுப் படியாக, தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கும் வார விடுப்பு ஈட்டுப் படி நாள் ஒன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 22.06 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

காவல் துறையில் பணி புரியும் காவலர் நிலை முதல், தலைமைக் காவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு மாதந்தோறும் 40 ரூபாயும்; உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோருக்கு 50 ரூபாயும்; துணை காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் இந்தியக் காவல் பணி – ஐபிஎஸ் – அல்லாத காவல் கண்காணிப்பாளருக்கு 60 ரூபாயும் சீருடைப் படியாக தற்போது வழங்கப்படுகிறது. தற்போது உள்ள சலவைக் கட்டணங்களைக் கருத்தில் கொண்டு, இச்சீருடைப் படியை உயர்த்த நான் முடிவு எடுத்துள்ளேன்.

இதன்படி, காவல் துறையில் பணியாற்றும் காவலர் நிலை முதல் இந்தியக் காவல் பணி – ஐ.பி.எஸ். – அல்லாத காவல் கண்காணிப்பாளர் நிலை வரை அனைவருக்கும் ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும்.

இதே போல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் வரை உள்ள பணியாளர்களுக்கு அவரவர் நிலைக்கு ஏற்ப மாதந்தோறும் 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை சீருடைப் படி வழங்கப்பட்டு வருகிறது. தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர் நிலை வரை உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும், இனி ஒரே அளவில் மாதந்தோறும் 100 ரூபாய் சீருடைப் படி வழங்கப்படும்.

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் சீருடைப் படி வழங்க அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

தற்போது சென்னை மாநகரம் மற்றும் தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் படும் காவல் துறை ஆய்வாளர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கும்; தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புகளின் பேரில் அப்பணிகளில் ஈடுபடும் போது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலைய அலுவலர் நிலைக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கும் உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது. 15.3.2005 அன்று, உள்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, மதிப்பிற்குரிய உறுப்பினர், திரு. ஜி. பழனிச்சாமி அவர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 9 ரூபாய் தான் உணவுப் படியாக வழங்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். இது சரி அல்ல.

சென்னை நகரைப் பொறுத்தவரை காவல் துறைப் பணியாளர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும், நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் என்ற வீதத்தில், உணவுப் படியை ஆகஸ்டு, 2002 முதல் உயர்த்தி வழங்கி நான் ஆணையிட்டேன். சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கான உணவுப் படி கணக்கிட்டு வழங்கப்படும் முறை, காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு வரும் முறையிலிருந்து மாறுபட்டு உள்ளது. தீயணைப்புப் பணிக்குச் செல்லும் தூரம் மற்றும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில், அவர்களுக்கு உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

1992–இல் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச அளவான, 9 ரூபாய் உணவுப் படியை ஜனவரி 2002 முதல் நகராட்சி எல்லையில் இருந்து 8 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட இடங்களுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காகச் செல்லும் போது வழங்கப்படும் உணவுப் படியை கால அளவுக்கு ஏற்ப 25 ரூபாய் முதல், அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 50 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். அதேபோல், 8 கிலோ மீட்டருக்குள் உள்ள இடங்களுக்கு கால அளவுக்கு ஏற்ப 15 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 40 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டேன். எனவே, 9 ரூபாய் என்று இருந்த உணவுப்படியை, 2002ஆம் ஆண்டே நான் உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகர் அல்லாத பிற பகுதிகளில் பணிபுரியும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே பணிக்குச் செல்லும் தூரத்தையும், கால அளவையும் கணக்கில் கொள்ளாமல் உணவுப் படி வழங்க, நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். மேலும், காவல் துறையிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலும், சென்னை அல்லாத இடங்களில் தற்போது உணவுப் படி பெற்று வரும் பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே அளவாக 55 ரூபாய் உணவுப் படி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

இவ்வாறு உயர்த்தப்பட்ட வார விடுப்பு ஈட்டுப்படி, சீருடைப் படி, மற்றும் உணவுப் படி ஆகியவற்றால் 87,047 காவல் துறைப் பணியாளர்களும், 6,281 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களும் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு மொத்தம், ஆண்டு ஒன்றுக்கு, 36 கோடியே 18 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகள் காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மேலும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்ற வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். ✱

தெரிந்தும் தெரியாததும்

- ஆக்டோபஸிக்கு மூன்று இதயங்கள் உள்ளன.
- மனித மூளையின் எடை 1.424 கிராம், அது பழுப்பு நிறத்தில் இருக்கும்.
- மின்மினிப் பூச்சி மின்னுவதற்குக் காரணம், அதன் தோலின் கீழ் உள்ள லுயூசிபெரின் என்னும் வேதிப் பொருளாகும்.
- வெற்றிலையில், கால்சியம் 280 மி.கி., பாஸ்பரஸ் 40 மி.கி., இரும்புச்சத்து 7 மி.கி., கரோட்டின் 5760 மி.கி., வைட்டமின் பி. 0.8 மி.கி., வைட்டமின் சி 5.0 மி.கி. ஆகியவை உள்ளன.
- உப்பு நகரம் என்று அழைக்கப்படுவது சகாரா பாலைவனத்திலுள்ள டெகாஸ்லா.
- அன்டார்டிகாவில் பாம்புகள் இல்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கென்யா நாட்டின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த குழுவினர் சந்திப்பு

கென்யா நாட்டின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த 13 பேர்கள் கொண்ட குழுவினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஒரு வார கால சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை நேரில் பார்வையிட்டனர். இதனையடுத்து 12.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்துப் பேசினர். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்ற தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டம் முதலான பல்வேறுத் திட்டங்கள் குறித்து தங்களது வெகுவான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டனர். மேலும், பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை நேரில் பார்வையிட்டதாகவும், இத்திட்டப் பயன்களை தமிழக மக்கள் பெற்றிருப்பதை நேரில் கண்ணுற்றதாகவும் அவர்கள் தெரிவித்துக் கொண்டனர். கென்யா நாட்டிலும் இதேபோன்ற தேவைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அக்குழுவினர், இதுபோன்ற திட்டங்களை தங்கள் நாட்டிலும் செயல்படுத்த இருப்பதாகத் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இக்குழுவினருக்கு தமது வாழ்த்துகளையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள். ❖

துளிகள்...

- ❏ முதன் முதலில் ஆங்கில அகராதியைத் தயாரித்தவர் (Naowesbster) நோஹ்வெப்ஸ்டர் என்ற அமெரிக்கர் ஆவார்.
- ❏ பேச்சு வழக்கில் சொல்லப்படும் ஒரு காத தூரம் என்பது பத்து மைல்களாகும்.
- ❏ ஒட்டும் அஞ்சல் தலைகள் முதன் முதலில் 1840ஆம் ஆண்டில் அறிமுகமாயின.

முந்திரி விவசாயிகள் பயன்பெற முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முன்னிலையில், 12.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் உள்ள முந்திரி விவசாயிகள் பயன்பெறும் வகையில் 10.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் அமைத்திட தமிழ்நாடு அரசுக்கும், மைய அரசின் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு குழுமத்திற்கும், (Agricultural and Processed Food Products Export Development Authority - APEDA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசின் சார்பாக வேளாண்மைத்துறை செயலாளர் திரு. பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., அவர்களும், APEDA நிறுவனத்தின் சார்பாக அதன் துணைப் பொதுமேலாளர் திரு.ஹர்பல்சிங் (Mr.Harpal Singh, Deputy General Manager, APEDA) அவர்களும் கையெழுத்திட்டனர்.

முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே இந்தியா முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் முந்திரி பயிரிடும் மாநிலங்களில் தமிழ்நாடு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் 95,500 எக்டேர் நிலப்பரப்பில் முந்திரி பயிரிடப்பட்டு சுமார் 40 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,200 மெட்ரிக் டன் முந்திரி, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா மற்றுமுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் முந்திரி பயிரிடும் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், முந்திரி உற்பத்தியைப் பெருக்கி பதனிடும் தொழிற்சாலைகளின் திறனளவை முழுமையாகப் பயன்படுத்திடவும், வேலைவாய்ப்புகளைப் பெரிய அளவில் உருவாக்கிடவும், முந்திரி பதனிடும் தொழிற்சாலைகளையும் ஏற்றுமதிக்கான வசதிகளையும், தமிழ்நாட்டில் சிறப்பாகப் பெருக்கிடும் வகையில், கடலூரில் 10.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார்துறை பங்கேற்புடன், வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

இதன் அடிப்படையில், 12.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முன்னிலையில், கடலூரில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம் அமைத்திட, தமிழ்நாடு அரசுக்கும், மைய அரசின் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு குழுமத்திற்கும் (Agricultural and Processed Food Products Export Development Authority - APEDA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மைய அரசின் அபீடா நிறுவனம், உணவு பதனிடும் அமைச்சகம் மற்றும் தேசியத் தோட்டக் கலை வாரியம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு அரசு இந்த முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலத்தை தனியார் பங்களிப்போடு கடலூரில் அமைக்கின்றது.

இந்த ஏற்றுமதி மண்டலத்தில் நல்ல முறையில் முந்திரியை விளைவிப்பதற்கான விரிவாக்கப் பணிகள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் ஆகியவை அறிமுகப்படுத்தப்படும். இது தவிர, தனியார் துறை மூலமாக பழக்கூழ் நிலையம், முந்திரி பதப்படுத்தும் நிலையம், முந்திரிக் கொட்டை பிரிப்பு நிலையம், குளிர்பதன கிட்டங்கி, சிப்பம் கட்டும் அறை, ஆய்வக வசதிகள் ஆகிய நவீன உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், இந்த ஏற்றுமதி மண்டலத்தில், ஏற்றுமதி குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி மற்றும் பன்னாட்டு விற்பனை பற்றிய பயிற்சி போன்றவைகள் மேற்கொள்ளப்படும்.

கடலூரில் அமைக்கப்பட உள்ள முந்திரிக்கான இந்த ஏற்றுமதி மண்டலத்தின் மூலம் முந்திரி ஏற்றுமதி இன்னும் மூன்று ஆண்டுகளில் ரூபாய் 100 கோடியாக உயர்வதுடன், புதிதாக 20 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் நபர்கள் வரை வேலைவாய்ப்பைப் பெற்றிட ஏதுவாகும்.

இந்த நிகழ்வில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கே. பாண்டுரங்கன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார்நாகேந்திரன், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் திரு. ஆர்.முருகையா பாண்டியன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., தொழில்துறை செயலாளர் திரு. ரமேஷ்ராம் மிஸ்ரா, இ.ஆ.ப., மற்றும் வேளாண் விற்பனைக் குழு ஆணையர் திரு.கே. கணேசன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் பங்கேற்றனர்.

❖ ❖ ❖

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 115ஆவது பிறந்த நாளையொட்டி 29–4–2005 அன்று சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக் கூடிய புதிய வீடுகள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 24.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

26.12.2004 அன்று, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை சுனாமிப் பேரலைகள் பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் மாநிலத்தின் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வீடுகளையும், உடைமைகளையும் இழந்ததுடன், வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்தனர். எதிர்பாராத இந்த இயற்கை இன்னலின் விளைவாக, 8,000–க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்ததுடன் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வீடுகளையும் வாழ்நாள் முழுவதும் தாங்கள் சேமித்த பொருட்களையும் இழந்து பெரும் துன்பத்துக்கு உள்ளாயின.

சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தால் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் அத்தொழிலைச் சார்ந்துள்ள ஏறத்தாழ மூன்று இலட்சம் குடும்பங்களுக்கும் உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குச் சிறிது காலம் பிடிக்கும் என்கின்ற காரணத்தால், அக்குடும்பங்கள் அன்றாட வாழ்க்கை நடத்திடத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏப்ரல் 2005 முடிய வழங்கிடவும் நான் ஆணையிட்டேன். பாதிப்படைந்த மீனவர்கள் வலை, கட்டுமரம், படகுகள், விசைப் படகுகள் ஆகியவற்றை வாங்குவதற்குத் தேவையான மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறு தொழில் செய்வோர், நிலங்கள் பாதிக்கப்பட்டோர், ஆதரவற்றோர், விதவைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் போன்ற ஒவ்வொரு பிரிவினருக்கும் தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சுனாமியால் பாதிப்பு அடைந்த குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், எனது அரசு எடுத்து வருகிறது. இதுவரை தமிழக அரசு சுனாமி நிவாரணப் பணிகளுக்காக, 902 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் வகையில், வீடு இழந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இயற்கைச் சீற்றத்தைத் தாங்கக் கூடிய தரமான நிரந்தர வீடுகள் கட்டித் தரப்பட வேண்டியது அடுத்த கட்டப் பணி ஆகும்.

இவ்வாறு நிரந்தர வீடுகள் கட்டித் தரும் பணியில் தன்னார்வ அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச மறுவாழ்வு அமைப்புகள் பங்கேற்க வேண்டும் என்று தமிழக அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று நிரந்தர வீடுகள் கட்டித் தர பல நிறுவனங்கள் முன் வந்துள்ளன. சுனாமியால்

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த அமைப்புகள் மூலம் கட்டித்தரப்பட உள்ள வீடுகளையும் தமிழக அரசால் கட்டப்பட உள்ள வீடுகளையும், ஒழுங்கு அமைப்புடனும் விதிமுறைகளுக்கு உட்பட்டும் கட்ட வேண்டியது அவசியமாகும். எனவே இதற்கு ஏதுவாக சுனாமி நிவாரண வீடுகள் கட்டுமானக் கொள்கை ஒன்றை வகுத்தளிக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது.

கடற்கரையை ஒட்டி உள்ள பகுதிகளில் வீடுகள் கட்டப்படும் போது, மைய அரசால் 1991–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கடற்கரையோர கட்டுப்பாட்டு விதிகளை, அதாவது, Coastal Regulation Zone Notifications-ஐ பின்பற்றித் தான் வீடுகள் கட்டப்பட வேண்டும். தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை மாவட்டங்கள் பெரும்பாலும் CRZ-2 மற்றும் CRZ-3 ஆகிய வகைப்பாடுகளின் கீழ் வருவன ஆகும்.

நகரங்களைச் சார்ந்த பெருமளவில் கட்டுமான வளர்ச்சி அடைந்த பகுதிகள் CRZ-2-ன் கீழ் வரும். ஏனைய கிராமப் பகுதிகள் CRZ-3-ன் கீழ் வருகின்றன. இவ்விரண்டு பகுதிகளிலும் ஏற்கெனவே அதாவது, 1991ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட கட்டடங்கள் பழுதடைந்து இருந்தால் அவற்றைப் புதுப்பித்துக் கட்டலாம். புதிய கட்டடங்கள் எழுப்புவதற்கு கூடுதலாகக் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை, கட்டடத்தின் உயரம், காலியாக இருக்க வேண்டிய பகுதி போன்றவை குறித்து சில விதிமுறைகள் உள்ளன. பொதுவாக கடல் உயர்மட்ட அளவிலிருந்து, அதாவது, – High Tide Line- லிருந்து 200 மீட்டர் வரை உள்ள பகுதி எந்தவிதமான மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படக் கூடாத No Development Zone ஆகும்.

கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள மக்கள் தங்கள் படகுகள் மற்றும் வலைகளை வைத்துக் கொள்வதற்கும் தங்களது மீன்பிடித் தொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்கும் ஏதுவாக கடலுக்கு அருகில் இருக்க வேண்டியது அவசியம் ஆகும். அதே நேரம் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டு அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதும் அவசியம் ஆகும்.

எனவே, இதற்கு ஏற்ற வகையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 1,30,000 குடும்பங்களுக்கு அவரவர் விரும்புகின்ற இடங்களில் புதிய தரமான இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக் கூடிய கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகத் தேவைப்படும் நிலத்தை அரசே இலவசமாக வழங்கும். ஒவ்வொரு வீடும் 1,50,000 ரூபாய் செலவில் 300 முதல் 325 சதுர அடி கட்டடப் பரப்பளவு கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு குடியிருப்பு வளாகமும் முறையாகத் திட்டமிடப்பட்டு குடிநீர், சாலை வசதி, தெரு விளக்குகள், மழைநீர் சேகரிப்பு, வடிகால்கள், சமுதாயக் கூடம், சத்துணவுக் கூடம் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கும். சென்னை மற்றும்

திருவள்ளூர் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாகத் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட குடியிருப்புகள் கட்டித் தரப்படும். ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 235 முதல் 250 சதுர அடி பரப்பு அளவு கொண்டதாக இருக்கும். இந்தப் புதிய வீடுகள் கட்டும் மாபெரும் திட்டத்திற்கு ஏறத்தாழ 1,950 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டத்திற்கு மைய அரசும், உலக வங்கியும் பெருமளவு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பகுதி பாதிப்படைந்த காரை வீடுகளைப் பழுது பார்க்க சேத மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிதி உதவி அளிக்கப்படும்:–

20,000 ரூபாய் வரை சேத மதிப்பீடு இருந்தால், முழு மானியமாக 20,000 ரூபாய் வரை வழங்கப்படும். சேத மதிப்பீடு 20,001 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரை இருந்தால் குறைந்தபட்சத் தொகையான 20,000 ரூபாய் மற்றும் 20,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு 75 சதவிகிதம் நிதி உதவி வழங்கப்படும். 50,000 ரூபாய்க்கும் அதிகமாகச் சேத மதிப்பீடு இருப்பின் குறைந்தபட்சத் தொகையாக 42,500 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய்க்கும் அதிகமானச் சேத மதிப்பீட்டில் 50 சதவிகிதம் நிதி உதவி வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு வீட்டிற்கு 75,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

இம்மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும் போது கீழ்க்கண்ட பொது விதிமுறைகளைக் கடைப்பிடிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது:

கடல் உயர்மட்ட அளவு - High Tide Line– இல் இருந்து 200 மீட்டர் தொலைவுக்குள் உள்ள பகுதி

கடற்கரையோர கட்டுப்பாடு விதிமுறைகளின் படி, 200 மீட்டருக்குள் இருந்த சேதமடைந்த வீடுகள் 1991ஆம் ஆண்டுக்கு முன்பே உரிய அங்கீகாரத்துடன் கட்டப்பட்டு இருந்தால் மட்டுமே மீண்டும் பழுது பார்க்க இயலும். எனவே, முற்றிலும் அல்லது பெரும்பகுதி பாதிப்பு அடைந்துள்ள அனைத்துக் கூரை மற்றும் காரை வீடுகளின் உரிமையாளர்கள் விரும்பினால், 200 மீட்டருக்கு அப்பால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய புதிய வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். அவ்வாறு அவர்கள் விரும்பாமல் சேதமடைந்த தங்கள் பழைய வீடுகளையே புதுப்பித்துக் கொள்ள விரும்பினால், அவர்கள் தாங்களே பழுது பார்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். 200 மீட்டருக்குள் உள்ள பாதிப்பு அடையாத காரை வீடுகளில் உள்ள குடும்பங்களும் பாதுகாப்பு கருதி அரசு தரும் மாற்று இடத்தில் வீடு பெற விரும்பினால், அவர்களுக்கு அரசு சார்பிலோ, தொண்டு நிறுவனங்கள் சார்பிலோ புதிய வீடுகள் கட்டித் தரப்படும்.

200 மீட்டரிலிருந்து 500 மீட்டருக்குள் இருக்கும் பகுதி

1. இப்பகுதியில் முழுவதுமோ அன்றி பகுதியாகவோ, பாதிப்பு அடைந்துள்ள அனைத்துக் கூரை வீடுகள் மற்றும் முழுவதும் பாதிப்பு அடைந்துள்ள காரை வீடுகள் புதியதாகக் கட்டப்படும். 500 மீட்டருக்கு அப்பால் வசிக்க விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு, புதிய வீடுகள்

500 மீட்டருக்கு அப்பால் கட்டித் தரப்படும். அவ்வாறு செல்ல விரும்பாதவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களிலேயே வீடுகள் கட்டித் தரப்படும்.

2. பகுதி பாதிப்பு அடைந்த காரை வீடுகளில் உள்ளவர்களுக்கு, 500 மீட்டருக்கு அப்பால் வீடுகள் கட்டித் தரப்படும். அவ்வாறு செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை எனில், அவர்களது வீடுகளைப் பழுது பார்க்க ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு நிதி உதவி அளிக்கப்படும்.

500 மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி

1. முழுவதும் அல்லது பகுதி பாதிப்பு அடைந்துள்ள அனைத்துக் கூரை வீடுகள் மற்றும் முழுப் பாதிப்பு அடைந்த காரை வீடுகள் ஆகியவற்றுக்கு மாற்றாக புதிய வீடுகள் அந்தந்த இடங்களிலேயே கட்டித் தரப்படும்.

2. பகுதி பாதிப்பு அடைந்துள்ள காரை வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு அரசு நிதி உதவி வழங்கும்.

பொது விதிமுறைகள்

1. புதிய வீடுகள் கட்ட அரசு இலவசமாக நிலம் வழங்கும். இவ்வாறு வழங்கப்படும் நிலத்தின் பரப்பு கிராமப் பகுதிகளில் 3 சென்ட் ஆகவும், நகராட்சிப் பகுதிகளில் 1½ சென்ட் ஆகவும் இருக்கும்.

2. புதிய வீடுகள் கட்டித் தர முன்வரும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அப்பணியை மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். இந்நிறுவனங்கள் புதிய வீடுகள் கட்டித் தருவதற்கும் சேதம் அடைந்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்கும் தங்களது நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

3. வீடுகளின் உரிமையாளர்கள் தாங்களே வீடு கட்டிக்கொள்ள விரும்பினால் அதற்கு அனுமதிக்கப் படுவார்கள். அரசு நிர்ணயிக்கும் உச்ச வரம்புத் தொகைக்கு உட்பட்டு கட்டடப் பணிகளின் முன்னேற்றத்திற்கேற்ப நிதி உதவி அளிக்கப்படும்.

4. தொண்டு நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவியுடன் வீட்டு உரிமையாளர்கள் ஆகியோரால் வீடுகள் கட்ட முடியாத நிலையில் அரசே அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும்.

5. புதிய வீடுகள் வழங்கப்படும் அனைத்து இனங்களிலும் பழைய இடம் மற்றும் வீடு அரசுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

6. புதிய வீடுகள் கட்டித் தருவதால் காலி செய்யப்படும் இடங்கள் தடை ஆணைப் புத்தகத்தில் பதியப்பட்டு பொதுப் பயன்களுக்காக ஒதுக்கி வைக்கப்படும். மேற்கண்ட இடங்களில் படகுகள் வலைகள் போன்றவற்றை வைக்க மீனவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

7. வல்லுநர்களின் உதவியோடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரி வரைபடம் மற்றும் விவரக் குறிப்பீடுகளின் அடிப்படையில் அதாவது Designs and Specifications அடிப்படையில் வீடுகள் கட்டப்பட வேண்டும்.

8. புதிதாகக் கட்டப்படும் அனைத்து வீடுகளும் 10 ஆண்டுகளுக்கு காப்பீடு செய்யப்படும்.

9. புதிய வீடுகளின் உரிமை மனைவி மற்றும் கணவர் பெயரில் கூட்டாக வழங்கப்படும். இருவரில் யாரேனும் ஒருவர் உயிருடன் இல்லாமல் இருந்தால், உயிருடன் இருப்பவர் பெயரோடு முதல் குழந்தையின் பெயரையும் இணைத்து வீடுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட வீடுகளை 10 ஆண்டுகளுக்கு விற்பனை அல்லது அடமானம் செய்வது தடை செய்யப்படும். மனைவி தன் பெயரில் உள்ள சொத்து உரிமையை கணவருக்கு எந்த வகையில் எழுதித் தந்தாலும் சட்டப்படி அது செல்லுபடி ஆகாது.

மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி, அனைத்து மாவட்டங்களிலும் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளவும், அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பம் மற்றும் நிலத்தின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப சிறு மாற்றங்களைச் செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். அவ்வாறு மாற்றங்களைச் செய்யும் போது சம்பந்தப்பட்ட குடியிருப்புப் பகுதி முழுமைக்கும் ஒரே மாதிரியான நடைமுறையைப் பின்பற்றவும்; அரசால் நியமிக்கப்பட்டுள்ள கிராம அளவிலான குழுக்களை கலந்து ஆலோசிக்கவும்; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

சுனாமி நிவாரண வீடுகள் கட்டுமானம் தொடர்பாக எனது அரசால் வகுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை கடலோரப் பகுதிகளில் நேர்த்தியோடும், பாதுகாப்போடும் நிரந்தர வீடுகள் அமைவதை உறுதி செய்திட வழி வகுக்கும். இந்தக் கொள்கை சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள கடலோரப் பகுதி மக்களாலும், அனைத்து அமைப்புகளாலும் பெரிதும் வரவேற்கப்படும் என நம்புகிறேன். இந்தக் கொள்கையின் அடிப்படையில் கட்டப்படும் வீடுகள் மக்களுக்குப் பாதுகாப்பான நிரந்தர மறுவாழ்வை அளிக்கும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். ✱

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் மாணவ – மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24.3.2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மாணவ, மாணவிகள் தங்கிப் பயிலுவதற்கு ஏதுவாக 27 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்ட 90 விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்து, 100 புதிய விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், தமிழ்நாட்டில் 972 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 770 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் போதிய வசதிகளின்றி இயங்கி வந்தன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்த கொள்கை முடிவின்படி, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளுக்கும் போதிய கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, குளியலறை வசதி, எரிவாயு இணைப்பு, மின்விசிறி ஆகிய வசதிகளுடன் சொந்தக் கட்டடங்களில் அமைந்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். அதன்படி 28.35 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட 90 விடுதிக் கட்டடங்களை 24.3.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். இதன்மூலம் 4,500 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004–2005ஆம் ஆண்டில் 100 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்ட 31.50 கோடி ரூபாய் அனுமதியளித்து உத்தரவிட்டார்கள். இதன்படி, 5,000 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கான அடிக் கற்களை நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுசாமி, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு. ஏ. நாகராஜன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ - மாணவியருக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்படும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை - 24.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தை தலைசிறந்த மாநிலமாக, முன்னணி மாநிலமாகத் திகழச் செய்வதில் அம்மாநிலத்தில் உள்ள மனித வள ஆற்றல் மாபெரும் பங்கு வகிக்கிறது. இத்தகைய மனித வள ஆற்றலை மேம்படுத்துவதில் கல்வியின் பங்கு மிக மிக இன்றியமையாதது ஆகும். எனவேதான் எனது அரசு கல்வித் துறையின் பால் தனி அக்கறையும் அதீத கவனமும் கொண்டு அத்துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்விக்கு மட்டும் 4,348.01 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதே இதனைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

2001-ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு கடந்த நான்கு ஆண்டுகளில் கல்வித் துறையில் பல்வேறு சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டு அத்திட்டங்கள் யாவும் மிகச் செம்மையுடன் நிறைவேற்றப்பட்டு நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. 2003-2004ஆம் ஆண்டிலேயே தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப்பள்ளி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளி வசதியும் தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. 2001-2002ஆம் ஆண்டில், தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் இடைநிற்றல் வீதம் 16 விழுக்காடாக இருந்தது. பள்ளிக் கல்விக்காக, பல்வேறுத் திட்டங்களை எனது அரசு நிறைவேற்றியதன் காரணமாக 2004-2005 ஆம்

ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்து உள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை யாகும்.

"அனைவருக்கும் கல்வித்" திட்டத்தினை செம்மையாகச் செயல்படுத்துவதில் ஏனைய மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்று மத்திய அரசு பாராட்டி உள்ளது. உலக வங்கி ஐரோப்பியக் கூட்டமைப்பு மற்றும் மைய அரசின் பிரதிநிதிகள் அடங்கிய, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கூட்டு ஆய்வுக்குழு சமீபத்தில் தமிழ்நாட்டில் "அனைவருக்கும் கல்வித்" திட்டம் செயலாக்கப்படுவதைப் பாராட்டியதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதியை ஏற்படுத்தித் தருவதிலும் அனைத்து வயது குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதிலும் தமிழ்நாடு தொடர்ந்து சீரான முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. தமிழ்நாட்டின் திட்டச் செயல்பாடுகளின் வேகம் மற்றும் தரம் நன்றாக உள்ளது. எனவே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோளை இம்மாநிலம், மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே அடைந்து விடும்" என்று அந்த ஆய்வுக்குழு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

19.3.2005 அன்று சென்னையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் ஆய்வுக் கூட்டத்தை நடத்திய மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்சிங் அவர்கள், அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் தமிழக அரசின் சிறப்பான செயல்பாட்டை வெகுவாகப் பாராட்டி உள்ளார்.

2010ஆம் ஆண்டுக்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டு பள்ளிக் கல்வியை, அளிப்பது என்பது "அனைவருக்கும் கல்வித்" திட்டத்தின் அகில இந்திய அளவிலான குறிக்கோள் ஆகும். தமிழகத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசு வகுத்துள்ள இந்த இலக்குக்கு முன்னதாகவே இக்குறிக்கோளை நாம் அடைந்து விடுவோம் என்பது உறுதி. எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10-ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்த பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ மாணவியர் இடையில் நிறுத்தி விடாமல், தொடர்ந்து கல்வி கற்க ஊக்கமளிக்கும் வகையில், தற்போது அவர்களுக்கு இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தற்போது 5ஆம் வகுப்பு வரை படிக்கின்ற, மாணவ, மாணவியர் அனைவருக்கும் இலவசமாக பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அதேபோல் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில், 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் 85 இலட்சம் மாணவ, மாணவியருக்கு 46.45 கோடி ரூபாய் செலவில் இலவசப் பாடநூல்களை ஆண்டுதோறும் அரசு வழங்கி வருகிறது.

இந்நிலையில், பள்ளிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தொடர்ந்து கல்வி பயில உற்சாகம் அளித்து அவர்களது பெற்றோருடைய கல்விச் செலவின் பளுவைக் குறைத்து, தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 10ஆம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வி அளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், சில வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோலின்படி, இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுவதை மாற்றி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்குவது என்று நான் முடிவு எடுத்துள்ளேன்.

இதன்படி, 1ஆம் வகுப்பில் இருந்து 10ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கும் தேவையான பாடநூல்கள் அனைத்தும் இலவசமாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்

என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் இத்திட்டம் வரும் கல்வி ஆண்டு முதலே அதாவது, 2005–2006ஆம் ஆண்டில் இருந்தே செயல் படுத்தப்படும்.

தற்போது விரிவாக்கப் பட்டுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், 6ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை படிக்கும் 12 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு, 15 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதல் செலவாகும். இதன் மூலம், வரும் கல்வி ஆண்டில் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியரின் மொத்த எண்ணிக்கை 97 இலட்சமாக உயரும் என்பதையும்; இதற்காக எனது அரசு மொத்தம் 61.45 கோடி ரூபாய் செலவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய், விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியைத் தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவ்வாறான சூழ்நிலைகளில் அத்தகைய குழந்தைகள் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில், அவர்களது கல்விப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். இந்தப் புதிய திட்டத்தின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும். இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று வரும் 1 கோடியே 12 இலட்சம் மாணவ, மாணவியரில் ஒருவர் கூட எந்தக் காரணத்தாலும் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடும் எதிர்பாராமல் அவர்களது குடும்பத்தில் ஏற்படும் இழப்பால் அந்தக் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற மனித நேயத்தோடும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நான் விழைந்துள்ளேன்.

தமிழகத்தின் மனித வள ஆற்றலை மேம்படுத்தும் வகையில், அனைத்துக் குழந்தைகளுக்கும் இடைநிலைக் கல்வி வழங்கப்படுவதை வெற்றிகரமாக நிறைவேற்றிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள எனது அரசு உறுதி பூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ◻

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
'தமிழ்ப் புத்தாண்டு' வாழ்த்துச் செய்தி

தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளில் என் அன்புக்குரிய அனைத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும், என் அகம் கனிந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டு இனிமையும் இன்பமும் தமிழர் இல்லந்தோறும் கொழிக்கின்ற இணையற்ற ஆண்டாய் மலரட்டும்.

புதிய சாதனைகளை நாம் படைக்கின்ற ஆண்டாகவும், புதிய வெற்றிகளை நாம் பெறுகின்ற ஆண்டாகவும், புத்தாண்டு விளங்கட்டும்! வழிமறிக்கும் தடைகளை உடைப்போம்! வளமார்ந்த தமிழகம் படைப்போம்! தழைக்கட்டும் நலங்கள்! கொழிக்கட்டும் வளங்கள்!

தமிழகத் தமிழர்க்கு மட்டுமன்றி தரணிவாழ் தமிழர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என் உளமார்ந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்வதில் உவகை அடைகிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 28.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் வளமைக்கும் கிராமங்களில் வாழும் மக்களின் மேன்மைக்கும் வேளாண் தொழிலே அடிப்படையாக அமைந்துள்ளது. விவசாயம் தழைத்து ஓங்கினால் கிராமங்கள் செழித்து ஓங்கும் – கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அதனால்தான் எனது அரசு வேளாண் தொழிலின் மேம்பாட்டுக்கு பலப் பல உயரிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

வேளாண் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

வேளாண்மை வளம் பெற்றிட ஏர் ஓட்டுதல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளை சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், அளந்து மூட்டைகள் ஆக்குதல் என ஒவ்வொரு கட்டத்திலும் விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு மிகவும் இன்றியமையாதது ஆக உள்ளது. வேளாண் சாகுபடி பெருகி கிராம மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் எனில் நிலம் என்னும் நல்லாள் உதவிட வேண்டும் – நீர் என்னும் நல்லாள் ஒத்துழைக்க வேண்டும் – விவசாயத் தொழிலாளர்கள் எல்லோரும் தங்கள் நல் உழைப்பை உவப்புடன் வழங்கிட வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் முழுத் திறனுடன் தங்களது உழைப்பை நல்கிடும் வகையில் அவர்கள் சிரமம் இன்றி வாழ்க்கை நடத்திட ஏதுவான ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

தமிழகத்தில் ஏறத்தாழ 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் உள்ளனர். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர்களாகவே உள்ளனர். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது நமது கடமை ஆகும். அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அதிகரிக்கப்பட்டால் தான் அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படும். கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த முடியாத நிலை இருந்தது. இந்த ஆண்டு பருவ மழை நல்ல முறையில் பெய்ததன் காரணமாக விவசாயம் புதிய வளம் பெற்றுள்ளது. இந்தச் சூழ்நிலையில், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவது பொருத்தமாக அமையும் என்பதால் அதனை உயர்த்திட நான் தற்போது முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, விவசாயத் தொழிலாளர்கள் உயர்ந்த ஊதியம் பெற்றிடும் வகையில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, முதனிலை அறிவிக்கை – Preliminary Notification ஒன்றை உடனடியாக வெளியிட எனது அரசு முடிவு செய்துள்ளது.

தங்களது சொந்த ஏர் மற்றும் உழவு மாடுகளுடன் உழவுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாயாக உள்ளது. இதை 150 ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. பணி அமர்த்துபவரால் ஏர் மற்றும் உழவு மாடுகள் வழங்கப்படுமாயின் உழவுப் பணிக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 54 ரூபாய் ஊதியம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதனை 80 ரூபாயாக உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளை சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், நெல்லை அளந்து மூட்டைகள் ஆக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள ஆண் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாயாக உள்ளது. இதனை 80 ரூபாயாக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. அதேபோன்று, இதே

வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு தற்போது குறைந்தபட்ச ஊதியம் 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதனை 70 ரூபாயாக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. வழங்கப்படும் ஊதியம் பணமாக வழங்கப்படாமல் சாகுபடிப் பொருளாக வழங்கப்பட்டால் மொத்த மகசூலில் எட்டில் ஒரு பங்கு ஊதியமாக வழங்கப்பட வேண்டும். பணம் அல்லது பொருள் இவ்விரண்டில் அதிகமானது எதுவோ அது வழங்கப்பட வேண்டும்.

இதேபோன்று, நெல் அல்லாத பிற பயிர்கள் அறுவடை செய்யும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இதே அளவில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

விதைத்தல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல் மற்றும் களை எடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு, 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி, ஆண் தொழிலாளர்களுக்கு, நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும்; பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது.

வரப்புகளையும் வயல்களையும் சீர் அமைத்தல், தேனீ வளர்த்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய வேலைகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என்று குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு, 45 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி, ஆண் தொழிலாளர்களுக்கு, 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும்; பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் விவசாயத் தொழிலாளர்களுக்கு பணி அமர்த்துபவரால் உணவு வழங்கப்படுமாயின், அவ்வாறு வழங்கப்படும் அந்த உணவின் பண மதிப்பு ஊதியத்தில் இருந்து கழிக்கப்படக் கூடாது.

வேலை நேரங்களிலும், பணியின் தன்மையிலும் வேறுபாடு இல்லாது தொழில் புரியும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர் இருபாலருக்கும், 1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின்படி சம ஊதியம் வழங்கப் பட வேண்டும்.

மேலே தெரிவித்த குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் அரசுப் பண்ணைகளிலும், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் பண்ணைகளிலும், பணிபுரியும் தொழிலாளர் களுக்கும் பொருந்துவன ஆகும்.

இவ்வாறு குறைந்தபட்ச ஊதியங்களை உயர்த்து வதற்கான முதனிலை அறிவிக்கை – Preliminary Notification – உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என்று நான் ஆணையிட்டுள்ளேன். குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் இரண்டு மாத காலத்திற்குள் தெரிவிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும். அவ்வாறு பெறப்படும் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளை ஆய்வு செய்து இறுதி அறிவிக்கையை இவ்வாண்டு ஜூன் மாதத்தில் எனது அரசு வெளியிடும்.

தொழில்களில் உன்னதத் தொழில் என்று போற்றப்படும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள் சிறந்த வாழ்க்கைத் தரம் பெறுவதை உறுதி செய்யும் வகையில், அவர்கள் மேற்கொள்ளும் வேலைகளுக்கு என நிர்ணயிக்கப் பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்களைக் கணிசமாக உயர்த்தி வழங்கிட எனது அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை, விவசாயத் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ள அனைவராலும் வெகுவாக வரவேற்கப்படும் என்ற என் நம்பிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

சர்.பிட்டி தியாகராயர் அவர்களின் 154ஆவது பிறந்த நாளையொட்டி 27-4-2005 அன்று சென்னை மாநகராட்சி வளாகம் – ரிப்பன் கட்டடத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அறிவுச் சுடரொளி அம்பேத்கர்

'அண்ணல்' அம்பேத்கர் அவர்கள், 20ஆம் நூற்றாண்டின், இந்திய வரலாற்றைப் பொருத்த வரையில், சட்டத் துறையில், ஒரு சகாப்தம். அரசியல் அரங்கில், ஒரு புரட்சி அத்தியாயம். சமுதாய சீர்திருத்த சிந்தனையில், ஒரு திருப்புமுனை. அவர் நவீன இந்தியாவை உருவாக்கிய, வரலாற்று நாயகர்களின் வரிசையில், முதலிடத்தைப் பெற்றவர். அழியாப் புகழ் பெற்று, நமது நெஞ்சங்களில் எல்லாம், நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டவர், மாமனிதர் டாக்டர் அம்பேத்கர்.

எப்படி, தமிழ்நாட்டில், தந்தை பெரியார் அவர்களின் வடிவில் தோன்றிய, 'பகுத்தறிவுப் பேரொளி', தூங்கிக் கிடந்த முற்போக்குச் சிந்தனைகளைத் தட்டி எழுப்பி, சிந்தனைத் தடத்தை முன்னேற்றப் பாதையில் திருப்பிவிட்டதோ அதைப் போலவே, அண்ணல் அம்பேத்கர் என்ற உத்தமரின் வடிவில் தோன்றிய, 'அறிவுச் சுடரொளி', நமது இந்தியத் திருநாட்டையே எழுச்சி கொள்ளச் செய்தது.

'பகுத்தறிவுப் பகலவன்' என்று, பாரெங்கும் போற்றப்பட்ட தந்தை பெரியார், தென்புலத்தில் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளுக்கு, ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த, அதே கால கட்டத்தில் தான், வடபுலத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், தாழ்த்தப்பட்ட இன மக்களின் உயர்வுக்காகவும், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், இந்திய அரசியல் ஏட்டில், ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருந்தார்.

எவ்வாறு ஒரு தனி மனிதர், தன்னுடைய அறிவின் ஆற்றலாலும், பண்பின் தகைமையாலும், சமுதாய இடர்ப்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, தான் மேற்கொண்ட துறையில், சாதனை படைத்து, வரலாற்று நாயகராக, உயர முடியும் என்பதற்கு, அண்ணல் அம்பேத்கர்

அவர்களின் 'வாழ்க்கை வரலாறு', ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றால், அது மிகையாகாது.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின், பல்முனை மேம்பாட்டிற்கு, கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர், அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். மற்ற தலைவர்களுக்கு இல்லாத, ஒரு தனிச் சிறப்பு, டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு உண்டு. செல்வச் செழிப்பும், செல்வாக்கும், பரம்பரைப் பாரம்பரியமும் உள்ளவர்கள்தான், நாட்டை ஆளவும், சட்டங்களை இயற்றவும் முடியும் என்ற எண்ணத்தை; தனது வாழ்க்கையின் மூலம், தகர்த்தெறிந்து காட்டியவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே உதித்து; சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து; அரசியல் நிர்ணய சட்டத்தைத் தயாரிக்கும், மகத்தான பணியில் ஈடுபட்டு; சமதர்ம, சமூக நீதித் தத்துவங்களை, வேரூன்றச் செய்ய உதவியவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள்.

அண்ணல் அம்பேத்கர், ஒரு தனி மனிதர் அல்ல; ஒரு மாபெரும் இயக்கம்! அவரது இலட்சியங்கள், ஒரு தனி மனிதரின் சிந்தனைகள் அல்ல; ஒரு சமுதாயத்தைப் பண்படுத்தி, வளம் பெறச் செய்யும் ஆயுதங்கள்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

(புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி – 3)

விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 28.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விரைந்து விசாரித்துத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக நாடெங்கிலும் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று 11ஆவது நிதிக்குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் 49 விரைவு நீதிமன்றங்கள் நிறுவிட மைய அரசு ஏற்பளித்தது. இதன்படி முதற்கட்டமாக, 30 விரைவு நீதிமன்றங்களை அமைத்திட 3.8.2001 அன்று நான் ஆணையிட்டேன். இந்த நீதிமன்றங்கள் 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. 18.12.2001 அன்று அடுத்த கட்டமாக, மேலும் 19 விரைவு நீதிமன்றங்கள் அமைத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்த கூடுதல் விரைவு நீதிமன்றங்கள் 2002ஆம் ஆண்டு பிப்ரவரி / மார்ச் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே விரைவு நீதிமன்றங்களை நிறுவுவதில் சாதனை புரிந்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். விரைவு நீதிமன்றங்களை அமைத்து வழக்குகளை விரைந்து விசாரித்து நீதி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று மத்திய அரசு பாராட்டியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 49 விரைவு நீதிமன்றங்கள் மூலம் 31.1.2005 வரை 1,23,503 வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விரைவு நீதிமன்றங்கள் அமைத்துச் செயல்படுத்தப் படுவதற்கான முழு செலவினையும் மைய அரசு ஏற்க வேண்டும். இதன்படி இந்த விரைவு நீதிமன்றங்களைச் செயல்படுத்த மத்திய அரசு மொத்தம் 14.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு 31.3.2005 அன்றுடன் முடிவடைகிறது.

1.4.2005 அன்று முதல் விரைவு நீதிமன்றங்களைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு இதுவரை ஒதுக்கீடு செய்யாததால், தமிழகத்தில் உள்ள இந்த விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படுமா என்று தெரியாமல் வழக்குத் தொடுத்து உள்ள பொதுமக்கள் குழப்பத்தில் தவிப்பதாகத் தெரிவித்து தேவையற்ற ஒரு கலக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்க சிலர் முனைந்துள்ளனர். இது மிகவும் துரதிருஷ்டவசமானதும் வருந்தத்தக்கதும் ஆகும்.

விரைவு நீதிமன்றங்களில் 26,455 வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே,இந்த விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படுவது மிகவும் இன்றியமையாதது ஆகும். வழக்கு தொடுப்போருக்கு விரைவு நீதிமன்றங்கள் மூலம் நீதி விரைவில் கிடைக்கப் பெறுவதால் விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பது எனது எண்ணம் ஆகும். 18.9.2004 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் நான் கலந்து கொண்டு விரைவு நீதிமன்றங்கள் 31.3.2005க்கு பிறகும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான நிதியை மைய அரசு ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். மேலும் விரைவு நீதிமன்றங்களை 31.3.2005க்குப் பிறகும் நீட்டிப்பது குறித்த மைய அரசின் நிலைப்பாட்டினை தெரிவிக்குமாறு 18.3.2005 அன்று மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறோம். ஒரு வேளை மைய அரசிடமிருந்து 31.3.2005க்குள் இதற்குச் சாதகமான பதில் வரவில்லை என்றாலும் தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்களும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று நான் ஆணை பிறப்பித்துள்ளேன். அவ்வாறு இந்த நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படத் தேவைப்படும் நிதியான 5 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசே வழங்கிடவும் ஆணையிட்டுள்ளேன். அதன் அடிப்படையில், தமிழகத்தில் தற்போதுள்ள 49 விரைவு நீதிமன்றங்களும் மேலும் ஓர் ஆண்டுக்குத் தொடர்ந்து செயல்பட 24.3.2005ஆம் நாளன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் உள்ள விரைவு நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்திற்கு இடமில்லை என்றும் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 49 விரைவு நீதிமன்றங்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து செயல்படும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ★

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 29.3.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாடு வளர்ச்சி பெறவும், உயர்நிலை அடைந்திடவும் உறுதுணையாக இருப்பவர்கள் தொழிலாளர்கள். தாங்கள் பிறந்த பொன் நாடு மேன்மை அடைந்திட தங்களது இரத்தத்தை வியர்வைத் துளிகளாக்கி, நல்உழைப்பை நல்குபவர்கள், தொழிலாளர்கள். புது உலகை உருவாக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்கள், தொழிலாளர்கள்.

அத்தகைய தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் அமைப்புச் சாரா தொழிலாளர்களாகவே உள்ளனர். இத்தகைய அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவது அரசின் கடமை ஆகும்.

நாடு நலம் பெறுவதற்காகத் தங்களது உடல் உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும்; அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்தி, அவர்களது வாழ்வு வளம் பெற்றிடவும்; சமுதாயத்தில் அவர்களுக்குத் தக்கப் பாதுகாப்பு அளித்திடவும்; இந்தியாவிலேயே முதல் முறையாக, 1982ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் என்ற ஒரு முழுமையான சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில், உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயல்படுத்துவதற்கு வாரியத்தினை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது, 1994ஆம் ஆண்டில், கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினேன். மேலும், 1994ஆம் ஆண்டே தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் என்ற ஒரு திட்டத்தையும் உருவாக்கினேன். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், 1995ஆம் ஆண்டு மே மாதம் முதல் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு

வருகிறார்கள். தற்போது, 6,30,812 நபர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் கீழ், கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் உயிர் இழக்கும்போது, அவர்களது குடும்பங்களுக்கும்; விபத்தில் நிரந்தர முடக்கமோ அல்லது உடல் உறுப்புகள் இழப்போ ஏற்படும் போது அத்தகைய தொழிலாளர்களுக்கும் காப்பீட்டுத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டது.

1994ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நான் முடிவு எடுத்தேன். 2001-2002ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தொய்வின்றி, தொடர்ந்து செயல்படுத்தப்படுவதற்கு ஏதுவான வழிமுறைகளைக் கண்டறிய, ஓய்வூதிய நிபுணர் ஒருவர் (Actuary) நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் சிறப்புப் பணிப் பிரிவு – அதாவது Task Force ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சிறப்புப் பணிப் பிரிவு அறிக்கையின் அடிப்படையில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, 60 வயது நிரம்பிய கட்டுமானத் தொழிலாளர்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தொடர்ந்து 5 வருடங்களாவது பதிவு பெற்ற உறுப்பினராக இருப்பாராயின், அவருக்கு மாதந்தோறும் 200 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்படும். 60 வயதுக்கு முன்னரேயே, நிரந்தர உடல் முடக்கம் ஏற்பட்டாலோ; அல்லது உடல் நலக் குறைவால் பணி செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலோ; அவர்களும் மாதந்தோறும் 200 ரூபாய் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர் ஆவர்.

இவ்வாறு வழங்கப்படும் ஓய்வூதியத்தை, மேற்சொன்ன தகுதிகளின் அடிப்படையில், 2000ஆம் ஆண்டு முதலே அவரவர் தகுதி பெற்ற தேதியிலிருந்தே வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். இத் திட்டத்தின்படி, நாளது தேதி வரை, 60 வயது நிரம்பிய 3,021 கட்டுமானத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள். இதற்கு ஏற்படும் செலவு 1.46 கோடி ரூபாய் ஆகும். மேலும், அடுத்த ஆண்டு அதாவது 2005-2006ஆம் ஆண்டு ஓய்வூதியம் பெறத் தகுதி அடையும் 1,752 நபர்களுக்கான ஓய்வூதியத்தையும் சேர்த்து 4,773 நபர்களுக்கு வரும் நிதி ஆண்டுக்கு 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவாகும்.

கட்டுமானப் பணியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் உறுதியான தங்களது உடல் திறனில் அடிப்படையிலேயே அப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும், நிரந்தர உடல் முடக்கம் மற்றும் உடல் நலக் குறைவு ஏற்படும் போதும், எந்தப் பணியும் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, ஒரு அவ நம்பிக்கையுடன் வாழ வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர். அத்தகையோர் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையைப் பெறும் வகையிலும், ஒட்டுமொத்த கட்டுமானத் தொழிலாளர் வர்க்கமும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பைப் பெறுகின்ற வகையிலும் அவர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டம் வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

முதன்முதலில் தொலைபேசி இணைப்பகம் இலண்டனில் 1879இல் தொடங்கப்பட்டது. அப்போது தொலைபேசியை பயன்படுத்தியவர்கள் 7 பேர்கள் மட்டுமே.

குமரி மாவட்டத்தில் முழுச் சுகாதாரம்

வன வளமும், மலை வளமும், கடல் வளமும் ஒருங்கே பெற்ற எழில்மிகு மாவட்டம் கன்னியாகுமரி. இம்மாவட்டத்தின் அனைத்து கிராமங்களும், நகரங்களைப் போன்றே மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புகளோடு திகழ்கின்றன. அனைத்து இயற்கைச் செல்வங்களையும் பெற்றிருப்பினும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, சுற்றுச்சூழலை சுகாதாரமாகப் பாதுகாப்பது அனைவரின் கடமை என்ற அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுச் சுகாதார இயக்கத்தை அரசு செயல்படுத்தியது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், நகர்புறத்தில் மட்டுமே மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ளதால் அப்பகுதிகளில் மட்டுமே சுகாதார வசதிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கையோடு இணைந்து வாழும் கிராம மக்கள் திறந்த வெளியையே கழிப்பிடங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையை அகற்றி கிராமப் பகுதிகளையும் சுகாதாரமாகப் பேணி, நோய் – நொடியற்ற சூழலை உருவாக்குவதே முழுச் சுகாதார இயக்கத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுச் சுகாதார இயக்கம் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கழிப்பறை வசதியில்லாத தனி நபர் வீடுகள், குடியிருப்புகள், பள்ளிகள், கணக்கெடுக்கப்பட்டு, முழுச் சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்த முன்னோடி மாவட்டமாக, குமரி மாவட்டம் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.5.81 கோடி மதிப்பீட்டில் 2001 ஆம் ஆண்டு முதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கழிப்பறை வசதியில்லாத, 38,800 தனி நபர் இல்லங்கள், 250 அரசுப் பள்ளிகள், 390 குழந்தைகள் நல மையங்கள் ஆகியவற்றில் கழிப்பறைகள் கட்ட அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவி மற்றும் பயனாளிகள் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. முழுச் சுகாதார இயக்கம் குறித்தான விழிப்புணர்வினை கிராம மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் சைக்கிள் பேரணிகள், பள்ளி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்ட மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள், கிராமியக் கலைஞர்களது இசை நிகழ்ச்சிகள், தெருமுனை நாடகங்கள், துண்டுப் பிரசுரங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள், தொலைக்காட்சி பிரச்சாரங்கள், சுவரொட்டிகள் மற்றும் பத்திரிகைச் செய்திகள் போன்ற தகவல் பரிமாற்றச் சாதனங்கள் மூலம் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் தொண்டு நிறுவனங்கள், தேசிய சீரமைப்புப்படை தொண்டர்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளிலுள்ள நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் மூலமும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

தனி நபர் கழிப்பறைகள் கட்ட ரூ.500 மதிப்பிலான 2 மூட்டை சிமெண்ட் கழிப்பறைக் கோப்பை உட்பட கழிப்பறை சாதனங்கள் இலவசமாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. பயனாளிகள் தங்களது தேவை மற்றும் பொருளாதார வசதிக்கேற்ப இப்பொருட்களை பயன்படுத்தி கழிப்பறையினைக் கட்டிக்கொள்ளலாம்.

இத்திட்டம் குமரி மாவட்டத்திலுள்ள 9 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள 99 கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக முழுமையான சுகாதார வசதி பெற்ற ஊராட்சி ஒன்றியங்களாக ஒரே நாளில் தக்கலை மற்றும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியங்கள் அறிவிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து திருவட்டார் ஊராட்சி ஒன்றியமும் முழுச் சுகாதார வசதிபெற்ற ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்கப்பட்டது. இந்தியா விலேயே முதலாவதாக குமரி மாவட்டத்தில் தான் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் முழுச் சுகாதார வசதிப் பெற்றவைகளாகத் திகழ்கின்றன. குமரி மாவட்டத்தில் மீதமுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களிலும் முழுச் சுகாதாரத்

திட்டப்பணிகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கடந்த ஜனவரி 31ஆம் தேதி வரை கழிப்பறைகளுடன் கூடிய வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்புகளின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்களின் 45 ஆயிரத்து 579 வீடுகளில் 44 ஆயிரத்து 709 வீடுகளில்

கழிப்பறைகள் உள்ளன. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் 1 இலட்சத்து 93 ஆயிரத்து 661 வீடுகளில் 1 இலட்சத்து 81 ஆயிரத்து 835 வீடுகளில் கழிப்பறை வசதி உள்ளன. மொத்தம் 94.69 சதவிகிதம் வீடுகள் கழிப்பறை வசதிகளுடன் மாநிலத்திலே முதல் இடத்தில் கும்ரி மாவட்டம் திகழ்கிறது.

அகில இந்திய அளவில் முழுச் சுகாதாரத் திட்டத்தை சிறப்பாக அமல்படுத்தும் ஊராட்சிகளுக்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை ஆண்டுதோறும் வழங்கும் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதிற்காக இந்த ஆண்டிற்கு தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 11 ஊராட்சிகளும் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த மேல்புறம் ஊராட்சி ஒன்றியமும் தேர்வுச் செய்யப்பட்டன. ஒரு முழு ஊராட்சி ஒன்றியமும் விருதிற்கு தேர்வுச் செய்யப்பட்ட பெருமை குமரி மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது. மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் தேவகோடு, மலையடி, மஞ்சாலுமூடு, முழுக்கோடு, புலியூர்சாலை, வெள்ளாங்கோடு, விளவங்கோடு, மருதன்கோடு, வன்னியூர், மாங்கோடு ஆகிய 10 ஊராட்சிகள் உள்ளன.

கிராம் புரஸ்கார் விருதிற்காக தேர்வு செய்யப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:–

கன்னியாகுமரி மாவட்டம் கற்றவர்கள் அதிகம் உள்ள மாவட்டம் என்பதால் முழுச் சுகாதார இயக்கம் குறித்த விழிப்புணர்வு மாவட்ட மக்களிடம் நன்றாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் முழுச் சுகாதாரத் திட்டம் சிறப்பாகச் செயல்பட மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மிகுந்த ஆர்வமுடன் ஒத்துழைத்தமையால் குமரி மாவட்டத்தில் மொத்தமுள்ள 99 கிராம ஊராட்சிகளில் இதுவரை 53 ஊராட்சிகள் முழுச் சுகாதாரம் பெற்றவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஊராட்சிகளும் முழுச் சுகாதாரம் பெற்றவைகளாக அறிவிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழுச் சுகாதார இயக்கம் உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் ரூ.10 கோடியில் சுகாதாரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



முழுச் சுகாதாரத் திட்டத்தில் சிறப்பாக விளங்கும் மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் இந்த ஆண்டிற்கு அகில இந்திய அளவில் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதிற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது குமரி மாவட்டத்திற்கு கிடைத்துள்ள பெருமை மட்டுமன்றி திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தும் தமிழக அரசிற்கு கிடைத்த அங்கீகாரமும் ஆகும்.

– கு. தாணப்பா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி

தமிழகத்தின் இயற்கை வளத்தை மேம்படுத்த

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 4.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லுகின்ற போது, பெருகி வரும் தொழிற்சாலைகள், நகர்மயம் ஆதல் ஆகியன தவிர்க்க இயலாதவையாக அமைந்து விடுகின்றன. அத்துடன் மக்கள் தொகைப் பெருக்கமும் சேர்கின்ற போது இதனுடைய விளைவுகள் இயற்கைச் சூழலுக்கு பங்கம் விளைவித்து சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்து விடுகின்றன. நாட்டின் வளர்ச்சிப் பணிகளும் சுற்றுச் சூழல் மேம்பாட்டுப் பணிகளும் ஒன்றுக்கு ஒன்று பாதிப்பு இல்லாத வகையில் பின்னிப் பிணைந்து செயல்படுவதன் மூலமே நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்க முடியும். எனவே தான் தமிழகத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் எந்த அளவு உயரிய முக்கியத்துவத்தை நான் அளிக்கின்றேனோ, அதே அளவு முக்கியத்துவத்தை இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் நான் அளித்து வருகிறேன்.

காடுகளை ஒட்டி உள்ள கிராமங்களில் வாழ்கின்ற மக்கள், அதிகரித்து வரும் தங்களது தேவைக்கு ஏற்ப, தாங்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளை அபரிமிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாகவும், காட்டுத் தீ முதலான இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் காடுகள் வளம் குன்றிப் போகின்றன. இவ்வாறு வனங்கள் வளம் குன்றிப் போவதன் காரணமாக சுற்றுச் சூழல் சம நிலை வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இந்தப் பாதிப்பினை நீக்கும் வகையிலும்; வனப் பகுதிகளைச் சார்ந்துள்ள கிராம மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும்; தமிழகத்தில் உள்ள வன வளத்தைப் பெருக்கிட வேண்டும் என்று முடிவெடுத்து எனது முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 1994ஆம் ஆண்டிலேயே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தைப் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்திட முனைந்தேன். அதன் அடிப்படையில் வன வளர்ப்புத் திட்டம் தயார் செய்யப்பட்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கோரப்பட்டது. இந்த நிதி உதவி பெறப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு வரை செயல் படுத்தப்பட்டது. 684 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் மூலம் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பில் உள்ள வளம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டதுடன் இக்காடுகளை ஒட்டி உள்ள 1,367 கிராமங்களிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

செயற்கைக் கோள் படங்கள் தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் வனப் பரப்பு மற்றும் காடுகளின் அடர்த்தி உயர்வு அடைந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல் படுத்தப்பட்டதனாலேயே இது சாத்தியம் ஆயிற்று. எனவே, தமிழகத்தின் வன வளத்தை மேலும் மேம்படுத்த வேண்டும், வளம் குன்றிய காடுகளின் வளத்தை மேலும் பெருக்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்ந்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை II திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு எடுத்தேன். இதன் அடிப்படையில்,ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி

நிறுவனத்தின் உதவி கோரி திட்டக் கருத்துரு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கான கடன் பெறப்படாத நிலையில் இந்தக் காடு வளர்ப்புத் திட்டம் தொய்வின்றிச் செயல்படும் வகையில், 2004–2005ஆம் ஆண்டுக்கு மாநில அரசே நிதி ஒதுக்கீடு வழங்க ஆணையிட்டேன். அதன் அடிப்படையில்,மாநில அரசு 69.09 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. தற்போது தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை II என்ற திட்டத்தைச் செயல்படுத்திட ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனம் கடன் உதவி வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் உரிய கடன் உதவி

வழங்குகின்ற ஒப்பந்தம், மைய அரசுக்கும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி நிறுவனத்திற்கும் இடையே 31.3.2005 அன்று கையொப்பம் ஆகி உள்ளது. இதன் மூலம், நடப்பு நிதி ஆண்டு முதல், 8 ஆண்டுகளுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனம் 409.08 கோடி ரூபாய் கடன் வழங்கும். மாநில அரசு தனது பங்காக 158.34 கோடி ரூபாய் வழங்கும்.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை IIன் கீழ் ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்பு மேம்பாடு, ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு ஆகியவற்றின் கீழ் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்பு மேம்பாடுத் திட்டத்தின் வாயிலாக 650 கிராமங்களிலும் அதனை ஒட்டிய 4,06,250 ஏக்கர் பரப்புள்ள வளம் குன்றிய காடுகளிலும் மேம்பாட்டுப் பணிகளும், காடு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். அதே போல மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக மலைவாழ் மக்கள் வசிக்கின்ற 150 கிராமங்களில் மக்கள் நலப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த கிராமங்களை ஒட்டிய 37,500 ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் வனத் தோட்டம் அமைக்கும் பணிகள், மண் மற்றும் நீர்ப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் மழை நீர் சேகரிப்புப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். வனங்கள் பாதுகாக்கப்படுவதில் பொது மக்களின் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இப்பணிகளுக்காக 218.91 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

திட்டக் கிராமங்களில் குறைந்த பட்ச அடிப்படை சமுதாய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். கிராம மக்களின் வருவாய் பெருக்கிட மாற்று வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, வருவாய் பெருக்கிட வழிவகை செய்யப்படும். இதன் வாயிலாக, காடுகள் அழிக்கப்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்படும். 800 கிராமங்களில் மேற்கொள்ளப்பட உள்ள இந்தப் பணிகளுக்காக 86.94 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

மேலும், திட்டப் பணிகளை மேற்கொள்ளும் களப் பணியாளர்களுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், பயிற்சி, வன விரிவாக்கப் பணிகள் போன்றவையும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள வளம் குன்றிய காடுகளை மேம்படுத்தி, அதனை ஒட்டி உள்ள கிராமப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும் இந்தப் புதிய திட்டத்தின் வாயிலாக, தமிழகத்தின் இயற்கை வளம் மேம்படும்; வன வளம் பெருகி சுற்றுச் சூழல் சம நிலை உருவாகும். மேலும் வனங்களை ஒட்டி உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் வனங்களுடன் இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ளவும்; வனச் செல்வங்களைப் பாதுகாத்து அதே நேரத்தில் தங்களது வாழ்க்கை வளத்தை மேம்படுத்திக் கொள்ளவும்; இந்தத் திட்டம் வழி வகுக்கும் என்று தெரிவித்து அமைகிறேன். □

தமிழக அதிரடிப்படையின் சாதனையால் இந்தியாவின் காவல்துறைக்கு உலக அளவில் கௌரவம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு பிரதமர் அவர்களே,

மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களே,

மாநில முதலமைச்சர்களே மற்றும் மத்திய மாநில முதுநிலை அலுவலர்களே,

உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டியதற்காகவும், அதில் எனது கருத்துகளை அளிக்க வாய்ப்பு அளித்ததற்காகவும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகமயமாக்கல் கொள்கையால் இந்தியப் பொருளாதாரம் அதிகரித்து ஏற்றுமதி வர்த்தகமும் பெருகியுள்ள சூழ்நிலையில் அதற்கு நாம் கொடுக்க வேண்டிய விலையும் அதிகரித்துள்ளது. திட்டமிடப்பட்டுள்ள குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல், பணப்பரிமாற்றம், கள்ளச் சந்தையில் ஆயுத விற்பனை ஆகியவற்றின் களமாக மட்டுமின்றி அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதத்துடன் கைகோர்க்கும் நிலையும் இங்கு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உடனான நமக்குள்ள பிரச்சினையால் இந்தியாவில் தீவிரவாதம் என்பது அண்டை மாநிலப் பிரச்சினை என்ற அளவிலேயே இதுவரை அணுகப்பட்டுள்ளது. இந்த நிலை அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் பயங்கரவாதத்துக்கு உள்ளாகி 2001 செப்டம்பர் 11இல் தகர்க்கப்பட்ட பிறகு மாறியுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் இந்தத் தாக்கத்திற்கு ஆளாகி உள்ளது. சில மாநிலங்களில் வகுப்புக் கலவரம்

நேர்வதற்கானச் சூழலில், இதனைத் தூண்டி விட அடிப்படைவாதிகள் நிதியுதவி செய்கின்ற நிலையும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தீவிரவாதிகளின் செயல்கள் குறித்த பிரச்சினைகளை அணுகுவதும், மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவியை மறுஆய்வு செய்வதும் அவசியமாகிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனை

இத்தகையச் சூழலிலும் தமிழ்நாட்டைப் பொருத்த வரை சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு வருவதை நான் உறுதி செய்துள்ளேன். நாட்டிலேயே சட்டம் ஒழுங்கைக் காப்பதில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் சிறப்பு அதிரடிப் படையினர் நன்கு திட்டமிட்டுச் செயல்படுத்திய முயற்சியின் பயனாகத் தமிழகம் மற்றும் அண்டை மாநிலமான கர்நாடகாவுக்கும் 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைவலியாக இருந்து தொல்லை கொடுத்து வந்த காட்டுக் கொள்ளையன் வீரப்பன் நடந்த 2004ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் தேதி தமிழக அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டான்.

எனது அரசு அதிரடிப்படைக்கு அளித்த முழு ஒத்துழைப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான அதிநவீனத் தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றுடன் அவர்களுக்கிடையே உள்ள கட்டுக்கோப்பான நடவடிக்கை, தகவல்களைத் திரட்டித் தருவதில் உள்ள உத்தி, அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவை காரணமாக வீரப்பனைக் கொன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை புரிந்து இருக்கிறோம்.

உறுதியான முடிவுகள்

இந்தச் சரித்திர சாதனை இந்தியாவில் மட்டுமல்ல உலக அரங்கிலும் மிகப்பெரும் பாராட்டைப் பெற்றது. இதன்மூலம் இந்தியாவின் காவல்துறைக்கு உலக அளவில் கௌரவம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல; காவல் துறையினருக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தால் அவர்கள் தங்கள் திறமையையும் அர்ப்பணிப்பு உணர்வையும் வெளிப்படுத்தி உலக சாதனை புரிவார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

தீவிரவாதிகள், நக்சலைட்டுகள் ஆகியோரை அடியோடு ஒடுக்குவதற்கு மென்மையான அணுகுமுறை என்பது ஒருபோதும் உதவாது. அது அதில் ஈடுபடுகிறவர்களைப் பலவீனப்படுத் துவதற்குப் பதில் பலப்படுத்தியதாக அமைந்துவிடும். எனவே இதுபோன்ற தருணங்களில் முடிவுகள் எடுக்கும்போது குழப்பமற்ற உறுதியான முடிவுகள் எடுத்து, எனது அரசு தீவிரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்கி இருக்கிறது.

தீவிரவாதிகளின் ஊடுருவல் தடுப்பு

இவ்வாறு, எனது அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் எல்.டி.டி.ஈ யினரின் நடமாட்டம் முற்றிலும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இந்த அமைப்பு 1967 சட்டத்தின் கீழும், 2002ஆம் ஆண்டு பொடா சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் தேசிய விடுதலை இயக்கம் மற்றும் தமிழ்நாடு விடுதலைப் படை போன்ற இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவி வருகின்றன என்ற செய்தியின் அடிப்படையில் 1908ஆம் ஆண்டு குற்றத் திருத்தச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டன.

மேலும், மாநில அரசின் பரிந்துரையின் பேரில் இந்த அமைப்புகளை மத்திய அரசும் தடை செய்தது. இருப்பினும் தமிழ்நாட்டில் வாழும் 52 ஆயிரம் இலங்கை அகதிகளில் 17 ஆயிரம் பேர் முகாமிற்கு வெளியே வாழும் நிலையில், இவர்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது. என்னால் 1994இல் அமைக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்புக் குழுவினரால் 1076 கி.மீ. நீளமுள்ள தமிழகக் கடலோரப் பகுதிகளில் 60 சோதனைச் சாவடிகள் அமைத்தும், 441 கடலோரக் கிராமப்புறங்களில் உள்ள விழிப்புணர்வுக் குழுக்களின் உதவியால் எரிபொருள்கள், மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப் படுவதும், தீவிரவாதிகள் ஊடுருவுவதும் தடுக்கப்பட்டன.

அதன்பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தப் படையை வலுப்படுத்தவில்லை. சில மாதங்களுக்கு முன் கடலோரப் பாதுகாப்புப் படைப் பிரிவை வலுப்படுத்த ஒரு தனிப்படைக்கு (Special Battalion) அனுமதி அளித்தேன்.

இதன்மூலம் எல்.டி.டி.ஈ. நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஒன்றிணைந்த தனி அமைப்பு தேவை

இந்தப் படைப் பிரிவுக்குப் போதுமான அளவிற்கு ஆயுதங்கள் வழங்க 25 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு விரிவான திட்டம் ஒன்றை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருந்தேன். அதற்கு விரைவில் அனுமதி அளிக்க வேண்டும்.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க ஒரு புதிய அணுகுமுறை தற்போது அவசியமாகிறது. தீவிரவாத அமைப்புகளுடன் சட்ட விரோத் ஆயுதக் கடத்தல்காரர்கள், போதைப்பொருள் கடத்தும் குற்றவாளிகள் என்று கைகோர்த்துச் செயல்படும் விபரீதப் போக்கைக் கட்டுப்படுத்த மாநில காவல்துறை புலனாய்வுப் பிரிவு சுங்க மற்றும் உள்நாட்டு வருவாய்துறை போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, கடலோரப் பாதுகாப்புப் படை இவற்றோடு ``ரா`` என்னும் நுண்ணறிவுப் புலனாய்வு அமைப்பும் ஒன்றிணைந்த தனி அமைப்பு தேவைப்படுகிறது. அப்படியொரு அமைப்பு உருவாக வழிகாண வேண்டும்.

தீவிரவாதத்தை வளர்க்க அந்நியச் சக்திகளின் நிதியுதவி

நக்சலைட்டுகளால் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு மிரட்டல் ஏற்பட்டுள்ளது. மிகுந்த வறுமை, கடன்சுமை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சுதந்திரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர்களை மக்கள் யுத்தக்குழு போன்ற அமைப்புகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தீவிரவாதத்தை வளர்த்து வருகின்றனர். இந்த அமைப்புகளுக்கு அந்நியச் சக்திகளின் நிதியுதவிகளும் உள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில் நக்சலைட்டு தீவிரவாதம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம் மற்றும் கருநாடகாவில் இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. மேலும் தமிழ்நாட்டின் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் எல்லைகள் இந்த மாநிலங்களுடன்



மும்முனை இணைப்புப் பகுதியாக உள்ளது. இந்த மும்முனைப் பகுதி இவர்களின் செயல்பாட்டுக்கு ஏற்ற இடமாக உள்ளது.

இந்நிலையில் நக்சலைட்டுகள் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவும் ஆபத்து உள்ளதால் இந்தக் குழுக்களை 1908ஆம் ஆண்டு குற்றத் திருத்த சட்டத்தின் மூலம் சட்ட விரோதக் குழுக்கள் என்று அறிவிக்கச் செய்தேன்.

மாற்றுச் சட்டம் உருவாவது அவசியம்

தொடர்ந்து, நக்சல் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் தேவையான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்துள்ளது. இந்த நடவடிக்கையில் அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தலைமறைவாக வாழும் முக்கியப் புள்ளிகள் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த நக்சல் குழுக்களின் நடமாட்டம் வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி காட்டுப்பகுதிகளில் நடமாட வாய்ப்புள்ளதாக உளவுப் பிரிவின் மூலம் தெரியவந்துள்ளது. இந்நிலையில் அண்டை மாநிலங்களின் உளவுப்பிரிவு முடுக்கி விடப்படவேண்டியது மட்டுமல்ல, அண்டை மாநிலங்களிடையே ஒருங்கிணைப்பும் தேவைப் படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு யோசனையை முன்வைக்க விரும்புகிறேன். அண்டை மாநிலங்களோடு எல்லைகளைக் கொண்ட மாநிலங்களிடையே ஒருங்கிணைந்த முயற்சி அவசியம். அதற்கு வகைசெய்ய வேண்டும்.

வன்முறை – பயங்கரவாதத்துக்கு ஆளாகாத மாநிலம் இல்லை என்ற நிலையில், பொடா பயங்கரவாதச் சட்டம் ரத்து செய்யப்பட்டுள்ள சூழலில் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் ஓர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இதனைச் சரிசெய்யும் விதமாக மாநில அரசுகளுக்குப் போதிய அதிகாரங்கள் அளிக்கும் வகையில் மாற்றுச்சட்டம் ஒன்று உருவாவது அவசியமாகிறது. அதற்கு விரைவில் வகை செய்யப்பட வேண்டும்.

நக்சல்களை ஒடுக்குவதில் இருவழி அணுகுமுறையைக் கையாண்டு அதில் நாங்கள் வெற்றியும் பெற்றிருக்கிறோம். அவை, நக்சல்களைத் தனிமைப்படுத்துவது; இன்னொன்று தலைமறைவாக இருந்து செயல்படும்

நக்சல்களுக்குத் துணை நிற்கும் சக்திகளை ஒடுக்குவது ஆகியவை ஆகும். நக்சல்களை தனிமைப்படுத்துவது என்றால் நக்சல்கள் பெரும்பாலும் பயன்படுத்தும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பது ஒரு திட்டமாகும். அந்த வகையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுக்க என கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் சாலைகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்த 2004–05ஆம் ஆண்டு ரூபாய் 7 கோடி ஒதுக்கப்பட்டது. மேலும், இப்பகுதியில் மேற்கொள்ளப் பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பதற்றமான கிராமங்கள் எனக் கண்டறியப்பட்ட 47 கிராமங்களில் இருந்து இராணுவம் மற்றும் காவல் துறைப் பணிக்கு 400 இளைஞர்கள் பயிற்சிக்கு எனத் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் இருந்து 78 இளைஞர்கள் இந்திய இராணுவத்திற்குத் தேர்வு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் 62 பெண்கள் மாநில காவல் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நக்சலைட்டு தீவிரவாதிகள் அதிகமாகக் காணப்படும் மாநிலங்களில் உள்ள இளைஞர்களை இராணுவம், பாராமிலிட்டரி மற்றும் மாநில காவல்துறையில் பணியாற்ற பெருமளவில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இளைஞர் மற்றும் காவல்துறையினர் இணைந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது குக்கிராமங் களுக்கென நடமாடும் நூலகங்களை இயக்குவது என்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய அளவில் 55 மாவட்டங்கள் நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று கண்டறியப்பட்டு மத்திய அரசால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அமைதியும் சமாதான நிலையும்

ஆனால் அதுபோன்ற உதவிகள் எதுவும் தமிழகத்துக்கு ஒதுக்கப்படவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆந்திராவைப் போன்று தமிழகத்திலும் பாதிப்புகள் உண்டு.

ஆனாலும் உதவி அளிக்கப்படவில்லை. இதுவரை இந்தப் பகுதிகளுக்குத் தமிழக அரசுதான் தனது சொந்தச் செலவில் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு வழங்கும் நடைமுறையில் மாற்றம் வேண்டும்.

எனது அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளால் மதக் கலவரங்கள் பெருமளவில் குறைந்துள்ளன. குறிப்பாக, இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, சிவசேனா மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்பினர் 2004ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் தேதியில் இருந்து 26ஆம் தேதி வரை நடத்திய விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் அமைதியான முறையில் நடைபெற்றன.

மதவாதப் பிரச்சினைகளிலும் அரசு கடந்த 3 ஆண்டுகளாக எடுத்துவரும் நடவடிக்கைகள் தேவையான நல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. 2003ஆம் ஆண்டு மதக் கலவரங்கள் எண்ணிக்கை 11இல் இருந்து கடந்த 2004ஆம் ஆண்டில் 2 ஆக குறைந்துள்ளன. 31.3.2005 வரை எந்த சம்பவமும் நடைபெறவில்லை. மாவட்டங்கள்தோறும் அமைதிக் குழுக்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டு அமைதியும், சமாதான நிலைமையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது; சாதிமோதலும் இல்லை.

இதன் பயனாகக் காவல்துறை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் 2001ஆம் ஆண்டு 32 ஆக இருந்தது. 2002இல் 20 ஆக குறைந்து, 2003-2004இல் 13 மற்றும் 12 என்ற நிலையை எட்டியது. நடப்பாண்டில் இப்போது வரை இரண்டு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

பெண்களுக்கு அதிகாரம் மற்றும் சமூகத்தில் பாதுகாப்புப் போன்ற விஷயங்கள் என் இதயத்திற்கு நெருக்கமாக உள்ளவை. இதனைச் செயல்படுத்த கடந்த 1992ஆம் ஆண்டு முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் தொடங்கி வைத்தேன். அது தற்போது 195 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2.6.2003 முதல் பெண் கமாண்டோ படை என்னால் அமைக்கப்பட்டது. அவர்களுக்கு ஆண்கள் போலவே அதிநவீன ஆயுதங்கள், வாகனம் ஓட்டுதல், குதிரைச் சவாரி போன்ற அனைத்திலும் ஆண்களுக்கு நிகராகப் பயிற்சிகள் அளிக்கப் பட்டன.

தற்போது இதில் மொத்தம் 1,078 பெண் காவல் அதிகாரிகள் உள்ளனர். பெண்கள் தங்கள் பிரச்சினைகளுடன் பயம் இல்லாமல் நம்பிக்கை யுடன் அணுகும் வகையில் தற்போதுள்ள காவல் நிலையங்கள் அனைத்திலும் ஒரு பெண் துணை ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்களை நியமிக்க உத்தரவிட்டுள்ளேன். இதற்கென 881 பெண் துணை ஆய்வாளர்களும், 2,013 காவலர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி

முடிந்தவுடன் காவல் நிலையங்களில் பணி அமர்த்தப்படுவார்கள்.

இது தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் கலர் டி.வி., வி.சி.ஆர்., விழிப்புணர்வு கேசட்டுகள் கொண்ட நடமாடும் கலந்தாய்வு வாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கிராமப்புறங்களில் பெண்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க உதவும். இந்த முறைக்குப் பெண்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது.

பெருகிவரும் மக்கள் தொகை, தொழில் மயமாக்கல், வியாபார நிறுவனங்களின் பெருக்கம், பெரும் நகருக்கு அருகில் உள்ள பகுதிகளை நகர எல்லைக்குள் கொண்டு வர வேண்டிய சூழ்நிலையில் குற்றங்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவில் பெருகிவிட்டன. இதனைச் சமாளிக்க புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது.

சென்னைப் பெருநகரில் காவல்துறை ஆணையரக அதிகார எல்லையை விரிவுபடுத்தி சென்னை நகரில் இருக்கும் அனைத்துக் காவல் நிலையங்களையும் ஒருங்கிணைத்து அதற்கான அறிவிப்பை அண்மையில் வெளியிட்டு இருக்கிறேன். இதற்கென 22 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஒரு திட்டத்திற்கும் அனுமதி வழங்கி இருக்கிறேன். மேலும், செங்கல்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தைச் சேர்ந்த 41 சட்டம் ஒழுங்கு மற்றும் 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், சென்னைப் பெருநகர் ஆணையர் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்துள்ளேன். இதன் பயனாகப் புதிய இயக்குநரகத்தின் கீழ் 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்பட 155 காவல் நிலையங்கள் செயல்படும்.

காவலர்களுக்கு வீடுகள்

காவலர் குடியிருப்பு வசதியைப் பொருத்தவரை அவர்களுக்கென சிறந்த குடியிருப்புகளை வழங்கும் விஷயத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இதுவரை எனது அரசு 6,315 வீடுகளைக் கட்டியுள்ளது. 2004-2005ஆம் ஆண்டு மட்டும் ரூபாய் 94.25 கோடி செலவில் 2,449 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. காவலர் வீட்டு வசதிக்கென மத்திய அரசு வழங்கியுள்ள நிதி முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 20 சதவிகித முதல்நிலைக் காவலர்களுக்கு

குடியிருப்பு வழங்க மத்திய அரசு தேவையான நிதியுதவி வழங்க வேண்டும்.

நவீன யுகத்தில் குற்றங்களும் அதை செயல்படுத்துவதிலும் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் காவல் துறையினர் அதனைச் சமாளிக்கத் தேவையான கருவிகளை வழங்குவதில் சுணக்கம் கூடாது.

இந்த விஷயத்தில் மத்திய அரசு வழங்கி வரும் நிதியுதவி தொடர்ந்து குறைந்து கொண்டே

அமைதி, முன்னேற்றம் மற்றும் நல்லாட்சி என்ற கொள்கைகளின் அடிப்படையில்தான் மக்கள் ஆட்சி செய்ய நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளேன்.

பொது அமைதி ஏற்படுத்த வேண்டும்

குற்றமற்ற சமூகம் மற்றும் அச்சமற்ற நிலை என்பது தான் சமாதானத்திற்கான அடிப்படை விஷயங்கள். பொது அமைதியை நிலை நாட்டுவதற்குத் தீவிரவாதத்தை எதிர்கொள்ள நமது

வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (2001–2003) மத்திய அரசு வழங்கியுள்ள நிதி ரூ.136.20 கோடி மட்டுமே. இந்த நிதி எங்களால் முழுவதுமாகச் செலவழிக்கப்பட்ட நிலையிலும், கடந்த 2003–2004ஆம் ஆண்டு இந்த உதவி ரூ.52.47 கோடியாகக் குறைந்து 2004–2005ஆம் ஆண்டுக்கு ரூ.42.8 கோடியாக மேலும் குறைந்துவிட்டது.

தமிழகம் B2 மாநிலமாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசின் உதவி 60 சதவிகிதம் என்ற குறியீட்டுக்குள் உள்ள நிலையில் மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதில் சிரமம் உள்ளது.

மேலும், 12ஆவது நிதி கமிஷன் அறிக்கையிலும் இதற்கென எந்த ஒதுக்கீடும் அறிவிக்கப்படவில்லை.

நேரத்தைச் செலவிடாவிட்டால், விரைவான, நாம் விரும்பும் வேகமானப் பொருளாதார முன்னேற்றங்களை அடையமுடியாது. மக்களின் இந்த அடிப்படை விருப்பங்களை நிறைவேற்ற மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். இந்த முயற்சிக்கு மத்திய அரசு, கூடுதல் ஆதரவு அளிக்கும் என நான் நம்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
15.4.2005 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

தமிழ்நாட்டில் நோக்கியா செல்பேசித் தொழிற்சாலை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 6.4.2005

தொழில்நுட்பத் தகுதிகள் மிகுந்த மனித வள ஆற்றலை வெகுவாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழகம். இந்த ஆற்றலைப் பயன்படுத்தி பல வகைத் தொழில்களை வெற்றிகரமாக நடத்திட ஏற்றதும் வலுவானதுமான திறம் மிகுந்த தொழில் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு உருவாக்கி உள்ளது. இதன் பயனாக தொழில் முனைவோர் விரும்பி நாடி வரும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

2003–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நான் வெளியிட்ட புதிய தொழில் கொள்கையை மாண்புமிகு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும் வேலைவாய்ப்பு பெருகிடவும் அடிப்படையாக அமைவது தொழில் வளமே. இதனைக் கருத்தில் கொண்டே, "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம்" என்று பாடிய மகாகவி பாரதியார் "உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்று கூறினார். தமிழகத்தில் பாரதியின் கனவை நனவாக்கிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் பல்வேறு முனைப்பான முன் முயற்சிகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

பேரவை உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி இக்கொள்கையில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மேலும் புதிதாக முதலீடுகள் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் பற்றியும் இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விரிவான கொள்கை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்; போதிய அளவில் தரமான எரிசக்தி வழங்குதல்; விரிவான வரிச் சீர்திருத்தங்கள்; தொழிலாளர் சார் சீர்திருத்தங்கள்;

நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். 300 கோடி ரூபாய்க்கு மேற்படும் முதலீட்டுக்குச் சிறப்பு ஊக்க உதவித் தொகுப்பு அளிக்கப்படும் என்றும் இத்தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை செயல்படுத்தப் படுவதன் பயனாக தமிழ்நாட்டில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதிதாக முதலீடுகள் செய்வது தொடர்பாக மத்திய அரசிடம் ஏராளமான எண்ணிக்கையில் தாக்கல் செய்யப்படும் புதிய தொழில் முனைவோர் குறிப்பாணைகள் – Industrial Entrepreneur Memorandum - இதற்குச் சான்று பகர்கின்றன.

செல்லிடத் தொலைத் தொடர்புத் துறையில் உலக அளவில் தலையாய நிறுவனமாகத் திகழும் நோக்கியா (Nokia) நிறுவனம், இந்தியாவில் தன்னுடைய தயாரிப்புப் பிரிவை நிறுவ தமிழ்நாட்டில் சென்னையை இன்று தெரிவு செய்துள்ளது என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

செல்லிடத் தொலைபேசிகளின் உற்பத்தியில் உலக அளவில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களுள் நோக்கியா நிறுவனமும் ஒன்று. இன்றைக்கு உலகம் முழுவதும் விற்பனை ஆகும் செல்லிடத் தொலைபேசிகளுள் மூன்றில் ஒன்று நோக்கியா நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். பின்லாந்தைத் (Finland) தலைமை இடமாகக் கொண்ட நோக்கியா நிறுவனம், உலகெங்கிலும் 9 இடங்களில் தன்னுடைய உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்துள்ளது. சென்னையில் அமைய இருக்கின்ற இந்தப் புதிய தொழிற்சாலை இந்தியாவில் தொடங்கப்படும் முதலாவது ஆலையாகவும்; நோக்கியாவின் பத்தாவது ஆலையாகவும் அமையும். உலக அளவில் நோக்கியா நிறுவனப் பொருட்கள் ஆண்டு ஒன்றுக்கு 29.27 பில்லியன் யூரோ அதாவது 1,65,522 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை ஆகின்றன. நோக்கியா நிறுவனம் செல்லிடத் தொலைபேசிக் கருவிகள், தொழிலகத் தீர்வுகள் - Enterprise Solutions; பிணையச் சாதனங்கள் – Network Equipment - முதலிய பல்வேறுபட்டப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் நோக்கியா நிறுவனத்தின் முதலீட்டுத் திட்டங்கள் குறித்து அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் என்னிடம் விரிவாக எடுத்துக் கூறினர். நோக்கியா நிறுவனம், தன்னுடைய தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஏற்ற இடத்தைத் தெரிவு செய்வதற்காக பல மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு இடங்களில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. மிக நுணுக்கமாகவும், விரிவாகவும் ஆய்வு செய்த பிறகு நோக்கியா நிறுவனம் தன்னுடைய தொழிற்சாலையை அமைக்க சென்னையைத் தெரிவு செய்துள்ளது. சென்னையில் அமையப் பெற்றுள்ள மிகச் சிறந்த வசதிகள்; நேர்த்தியான அடிப்படைக் கட்டமைப்பு; சிறப்பான வணிக – இயற்கைச் சூழல் அமைப்பு; சிறப்பான சட்டம் – ஒழுங்கு பராமரிப்பு ஆகியன நோக்கியா நிறுவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

நோக்கியா நிறுவனம் தமிழ்நாட்டில் தனது தொழிற்சாலையை நிறுவிட ஸ்ரீபெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் ஓர் இடத்தைத் தெரிவு செய்துள்ளது. நோக்கியா நிறுவனம் ஏற்படுத்த உள்ள முதன்மையான ஆலையைத் தவிர துணைப் பாகங்களின் உற்பத்தியாளர்களும் நோக்கியா தொழிற்சாலையை ஒட்டி தமது தொழில் பிரிவுகளைத் தொடங்குவர். நோக்கியா நிறுவனத்தின் முதல் கட்ட முதலீடு மதிப்பு சுமார் 150 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது 675 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். துணைப் பாகங்கள் உற்பத்தியாளர்களும் 150 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 675 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்வர். இவ்வாறாக, முதல் கட்ட மொத்த முதலீடு 300 மில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 1,350 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். இதன் வாயிலாக, முதற்கட்டமாக சுமார் 1,200 பேர் நேரடி வேலைவாய்ப்பைப் பெறுவர். இதோடு மேலும் 6,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

ஸ்ரீ பெரும்புதூரில் நோக்கியா நிறுவனமும், சார்பு நிறுவனங்களும் தங்களது தொழிற் பிரிவுகளைத் தொடங்க உள்ள இடம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்படும். தொடக்கத்தில் 2 கோடியே 40 இலட்சம் செல்லிடத் தொலைபேசிக் கருவிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்தத் தொழிற்சாலை அதிநவீன தொழிற்சாலையாக அமையும். இந்த உற்பத்தித் திறன் பின்னர் மேலும் விரிவுபடுத்தப்படும். இங்கு தயாரிக்கப்படும் செல்லிடத் தொலைபேசிகள் உள்நாட்டில் விற்பனை செய்யப்படுவதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

இதுதொடர்பாக, நோக்கியா நிறுவனத்தின் உத்தேச முதலீடு தமிழக அரசு அளிக்கும் வசதிகள் மற்றும் ஆதரவுத் தொகுப்புதவி ஆகியவற்றை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் – Memorandum of Understanding ஒன்று நோக்கியா நிறுவனத்துடன் இன்று எனது முன்னிலையில் கையெழுத்து இடப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ★

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாங்கும் இயந்திரப் படகுகள், மோட்டார் மற்றும் இதரப் பொருள்களுக்கு முழு வரிவிலக்கு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 1.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் கடற்கரையோரக் கிராமங்களை அண்மையில் சுனாமி அலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கியதில், தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்த இலட்சக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர மறுவாழ்வு பெற்றிட தமிழக அரசு ஒல்லும் வகையெல்லாம் உதவிகளைச் செய்து வருகிறது. இதுவரை, 902 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரண உதவிகள் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களை நான் அறிவித்துள்ளேன். வீடு இழந்து பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் நிரந்தரமான, உறுதி வாய்ந்த வீட்டினைப் பெறும் வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான வீடுகள் கட்டுமானக் கொள்கையினை இந்த அவையில் கடந்த 24.3.2005 அன்று நான் அறிவித்தேன் என்பதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூறுவர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவர்கள் மீது தனி அக்கறை கொண்டு அவர்களது குடும்பங்கள் சுனாமியின் பாதிப்பில் இருந்து மீண்டு, இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும், மீன்பிடித் தொழிலை தொடர்ந்து நடத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் 461.34 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

முழுவதும் பாதிப்பு அடைந்த கட்டுமரத்துக்கு மாற்றாக, மரத்தினால் ஆன புதிய கட்டுமரம் வாங்க 32,000 ரூபாய் என்ற வரம்புக்கு உட்பட்டு அதன் மொத்த விலையும் மானியமாக வழங்கப்படுகிறது. உயர் அளவாக, 1.5 இலட்சம் ரூபாய் வரை விலை உள்ள முற்றிலுமாகச் சேதம் அடைந்த கண்ணாடி இழைக் கட்டுமரம் மற்றும் வள்ளங்களுக்குப் பதிலாக மாற்றுக் கலன்கள் வாங்கிடவும்; இழந்த மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக கண்ணாடி இழைக் கட்டுமரங்கள் வாங்கிடவும்; 50 சதவிகிதம், அதாவது 75,000 ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.

முழுமையாகச் சேதம் அடைந்த அல்லது காணாமல் போன இயந்திரப் படகுகளுக்கு மாற்றாக புதிய இயந்திரப் படகுகள் வாங்கிக் கொள்ள 35 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியம், படகு ஒன்றுக்கு அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் என்ற அளவில் வழங்கப்படுகிறது.

அதிகபட்சம் 3 இலட்சம் ரூபாய் என்ற அளவில், பழுதுபட்ட இயந்திரப் படகுகளைச் செப்பனிட மதிப்பிடப்பட்ட சேதத்தில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது.

சுனாமிப் பேரழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை மீண்டும் பெற்றிட அரசு வழங்கும் மானிய உதவிகளைக் கொண்டு புதிய கட்டுமரம், வள்ளம் மற்றும் இயந்திரப் படகுகள் வாங்கி வருகின்றனர். மேலும், பல தொண்டு நிறுவனங்களும், அரசு சாரா அமைப்புகளும், தனியார் நிறுவனங்களும் இத்தகைய வாழ்வாதாரங்களை மீனவர்களுக்கு வாங்கி வழங்க முன்வந்துள்ளன. பாதிக்கப்பட்ட மீனவர்கள், இந்த வாழ்வாதாரங்களைத் திரும்பப் பெற்றிட முழுத் தொகையும் மானியமாகவே வழங்கப்பட வேண்டும் என்று மைய அரசை, எனது அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், மைய அரசோ மரக் கட்டுமரங்களை இழந்த மீனவர்களுக்கு மட்டுமே புதிய மரக்

கட்டுமரங்களை வாங்குவதற்கு முழு மானியமாக நிவாரண உதவி அனுமதித்துள்ளது. வள்ளம் மற்றும் இயந்திரப் படகுகள் ஆகியவற்றை இழந்தவர்களுக்கும்; மரக் கட்டுமரத்துக்குப் பதிலாக கண்ணாடி இழைக் கட்டுமரம் வாங்குவோருக்கும்; இயந்திரப் படகுகளைச் செப்பனிடவும்; மைய அரசு முழு மானியம் வழங்க இதுவரை முன் வரவில்லை.

இந்தச் சூழ்நிலையில், மீனவர்கள் மீன்பிடிக் கலன்களை வாங்குவதற்கும், அவற்றைப் பழுது பார்ப்பதற்கும், ஏற்படும் செலவைக் குறைக்கும் வகையில் முழு விற்பனை வரி விலக்கு அளிக்க நான் முடிவு செய்துள்ளேன். வள்ளம், அனைத்து வகை இயந்திரப் படகுகள், வெளிப் பொருத்தும் மோட்டார் மற்றும் மீன் பிடிப்பதற்குப் பயன்படும் இதர பொருட்கள் ஆகியவற்றுக்கு தற்போது 12 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பயன்பாட்டுக்காக இவை வாங்கப்படும் போது அவற்றுக்கு விற்பனை வரியில் இருந்து முழு விலக்கு அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். மேலும், கட்டுமரம் செய்வதற்கான மரத்துக்கு தற்போது 10 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதற்கும் முழு வரி விலக்கு அளிக்க நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன். இந்த விற்பனை வரி விலக்கு நடப்பு நிதி ஆண்டு, அதாவது, 2005–2006ஆம் ஆண்டு முழுவதும் அமலில் இருக்கும்.

நான் தற்போது அறிவித்துள்ள இந்த விற்பனை வரிச் சலுகையின் காரணமாக, மீன்பிடிக் கலன்களின் விலை கணிசமான அளவில் குறையும்.

சுனாமியால் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்துவிட்ட மக்களுக்கு மீன்பிடிக் கலன்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதற்கு ஏதுவாக 2001ஆம் ஆண்டில் குஜராத்தில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்வின் போது மைய அரசு வழங்கியவாறே தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் மைய அரசால் விதிக்கப்படும் சுங்க வரி, கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே தமிழக அரசு மைய அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. இந்த நிலையில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்புக்கு உட்பட்ட விற்பனை வரிச் சலுகை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மைய அரசும், சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளித்து விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக மைய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

* * *

அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் தமிழகம் முதலிடம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 6.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனிதச் சமுதாயத்தை நாகரிகப்படுத்துவதும்; அறிவாற்றலைப் பெருக்கி சாதனைகள் புரிந்திட வல்லமை கொடுப்பதும் கல்வியே.

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி"

"எழுமையும் ஏமாப்பு உடைத்து கல்வி"

"கண் உடையார் என்பவர் கற்றோர்"

என்றெல்லாம் கல்வியையும் கல்வி கற்றோரையும் உயர்த்திப் புகழ்ந்து பாடுகிறார் திருவள்ளுவர். மக்களின் இதயங்களைப் பண்படுத்துவது கல்வி. அவர்கள் வாழ்க்கை முன்னேற்றம் பெற வழி வகுப்பது கல்வி. அதனால் தான் எனது அரசு கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த ஆண்டு, அதாவது 2005 – 2006ஆம் ஆண்டுக்கு பள்ளிக் கல்விக்காக 4,348.01 கோடி ரூபாயும், உயர் கல்விக்காக 741.77 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டும்.

மாணவ மாணவியர் உவகையுடன் கல்வி கற்கவும்; ஆசிரியர்கள் ஊக்கத்துடன் கல்வி கற்பிக்கவும்; பள்ளிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதன் அடிப்படையிலேயே அரசுப் பள்ளிகள் அனைத்திலும் போதுமான வகுப்பறைகள், குடிநீர் மற்றும் கழிவறைகள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து தர எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 1 முதல் 8–ஆம் வகுப்புகளுக்கு 234 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 15,644 வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 10,526 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வகுப்பறைகள் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகள் அனைத்தும் தேவையான
அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமை
பெற்றவையாக அமைந்திட வேண்டும் என்பதே என
எண்ணம் ஆகும். இதன்படி, அரசுப் பள்ளிகளுக்
அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி
நபார்டு வங்கி கடன் உதவியுடன் ஒரு சிறப்பு
திட்டத்தைச் செயல்படுத்த 2002–ஆம் ஆண்டில் நா
ஆணையிட்டேன். கிராமப்புறங்களில் உள்ள அர
உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு
தேவைப்படும் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வு
கூடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் முதலா
அனைத்து அடிப்படை வசதிகளும் பெற்றிட இத்திட்டம் வ
வகுத்துள்ளது. இதன்படி மொத்தம் 182.74 கோடி ரூபா
செலவில் மூன்று கட்டங்களில், 605 அரசு உயர்நி
மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதி
செய்து தர அனுமதிக்கப்பட்டு, முதல் கட்டம

170 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு அவையாவும் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. இரண்டாவது கட்டமாக, 136 பள்ளிகளில் பணிகள் முடிக்கப்பட்டு அவற்றை கடந்த 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நான் திறந்து வைத்தேன். மூன்றாவது கட்டமாக,299 பள்ளிகளில் இப்பணிகள் மிகவும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவையாவும் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

தற்போது 232.13 கோடி ரூபாய் செலவில் மேலும் 549 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்; குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தருதல்; ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர எனது அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக நபார்டு வங்கியிடமிருந்து 184.90 கோடி ரூபாய் கடன் உதவி பெறப்படும். மாநில அரசு 47.23 கோடி ரூபாயை வழங்கும்.

வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் அறிவியல் கல்வியை மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். சோதனை செயல்முறைகள் மூலம் அறிவியல் கோட்பாடுகளை மாணவ – மாணவியர் நன்கு புரிந்து கொண்டு அறிவியல் கல்வியை ஊக்கமுடன் கற்க பள்ளிகளில் முழுமையான வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடங்கள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகும். தற்போது தமிழகத்தில் மொத்தம் உள்ள 3,539 அரசு உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில்,840 பள்ளிகளில் ஆய்வுக் கூட வசதிகள் இல்லை. இந்த 840 பள்ளிகளிலும் தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வுக் கூடங்களை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

அதன் அடிப்படையில்,71.03 கோடி ரூபாய் செலவில் இந்த ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும். இந்தச் செலவு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் உபரி நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதன் மூலம் ஆய்வுக் கூட வசதி அற்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளோ அல்லது அரசு மேல்நிலைப் பள்ளிகளோ தமிழகத்தில் இல்லை என்ற நிலை உருவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பள்ளிக் கல்விப் பணியில் இந்தியா விலேயே முதல் இடத்தை தமிழகம் பெற்றுள்ளது என்று உலக வங்கியே சான்று அளித்துள்ளது என்ற மகிழ்ச்சியான தகவலை இந்த நேரத்தில் இந்த அவையில் மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* வசிப்பிடங்களில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் அரசின் தொடக்கப் பள்ளிகள் அமைந்திருத்தல்;
* அரசு தொடக்கப் பள்ளிகளுக்குத் தங்களது குழந்தைகளை அனுப்புகின்ற குடும்பங்களின் விகிதாச்சாரம்;
* பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் செயல்பாடுகள் குறித்தும், பள்ளிகளில் காணப்படும் வசதிகளின் தரம் குறித்தும் பெற்றோர் மற்றும் மாணவ மாணவியரின் மன நிறைவு;

– போன்ற குறியீடுகளை அளவுகோல்களாகக் கொண்டு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் அரசுப் பள்ளிக் கல்விப் பணிச் செயல்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மேற்சொன்ன அனைத்து வகைகளிலும் திறம்படச் செயல்பட்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்று இந்தியாவில் புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை எய்துதல் – Attaining the Millennium Development Goals in India என்ற உலக வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இதே போன்று உயர் கல்வியை மேம்படுத்தும் வகையில் அரசு உறுப்புக் கல்லூரிகளிலும் அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் தற்போது காலியாக உள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களைப் படிப்படியாக நிரப்ப நான் முடிவு எடுத்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு உறுப்புக் கல்லூரிகளில் முதற்கட்டமாக, 500 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்கள் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்படும். இவ்வாறு நியமனம் செய்யப்படும் இளநிலை விரிவுரையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் தொகுப்பு ஊதியம் வழங்கப்படும். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இவர்களுக்கு முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும். இதே போன்று தமிழகத்தில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர் காலிப் பணியிடங்களை படிப்படியாக நிரப்பிடவும், முதல் கட்டமாக, 300 இளநிலை விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்பிடவும் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியும், உயர் கல்வியும் மேலும் உயர்ந்திட உறுதுணையாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன்.

* * *

வணிகவரி வருவாய் வளர்ச்சி விகிதம் உயர்வு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 5.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் வணிகவரிகள் துறை மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கும் சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தேவையான நிதியைப் பெரும் அளவில் ஈட்டித் தருகின்ற துறை ஆகும். அரசின் வரி வருவாயில் 68 சதவிகிதம் வணிக வரிகள் மூலமாகவே கிடைக்கப் பெறுகிறது.

2001ஆம் ஆண்டில் நான் மீண்டும் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி இருந்ததையும்; வணிகவரி வருவாய் வளர்ச்சி விகிதத்தில் தொய்வு ஏற்பட்டு இருந்ததையும்; அதனைச் சரிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டதையும்; இந்த அவையின் மரியாதைக்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் பயனாக வரி வருவாய் வளர்ச்சி விகிதம் சிறப்பாக உயர்ந்துள்ளது. 2001ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது வணிகவரி வருவாய் 8,664 கோடி ரூபாயாக இருந்தது. இது கணிசமாக உயர்ந்து 2003–2004ஆம் ஆண்டில் 11,757 கோடி ரூபாய் என்ற அளவை எட்டியது. 2004–2005ஆம் ஆண்டில் வணிகவரி வருவாய் மேலும் அதிகரித்து, 13,907 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். 2003–2004ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2004–2005ஆம் ஆண்டின் வணிகவரி வளர்ச்சி 18.29 சதவிகிதம் ஆகும். கடந்த நான்கு ஆண்டுகளில் வணிக வரி வருவாய் வளர்ச்சியின் ஒட்டு மொத்த உயர்வு 60.51 சதவிகிதம் ஆகும் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2005–2006ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எந்த வரியும் விதிக்காத – Tax Free Budget – வரி அற்ற நிதி நிலை அறிக்கையை எனது அரசு வழங்கி உள்ள போதும் இத்தகைய வரி வருவாய் உயர்வு எட்டப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் எனது அரசு 175 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகளை வழங்கி உள்ளது. இதில் மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மீதான விற்பனை வரியை சென்ற ஆண்டு ரத்து செய்ததில் மட்டும் 51 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இதுவரை வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் மதிப்பை நடப்பு நிதி ஆண்டு முடிய கணக்கிட்டால் அதன் ஒட்டு மொத்த மதிப்பு 460 கோடி ரூபாய் ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரி வருவாயில் எவ்வித இழப்பும் ஏற்படாமல் இருக்க வேண்டும் எனில் வரி ஏய்ப்பு தடுக்கப்பட வேண்டும். எனவே வரி விதிப்புக்கு இலக்காகும் பொருட்கள் உரிய வரி செலுத்தப்படாமல் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதும் மாநிலத்திற்கு உள்ளே கொண்டு வரப்படுவதும் கண்காணிக்கப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக பிற துறைகளுடன் இணைந்து வாகனங்களை சோதனை செய்யும் வகையில் மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை அமைப்பது குறித்து ஆய்வு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

அரசின் வரி வருவாயில் 68 சதவிகிதத்தை தனது பங்காக வழங்குகின்ற வணிகவரித் துறையின் நிருவாகத்தை நவீனப்படுத்தவும் மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டது. வரி வசூல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளை விரைவாகவும் செம்மையாகவும் செய்து முடித்திட துறை

முழுமையாக கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளது. துறையின் அனைத்து வரி விதிப்பு வட்டங்கள் நிருவாக அலுவலகங்கள் மற்றும் வணிகவரி சோதனைச் சாவடிகள் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு ஆணையர் அலுவலகத்துடன் தகவல் தொடர்பு பரிமாற்றம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பணிகளுக்காக 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வணிகவரிகள் துறையின் தலைமை அலுவலகம் தற்போது சேப்பாக்கத்தில் உள்ள எழிலக வளாகத்தில் அமைந்துள்ளது. முழுவதும் கணினிமயம் ஆக்கப்பட்ட இவ்வலுவலகத்தில் 400 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கு என தனியான பயிற்சி நிலையம் ஒன்றும் இத்துறையில் செயல்பட்டு வருகிறது. இவை அனைத்திற்கும் எழிலக வளாகத்தில் உள்ள தற்போதைய அலுவலகத்தில் போதிய இட வசதி இல்லை. இதனால் அலுவலர்களும் பணியாளர்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் கணினி மையமும் பயிற்சி நிலையமும் ஆணையர் அலுவலக வளாகத்திலேயே அமையாமல் தனிக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.

வணிக வரித்துறை ஆணையர் அலுவலகத்திற்குத் தேவைப்படுகின்ற போதிய இடவசதி; அங்கு பணியாற்றும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் கணினி மையம், பயிற்சி நிலையம் ஆகியவை ஆணையர் அலுவலக வளாகத்திலேயே அமைய வேண்டிய தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இதற்கென ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கான அனுமதி அளிக்க நான் முடிவெடுத்துள்ளேன்.

சென்னை கிரீம்ஸ் சாலையில் தற்போது வணிக வரி நிருவாக அலுவலகங்கள் செயல்படுகின்ற கட்டடத்திற்கு அருகில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 0.56 ஏக்கர் காலி நிலத்தில் இந்தப் புதிய கட்டடத்தை உருவாக்க நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த இடத்தில் 4,224 சதுர மீட்டர் பரப்பளவில் அனைத்து வசதிகளுடன் கூடிய 5 அடுக்கு கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும். வணிக வரித் துறை ஆணையர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான இட வசதியுடன் இந்தப் புதிய கட்டடம் அமையும். மாநாட்டுக் கூடம், கணினி மையம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவையும் இக்கட்டடத்திலேயே இடம் பெறும். 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் இந்தப் புதிய கட்டடம் கட்டப்படும்.

இதன் மூலம் வணிகவரித் துறை ஆணையர் அலுவலக அலுவலர்களும், பணியாளர்களும் தங்களது பணிகளை மேலும் சிறப்புடன் மேற்கொள்ள ஏதுவாகும் என்பதை தெரிவித்து அமைகிறேன். □

கோழி



சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்துநதிப் பள்ளத்தாக்கில் காட்டுக் கோழிகள் பெருமளவில் வாழ்ந்து வந்தன. இவற்றைப் பழக்கி வீடுகளில் வளர்க்க மக்கள் கற்றுக் கொண்டனர். பின்னர், இங்கிருந்து பிற ஆசிய நாடுகளுக்கும் அரபு நாடுகளுக்கும் கோழிகள் கொண்டு செல்லப்பட்டன. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் தான் அரேபியாவிலிருந்து கோழி ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றது. இன்று உலகெங்கும் வீடுகளில் வளர்க்கப்படும் முக்கியமான பறவை இனமாக கோழி இருக்கிறது.

பிற பறவைகளைப் போலவே கோழி சிறு தானியங்கள், பழங்கள், குருத்து, புழு, பூச்சிகளை கொத்தி விழுங்கும். கோழிக்குப் பற்கள் கிடையாது. ஆனால் உறுதியான அலகு உண்டு. இது உண்ணும் உணவை இதன் உடல் வேகமாகச் செரிமானம் செய்து கொள்ளும். கோழி உறங்கும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் இரை தேடி அலையும். இது பல்வேறு தட்பவெப்ப நிலையிலும் வாழக்கூடிய பறவையாகும். எனவேதான் உலகம் முழுவதும் காணப்படுகிறது.

இந்தியக் கோழி சாதாரணமாக ஓராண்டில் 50 முட்டைகளே இடுகின்றது. ஆனால் மேல்நாட்டைச் சேர்ந்த வெள்ளை லெக்ஹார்ன், கறுப்பு மினார்க்கா, ரோடு ஐலண்டு சிவப்பு வகை போன்ற கோழி வகைகள் ஆண்டு ஒன்றுக்கு 250 முட்டைகள் வரை இடுகின்றன. ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் 'மீலாதுன் நபி' வாழ்த்துச் செய்தி

பெருமானார் முகமது நபி அவர்கள் பிறந்த திருநாள் உலகெங்கும் உவப்புடன் கொண்டாடப்படும் இந்த உன்னத வேளையில், என் அன்பிற்கினிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த 'மீலாதுன் நபி' வாழ்த்துகளை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்குர்ஆன் தெரிவிப்பது போல் அகில உலகத்தவர்க்கும், ஓர் அருட்கொடையாக அனுப்பப்பட்டவர், அண்ணல் முகமது அவர்கள். உலகம் எங்கும் இறைவனால் அனுப்பப்பட்ட இறைத் தூதர்கள் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் பேர் என்பார்கள். அவர்களில் இறுதித் தூதராக வந்தவர் நபிகள் நாயகமாம் பெருமானார் முகமது நபி அவர்கள். அதனால் தான் மனிதகுலம் முழுமைக்கும் பொதுவான வேதம் அவர் வாயிலாக அருளப்பட்டது.

நபிகள் நாயகம் அவர்கள் போதித்த சாந்தியும், சமாதானமும், சகோதரத்துவமும் இன்றைய உலகின் இன்றியமையாத தேவைகள்.

எனவே, சாந்தி தழைக்கவும், சமாதானம் ஓங்கவும், சகோதரத்துவம் வளரவும் உழைப்போம்.

அமைதிப் பூங்காவாம் தமிழகத்தில் வாழும் அனைத்து இஸ்லாமியச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் மீண்டும் ஒருமுறை 'மீலாதுன் நபி' வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் 'மகாவீர் ஜெயந்தி' வாழ்த்துச் செய்தி

பகவான் மகாவீர் பிறந்த திருநாளை மகிழ்வுடன் கொண்டாடும் சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அறத்தின் சமயம் சமணம். அறத்தின் நாயகர் பகவான் மகாவீரர்! அறத்தின் அடிப்படை கொல்லாமை ஆகையால், அகிம்சை நெறியே அகிலத்தின் அறநெறியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மண்ணை வெல்வது மகாவீரம் இல்லை. தன்னை வெல்வதே மகா வீரம்! பகவான் மகாவீரர் தன்னை வென்றவர். ஆகவே அவர் மகாவீரர்!

பகவான் மகாவீரர் வழியில் மானுடம் அகிம்சையைக் கடைப்பிடித்தால் வன்முறையின் கோரப்பிடியில் இருந்து இந்த உலகம் விடுதலை பெறும்.

மனிதகுலத்துக்கு மாமருந்தாய் விளங்கும் மகத்தான போதனைகளை வழங்கிய பகவான் மகாவீரர் பிறந்த திருநாள் கொண்டாடப்படும் இந்த மங்கல வேளையில், அவருடைய தத்துவங்களைப் பின்பற்றும் அனைவருக்கும் என் இனிய வாழ்த்துகள்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் 'அன்னதானத் திட்ட'த்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குரிய தனது சம்பளத் தொகை 10,000 ரூபாயை, சென்னை, திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக, அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. சி. லட்சுமணன் அவர்களிடம் 31.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள். □

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் தொகுப்பு வீடுகள் செப்பனிடப்படும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 7.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள கிராமங்கள் யாவும் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற வேண்டும்; கிராம மக்கள் யாவரும் பொருளாதார மேம்பாடு அடைந்து வளமான வாழ்க்கையைப் பெற வேண்டும் என்பது என்னுடைய அரசின் குறிக்கோள் ஆகும். இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில் எனது அரசு முனைப்பான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சாலை மேம்பாடு, சிறு பாலங்கள், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல், உரக் குழிகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கிராமச் சந்தைகளை மேம்படுத்துதல், மீன் உலர் களங்கள் அமைத்தல், சத்துணவுக் கூடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தி வருகிறது.

இதே போன்று, கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் அதிகாரம் அளித்தல் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டம் – Empowerment and Poverty Reduction Programme – என்ற திட்டத்தை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. மேலும், சுயஉதவிக் குழுக்களின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு தொகுப்பு வீடுகள் அரசால் கட்டித் தரப்படுகின்றன.



2004–2005ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 154.31 கோடி ரூபாய் செலவில் 37,676 புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன. தொகுப்பு வீடுகள் கட்டும் பணி மிக விரைவாக தமிழகத்தில் செயல் படுத்தப்பட்ட காரணத்தால் மைய அரசு முதலில் ஒதுக்கீடு செய்த 90 கோடி ரூபாயுடன் கூடுதலாக, 8.95 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது.

1991ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட

தொகுப்பு வீடுகளில் பெரும்பாலானவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றைச் செப்பனிட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தொகுப்பு வீடுகளின் பராமரிப்புப் பணிகளை பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும் என்றாலும், பயனாளிகளின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிட நான் தற்போது வழிவகை செய்துள்ளேன்.

இதன்படி, 1991ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகள் அனைத்தும் செப்பனிடப்படும். இப்பணிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் 10,000 ரூபாய்க்கு மேற்படாத செலவு மதிப்பீட்டில் பயனாளிகள் மூலம் மேற்கொள்ளப்படும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 82 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாக 2005–2006ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதியை எவ்வகையில் பகிர்ந்து அளித்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளன. தற்போது நான் அறிவித்துள்ள தொகுப்பு வீடுகள் செப்பனிடும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கம் செய்யும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியை பகிர்ந்து அளித்து பயன்படுத்தும் முறையை திருத்தி அமைக்க எனது அரசு முடிவு எடுத்துள்ளது. இதன்படி, குடிநீர்ப் பணிகளுக்காக 5 இலட்சம் ரூபாய், நமது கிராமத் திட்டத்துக்காக 10 இலட்சம் ரூபாய்; மாணவர் இல்லங்கள் கட்ட 5 இலட்சம் ரூபாய்; கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்க 10 இலட்சம் ரூபாய்; தெரு விளக்குகள் அமைக்க 5 இலட்சம் ரூபாய்; தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய், இதரப் பணிகளுக்கு – Untied outlay – 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியைப் பகிர்ந்து அளித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்க விரும்பும் சட்டமன்ற உறுப்பினர்கள், இதரப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபாயிலிருந்து இந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் செய்து கொள்ளலாம்.

தற்போது நான் அறிவித்துள்ள திட்டத்தின் வாயிலாக 1991ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் வசிக்கும் 1,02,659 குடும்பங்கள் பயன் பெறுவர் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக தீயணைப்பு ஊர்திகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக 26 நீர்தாங்கி தீயணைப்பு ஊர்திகளை வழங்கினார்கள்.

முழுவதும் முடிக்கப்பட்ட 26 நீர்தாங்கி ஊர்திகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டுக்காக 14.4.2005 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

அப்போது, இந்த ஊர்திகளை நல்ல முறையில் பராமரித்து பயன்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓட்டுநர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். இப்போது, முதல் கட்டமாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த 26 தீயணைப்பு ஊர்திகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை பல்வேறு வகையிலும் நவீனபடுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில், துறையில் உள்ள பழைய நீர்தாங்கி தீயணைப்பு ஊர்திகளை மாற்றி, புதிய நவீன நீர்தாங்கி தீயணைப்பு ஊர்திகளை வாங்கிட உத்தரவிட்டார்கள். முதல் கட்டமாக 11.01 கோடி ரூபாய் மதிப்பில் 84 நீர்த்தாங்கி தீயணைப்பு ஊர்திகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் 66 ஊர்திகள் வாங்கப்பட்டு, அந்த ஊர்திகளில் "நீர்தாங்கி கட்டுமானப்பணிகளை" அமைப்பதற்காக அவை தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகத்திடம் (கோயம்புத்தூர்) ஒப்படைக்கப்பட்டது. அரசு போக்குவரத்துக் கழகத்தின் பணி சென்னை மாநகரத்தின் தீயணைப்புப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஏ.எக்ஸ். அலெக்சாண்டர் இ.கா.ப., தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திரு. எஸ்.கே. டோக்ரா இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை

– 7.4.2005

ஊராட்சிகளில் பணிபுரியும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள ஊரகப் பகுதிகளின் முழுமையான வளர்ச்சிக்கு என்னுடைய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. கிராம அளவில் அடிப்படை வசதிகளை வழங்கி, அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த எனது அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கிராம ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவு ஆகிய பணிகள் கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பணிகளாகும். இந்தப் பணிகள் அனைத்தும் 12,026 முழு நேர மற்றும் பகுதி நேர ஊராட்சி எழுத்தர்கள்; 39,152 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள்; மற்றும் 11,653 துப்புரவுப் பணியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களுக்கான ஊதியத்தை கிராம ஊராட்சி வழங்குகிறது. கிராம மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதில் முக்கியப் பங்காற்றும் மேற்சொன்ன பணியாளர்கள் யாவரும் அடித்தட்டுப் பணியாளர்கள் ஆவர். மக்களுக்குச் சேவை செய்யும் அடித்தட்டுப் பணியாளர்களுக்கு நிறைவான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது என் எண்ணம் ஆகும். இதன் அடிப்படையில் தான், அண்மையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு நான் ஊதிய உயர்வு வழங்கினேன். அதே அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப் படும் தொகுப்பு ஊதியத்தை உயர்த்தி வழங்க நான் தற்போது முடிவு செய்துள்ளேன்.

இதன்படி, ஊராட்சி முழு நேர எழுத்தர், பகுதி நேர எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர், துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகுப்பு ஊதியம் இனி மாதம் ஒன்றுக்கு, 200 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும். அதாவது,

★ ஊராட்சி முழு நேர எழுத்தர்கள் தற்போது பெற்று வரும் 1,800 ரூபாய் தொகுப்பு ஊதியம் 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்;

★ ஊராட்சி பகுதி நேர எழுத்தர்கள் தற்போது பெற்று வரும் 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும்;

★ ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தற்போது பெற்று வரும் 400 ரூபாய் தொகுப்பு ஊதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும்; மேலும் கூடுதலாக இயக்கப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒவ்வொன்றுக்கும் தற்போது

150 ரூபாய் கூடுதலாக வழங்கப்படுகிறது. இது 250 ரூபாயாக உயர்த்தப்படும்;

★ ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பெற்று வரும் 400 ரூபாய் தொகுப்பு ஊதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள இந்த ஊதிய உயர்வினால் கிராம ஊராட்சிகளின் 62,831 அடித்தட்டுப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊதிய உயர்வு 1.4.2005 முதல் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 16.24 கோடி ரூபாய் ஆகும்.

கிராமப்புற மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பணிகளான குடிநீர் வழங்கல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் முதலான பணிகளை மேற்கொண்டு வரும் கிராம ஊராட்சிகளின் அடித்தட்டுப் பணியாளர்கள், மேலும் ஊக்கம் பெற்று உற்சாகத்துடன் பணிபுரிய இந்த ஊதிய உயர்வு உறுதுணையாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன்.

★ ★ ★

அரசு நிறுவனம் மூலமாக அயல்நாட்டு வேலை

சென்னையில் இயங்கிவரும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம் ஆகும். கடந்த 25 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு அயல்நாடுகளில் பாதுகாப்பான வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதில் இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தற்போது, இந்நிறுவனத்தின் மூலம் சவூதி அரேபியா, சுகாதாரத் துறையின் அரசு மருத்துவ நிலையங்களுக்கு அனுபவம் பெற்ற பொது மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோரைத் தேர்வு செய்துள்ளது. சவூதி அரேபியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை பாடப் பிரிவுகளுக்கு உதவிப் பேராசிரியர்களை அனுப்பவுள்ளது. எம்.டி., எம்.எஸ்., எம்.சி.எச்., எம்.டி.எஸ். ஆகிய பட்ட மேற்படிப்புடன் மூன்றாண்டுகளுக்கும் மேலாக அனுபவமுள்ள நிபுணர்களையும் தேர்வு செய்யவுள்ளது.

மலேசியாவில் பணிபுரிந்த அனுபவம் பெற்ற நர்சுகள், பாராமெடிக்கல் டெக்னீசியன்கள் இந்நிறுவனம் மூலமாக மீண்டும் மலேசியாவில் வேலைவாய்ப்புப் பெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள நிறுவனத்திற்கு மெக்கானிக்கல் போர்மென், எலக்ட்ரிக்கல் போர்மென் பதவிகளுக்கு பத்து ஆண்டுகளுக்கும் மேலாக டீசல் பவர் ஸ்டேசனில் அனுபவம் உள்ள பட்டய இன்ஜினியர்களைத் தேர்வு செய்யவுள்ளது. மேலும், பவர் ஸ்டேசனில் 5 வருடம் பணிபுரிந்த அனுபவமுள்ள ஐ.டி.ஐ. பம்பு மெக்கானிக் பிட்டர்கள் மற்றும் ஐ.டி.ஐ. டீசல் மெக்கானிக் பிட்டர்கள் ஆகிய பணிகளுக்கும் உடனடியாக அனுப்ப உள்ளது.

ஐரோப்பிய மாடல் வாகனப் பராமரிப்பில் அனுபவம் பெற்ற டீசல் மெக்கானிக்குகளையும் இன்ஜினியர்களையும் துபாயில் உள்ள நிறுவனத்திற்காக தேர்வு செய்யவுள்ளது.

தொழில் அனுபவம் வாய்ந்த ஹெவி ட்ரக்கு மெக்கானிக்குகள், விவசாயப் பண்ணை இயந்திர மெக்கானிக்குகளையும், ஏர் கண்டிசன் டெக்னீசியன்களையும் ஆஸ்திரேலிய நாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி.), ஜி.எஸ்.எம்., மைக்ரோவேவ், சாட்டிலைட் மற்றும் பிற தகவல் தொடர்புப்பிரிவு இன்ஜினியர்களையும் டெல்லியிலுள்ள இந்திய அரசு நிறுவனமான டெலிகம்யூனிகேசன்ஸ் கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தின் அயல்நாட்டுத் திட்டப் பணிகளுக்கு அனுப்பி வருகிறது.

அயல்நாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெற விரும்புவோர் தமிழக அரசு நிறுவனமான ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தை தங்களின் கல்வித்தகுதி மற்றும் பணி அனுபவம் போன்ற விவரங்களுடன் உடனடியாக அணுகலாம்.

ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேசன்
"41, மெக்னிக்கல்ஸ் சாலை,
சேத்துபட்டு, சென்னை–600 031.
தொ.பே. எண்.
28365099/28365188/28365014
மின் அஞ்சல் முகவரி : omc@md4.vsnl.net.in
இணைய தள முகவரி :
www.omcmanpower.com"

தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா

இந்திய விடுதலை வேள்வியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வீரர்களில் போற்றத்தக்கவர் தியாகி திருப்பூர் குமரன் ஆவார். வீட்டிற்காக வாழாமல் நாட்டிற்காக வாழ்ந்து, தனது இன்னுயிரைத் துறந்த தியாகத்தின் திருவடிவம் தான் திருப்பூர் குமரன். திருப்பூர் குமரனின் தன்னிகரற்ற தியாகத்திற்குப் பெருமை சேர்த்து, அவரது புகழுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் அவரது நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பில் சிறப்புடன் நடத்த வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க மிகச் சிறப்பாக விழா நடத்தப்பட்டது.

தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் 12.2.2005 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., தலைமை வகித்தார். இவ்விழாவில் தியாகி திருப்பூர் குமரன் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, 150 சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.சி. இராமசாமி அவர்கள் உரையாற்றினார். அவர் தமது உரையில், "இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் விழா எடுத்து வருகிறார்கள். அதனடிப்படையிலேதான் இந்திய விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நாயகன் தீரன் சின்னமலை அவர்களுக்கு கடந்த ஆண்டு அரசின் சார்பில் விழா எடுக்க உத்தரவிட்டு, அவரின் நினைவாக ரூ.30 இலட்சம் மதிப்பில் மணி மண்டபம் கட்டவும், ரூ.20 இலட்சம் மதிப்பில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கும் ஆணைப்பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின்

சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தியாகிகளுக்கு ஒய்வூதியம் வழங்கியும், மேலும் பல்வேறு சலுகைகள் அளித்தும் இந்த அரசு கௌரவித்து வருகிறது. திருப்பூர் குமரன் அவர்கள் உருவம் பொறித்த தபால்தலை வெளியிட நடவடிக்கை எடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நாட்டின் விடுதலைக்காக எத்தனையோ தலைவர்கள் பாடுபட்டாலும், தியாகி திருப்பூர் குமரன் மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்" என்று தெரிவித்தார்.

தியாகி திருப்பூர் குமரன் வாரிசுதாரர்களை கௌரவித்து, திருப்பூர் குமரன் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, விழா மலரை வெளியிட்ட மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தமது உரையில், "நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்ற வேண்டும். தன்னலம் மறந்து, மக்கள் நலனுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்களை வாழ்த்தி வணங்க வேண்டும். அவர்களின் பெருமைகள் நிலைபெறும் வகையில் நினைவாலயம் உருவாக்க வேண்டுமென்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் கொடிக்காத்த குமரன் என்று போற்றப்படும் சுதந்திரப் போராட்டத் தியாகி திருப்பூர் குமரனின் நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக நடைபெறுவது பெருமைக்குரியதாகும். விடுதலைப் போராட்ட வேள்வியில் குதித்து, தியாகம் புரிந்து, சமூக சீர்திருத்தச் சிற்பியாக உருவாகி தன் வாழ்நாள் முழுவதும் இச்சமுதாயத்திற்காக உழைத்த தந்தை பெரியார் பிறந்த இம்மண்ணில் நடைபெறும் எழுச்சி மிகுந்த இவ்விழாவில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மக்கள் உரிமை வாழ்வு பெறவேண்டும், நமது நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காக சிறைச்சாலையில் சித்திரவதைக்கு ஆளானவர்கள், சொத்து, சுகங்களை இழந்தவர்கள், அந்நியர் ஆட்சியை எதிர்த்துப் போராடி இன்னுயிரை மாய்த்துக் கொண்டவர்கள், ஆயுள் தண்டனை பெற்றவர்கள், சிறையிலே செக்கிழுத்தவர்கள் என தியாகிகளில் ஒருவராக தாயின் மணிக்கொடி காக்க தன்னுயிர் ஈந்த மாமனிதராகப் போற்றப்படுவர் திருப்பூர் குமரன். தான் மடிந்தாலும், தடிஅடி தன் உடலின் மீது விழுந்தாலும், தாய்நாட்டின் பெருமை போற்றும் தேசியக் கொடி தரையில் விழக்கூடாது என்று போராடிய தன்மான வீரர் திருப்பூர் குமரன் ஆவார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு விழாக்கள் எடுக்கும் அதேவேளையில், அவர்களின் எண்ணக் கனவுகள் ஈடேறவும் பாடுபட்டு வருகிறார். தலைவர்கள், நாட்டிற்காகப் பாடுபட்ட பெருமக்கள் ஆகியோரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் தருகின்ற ஒரே தலைவியாக, ஒப்பற்ற ஆட்சியாளராக, நிருவாகத் திறமையுள்ள முதலமைச்சராகத் திகழ்ந்து கொண்டு வருகிறார். தமிழ்நாட்டை வளம் பெறச் செய்து, எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெறச்செய்து, இந்தியாவிற்கே வழி காட்டும் முதலமைச்சராக அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். நெருக்கடி நிறைந்த நிலையிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ தொடர் போராட்டங்களை சந்தித்ததோடு, இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட இன்னல்கள், சுனாமியால் பாதிப்பு ஏற்பட்டாலும் எதற்கும் சிறிதும் அஞ்சாமல் தமிழ்நாட்டு மக்களை வாழவைக்க வேண்டும்; தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதில் கவனம் செலுத்திப் பணியாற்றி வருபவர் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள் என்று அனைத்து தரப்பு மக்களின் நலன் காக்கும் அரசாக அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரை வளர்ச்சித் துறையின் மூலம் ரூ.63 கோடி செலவில் 8,454 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் காசிபாளையம், பெரிய சேமூர், புஞ்சை புளியம்பட்டி, சூரம்பட்டி, வீரப்பன்சத்திரம், வெள்ளக் கோவில் ஆகிய 6 சிற்றூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சிகளாக ஆக்கிய பெருமை அம்மா அவர்களைச் சாரும். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் சீர்மிகு



ஆட்சி நடத்திவரும் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக தமிழ்நாட்டில் உரிமைக்காக கொடுக்க வேண்டியதைக் கொடுக்கின்ற முதலமைச்சர் அவர்களின் வழிநடக்க உறுதி ஏற்போம்" – எனப் பெருமையுடன் குறிப்பிட்டார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுச்சாமி அவர்கள் தமது உரையில், – "சுதந்திரம் பெற்ற போது நம்மவர்கள் அடைந்த துன்பம் பற்றி இந்த தலைமுறையினருக்குத் தெரியாது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் விடுதலைபெற வேண்டும் என்பதற்காக கத்தியின்றி, ரத்தமின்றி அறவழியில் போராடினார்கள். இன்னுயிரையும், உடைமைகளையும் இழந்துள்ளவர்கள் குறித்து தற்போது வரலாறு மட்டுமே இருக்கிறது. ஆனால் இளைய தலைமுறையினருக்கு விடுதலைப் போராட்ட தியாகிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் தியாகி திருப்பூர் குமரனின் நூற்றாண்டு விழா கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். நாட்டுக் கொடியைக் காப்பதற்காகவே தன்னுயிரை ஈந்தவர், உலக வரலாற்றிலேயே திருப்பூர் குமரன் ஒருவர்தான். அவர் சாதாரண நெசவாளர் குடும்பத்தில் பிறந்தாலும், அவரது தியாகத்தால் தமிழ்நாட்டிற்கும், அவர் பிறந்த இந்த ஈரோடு மாவட்டத்திற்கும் பெருமை என்று சொன்னால் அது மிகையாகாது" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத் தலைவர் சிந்து ரவிச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ். தென்னரசு, திரு. கே.சி. கருப்பண்ணன், திரு. பி. சிதம்பரம், திரு. எஸ்.எஸ். ரமணீதரன், திருமதி. செல்வி முருகேசன், திரு. கே.எஸ். பழனிச்சாமி மற்றும் தியாகி திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்கள், வாரிசுதாரர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு வருகை தந்தவர்களை ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திருமதி. இரா. கெஜலட்சுமி வரவேற்றார்.

மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்ற தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வரும் தமிழக அரசு, தியாகி திருப்பூர் குமரன் அவர்களுக்கு இந்தச் சிறப்புமிகு விழாவை எடுத்துச் அவரைப் பெற்றெடுத்த இம்மாவட்ட மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற வகையில் விழா எடுத்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் இம்மாவட்ட மக்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

– எம்.ஆர். லிங்கம்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு

சணல்

ஒருவகைத் தாவரத்திலிருந்து எடுக்கப்படும் நார்தான் சணல். சணல் செடி சுமார் மூன்று மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. நன்கு வளர்ந்த செடிகளை அறுவடை செய்து ஓரிடத்தில் அடுக்கி வைப்பார்கள். இவை காயும் போது இலைகள் யாவும் உதிர்ந்துவிடும். பிறகு இவற்றை ஒழுங்குப்படுத்தி சுமைகளாகக் கட்டி தண்ணீரில் ஊறவைப்பார்கள். அவை நன்கு ஊறிய பிறகு தண்டிலிருந்து நாரை உரிப்பார்கள். இவ்விதம் எடுக்கப்பட்ட நார் உலர்ந்த பின் சணல் எனப்படுகிறது.

சணலை இயந்திரங்களில் துணி நெய்வதைப்போல நெய்கிறார்கள். நெய்த துணியால் செய்த பெரிய பைதான் கோணிப்பை அல்லது சாக்குப்பை ஆகும். சணல் துணிகள் தரை விரிப்புகளாகவும், சித்திரவேலைப்பாடமைந்த துணிகளாகவும் பலவகைகளில் பயன்படுகின்றன. திரித்த சணல் கயிறும் பல வழிகளில் பயனாகிறது. மிக மெல்லிய சணல் இழைகளைக் கொண்டு ஒருவகை செயற்கைப்பட்டு தயாரிக்கப்படுகிறது.

உலகில் உற்பத்தியாகும் சணலில் பெரும்பகுதி இந்தியாவிலும், பங்களாதேசிலும் பயிராகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரப் பூங்கா



திருநெல்வேலி மாவட்டத்தை முழு சுகாதாரம் பெற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு, முழு சுகாதார இயக்கம் 2002–2003 முதல் ரூ.907.72 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் திறந்த வெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, தனிநபர் இல்லக் கழிப்பறைகளுக்கான தேவையை ஏற்படுத்துவதும் இதன் மூலம் இல்லக் கழிப்பறைகளை அமைத்து மனிதக் கழிவை பாதுகாப்பாக அகற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும்.

அதனைக் கருத்தில்கொண்டு பல்வேறு கல்வி, தகவல் தொடர்புப் பணிகள், தெருமுனை நாடகங்கள், பிரச்சார இயக்கங்கள், சுவர் விளம்பரங்கள், பயிற்சிகள், ஊர்வலங்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மூலமாக சுகாதாரம் பற்றிய செய்தி மக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் இல்லங்களில் கழிப்பறையின் தேவையை உணர்ந்து கழிப்பறை கட்ட முன் வந்துள்ளார்கள்.

கழிப்பறைகளின் அமைப்பு, அவைகளின் செயல்பாடுகள், குறைந்த செலவிலான தொழில் நுட்பத்துடன் எவ்வாறு அமைப்பது போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில்

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுகாதாரப் பூங்கா ஒன்று ரூ.2.3 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது. இதன்மூலம் நாள்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு வரும் பொதுமக்கள் கழிப்பறைகளின் மாதிரிகளை நேரில் பார்வையிடவும், அவற்றை கட்ட பயன்படும் பொருட்களின் அளவு, அவற்றின் விலை மதிப்பு போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் இயலும். இப்பூங்காவில் செலவே இல்லாத கழிப்பறை, குறைந்த செலவு கழிப்பறை, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற கழிப்பறை, நேரடிகுழி கழிப்பறை, பத்மனாபபுரம் அரண்மனையில் பயன்படுத்திய கழிப்பறை, உடல் ஊனமுற்றோர்க்கான கழிப்பறை, பள்ளி கழிப்பறை, அங்கன்வாடி கழிப்பறை, கழிப்பறை கோப்பை மாதிரிகள், பல்வேறு அமைப்பிலான கழிப்பறை, உறிஞ்சு குழாய்கள் மற்றும் செங்கல் சுவர் கழிப்பறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவிற்கு வரும் மக்களுக்கு தேவையான விளக்கங்களும் இங்கு அளிக்கப்படுகிறது.

முழு சுகாதார இயக்கம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட பின்னர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களில் சுமார் 40,000 இல்லங்களிலும், வறுமைக் கோட்டிற்கு மேல் வாழும் மக்களில் 60,000 இல்லங்களிலும் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைக்கப்பட்டு, மொத்த கிராமப்புற இல்லங்களில் 32 சதவிகிதம் கழிப்பறைகள் பயன்பாட்டில் உள்ளன. மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கழிப்பறை, குளியலறை, எரியூட்டிகள் (Incinerator), காய்கறி தோட்டம் ஆகிய வசதிகளுடன் மகளிர் சுகாதார வளாகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், 291 பள்ளி கழிப்பறைகள், 641 அங்கன்வாடி கழிப்பறைகள் கட்டப்பட்டு தண்ணீர் வசதி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர் விழிப்புணர்வு மூலம் சுயஉதவிக் குழுக்கள் நாட்டு நலப்பணித் திட்டம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஊரக வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி முழு சுகாதார மாவட்டமாக உருவாக்கிட முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

தனிநபர் இல்லக் கழிப்பறைகளை அமைக்க விரும்பும் மக்கள் தங்கள் வசதிக்கேற்ப சிக்கனமாக மாதிரிகளைத் தேர்வு செய்து, அவற்றைத் தங்கள் இல்லங்களில் அமைத்துப் பயன்படுத்திட இங்கு அமைக்கப்பட்டுள்ள சுகாதாரப் பூங்கா ஒரு சிறந்த தகவல் கல்வி தொடர்பு சாதனமாகப் பயன்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

– உல .இரவீந்திரன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

* * *

மனிதனின் எடை

60 கிலோ எடை உள்ள மனிதனின் எடை மற்ற கிரகத்தில் பின்வருமாறு இருக்கும் :

செவ்வாய்	22.8 கிலோ
புதன்	21.6 கிலோ
வியாழன்	159.0 கிலோ
வெள்ளி	51.6 கிலோ
சனி	68.4 கிலோ
சந்திரன்	0.987 கிலோ
யுரேனஸ்	57.6 கிலோ
நெப்டியூன்	60.0 கிலோ

விவசாயிகளின் பயிர்க்கடன் வட்டி தள்ளுபடி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 13.4.2005

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் வளத்திற்கும், கிராம மக்களின் வாழ்க்கை நலத்திற்கும் அடிப்படையாக வேளாண் தொழில் அமைந்துள்ளது. வாழுகின்ற மனிதருக்கெல்லாம் உணவு அளித்து உயிர் அளிக்கும் வேளாண் தொழிலை வெல்லும் தொழில் வேறு எதுவும் இல்லை என்பதே இந்த உலகம் கண்ட நடைமுறை. அதனால் தான் வள்ளுவப் பெருமானும்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல – உழவு செய்கின்றவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் – அவர்கள் ஏனையோரைத் தாங்குகின்றனர் என்று வேளாண் தொழில் செய்வோரை உயர்த்திக் கூறுகிறார் வள்ளுவர். இப்படி இவ்வுலகின் ஏனையோர் அனைவரையும் தாங்குகின்ற விவசாயிகளை, துன்பம் அணுகாது தாங்குகின்ற அரசாக எனது அரசு திகழ்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக விவசாயிகள் நலன் காக்கவும், அவர்களது வாழ்க்கை வளம் பெறவும் எனது அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இந்த உண்மையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

2001ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், 30.6.2000 அன்றைய தேதியில், தவணை கடந்து, நிலுவையாக இருந்த கடன்களைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, அவர்கள் பெற்ற கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டு இதற்காக 310.51 கோடி ரூபாய் அனுமதித்து நான் ஆணையிட்டேன்.

2002–2003ஆம் ஆண்டில், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், அவர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற பயிர்க் கடன்களின் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்து, இதற்காக 61.05 கோடி ரூபாய் அனுமதித்து நான் உத்தரவிட்டேன்.

2002–2003ஆம் ஆண்டு குறுவையில் விவசாயிகள் பெற்ற குறுகிய கால (Short Term) பயிர்க் கடன்களை, நடுத்தரக் கால (Medium Term) கடன்களாக மாற்றுவதற்காக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு Tamil Nadu State Apex Co-operative Bank–ற்கு எனது அரசு 20 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியது.

மேலும், நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் பெற்ற நீண்ட காலக் கடன்கள் மீது, 31.12.2003 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த தவணை கடந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, அதற்கென என்னுடைய அரசு 1.80 கோடி ரூபாய் வழங்கியது.

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 2003–2004ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் மீதான வட்டித் தொகை 62 கோடி ரூபாயை என்னுடைய அரசு தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

1999ஆம் ஆண்டிற்கு முன்னர் மாற்றி அமைக்கப்பட்டு 31.3.2004 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த உறுப்பினர்களின் நடுத்தரக் கால மாற்றுக் கடன் - Medium Term Conversion Loan – மற்றும் நடுத்தரக் கால மறு மாற்றக் கடன் – Medium Conversion Rephasement Loan – ஆகிய கடன்களை, வட்டி இல்லாத் தொகுப்புக் கடனாக – Blocked Loan Account – ஆக மாற்றி என்னுடைய அரசு உத்தரவிட்டது. இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட நாளிலிருந்து, இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளிக்கப்பட்டது. அதன் பிறகு விவசாயிகள் அடுத்த 5 ஆண்டுகளில் கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் வகை செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக என்னுடைய அரசு 68.95 கோடி ரூபாய் வழங்கி ஆணையிட்டது.

இவ்வாறாக, கடந்த 4 ஆண்டுகளில், விவசாயிகளுக்கு கடன்களைத் தள்ளி வைப்பதற்கும், தீர்வு செய்வதற்கும், வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவும்; பல்வேறு சலுகைகளை அறிவித்து, அதற்கென மொத்தம் 524.31 கோடி ரூபாய் அனுமதித்து நான் உத்தரவிட்டேன்.

முந்தைய திமுக அரசு, 2001ஆம் ஆண்டு மார்ச் திங்களில், 7 சதவிகித வட்டி ஊக்குவிப்புத் திட்டம் – Interest Incentive Scheme – ஒன்றை அறிவித்தது. ஆனால், அவ்வாறு திட்டம் அறிவிக்கப்பட்டதே தவிர, அதற்கென நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. என்னுடைய அரசு தான், இதற்காகவும் 34.24 கோடி ரூபாயை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதித்து உத்தரவிட்டது.

மேலும், இந்தியாவிலேயே முதன்முறையாக, என்னுடைய அரசு தான் பயிர்க் கடன்கள் மீதான வட்டியை 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைத்து ஆணையிட்டது.

மேலும், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க் கடன் வசூல் செய்வதை வறட்சி ஆண்டுகளில் நிறுத்தி வைத்து அவர்களுக்கு என்னுடைய அரசு நிவாரணம் வழங்கியுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்ற போதிலும், 2004–2005ஆம் ஆண்டில், 1064 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டில், அதாவது, 2003–2004ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் அளவை விட 73 சதவிகிதம் அதிகமாகும்.

மேலும், என்னுடைய அரசு 31.3.2004 அன்று நிலுவையாக இருந்த பயிர்க் கடன் மற்றும் அதன் மீதான வட்டியை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றி அமைத்து, அதில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு கடனைக் கட்ட வேண்டியது இல்லை என்றும்; அடுத்த மூன்று ஆண்டுகளில் கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இதன்படி, 2,598 கோடி ரூபாய் அளவில் நிலுவையில் இருந்த கடன் மற்றும் வட்டியை 5 ஆண்டு காலக் கடனாக மாற்றி அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, மாற்றி அமைக்கப்பட்ட கடனுக்கான வட்டியையும் என்னுடைய அரசு 12 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறைத்து உத்தரவிட்டது. இதனால், இலட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின் போது பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர்கள் பலர் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்தனர். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுத் துன்பத்திற்கு ஆளான விவசாயிகள் வாழ்க்கை வளம் பெற்றிட வேண்டும்; அவர்களது துயரம் துடைக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எனது அரசு இவ்வளவு சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கி உள்ளது. இதற்கு மேலும் பயிர்க் கடன்கள் மீது நிவாரணம் அளிக்க வேண்டும் எனில் அதற்கு மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியின் ஆதரவு இருந்தால் தான் முடியும். இவ்வாறு நிவாரணம் வழங்குவதற்கு, மத்திய அரசும், நபார்டு வங்கியும் அனுமதி வழங்குவதோடு மட்டும் நில்லாமல் நிதி உதவியும் அளிக்க வேண்டும். ஏனென்றால் மாநில அரசால் மட்டுமே இதற்கான முழு பொறுப்பையும் ஏற்க இயலாது.

இதுவரை வழங்கப்பட்ட கடன் நிவாரணங்களில் பெரும்பாலானவை குறுகிய காலப் பயிர்க் கடன் பெற்ற விவசாயப் பெருமக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிடமிருந்து – Primary Co-operative Agriculture and Rural Development Bank–களிடமிருந்து நீண்ட காலக் கடன் Long Term Loan பெற்ற விவசாயப் பெருமக்களுக்கும்; தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் Primary Agriculture Co-operative Bank –களில் – நடுத்தரக் கடன் – Medium Term Loan – பெற்ற விவசாயப் பெருமக்களுக்கும்; நகரக் கூட்டுறவு வங்கிகளில் – Urban



Co-operative Bank –களில், – கடன் பெற்றவர்களுக்கும் சலுகைகள் வழங்கிட நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய கடுமையான வறட்சியினைக் கருத்தில் கொண்டு, 31.3.2004 அன்றைய தேதியில் விவசாயிகளால் திருப்பிச் செலுத்தப்படாத நீண்ட கால கடன் பாக்கியை மாற்றி அமைக்கும் திட்டம் ஒன்றை நபார்டு வங்கி அறிவித்துள்ளது. ஆனால், நபார்டு வங்கிக்கு தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி – Tamil Nadu Co-operative State Agriculture and Rural Development Bank – செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை மாற்றி அமைக்க இதுவரை நபார்டு வங்கி முன் வரவில்லை. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெற்று தவணை பாக்கி வைத்துள்ள விவசாயிகளுக்கும் ஏனைய கடன்தாரர்களுக்கும் நிவாரணம் அளிப்பதை மேலும் தாமதப்படுத்த முடியாது என்பதால் அவர்கள் பயன் பெறும் வகையில், "ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம்" என்னும் புதிய திட்டம் ஒன்றை – One Time Settlement Scheme–ஐ செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின்படி,

★ சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக Non Performing Assets – ஆக நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்றுள்ள அபராத வட்டி 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி (Interest) கூடுதல் வட்டி (Interest on overdues) மற்றும் அபராத வட்டி (Penal interest) ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இதன் மூலம் 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகள் 145.90 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெறுவதற்கு வழிவகை செய்யப் படுகிறது.

★ நீண்ட காலப் பண்ணைக் கடன் - Long Term Farm Sector Loan - பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையிலுள்ள அசல், வட்டி மற்றும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவிகிதம் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டியில் 50 சதவிகிதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இதன் மூலம், 57,430 பெரிய விவசாயிகள், 92.12 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெறுவார்கள்.

★ இதர பண்ணைச் சாரா – Non Farm Sector - கடன்தாரர்களைப் பொறுத்த வரையில், 31.3.2003 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையில் உள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான

மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31.3.2003 அன்று நிலுவையில் உள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி, மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும்.

இதன் மூலம் 17,990 கடன்தாரர்கள் 42.28 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை பெறுவர்.

இந்த ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின் மூலம் One Time Settlement Scheme விவசாயிகள் மற்றும் இதரக் கடன்தாரர்கள் மொத்தம் 2,53,970 பேர் பயனடைவார்கள். இவர்களுக்கு 280.30 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை வழங்கி வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடன்தாரர்கள் தாம் செலுத்த வேண்டிய தொகையை ஒரே தவணையில் செலுத்தலாம்; அல்லது அதில் குறைந்த பட்சம் 25 சதவிகிதத் தொகையை 3 மாதத்திற்குள் செலுத்தி, மீதமுள்ள தொகையினை அடுத்த 6 மாதத்திற்குள் உரிய வட்டியுடன் செலுத்தலாம்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பினை ஓரளவு ஈடுகட்டும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு – Tamil Nadu Co-operative State Agriculture and Rural Development Bank –ற்கு 15 கோடி ரூபாய் அனுமதித்து, நான் ஆணை பிறப்பித்துள்ளேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் – Primary Agriculture Co-operative Banks – விவசாயிகளுக்கு நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குகின்றன. இக்கடன்கள் கறவை மாடுகள் வாங்குதல், டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்கள் வாங்குதல், கோழி வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், பழத் தோட்டம் அமைத்தல் போன்ற விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படுகின்றன. இக்கடன்களை, வழக்கமாக மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் கடன்தாரர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும். தமிழகத்தில் தொடர்ந்து நிலவிய வறட்சியினால், விவசாயிகளால் இந்தக் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த இயலவில்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 31.3.2004 அன்றைய தேதியில், 356.01 கோடி ரூபாய் அளவுக்கு நடுத்தரக் காலக் கடன் நிலுவையில் உள்ளது. இந்தக் கடனையும் நபார்டு வங்கியின் வழி முறையின்படி முதல் 2 ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளித்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடனாக மாற்ற நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மட்டும் அல்லாது நகர்ப் புறங்களில் வாழும் நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்களும், பயன் பெறக் கூடிய வட்டி குறைப்புத் திட்டத்தையும் இந்தப் பேரவைக்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னுடைய தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு, நகர கூட்டுறவு வங்கிகளில் – Urban Co-operative Bank –களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒட்டு மொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தின் கீழ், நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் உள்ளிட்ட மொத்தம் 13,612 பயனாளிகள் 3.21 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்கெனவே வட்டிச் சலுகை பெற்றுள்ளனர். மேலும், நகர கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதங்கள் 1.2.2003 முதல் குறைக்கப்பட்டுள்ளன. நகர கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள நெசவாளர்கள் மற்றும் இதரப் பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற தங்களது பழைய கடன்களுக்குத் தற்போதைய குறைந்த வட்டி விகிதமே விதிக்கப்பட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். இதனைப் பரிவுடன் பரிசீலனை செய்து நடப்பு வட்டி விகிதத்திலேயே 1.4.2001 முதல் வட்டி விகிதத்தை மாற்றி அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டம் நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் பயன் அடைய விரும்புவோர் 3 மாத காலத்திற்குள் 25 சதவிகித கடன் நிலுவையைச் செலுத்தி, வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மீதம் உள்ள தொகையை அடுத்த ஆறு மாத காலத்திற்குள் முழுமையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் மூலம், 98,481 கடன் பெற்றவர்கள், 11.10 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகையைப் பெறுவார்கள்.

தற்போது நான் அறிவித்துள்ள பல்வேறு சலுகைகள் கூட்டுறவு வங்கிகளில், கடன் பெற்றுள்ள விவசாய பெருமக்கள், நெசவாளர்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினரின் சுமையை வெகுவாகக் குறைத்து அவர்கள் தங்களது கடன்களை எளிதில் திருப்பிச் செலுத்த உற்ற உதவியாக அமையும். அவர்களது தேவை அறிந்து, நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளை அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று கூறி அமைகிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

'விஷு திருநாள்' வாழ்த்துச் செய்தி

புத்தாண்டுத் திருநாளாம் 'விஷு' திருநாளை மகிழ்வோடு கொண்டாடும் மலையாள மக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலையாள மக்களின் மனங்கவர்ந்த மகிழ்ச்சிப் பண்டிகை 'விஷு' வைகறையில் துயில் நீங்கி, வனப்பான விஷுக்கனி கண்டு, வாழ்விக்கும் இறைவனை வணங்கி, வாஞ்சையுடன் ஒன்று கூடி இல்லத்தார் விருந்துண்ணும் இனிய நாள் 'விஷு' நன்னாள்.

எத்திசையில் வாழ்ந்தாலும் தங்கள் பாரம்பரியச் சிறப்பை மறவாத பெருமக்கள் மலையாள மக்கள்.

இந்தப் புத்தாண்டு எல்லா நலங்களையும் மலையாளப் பெருமக்கள் வாழ்வில் மலரச் செய்யட்டும் என்று மனதார வாழ்த்தி என் இதயம் கனிந்த 'விஷு' திருநாள் வாழ்த்துகளை இன்னும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

ஆண்டிபட்டியில்...
பல்துறை பணிவிளக்கக் கண்காட்சி

தேனி மாவட்டம் மலைகள் சூழ்ந்த மாவட்டமாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு சிறப்பானத் திட்டங்களையும், நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி தேனி மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக்கி வருகிறார்கள். ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி பல்வேறு சிறப்புகளைத் தாங்கி தமிழ்நாட்டில் முதன்மைத் தொகுதியாக சிறப்புடன் திகழ்ந்து வருகின்றது.

தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குடிநீர்ப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காணும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், சாலை வசதிகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அணைக் கட்டுகள், குட்டைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏராளமாக தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பொது மக்களிடையே எடுத்துரைத்து விளம்பரப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல்துறைப் பணிவிளக்கக் கண்காட்சி மற்றும் தஞ்சாவூர் தென்மண்டல பண்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த 'சலங்கை நாதம் 2005' கலைத் திருவிழா 8.3.2005 முதல் 10.3.2005 முடிய ஆண்டிபட்டி இந்து உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியில் அரசுத் துறைகளுக்கு அரங்குகள் அமைத்துத் தரப்பட்டன.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ப்புத் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம், மருத்துவத்துறை, சுகாதாரத் துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, வேளாண்மைப் பொறியியற் துறை, தாட்கோ, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை, கூட்டுறவுத் துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம், ஆவின், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், கைத்தறித்துறை, வேளாண்மைத்துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, மாவட்ட பார்வையிழப்புத் தடுப்புச் சங்கம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கும் தனித்தனியே அரங்குகள் வடிவமைத்து கொடுக்கப்பட்டிருந்தன. 8.3.2005ஆம் நாள் மாலை 6 மணிக்கு நடைபெற்ற விழாவில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் கலை விழாவையும், கண்காட்சியையும் தொடங்கி வைத்தார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் உரையாற்றுகையில் "பொதுமக்கள் இங்கு அமைக்கப் பட்டுள்ள கலை நிகழ்ச்சிகளை மட்டுமல்ல, கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அரசுத்துறை அரங்குகள் வாயிலாக பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்து அறிந்து

கொள்ள இயலும். தேனி மாவட்டத்தில் ஒரு இலட்சம் பெண்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். பெரும்பாலான சுயஉதவிக் குழுக்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன" என்றார்.

மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. மு. செல்லமுத்து, துணைத் தலைவர் திரு. ராஜாங்கம், ஆண்டிபட்டி ஒன்றியக் குழுத் தலைவர் திரு. லோகிராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திருமதி ஜி. முத்துமீனாள், முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி. எஸ். செல்லம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர். கலைத் திருவிழாவையொட்டி ஆந்திரப்பிரதேச மாநிலக் கலைஞர்களின் பெரினி சிவதாண்டவம், ஒரிஸ்ஸா மாநிலக் கலைஞர்களின் மயூர் பஞ்ச் சாவ், பாண்டிச்சேரி மாநிலக் கலைஞர்களின் வில்லுப்பாட்டு, கேரள மாநிலக் கலைஞர்களின் கும்மட்டி, மத்தியப்பிரதேச மாநிலக் கலைஞர்களின் பண்ட்வாணி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உள்ளூர் கலைஞர்களால் நாள்தோறும் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் அரசின் திட்டங்களான சிறுசேமிப்பு, அனைவருக்கும் கல்வி இயக்கம், தொட்டில் குழந்தை திட்டம், எய்ட்ஸ் கட்டுபாடு, தரிசு நில மேம்பாடு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல் போன்றவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அனைத்து அரசுத்துறை அரங்குகளிலும், அரசுத் துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் அரசின் திட்டப்பணிகள், சாதனைகள் குறித்து விளக்கும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

9.3.2005ஆம் நாள் நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா. மாடசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் உரையாற்றும் போது "அரசின் திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியில் பல்வேறு அரசுத்துறை அரங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார். பெரியகுளம் அரசு தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் திரு. செ. அன்பு, மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திரு. எஸ். மதிவாணன் ஆகியோர் உரையாற்றினார்கள். பெரிய குளம் வருவாய் கோட்டாட்சியர் திரு. கே. புலமாடன் வரவேற்புரை ஆற்றினார். ஆண்டிபட்டி வட்டாட்சியர் திரு. ஆர். வைத்தியநாதன் நன்றி கூறினார்.

விழாவில் குஜராத் மாநிலக் கலைஞர்களின் பெடாராஸ், இராஜஸ்தான் மாநிலக் கலைஞர் களின் லங்கா மங்க்னியர், கர்நாடக மாநிலக் கலைஞர்களின் பூதா நடனம், தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கட்டைக் கூத்து ஆகிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

10.3.2005ஆம் நாள் நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகையில், “இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி பார்வையிடுவதற்கு மட்டுமல்லாமல் பயனுள்ள பல்வேறு தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது” என்றார். மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. அ. அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இணை இயக்குநர் (நலப்பணிகள்), திரு. ஆர். கருணாகரன், துணை இயக்குநர், (சுகாதாரப் பணிகள்) திரு. க. குழந்தைசாமி, முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. எஸ். செல்லம், ஆண்டிபட்டி சிறப்பு ஊராட்சித் தலைவர் திரு. எஸ்.கே.ஏ.பி. வஜ்ரவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு. து. முத்துப்பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார்.

சட்டீஸ்கர் மாநிலக் கலைஞர்களின் பந்த்தி நடனம், கர்நாடகக் கலைஞர்களின் பூதா நடனம், உதக மண்டலத்தைச் சேர்ந்த தோடர் வகுப்பினரின் நடனம், பாண்டிச்சேரி மாநிலக் கலைஞர்களின் மாஸ்க் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும், தமிழ்நாட்டின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கண்காட்சியில் சிறந்த அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பொதுப்பணித் துறைக்கு முதல் பரிசும், பெரியகுளம் அரசு தோட்டக் கலைக் கல்லூரிக்கு இரண்டாம் பரிசும், காவல் துறைக்கு மூன்றாம் பரிசும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப் பட்டது. மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் பொதுமக்கள் ஆர்வமுடன் திரளாகக் கலந்து கொண்டு, கலை நிகழ்ச்சி களையும், பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியையும் பார்வையிட்டனர். கண்காட்சியில் அரசுத்துறை அரங்கங்களில் அமைக்கப்பட்டிருந்த அரசின் திட்டச் செயல்பாடுகள் குறித்த விளக்கங்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என பொதுமக்கள் பாராட்டினார்கள்.

– ச. செல்வராஜ்

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
தேனி

* * *

கோக்கோ

கோக்கோ அல்லது கக்காவோ மரங்கள் சுமார் 9 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. ஒரு மரத்தில் ஆயிரக்கணக்கில் பூக்கள் மலரும். இதில் அதிசயம் என்னவென்றால், கிளைகளில் மட்டுமின்றி அடிமரத்திலும் இவை பூக்கும். ஆனால் பெரும்பாலான பூக்கள் உதிர்ந்து விடும். ஒரு மரத்தில் 20 அல்லது 30 பூக்களே காய்களாக ஆகின்றன.

காய்கள் முற்றிப் பழுத்தவுடன் அவற்றைப் பறித்து அதன் உள்ளிருக்கும் விதைகளைச் சேகரிப்பார்கள். இவ்விதைகளை நன்றாகக் கழுவி, உலர வைத்துப் பக்குவமாக வறுப்பார்கள். இப்படி வறுப்பதால் இவற்றுக்கு ஒருவித நிறமும் மணமும் உண்டாகின்றன. வறுத்த விதைகளை உடைத்துப் புடைத்து, ஓடு வேறு பருப்பு வேறாகப் பிரித்துப் பருப்பை இயந்திரம் மூலம் அரைப்பார்கள். அரைக்கும்போது சூடேறிப் பருப்பு இளகும். இதனுடன் பால், சர்க்கரை முதலியவற்றைச் சேர்த்து மீண்டும் அரைப்பார்கள். பிறகு இதனை அச்சுகளில் ஊற்றி சுவையான சாக்லேட் தயாரிக்கிறார்கள்.

இளகிய கோக்கோத் திரவத்தை மீண்டும் இயந்திரம் மூலம் அழுத்தும்போது கோக்கோ வெண்ணெய் என்ற கொழுப்புப் பொருளும் கிடைக்கிறது. மருந்து, வாசனைப் பொருள்கள், சோப்பு முதலியன தயாரிப்பதற்கு இதனைப் பயன்படுத்துகிறார்கள். கொழுப்பு நீக்கிய கோக்கோவைத் தூளாக்கிப் பானங்கள் செய்யவும் சுவையான உணவுப் பண்டங்களைத் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

விருதுநகர் மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் மாவட்டம் ஆகும். ஆண்டுதோறும் பயன்தரும் வகையில் ஆறுகளோ, நதிகளோ விருதுநகர் மாவட்டத்தில் இல்லை. சராசரி மழை அளவு சுமார் 800 மில்லி மீட்டர் மட்டுமே விருதுநகரில் பெய்கின்றது. அதுவும், குறிப்பிட்ட பருவ காலத்தில் குறிப்பிட்ட மழை அளவு பெய்யாத காரணத்தினால் விவசாயிகள் அதிக உற்பத்தியை அடைய முடிவதில்லை. மேலும், விவசாயம் செய்யும் மொத்தப் பரப்பில் 60 சதவிகிதம் மழையை நம்பி உள்ள மானாவாரி நிலங்களாகும். இம் மாவட்டத்தில் பெருவாரியாக வளம் குறைந்த கரிசல் மண் மிகுந்து காணப்படுகிறது.

இவ்வாறு உள்ள நிலையில், விவசாயிகள் அதிக பலன் பெற வேண்டுமானால், வறட்சியைத் தாங்கி, குறைந்த பாசன நீர் தேவைப்படும் பயிர்களையே . பயிரிட வேண்டியுள்ளது.

இதனை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களில் மாற்றுப் பயிராக காட்டாமணக்கு (ஜெட்ரோபா) பயிரிடும் திட்டத்தினை விவசாயப் பெருமக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மைத்துறை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் மூலம், விவசாயப் பெருமக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த பயிற்சி முகாம்கள் நடத்தி, பெருவாரியாக நல்ல பலன் தரும் காட்டாமணக்குச் செடிகளைப் பயிரிட ஆலோசனைகள் வழங்கினார்கள். காட்டாமணக்கு விதைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யை டீசல் ஆகப் பயன்படுத்தலாம் என்பதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் வெம்பக்கோட்டை ஒன்றியம் எட்டக்காப்பட்டி கிராமத்தில் பயோடீசல் தயாரிக்கும் தனியார் ஆலையை நிறுவிடவும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள் ளார்கள். இதனால் காட்டா மணக்குச் செடி பயிரிடும் விவசாயிகள் காட்டாமணக்கு விதைகளை எளிதாக விற்பனை செய்து பலனைப் பெறலாம்.

காட்டாமணக்குச் செடி எல்லா மண் வகைகளிலும் வளரும் தன்மை உடையது. இதற்கு தண்ணீர் அதிகம் தேவைப் படுவதில்லை. எந்தச் சூழ்நிலை யிலும் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது. தரிசு நிலங்களில் பெருவாரியாகப் பயிரிடலாம். மேலும், மண் அரிப்பைத் தடுத்து மண்வளம் பேணுவதில் முதலிடம் பெறுகிறது. ஒரு தடவை நட்டால் 30 முதல் 40 ஆண்டுகள் வரை தொடர்ந்து பலன் தரும். இதன் சாகுபடிச் செலவு மிகவும் குறைவு. காட்டாமணக்கு விதையிலிருந்து 35 முதல் 45 சதவிகிதம் எண்ணெய் கிடைக்கிறது. இது உயிரி எரிபொருள் (பயோடீசல்) என அழைக்கப்படுகிறது. இதனை டீசல் இயந்திரங்களில் நேரடியாகவோ அல்லது டீசல் கலந்தோ பயன்படுத்தலாம். தற்போது இரயில் இன்ஜின்களில் இது பயன்படுத்தப்படுகிறது. இச்செடியின் எல்லா பாகங்களும் மருத்துவப் பயன் கொண்டது. சோப்பு

உற்பத்தி, வாசனை எண்ணெய், அழகு சாதனப் பொருட்கள், சிறந்த உரமான புண்ணாக்கு, சாயப் பொருட்கள், பசுந்தாழ் உரம் எனப் பலவகைப் பொருட்களாக உற்பத்தி செய்யவும் இது பயன்படுகிறது.

காட்டாமணக்குச் செடியினை நேரடியாக விதைகள் மூலம் பயிர் செய்யலாம். இறவைப் பயிருக்கு 2x2 மீட்டர் இடைவெளியும், மானாவாரிப் பயிருக்கு 1.5 x 1.5 மீட்டர் இடைவெளியும் கடைப்பிடிக்க வேண்டும். நடப்பட்ட இரண்டாவது ஆண்டில் மகசூல் கொடுக்க ஆரம்பிக்கும். சீரான வருமானம் நான்காம் ஆண்டிலிருந்து கிடைக்கும். ஏக்கருக்கு சுமார் ரூ.6,000 முதல் ரூ.8,000 வரை இலாபம் கிடைக்கும். மேலும் பழத் தோட்டங்களில் ஊடு பயிராகவும் இதனை வளர்த்துப் பயன்பெறலாம்.



இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட காட்டாமணக்குச் செடிகளை, விருதுநகர் மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் பயிரிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் எடுத்த முன்னோடி முயற்சிகள் மூலம் சென்ற பருவமழைக் காலத்தில் வேளாண்மைத்துறை மூலம் சுமார் 100 விவசாயிகள் 100 ஏக்கர் பரப்பில் பயிரிட்டுள்ளனர். மேலும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மூலம் 30 நீர் வடிப்பகுதிகளில் சுமார் 50 எக்டேர் பரப்பில் காட்டாமணக்குச் செடி பயிரிடப்பட்டுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் 'நவப்ரா' திட்டத்தின் கீழ் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பயனாளிகள் குழுக்கள் மூலமாக நர்சரி முறையில் செடிகள் உருவாக்கப்பட்டு சுமார் 40 எக்டேர் பரப்பில் காட்டாமணக்குச் செடி பயிரிடப்பட்டுள்ளது.

இதனைக் கண்டறிந்த மற்ற விவசாயிகளும் காட்டாமணக்குச் செடிகளைப் பயிரிடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். கிடைக்கும் குறைந்த மழை அளவிலும், வறட்சியைத் தாங்கி நிறைந்த பலன் கொடுக்கும் காட்டாமணக்குச் செடி, விவசாயிகளுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இதனை மாற்றுப் பயிராகப் பரிந்துரை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கும், சாகுபடி செய்வதற்கு அனைத்து உதவிகளையும் செய்துதந்த மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், வேளாண்மைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகளுக்கும் விவசாயிகள் நன்றி கூறிப் பாராட்டுகின்றனர்.

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
விருதுநகர்.

* * *

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் ஏப்ரல்–29

எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்றபேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழிறும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் –தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்



தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்;
நனி பசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் **'யுகாதி'** வாழ்த்துச் செய்தி

தமிழகத்தில் வாழும் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் அனைத்து மக்களுக்கும் எனது அகம் கனிந்த 'யுகாதி' திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தமிழகம் அமைதிப் பூங்கா. மொழியால் வேறுபட்ட மக்கள் இதயத்தால் இணைந்து வாழலாம் என்பதற்கு இனிய எடுத்துக்காட்டு தமிழ்நாடு. பன்மொழி பேசும் மக்கள் ஒன்றுபட்டு வாழலாம் என்பதைப் பலநூறு ஆண்டுகளாக உணர்த்திவரும் தமிழகம் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் தத்துவத்தின் விளைநிலம் ஆகும்.

இத்தகைய விழுமிய தத்துவத்தைக் கடைபிடித்துக் காலகாலமாகத் தமிழகத்தின் அங்கமாக வாழும் தெலுங்கு மற்றும் கன்னட மக்கள் தங்கள் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் அதே வேளையில் தமிழ் மக்களோடு தமிழ் மக்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

புத்தாண்டுத் திருநாளாம் இந்த 'யுகாதி' திருநாளில் அனைத்துத் தெலுங்கு மற்றும் கன்னட மக்களுக்கும் என் உளம்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைக்க திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

இந்தியாவின் முக்கியப் பெருநகரங்களில் சென்னையும் ஒன்றாகத் திகழ்கிறது. அதுமட்டும் அல்லாமல், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய மாநகரமாகவும் சென்னை மாநகரம் விளங்குகிறது. சென்னைப் பெருநகரத்தின் மொத்தப் பரப்பளவு 1,177 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் மைய நகரப் பகுதி 172 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2001–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சென்னைப் பெருநகரப் பகுதியின் மக்கள்தொகை 70.4 இலட்சம் ஆகும். இதில், சென்னை நகரில் வசிக்கும் மக்கள் எண்ணிக்கை மட்டும் 43.4 இலட்சம் ஆகும்.

சென்னை மாநகர் பகுதியில் 1984 ஆம் ஆண்டில் 1.4 இலட்சமாக இருந்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 2004 – ஆம் ஆண்டில் 16 இலட்சமாகப் பெருகியுள்ளது. அதாவது, வாகனங்களின் எண்ணிக்கை பத்து மடங்குக்கும் மேலாக உயர்ந்து, போக்குவரத்து நெரிசல் ஏற்படக் காரணமாக உள்ளது. சென்னையில் ஒவ்வொரு நாளும் 600 புதிய மோட்டார் வாகனங்கள் என்ற எண்ணிக்கையில் சென்னை மாநகரில் வாகனங்கள் பெருகுகின்றன. ஆனால், அந்த அளவுக்கு ஏற்ப சாலைப் பரப்பு அதிகமாகவில்லை. மாநகரின் மொத்தப் பரப்பளவில், சாலைகள் பரப்பு பாங்காக்கில் 11 விழுக்காடாகவும், லண்டன், பாரீஸ், நியூயார்க் ஆகிய வளர்ச்சியடைந்த வெளிநாட்டு நகரங்களில் 20 முதல் 25 விழுக்காடாகவும் உள்ளது. ஆனால் சென்னை மாநகரில் இது 3 முதல் 4 விழுக்காடாகத் தான் உள்ளது. இதனால் போக்குவரத்து மேலாண்மைக்கும், பொது மக்களின் பாதுகாப்பான இயக்கத்திற்கும் கடும் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்தினைச் சமாளிக்க கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் முதற்கட்டமாக 8.5 கிலோ மீட்டர், இரண்டாம் கட்டமாக 11.16 கிலோ மீட்டர் தூரத்துக்குமான பறக்கும் ரயில் எனப்படும் திரள் துரித ரயில் போக்குவரத்துத் திட்டம் (MRTS) உள்வட்டச்சாலை அமைத்தல் ஆகியவை அடங்கும். மேலும், சென்னைப் பெருநகரின் போக்குவரத்தை மேம்படுத்தி, நெரிசலைச் சீர்செய்யவும், தொடர்ந்து பெருகிவரும் மாநகரப் போக்குவரத்துத் தேவையைச் சமாளிக்கவும், முனைப்பான முதலீடுகள் செய்யப்பட வேண்டியது மிக அவசியம் ஆகும். எனவே, தற்போதுள்ள திரள் போக்குவரத்து தொடர் அமைவு வசதிகளை (Mass Transit Network) மேலும் வலுப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் நம்முடைய முக்கிய நோக்காக உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்துத் தேவையை



ஈடுகட்டுவது மட்டுமன்றி, சென்னை நகரின் நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய திரள் பயணியர் இயக்கத்தை செயலாக்க நான் முனைப்பாக உள்ளேன்.

சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விளக்க டெல்லி மெட்ரோ ரயில் கழகத்தை - Delhi Metro Rail Corporation - ஐ நான் கேட்டுக் கொண்டேன். டெல்லி மெட்ரோ – ரயில் கழகம் 21.8.2003 அன்று நிகழ்த்திய விளக்கத்திற்குப் பின், புதுடெல்லியில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வரும் மெட்ரோ ரயில் திட்டத்தினைப் போன்ற ஒரு திட்டத்தை சென்னையில் செயல்படுத்த ஓர் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையை, டெல்லி மெட்ரோ ரயில் கழகம் மூலம் தயாரித்து பெற்றிட நான் ஆணையிட்டேன். இதற்கு 54 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

டெல்லி மெட்ரோ ரயில் கழகம், அதன் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையில் மெட்ரோ ரயிலை சென்னையில் அமைக்க இயலும் என்றும், அதற்கென மூன்று வழித்தடங்களைத் தெரிவு செய்தும் பரிந்துரைத்துள்ளது. அந்த மூன்று பிரதான Corridor எனப்படும் வழிகள் பின்வருமாறு:

பிரதான வழி 1 : திருவொற்றியூரிலிருந்து அண்ணாசாலை வழியாக சென்னை விமான நிலையம் வரை – தூரம் 31.54 கிலோ மீட்டர்.

பிரதான வழி 2: சென்னைக் கடற்கரையிலிருந்து பெரியார் ஈ.வெ.ரா சாலை வழியாக கோயம்பேடு வரை – தூரம் 13.54 கிலோ மீட்டர்.

பிரதான வழி 3 : 21.68 கிலோ மீட்டர் தூரத்திலான கூடுதல் தொடர் அமைவு. திருவான்மியூர் – எல்.பி. சாலை – இராமகிருஷ்ணா மடம் சாலை – லஸ் சர்ச் சாலை – எல்டாம்ஸ் சாலை – தியாகராயா சாலை – உள்வட்டச் சாலை – அம்பத்தூர் தொழிற்பேட்டை ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் இரண்டாம் கட்டமாக 2016–ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்குதல்.

பிரதான வழிச்சாலை – 1 மற்றும் பிரதான வழிச்சாலை–2இல் மெட்ரோ ரயில் அமைப்பை 5086.85கோடி ரூபாய் செலவில் 2005 – 2010 வரை உள்ள ஆண்டுகளில் முதல் கட்டமாக மேற்கொள்ளலாம் என டெல்லி மெட்ரோ ரயில் கழகம் பரிந்துரைத்துள்ளது.

பிரதான வழிச்சாலை – 1இல் சுமார் 8.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் அமைப்பு தரைக்கடியில் சுரங்கப்பாதையாக அமையும். மீதமுள்ள தூரத்திற்கு இது சாலையின் மத்தியில் தரை மட்டத்திற்கு மேலே மேல் அடுக்கில் அமைக்கப்படும்.

பிரதான வழிச்சாலை 1 மற்றும் 2இல் அமைக்கப்படும் மெட்ரோ ரயில் மூலமாக ஒரு நாளைக்கு சுமார் 10.56 இலட்சம் பயணிகள் பயணம் செய்ய இயலும். இதனால், பொது போக்குவரத்து வசதிகள் – அதாவது, ரயில் மற்றும் பேருந்துகள் மூலம் பயணம் செய்வோர் எண்ணிக்கை வீதம் தற்போதைய 43 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயரும். இதன் பயனாக பயணிகளுக்கு நேரமும் செலவும் மிச்சப்படுவதோடு பயண வசதிகளும் வெகுவாக அதிகரிக்கும்.

இந்த விரிவான சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கையினை - Detailed Project Report - தயாரித்திட நான் அறிவுறுத்தியுள்ளேன். இது டெல்லி மெட்ரோ ரயில் கழகத்தால் ஆறு மாத காலத்திற்குள் தயாரிக்கப்படும். இதற்கான செலவு 3.30 கோடி ரூபாய் ஆக இருக்கும். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின், இந்தப் பணியினை மேற்கொள்ள பொருத்தமான நிறுவனத்தை நிர்ணயிக்கவும் இந்தப் பணியினைச் செயல்படுத்தத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரையண்ட் பூங்கா

கொடைக்கானலில் உள்ள "பிரையண்ட் பூங்கா" சுற்றுலாப் பயணிகளின் மனம் கவரும் இடமாகவும், கண்டு மகிழ ஏற்ற சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது.

கடல் மட்டத்திலிருந்து கொடைக்கானல் நகரம் 2,133 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 24.45 சதுர கிலோமீட்டர் ஆகும். சுமார் 102 ஆண்டுகளுக்கு முன் வனத்துறை அதிகாரியாக இருந்த "பிரையண்ட்" என்ற ஆங்கிலேயரால் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட இந்தத் தோட்டம் அவரது பெயரிலேயே "பிரையண்ட் பூங்கா"வாக அமைந்தது.

இப்பூங்காவில் வளர்க்கப்படுகின்ற 700க்கும் மேற்பட்ட ரோஜா மலர்கள் சுற்றுலாப் பயணிகளை மிகவும் ஈர்க்கின்றன. நாட்டில் கிடைக்காத சுமார் 80 வகையான செடிகள், கண்ணாடி அறையில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சீதோஷ்ண நிலைக்கேற்ப குறிப்பிட்ட காலத்தில் மலர்கின்ற 35 வகையான செடிகள் மற்றும் ஆண்டு தோறும் பூக்கும் 50 வகையான செடிகள் இப்பூங்காவை அழகு செய்கின்றன.

பிரையண்ட் பூங்காவில் பல்வேறு பூக்களுடன் சிங்கமுக பூக்கள், கோழிக்கொண்டைப் பூ, டோலக் பூ உள்பட பல பூக்கள் பூத்துள்ளன.

கொடைக்கானலுக்கு வரும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளில் அதிக எண்ணிக்கையில் பிரையண்ட் பூங்காவை கண்டு மகிழ்ந்து செல்கின்றனர். ✶

- முதல் திரைப்பட ஒளிப்பதிவுக் கருவி 14.4.1984ல் கண்டுபிடிக்கப்பட்டது.
- வீடியோ ஒளிப்பதிவுக் கருவி 1956ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- அமிர்தா தொலைக்காட்சி 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- அமிர்தா தொலைக்காட்சியின் வாசகம் "விழிப்புணர்வின் உற்சாகம்".
- பைபிளுக்கு அடுத்து அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் "பஞ்சதந்திரா".

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த சென்னை, மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 7 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு வேண்டி கோரிக்கை விடுத்த மதுரை, இராமநாதபுரம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4 விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்

சென்னையைச் சேர்ந்த திரு. ஆர். கோவிந்தராஜ், திரு. எம். நடராஜன், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆர். இராமலிங்கம், திரு. எஸ்.ஏ. கருப்பண்ணன், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். முத்து சவுடய்யா, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ்.கே. இருளப்பன், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. டி.ஆர். கிருஷ்ணசாமி ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள் தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப்படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. கே.எம். தனலட்சுமி, திருமதி. பி.வி. பார்வதி அம்மாள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. இராமு அம்மாள், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. பார்வதி அம்மாள் ஆகியோர் மறைந்த தங்களது கணவன்மார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்கள் எனவும், தங்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில் மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களை, பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்காணும் நான்கு பேர்களுக்கும் மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், மருத்துவப்படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாயும் ஆக மொத்தம், 1,515 ரூபாய் மாதந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியமாக அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணைகள், அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் அம்மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர் ஆகியோரிடம் நேரில் வழங்கப்படும். ★

இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.

வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள். முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.

ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
சித்திரை – வைகாசி
மலர்: 36 இதழ்: 11
மே 2005 – விலை ரூ.10

இந்த இதழில்...

★ அகிலம்போற்றும் உள்துறை 2
★ நிதித்துறை 5
★ பொதுப்பணித்துறையின் சீர்மிகு பணிகள் 6
★ சாதனைப் பயணத்தில் நெடுஞ்சாலைத்துறை 7
★ மக்கள் நலன் காக்கும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை 9
★ கிராம முன்னேற்றத்தில் ஊரக வளர்ச்சித்துறை 12
★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 14
★ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை 16
★ கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை 19
★ உயர்கல்வித் துறையின் உன்னதப் பணிகள் 24
★ பள்ளிக்கல்வித்துறை 25
★ மானுடம் போற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை 27
★ நெசவாளர்கள் நலன் போற்றும் கைத்தறி மற்றும் துணிநூல்துறை 30
★ மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை 34
★ நிதிவளம் பெருக்கும் வணிகவரித்துறை 35
★ தொழில்துறை 38
★ சட்டத்துறை 39
★ தகவல் தொழில்நுட்பத்துறை 41
★ வளர்ச்சிப் பாதையில் வரலாற்றுச் சாதனைகள் 45
★ வருவாய்துறை 53
★ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை 57
★ சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்துறை 60
★ சிறுதொழில்துறையில் சீரிய வளர்ச்சி 65
★ மின்உற்பத்தியில் தன்னிறைவு பெறும் எரிசக்தித்துறை 67
★ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை 70
★ போக்குவரத்துத்துறையின் மகத்தான சாதனைகள் 73
★ திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை 75
★ விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வரும் வேளாண்மைத்துறை 77
★ செய்தி மற்றும் சுற்றுலாத்துறை 81
★ பொருளாதாரப் புரட்சிக் காணும் கூட்டுறவுத்துறை 85
★ மகளிர் நலன் காக்கும் சமூகநலத்துறை 88
★ தமிழகத்தில் தரணி போற்றும் தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை 90
★ இளைஞர்கள் நலன் போற்றும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை 94

அட்டைப்பட விளக்கம்

இரண்டாம் பக்க அட்டை :
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 18.5.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

அகிலம் போற்றும் உள்துறை

இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முதலிடமாக அமைந்திடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு தலைமையில், தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழவும், மக்கள் வாழ்வில் நல்ல வளர்ச்சியினைப் பெற்றிடவும் செயலாற்றி வரும் தமிழக அரசின் காவல் துறை, உலக நாடுகள் போற்றும் சிறந்த துறையாக விளங்குகிறது.

நாட்டின் பொது அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையைக் காத்து, பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் அடக்கி மக்கள் நலனைக் காத்து வருகின்ற தமிழக காவல்துறை, மாறிவரும் சமூகச் சூழ்நிலைக்கேற்ப புதுமையும் திறமையும் பெற்ற அங்கமாகவும் மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டும் செயலாற்றி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயலாற்றி, காட்டுக்கொள்ளையன் வீரப்பனின் அத்தியாயத்திற்கு முடிவு கட்டி, உலக வரலாற்றில் சிறப்பானதொரு பெயர் பெற்ற துறையாக தமிழக காவல்துறை விளங்குகிறது.

காவல்துறையின் சாதனைகள்

★ 2003–ஆம் ஆண்டில் 1,47,521 வழக்குகளும், 2004ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் வரை 1,30,709 வழக்குகளும் முடிவு செய்யப்பட்டுள்ளன.

★ கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2004–ஆம் ஆண்டில் குற்ற நிகழ்வுகள் 5.1 விழுக்காடு குறைந்துள்ளது. மாநிலத்தில், இது ஒரு ஆரோக்கிய மான நிலவரமாகும்.

★ 2003–ஆம் ஆண்டில் 72.13% ஆக இருந்த திருடுபோன சொத்து மீட்பானது, 2004ஆம் ஆண்டில் 80% ஆக உயர்ந்துள்ளது.

★ 2001–2002ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 942 பெண் உதவி ஆய்வாளர்களில், தகுதி உடைய 881 பேர் அடிப்படைப் பணிப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

★ கருணை அடிப்படையிலான பணி நியமனத்தின் கீழ், பணி நியமனம் செய்யப்பட்ட 183 நபர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும் 262 ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சென்னை நகரில் குற்றத் தடுப்புப் பிரிவு உதவி ஆய்வாளர்களுக்கென 513 மோட்டார் சைக்கிள்களும், சென்னை நகர போக்குவரத்துப் பிரிவில், உதவி ஆய்வாளர்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ 292 விஎச்எஃப் ஸ்டேட்டிக் கருவிகளும், 901 விஎச்எஃப் மொபைல் கருவிகளும், 1,407 விஎச்எஃப் கையடக்க கருவிகளும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ காவல் நிலையங்கள், உட்கோட்டங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றிற்கென ரூபாய் 17.5 கோடி செலவில், 2,705 கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம்

★ 2003–2004ஆம் ஆண்டில், நூற்றாண்டு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 3,609 மாணவர்களுக்கு ரூ.1,32,57,000ம், காவல்துறையினரின் 229 குழந்தைகளுக்கு கல்விப் பரிசாக ரூ.10,22,000 வழங்கப்பட்டுள்ளது.

★ காவல் நிலையங்களைத் தரம் உயர்த்தும் வகையில், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில், ரூபாய் 296 இலட்சம் மதிப்பீட்டில் 25 காவல் நிலையப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ 2002–2003 இல், ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் 200 காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ ரூபாய் ஆறு கோடி செலவில் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட காவல் அலுவலகங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

★ ரூபாய் 72 இலட்சம் செலவில் விழுப்புரம், ஈரோடு, திண்டுக்கல், கோவை, விருதுநகர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், சேலம், தேனி, புதுக்கோட்டை, நாமக்கல் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் காவல் துறையினருக்கான தங்கும் அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ காவல் வானொலி தொழில்நுட்பப் பிரிவுக்கு, சென்னை, ராஜா அண்ணா மலைபுரத்தில் ரூ. 51 இலட்சம் செலவில் தொழில்நுட்பப் பயிற்சி மையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.1.15 கோடியில், தஞ்சை, நாமக்கல், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் காவல் வானொலி தகவல் பரிமாற்ற வளாகங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

★ ரூபாய் 1.69 கோடி செலவில், 12 மாவட்டங்களில் துப்பறியும் பிரிவு நாய்களை உரிய முறையில் பராமரிக்கும் வகையில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ ரூ.5.13 கோடி செலவில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள், ஆயுதப் படை, பெண் காவலர் மற்றும் காவலர்களுக்கென தனித்தனியே 570 ஓய்வறைகளும், குளியல் அறைகளும் கட்டி முடிக்கப்பட்டன.

★ ரூபாய் 75 இலட்சம் மதிப்பில், ஆவடி, உளுந்தூர்பேட்டை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கென பாதுகாப்பு வளையம் அமைப்பதற்கான பணி முடிவடைந்துள்ளது.

★ ரூ.3 கோடி மதிப்பில், 25 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கென புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

காட்டுக் கொள்ளையன் வீரப்பன் அத்தியாயத்திற்கு முடிவு

★ சிறப்பு இலக்குப் படை வீரர்கள், வீரப்பனைப் பிடிப்பதற்காக பல்வேறு வகையான வியூகங்களை வகுத்து, இரவும் பகலும் பாராமல் தொய்வின்றிப் பணியாற்றி, வீரப்பனுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில், காவல் துறையினர் வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் சுட்டுக் கொன்றனர். இருபதாண்டுகளுக்கும் மேலாக மனித உயிர்களைக் கொன்று, காட்டு வளங்களைச் சூறையாடி வந்த வனக்குற்றவாளி வீரப்பனின் அத்தியாயத்திற்கு முடிவு கட்ட சிறப்பு இலக்குப் படையினர் ஆற்றிய பணியானது மிகவும் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

★ வீரப்பனைப் பிடிக்க சிறப்பு இலக்குப் படையினர் புரிந்த வீரதீரச் செயல்களையும், அப்படையில் பணியாற்றியவர்கள் ஆற்றிய தகுந்த பணியினையும் பாராட்டி, அங்கீகரிக்கும் வகையில், அவர்களுக்கு பதவி உயர்வு, பதக்கங்கள், ரொக்கப் பரிசுகள், விரும்பிய இடத்தில் மனைப்பட்டாக்கள் போன்றவை அரசால் வழங்கப்பட்டுள்ளன.

காவல்துறையை நவீனமயமாக்குதல்

★ தமிழ்நாடு காவல்துறையை மாறிவரும் தேவைகளுக்கேற்ப நவீனப்படுத்துவதில் இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. கணினிமயமாக்குதல், அதிநவீன தகவல் தொடர்பு, ஆயுதங்கள், வாகன மற்றும் பயிற்சி அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.427.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

காவலர் வீட்டுவசதி மற்றும் கட்டடங்கள்

★ காவல் பணியாளர்களின் வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்ய குடியிருப்புகள் கட்டப்படுவதை உறுதி செய்வதில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. இதுவரை, 6,315 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர காவல் ஆணையரகம்

★ பொது அமைதியை காத்திடவும், மக்களுக்கு நிம்மதியான சூழ்நிலையை உருவாக்கித் தரும்பொருட்டும் ரூ.22.40 கோடி செலவில் சென்னைப் பெருநகர காவல் ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர காவல் ஆணையரகத்தில், 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உள்ளடக்கி மொத்தம் 155 காவல் நிலையங்கள் உள்ளன.

சிறைத் துறை

★ சிறைகளையும், நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் திட்டம் 1.7.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மத்திய சிறைகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் வகையில் 78 இடங்களில் வீடியோ மூலம் இணைக்கும் முறையினை (Video Conferencing System) அறிமுகப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

★ பெண் குற்றவாளிகளுக்கென தனிக் கிளைச் சிறை ஒன்றை திருச்சிராப்பள்ளியில் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

மகளிர் காவலர்கள்

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க, நாட்டிலேயே முதல் முறையாக மகளிர் காவலர்களுக்கு அதிரடிப்படை பயிற்சியளிக்கும் வகையில், 352 மகளிர் காவலர்கள் சிறந்த முறையில் இப்பயிற்சியை முடித்துள்ளனர்.

★ மாநில காவல்துறையில், 130 மகளிர் காவலர்களைக் கொண்ட மகளிர் அதிரடிப்படை இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

★ இரு மகளிர் அதிரடிப்படை அடங்கிய 1,078 மகளிர் காவலர்களைக் கொண்ட அனைத்து நிலை மகளிர் காவல் படை அமைக்கப்பட்ட முதல் மாநிலமாக இந்தியாவிலேயே தமிழ்நாடு திகழ்கிறது.

★ 196 காவல்துறை உட்கோட்டங்கள் அனைத்திலும் ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை உருவாக்கி யுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பது சிறப்புக்குரியதாகும்.

பாலினர் வேறுபாடின்றி அனைவரையும் கையாளும் பயிற்சி

★ ரூ. 123 இலட்சம் செலவில், அனைத்து காவல் துறையினருக்கும் ஒவ்வொரு குழுவிற்கும பாலினர் வேறுபாடின்றி அனைவரையும் கையாளும் பயிற்சி ஆறு நாட்கள் அளிக்கப்பட்டது. மகளிர் காவலர்களுக்காக இதற்கான சிறப்புப் பயிற்சியும் நடத்தப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை ரோந்துப் பணி

★ நெடுஞ்சாலை ரோந்துப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ், 160 நெடுஞ்சாலை ரோந்துப்பணி அணிகள் ஏற்படுத்தப்பட்டு 80 முக்கிய இடங்களில் 80 புதிய "குவாலிஸ்" வாகனங்கள் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

மின்னணு ஒளி, ஒலி இணைப்பு

★ ரூ.8.61 கோடி மதிப்பீட்டில், சிறை வளாகத்தில் இருந்தபடியே கைதிகளின் விசாரணைக் காலத்தை நீட்டிக்க உதவும் வகையில், "தொலைக்காட்சி மூலம் நீதி வழங்கல்" (Tele Justice) முறை உருவாக்கப்பட்டு, 9 மத்திய சிறைகளும், 270 நீதிமன்றங்களும் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

★ ஆகஸ்ட் திங்கள் 2004-இல் இத்துறையில் உள்ள காலியிடங்களை

பூர்த்தி செய்ய ஏதுவாக, தீயணைப்போர் மற்றும் நிலைய அலுவலர் நேரிடை நியமனங்கள் செய்வதில் இருந்த தடை ஆணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

★ கும்பகோணத்தில் ஒரு பள்ளியில் ஏற்பட்ட கோரமான நிகழ்வினைத் தொடர்ந்து பள்ளிகளில் தீ பாதுகாப்பினை மேலும் அதிகரிக்கும் பொருட்டு இத்துறை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :

(அ) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தீ பாதுகாப்பு குறித்த கட்டாய ஆய்வு;

(ஆ) தீ விபத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் கட்டாயப் பயிற்சி;

(இ) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலிருந்து தடையின்மைச் சான்று வழங்குதல்;

(ஈ) தீ பாதுகாப்பு குறித்து ஆசிரியர்களுக்கு தீவிர பயிற்சியளித்தல்.

மாநிலத்தில் விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு

★ பதினொன்றாம் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாட்டில், 49 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, நவம்பர் திங்கள் 2001 மற்றும் பிப்ரவரி – மார்ச் 2002–லிருந்து செயல்பட்டு வருகின்றன.

★ இவ்விரைவு நீதிமன்றங்களுக்கான முழு நிதியையும் மைய அரசு வழங்கியது. இத்திட்டத்திற்கு 2000–2005 உள்ளிட்ட காலத்திற்கு ரூ.14.12 கோடியை மாநிலத்திற்கு மைய அரசு ஒதுக்கீடு செய்தது. 49 விரைவு நீதிமன்றங்களும் சிறப்பாகச் செயல்பட்டு 1,23,503 வழக்குகளை முடித்து வைத்துள்ளன.

★ பொதுமக்களின் நலன் மற்றும் நிலுவையில் உள்ள 26,455 வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண, 49 நீதிமன்றங்கள் ஓராண்டிற்கு, தொடர்ந்து செயல்பட ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ ★ ★

நிதித் துறை

நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும், நாட்டின் தேவைக்காகச் செய்யப்படும் செலவீட்டுத் தொகையின் மதிப்பீட்டை வைத்தே அமையும். அரசின் முறையான நிதிப் பங்கீட்டை வைத்தே அரசுத் துறைகளின் செயல்பாடும் முன்னேற்றமும் திருப்திகரமாக அமைகின்றன.

ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு துறையின் முக்கியத்துவத்திற்கும் ஏற்ப, நிதியினை ஒதுக்கி, வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் நிதித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

நிதி ஆதாரத்தையும், பண வருவாயையும் பெருக்கி, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி, இந்தியாவிலேயே தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உருவாக்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தை ஒளி மிகுந்த பாதையில் முன்னேற்றி வருகிறார்கள்.

★ நிதிநிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை இயற்றி, அதில் குறிப்பிட்ட இலக்குகளை எய்தியுள்ள ஒருசில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. ஏழை எளியோர், நிதிநிலைமைச் சமன்பாட்டு நடவடிக்கைகளினால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்து, பொருளாதார வளர்ச்சிக்கும் பொது நிதியின் வளத்திற்கும் ஏற்றதொரு மத்திய தரக் கால நிதிநிலை சீரமைப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

★ கடந்த நான்காண்டுகளில், தமிழ்நாட்டில் மிகவும் சிக்கலானதொரு பொருளாதாரச் சீரமைப்பு மற்றும் நிதிநிலைச் சமன்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில், ஏழை எளியோர் எந்தவித பாதிப்பிற்கும் எள்ளளவும் உள்ளாகாத வண்ணம் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதனால் இந்த நடவடிக்கை இலகுவாக அமைந்துவிட்டது. 2001ஆம் ஆண்டு மே திங்களில் காணப்பட்ட குழப்பமான கையறு நிலைமைகளை தமிழ்நாடு இன்று வெற்றிகரமாகத் தகர்த்தெறிந்துவிட்டது. இந்தியாவின் முதன்மை மாநிலம் எனும் இலக்கினை நோக்கி தமிழ்நாடு பீடுநடை போட்டுச் செல்கிறது.

அரசின் சாதனைகள்

★ 2000–2001 ஆம் ஆண்டின் நிதி நிலைமை சீர்குலைவுடன், மாநிலத்தின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான வளர்ச்சிப் பணிகளின் புறக்கணிப்பும் பின்னிப் பிணைந்திருந்தது. தொடர்ந்து வந்த கடுமையான வறட்சி நிலைமைகள் பொருளாதார மீட்சிக்குத் தடையாக இருந்தன. 'மனிதநேயம் கொண்ட பாரபட்சமற்ற வளர்ச்சி' என்பதனை அடிப்படையாகக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையிலான புதுமையான பொருளாதாரக் கொள்கை முற்றிலுமான திருப்பத்தை உறுதி செய்துள்ளது. பொருளாதார நிலையில் வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டில் தமிழ்நாடு 8 சதவிகிதத்திறகும் அதிகமான வளர்ச்சியை எய்தும்.

★ 2002–2007 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்தாவது திட்ட காலத்திற்கான திட்ட இலக்கை ரூ.40,000 கோடி எனும் அளவிற்கு பெரும் வளர்ச்சித் திட்டத்தை இவ்வரசு தயாரித்துள்ளது. அச்சுறுத்தும் நிதி நிலைமையை நேர்கொண்ட போதிலும், 2002–2003ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டிலும் திட்ட இலக்குகள் எய்தப்படுவதோடு மட்டுமல்லாது அவை விஞ்சப்படுவதையும் இவ்வரசு உறுதி செய்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.9,100 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2001–2002 ஆம் ஆண்டின் இலக்கைவிட 75% வளர்ச்சி கொண்டதாகும்.

★ 2001–2002 ஆம் ஆண்டில் பட்டிகளுக்கு தொகை கொடுக்காமல் விடப்பட்டு செயற்கையாக குறைத்துக் காட்டப்பட்ட ரூ. 2,739 கோடி அளவிலான வருவாய்ப் பற்றாக்குறை 2004–2005ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளின்படி ரூ.1,687 கோடி அளவிற்கு குறைந்துவிட்டது. 2005–2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, இது ரூ.1,404 கோடி எனும் அளவிற்கு மேலும் குறையும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

★ 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.1,777.91 கோடி எனும் அளவிலிருந்து வருவாயீட்டும் சொத்துக்களை உருவாக்கும் மூலதனச் செலவு 2005–2006ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டக் கணிப்பின்படி ரூ.4,791.64 கோடி அளவிற்கு உயரும்.

★ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு 2005–2006ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.7,528.09 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

★ சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பிற் கான ஒதுக்கீடு 2001–2002 ஆம் ஆண்டிலிருந்த ரூ.1,681.72 கோடி அளவிலிருந்து 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.3,364.88 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

★ ரூ.2,160 கோடி செலவிலான தமிழ்நாடு சாலைப் பகுதித் திட்டத்திற்கு உலக வங்கி ஏற்பளித்துள்ளது. ரூ.597.15 கோடி ஒதுக்கீடுடைய தமிழ்நாடு சுகாதார முறைகள் திட்டம் உலக வங்கியின் ஏற்பைப் பெற்றுள்ளது. ரூ.567.42 கோடி ஒதுக்கீட்டிலமைந்த தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்-II செயல்படுத்தப் படுவதற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம், மற்றும் நீராதார ஒருங்கிணைப்புத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாடுத் திட்டம் – III மற்றும் தமிழ்நாடு அதிகாரமளித்தல் மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டமான 'புதுவாழ்வு' ஆகியன உலக வங்கியால் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஏற்பளிக்கப்படவுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சியில் தமிழக நிதித்துறை வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. ★

பொதுப்பணித் துறையின் சீர்மிகு பணிகள்

மக்களுக்கான அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளைச் செய்வது பொதுப்பணித்துறை ஆகும். அரசின் நிருவாக அலுவலகங்கள், மக்களின் பல்வேறு பயன்பாடுகளுக்கான கட்டடங்கள், நீர்வள ஆதார அமைப்புகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டடங்களைக் கட்டுவதுடன் அவற்றைப் பராமரிக்கவும் செய்கிறது.

இத்தகைய இன்றியமையாப் பணிகளைச் செய்துவரும் பொதுப்பணித்துறையில் தனிக்கவனம் செலுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை நிறைவேற்ற ஊக்கமளித்து வருகிறார்கள். பாசனப்பணிகள், தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டங்கள், சிறுபாசன நதிகளை நவீனப்படுத்துதல், கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களைத் தூரெடுத்துப் புனரமைத்தல், தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பெரும் பணிகளை பொதுப்பணித்துறை சிறப்பாகச் செய்து வருகிறது.

அரசின் சாதனைகள்

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்

* **உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.1,083 கோடி செலவில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் தமிழகத்தில் தகுதியான இடங்களில் செயலாக்கப் பட்டுள்ளது.**
* நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் II –க்கான ரூ.2,900 கோடி மதிப்பீட்டிலான கருத்துருவின் மீது நிதியுதவி பெற உலக வங்கியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
* ரூ.52.33 கோடி மதிப்பில் 15 சிறு பாசனப் பணிகள், ரூ.4.66 கோடி மதிப்பில் 14 சிறப்பு சிறுபாசனப் பணிகள் 2004–2005க்கான பகுதி–II திட்டமாக ரூ.9.30 கோடி மதிப்பில் 9 திட்டங்கள், ஆர்ஐடிஎப்–ன் கீழ் ரூ.10.71 கோடி மதிப்பில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் 10 திட்டங்களின் பணிகள் தொடங்கப் படவுள்ளன.

நபார்டு வங்கி நிதியுதவி

* ரூ.198.36 கோடி மதிப்பில் 14 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கி அனுமதி அளித்துள்ளது.

ஹட்கோ நிதியுதவியுடன் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

* ஹட்கோ நிதியுதவியுடன் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.56.17 கோடி மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், நடுக்குப்பத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.
* வடசென்னையிலுள்ள எண்ணூர் துரித வழித் தடத்தில் 2.38 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.57 கோடியில் கடலரிப்புத் தடுப்புப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

சென்னை குடிநீர் வழங்கும் திட்டம் – 2

* **சென்னை மாநகருக்கான குடிநீர் வழங்கலை அதிகப்படுத்தும் திட்டம்–2க்கு ரூ.124 கோடி தமிழக அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.**



ஏரிகள் தூர்வாரும் பணி

* வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ரூ.105 கோடி மதிப்பீட்டில் 1,750 ஏரிகள் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

லாரி லோடு மணல் விலை குறைப்பு

* தமிழக ஆற்றுப் படுகைகளில் வரைமுறையின்றி மணல் எடுப்பதைத் தடுத்து நேரடியாகப் பொதுப்பணித்துறையின் மூலம் 239 குவாரிகளில் மணல் எடுத்து 171 இடங்களில் சேகரித்து ரூ.1,000 வீதம் விற்கப்பட்ட ஒரு லாரி அளவு மணல், தற்போது பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி ரூ.600 என்று விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது.
* **பல்வேறு அரசுத் துறைகளுக்காக பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய கட்டடங்களை கட்டிப் பராமரித்திடும் வகையில், பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பின் மூலம், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.411.52 கோடியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.** ✶

சாதனைப் பயணத்தில் நெடுஞ்சாலைத் துறை

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, கட்டமைப்பு மேம்பாடு வழி வகுக்கிறது. மாநிலத்தில் உள்ள கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த சாலைக் கட்டமைப்பு வசதிகள் பெரிதும் துணைபுரிகின்றன.

இந்தியத் திருநாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் உள்ளதைவிட தமிழ்நாட்டில்தான் அதிக அளவிலான சாலைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

மாநில மக்கள்தொகையில் பெரும் பகுதியினர் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர். கிராமப் புறங்களுக்கு சிறந்த சாலை இணைப்பு வசதிகளை அளிப்பதில் தமிழக அரசு தற்போது அதிக கவனம் செலுத்தி வருகிறது. கிராமங்களை இணைப்பது, பயண நேரம், வாகன இயக்கச் செலவு ஆகியவற்றைக் குறைப்பது போன்ற நோக்கங்களுடன் ஊரகச் சாலைகளைப் பிரதான சாலைகளுடன் இணைத்து ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினை ஏற்படுத்தி நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தமிழக அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

சாலைகளை, பல்வேறு பகுதிகளை இணைக்கும் அமைப்பு மட்டுமே எனக் கருதாமல், அவற்றை மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான தேவைகள் என்பதை உணர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழக அரசு, நெடுஞ்சாலைத் துறையில் சாதனைப் பயணம் மேற்கொண்டு வருகிறது.

அரசின் சாதனைகள்

* **நெடுஞ்சாலைத் துறையில், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2,688 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சாலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.**

நபார்டு வங்கி மூலம் சாலை வசதிகள்

* நபார்டு வங்கி கடனுதவியுடன், ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியைக் கொண்டு, 4 ஆண்டுகளில் 2,126.19 கி.மீ. அளவிலான சாலைப் பணிகள் மற்றும் 400 பாலப் பணிகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.
* நபார்டு வங்கியின் கடனுதவியுடன் 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை உள்ள கிராமங் களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் அடிப்படையில், ஊரகச் சாலைகள் திட்டம், சிறப்பு உறுப்புத்திட்டம் மற்றும் பேருந்துச் சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகிய குறைந்தபட்ச சேவைகள் திட்டங்களின் கீழ், 2,781.08 கி.மீ. அளவிலான சாலைப் பணிகளும், 57 பாலப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பழுதடைந்த சாலைகள் சீரமைப்பு

* தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக, பொதுமக்களிடமிருந்து பங்குப் பத்திரங்கள் வாயிலாகத் திரட்டப்பட்ட நிதியினைக் கொண்டு ரூ.175.10 கோடி மதிப்பீட்டில், 2,618 கி.மீட்டர் அளவிற்கு, மாவட்டங்களில் பழுதடைந்த இதர சாலைகளைச் சீரமைக்கும் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.



* சென்னைப் பெருநகர் எல்லையில் உள்ள உள்கட்டமைப்பு வசதியினை ரூ.18,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் மாபெரும் திட்டம் உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாகப் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்த 86.30 கி.மீ. அளவிலான 29 பணிகள் ரூ.33.71 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் மேம்பாட்டுப் பணிகள்

* ரூ.150 கோடியில் ஊரகச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், 3,038 கி.மீ.

நீளமுள்ள சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 885.87 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் ரூ.47.26 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

முழுமையான சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டம்

★ முழுமையான சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளின் கீழ், கடந்த நிதியாண்டில், ரூ.100 கோடி மதிப்பில் 563.86 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள், ரூ.100 கோடி மதிப்பில் 663.56 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலை மேம்பாட்டுப் பணிகள், ரூ.250 கோடி மதிப்பில் 4,545 கி.மீ. நீள மாவட்ட இதர சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், ரூ.87 கோடி மதிப்பில் 1,484.54 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு திட்டங்களின் கீழ் சாலை பழுதுபார்ப்புப் பணிகள்

★ **முதலமைச்சரின் சிறப்புச் சாலை பழுதுபார்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.578 கோடி மதிப்பீட்டில் 12,699 கி.மீட்டர் அளவிலான சாலைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.**

★ சாலைகளின் மேல்தளம் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ், ரூ.91.74 கோடி மதிப்பீட்டில் 2,295 கி.மீட்டர் அளவிலான சாலைகளின் மேல்தளம் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

★ பெருந்துத் தடச் சாலைகள் புதுப்பிக்கும் பணித் திட்டத்தின் கீழ், ரூ.150 கோடி மதிப்பீட்டில் 3,078 கி.மீட்டர் அளவிலான சாலைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

சாலை மேம்பாட்டுப் பணிகள்

★ பகுதி – 2 திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 72.60 கி.மீட்டர் அளவிலான சாலைப் பணிகளும், 48 பாலப் பணிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி கடனுதவியுடன் பாலங்கள் மேம்பாட்டுப் பணி

★ காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள பழைய 204 பாலங்களை ரூ.200 கோடி மதிப்பீட்டில் திரும்பக் கட்டும் ஒரு மாபெரும் திட்டத்தின் முதற்கட்டமாக 94 பாலங்களை நபார்டு வங்கியின் கடனுதவியுடன் திரும்பக் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவற்றில் 90 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்

★ தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.343.13 கோடி மதிப்பீட்டில் 1,184.31 கி.மீ. அளவில் சாலைப் பணிகளும், 23 பாலப் பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன.

★ இருப்புப்பாதை பணிகள் திட்டத்தின் கீழ், 6 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1 சாலை கீழ்ப் பாலம் கட்டப்பட்டுள்ளது.

ஹட்கோ கடனுதவியுடன் சாலைப் பணிகள்

★ ஹட்கோ கடனுதவியுடன், ரூ.513.92 கோடி மதிப்பீட்டில், 36 சாலை மேம்பாலம் / கீழ்ப் பாலம் கட்டும் பணிகள் எடுக்கப்பட்டு, 32 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

★ ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் எடுக்கப்பட்டு, 76.50 கி.மீ. அளவிலான சாலைப்பணிகளும், 48.86 கி.மீ. அளவிலான சாலைப்பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன.

★ ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 60 பாலங்களை திரும்பக் கட்டும் பணி எடுக்கப்பட்டு, 27 பாலங்களின் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. ✶

மக்கள் நலன் காக்கும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை



மாநகர மற்றும் நகரத்தில் வாழ்கின்ற மக்கள் நலனைக் காக்கும் பணியில் மாநகராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற பணியினை சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் மேற்கொண்டு வருகிறது. ஒரு நகரத்தின் தூய்மை, நாட்டின் தூய்மையாகும். அதன்படி நகராட்சிகளும், மாநகராட்சிகளும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பணிகளை செய்து வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த 15 அம்சத்திட்டத்தின் அடிப்படையில், நகர்ப்புற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்துதல், பாதுகாப்பான குடிநீர் கிடைக்கச் செய்தல், நகர்ப்புற ஏழைகள் வாழ்வை வளப்படுத்துதல், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான சேவைகளை அளித்தல், கழிவுநீரை மறு சுழற்சிக்கு உட்படுத்துதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டு செயல்படுத்தப்படுகின்றன. மேலும், நகராட்சி மற்றும் மாநகராட்சி நிருவாக முறைகளில் கணினி வசதி சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அரசின் சாதனைகள்

குடிநீர் விநியோகப் பணிகள்

★ கடந்த 4 ஆண்டுகளில், நகர்ப்புறப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட ரூ.16.16 கோடி மதிப்பீட்டில் 1,635 பணிகள் எடுக்கப்பட்டு, அதில் 1,269 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

★ தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கரூர், கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.575.30 கோடி, மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வெள்ளநீர்த் தேக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கை

★ வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, சென்னையைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளில் புதிய வடிநீர்க் குழாய்கள் அமைத்தல், ஏற்கெனவே பழுதடைந்துள்ள சாலைகளைச் சரிசெய்தல் ஆகிய 175 பணிகள், ரூ.31.12 கோடி செலவில் உடனடி நிவாரண நடவடிக்கையாக அடிப்படை வசதி கட்டமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் முடிக்கப்பட்டுள்ளன.

★ பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம், நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புறக் கூலி வேலைவாய்ப்புத் திட்டம், தேசியக் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.213 கோடியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நகராட்சி நிருவாகத்தில் கணினி செயல்பாடுகள்

★ நகராட்சி செயற்பாடுகளைக் கணினி மூலம் செயல்படுத்த 18 வகையான கணினி மென் பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவைபிறப்பு, இறப்பு, சொத்துவரி, குடிநீர்க் கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனம், கட்டட வரைபடி ஒப்புதல் மற்றும் பல பணிகளும் இவற்றுள் அடங்கும். 18 வகையான மென்பொருள்களில், 14 வகையான முக்கிய மென்பொருள்களின் பயன்பாடு அனைத்து நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் செயல்முறைப்படுத்தப் பட்டுள்ளன.

★ நவம்பர் 2003இல் அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சி நிருவாகத் துறை மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களின் இயக்குநரகம் ஆகியவற்றிற்கு கூடுதலாக கணினிகள், மென் பொருள்கள், கணினி உதிரி பாகங்கள் ரூ.17 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இவற்றினை நிறுவி, செயலாக்கும் பணி, மார்ச் 2004இல் முடிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புச் சுகாதார வளாகங்கள்

★ 'வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா' திட்டத்தின் கீழ் 525 ஒருங்கிணைப்புச் சுகாதார வளாகங்கள் ரூ.52.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

குடிசைப் பகுதிகளுக்குச் சுகாதாரக் கழிப்பறைகள்

★ குடிசைப் பகுதிகளுக்கு 905 சுகாதாரக் கழிப்பறைகள் ரூ.36.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட நடவடிக்கைகள் மேற்கொண்டு அதில் 426 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நகராட்சி – மாநகராட்சிகளில் 11–ஆவது நிதிக்குழுவின் கீழ் சாலை வசதிப் பணிகள்

★ 11ஆவது நிதிக்குழுத் திட்டத்தின்கீழ், நகர்ப்புறங்களில் ரூ.113.56 கோடி மதிப்பீட்டில் 1,592 கி.மீ. நீளத்திற்கான சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

★ 2001–02, 2002–03, 2003–04ஆம் ஆண்டுகளில் 11ஆவது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் விடுவிக்கப்பட்ட ரூ.107.38 கோடி மானியம், நகராட்சி மற்றும் மாநகராட்சியிலுள்ள கல்வி, சுகாதாரம், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்டது.

மழைநீர் சேகரிப்பு

★ இந்திய நாட்டிற்கே முன்னோடியாய் நிறைவேற்றப்பட்டுவரும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ், 7,647 அரசுக் கட்டடங்கள், 23,15,520 தனியார் வீடுகள், வணிக வளாகங்கள், 36,977 நீராதாரங்கள், 2,546 சாலையோரங்கள், 99 நடைபாதைகள், 2,335 தெருக்கள், 409 மாநகராட்சி, நகராட்சிக் குளங்கள், 365 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் உட்பட 23,65,898 இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வரலாறு காணாத வகையில் நகர்ப்புறங்களில் குடிநீர் வசதி

★ கடந்த 4 ஆண்டுகளில், 176 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.1,740 கோடி மதிப்பீட்டில் 58 நகரங்கள் மற்றும் 10,428 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 88.26 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், ரூ.804 கோடி மதிப்பீட்டில் தனி மின் விசைத் திட்டங்களின் மூலம் 16,089 குடியிருப்புகளில் வாழும் 40 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ ரூ.202 கோடி மதிப்பீட்டில், 33,821 கைப்பிறைப் பான்கள், தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறிய மின்னிறைப்பான் திட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

★ ரூ.20 கோடி மதிப்பீட்டில், 19,833 அரசுப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

★ 167 நகரங்களில் வாழும் 50.46 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.534 கோடியில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சென்னைக்கு நிரந்தரக் குடிநீர் வசதி

★ சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கி, சென்னை நகர மக்களின் தினசரி குடிநீர்த் தேவையான 180 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கும் பொருட்டு, ரூ.720 கோடி மதிப்பீட்டில், சென்னை குடிநீர் வழங்கல் மேம்பாடுத் திட்டம் அரசால் உருவாக்கப்பட்டு சென்னை நகர மக்களுக்கு தொடர்ந்து குடிநீர் வழங்கி வருகிறது.

சிறப்புச் சிற்றூராட்சிகளில் சிறப்பான பணிகள்

★ 4 ஆண்டுகளில், ரூ.704 கோடி மதிப்பீட்டில், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள், கழிப்பிடங்கள் போன்ற 92,774 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கிராமப்புறப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

டி.என்.டி.எப்.

★ கிருஷ்ணா நதிநீர் திட்டத்தின் கீழ் அருகாமையிலுள்ள 12 பகுதிகளான பம்மல், மீனம்பாக்கம், அனகாபுத்தூர் கௌல் பஜார், பொழிச்சலூர், புழுதிவாக்கம், உள்ளகரம், ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயல், போரூர் மற்றும் ஆலந்தூர் பகுதிகளுக்கு ரூ.26.54 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டு பணி நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சி நிருவாகத்துறை மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களின் இயக்குநரகம் ஆகியவை ரூ.17 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

வளசரவாக்கம் குடிநீர்த் திட்டம்

★ டி.என்.டி.எப். ரூ.21.92 கோடி நிதியுதவியுடன் 12 அருகாமையிலுள்ள ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்படும் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

சென்னை நகர நதிகள் பாதுகாப்புத் திட்டம்

★ தமிழக அரசு, மத்திய அரசுடன் இணைந்து நகரின் குடிநீர் வழிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கவும் மேலும் அவற்றைச் சுத்தமாக வைத்திருக்கவும் ரூ.1,700 கோடி செலவில் சென்னை நகர நதிகள் பாதுகாப்புத் திட்டத்தை வகுத்தது. மத்திய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையும், தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு நிறுவனம் நீர் வழிகளில் கழிவுநீர் கசிவைத் தடுப்பதற்கு தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்திலிருந்து ரூ.491.52 கோடியை மானியமாக அளித்துள்ளன. இத்துடன் சென்னைக் குடிநீர் வாரியத்தின் நிதி ரூ.228.63 கோடியையும் சேர்த்து ரூ.720.15 கோடி செலவில் திட்டப் பணிகள் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடல்நீரை நன்னீராக்கும் நிலையம்

★ சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பருவமழை பொய்த்து வருவதால், எல்லாக் காலங்களிலும் குடிநீர் வழங்குவதற்காக, கடல்நீரை நன்னீராக்கும் நிலையம் அமைக்க அரசு முடிவெடுத்து இதற்கென மீஞ்சூர் அருகே 60 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன.

இணைய தளத்தின் மூலம் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி மற்றும் கட்டணங்கள் வசூல்

★ சென்னைக் குடிநீர் வாரியம், தனது 10 பகுதி அலுவலகங்கள், 70 பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் உள்ள வசூல் மையங்களில், கணினி அமைப்பின் மூலம் குடிநீர், கழிவு நீரகற்று வரி மற்றும் கட்டணங்களை வசூல் செய்கிறது. இதுதவிர, 22 கனரா வங்கி கிளைகள் மூலமாகவும் வசூலிக்கப்படுவதுடன் ஐசிஐசிஐ வங்கியின் இணையதள ONLINE மூலமாக பற்று அட்டை கொண்டு வரிகள் மற்றும் கட்டணங்களைக் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், செப்டம்பர் 2003 முதல் ஜனவரி 2005 வரை ரூ.4.53 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரம் அளித்தல்

★ சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் I திட்டத்தில் வரி இல்லாத இணைப்புப் பத்திரங்கள் வெற்றி அடைந்ததால், வாரியம், 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஒரு பகுதி நிதிக்கு இந்திய அரசின் ஒப்புதலுடன் ரூ.50 கோடி வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரங்கள் வழங்குவதற்கு 2004–2005இல் திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ இந்தியாவிலேயே முதன்முதலாக பட்டியல் மற்றும் வசூல் ஆகியவற்றிற்கு இ ஆர்எஸ் சிப்பங்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தில்தான் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. கணக்குகள், மின்கம்பி தகவல் தொழில்நுட்பத்தில் இயக்கப்படுகின்றன.

இந்தியா மார்க் 2 பம்புகள்

சென்னை மாநகரில், தேவைப்படும் வெவ்வேறு இடங்களில் 1,258 எண்ணிக்கையிலான இந்தியா மார்க் 2 பம்புகள் வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றுடன் ஆழ்துளைக் கிணறுகள் கட்டுமானம் ஆகியவை ரூ. 6 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

குடிநீர்த் தொட்டிகள் நிறுவுதல்

ரூ.3 கோடி தோராயமான செலவில், 2,000 எண்ணிக்கையிலான HDPE பிளாஸ்டிக் தொட்டிகள் வாங்கப்பட்டு சென்னை மாநகரின் வெவ்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகளின் செயல்பாட்டினாலும் மற்றும் ஆதாரங்கள், விநியோகம் மற்றும் தொடர்ந்த முறையில் நீர் பகிர்மானத்தினாலும் அனைத்துக் குடியிருப்புவாசிகளுக்கும் சரிவிகித குறைந்தபட்ச அளவு நீர் வழங்குதல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

கிராம முன்னேற்றத்தில்
ஊரக வளர்ச்சித்துறை

இந்தியாவின் இதயம் கிராமங்களில் உள்ளது என்றார் மகாத்மா காந்தியடிகள். நாட்டின் பெரும் பகுதியாகத் திகழ்கின்ற ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, வாழ்கின்ற இடம் வளமானதாகவும், சுகாதாரமாகவும் இருக்க வேண்டியது அவசியம். கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் தன்னிறைவு பெற்று விளங்குகின்றன.

ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையும், கிராமப்பகுதிகளில் சாலை வசதிகள், மின் வசதி, தெருவிளக்குகள் வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி, கிராமங்களை முன்னேற்ற "நமது கிராமம்" எனும் திட்டத்தினையும் செயல்படுத்தி, தமிழகத்தை வளமான பாதையில் வழி நடத்தி செல்கிறார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

இது தவிர, வறுமை ஒழிப்பு, ஊரகக் குடியிருப்பு, குடிநீர் ஊருணிகளைப் புனரமைத்தல், சுகாதார மேம்பாடு, வேலைக்கு உணவுத் திட்டம், வீட்டுவசதி உள்ளிட்ட ஏராளமான பணிகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளை கிராமங்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கல், செல்லிட தொலைபேசிகள் வழங்கல் என புத்தாக்க நடவடிக்கைகளும் செயல்படுத்தப்படுகின்றன.

நான்காண்டு சாதனை விவரங்கள்

"நமது கிராமம்" – கிராம வளர்ச்சித் திட்டம்

★ அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் செயல்படுத்தி கிராமங்களின் தரத்தை முன்னேற்றும் வகையில், ரூ.200 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தையில் உதித்த திட்டமான "நமது கிராமம்" திட்டம் உருவாக்கம்.

கிராம ஊராட்சிகள் கணினி மயம்

★ ரூ.10.37 கோடி செலவில் 1,113 கிராம ஊராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும், 29 உதவி இயக்குநர் அலுவலகங்களும், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரகமும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

மாதிரி கிராம பயிற்சி மையங்கள்

★ மாதிரி கிராம பயிற்சி மையத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டம் அரண்மனை புதூர் கிராம ஊராட்சித் தலைவருடன் வீடியோ கான்பரன்சிங் நிகழ்ச்சியில் உரையாடி தொடங்கி வைத்தார்கள். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் மற்றும் சிறந்த செயல்பாடுகள் குறித்த பகிர்வுகளுக்கு உதவிடும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மின்னணு தொடர்புகள் தேசிய அளவில் சிறந்த நடவடிக்கைகளாக உருவாக்கப்பட்டுள்ளன.



ஊரகப் பகுதிகளில் எரிசக்தி திறன் மிகுந்த அமைப்புக்களை ஏற்படுத்துதல்

★ தமிழகத்தில் புதுப்பிக்கதக்க எரிசக்தித் திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சித்துறை மூலம் 11 எரிசக்தி கலன்கள், 1,274 கழிப்பறையுடன் இணைந்த கரிம வாயுக் கலன்கள், 1,587 கரிம வாயுக் கலன்கள், 3,003 சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்குகள், 304 சூரிய ஒளியில் செயல்படும் வீட்டு மின் விளக்குகள் மற்றும் 22 சூரிய ஒளியில் இயங்கும் பம்புகள் போன்றவற்றை செயல்படுத்தி, தமிழக அரசு, தேசிய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது.

முழுச் சுகாதாரத் திட்டம்

★ **முழுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 28 மாவட்டங்களில், திட்டச் செயலாக்கத்திற்கு மத்திய அரசின் அனுமதி பெற்று, அதன்படி நாட்டிலேயே அதிக மாவட்டங்களில் முழுச் சுகாதாரத் திட்டத்தினைச் செயலாக்கும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.**

மழைநீர் சேகரிப்பு

★ ஊரகப் பகுதிகளில், 66 இலட்சத்து 61 ஆயிரத்து 965 கட்டடங்களில், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, 1,36,026 திறந்தவெளி மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஊருணிகள் சீரமைப்பு

★ கிராமப்புறங்களில் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் வகையில், 246 பழமையான ஊருணிகள் ரூ.7.38 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

நெசவாளர்கள் துயர்துடைக்க சிறப்புத் திட்டம்

★ 13 மாவட்டங்களில் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த சுமார் 25,000 நெசவாளர் குடும்பங்களின் துயர்துடைக்க ரூ.25 கோடி மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ உடல் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, இராமநாதபுரம், கோவை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சுய தொழில் மேம்படுத்திட ரூ.8.11 கோடி அளவில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி

★ ரூ.66.71 இலட்சம் செலவில், 95,293 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

★ நிலத்தடி நீரை மேம்படுத்தும் நோக்கில், ரூ.124 கோடியில் 12,398 கிராமக் குளங்கள் பல்வகை பயன்பாட்டிற்கென மேம்படுத்தப்பட்டுள்ளன.

மரபு சாரா எரிசக்தி மூலம் செயல்பாடுகள்

★ சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தும் திட்டத்தின் கீழ் 1,219 கி.மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்ச்சாலை மற்றும் 3,090 சூரிய ஒளியால் இயங்கும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும், 1,274 தனி நபர் கழிப்பிடங்கள் சாரா எரிவாயுக் கலன்களுடன் இணைக்கப்பட்டன.

வேலைக்கு உணவுத் திட்டம்

★ சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.1,153.10 கோடி மதிப்பீட்டில், 2,87,960 பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வாயிலாக 12.76 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன.

★ வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு கூலியாக 5 இலட்சம் மெ.டன் அரிசியும், ரூ.85.48 கோடி ரொக்கமும் வழங்கப்பட்டன.

★ ரூ.83.57 கோடியில், 13,928 கதிரடிக்கும் நெல் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ரூ.128.72 கோடியில், 12,872 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

தொகுப்பு வீடுகள்

★ ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் ரூ.450.28 கோடி செலவில், 1,49,838 புதிய தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.78.94 கோடி மதிப்பீட்டில் 75,201 கச்சா வீடுகள் மேம்பாடு செய்யப்பட்டன.

★ பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.90.91 கோடி மதிப்பீட்டில், 26,298 வீடுகள் கட்டித் தரப்பட்டன.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

★ பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 4,42,531 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 1,76,672 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.80.61 கோடி மதிப்பிலான சுழல்நிதியும், 3,19,747 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 27,591 சுயஉதவி குழுக்களுக்கு ரூ.106.45 கோடி மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய பொருளாதார உதவிகளும் வழங்கப்பட்டு, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்

★ ரூ.294 கோடியில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான 13,064 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.589.38 கோடியில், 34,221 பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள்

★ 12,422 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், ரூ.101.55 கோடி மதிப்பீட்டில் 5,726 பல்வேறு அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* * *

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

சமுதாயத்தில் நலிவுற்ற நிலையில் வாழும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி அரவணைத்துப் பாதுகாத்து வருகிறது தமிழக அரசு.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உன்னத நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுகின்றன. கல்வி உதவிகள், வேலைவாய்ப்பு வசதிகள், பொருளாதார உதவிகள் போன்ற வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப் படுகின்றன.

ஆதிதிராவிட மாணவிகளின் கல்வியறிவு வளர்ச்சி பெற வேண்டும் என்னும் உயரிய நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் அம் மாணவிகள் கல்வி கற்றலை நிறுத்திவிடாமல் தொடர்ந்து படித்து தம் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இலவசப் பாடநூல்கள், சீருடைகள், தாட்கோ மூலம் வீட்டுவசதி, உயர்கல்விக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள், விடுதி வசதி என அனைத்துவித வசதிகளும் ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு செய்து தரப்பட்டுள்ளன.

அரசின் சாதனைகள்

உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை

* 2002–2003ஆம் ஆண்டுமுதல், கல்விக் கடன் உதவித்தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு, உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை என வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ரூ.22.59 கோடி மதிப்பில், 32,156 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ், ரூ. 91.50 இலட்சம் செலவில், 4,883 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
* பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, மருத்துவத் துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேற்படிப்புகள் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் அதிக அளவில் பயனடைந்திடும் வகையில், மேற்படிப்புப் பயின்றிட ஏதுவாக உரிய நிதி உதவிகளைப் பெறும் வகையில், விதிமுறைகள் எளிதாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்களின் கல்வியை ஊக்குவிக்கவும், இடை நிற்றலைத் தடுத்துத் தொடர்ந்து கற்றிடும் வகையிலும், 3–ஆம் வகுப்பிலிருந்து 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவிகள் ஆண்டொன் றிற்கு தலா ரூ.500 வீதமும், 6–ஆம் வகுப்பு கல்வி பயிலும் 30,000 மாணவிகள் ஆண்டொன்றிற்கு ரூ.1,000 வீதமும் ஊக்கத் தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இலவச மிதிவண்டி

* தொலைதூர இருப்பிடங்களிலிருந்து கல்வி பயில வரும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் இடைவெளி விடாமல் தொடர்ந்து பயில்வதை ஊக்குவிக்கும் அடிப்படையில், இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சிந்தனையில் உருவான இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.31.32 கோடி செலவில் 2,03,566 மாணவிகள் இதுவரையில் பயனடைந்துள்ளனர்.

நலவிடுதிகள்

* ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்கள் நலனுக்காக ரூ.155.30 கோடி செலவில் 493 விடுதிகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, 264 விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மற்றவை பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

அறிவியல் ஆய்வுக்கூடங்கள்

* கடந்த நான்காண்டுகளில், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள், ரூ.3.43 கோடி மதிப்பில் கட்டப்பட்டு மாணவ/மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை

* ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புப்

பொதுத் தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சி யடைந்திடும் வகையில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 1,110 ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலவச வீட்டுமனை

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் திட்டத்தின் கீழ் 56,805 நபர்களுக்கு ரூ.14.78 கோடி செலவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலவச வீடுகள்

* ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், ரூ.54.10 கோடி செலவில் 66,642 நபர்களுக்கு இலவச வீடுகள் மற்றும் கச்சா வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.
* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில் மயானம் மற்றும் மயானப் பாதைகள் அமைத்துத் தருவதற்காக ரூ.200.49 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தாட்கோ நிறுவனத்தின் சாதனை

* தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, மானியத்துடன் கூடிய வங்கிக் கடன், சிறு–குறு விவசாயக் கடன் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் தொழில் தொடங்கும் வகையில், 5,96,949 நபர்களுக்கு, ரூ.527.61 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் நலத்துறையின் மூலம் நான்காண்டுகளில்...

* ரூ.2.95 கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலையில் பழங்குடியினர் மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது.
* கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.49.54 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி மின்வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.
* பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு சாலை, குடிநீர், மின்வசதிகள் போன்றவை ரூ.752.77 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளன.
* ரூ.150 இலட்சம் மதிப்பில், 2 மாணவர் விடுதிகளும் மற்றும் 9 மாணவியர் விடுதிகளும் கட்டப்பட்டுள்ளன.
* ஒவ்வொரு ஆண்டும், பழங்குடியினர் நல பொருளாதார மற்றும் அடிப்படைக் கட்டுமான வசதிகளுக்காக ரூ.323.32 இலட்சம் செலவில் பழங்குடியினர் துணைத்திட்டத்தின் சிறப்பு மைய நிதியாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



* ரூ.372.75 இலட்சம் செலவில் பழங்குடியினர்களுக்கு வீடுகள், சாலைவசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன.
* உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில், ரூ.120 இலட்சம் மதிப்பில், ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
* உதகையில், பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.106.05 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.
* ஆதிதிராவிடர் மற்றும் அரசின் உண்டி உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.6.21 கோடி மதிப்பீட்டில் பாடப்புத்தகங்கள் வழங்கியதில் 10,31,736 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
* ரூ.5.86 கோடி மதிப்பீட்டில் குறிப்பேடுகள் வழங்கியதில் 9,21,560 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகள் பயனடைந் துள்ளனர்.
* **பொதுப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவி களுக்காக இலவசமாக அரசுப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில், ரூ.10.79 கோடி செலவில் 12,17,998 மாணவ, மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர்.**
* ரூ.29.94 கோடி செலவில் பொதுப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு குறிப்பேடுகள் வழங்கியதன் மூலம், 47,45,650 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
* **ஆதிதிராவிடர் மற்றும் அரசின் உண்டி உறைவிடப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 13,36,612 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 16.05 கோடி செலவில் இலவசமாகச் சீருடைகள் வழங்கப் பட்டுள்ளன.**
* தாட்கோ மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, ரூ.481 கோடி செலவில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள், சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள், ஏழை – எளியவர்களுக்கு நிலம் வழங்குதல், சுகாதாரப் பணியாளர்கள் மறுவாழ்வு அமையும் வகையில் தனிநபர் கடன் போன்ற நலத்திட்டங்கள், 7,19,146 ஆதிதிராவிட மக்கள் பயனடையும் வகையில் நிறைவேற்றப் பட்டுள்ளன. ✶

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

சமூகநீதியைப் பேணுவதில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்கு ஏராளமான உதவிகளை தமிழக அரசு செய்து வருகிறது.

இடஒதுக்கீட்டைப் பேணுதல், மாணவர் விடுதிகளுக்குக் கட்டடம் கட்டிக்கொடுத்தல், கல்வி உதவித்தொகை வழங்குதல், இலவசத் தொழிற்கல்வி, இலவசத் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் வழங்கல், வேலைவாய்ப்புப் பயிற்சி, இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் என பல்வகைப் பயன்களையும் பெறும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள்.

சிறுபான்மையின ஏழை மக்கள் பயன் பெறும் வண்ணம் தர்காக்களில் அன்னதானத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்து சிறப்புற நடத்தி வருகிறார்கள். மேலும், உலமா ஓய்வூதியத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசின் சாதனைகள்

மாணவ – மாணவியர் விடுதிகள்

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்களுக்காக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் துறைகளால் நடத்தப்படும் 972 விடுதிகளில், 770 விடுதிகள் அடிப்படை வசதிகளின்றி தனியார் கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில், 312 விடுதிகளுக்கு கட்டடம் கட்டப்படுகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு 202 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 110 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை தவிர சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி 33 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2005–2006ஆம் நிதியாண்டில், ரூ.100 கோடி செலவில் 318 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் ரூ.1.24 கோடி செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவ – மாணவியர் விடுதிகளில் தரமான உணவு

* பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகளில் வழங்கப் பட்டு வரும் உணவின் தரத்தை மேம்படுத்த மாதாந்திர உணவுக் கட்டணம், 1.10.2001 முதல் ரூ.225லிருந்து ரூ.300 ஆக ரூ.2.17 கோடி கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டது. அரசால் அங்கீகரிக்கப் பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கியுள்ள

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள் உணவுக் கட்டணம் 1.6.2004 முதல் ரூ.150லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்பட்டு 1,920 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.9.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதி

* கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் மின்வசதி அளிக்கும் மிகுவிரைவு திட்டத்தின் கீழ், ரூ.3.79 கோடி செலவில் அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 2005 – 2006 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும் ரூ.20.11 கோடி செலவு செய்யப்படும்.



* இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்று உருவாகியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ரூ.10.25 கோடி செலவில் சாலை, தெருவிளக்கு, குடிநீர் மற்றும் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மகளிர் சிறுதொழில் தொடங்க கடன் உதவி

* தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரைச் சேர்ந்த பயிற்சி பெற்ற 5,000 பெண்கள் சிறுதொழில் தொடங்க, ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 வீதம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5 கோடி கடன் உதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

வயது வரம்பு அதிகரிப்பு

* அரசுப் பணியில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியுடைய பிற்படுத்தப்பட்டோருக்கு அதிகபட்ச வயது வரம்பு 30–லிருந்து 32–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

விடுதிகளில் விளையாட்டு உபகரணங்கள்

* ஒவ்வொரு விடுதிக்கும் ரூ.1,000 வீதம் ரூ. 9.72 இலட்சம் செலவில் 972 விடுதிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

விடுதிகளில் உள்ள நூலகங்களுக்கு நூல்கள்

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படும் ஒவ்வொரு விடுதிக்கும், ரூ.3,000 வீதம் ரூ. 29.16 இலட்சம் செலவில் 972 விடுதிகளில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. 2004–2005இல் 59 பிற்படுத்தப்பட்டோர், 29 மிகப்பிற்படுத்தப் பட்டோர்/சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 4.40 இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* மலைப் பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு ரூ.17 இலட்சம் செலவில் இரண்டு அடுக்கு மரப்படுக்கைகள் வழங்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் குறைந்த வட்டியில் மகளிருக்குக் கடன்

* தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், இதுவரை, 76,218 மகளிருக்கு சிறுதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.15.25 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

* ரூ.1.15 கோடி செலவில் 300 விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.

இலவச தையல் இயந்திரம்

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதாரத்தை மேம்படுத்த இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 3,189 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய இளைஞர்களுக்கு கடனுதவி

* 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க பயிற்சி அளிக்கப்பட்டு, இதில் 208 இளைஞர்களுக்கு கடனுதவியாக ரூ.68.07 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2004-05இல் ரூ.1.86 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
* சிறுபான்மையினர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000க்கு மேற்படாமல் சிறு கடன் வசதி திட்டத்தின் மூலம் 231 நபர்களுக்கு ரூ.23.10 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இலவச மிதிவண்டிகள்

* அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 2,50,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவிகளுக்கு ரூ. 47.36 கோடி செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2005-06இல் +1 பயிலும் 1,26,800 மாணவிகளுக்கு ரூ.24.50 கோடி செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படும்.

மாணவர்களுக்கு உதவித்தொகை

* பல்வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் 2003-04இல் 15,20,000 மாணவர்களுக்கு ரூ.79 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது. 2004-05இல் 13,72,000 மாணவர்களுக்கு ரூ. 86.12 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது.

கணினி மயம்

* அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களும் ரூ.25.52 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.



* 2004-2005-ஆம் ஆண்டில், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள்/ஆய்வுக் கூடங்கள் கட்ட ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேனி மாவட்டம் உத்தமபுரம் அரசு கள்ளர் மேனிலைப்பள்ளி மற்றும் திண்டுக்கல் மாவட்டம் கொண்டமாநாயக்கன்பட்டி அரசு கள்ளர் மேனிலைப்பள்ளியில் ஆய்வுக்கூடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.
* 2003-2004 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 தர்காக்களில் நன்கொடையாளர்கள் வழங்கும் தொகை மூலம் உணவு அளிக்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.
* தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இதுவரை ரூ.40 இலட்சம் வழங்கப்பட்டு, சென்னையில் 10,000 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.
* தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மசூதிகள் மற்றும் தர்காக்களைப் பழுதுபார்க்க இதுவரை ரூ.210 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக 2004-2005ஆம் ஆண்டில் ரூ.40 இலட்சம் அரசால் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.
* தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் நிருவாகச் செலவுகளுக்காக 2004-2005ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் பேஷ் இமாம், அரபு ஆசிரியர் ஆகியோராகப் பணியாற்றியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1,804 பயனாளிகளுக்கு 2004-05 ஆம் ஆண்டில் ரூ.1.20 கோடி வழங்கப் பட்டுள்ளது.
* முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கம், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வருகிறது. இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையைத் தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. 2004-2005ஆம் ஆண்டிற்காக ரூ.3,82,900 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

* * *

கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை

விவசாயப் பெருமக்களுக்கு உதவியாக இருப்பதாலும் உழவுத் தொழிலின் ஓர் அங்கமாக விளங்குவதாலும் தான் கால்நடைகள் "செல்வம்" என்று பெருமைப்படுத்தி அழைக்கப்படுகின்றன.

வேளாண் துறையில் புதிய தொழிற்கருவிகள் வந்துவிட்ட போதிலும் கால்நடைகளின் பங்கு இன்னும் முதன்மையாகவே கருதப்படுகின்றது. இத்தகைய கால்நடைகளின் நலன் பேணுவதே கால்நடைப் பராமரிப்புத் துறையின் பணியாகும்.

கால்நடைகள் அபிவிருத்தி, கோழியின வளர்ச்சி மற்றும் பால் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைத் தீட்டி கால்நடை மருத்துவப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு செயல்திட்டங்கள் வழியாக இத்துறைக்குப் புத்துயிர் அளித்துள்ளார்கள்.

கால்நடைகளைப் போலவே மீன்வளமும் ஒரு செல்வமாகும். விதைக்காது விளையும் கழனி என்பது போல, அதிக முதலீடில்லாமல் இலாபம் ஈட்டித் தரக்கூடியது மீன்வளம் ஆகும். உள்நாட்டு மீன்வள உற்பத்தியைப் பெருக்க மீன் பண்ணைகள், இறால் பண்ணைகள் ஏற்படுத்துதல், மீனவர் நலன் காக்க நிவாரண உதவிகள், மானிய வசதிகள், வீட்டு வசதி ஏற்படுத்தித் தருதல் என வாழ்வாதார ஒத்துழைப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மீன்வளத்துறை மூலம் நல்கி வருகிறார்கள்.

அரசின் சாதனைகள்

டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்

* கால்நடைப் பராமரிப்பு முறைகளில் பயிற்சி அளித்து, இலக்கு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில், டென்மார்க் நாட்டின் நிதி உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 18 மாவட்டங்களில் உள்ள 6,473 ஊராட்சிகளில் 6,410 தொடர்புப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் மூலம் 1,47,900 இலக்கு விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

கால்நடை மருத்துவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி

* பசு மற்றும் எருமையின அபிவிருத்தி குறித்த புத்தாக்கப் பயிற்சி 675 கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சி

* 147 வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்குப் பசு மற்றும் எருமையின அபிவிருத்தி குறித்த அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 கிராமப்புற இளைஞர்களுக்கு, செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

* கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில், ரூ.808.32 இலட்சம் செலவில் 19,242 முகாம்கள் நடத்தப்பட்டு 225.13 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

* மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு, பணியாளர் பராமரிப்புச் செலவு மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க பல்வேறு பயிற்சிக்கான செலவு போன்றவை ரூ.132.42 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

* மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் கால்நடைப் பண்ணையில் உள்ள உறைவிந்து வங்கியை வலுப்படுத்தவும், மாவட்டக் கால்நடைப் பண்ணை மற்றும் உதகமண்டலத்தில் நீர்நிலை ஆதாரங்களை

மேம்படுத்தவும், கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் நோய் புலனாய்வுப் பிரிவுகளை மேம்படுத்தவும், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.55.30 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

தீவனம் உற்பத்தி

★ கிராமங்களில் உள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, வேலிகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவைகள் ரூ.168.366 இலட்சம் செலவில் 2,725 ஏக்கர் நிலத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இதன் மூலம் 25,500 மெட்ரிக் டன் தீவனம் ஒரு வருடத்திற்கு உற்பத்தி செய்யப்படவுள்ளது. மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் தற்சமயம் 560 ஏக்கரில் 35,980 டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது.

கால்நடைகளுக்கு மருத்துவம்

★ வறட்சியின் காரணமாக கால்நடைகள் தொற்று நோய்களினால் பாதிப்புக்குள்ளாகி விவசாயிகளுக்கு ஏற்படும் பெரும் பொருளாதார இழப்பினைத் தடுப்பதற்காக, கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திட, ரூ.170 இலட்சம் செலவில் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைகள் இலவசமாக வழங்குதல்

★ 3,000 எக்டேர் நிலப்பரப்பில் பயிர் செய்வதற்கு, இலவசமாக 120 மெட்ரிக் டன் மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைகள் ரூ.24 இலட்சம் செலவில் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை

★ சுனாமியால் உயிரிழந்த கால்நடை உரிமையாளர் களுக்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்க ரூ.2,80,11,150 ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 4,774 பயனாளிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,74,75,400 வழங்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் பெருக்கம்

★ பகுதி–2 திட்டங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் உறைவிந்து உற்பத்தி நிலையம், கால்நடை மருந்தகங்கள் திறப்பு, புறக்கடை கோழி வளர்ப்பிற்கு கோழிகளை விநியோகித்தல், கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்த்துதல் போன்ற பல்வேறு பணிகள் ரூ.599.72 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள்

★ கடந்த நான்கு ஆண்டுகளில், மூன்று பன்முக மருத்துவமனைகள் மற்றும் 306 கால்நடை மருந்தகங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், தற்போது இந்நிலையங்களின் எண்ணிக்கை 1,323 ஆக உயர்ந்துள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், 638.01 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள், 24.64 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், 994.80 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி, 545.64 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 120.77 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், ரூ.123.32 இலட்சம் மதிப்பீட்டில் கோமாரி நோய் தடுப்பூசி கொள்முதல் செய்யப்பட்டு ஏழை விவசாயிகளின் கால்நடைகளுக்குப் போடப்பட்டுள்ளது.

★ செம்மறி ஆடுகளை நோய் தாக்குதலிலிருந்து காக்கும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.40 இலட்சம் செலவில் குடற்புழு நீக்க மருந்துகள் மூலம் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு வருகிறது.

கால்நடை நலம்

★ கால்நடைகளுக்கு முழு மருத்துவ வசதி மற்றும் பாதுகாப்பு அளித்ததன் பயனாக, தமிழ்நாட்டில் பால் உற்பத்தி 35.24 இலட்சம் டன்னிலிருந்து 47.53 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. முட்டை உற்பத்தி, 2,919 மில்லியனிலிருந்து 3,784 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதேபோல் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பாலின் அளவானது 173 கிராமிலிருந்து 209 கிராமாகவும், ஒரு வருடத்திற்கு உட்கொள்ளும் முட்டைகளின் எண்ணிக்கை 52 லிருந்து 61 ஆகவும் அதிகரித்துள்ளது.

பால் பெருக்குத்துறை

புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள்

★ மே 2001 முதல் மார்ச் 2005 வரை, 142 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய 825 புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ பால் பெருக்குத்துறையின் கட்டுப்பாட்டில், 31.3.2005 வரை, தமிழகத்தில் இயங்கும் 7,521 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்றன.

பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி

★ "பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி" என்ற திட்டத்தின் கீழ், 2002–2003 முதல் 2004–2005 நிதி ஆண்டு வரை 142 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 9,928 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கறவை மாடு வாங்க கடன் திட்டம்

★ "ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் 1,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்" கீழ் இதுவரை 14,803 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப் பட்டுள்ளன. 3,02,778 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் இதுவரை 2,79,828 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

பால் இணையம்

★ இணையம், மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க அரிய சாதனையாகும். இணையம் ஈட்டியுள்ள ரூ. 34.01 கோடி இலாபத்தில், ரூ.15.37 கோடியினை ஒன்றியங்களுக்கு 2002–2003ஆம் ஆண்டு விலை வித்தியாசமாக இணையம் வழங்கியுள்ளது.

பால் விற்பனை

★ 2002–2003ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு 6.54 இலட்சம் லிட்டராக இருந்த சென்னை மாநகர பால் விற்பனை, விளம்பரம் மற்றும் புதிய வியாபார யுத்திகளினால் 8.08 இலட்சம் லிட்டராக மார்ச் 2005இல் உயர்ந்துள்ளது.

வெப்பம் தடை செய்யப்பட்ட பால் விநியோக வண்டிகள் அறிமுகம்

★ சென்னை மாநகர பால் விற்பனையில் முதன்முதலாக அனைத்து பால் விற்பனை வழித்தடங்களிலும் 65° வெப்பம் தடை செய்யப்பட்ட பால் விநியோக வண்டிகள் அறிமுகம் செய்யப்பட்டுப் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

சிங்கப்பூருக்கு பால் ஏற்றுமதி

★ முதன்முறையாக, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தினால் கடந்த 2004ஆம் ஆண்டில் 18,000 லிட்டர் டெட்ரா பால் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் கிடைத்த நல்ல வரவேற்பைத் தொடர்ந்து இதுவரையில் 46,800 லிட்டர் டெட்ரா பால், 1,000 லிட்டர் நெய் மற்றும் 2,750 கிலோ பால் பவுடர் ஆகியவை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.

நெய் விற்பனை

★ 'ஆவின்' வரலாற்றில், முதன்முறையாக, திருமலை–திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ.22.82 கோடி மதிப்புள்ள 2,000 டன் நெய் விற்பனை செய்ய அனுமதி கிடைக்கப்பெற்று, இதுவரை 1,400 டன் நெய் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

ISO - 9001 தரச்சான்றிதழ்

★ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இரண்டிற்கும் ISO 9001 தரச் சான்றிதழ் பெற்றமை, சாதனைகளில் மைல்கல்லாகும்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா

★ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழாவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 06.07.2003 அன்று தொடங்கி வைத்து, கால்நடை மற்றும் பிராணிகள் குறித்த தகவல்கள் அடங்கிய "தொடுதிரைக் கணினியை" துவக்கி வைத்தார்கள்.

வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் திட்டம்

★ தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதன்படி 1,113 எக்டேர் தரிசு நிலப்பரப்பில் 5,235 வேளாண் குடிமக்கள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

கலப்பின ஆடுகளை உருவாக்கத் திட்டம்

★ நம் நாட்டு வெள்ளாடுகளின் தரத்தினை உயர்த்த ஆப்பிரிக்க போயர் இன ஆடுகளுடன் கலப்பினப் பெருக்கம் செய்து அதிக எடை கொண்ட கலப்பின ஆடுகளை உருவாக்கும் திட்டம் காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

பறவையின நோய் ஆய்வகம்

★ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் லெப்டோஸ்பைரோ நோயறி ஆய்வகப் பிரிவானது, ISO - 9001 தரச்சான்றிதழைப் பெற்றது சாதனைகளின் மைல்கல்லாகும்.

★ சேலம் மாவட்டம், தலைவாசலில் பறவையின நோய் ஆய்வகம் ஒன்றும், மேல்மருவத்தூரில் கால்நடைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றும் 2003–இல் தொடங்கப்பட்டுள்ளன.

நெருப்புக்கோழி வளர்ப்புப் பற்றிய ஆய்வு

★ தமிழ்நாட்டின் பல்வேறு வேளாண் தட்ப வெப்பப் பிரிவுகளில், நெருப்புக்கோழிகளை வளர்க்க உள்ள வாய்ப்புகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்டுக் கொள்ளை நோயைத் தடுக்க புதிய தடுப்பூசி கண்டுபிடிப்பு

* ஆடுகளைத் தாக்கும் "ஆட்டுக் கொள்ளை நோயைத் (PPR)" தடுப்பதற்காக வீரியம் குறைக்கப்பட்ட தடுப்பூசி கடந்த நான்காண்டு தீவிர ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
* நீலநாக்கு மூன்று வகை நோய்க்காரணி தடுப்பூசி தயாரிக்கப்பட்டு இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த்தடுப்பியல் மருத்துவ நிலையத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாடுகளில் காசநோய் கண்டறிதல்

* காமா இண்டர்ஃபெரான் அளவீடு முறை மூலம், மாடுகளில் காச ·நோயினை 100 சதவிகிதம் துல்லியமாகக் கண்டறிதல் உறுதி செய்யப் பட்டுள்ளது.

கோழிகளைத் தாக்கும் நோயைக் கண்டறிய புதிய முறை

* கோழிகளைத் தாக்கும் நோய்களைக் கண்டறியவும், நோய் எதிர்ப்புத் திறனை அளவிடவும் ஐ.ஜி.எம். எலிசா முறை உருவாக்கப்பட்டுள்ளது.
* அப்ளோ நச்சு பி–1 கண்டறிய மறைமுக எலிசா முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

நுண்ம எதிரி அறியும் சாதனம்

* இந்தியாவிலேயே முதன் முறையாக முட்டை வீழ்ச்சி நோய்–76 நோய் எதிர்ப்புப் பொருளைத் துல்லியமாகக் கண்டறிய தொடர் தொழில்நுட்ப முறைப்படி முட்டை வீழ்ச்சி நோய்–76 தரமான நோய் நுண்ம எதிரி அறியும் சாதனம் கண்டறியப்பட்டுள்ளது.

மீன்வளத்துறை

மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம்

* மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தில், 2001–2002ஆம் ஆண்டு மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள், 90 ஆழ்துளைக் கிணறுகள், 4 சமுதாயக்கூடங்கள் கட்ட மொத்தம் ரூ.834 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவற்றுள் 9 கடலோர மாவட்டங்களில் 1,906 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. 12 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.
* 2004 – 05 ஆம் ஆண்டில் மாநில அரசின் திட்டத்தின் கீழ் ரூ.1,565 இலட்சத்தில் 4,000 வீடுகள் கடல் மீனவர்களுக்கு கட்டித் தருவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் மேற்கொள்வதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

* கடந்த 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில், சேமிப்பு நிவாரணத் திட்டங்களின் கீழ் 5,55,030 மீனவர்களுக்கு ரூ.57.27 கோடி வழங்கப்பட்டது. 42,992 மீனவ மகளிருக்கு ரூ.3.10 கோடி வழங்கப் பட்டது. 2004–05ஆம் ஆண்டில், ரூ.18.22 கோடி மதிப்பில் 1,64,453 மீனவர்களுக்கும், ரூ.5.72 கோடி செலவில் 49,282 மீனவ மகளிருக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

மீனவர் குழுக் காப்புறுதித் திட்டம்

* மீனவர் குழுக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 579 பயனாளிகளுக்கு காப்புறுதி நிவாரணமாக ரூ.2,51,27,500/– வழங்கப்பட்டுள்ளது.

மீனவர் மகளிர் காப்புறுதித் திட்டம்

* மீனவர் மகளிர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 120 மீனவ மகளிருக்கு ரூ.17,32,500 வழங்கப்பட்டுள்ளது.

மீனவர் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

* மீனவர் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 123 பயனாளிகளுக்கு ரூ.103.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* 1.1.2005 முதல் 31.12.2005 ஆண்டுக்கு மீனவர் தனிநபர் விபத்துக்குழுக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 11,420 மீனவர்/மீனவ மகளிர்களுக்கான ரூ.3,99,700 பிரிமியத் தொகையை அரசு செலுத்தியுள்ளது.

டீசல் மானியம்

* மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானிய திட்டத்தின் கீழ், 2004–2005ஆம் ஆண்டுக்கு மைய அரசு ஒரு லிட்டருக்கு ரூ.1.20 பைசாவும் மாநில அரசு ரூ..0.30 பைசாவும் ஆக மொத்தம் ரூ.1.50 மானியமாக வழங்கவுள்ளது. இவ்வாண்டு ரூ.4,57,80,000 மானியத் தொகையாக வழங்கப்படவுள்ளது.

வெளிப்பொருத்தும்/உட்பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானியம்

* கடந்த 3 ஆண்டுகளில், 3,283 உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 183 மீன்பிடி வலைகள் ரூ.310.62 இலட்சம் மதிப்பிலான மானியத்தில் வழங்கப்பட்டன.

இலங்கை கடற்படையினரால் பிடிபடும் தமிழக மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம்

* இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்பட்ட தமிழக மீனவர் குடும்பங்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 251 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.9,86,270 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கைப் படையால் பிடித்துச் செல்லப்பட்ட 883 மீனவர்கள் மீட்கப்பட்டனர்.

மீன் இறங்கும் தளங்கள்

* மீன் இறங்கும் தளங்கள் தமிழகத்தில் புன்னைக்காயல், முடசலோடை, ஜெகதாப்பட்டினம், சேதுபாவாசத்திரம், பழவேற்காடு ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம், மண்டபம், சோழியக்குடி, ஆற்காட்டுதுறை ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

மீன்பிடித் துறைமுகங்கள்

* பழையாறு மீன்பிடித் துறைமுகம் ரூ.10.60 கோடியிலும், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் ரூ.7.50 கோடியும், தேங்காய்பட்டினம் புதிய மீன்பிடித் துறைமுகம் ரூ.39.70 கோடியிலும் அமைக்கப் படவுள்ளன.

மீனவர் அங்காடி அமைத்தல்

* நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய ஆறு இடங்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

மீனவ மகளிருக்கு மீன்வளர்ப்புப் பயிற்சிகள்

* மீனவ மகளிருக்குக் கூட்டுறவுத் துறை, மத்தியஅரசின் பணியாளர் கல்வி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் மற்றும் கால்நடை ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் மூலமாக 476 மீனவர் மகளிருக்கு மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்புத் தொடர்பான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு மீனவர்களுக்கு உதவிகள்

* உள்நாட்டு மீனவர்கள் பயனடையும் வகையில் ரூ.15.50 இலட்சம் செலவில் மூன்று மானியத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன .

புதிய வலைகள் விநியோகம்

* 25 விழுக்காடு மானியத்தில் புதிய வலைகள் வாங்குவதற்கு ரூ.12.50 இலட்சம் மதிப்பில் 619 உள்நாட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்கப் பட்டுள்ளது.

மிதிவண்டிகள் விநியோகம்

* 25 விழுக்காடு மானியத்தில் மிதிவண்டி வாங்குவதற்கு ரூ.2.25 இலட்சம் மதிப்பில் 491 உள்நாட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்கப் பட்டுள்ளது.

அலுமினியப் பாத்திரங்கள் விநியோகம்

* 531 மீனவ மகளிருக்கு 50 விழுக்காடு மானியத்தில் அலுமினியப் பாத்திரங்கள் வாங்க ரூ. 0.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த மீன்வளத்தினைப் பிரபலப்படுத்தும் திட்டம்

* மீன் வளர்ப்போரை ஊக்குவிக்க வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கின்ற குளம் மற்றும் குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன்வளத்தினைப் பிரபலப்படுத்தும் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 800 எக்டேர் நீர்ப்பரப்பில் மீன்வளர்ப்பு அபிவிருத்தி செய்திட அரசு மானியமாக ஒரு எக்டேருக்கு ரூ.1,875 வீதம் வழங்கியுள்ளது.

குளிர்பதனப் பெட்டிகள் விநியோகம்

* 2003–2004ஆம் ஆண்டில் மீன்விற்பனை செய்வோருக்கு 250 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.5 இலட்சம் மதிப்பில் அரசு மானியமாக தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மூலம் வழங்கும் திட்டத்தில் இதுவரை 210 குளிர்பதனப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல்

* உள்நாட்டு மீனவர்களுக்கு 500 வீடுகள் கட்டப்பட்டு வழங்கும் திட்டத்தின்கீழ் 404 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சேத்துப்பட்டில் மாநில அளவிலான ஆராய்ச்சிக் கூடம்

* 2002–2003ஆம் ஆண்டில் நன்னீர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி செய்ய மாநில அரசின் 25 சதவிகித பங்கும், மத்திய அரசின் 75 சதவிகித பங்குமான ரூ.33.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் நீர் மற்றும் மண் ஆராய்ச்சி பரிசோதனை உபகரணங்கள் வாங்கப்பட்டு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சேத்துப்பட்டில் மாநில அளவிலான ஆராய்ச்சிக் கூடம் கட்டப்படவுள்ளது.

மீன்பிடிஇடு பொருட்கள் வழங்குதல்

* 2001–2002, 2003–2004 மற்றும் 2004–2005 ஆகிய 3 ஆண்டுகளில் ரூ.14.06 கோடி மதிப்பில் 4,382 மீன்பிடிஇடு பொருட்கள் வழங்கப்பட்டன.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

* கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 852 இரால் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

மீனவ மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடு

* தமிழகத்தில் முதல் முறையாக புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராமிய குளங்களில் சுய உதவிக் குழுக்களின் மூலம் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, 44 சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள 206 மகளிர், 36 கிராமிய குளங்களில் மீன்வளர்ப்பினை மேற்கொண்டனர்.
* காஞ்சிபுரம் மாவட்டம் நீலாங்கரை மற்றும் தூத்துக்குடியில் கட்டப்பட்டுள்ள மீனவர் அங்காடிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. ★★★

உயர்கல்வித்துறையின் உன்னதப் பணிகள்

எழுத்தறிவித்தவன்
இறைவன் ஆவான்.

– என்ற முதுமொழிக்கேற்ப, கல்வி என்பது உலகத்தினை அறிந்து கொள்வதற்காக மட்டுமன்று; உலகத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முழுமையாக மாற்றியமைக்கக்கூடிய வலிமை படைத்த கருவியுமாகும். முழுமையான கல்வியை ஒரு நாடு பெற்றிருந்தால் அந்நாடு வல்லரசாகிவிடும். முழுமையான கல்வியினைப் பெற்றிருந்தால் மட்டுமே புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை செய்திட முடியும். உயர்நிலைக் கல்வியால் தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். உயர்நிலைக் கல்வியுடன் தொழிற்கல்வியும் இணைந்து உள்ளதால் அனைத்துத்துறைகளின் வளர்ச்சிக்குத் தூணாக இருப்பது உயர்கல்வியே. இத்தகு உயர் கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற் கல்வியின் வளர்ச்சிக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உன்னதக் கொள்கையின் மூலம் உயர்கல்வித்துறை கடந்த 4 ஆண்டுகளில் உயரியப் பணிகளை ஆற்றி வருகிறது.

அரசின் சாதனைகள்

புதிய பாடப்பிரிவுகள் தொடக்கம்

★ அரசு உறுப்புக் கல்லூரிகளில், 41 புதிய இளங்கலை / அறிவியல் பாடப்பிரிவுகள் மற்றும் 68 முதுகலை அறிவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

உறுப்புக் கல்லூரிகள்

★ ஆண்டிபட்டி, சாத்தான்குளம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பிற்கான ஆலோசனை மையங்கள்

★ வேலைவாய்ப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் மையங்கள் அனைத்து அரசு உறுப்புக் கல்லூரிகள் மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் நிறுவப் பட்டுள்ளன.

தமிழகத்தில் கல்லூரிகளின் தர நிர்ணயம்

★ தமிழ்நாட்டில் 134 கல்லூரிகள் தேசியத் தகுதி மற்றும் தரநிர்ணயக் குழுவால் தரநிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

தன்னாட்சிக் கல்லூரிகள்

★ 15 அரசு உறுப்புக் கல்லூரிகள், 45 அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதிக் கல்லூரிகளுக்கு தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வையிழந்த மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி

★ சென்னை மாநிலக் கல்லூரியில் பார்வையிழந்த மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கும் கணினி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வயது வரம்பு நீக்கம்

★ 2004–2005–ஆம் கல்வி ஆண்டு முதல், கிராமப்புற மாணவர்கள் பயனடைவதற்காக, பி.இ./பி.டெக். பட்டப்படிப்புகளில் மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்கப்பட்டு வந்த வயது வரம்பு மற்றும் கூடுதல் முயற்சிகள் எண்ணிக்கை குறித்த வரம்புகள் நீக்கப்பட்டுவிட்டன.

★ 2004–2005ஆம் கல்வி ஆண்டு முதல் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு வயது உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம்

★ தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஆங்கிலத்தில் நல்ல முறையில் பேசவும், எழுதவும் ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கும்பொருட்டு பயிற்சி அளிப்பதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், பிரிட்டிஷ் கவுன்சிலுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் பிரிட்டிஷ் துணை ஹைகமிஷனர் முன்னிலையில் 25.8.2004 அன்று சென்னையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding) கையொப்பமிட்டுள்ளது. வர்த்தக ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் தேர்வு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் உள்ளூர் தேர்வுக்குழு மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத்திட்டம்

★ உலக வங்கி நிதியுதவியுடன் இந்திய அரசு, பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில், தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காகத் திட்டம் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில், இரண்டாவது கட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் பங்குபெறும் கல்லூரிகளுக்கு (ஐந்து அரசினர் பொறியியற் கல்லூரிகள், மூன்று அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்லூரிகள் மற்றும் மூன்று அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்) முதற்கட்டமாக ரூ.63.21 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது.

★ அண்ணா பல்கலைக்கழகம் இணைப்புவகைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டதையடுத்து, நாட்டிலேயே மிகப்பெரிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது.

★ அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளுக்கு மிகத் தரம் வாய்ந்த விரிவுரைகள் அளிப்பதற்கு, கல்விக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள எடுசாட் (Edusat) எனப்படும் செயற்கைக் கோளை அண்ணா பல்கலைக்கழகம் பயன்படுத்தி வருகிறது.

★ முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைக் கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற வட்டார மையங்களுக்கு வரவழைத்து, அந்நிறுவனங்களில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வி

★ அனைத்துத் தரப்பு மக்களும், உயர் கல்வி பெறத்தக்க வகையில், சென்னையில் "தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்", 2002–2003ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பல்வேறு பாடப்பிரிவுகளில் 20,000 மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

★ திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பிரிவினர் அதிக அளவில் கல்வி வசதி பெறுவதற்காகத் திருவள்ளுவர் பெயரால், புதிய பல்கலைக்கழகம், 2002–2003 ஆம் ஆண்டில் வேலூரில் தொடங்கப்பட்டுள்ளது. ★

பள்ளிக் கல்வித்துறை

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

– திருவள்ளுவர்

நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாததாகிறது. இத்தகு கல்வியை நாட்டில் அனைவரும் பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழகத்தில் பள்ளிக்கல்வித்துறை செயல்பட்டு வருகிறது.

2007–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் 5 ஆண்டுகள் கல்வியை அளிக்கச் செய்தல், 2010க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல், பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்துதல், குறைந்தபட்சக் கல்வி கற்றலை உறுதி செய்தல் போன்றவை கல்வித்துறையின் தொலைநோக்குக் கொள்கைகளாகும்.

அரசின் சாதனைகள்

அனைவருக்கும் கல்வித் திட்டம்

★ தமிழ்நாட்டில், 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி வழங்கிட, "அனைவருக்கும் கல்வித் திட்டம்" 2001–2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.1,649 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 31.3.2004 வரை , பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், மேலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல் ஆகியவை ரூ.357.15 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

100 விழுக்காடு அளவில் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி வசதிகள்

★ 2001–2005 ஆண்டுகளில், 1,112 தொடக்கப் பள்ளிகள், 2,106 நடுநிலைப் பள்ளிகள், 295 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 335 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, தொடக்கப் பள்ளி வசதி மற்றும் நடுநிலைப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு 100 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி நிதியுதவியோடு பள்ளிகளில் கூடுதல் வசதிகள்

★ முதல்முறையாக கல்வித்துறைக்காக 'நபார்டு' வங்கியிடம் நிதியுதவி பெற்று மூன்று கட்டங்களாக 605 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.182.74 கோடி செலவில் பணிகள் தொடங்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும் 549 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்

பள்ளிகளில் ரூ.232.10 கோடி செலவில் இத்திட்டப் பணிகளை நிறைவேற்ற நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

ஒற்றைச் சாளர முறை

★ ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சி

★ அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று, பாதிக்கப்பட்ட சுமார் 20,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 15,670 மாணவர்கள் பயிற்சியினை முடித்துள்ளனர். அடுத்தகட்டமாக, 3,576 மாணவர்கள் 2004–05ஆம் ஆண்டில் பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

உடனடி மறுதேர்வு

★ 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொது தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்கள் வரை தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறுதேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

அதிகபட்ச வயது வரம்பு நீக்கம்

★ பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களை, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பகம் மூலம் நியமிக்கப்படும் இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பார்வையிட தனி இயக்ககம்

★ மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டு அப்பள்ளிகள் வரையறுக்கப்பட்டுள்ள வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற நூலகங்கள்

★ 867 கிராமப்புற நூலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னையில் கன்னிமாரா நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம்

★ இசை, கலை, பேச்சுத்திறன் போன்றவற்றில் திறமையுள்ள மாணவர்களைக் கண்டறிந்து, அதனை வெளிக்கொணர இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அறிவியல் தமிழ் பாடம்

★ தமிழ்நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் தமிழ் கற்பதை உறுதி செய்யும் நோக்குடன் அறிவியல் தமிழ் என்ற பாடம் மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12–ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குத் தனி வகுப்புகள்

★ பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள்

★ ஆங்கிலத்தில் மாணவர்களின் திறனை மேம்படுத்த 2003–2004ஆம் ஆண்டு முதல் புதியதொரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 600 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது.

விருப்பத்திற்கேற்ற தலைப்பெழுத்து

★ குழந்தைகளின் பெயருக்கு முன்பாக அவர்களுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்து மட்டுமே தலைப்பெழுத்தாகக் குறிப்பிட்டு வந்த நடைமுறையினை மாற்றி, பெற்றோர்களின் விருப்பப்படி தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், அதனையடுத்துத் தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ தலைப்பெழுத்தாகப் பயன் படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

75 விழுக்காடு வருகைப் பதிவு இருப்பின் தேக்கமின்றித் தேர்ச்சி

★ 2004–2005 ஆம் ஆண்டு முதல், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் அனைத்திலும் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப்பதிவு இருக்கும்பட்சத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்பட்டு, தேக்கமின்றித் தேர்ச்சி அளிக்கப்படும்.

ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகளுக்குப் பள்ளி சேர்க்கை விதிகள் தளர்வு

★ பள்ளிகளில் சேராத குழந்தைகள், ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகள், எய்ட்ஸ்/ எச்.ஐ.வி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளை – பிறப்புச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் போன்றவற்றினை வற்புறுத்தாமல் – பள்ளிகளில் எந்த நேரத்திலும் சேர்ப்பதற்காகச் சேர்க்கை விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

★ தொடக்கப் பள்ளிகளில், மாணவர்கள் இடைநிற்றல் விகிதம், 2001–2002ஆம் ஆண்டில் 16 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2003–2004ஆம் ஆண்டில் 8 விழுக்காடாகக் குறைந்தது. 2004–2005ஆம் ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதே போன்று நடுநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதமும், 2004–2005ஆம் ஆண்டில் 9 விழுக் காடாகக் குறைந்துள்ளது. ✶

மானுடம் போற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
– முதுமொழி

சமுதாயத்தில் மக்கள் திறம்பட உழைத்து, வாழ்வில் முன்னேறி முழு மனிதனாக மாறி, உன்னதமான உலகைப் படைத்திடும் வகையில் மனிதனின் ஆரோக்கியத்தை வளர்த்திடும் வகையில் மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் பெரும் அக்கறை கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசு, தமிழ்நாட்டின் சுகாதார குறியீடுகள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலேயே முதன்மை இடத்தை எட்டத் தொடங்கும் வண்ணம் செயலாற்றி வருகிறது.**

கடந்த நான்கு ஆண்டுகளில், மக்கள் நல்வாழ்வுத் துறையில், நகர்ப்புறங்களுக்கு இணையாக கிராமப் புறங்களிலும் மருத்துவ வசதிகளைப் பெருக்கி, தமிழக மக்களை ஆரோக்கியச் சூழலில் வாழ வழி வகுத்து, தமிழக அரசு, மருத்துவத் துறையில் ஒரு மகத்துவம் புரிந்து வருகிறது.

✶ கன்னியாகுமரியில் 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையுடன் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றது. தேனி மற்றும் வேலூரில் புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

✶ கீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 5 மருத்துவக் கல்லூரிகளில் ஏற்கெனவே 435ஆக இருந்த மாணவர் சேர்க்கை ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் தலா 150 இருக்கைகள் வீதம் 750 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது.

✶ சென்னை அரசு மனநலக் காப்பகத்தினை நிலை உயர்த்தும் முகமாக ரூ.1.05 கோடி செலவில் நிருவாகப் பிரிவிற்கானப் புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

பார்வையிழப்புத் தடுப்புத் திட்டம்

✶ அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளிலும் கண்பார்வை சிகிச்சைக்கென ரூ.1 கோடி செலவில் கண் பார்வை சிகிச்சைப் பிரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் புதிய இரண்டு அடுக்கக கட்டடங்கள்

✶ சென்னை அரசு பொது மருத்துவமனையில் 7 மாடிகள் கொண்ட இரண்டு அடுக்கக கட்டடமும், நவீன சமையல் கூடமும் ரூ.104.47 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கப் படவுள்ளன.

✶ தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் ரூ.4.50 கோடி செலவில் சிடிசி அட்லாண்டா ஒதுக்கீடு பெறப்பட்டு நோய் அறியும் வசதிகள் மேம்படுத்தப் பட்டு வருகின்றன.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

✶ அரசு மாவட்ட, வட்ட, தலைமை மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் உள்ள 119 அறுவை அரங்குகளுக்கு குளிர் சாதன வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

✶ அரசு மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளுக்கு மின்னாக்கி வசதியினை ஏற்படுத்தி தடையற்ற மின் வசதி அளிக்கும் பொருட்டு, 11 மருத்துவமனைகளுக்கு 75 கே.வி.ஏ., 40 கே.வி,ஏ., திறனுள்ள மின்னாக்கிகள் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் விபத்து மற்றும் அவசர மருத்துவ சிகிச்சை வசதிகள்

* கடந்த 4 ஆண்டுகளில், ஓமலூர், கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, ஆம்பூர், பெரம்பலூர், திண்டிவனம் மற்றும் விழுப்புரம் ஆகிய மருத்துவமனைகளில் ரூ.7.55 கோடி செலவில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் புதியதாக உருவாக்கப் பட்டுள்ளன.

"மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள்"

* நவீனப் பரிசோதனைக் கருவிகள் கொண்ட "மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள்" திருவண்ணாமலை, விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய 7 இடங்களில் ரூ.21 கோடி செலவில் அமைக்கப் பட்டுள்ளன.
* ஏழை எளிய மக்களின் மகப்பேறுக்காக, பிறந்த குழந்தைகளுக்கு 24 மணி நேரமும் மிகச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க 51 மருத்துவ மனைகளிலும், 11 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் முழுமையான அவசர மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
* வட்ட மருத்துவமனைகளுக்கு ரூ.1.44 கோடி செலவில் கதிர் வீச்சுக் கருவிகள் வாங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்

* 12 செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க நிதி ஒதுக்கீடு.
* ஏற்கெனவே உள்ள 9 செவிலியர் பயிற்சிப் பள்ளியில், மாணவியரின் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
* 5 மருத்துவமனைகள் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை

ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்வு

* நான்கு ஆண்டுகளில் 105 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன. புதியதாக 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,060 மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.
* நான்காண்டுகளில் 1,295 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதில் 26.93 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.
* நான்காண்டுகளில் 16,55,636 நபர்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அனைத்து மருத்துவமனைகளிலும் பேறுகாலத்தின் போது கர்ப்பிணி பெண்ணின் உறவினர் ஒருவர் பிரசவ அறையினுள் துணையாக இருப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

* இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் மூலம் கடந்த ஆண்டுகளில் ரூ.2.87 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டியும், மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது.
* மத்திய அரசின் நிதியுதவி ரூ.1 கோடி செலவில், 4 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில், சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப் பட்டுள்ளன. 16 வட்ட மருத்துவமனைகளில் ரூ.160 இலட்சம் செலவில் சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
* 2003-04ஆம் ஆண்டில் ரூ.8.18 கோடி செலவில் பல்வேறு மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.
* பெண் சிசுக்கொலையை ஒழித்திடும் வகையில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
* போலி மருந்துகளைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. போர்ட்வின், காம்போஸ், ஆல்ப்ராக்ஸ் போன்ற போதை மற்றும் மனநிலை பாதிக்கும் மருந்துகளின் தவறான விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

* கடந்த நான்காண்டுகளில், அரசு மருத்துவ மனைகளுக்கு ரூ.458.18 கோடி செலவில் பல்வேறு மருந்துகள் மற்றும் மருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
* கடந்த நான்காண்டுகளில் அரசு மருத்துவ மனைகளுக்கு ரூ.64.55 கோடி செலவில் பல்வேறு மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.
* கடந்த நான்காண்டுகளில், ரூ.11.50 கோடி செலவில் மருந்துக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.
* நான்காண்டுகளில், டானிடா திட்டத்தின் கீழ், ரூ.20.88 கோடி செலவில், பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் – சி.டி. ஸ்கேன் கருவிகள்

* மதுரை ராஜாஜி மருத்துவமனை மற்றும் சென்னை பொது மருத்துவமனைகளில் ரூ.9.58 கோடி செலவில்

2 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளும், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.13.16 கோடி செலவில் 18 சி.டி. ஸ்கேன் கருவிகளும் நிறுவப்பட்டுள்ளன.

புற்று நோய் கண்டறியும் கருவிகள்

* மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.50 கோடி செலவில் 3 புற்றுநோய் கண்டறியும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.
* சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில், ரூ. 2 கோடி செலவில் கோபால்ட் சிகிச்சைப் பிரிவு உருவாக்க அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.
* தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மருத்துவமனைகளில் ரூ.90 இலட்சம் செலவில் 3 மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்

* 2005 முதல் 2010 வரையிலான ஐந்தாண்டுகளில், உலக வங்கி உதவியுடன், ரூ.597.16 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ள தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கீழ் இயங்கும் 270 மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்படவுள்ளது. மருத்துவக் கருவிகள் மற்றும் மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கி நிறுவப்படவுள்ளது.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம்

* தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் தொண்டு நிறுவனங்களின் மூலமாக 64 திட்டங்களைத் தற்போது செயல்படுத்தி வருகிறது.
* தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் மொத்தம் 42 தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் மூலம் எச்.ஐ.வி. நோயாளிகள் பரிசோதனை செய்து கொள்ளவும், பரிசோதனை முடிவு ரகசியமாக வைக்கப்பட்டு அந்நோயாளிகள் தன்னம்பிக்கையுடன் அதனை ஏற்று வாழவும் வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.
* தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் எச்.ஐ.வி. எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்க்கு அன்பும், ஆதரவும் அளிப்பதற்காக இரண்டு சமுதாய நல மையங்களைத் தொடங்கியுள்ளது. அவற்றில் ஒன்று வேலூரிலும், மற்றொன்று கோயம்புத்தூரிலும் செயல்பட்டு வருகின்றன.
* 2003-2004ஆம் ஆண்டில் முதல் முறையாக 8,417 அரசு மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்திற்கு யுனிசெப் மற்றும் அபேக் நிறுவனங்கள் தங்களுடைய ஆதரவை அளித்தன.
* 2003-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 14,889 இடங்களில் தேவையான பல்முனை விளம்பரங் களுடன் குடும்பநல விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் பயனாக இம்முகாம்களில் பால்வினை நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதில் 2002ஆம் ஆண்டில் 6,63,330லிருந்து 2003ஆம் ஆண்டில் 11,05,047ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 8,31,986 பேர் பெண்கள்.
* சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள நுண்ணுயிரியல் துறையில் ரூபாய் 2.7 இலட்சம் செலவில், தேசிய உதவி பெற்ற ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆய்வகப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தாய் சேய் மேவாத்திட்டம்

* தமிழ்நாட்டிலுள்ள 65 மருத்துவமனைகளில் தாய் சேய் மேவாத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 68 தாலுக்கா தலைமை மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநில கண்ணொளி இழப்புத் தடுப்புச் சங்கம்

* கடந்த 4 ஆண்டுகளில், தமிழ்நாடு மாநில கண்ணொளி இழப்புத் தடுப்புச் சங்கத்தின் மூலம் 16,57,043 நபர்களுக்கு, கண்புரை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.
* கடந்த ஆண்டுகளில் 65,99,403 மாணவர்களுக்கு கண் நோய் தொடர்பாக பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதில் 2,54,970 மாணவர்களுக்கு கண்ணொளிக் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதில் பார்வைக் குறைபாடிருந்த 1,01,674 மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.
* 14,226 கண்கள், தானமாகச் சேகரிக்கப்பட்டு 7,718 கண்பார்வையற்றவர்களுக்குப் பொருத்தப்பட்டன.

* * *

நெசவாளர்கள் நலன் போற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை

"சின்னச் சின்ன இழைப்
பின்னிப் பின்னிவரும்
சித்திரக் கைத்தறிச் சேலை"

– என கைத்தறித் துணிகளின் எழிலைப் போற்றிப் பாடியுள்ளார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

நூற்பு இயந்திரங்கள் மூலம் துணிகள் உற்பத்தி பெருமளவில் நெய்யப்பட்டிருப்பினும், எளிய மக்கள் வாங்கி உடுத்தும் துணிகள் கைத்தறி ரகங்களேயாகும்.

கைத்தறித் துணிகள் சிறந்த தரமாகவும் குறைந்த விலையாகவும் இருப்பதனால், தமிழக மக்கள் கைத்தறி மற்றும் விசைத்தறி மூலம் தயாரிக்கப்பட்ட ஆடைகளையே விரும்பி அணிகின்றனர்.

தமிழகத்தில் பரம்பரையாக, பல ஆண்டுகள். கைத்தறியை நம்பியே வாழ்ந்துவரும் நெசவாளர்களின் நலனைப் போற்றும் வகையில். நெசவாளர்களுக்கு மானியம் வழங்குதல் தொடர்ந்து இடைவிடாது வேலைவாய்ப்பு அளித்தல், நெசவாளர்கள் குடும்பத்திற்கு ஓய்வூதியம், புதிய காப்பீட்டுத் திட்டம், நெசவாளர் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகைகள் போன்ற அரிய பல திட்டங்கள் வகுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசு, நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளது.

அரசின் சாதனைகள்

சரக்கிருப்புத் தேக்கம் குறைப்பு

* கோ–ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரக்குத் தேக்கத்தினைக் குறைக்க துணி விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்பட்டுள்ள 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் 10 சதவிகிதம் கூடுதல் தள்ளுபடி, சிறப்புக் கழிவு, கைத்தறி கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் 2001ஆம் ஆண்டு ரூ.442.34 கோடி அளவிலிருந்த சரக்கிருப்பு தற்போது ரூ.221.52 கோடியாகக் குறைக்கப்பட்டுச் சரக்குத் தேக்கம் என்ற நிலை தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்

* நெசவாளர்களின் குடும்பம் மற்றும் குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "புங்கர் பீமா யோஜனா" திட்டத்தில் 2004 – 05 ஆம் ஆண்டில் 76,096 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் சார்பில் தலா ரூ.130 வீதம் செலுத்தப்பட வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணமான ரூ.98.93 இலட்சத்தையும் அரசே செலுத்தியுள்ளது.

இப்புதிய காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் நெசவாளர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.50,000/–, விபத்தில் மரணமடைந்தால் ரூ.80,000/–, மேலும், கோ–ஆப்டெக்ஸ் சார்பில் கருணைத் தொகையாக ரூ.15,000–மும் பாதிக்கப்பட்ட நெசவாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

நெசவாளர் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை

* "புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்குக் காலாண்டு உதவித் தொகையாக ரூ.300/– வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,200/– வழங்கிடும் வகையில், 2004–05 ஆம் ஆண்டில் 9,473 நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு ரூ. 85,25,700 மதிப்பிலான கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் குடும்பங்களுக்கு அரிசி நிவாரணம்

* கடுமையான நிதி நெருக்கடியின்போது, இலவச வேட்டி, சேலை திட்டத்தைச் செயல்படுத்த இயலாத நிலையிலும், பாதிப்புக்குள்ளான 22,072 கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு 29.7.2002 – 21.8.2002 மற்றும் 15.9.2002 ஆகிய 3 கட்டங்களில் தலா 20 கிலோ வீதம் ரூ.84.10 இலட்சம் செலவில் 1,324.38 மெட்ரிக் டன் அரிசி, அரசால் இலவசமாக வழங்கப்பட்டது.

இலவச சீருடை வழங்கும் திட்டம்

* 250 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 12,000 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளித்திடும் வகையில், இலவச சீருடை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதோடு, பருத்தியிலான துணிகளில் பாலியஸ்டர் இழை கலந்து தரத்துடன் கூடிய இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மலிவு விலை வேட்டி–சேலை திட்டம்

* 2002–2003ஆம் ஆண்டில் "மலிவு விலை வேட்டி சேலை திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டுச் சேலை ஒன்றினை ரூ.40/–க்கும், வேட்டி ஒன்றினை ரூ.30/–க்கும் விற்பனை செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருந்த 57 இலட்சம் வேட்டிகள் மற்றும் 59.34 இலட்சம் சேலைகள் ரூ.40.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டன.

நெசவாளர்களுக்கு நிலுவை வட்டி மானியத் தொகை வழங்கல்

* கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 31.12.1998 முதல் 31.12.2001 முடிய உள்ள காலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த வட்டி மானியத் தொகை ரூ.27.50 கோடியினை 2002–03ஆம் ஆண்டில் அரசு வழங்கியது. இதனை தவிர, 2003–04ஆம் ஆண்டில் வட்டி மானியத் தொகையாக அரசு ரூ.2 கோடியும், 2004–05ஆம் ஆண்டில் ரூ.4.30 கோடியும் வழங்கியுள்ளது.

இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம்

* **2004 ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் முதல் 111 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 111 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும், ரூ.187.48 கோடி செலவில் விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டம் 2005ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 111.52 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 110.98 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் ரூ.173 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை 2005–2006ஆம் ஆண்டிலும் செயல்படுத்த ரூ.175கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

இலாபத்தில் இயங்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 2000–01ஆம் ஆண்டில் லாபத்தில் இயங்கி வந்த, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 320 ஆகும். இது 2004–05ஆம் ஆண்டில் 601ஆக உயர்ந்துள்ளது.

பருத்தி ரக துணிகள் விற்பனை

* சரக்குத் தேக்கத்தினை குறைக்க, 15.9.2002 முதல் 31.1.2003 வரை ஏற்கெனவே வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் கூடுதலாக 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியதால் ரூ.116.28 கோடி மதிப்புள்ள பருத்தி ரக துணிகள் விற்பனை செய்யப்பட்டுச் சரக்குத் தேக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி துணிகள் விற்பனை

* சரக்குத் தேக்கத்தினைக் குறைக்க, 15.9.2003 முதல் 31.1.2004 வரை ஏற்கெனவே வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் கூடுதலாக 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியதால் ரூ.173.81 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுச் சரக்குத் தேக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்குத் தள்ளுபடி மானியம்

* நெசவாளர்களின் நலன் கருதி 2000–01ஆம் ஆண்டில் ரூ.61.53 கோடி அளவிற்கு மட்டுமே வழங்கப்பட்ட தள்ளுபடி மானியம் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.75 கோடியாகவும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.88 கோடியாகவும், 2004–05ஆம் ஆண்டில் ரூ.92 கோடியாகவும் உயர்த்தி வழங்கப் பட்டுள்ளதுடன், 2005–06ஆம் ஆண்டிற்கும் தள்ளுபடி மானியத் திட்டத்திற்கென ரூ.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியம்

* 647 நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.250 லிருந்து ரூ.350ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

சிறப்புத் தள்ளுபடியில் கைத்தறித் துணிகள் விற்பனை

* சில குறிப்பிட்ட விழாக் காலங்களில் 135 நாட்களுக்கும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு சில குறிப்பிட்ட காலங்களில் 96 நாட்களுக்கும், நேரடியாக 10 விழுக்காடு தள்ளுபடி வழங்கி, ரூ.248.64 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
* இறந்த நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் மொத்தக் காப்பீட்டுத் தொகை ரூ.60,000/– லிருந்து ரூ. 65,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு புதிய இரகங்கள் உற்பத்தி செய்யப் பயிற்சி

* 25,000 நெசவாளர்களுக்குப் புதிய இரகங்கள் உற்பத்திச் செய்யப் பயிற்சி அளித்தல் வடிவமைப்பு மற்றும் திறன் மேம்பாடு போன்ற பல்வேறு இனங்களுக்கு "ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்" கீழ் உதவித் தொகையாக ரூ.25.30 கோடி வழங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு இத்திட்டம் மைய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை மைய அரசால் ரூ.4.34 கோடியும், மாநில அரசால் ரூ.1.45 கோடியும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆசியாவிலேயே பெரிய நெசவாளர்கள் காலனி

* **சென்னிமலைப் பகுதி நெசவாளர்களுக்கு ஒரே இடத்தில் ரூ.6.87 கோடி செலவில் 1,010 தொழிற் கூடத்துடன் கூடிய வீடுகள் அடங்கிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நெசவாளர் காலனி கட்டப்பட்டுள்ளது.**

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி

* 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.20 இலட்சம் செலவில் தையல் மற்றும் இதர வேலை வாய்ப்புக்களுக்கான பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறிகளை நவீனமயமாக்க மானியம்

* **தமிழ்நாட்டிலுள்ள 2,000 சாதாரண விசைத்தறிகளை நவீனமயமாக்கத் தறி ஒன்றுக்கு ரூ.5,000/- மானியம் வீதம் ரூ.1 கோடி மதிப்பிலான மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

கைத்தறி ரகங்கள் ஏற்றுமதி விற்பனை

* 2000-01ஆம் ஆண்டில் ரூ.92 கோடி அளவிற்கு மட்டுமே ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டது. 2001-02ஆம் ஆண்டில் ரூ.146.25 கோடி அளவிற்கும், 2002-03ஆம் ஆண்டில் ரூ.179 கோடி அளவிற்கும், 2003-04ஆம் ஆண்டில் ரூ.195.08 கோடி அளவிற்கும் மற்றும் 2004-05ஆம் ஆண்டில் ரூ.264.30 கோடி அளவிற்கும் ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு நிதியுதவி

* கூட்டுறவு நூற்பாலைகள் அரசு உத்தரவாதத்தைப் பயன்படுத்தி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள கடன் நிலுவைத் தொகையினைச் செலுத்துவதற்காகக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு ரூ.76.57 கோடி வழங்கியுள்ளது.



நெசவாளர்கள் குடும்பத்திற்கு கல்வி உதவித் தொகை

* எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து பல் மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ். பட்டப்படிப்புப் பயிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு ரூ.3,000/- கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

கைத்தறி ரகத்தில் புதிய வடிவமைப்பு

* கைத்தறி ரகத்தில் புதிய வடிவமைப்புகளைப் பல வண்ணங்களில் உருவாக்கி, விற்பனையை அதிகரித்திடும் வகையில், அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் ரூ.48.50 இலட்சம் மதிப்பீட்டில் இத்தகு புதிய வடிவமைப்புகளைப் பெற்று கைத்தறி நெசவில் புதியமுறை அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப் படுகிறது.

ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்

* காஞ்சிபுரம், சேலம், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய ஜவுளி நகரங்களின் சாலை, மின்வசதி, குடிநீர் வசதி, நெசவுப் பயிற்சி, மாசுக்கட்டுப்பாடு போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்த தலா ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற் கட்டமாக, காஞ்சிபுரத்தில் செயல்படுத்த முன் பணமாக ரூ.5 கோடியினை மாநில அரசு விடுவித்துள்ளது.

பட்டுச்சேலை ஜரிகையின் தரத்தை அறியும் இயந்திரம்

* பட்டுச் சேலைகளில் உள்ள ஜரிகையின் தரத்தினை அறிய காஞ்சிபுரத்தில் ரூ.22.84 இலட்சம் மதிப்பீட்டில் எக்ஸ்-ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

* சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியவும், கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தவும், சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் "புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம்" (Data and Market Intelligence Cell) ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

தறிக்கூடங்கள் கட்ட மானியம்

* **நெசவாளர்களுக்கு, நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு கடந்த நான்கு ஆண்டுகளில், 17,021 தறிக்கூடங்கள் கட்ட மானியம் வழங்கப்பட்டுள்ளது.**



தேங்கிக் கிடந்த கதர் துணிகள் விற்பனை

* 2001-க்கு முன்னர் 5 ஆண்டுகளில் ரூ.42 கோடி அளவிற்குத் தேங்கிக் கிடந்த கதர் ரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகள், முதியோர் உதவித் திட்டத்தின் கீழ், ஒய்வூதியம் பெறுவோர்களுக்கு வழங்கப்பட்டு ரூ.3.09 கோடி மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப் பட்டுள்ளது. மேலும், ரூ.40 கோடி அளவில் மேற்படி ரகங்கள் விற்கப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

* ரூ.10.64 கோடி அளவிற்கு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த அழுக்கடைந்த கதர் ரகங்களுக்கு, அதிக தள்ளுபடி வழங்கி ரூ.9.07 கோடி மதிப்பிலான கதர் இரகங்கள் விற்பனை செய்து இருப்புக் குறைக்கப்பட்டது.

சோப்பு - தேன் - தோல் உற்பத்தி மற்றும் விற்பனை

* கடந்த 4 ஆண்டுகளில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ரூ.12.95 கோடி மதிப்பிலான சோப்பு உற்பத்தி செய்யப்பட்டது. தேன் ரூ.1.92 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தோல் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ரூ.7.34 கோடி அளவில் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

கதர் நூல் உற்பத்தியாளர்களுக்கு ஓய்வூதியம்

* கதர் நூல் உற்பத்தி மற்றும் துணி உற்பத்தியில் ஈடுபட்டு அவர்களின் வருவாயில் 10 விழுக்காடுத் தொகையினை நல நிதியாகச் செலுத்த முன் வரும் நூற்பாளர்கள் / நெசவாளர் பெருமக்களுக்கு 60 வயதைக் கடக்கும் நிலையில் மாதம் ரூ.200 வீதம் ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

* கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தில் இயங்கிவரும் உற்பத்தி நிலையங்களில், ரூ.6.29 கோடி மதிப்பில் பல்வேறு பித்தளை விளக்குகள், கற்சிற்பங்கள், தஞ்சாவூர் கலைத்தட்டு, பஞ்சலோக சிலைகள் மற்றும் சந்தன மரச் சிற்பங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ரூ.51.98 கோடி மதிப்பிற்கு கைவினைப்பொருட்கள் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள்

* 2004-05ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தில், பல்வேறு கைத்திறன் தொழில்கள் குறித்த பயிற்சித் திட்டங்கள், செம்மைபடுத்தப்பட்ட மேம்பாட்டிற்கான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல், வடிவமைப்புகளில் தொழில் நுட்பவியல் உயர்வு மற்றும் ஆராய்ச்சி போன்ற பல்வேறு பணிகள் ரூ.58.80 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் பரிசுப் பொருட்கள் விற்பனை நிலையங்கள்

* தமிழ்நாட்டில் 9 திருக்கோயில் வளாகங்களில், "பரிசுப் பொருட்கள்" விற்பனை நிலையங்கள் திறக்க உத்தேசித்து, தற்போது சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோவிலில் விற்பனை நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி வாரியம்

* தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் பல்வேறு திருக்கோயில்களுக்கு தங்க ரதம், வெள்ளி ரதம், மர ரதம், வெள்ளித் தகடுகள் போர்த்துதல், பித்தளை கிராதிகள் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* * *

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் போலி மதுபானங்களையும், கள்ளச்சாராயத்தையும் அருந்துவதால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நலம் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் பொருளாதாரப் பாதிப்பும் ஏற்படுவதை உணர்ந்த அரசு, மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம், கள்ளச் சாராயத்தையும், தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலி மதுபானங்களின் விற்பனையை முற்றிலும் ஒழித்திடும் வகையில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூலம் 2003ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் மதுபான சில்லறை விற்பனையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு எடுக்கப்பட்ட இந்தத் துணிச்சலான உத்தரவு அரசுக்கு அதிக வருவாயைப் பெருக்குவதில் முன்னோடியாக விளங்குகிறது. இத்துறையின் மூலம் ஈட்டுகின்ற வருவாய் அடிதளத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்ற திட்டங்களுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது.

அரசின் சாதனைகள்

★ அரசின் வருவாயைப் பெருக்க வேண்டி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனைக் கட்டணம் 3.6.2003 முதல் நீக்கம்.

★ கருப்பஞ்சாற்று கசண்டு 21.39 இலட்சம் டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, 2.14 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு வெளிமாநில / வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, மொத்தம் ரூ.4.28 கோடி மதிப்பிலான தொகை நிருவாகக் கட்டணமாக அரசு வருவாய் ஈட்டியுள்ளது.

எத்தனால் கலந்த பெட்ரோல்

★ எத்தனால் கலந்த பெட்ரோலைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்த எடுத்த முடிவினைத் தொடர்ந்து 5 வடிப்பாலைகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. எண்ணெய் நிறுவனங்களுக்குத் தமிழகத்தில் ஆறு இடங்களில் உரிமங்கள் வழங்கப்பட்டு, எண்ணெய் நிறுவனங்கள் மூலம் 91.70 இலட்சம் லிட்டர் எத்தனால் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

★ 3821.900 கிலோ எடையுள்ளரூ.1.91 கோடி மதிப்புள்ள உலர் கஞ்சா மற்றும் ரூ.34.38 கோடி மதிப்புள்ள 1,37,510 கிலோ கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. ரூ.40.74 கோடி மதிப்புள்ள 40.736 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

★ தமிழக அரசு, திரைப்படத் தொழில் துறையை மீண்டும் புத்துணர்வுப் பாதையில் செலுத்தும் வகையில், காணொலி திருட்டுகளைத் தடுக்கும் சட்டத்தைத் திருத்த ஆணை பிறப்பித்து 2004 அக்டோபர் திங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

டாஸ்மாக் நிறுவனத்தில் மதுபான விற்பனை

★ 29.11.2002 முதல் 28.11.2003 வரையில் தனியார் நடத்திய சில்லறை விற்பனையால் டாஸ்மாக்கிற்குக் கிடைத்த தொகை ரூ.3,877 கோடி மட்டுமே. கடந்த 29.11.03 முதல் 28.11.2004 காலம் வரை, மதுபான சில்லறை விற்பனையை டாஸ்மாக் நிறுவனம் மேற்கொண்ட பிறகு, இதற்கு இணையான ஒரு வருட காலத்தில் மதுபான விற்பனை மதிப்பு ரூ.5,441 கோடியாகும். மதுபான விற்பனையின் கூடுதல் மதிப்பு மட்டும் ரூபாய் 1,564 கோடியாகும். டாஸ்மாக் மூலம் 33,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ சில்லறை விற்பனையைத் தனியார் நிகழ்த்திய காலமான 29.11.02 முதல் 28.11.03 வரையில் மதுபான விற்பனையில் ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி மூலம் கிடைத்த வருவாய் ரூ.3,825.99 கோடியாகும். இதற்கு இணையான காலத்தில் (29.11.03 முதல் 28.11.04 வரை) டாஸ்மாக் நிறுவனம் மதுபான சில்லறை விற்பனையை மேற்கொண்ட பிறகு அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.4,441.88 கோடியாகும். ரூ.615.89 கோடி ரூபாய் வருவாய் அரசுக்குக் கூடுதலாகக் கிடைத்து உள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் 2004 முதல் மார்ச் 2005 வரை முந்தைய நிதியாண்டை விட, ரூ.1,217.37 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் பணிகள்

★ கடந்த 4 ஆண்டுகளில், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் பல சிறப்பான நிருவாக மாற்றங்கள் செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் எந்த இடமும் விடுபடாமல் அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

★ "மறுவாழ்வுக் குழுக்கள்" மூலம் மறுவாழ்விற்காக கடந்த 2 ஆண்டுகளில் ரூ.4.06 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2004 – 2005ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது.

★ கடந்த 4 வருட காலங்களில், 10,18,022 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 9,35,701 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 2,84,34,263 லிட்டர் கள்ளச் சாராயமும், 4,89,24,614 லிட்டர் ஊறலும், 20,63,032 சாராயப் பாக்கெட்டுகளும், 15,44,572 லிட்டர் தெளிந்த சாராவியும், 7,62,676 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்களும், 19,633 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

★ காவல் சமாதான நடவடிக்கைக் கட்டணமாக ரூ.6,24,85,587 தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அபராதக்கட்டணங்களாகரூ.20,76,52,820 பெறப்பட்டுள்ளது.

★ ★ ★

நிதி வளம் பெருக்கும் வணிகவரித்துறை

மக்களுக்கான திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் வலுவான நிதி ஆதாரங்கள் மூலம்தான் செயல்படுத்த முடியும். மாநில அரசின் மூலம் ஈட்டுகிற வருவாய் மூலமும், மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்குகின்ற நிதி ஆதாரத்தைக் கொண்டும் அரசு பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

தமிழக அரசின் வணிகவரித்துறை, வரி சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வரி வசூல் முறை ஆகியவற்றின் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் வரி வசூல் வளர்ச்சி பெற்று திறம்பட செயல்பட்டு வருகிறது.

வணிக வரி வசூல்

★ **2003–2004 ஆம் ஆண்டில் மொத்த வரி வசூல் தொகை ரூ.11,757 கோடி ஆகும். தற்போது 2004–05ஆம் ஆண்டில் கடந்த ஆண்டை விட 18 சதவிகிதம் கூடுதலாக ரூ.13,907 கோடி அளவில் வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.**

வரிச் சலுகைகள்

★ கரும்புச் சாறு கழிவினை உபயோகப்படுத்தி மருந்து மற்றும் இரசாயன பொருட்களின் உற்பத்திகளை ஊக்குவித்திடும் வகையில் கரும்புச் சாற்றின் கழிவு மீதான வரி 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு விற்கப்படும் மெழுகுக்கு 4 சதவிகிதம் வரிக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

தொலைதொடர்புச் சாதனங்களுக்கு வரிச்சலுகை

★ மத்திய அரசு துறையாக இருந்து தற்போது அரசு நிறுவனமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைச் செய்தி சாதனங்கள் மீதான வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

ரப்பர் தொழிலுக்கு வரிச்சலுகை

★ ரப்பர் தொழிலுக்கு உதவிடும் வகையில் இயற்கை ரப்பர் வெளி மாநில விற்பனையின் மீது செலுத்தப்படும் 4 விழுக்காடு வரிகளை, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து சரி செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

சுய வரி விதிப்பு முறை

★ ரூபாய் ஒரு கோடியாக இருந்த சுய வரி விதிப்பு முறை, ரூபாய் பத்து கோடியாக உயர்த்தப்பட்டது. வரி விதிப்பு நிலுவையினைக் குறைக்க சம்மரி வரி விதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ தேயிலை விற்பனையை ஊக்கப்படுத்தும் வகையில், அரசு சார்பு நிறுவனமான "டீ செர்வ்" மூலம் விற்கப்படும் தேயிலைக்கு உள் மாநில வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், இடைமாநில விற்பனை மீதான வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

★ சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகப் பெட்ரோலிய நிறுவனங்களுக்கு விற்கப்படும் 'எத்தனால்' மீதான உள்மாநில வரி 12 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ பிளாஸ்டிக் மூலப்பொருட்கள், பி.வி.சி. ரெசின், பொட்டாசியம் குளோரேட், லேப், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, குளோரின், அலுமினியம் ஆகியவற்றின் மீதான நுழைவு வரி 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ **அரிசி மீது விதிக்கப்பட்ட 2 சதவிகித வரி நீக்கம்.**

★ பேரீச்சம் பழத்தின் மீதான வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ சிறுநீரகச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் சி.ஏ.பி.டி. என்ற திரவ மருந்திற்கும், 'எயிட்ஸ்' நோயிற்காக வழங்கப்படும் மிக முக்கிய பத்து மருந்துகளுக்கும் முழுவதுமாக வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

★ சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் கருவிகளான சுமார் 25 இனங்களுக்கு வரி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கைவினைப் பொருட்களுக்கு வரி விலக்கு

★ **கைவினைப் பொருட்கள் மீதான வரி விகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

இசைக்கருவிகளுக்கு வரி விலக்கு

* இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
* கோழித்தீவனம் தயாரிக்கப் பயன்படும் சுண்ணாம்புக் கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
* கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரி ரத்து.

சுனாமி பாதிப்பு மீனவர்களுக்கு கட்டுமரங்கள் வாங்க மாநில விற்பனை வரி விலக்கு

* சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு உதவிட, டான்செம் நிறுவனத்தால் விற்கப்படும் சிமெண்ட், ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரை தகடுகளுக்கு முழு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்படும் புதிய கட்டுமரம் மற்றும் பழுதடைந்த கட்டுமரங்களுக்கு உள்ளிட்ட பொருட்களுக்கு செலுத்த வேண்டிய உள் மாநில விற்பனை வரியிலிருந்து 1.4.2005 முதல் ஓராண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் கூரை தகடுகளுக்கு முழு வரிவிலக்கு

* சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு டான்செம் நிறுவனத்தால் விற்கப்படும் சிமெண்ட், ஆஸ்பெஸ்டாஸ் கூரை தகடுகளுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் முழு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி பாதிப்பால் மீனவர்கள் வாங்கும் பொருள்களுக்கு விற்பனை வரிவிலக்கு

* சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விற்பனை செய்யப்படும் புதிய கட்டுமரம், புதிய FRP கட்டுமரம், பழுதடைந்த இயந்திரப் படகுகளைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் பொருள்கள், கண்ணாடி இழை படகுகள் உட்பட புதிய இயந்திர படகுகள் போன்றவைகளுக்கு செலுத்த வேண்டிய உள் மாநில விற்பனை வரியிலிருந்து ஓராண்டிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆடம்பர வரிகளில் வரிச்சலுகைகள்

* விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால், ஒரு மாதத்திற்கு 2 விழுக்காடு என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 விழுக்காடு வட்டி விதிக்கப்படுகிறது. இவற்றைக் குறைக்கும் பொருட்டும், வரிவருவாயைப் பெருக்கும் பொருட்டும், முதல் 90 நாட்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு மாதத்திற்கு 1.5 சதவிகிதமும், அதன் பிறகு மாதத்திற்கு 2 சதவிகிதமும், வரிவிதிக்க சட்டத் திருத்தம் அமல்படுத்தப்பட்டுள்ளது.
* திரைப்படக் கருவிகள் ஒப்பந்த வாடகை மீதான பிரிவு 3(ஏ)–ன் கீழ் விதிக்கப்படும் விற்பனை வரி செலுத்துவதிலிருந்து அவ்வணிகர்களுக்கு 29.9.2004 முதல் 28.9.2007 வரை மூன்றாண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.
* சுற்றுலா வளர்ச்சிக்காகத் தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த நாளொன்றுக்கு தங்குவதற்கான கட்டணங்களில் ஆடம்பர வரி விகிதம் கீழ்க்கண்டவாறு குறைக்கப்பட்டுள்ளது.
  - ரூ.200 முதல் ரூ.499 வரை வரிவிகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகவும்,
  - ரூ.500 முதல் ரூ.999 வரை வரிவிகிதம் 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகவும்,
  - ரூ.1,000 அல்லது அதற்கு மேல் 25 சதவிகிதத்திலிருந்து 12.5 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.
  - தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் மீதான ஆடம்பர வரி 29.12.2004 முதல் நீக்கப்பட்டுள்ளது.
  - சிமெண்ட் மற்றும் வெள்ளை சிமெண்ட் மீதான நுழைவு வரி விலக்கு.

மீனவர்களுக்கு விற்கப்படும் டீசல் எண்ணெய்க்கு வரி விலக்கு

* மீனவச் சமுதாயத்திற்கு உதவுவதற்கென பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களிலிருந்து இயக்குநர், மீன்வளர்ச்சித்துறை மூலமாக மீனவர்களுக்கு விற்கப்படும் டீசல் எண்ணெய்க்கு 29.10.2004 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வரிவிலக்கு இயந்திரப் படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு, ஆண்டொன்றுக்கு 50,000 கி.லிட்டர் டீசலுக்கும், டீசல் இஞ்சின் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் வைத்திருக்கும் மீனவர்களுக்கு 45,000 கி.லிட்டர் டீசலுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

டீசல் எண்ணெய், மென் டீசல் எண்ணெய்க்கு வரி விலக்கு

* வெளிநாட்டிலிருந்து தமிழகத் துறைமுகங்கள் வழியாகச் செல்லும் அயல்நாட்டுக் கப்பல்களுக்கு விற்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய், மென் டீசல் எண்ணெய் மற்றும் எரிஉலை எண்ணெய் மீதான விற்பனை வரிவிகிதம் முறையே 25 மற்றும் 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.
* உள்மாநில தயாரிப்புத் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு 29.12.2004 முதல் கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

  திருவாளர் டி.வி.எஸ். மோட்டார் கம்பனி (இரு சக்கர வாகனங்கள்)

  திருவாளர் டிராக்டர்ஸ் அண்ட் பார்ம் எக்யூப்மெண்ட்ஸ் (டிராக்டர்கள்)

  திருவாளர்கள் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிட் (சைக்கிள்கள்)

பின்னலாடைத் தொழிலுக்குச் சலுகை

* பின்னலாடைத் தொழிலை ஊக்குவிக்கும் முகத்தான் இடை மாநில விற்பனைக்கு 10 சதவிகித வரியினை செலுத்திவிட்டு 9 சதவிகித தொகையினை மானியமாகத் திருப்பி அளிக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கனிமி உபரிப் பொருட்களுக்கு வரிவிலக்கு

* கனினி உபரிப் பொருட்களின் இடைமாநில விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
* இடைமாநில விற்பனையில் அனுப்பப்படும் கனினிகளுக்கு உபரி மற்றும் உதிரிப் பொருட்களுடன் சேர்த்து 'சி' மற்றும் 'டி' படிவத்துடன் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக மத்திய விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளது.
* கேளிக்கைப் பூங்காக்கள் மீது விதிக்கப்பட்ட வரி விகிதம் 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.
* மாநகராட்சி, நகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிப் பகுதிகளில் திரைப்படங்களுக்கான கேளிக்கை வரி பழைய திரைப்படத்திற்கு 15 சதவிகிதமாகவும், புதிய திரைப்படத்திற்கு 10 சதவிகிதமாகவும், பிற பகுதிகளில் அனைத்து திரைப்படங்களுக்கும் 10 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

பதிவுத்துறை

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் புதிய அணுகு முறையாலும், சீரிய நடவடிக்கையாலும் பதிவுத்துறை மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 6,528 கோடி மதிப்பீட்டிலான வருவாய் ஈட்டப்பட்டது.

சமாதான் திட்டம்

* அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 60 விழுக்காடு முத்திரைத் தீர்வைச் செலுத்தி நிலுவையில் உள்ள பத்திரங்களைத் திருப்பி வழங்கும் திட்டத்தின் கீழ் 2002 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்திய சமாதான் திட்டங்களின் கீழ் ரூ.170.20 கோடி மதிப்பிலான தொகை வசூலிக்கப்பட்டு, 79,264 நபர்களுக்குப் பதிவுப் பத்திர ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரப்பதிவில் அதிநவீன தொழில்நுட்பம்

* நாட்டிலேயே முதல் வகையாக "ரெஜிநெட்" தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சக்திகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு தனிப்பட்ட வலைப்பின்னலாகும். இதன் மூலம் எந்தவொரு சொத்தின் வில்லங்கச் சான்று தகவல்களை வேறு எந்த இடத்திலும் பெறுவதற்கும், பொதுமக்கள், அருகிலுள்ள சார்பதிவகத்திற்கு சென்று சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கிறது. மேலும் 'ஸ்டார்' (திறந்த மற்றும் வெளிப்படையான பதிவு முறை செயல்பாடு) தகவல் தொழில் நுட்பமும் முக்கியமானதாக விளங்குகிறது.

கிரய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை சதவிகிதம் குறைப்பு

* தகவல் தொழில்நுட்ப பகுதியில் முதலீடு செய்வதை உருவாக்கிட, நகர்ப்புறங்களில் விதிக்கப்பட்ட 8 விழுக்காடு முத்திரைத் தீர்வையும், கிராமப் புறங்களில் 7 விழுக்காடு முத்திரைத் தீர்வையும் 6 விழுக்காடு முத்திரைத் தீர்வையாக குறைக்கப்பட்டுள்ளது.

அடமானத்திற்கான முத்திரைத் தீர்வைக் குறைப்பு

* சாதாரண அடமானத்திற்கு 4 விழுக்காடாக இருந்த முத்திரைத் தீர்வை 1 விழுக்காடாகவும், ரூ.20,000ஆக இருந்த உச்சத்தீர்வை ரூ.5,000ஆக குறைக்கப்பட்டுள்ளது.
* சுவாதீன அடமானத்திற்கு தீர்வை மற்றும் மிகுவரி 3 விழுக்காடு மற்றும் 1 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது. பதிவு கட்டணம் 1 விழுக்காடு வீதத்தில் உச்ச வரம்பு ரூ.2 இலட்சமாக்கப்பட்டுள்ளது. ✶



தொழில் துறை

உலக நாடுகளின் வளர்ச்சிக்கு அந்நாடுகளின் வலுவான தொழிற்கொள்கை, மண் வளம் மற்றும் இயற்கை வளம் ஆகியவை முக்கிய அடிப்படையான கொள்கையாகும். நாட்டின் தொழில்வளர்ச்சி அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மை அங்கமாகத் திகழ்கிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும் வேலைவாய்ப்பு பெருகிடவும் அடிப்படையாக அமைவது தொழில் வளமே. "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம்" என்று பாடிய மகாகவி பாரதியார் "உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்று கூறினார். மகாகவி பாரதியார் கனவினை நனவாக்கும் வகையில் பல்வேறு முனைப்பான முன் முயற்சிகளின் மூலம் 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழக அரசின் தொழிற் கொள்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இந்த சிறப்புமிக்க தொழிற்கொள்கை தமிழகம் தொழிற்துறையில் முதலிடம் பெறவும், தமிழகத்தில் அதிக அளவில் தொழில் முதலீட்டாளர் களின் வருகைக்கு முக்கியத்துவம் பெற்று அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தொழிற் கொள்கை முயற்சியால் தமிழகம், வலுவான உள்கட்டமைப்பு வசதிகளுடன் அதிக அளவில் கிடைக்கக்கூடிய தொழில்நுட்பத் திறனுடைய மனிதவளத்துடன் தொழில் மூலதனத்திற்கு மிகவும் விரும்பத்தக்க இடமாகவும் திகழ்கிறது. தமிழகத் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்பு அம்சம் தொழிலாளர்களின் ஒற்றுமை உணர்வேயாகும்.

அரசின் சாதனைகள்

டைசல் பயோ பார்க்

★ டைசல் பயோ பார்க் 10.11.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு 87 பரிசோதனைக் கூடங்கள் பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளன.

அரியலூர் சிமெண்ட் ஆலை

★ டான்செம் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையின் அதிகபட்ச மாதாந்திர உற்பத்தித் திறன் பயன்பாடு 154.80 சதவிகிதமாகவும், அதிகபட்ச மாதாந்திர விற்பனை 66,502 மெ.டன் எனவும் சாதனை எட்டப்பட்டுள்ளது.

கனிம நிறுவனத்தின் பணிகள்

★ தமிழ்நாடு கனிம நிறுவனத்தில், குவாரிகளின் இயக்கம், 2001-2002ஆம் ஆண்டில் 34 குவாரிகளிலிருந்து, 2004-2005ஆம் ஆண்டில் 60 குவாரிகளாக அதிகரித்துள்ளது.

★ தமிழ்நாடு கனிம நிறுவனம், 2002-2003 ஆம் ஆண்டிலிருந்து 2004-2005ஆம் ஆண்டு வரை ரூ.7.23 கோடி முதலீட்டில் தோகைமலை, பைத்தூர், சூலமலை போன்ற குவாரிகளை நவீனப்படுத்தி, அதிக மீட்பு விழுக்காடு மற்றும் அதிக உற்பத்திப் பெருக்கத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

★ மாதேப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிரானைட் ஒடுகள் தொழிற்சாலையில் உற்பத்தித்திறன், 2003-2004இல் 2 கோடி ரூபாய் செலவில் புதிய பல இரம்ப இயந்திரம் மற்றும் காலிப்ரேஷன் இயந்திரத்தை நிறுவியதன் மூலம், 21,300 ச.மீட்டர் அளவிலிருந்து 33,600 ச.மீட்டர் ஆக உயர்ந்துள்ளது.

★ சிவகங்கையிலுள்ள செழுமைப்படுத்திய கிராபைட் தொழிற்சாலை 2003-2004ஆம் ஆண்டில் சாதனை அளவாக ரூ.7.76 கோடி மதிப்புடைய 5,799 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிராபைட்டை விற்று ரூ.75 இலட்சம் ரொக்க இலாபம் ஈட்டியுள்ளது.

★ தமிழ்நாடு கனிம நிறுவனம், 2001-02ஆம் ஆண்டு ரூ.67.05 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.12.11 கோடி மொத்த இலாபமும், 2002-03ஆம் ஆண்டு ரூ.80.02 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.13.82 கோடி மொத்த இலாபமும், 2003-04ஆம் ஆண்டு ரூ.90.21 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.15.51 கோடி மொத்த இலாபமும் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.564.48 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்க அனுமதிக்கப்பட்டு, ரூ.454.45 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 40,416 பேர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது.

★ 5 ஆண்டுகளாக ஏற்பட்ட இழப்புக்குப் பின்னர் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2003-2004ஆம் ஆண்டில் ரூ.2.21 கோடி ஆதாயம் ஈட்டியுள்ளது.

பன்னாட்டுத் தரச்சான்றிதழ்

★ நாட்டிலேயே முதன்மையான மாநில அளவிலான நிதி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், இந்தியத் தரக்கட்டுப்பாடுச் செயலகத்திலிருந்து ஐஎஸ்ஓ 9001 : 2000 என்ற தரக்கட்டுப்பாடுச் சான்றிதழை அண்மையில் பெற்றுள்ளது.

* * *

சட்டத்துறை

சட்டம், மனித சமுதாயத்தின் மாண்பினைப் பேணிப் பாதுகாப்பது ஆகும். சட்டம் என்பது அரசின் எண்ணங்களின் மூலமாக மக்களுக்கு நீதியை வழங்குவதற்காகவும், ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனிற்காகவும், இயற்றப்பட்டு நியாயமாகவும் திறம்படவும் செயல்படுத்துதல் ஆகும்.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்குச் சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத்துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்குச் சட்ட வடிவமளித்து சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது. சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும், சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதும், சட்டத்துறையின் முக்கியப் பணியாக விளங்குகிறது.

ஓர் அரசாங்கத்தின் அடிப்படையான பணிகளில் நீதி நிருவாகமும் ஒன்றாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வது ஓர் அரசாங்கத்தின் கொள்கையாகும். நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுவதையும் மற்றும் விரைந்து நீதி வழங்குவதையும் உறுதி செய்யும் வகையில் அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. தேவையான இடங்களில் புதிய நீதிமன்றங்கள் அமைத்தல் மற்றும் நீதிமன்றங்களுக்குத் தேவையான கூடுதல் உள்ளமைப்பு மற்றும் பிற தேவைகளை வழங்கி குடிமக்களுக்கு விரைவான சமூகப் பொருளாதார நீதியை வழங்குவதில் தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது.

அரசின் சாதனைகள்

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

★ சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்தில் உள்ள ஒரு தனியார் சட்டக் கல்லூரியும், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

★ செங்கல்பட்டில் பல்கலைக்கழக உறுப்பு சட்டக் கல்லூரி 2003-2004 கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இச்சட்டக் கல்லூரியின் கட்டடத்திற்கான நிலம் அரசால் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

முதுகலைப் பட்டப்படிப்பு

19 புலன்கள் முனைவர் பட்டப்படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய முதுகலைப் பட்டயப் படிப்புகளுக்கான பொதுக்காப்பீடு பற்றிய முதுகலைப் பட்டயப் படிப்பு 2003-2004 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிகச் சட்டத்தில் முதுகலைப் பட்டப்படிப்பும், அரசமைப்பு மற்றும் சட்ட ஒழுங்கு முதுகலைப் பட்டப் படிப்பும் 2003-2004 கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

''டெலி லா சாட்'' திட்டம் பல்கலைக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு உதவியுடன் ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியும், ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சித் திட்டங்களும், மாணவர்களுக்கான போட்டிகளும் மற்றும் ஊரக மக்களுக்கான சட்ட அறிவொளித் திட்டமும் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

சட்டப் பள்ளிக் கட்டடம்

* தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்கு கட்டடம் ரூ.55 இலட்சம், மதிப்பீட்டில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இக்கட்டடத்தின் முதல் தளம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, அக்கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 25.5.05 அன்று திறந்து வைக்கப்பட்டது.
* தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்திற்கேற்ப அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களால் சட்டப் பாடப் புத்தகங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 27 புத்தகங்கள் 25.5.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப் பட்டன. மேலும் 5 புத்தகங்களை விரைவில் வெளியிடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
* பொதுமக்களிடையே சட்ட விழிப்புணர்வினை ஏற்படுத்த, அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களால், கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
* சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 12 மாணவ, மாணவியர்களுக்கு, 2003-2004 மற்றும் 2004-2005ஆம் கல்வியாண்டுகளில், வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற வில்லெம்.சி.விஸ் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டிகளில் ஆண்டிற்கு 6 பேர் வீதம் கலந்துகொள்ள ரூ.9 இலட்சம் அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.
* மேலும், அக்கல்லூரியில் பயிலும் 4 மாணவர்கள் சிட்னியில் நடைபெறும் 14ஆவது மான்பிரட் லாச் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியில் கலந்துகொள்ள ஏதுவாக கூடுதலாக ரூ.3 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு

* சட்டத்துறை (ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு) மூலம் கடந்த நான்காண்டுகளில், 107 மையச் சட்டங்களும், 51 தமிழ்நாடு சட்டங்களும் ஆக மொத்தம் 158 சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், அரசு சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட 32 மையச் சட்டங்கள் மற்றும் 90 மாநிலச் சட்டங்கள் தற்போது ஆய்வில் உள்ளன. இவற்றுள், 46 சட்டங்கள் குறித்த பணிகள் முடிக்கப்பட்டு அச்சிடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

* * *

தகவல் தொழில்நுட்பத் துறை

உலக வரலாற்றில் தமிழகம் தகவல் தொழில் நுட்பத்தில் ஒரு தகவல் புரட்சியை உருவாக்கிச் சாதனை படைத்து வருகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு கணினியின் சிறப்புக் கூறுகளான வேகம், நினைவாற்றல், கணக்கிடுதலில் துல்லியம், செயல்முறைப்படுத்துதல் முதலியவற்றைத் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பத்துடன் இணைத்துத் தகவல் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு 1. தரவு (Data) 2. தரவுத் தளங்கள் (Data Base) 3. தகவல்களின் குணம் (Information Character) 4. தரவுச் செயல்முறை (DataProcessing) 5. தரவுத் தள மேலாண்மை (Data Base Management) 6. தரவு அனுப்புகை (Data Transmission) 7. இணைய வடிவமைப்பு (Network) 8. தொகுப்புச் சேவை எண்ணிலக்க வலையகம் (Integrated Service Digital Network - ISDN) 9. இணையம் (Internet) 10. நெறிமுறைகள் (Protocol) 11. இணையத் தளம் (Website) ஆகியவை கூறுகளாக அமைந்துள்ளன.

இணையத்தின் பரிணாம வளர்ச்சி, மனித வாழ்வின் நடைமுறை, சிந்தனை, செயல்பாடு அனைத்திலும் தாக்கத்தையும், மாற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. இணைய வளர்ச்சியால் இன்று, 1. மின்-வணிகம் (e-commerce), 2. மின்னிதழ் (e-zains) 3. மின்-பணம் (e-cash) 4. மின் தரவுப் பரிமாற்றம் (e- Data inter change) என்று எல்லாம் மின்வெளி சார்ந்த நடைமுறை உலகமாக மாற்றங்கள் தொடர்ந்து கொண்டுள்ளன. இச்சூழலில் இணையமே ஒரு மின் வெளியாய்ப் (Cyber space) பரிணமித்துள்ளது. இம்மின்வெளி ஒரு மெய்நிகர் (Virtual state) போன்றதாக அமைந்துள்ளது.

தமிழக அரசின் அனைத்துத்துறைகளிலும் மின் ஆளுமை (e-governance)ப் பயன்பாட்டின் மூலம் அரசு நிருவாகம் விரைந்து செயலாற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த தகவல் தொழில் நுட்பக் கொள்கை 2002, உலகத்திலேயே தமிழகம் தகவல் தொழில் நுட்பத்துறையில் முதலிடம் வகிப்பதற்கு ஏற்ற வகையில் கடந்த 4 ஆண்டுகளாக மென்பொருள் உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கு அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துச் செயலாற்றி வருகிறது.

தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை 2002

* தமிழக அரசால் 2002ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் நாள் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை 2002 (Information Technology Policy 2002) தமிழகத்தை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று நாட்டின் கணிசமான அளவு தகவல் தொழில் நுட்பவியல் ஏற்றுமதியில் வளர்ச்சிப் பாதைக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள்

* தனியார் துறையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்க, தகவல் தொழில் நுட்பவியல் துறையில் 40க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை 8.5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் உருவாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 1 மில்லியன் சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன .
* சென்னையில் நோக்கியா நிறுவனம் வன்பொருள் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

அறிவுசார் தொழில் நகரியம்

★ தகவல் தொழில்நுட்பவியல் சேவைகளில் வங்கி, நிதி சேவை, காப்பீடு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் சென்னையை உலகின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் தலைநகரமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அறிவுசார் தொழில் நகரிய மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தொழில் முனைவோர்களுக்கு உகந்த இடமாகத் தமிழகம் வளர்ச்சி

★ பன்னாட்டுத் தொடர்புக்காக பார்தி நிறுவனத்தால் 8.2 டெராபைட் திறன் கொண்ட ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள ஒளிவட இணைப்புக்குக் கூடுதலாக விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 5.12 டெராபைட் திறன் கொண்ட ஒளிவடத்தை ஆழ்கடலில் பதிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் முதலீட்டாளர் களுக்கான நட்பு முறையிலான கொள்கைகள், மாநிலத்தில் உள்ள அமைதியான சூழ்நிலை ஆகியவற்றால் வெளிநாட்டு தொழில் முனைவோர் களுக்கு உகந்த இடமாகத் தமிழ்நாடு உருவாக்கப் பட்டுள்ளது.

★ தேசத்தின் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (Information Technology Enabled Services - ITES) மற்றும் வணிக செய்முறை வெளித்திறன் பெறல் (Business Process Outsourcing - BPO) ஆகியவற்றில் குறிப்பாக வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடுத் துறைகளில் தமிழ்நாடு வலிமைமிக்க முக்கிய இணைப்பு மையமாக வளர்ந்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் முதன்மை மாநிலம்

★ பொது மற்றும் தனியார் தகவல் சேவையாளர்கள் (Public and Private Communication Providers - PPCPs) இணைந்து ஏறக்குறைய 44,000 கிலோமீட்டர் தூர அளவிற்கு கண்ணாடி ஒளி இழை வடங்களை (Optic Fibre Cable - OFC) மாநிலம் முழுவதும் பதித்துள்ளதன் மூலம் இந்தியாவிலேயே தமிழகத்தைப் பெரும்பான்மைப் பகுதிகளுடன் இணைத்த வகையில் முதன்மை மாநிலமாக உயர்த்தி உள்ளது.

எல்காட் மாதிரி தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைப் பயிற்சி

★ தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்களுக்கு தேவையான தரமிக்க மனிதவள ஆற்றலை உருவாக்குவதற்கு மாநிலத்தில் உள்ள தலைசிறந்த ஐந்து பல்கலைக்கழகங்கள், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து 280 மணிநேர "எல்காட் மாதிரி தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைப்பயிற்சி" வகுப்புகளை எல்காட் நிறுவனம் உருவாக்கி உள்ளது.

பேராசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி

★ 7 தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் மூலமாக 45 பேராசிரியர் களுக்குச் சென்னையில் 6 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்பவியல் நிகழ்வுகளில் தமிழக அரசு பங்கேற்பு

★ தமிழக அரசு, எல்காட் நிறுவனம் மூலமாக தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வுகளான கனெக்ட் 2001, 2002, 2003 மற்றும் 2004, பெங்களூர் ஐடி.காம், இந்தியா சாப்ட் மற்றும் பன்னாட்டுப் பொருட்காட்சிகளான சிபிட் 2003, கோலாலம்பூரில் 2003 டிசம்பர் 2 முதல் 6 வரை நடைபெற்ற "இன்க்ரெடிபில் இந்தியா 2003", ஹாங்காங் ஐசிடி எக்ஸ்போ 2004, ஜிடெக்ஸ் துபாய் 2004 மற்றும் கொரியாவில் நடைபெற்ற இன்டர்நேஷனல் எக்ஸ்போசிஷன் ஆன் கவர்மென்ட் இன்னோவேஷன்ஸ் ஆகியவற்றில் பங்கேற்றுள்ளது.

★ மின்னணு செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் (Society for Electronics Transactions and Security - SETS) தலைமை அலுவலக செயல்பாடுகளுக்கு இடம் அளிக்க தேசிய அளவில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முன்னணியில் உள்ள மாநிலங்களுக்கிடையே நிலவிய கடும் போட்டியில் தமிழகம் வெற்றி பெற்றுத் தெரிவு செய்யப்பட்டது. மேலும், இச்சங்கத்திற்கு 5,000 சதுர அடி கட்டடத்தை 3 ஆண்டுகளுக்கு வாடகை இல்லாமலும், தரமணியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். அறிவு நகரத்தில் 3 ஏக்கர் நிலமும், உறுப்பினர் கட்டணமான ரூ.60 இலட்சம் தொகையினையும் அரசு சார்பாக வழங்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பூங்கா

★ தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பூங்காவை, பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் 109 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க பாரதியார் பல்கலைக்கழகத்துடன் எல்காட் நிறுவனம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding - MoU) செய்துள்ளது.

கோயம்புத்தூர் ஐடி. காம் மாநாடு

★ கோயம்புத்தூர் நகரைத் தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு உகந்த இடமாக மேம்படுத்த "கோயம்புத்தூர் ஐடி.காம்" (Coimbatore - IT.com) என்ற மாநாடு 2001, 2002, 2003 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூரில் இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து நடத்தப்பெற்றது.

★ எல்காட் நிறுவனத்தில் "மின் ஆளுமைப் பிரிவு" டிசம்பர் 2003 முதல் செயல்பட்டு வருகிறது.

ஊரக மக்களின் குறை கேட்டல் மற்றும் குறை தீர்த்தல் சேவை

★ ஊரக மக்களின் குறை கேட்டல் மற்றும் குறை தீர்த்தல் ஆகிய சேவைகளை வலிமைப்படுத்தும் நோக்கில் 1,165 ராசி மையங்கள் (இணையதள ஊரகச் சேவை – ராசி) (Rural Access to Services through Internet - RASI) செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 500 ராசி மையங்கள் 2003–2004ஆம் ஆண்டில் முறைப்படுத்தப்பட்டன.

"மின்னணு சேவை வழங்கல்" திட்டம்

★ தமிழகத்தை மதிப்பும், வளமும் கொண்ட மற்றும் அறிவு சார்ந்த மாநிலமாக உருவாக்க தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை 2002இல் தெரிவித்தபடி மின்னணு சேவை வழங்கல் (Electronic Delivery of Services - EDS) என்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

தலைமைச் செயலகத்தில் தகவல் தொடர்பு தர மேம்பாடு

★ தலைமைச் செயலகத்தில் தகவல் தொடர்பு தரத்தை மேம்படுத்தும் வகையில் சென்னை தலைமையகத்தில் 1,000 இணைப்புகளுடன் கூடிய உள்பேசி இணைப்பகம் ரூ.76 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது.

★ தலைமைச் செயலக உள்கட்ட வலையமைப்புத் துணைச் சாதனங்கள் அமைக்கும் திட்டத்தின் மூலம் முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு 2mbps கொள்ளளவு உள்ள அதிவேக இணையம் தலைமைச் செயலகத்தில் ரூ.63 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

இணைய வழி ஊரகச் சேவைத் திட்டம்

★ இணைய வழி ஊரகச் சேவை (ராசி) திட்டம், முன்னோடித் திட்டமாக மதுரை மாவட்டம் மேலூரில் தேவையான ஊரக உள்கட்டமைப்புகளுடன் தொடங்கப் பட்டுள்ளது. பிறப்பு, இறப்பு, வருமானம், சாதி மற்றும் பிறப்பிடச் சான்றிதழ் உடனடிச் சேவை மூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஊரகச் சேவை இணைய வழி மறுமலர்ச்சி 1,800க்கும் அதிகமான மையங்களைக் கவர்ந்துள்ளது.

நில ஆவணங்கள் கணினிமயமாக்கல்

★ பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நிருவாகம் மற்றும் மேம்பாட்டு வழிமுறைகளுக்கு உகந்த வகையில் நில ஆவணங்களைக் கணினி மயமாக்கும் திட்டம் ரூ.537.60 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மின்னணு மூலம் தேயிலை ஏல முறை

★ தேயிலை விவசாயிகளுக்கு ஒளிவு மறைவற்ற, உரிய விலை கிடைக்கவும், பரிமாற்றச் செலவு மற்றும் கால நேரங்களைக் குறைக்கும் விதத்திலும் மின்னணு மூலம் தேயிலை ஏலமுறை உலகிலேயே தமிழகத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்துத்துறை கணினிமயமாக்கம்

★ போக்குவரத்துத் துறையைக் கணினி மயமாக்கியதன் மூலம் 86 வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் / பிரிவு அலுவலகங்கள் அனைத்திலும் மென்தகடு (Plastic card) ஓட்டுநர் உரிம அட்டைகள் வழங்கப்படுகின்றன.

★ பத்திரப்பதிவுத்துறை, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், கருவூலங்கள், உள்ளாட்சி அமைப்புகள், வணிகவரித்துறை, வனத்துறை, அரசின் கலை மற்றும் மருத்துவக்கல்லூரிகள், சிறுசேமிப்புத்துறை ஆகிய பொதுமக்கள் தொடர்புகொள்ளும் முக்கியமான துறைகள் மற்றும் அலுவலகங்கள் அனைத்தும் கணினி

மயமாக்கப்பட்டு விரைந்த சேவை வழங்கப்பட்டு வருகிறது.

தொடுதிரைத் தகவல் சாதனம்

★ 30 மாதிரி தாலுகா அலுவலகங்களில் தொடுதிரை தகவல் சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் நிலம், பட்டா மதிப்பீடு, பிறப்பு போன்ற தகவல்களை ஒருமுறை தொடுதல் மூலம் பெறலாம்.

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முறை

★ பொதுமக்களின் குறை தீர்ப்பதற்காக மாநில அளவில் ஒரு கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட கணினி அலகுகள் முதன்மைக் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து பெறப்படுகிற புகார்கள் இந்தக் கணினியில் உட்செலுத்தப்பட்டு, பொதுமக்களின் குறைகள் தீர்க்கப்படுகிறது.

★ கணினிக் கல்வித் திட்டம், 1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுகிறது. ரூ.18,973 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டிற்கு சுமார் 92,500 மாணவர்கள் தகவல் தொழில் நுட்பவியலில் முழுத்தேர்ச்சி அடைவார்கள்.

பதிவுத்துறையின் மாநில அளவிலான ஒருங்கிணைப்புத் திட்டம்

★ தமிழ்நாட்டிலுள்ள 325 பதிவு அலுவலகங்களும் இணைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு பதிவுத்துறை சம்பந்தமான விளக்கங்கள் அளிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் எந்த ஒரு பதிவுத்துறை அலுவலகத்திலிருந்தும் "வில்லங்க சான்றிதழ்" அளிப்பதே "ரெஜிநெட்" அமைப்பதன் நோக்கமாகும்.

அறிவுக் களஞ்சிய மையம்

★ அண்ணா பல்கலைக்கழகத்தில் அறிவுக் களஞ்சிய மையம் அமைப்பதற்காக தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திருவாளர்கள் சன்மைக்ரோ சிஸ்டம்ஸ் ஆகியோருக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.3.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முன்னிலையில் ஏற்பட்டது.

போக்குவரத்து – "அழைப்பு மையம்" உருவாக்கம்

★ போக்குவரத்து குறித்த புகார்களைக் கவனிக்க சென்னை மாநகர காவல் துறைக்காக எழும்பூரில் உள்ள நவீன கட்டுப்பாட்டு அறையில் ஒரு "அழைப்பு

மையம்" ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 18.2.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

★ தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் கல்வியையும், பட்டக் கல்வியையும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஜூன் 2002இல் தொடங்கி வைத்தார்கள்.

★ அயல்நாடுகளைச் சேர்ந்த 175 மாணவர்கள், சான்றிதழ்க் கல்வித் திட்டத்தின் கீழ் முதல் அடிப்படை நிலை மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்துள்ளனர்.

மின் நூலகம்

★ தமிழ் இலக்கிய நூல்களின் சிறந்த தொகுப்பாக உள்ள மின் நூலகத்தில் தற்போது 205 புத்தகங்கள் இணையத்தளத்திலிடப்பட்டுள்ளன. 29 கலைச்சொற் களஞ்சியங்களும் மின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

★ 125 சைவ, வைணவக் கோயில்கள் பற்றிய புகைப்படம் மற்றும் ஒளிக்காட்சிகள் அடங்கிய காட்சியகம் இடம் பெற்றுள்ளது. 12 கோயில்களுக்கு ஒளிக்காட்சிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

★ தமிழர்கள் பயனடையும் வகையில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பு மையங்கள் அமெரிக்காவில் 5, கனடாவில் 1, மலேசியாவில் 1, இலங்கையில் 1, மொரூசியஸ் 1, சுவிட்சர்லாந்து 1, ஜெர்மனியில் 1, ரியூனியனில் 1 ஆக 12 தொடர்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

★ கணினித் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மென்பொருள்களை உருவாக்க, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின் (டி.எஸ்.டி.எப்) கீழ் தமிழக அரசு நிதி வழங்கியுள்ளது.

* * *

வளர்ச்சிப் பாதையில் வரலாற்றுச் சாதனைகள்



கல்பாக்கத்தில், அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி. ஜே. **அப்துல்கலாம்** அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களும் கலந்து கொண்டார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் பழனி மலையில் கம்பிவட ஊர்தி (ரோப் கார்) திட்டத்தைப் பக்தர்களின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைத்தார்கள். (3.11.2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் சென்னையில் 3ஆவது இந்தியா – ஆசியான் வர்த்தக மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். (20.10.2004)

மேதகு தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்ற
திரு. **எஸ். சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
மலர்க்கொத்து வழங்கி,
வாழ்த்துத் தெரிவித்தார்கள். (3.11.2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
இந்திய உழவர் உரக்கூட்டுறவு
நிறுவனத்தின் வேளாண்மைத்
தொடுதிரை கணினி மையத்தை
திறந்து வைத்தார்கள். (11.2.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
புதுதில்லியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கூடுதல் விருந்தினர்
இல்லத்தைத் திறந்து வைத்தார்கள். (16.9.2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தமிழக சிறப்பு
அதிரடிப்படைக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ரொக்கப்பரிசுகள், பதக்கங்கள்
மற்றும் வீட்டு மனைகள் வழங்கிப் பாராட்டினார்கள். (30.10.2004)

வீடியோ கலந்தாய்வு மூலம்
சிறைக் கைதிகளிடம்
விசாரணை செய்யும் புதிய திட்டத்தை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்கள். (1.7.2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்,
ஆசாரிபள்ளத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி
மருத்துவமனையில், "சுனாமியால்"
காயமடைந்து தீவிர சிகிச்சைப் பெற்றுவருபவர்களை
நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள் (27.12.2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம்,
சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள்
மற்றும் தனிவீடுகளைத் திறந்து வைத்தார்கள். (23.10.2004)

புதுதில்லியில் நடைபெற்ற, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் – ஒழுங்கு நிலவரம் பற்றிய
முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் கலந்து கொண்டார்கள். (15.4.2005)



தூய்மை மற்றும் சுகாதாரத்திற்காக மத்திய அரசு வழங்கும் "நிர்மல் கிராம் புரஸ்கார்"
விருதினைப் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 கிராம ஊராட்சிகளின் தலைவர்கள்,
ஒரு ஊராட்சி ஒன்றியம் மற்றும் அதனைச் சார்ந்த 10 ஊராட்சிகளின் தலைவர்களும்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை
தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றார்கள். (3.3.2005)



பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட
மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள். (28.1.2005)

பல்வேறு மகளிர் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு
ஐ.நா. சபையின் அதிகாரபூர்வ ஆலோசனை அமைப்பான சர்வதேச மனித உரிமைகள்
பாதுகாப்புக் குழு, நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான "தங்கத் தாரகை விருது" என்னும்
தலையாய விருதினை வழங்கியது (11.10.2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை
தெற்கு ஆஸ்திரேலியா பிரதமர் திரு.மைக்ரான் மற்றும் 6 பேர் கொண்ட
தூதுக்குழுவினர் சந்தித்துப் பேசினர். (18.10.2005)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களைச்
சந்தித்த அமெரிக்க வர்த்தக குழு
தமிழகத்தில் கடல்நீரைக் குடிநீராக்கும் மையங்கள் அமைக்க
உதவிசெய்வதாக உறுதி அளித்தது. (27.1.2005)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் முன்னிலையில்
"தமிழ்நாடு எச் ஐ வி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப் பாதுகாப்பு மற்றும் சிகிச்சை
வழங்கும் திட்டம்" செயல்படுத்திட, தமிழ்நாடு அரசுக்கும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த
குழந்தைகள் மூலதன நிதி நிறுவனத்துக்கும் திட்ட ஒப்பந்தம் கையெழுத்தானது. (1.3.2005)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் முன்னிலையில் செல்லிடத் தொலைபேசி நிறுவனமான நோக்கியா தனது உற்பத்தித் தொழிற்சாலையைச் சென்னையில் அமைப்பதற்கென புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. (6.4.2005)

கென்யா நாட்டின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த குழுவினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களைச் சந்தித்து தமிழக மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செயல்படுகின்ற ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு தங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். (12.4.2005)

வருவாய்த்துறை

மனித வாழ்க்கையின் அனைத்து வளர்ச்சிக்கும் வருவாய்த்துறை தொடர்பு இன்றியமையாததாக விளங்குகிறது. பொதுமக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளுக்கும் வருவாய்த்துறையின் பங்கு மதிப்பிட முடியாததாகும். சமூக வளர்ச்சிக்கும், மக்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக இத்துறையின் பணி விளங்கி வருகின்றது. அரசின் பல்வேறு துறைகளின் பணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மக்களின் நேரடி தொடர்புக்குட்பட்டத் துறையாக வருவாய்த்துறை செயல்பட்டு வருகிறது. தூய, ஒளிவு-மறைவற்ற மற்றும் நேர்மையான நிருவாகம் நடைபெறவும் பொதுமக்களின் குறைகளைக் கண்டறிந்து அவற்றிற்கு உதவிடும் வகையில் "மனுநீதி நாள்" மூலம் இத்துறை பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறது. நாட்டில் உள்ள நிலங்கள் பராமரிப்பு மற்றும் நிலவரி வசூல் போன்ற பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல் ஏழை எளிய கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு பட்டா வழங்குகின்ற பணிகளையும் வருவாய்த்துறை மேற்கொள்கிறது.

தமிழகத்தை வளர்ச்சிமிக்க மாநிலமாக உருவாக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 4 ஆண்டுகளில் வருவாய்த் துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு ஆக்கப் பூர்வமான செயல் திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் வருவாய்த்துறை பணியாற்றி வருகிறது.

அரசின் சாதனைகள்

மனுநீதித் திட்டம்

★ மனுநீதித் திட்டத்தின்கீழ் 4.5.2001 முதல் 31.12.2004 வரை 9,18,188 மனுக்கள் பெறப்பட்டு 4,20,816 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 3,30,501 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. மொத்தம் 7,51,317 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள 1,66,871 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

★ மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டத்தின்கீழ் 2001 முதல் 31.12.2004 வரை 15,17,075 மனுக்கள் பெறப்பட்டு, 11,78,439 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. இவற்றில் 6,23,165 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 5,55,274 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டன. நிலுவையில் உள்ள 3,38,636 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதில் புதிய முறை

★ வட்டாட்சியர் அலுவலகங்களில் சாதிச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ வட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகங்களி லிருந்து பொதுமக்களுக்கு 2005 மார்ச் வரை அனைத்து வகுப்பைச் சார்ந்த 12,60,202 நபர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் உதயம்

★ தருமபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.2.2004இல் தொடங்கி வைத்தார்கள்.

★ கிராம நிருவாக அலுவலர்களுக்கான 3,851 அலுவலகக் கட்டடங்கள் 2001-02ஆம் ஆண்டில் ரூ.23 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2002-03ஆம் ஆண்டில் ரூ.26 கோடி செலவில் 3,740 கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

வீட்டுமனைப் பட்டா

★ சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குகின்ற வகையில் 2001 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரை ஆதிதிராவிடர்கள் 24,316, பழங்குடியினர் 2,307, ஏனைய இனத்தவர் 54,621 என மொத்தம் 81,851 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிலப் பட்டா

★ 2001 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரை ஆதிதிராவிடர்கள் 2,574, பழங்குடியினர் 129, ஏனைய இனத்தவர் 8,548 என மொத்தம் 11,851 ஏழை விவசாயிகளுக்கு 5,94,311 ஏக்கர் பரப்பிலான நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தம்

★ உச்ச வரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு உயர்ந்தபட்சமாக 3 ஏக்கர் புன்செய் அல்லது 1.5 ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில் தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப் படுவதன் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 4,406 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டு 6,769 ஏக்கர் நிலம் 5,365 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

வறட்சி நிவாரணம்

★ வறட்சி சூழ்நிலையில் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கும் பொருட்டு 2002-03ஆம் ஆண்டில் ரூ.168.10 கோடியும், 2003-04ஆம் ஆண்டில் ரூ.181.37 கோடியும் இயற்கை இடர்பாடு நிவாரண/ தேசியப் பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ 2002 இல் கடுமையான வறட்சியில் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பகுதி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, ரூ.164.16 கோடியில் செயல்படுத்தப் பட்டது. மேலும், டெல்டா மாவட்டங்களில் நிலவிய வறட்சியைக் கருதி, தீபாவளியைக் கொண்டாடும் வகையில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அரிசி, சர்க்கரை, தேங்காய், நெய், காய்கறிகள் மற்றும் ரொக்கம் ரூ.50 அடங்கிய ஒவ்வொன்றும் ரூ.210 மதிப்புள்ள பரிசுப் பைகள் ரூ.21.28 கோடி செலவில் வழங்கப்பட்டன.

தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம்

★ 20 மாவட்டங்களில் பாதிப்படைந்த 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.21.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ 2002 இல் பருவ மழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறுகுறு விவசாயக் குடும்பத்தினர் 14.03 இலட்சம் பேர்களுக்கு சர்க்கரைப் பொங்கல் 15.1.2003 முதல் 4.2.2003 வரை வழங்கப்பட்டது.

விவசாயிகளுக்கு இலவச அரிசி

★ நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் 5.2.2003 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு இதன் மூலம் 31.8.2003 வரை, சென்னை தவிர பிற மாவட்டங்களில் மொத்தம் 9.65 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்தன.

விவசாயிகளுக்கு நிவாரணம்

★ சென்னை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 2002-2003ஆம் ஆண்டில் வறட்சி காரணமாக உற்பத்தி இழப்பு ஏற்பட்டுப் பாதிப்படைந்த 28,93,268 விவசாயிகளுக்கு ரூ.240.07 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.

விவசாயிகளின் துயர்துடைப்புத் திட்டம்

★ காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் சம்பா நெல் சாகுபடி செய்யாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் துயர்துடைக்க ரூ.217.09 கோடியில் சிறப்பு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

கால்நடைப் பராமரிப்பு

★ வறட்சியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாக்க, 22 மாவட்டங்களில், 313 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கால்நடைப் பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதியும், கால்நடைத் தீவன உற்பத்திப் பண்ணைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் ரூ.20 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ தமிழகத்தில் நிலவி வரும் கடும் வறட்சியின் காரணமாக மாவட்டங்களில் மல்பரி மரங்கள் பாதிக்கப்பட்டு மல்பரி விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.75.92 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ பசலி ஆண்டு 1,412 (1.7.02 முதல் 30.6.03) மற்றும் 1,413 (1.7.03 முதல் 30.6.04) ஆகியவற்றுக்கான நிலவரியைத் தள்ளுபடி செய்து அரசாணையிடப்பட்டது.

★ சம்பூர் கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக் கூறின் கீழ் வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டும், குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் சென்னை தவிர 29 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை

★ 2004ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு அரசின் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், இலவச வேட்டி, சேலை வழங்குதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ 2004 அக்டோபரில் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் கனத்த மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு உடனடி வெள்ள நிவாரணமாக ரூ.3.26 கோடியும், தொடர்ந்து ரூ.76.50 கோடியும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

சுனாமி நிவாரண நடவடிக்கைகள்

★ 2004 டிசம்பர் 26 இல் நிகழ்ந்த எதிர்பாராத சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடி நிவாரணமாக ரூ.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பாதிக்கப்பட்ட வள்ளம் படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி வலைவாங்குவதற்கும், கட்டுமரம் பயன்படுத்துபவர்களுக்கு மாற்று மீன்பிடி வலை வாங்குவதற்கும், வள்ளம் படகுகளைப் பழுது

பார்க்க, மறுகட்டுமானம் செய்யவும், சேதமடைந்த 20,000 கட்டுமரங்களுக்கு தேவையான உதவி ஆகிய பணிகளுக்கு ரூ.45.22 கோடி மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

★ பாதிப்படைந்த பகுதிகளில் அனைத்து நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ளும் வகையில் ரூ.395.56 கோடியைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்காலிக வீடுகள்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட 50,000 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்க தலா ரூ.8,000 வீதம் ரூ.40 கோடியைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை அரசால் 11,945 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



குடியிருப்புத் திட்டம்

★ சுனாமி பாதித்த பகுதிகளில் தலா ரூ.1.50 இலட்சம் மதிப்பிலான 1,30,000 வீடுகளைக் கட்டும் மிகப்பெரிய குடியிருப்புத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

முதலமைச்சரின் பொதுநிவாரண நிதி

★ சுனாமியால் இறந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் இறந்த 8,034 நபர்களில் இதுவரை 6,249 பேர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமியால் கை, கால் / கண்கள் இழந்தோருக்கு ரூ.3.5 கோடி வழங்க ஆணையிடப்பட்டு, இதுவரை 2,390 நபர்களுக்கு ரூ. 122.10 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

வீடு மற்றும் உடைமைகளை இழந்தோர்களுக்கு உதவி

★ சுனாமியால் வீடு மற்றும் உடைமைகளை இழந்தோரில் இதுவரை 1,18,586 குடும்பங்களுக்கு ரூ.57.81 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் மீன் தொடர்பான சிறுதொழில் புரியும் 1,76,840 குடும்பங்களுக்கு நிவாரணமாக ரூ.51.39 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தினசரி வேலைவாய்ப்பை இழந்த மற்றும் கடலோரத்தில் வசித்து பாதிக்கப்பட்ட 24,764 மீனவர்களுக்கு ரூ.7.43 கோடி வழங்கப் பட்டுள்ளது.

★ நடமாடும் கடை, தற்காலிகக் கடை மற்றும் நிரந்தரமான கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நிவாரணம் வழங்க ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிழைப்பூதியம்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் மக்களுக்குப் பிழைப்பூதியம் வழங்கும் பொருட்டு அரசு ரூ.122 கோடி ஒதுக்கீடு செய்து, பிப்ரவரி 2005இல் 2,50,000 குடும்பங்களுக்கு ரூ.34.21 கோடி மதிப்பிலான நிவாரணமும், மார்ச் 2005இல் 1,15,435 குடும்பங்களுக்கு ரூ.15.76 கோடி மதிப்பிலான நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்குப் பாடநூல்கள் இலவசம்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்கள், நோட்டுகள், சீருடைகள் வழங்க ஆணையிடப்பட்டு 1,05,264 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இம்மாணவர்களுக்கு 2005-2006 கல்வியாண்டு முடியும்வரை அனைத்துப் பள்ளிக் கட்டணங்களிலிருந்தும் விலக்களிக்கப் பட்டுள்ளது. 121 பள்ளிகளில் தனியே பொதுத் தேர்வு நடத்தப்பட்டது.

★ சுனாமியால் இழந்த பொருள்களை அப்புறப்படுத்துதல், இறந்தவர்களைப் புதைத்தல் போன்றவற்றிற்கு ரூ.5.25 கோடி ஒதுக்கப்பட்டு இதுவரை ரூ.4.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட ரூ.1.50 இலட்சம் வீடிழந்த குடும்பங்களுக்கு ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 74,673 டிரங்குப் பெட்டிகள், 5,183 ஸ்டவ் அடுப்புகள் மற்றும் 54,212 எவர்சில்வர் குடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட 4,799 துப்புரவுத் தொழிலாளர்களின் சேவையை அங்கீகரித்து ரூ.1.20 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி

★ சுனாமியால் 5,598.89 எக்டேர் பரப்பளவில் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்காக ரூ.1.80 கோடி ஒதுக்கீடு

செய்துள்ளது. இதன்மூலம் 13,158 பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயனடைவர்.

★ சுனாமியால் பாதிக்கப்பட்டு 13,569.29 எக்டேர் உப்பு மண்டியுள்ள விவசாய நிலங்களைச் சீர்படுத்த ரூ.16.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு நிவாரணம்

★ வண்டியிழுக்கும் கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க ரூ. 2.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.1.77 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி கடலோரப் பகுதிகளில் சுவர் அமைக்கும் பணி

★ கன்னியாகுமரி மாவட்ட கடலோரப் பகுதிகளில் துண்டுக் கற்களாலான சுவர் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுனாமியால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்குப் பாதுகாப்பு

★ சுனாமியால் பெற்றோரை இழந்த குழந்தைகளைத் தங்கவைக்க குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காப்பகங்களில் கடலூரில் 73, நாகையில் 109 மற்றும் நாகர்கோயிலில் 29 ஆதரவற்ற குழந்தைகள் தங்கவைத்துச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றனர்.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு வைப்புநிதி

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்புநிதியாக வைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

★ திருமணமாகாத 18 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற பெண்கள் சேவை மையங்களில் அனுமதிக்கப்பட்டு, வேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கவும் அவர்களது பெயரில் தலா ரூ.3 இலட்சம் வைப்பு நிதி முதலீடு செய்யவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

★ நடைமுறையில் உள்ள ஊதிய உதவித் தொகைத் திட்டங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆதரவற்றோருக்கும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

★ சுனாமி பாதித்த 48 மணி நேரத்தில் அப்பகுதிகளில் மின் இணைப்பு, நீர் வழங்கல் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

நில ஆவணங்களைக் கணினிமயமாக்குதல்

★ தமிழ் நிலம் எனப்படும் நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ 31.12.2003 வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராமங்களில் நகர்ப்புறம் சாராத கிராமங்களின் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

★ மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில் 201 வட்டங்கள் ON LINE வசதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

★ 127 வட்டங்களில் தொடுதிரைத் தகவல் கணினி மேடை (TSCK) நிறுவப்பட்டு நில ஆவணங்கள் கணினி வழி வழங்கப்பட்டு வருகின்றன.

நிலஅளவை புலப்படங்கள் கணினிமயம்

★ செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிச் செட்டிபாளையம் ஆகிய நான்கு வட்டங்களில் புலப்படங்கள் கணினிமயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்நான்கு வட்டங்களிலும் சுமார் 1.22 இலட்சம் புலப்படங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

★ ஒரு முன்னோடித் திட்டமாக, பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்திலும், 3 சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கணினி மூலம் தகவல் பரிமாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

கிராம வரைபடங்கள் ஸ்கேனிங்

★ நிலவியல் தகவல் முறையை மிகத் துல்லியமாக மேற்கொள்ள ஏதுவாக விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (GPS) என்னும் ஒரு முன்னோடித் திட்டத்தை ரூ.1.20 கோடியில் மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

★ 29 மாவட்டங்களின் கிராம வரைப்படங்களை ஸ்கேன் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

★ நில ஆவணத் துறையில் கணினி வழி நிருவாகத்தில் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* * *

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

"காணி நிலம் வேண்டும் பராசக்தி"
என பாட்டு வேந்தர் பாரதியே கூறியுள்ளார்.

பாரதியின் இலட்சியத்தையும் தாண்டி, "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளுடன் தமிழக அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறைவிடம் ஆகும். அதில் மனிதனின் உலகமாக விளங்குவது அவன் வாழும் இடமாகும். மேலும், அந்த இடம் சொந்தமாக மாறும் பட்சத்தில் உலகமே அவனுக்கு சொந்தமாகி விடுகின்றது.

மனிதனின் இந்த அடிப்படைத் தேவை பூர்த்தி அடையும் பட்சத்தில், பொருளாதாரத்தில், மனிதனின் நிலை தானாக உயர்வடைகிறது. ஒவ்வொரு குடிமகனின் தேவைகள் நிறைவேற்றப்படும்போது, ஒட்டுமொத்தச் சமுதாயமே மேம்படுகிறது.

தமிழக அரசு, 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற குறிக்கோளை ஒரு குறியீடாக, கொள்கையாகக் கடைப்பிடித்து வருகிறது. தமிழக அரசின் இந்தக் குறிக்கோளினைச் செயல்படுத்தும் வண்ணம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகிய அமைப்புகள் மூலம், பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு சீரியத் திட்டத்தின் மூலம், தகுந்த குடியிடங்களை உருவாக்கித் தரும் அரும்பெரும் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரியத் திட்டத்தின் மூலம் தமிழக அரசு, செயல்படுத்தி வருகிறது.

அரசின் சாதனைகள்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த நான்கு ஆண்டுகளில் (2001 முதல் 2005 வரை) கீழ்காணும் அரிய திட்டங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல் படுத்தியுள்ளது.

★ கோயம்பேடு சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்
★ ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்
★ மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம்
★ காய்கறிக் கழிவினை மூலப் பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் திட்டம்
★ திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் இரண்டாம் நிலை
★ உள் கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்
★ வரன்முறைப்படுத்தும் திட்டம்
★ தகவல் தொழில்நுட்ப மற்றும் உயிரி தொழில்நுட்ப கட்டடங்கள் கட்ட கட்டுப்பாட்டு விதிகளில் தளர்வு அளித்தல்
★ வெளிவட்டச் சாலை அமைத்தல்

மேற்காணும் திட்டங்களுடன் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் உயர் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றை ஊக்குவிக்கும் முகமாக, வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் சிலவற்றைத் தளர்த்தி மேற்காணும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயர்தொழில்நுட்பத் துறையினைச் சென்னைப் பெருநகர் பகுதிகளில் வளர்ச்சியடையச் செய்வதின் மூலம் எதிர்காலத்தில் இப்பகுதிகளில் மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சி ஏற்படும் நல்ல வாய்ப்பாக அமையும்.

சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்

★ சென்னை கோயம்பேட்டில் மிகப்பெரிய புறநகர் பேருந்து நிலையம் 37 ஏக்கர் பரப்பளவில் ரூ.103 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, செவ்வனே செயல்பட்டு வருகிறது. சென்னை விமான நிலையத்திற்கு இணையாக இப்பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு, பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்

★ கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தின் அருகில், ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம் ரூ.3 கோடி செலவில் சுமார் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.



மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம்

* உலகிலேயே இரண்டாவது அழகான கடற்கரையாக விளங்கும் அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் வரையிலான 3.2 கி.மீட்டர் தூரமுள்ள கடற்கரையோரப் பகுதிகள், ஆண்டுக்கு ரூ.36 இலட்சம் செலவில் இயந்திரத்தின் மூலம் அழகுப்படுத்தப்பட்டு வருகிறது.

காய்கறிக் கழிவினை மூலப்பொருளாக்கி மின் உற்பத்தி

* காய்கறிக் கழிவினை மூலப்பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் ஓர் முன்னோடித் திட்டம், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 230 கிலோவாட் வீதம் ஆண்டிற்கு 17.20 இலட்சம் மின்சக்தி உற்பத்தியுடன் 10 டன் இயற்கை உரக்கட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

திரளான துரித ரெயில் போக்குவரத்துத் திட்டம்

* திரளான துரித ரெயில் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ், திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீட்டர் நீள திட்டப் பணிகள் ரூ.706 கோடி செலவில் மத்திய – மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

உள்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்

* சென்னைப் பெருநகரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளைத் துரித வேகத்தில் மேம்படுத்துவதற்காக இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரத்தில் வீட்டுவசதி, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி, சாலை வசதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 2004–05ஆம் நிதியாண்டில் ஓராண்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2,007.12 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

வரன்முறைப்படுத்தும் திட்டம்

* 31.3.2002க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குப்படுத்தி வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், இதுவரை ரூ.228.19 கோடி மதிப்பிலான தொகை பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப கட்டடங்கள் கட்ட கட்டுப்பாட்டு விதிகள் தளர்வு

* தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இத்தகைய தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு கட்டுபாட்டு விதிகளில் சிலவற்றைத் தளர்த்தி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திட்ட அனுமதியை இக்குழுமம் வழங்கி வருகிறது.

வெளிவட்டச்சாலை

* நகரின் மையப்பகுதியின் நெருக்கடியைக் குறைக்கும் முகமாகச் செயல்படுத்தப்படும் பணியில் சென்னை மாநகரின் வடக்கு எல்லையான மீஞ்சூரையும் தெற்கிலுள்ள வண்டலூரையும் இணைக்கும் வகையில் 6.2 கி.மீ. நீளத்தில் வெளிவட்டச்சாலை விரைவில் உருவாக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

* தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில், நகர்ப்புறக் குடிசைப்பகுதி வாழ் ஏழை மக்களுக்காக 27,962 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், தனி வீடுகளும் மற்றும் 9,060 கல்நார் ஓட்டு கூரைக் குடியிருப்புகளும் ரூ.249.50 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளன.

* கடந்த நான்கு ஆண்டுகளில் வெள்ளக் குறைப்புப் பணிகளின் கீழ் சென்னை ஒக்கியம் துரைப்பாக்கத்தில் ரூ.26.16 கோடி செலவில் 3,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்

* குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் பிற நகரங்களில் குடிசைப் பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு அவர்கள் முன்னர் வாழ்ந்த இடங்களிலேயே ரூ.8.59 கோடி செலவில், 816 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு சிறப்பு நல நிதியின் மூலம் – அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகளின் கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 64 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.77 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* 10ஆவது நிதிக்குழு மூலம் பெறப்பட்ட சிறப்பு மானிய நிதியுதவியினைக் கொண்டு, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் 1,624 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

* சென்னை நகரில் செல்லும் முக்கிய நதிகளின் கரைகளில், தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் மீதமுள்ள 5,164 குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 5,164 குடியிருப்புகள் ரூ.57.28 கோடி செலவில் கட்டப் பட்டுள்ளன.

தீப்பிடிக்காத வீடுகள் அமைத்தல்

* கடந்த 4 ஆண்டுகளில், சென்னை மாநகரில் நல்ல சுற்றுச் சுவர்களுடன் கூடிய தீப்பிடிக்காத கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் 9,060 ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.15.63 கோடி செலவில் கட்டப்பட்டு அவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

* வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் கூடிய 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட 9,500 தனி வீடுகள் ரூ.38 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.20 கோடி செலவில் 5,000 தனி வீடுகள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* பெருநகரங்களில் வாழும் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை மறு குடியமர்த்திடும் வகையில் 11ஆவது நிதிக்குழுவின் சிறப்பு மானிய உதவியின் கீழ், ரூ.49 கோடி செலவில், சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் 5,172 குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன.

* சென்னை நகரிலுள்ள 30,514 பழைய பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.14.23 கோடி செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

* அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தண்ணீர் வசதிகளை மேம்படுத்திடும் வகையில் ரூ.76 இலட்சம் செலவில் 100 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியத்தால் நிறைவேற்றப் பட்ட அனைத்து 144 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளிலும் ரூ.23.61 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள்

* குடிசைப் பகுதிகளில் வாழும் 45,889 ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ரூ.76.56 கோடி செலவில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டு, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப் பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோர் மேம்பாடு

* மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற 19,306 மகளிருக்கு ரூ.195 இலட்சத்தில் உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

* **கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் ரூ.249.51 கோடி செலவில் 1,21,898 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், தனி வீடுகள் மற்றும் கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

நகரமேம்பாடு

* **நகர குடிசைப் பகுதிகளில் வாழும் 30,124 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.5.25 கோடி செலவில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.**

* * *

சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்துறை

நாட்டின் வளர்ச்சிப் பணிகளும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளும் ஒன்றுக்கு ஒன்று பாதிப்பு இல்லாத வகையில் பின்னிப்பிணைந்து செயல்படுவதன் மூலமே நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும். தமிழகத்தின் வளர்ச்சிக்காக, மேம்பாட்டுப் பணிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுத்தி வருகிற தமிழக அரசு, இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழலைப்

பாதுகாப்பதற்கும் பல்வேறு அரிய திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

வனப்பகுதிகளைச் சார்ந்துள்ள கிராம மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவேற்றிட தமிழகத்தில் உள்ள வன வளத்தினை அதிகரிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 'காடு வளர்ப்புத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் வளம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டு காடுகளை ஒட்டிய கிராமங்களின் வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப் படுகிறது.

அரசின் சாதனைகள்

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,946.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஐந்து நகரங்களில் மாசுத்தடுப்புப் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி, குமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று நகரங்களில் இப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பவானியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப்பாளையம் நகரத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் 7 நகரங்களில் புதிதாகச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டு காலத்தில் 28.02.2005 வரை ரூ.22,438.83 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவிடப் பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

* சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.49,152 இலட்சம் ஆகும். கடந்த 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ரூ.29,766.71 இலட்சம் செலவிடப் பட்டு குழாய் பதிக்கும் பணியில் 97 சதவிகிதம் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 95 சதவிகிதப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

* தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், உதகை ஏரியின் பணிகளுக்காக பிப்ரவரி 2005 வரை மத்திய அரசிடம் பெற்ற ரூ.171 இலட்சத்தில் ரூ.142.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர் தொழில்நுட்பத்தின் மூலம் உதகை ஏரி தற்போது தூய்மையாகியுள்ளது. கொடைக் கானல் ஏரியில் பணிகளுக்காகப் பெறப்பட்ட ரூ.200 இலட்சத்தில் ரூ.33.40 இலட்சத்திற்குரிய பணிகள் கொடைக்கானல் ஏரியில் தற்போது முடிக்கப்பட்டுள்ளன.

முன்னோடி சூழல் நகரம் உருவாக்கல்

* சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல் படுத்த ஏதுவாக சூழலுக்கு உகந்த முன்னோடி நகரங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேசிய சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (NEERI) மூலமாக ரூ.2.50 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்யும் பணி

* தூத்துக்குடி பகுதிக்கு வளர்ச்சிப் பணிகளின் தாக்கத்தைத் தாங்கும் அளவினை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்யும் பணி ரூ.5.22 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதுதில்லி நீர் மற்றும் எரிசக்தி ஆலோசனை சேவை மையம் (வாப்கோஸ்) என்ற நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகள்

* சென்ற நான்கு ஆண்டுகளில் 20க்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த கருத்தரங்கங்கள், கருத்துப் பட்டறைகள், நடத்தப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டு காலத்தில் அனைத்துச் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுப் பணிகளுக்காகத் தமிழக அரசினால் ரூ.53 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தேசிய பசுமைப் படை

* மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய பசுமைப் படை திட்டத்தில் தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 150 பள்ளிகள் வீதம் 29 மாவட்டங்களில் 4,350 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை தொடங்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென கடந்த 4 ஆண்டுகளில் ரூ.128.84 இலட்சம் மைய அரசிடமிருந்து பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கு விருது

* சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய பிரிவுகளில் பரிசுகள், சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் உலக சுற்றுச்சூழல் தின விழாவின்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையிலும் 42 நிறுவனங்கள் / வல்லுநர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் தகவல் மையம்

* உலக வங்கியின் உதவியுடன் மத்திய அரசு செயல்படுத்தி வரும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திறனை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் (EMCB - TAP Environmental Management Capacity Building Technical Assistance Project) "சுற்றுச் சூழல் தகவல் மையம்" (ENVIS - Environmental Information System) ஒன்று தமிழ்நாடு அரசின் சுற்றுச் சூழல் துறையில் அமைக்கப்பட்டுள்ளது.
* சுற்றுச்சூழல் தகவல் மையத்தினால் 5.12.2002 அன்று உயிர்ப்பன்மயம் குறித்து ஒரு கருத்துருப் பட்டறையும், 27.8.2003 அன்று நதிநீர்ப் பாதுகாப்பு குறித்த கருத்துப் பட்டறையும் நடத்தப்பட்டன. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ.12.44 இலட்சம் மத்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2005 வரை ரூ.10.92 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

தமிழக சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரித்தல்

* மத்திய அரசு நிதி உதவியுடன் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் மாநில சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி இத்துறையால் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசு ரூ.12.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

கோவில் குன்றுகளில் சூழல் – மறு சீரமைப்பு முன்னோடித் திட்டம்

* கோவில் குன்றுகளில் சூழல் – மறு சீரமைப்பு முன்னோடித் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவிலின் குன்றுப் பகுதிகளை ரூ.9 இலட்சம் திட்டச் செலவில் பசுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தரிசாகவும், தரங்குன்றியும் உள்ள மலைப் பகுதியில் மரக் கன்றுகள் நடும் பணி வனத்துறை மூலம் ரூ.6 இலட்சம் செலவில் நிறைவு பெற்றுள்ளது.

சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

* மாநிலத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்களின் வல்லுநர்களிடமிருந்து சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டு, வல்லுநர் குழு மூலம் மூன்று சிறந்த கருத்துக்கள் தேர்வு செய்யப்பட்டன. அரசு ஒதுக்கிய ரூ.10 இலட்சத்தில் சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை, சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவற்றிற்கு ரூ.9.78 இலட்சம் ஆராய்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுயஉதவிக் குழுக்கள் மூலமாக சுற்றுச்சூழல் மேம்பாடு

* கழிவுக் காகிதங்களிலிருந்து பயனுள்ள காகிதம் தயாரித்து, காகிதப் பை போன்ற பொருட்கள் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க ரூ.12 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஐந்து மாநகராட்சிகளில் தலா ஒரு தன்னார்வ நிறுவனம் மூலம் சுயஉதவிக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தூய்மைமிகு பசுமைத் தெருக்கள் – முன்னோடித் திட்டம்

* தூய்மைமிகு பசுமைத் தெருக்கள் – முன்னோடித் திட்டம், சென்னை மாவட்டத்திலுள்ள 40 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல் படுத்த பள்ளி ஒன்றிற்கு ரூ.18,750 வீதம் 40 பள்ளிகளுக்கு ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள்

* நிலங்கள் பாலைவனமாவதைத் தடுக்கும் முன்னோடித் திட்டம் 100 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.
* சூழலுக்குகந்த நகரமாகத் திருவண்ணாமலை நகரினை மாற்றுவதற்குரிய சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் 2005 – 2006 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.
* பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குன்றில் ரூ.10 இலட்சம் செலவில் பல்வேறு சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* சோளிங்கர் மலையில் ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ள சூழல் மறுசீரமைப்புப் பணிகளின் தொடர்ச்சியாகக் கோயில் அடிவாரத்திலுள்ள திருக்குளம் தூர்வாரப்பட்டு ரூ.6 இலட்சம் செலவில் புதிய நந்தவனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்

* பசுமைப் போர்வைத் திட்டத்தின்கீழ் தொழிற் சாலைகளில் சுமார் 30 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுப் பாதுகாத்து வளர்க்கப்படுகின்றன.

அபாயகரமான கழிவுகளை வெளியேற்ற தீவிர கண்காணிப்பு

* அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றிற்காக ஒரு பொது அமைப்பினை நிறுவுவதற்கு காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலக்கோட்டையூரில் ஓர் இடம் அரசினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பொது அமைப்பினை நிறுவ பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்புகள் திருப்பூர் மற்றும் கரூர் பகுதியில் தலா ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நகர திடக்கழிவு மேலாண்மை

* நகர திடக்கழிவுகளை உரமாக்கும் பணிகளை மேற்கொள்ள 23 நகராட்சிகளுக்கு அனுமதி வழங்கப் பட்டன.

மருத்துவக் கழிவுச் சுத்திகரிப்பு

* தனியார் மருத்துவ நிலையங்களுக்காக, நவீன பல்முனை பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் நிலையங்களை ஏற்படுத்தி, மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மையில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தின் மூலம் 11 பொது அமைப்புகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டு, 6 அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. இத்தகைய விரிவான மேம்பட்ட மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகளைக் கையாளும் முறை வேறெந்த மாநிலத்திலும் இல்லை.

தூக்கி எறியும் பிளாஸ்டிக்கினைத் தவிர்த்தல்

* தூக்கி எறியும் பிளாஸ்டிக்கின் தீமைகள் குறித்து, நவீன மக்கள் தொடர்பு சாதனங்கள் மற்றும் பாரம்பரிய முறைகள் வழியாக முறையான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டன. பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பனை ஓலைகளில் பொருட்கள் தயாரிப்பதில் சுயஉதவித் தொழில் முனைவோர்களுக்கு கிராமத் தொழில் ஆணையத்தின் பனை மற்றும் பனைப் பொருட்கள் நிறுவனம் மூலம் 12 வகையான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

காற்று ஒலிப்பான் போன்ற ஒலி மாசினைத் தவிர்த்தல்

* அனைத்து மாவட்டங்களும் காற்று ஒலிப்பான் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதுமாக பேருந்துகள் மற்றும் லாரிகளில் பொருத்தப்பட்டிருந்த 52,586 காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டுள்ளன.

சுற்றுச் சூழல் ஊக்குவிப்பிற்குப் பசுமை விருதுகள்

* பசுமை விருது 2002 – சேலம், நீலகிரி, விருதுநகர் மாவட்ட ஆட்சியர்களுக்கும், பசுமை விருது 2003 – கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கும் , பசுமை விருது 2004 – கடலூர், கன்னியாகுமரி மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டது.

புதுமை படைப்போருக்கான பசுமை விருது

* சுற்றுச்சூழலைப் பாதுகாக்க "புதுமை படைப் போருக்கான பசுமை விருது" அரசால் 2003ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வனத்துறை

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

* ஜப்பான் நாட்டின் சர்வதேச கூட்டுறவு நிதியத்தின் கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் நோக்கமானது, தரம் தாழ்ந்த காடுகள் மற்றும் அதனருகில் உள்ள 1,000 கிராமங்களின் அருகாமையில் உள்ள ஏனைய நிலங்களிலும் அழிந்த காடுகளின் உயிரினச் சூழல் மற்றும் சுற்றுச் சூழலைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதாகும். இத்திட்டமானது நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

* ஜப்பான் நாட்டின் சர்வதேசக் கூட்டுறவு நிதியம் 2002–03 முதல் 2003–04 வரை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்து மேலும், 258 திட்ட கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

* தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 1.80 இலட்சம் எக்டேர் பரப்பில் தரமிழந்த காடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினச் சூழல் மேம்படுத்தப்பட்டதுடன் 568 திட்டக் கிராமங்களில் மக்கள் நலப் பணிகள் ரூ.272.22 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட மனித சக்தியளவு 249.10 இலட்சம் மனித நாட்களாகும். பயனடைந்தோர்களின் எண்ணிக்கை 78,245.

* நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளாக 12,038 தடுப்பணைகளும், 1,232 கசிவு நீர்க்குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் – II

* ரூ.567.42 கோடி மதிப்பீட்டில், 2005–06 முதல் 2012–13 முடிய எட்டு ஆண்டு காலத்தில், 800 இடைபடுகாடு கிராமங்களில் (650 ஒருங்கிணைக்கப் பட்ட நீர்ப்பிடிப்பு வளர்ச்சிப் பணிகளின் கீழும் 150 ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும்) 1,755 சதுர கி.மீட்டர் பரப்பில் தரம் குன்றிய காடுகளைத் தரமிக்க காடுகளாக மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் – II செயல்படுத்தப்படவுள்ளது.

மரம் வளர்ப்பு மற்றும் தரிசு நில மேம்பாட்டில் தலைசிறந்து விளங்கியவர்களுக்கு "இந்திரா பிரியதர்ஷினி விருக்ஷமித்ரா" விருது

* தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினைச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய வேலூர் வனக் கோட்டத்திற்கும், தருமபுரி மாவட்டம் உங்கட்டி கிராம வனக் குழுவிற்கும், திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி கிராமம் திரு. என்.எஸ்.ஏ. வேலு முதலியார் அவர்களுக்கும் ரூ.50,000 ரொக்கப் பணம் மற்றும் பதக்கத்தினைக் கொண்ட "இந்திரா பிரியதர்ஷினி விருக்ஷமித்ரா" விருது வழங்கப் பட்டது.

* கடந்த 4 ஆண்டுகளில் 2,727.750 மெட்ரிக் டன் சந்தன மரக் கட்டைகளை ஏலம் விட்டதின் மூலம் ரூ.273.07 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

வனக் குற்றவாளி வீரப்பனைக் கொல்ல அதிரடிப்படையினருடன் பணியாற்றிய வனக்காவலர்களுக்கு ஊக்கத் தொகை

* வனக் குற்றவாளி வீரப்பன் கொல்லப்பட்ட தினத்தில் அதிரடிப்படையினருடன் பணிபுரிந்த வனப் பணியாளர்கள் அனைவருக்கும் தலா ரூ.1 இலட்சமும், பதவி உயர்வும் வழங்கப்பட்டது. மேலும், பணியில் ஈடுபட்ட 51 நபர்களுக்கு ரூ.51 இலட்சமும், உயிரிழந்த 3 வனப் பணியாளர்களின் குடும்ப வாரிசுகளுக்கு ரூ.29.20 இலட்சமும் வழங்கப்பட்டது.

* வீரப்பனைப் பிடிப்பதற்கு உறுதுணையாகப் பணியாற்றிய வன அலுவலர்கள் 50 பேருக்கு வெகுமதியாக ரூ.29 இலட்சங்களும், பங்கு கொண்டதற்குப் பதக்கமும், பதவி உயர்வும் மற்றும் பெறப்படும் ஊதிய விகிதத்தில் ஒரு படி மேல்நிலையிலும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கிட ஆணையிடப்பட்டது.

கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள்

* சுனாமி தாக்குதலால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழகக் கடலோரப் பகுதிகளில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக்காடுகளில் மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.10 கோடி மதிப்பீட்டிலான கருத்துரு, உலக வங்கியின் நிதியுதவி பெற அனுப்பப்பட்டுள்ளது.

வனவியல் விரிவாக்கச் செயல்பாடுகள்

* வன விரிவாக்க மையத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 297 எக்டேர் நிலப்பரப்பில் சுமார் 664 முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் நெல்லி, கட்டு புளி, சவுக்கு, மூங்கில், பலா, வேம்பு, சொர்க்க மரம் போன்ற செடிகளைக் கொண்டு செயல் விளக்கத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வன விரிவாக்க மையங்களின் மூலம் சுமார் 3,500 விவசாயிகளுக்கு மரங்கள் வளர்ப்பது சம்பந்தமான தொழில் நுட்பப் பயிற்சியும், சாசர் முறையில் மழைநீர் சேகரித்து மரங்கள் வளர்ப்பது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

* 575 சுயஉதவிக் குழு நபர்களுக்கு மண்புழு உரம் தயாரிப்பது, மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.

யானைகள் மற்றும் இதர வன உயிரின நீர்த் தேவைக்கு ஆழ்குழாய்க் கிணறுகள்

* ஈரோடு, தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வனப் பகுதிகளில் உள்ள யானைகள் மற்றும் இதர வன உயிரினங்களின் நீர்த் தேவைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்த 79 ஆழ் குழாய்க் கிணறுகள் மற்றும் நீர்த் தொட்டிகள் ரூ.76.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

யானைகள் புத்துணர்வு முகாம்

* கோயில் யானை மற்றும் தனியாருக்குச் சொந்தமான யானைகளுக்கு முதுமலையில் 18.11.2003 முதல் 30 நாட்களுக்குப் புத்துணர்வு முகாம் நடத்த ஆணையிடப்பட்டு, 100 யானைகள் இம் முகாம்களின் மூலம் பயனடைந்தன. தொடர்ந்து 2004–ஆம் ஆண்டிலும் யானைகள் முகாம் நடத்தப்பட்டது.

மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு

* அரசால் தோற்றுவிக்கப்பட்ட அறக்கட்டளையின் நிதியான ரூ. 140 கோடி மதிப்பீட்டிலான மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 18.7.2002-இல் தொடங்கி வைக்கப்பட்டது.

நவீனமயமான புவித் தகவல் தரவு மையம்

* முதன்மைத் தலைமைப் பாதுகாவலர் அலுவலகத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 2001–02ஆம் ஆண்டு ரூ.102.986 இலட்சம் செலவில் ஐதராபாத்தில் உள்ள விண்வெளித்துறையின்கீழ் இயங்கும் தேசிய தொலையுணர்வு மையத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் ஒரு நவீன மயமான புவித் தகவல் தரவு மையம் ஒன்று அமைக்கப்பட்டது. மேலும், புவித் தகவல் தரவு மையத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக மாநில அரசு கூடுதலாக ரூ.179.70 இலட்சம் நிதியளித்துள்ளது.

புவித் தகவல் தரவு மையத்தின் செயல்பாடுகள்

* செயற்கைக்கோள் தொலையுணர்வு படம் மற்றும் புவித்தகவல் முறை ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் “மின்னணு வன வரைபடத் தொகுதி” செய்து முடிக்கப்பட்டுள்ளது. இவ்வன வரைபடத் தொகுதி தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காப்பு வனங்களின் “வனமூடிய பரப்பினை” குறித்த தகவல்களை (அடர்த்திக் காடுகள் மற்றும் திறந்த காடுகள்) அளிக்கிறது.
* மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் புவியியல் தகவல் முறை பயன்பட ஏதுவாக 26 வன ஆட்சிக் கோட்டங்களில் புவியியல் தகவல் முறை வசதி உருவாக்கப்பட்டுள்ளது.
* தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் முறைக்கான அடிப்படைப் பயிற்சி மாநிலத்திலுள்ள பல்வேறு வகையான வனத்துறைப் பணியாளர் களுக்கு இத்தகவல் தரவு மையத்தில் அளிக்கப் படுகிறது. இதுவரை 340 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

200 இலட்சம் நாற்றுகள்

* ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 200 இலட்சத்திற்கும் மேல் நாற்றுகள் எழுப்பப் பட்டுள்ளன. இதன் பயனாக வன சமூக மற்றும் பண்ணை நிலங்களில் எழுப்பப்பட்ட நாற்றுகளின் உயிர் தன்மையும், வளர்ச்சி விகிதமும் அதிகப் படுத்தப்பட்டுள்ளது.

சமூக வனத் தோட்டங்கள்

* கடந்த 4 ஆண்டுகளில் 50,888 எக்டேர் நிலப் பரப்பிலுள்ள பண்ணைத் தோட்டங்கள் மற்றும் சமூக வனத் தோட்டங்களில் விற்பனை செய்தல் மூலம் அரசுக்கு ரூ.31 கோடி மதிப்பில் வருவாய் ஈட்டப் பட்டுள்ளது.

தேக்கு மர விற்பனை மூலம் வருவாய்

* கடந்த 4 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் முதிர்ந்த தேக்கு மரங்களை வெட்டி விற்பனை செய்ததின் மூலம் ரூ.18.77 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
* கடந்த 4 ஆண்டுகளில் ரூ.96 இலட்சத்தில் 2,439 அரசுக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசு ரப்பர் கழகம்

* நலிவடைந்திருந்த அரசு ரப்பர் கழகத்தைப் புனரமைத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதின் விளைவாக 2002 – 2003ஆம் நிதியாண்டில் ரூ.59.27 இலட்சம் நிகர இலாபம் ஈட்டப்பட்டது.
* பல வருடங்களாக விற்பனை செய்யப்படாமலிருந்த முதிர்ந்த ரப்பர் மரங்கள் 2003–04இல் விற்பனை செய்யப்பட்டு ரூ.2.38 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. இந்த வருவாயில் இருந்து ரூ.1.13 கோடி அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.
* 2002–2003 மற்றும் 2003–2004 ஆண்டுகளில் 34.30 எக்டேர் மற்றும் 103.60 எக்டேர் பரப்பளவில் முறையே அதிக முதிர்வடைந்த ரப்பர் மரங்களை வெட்டிவிட்டு உயரிய வீரிய ரக ரப்பர் மரக் கன்றுகள் மறுநடவு செய்யப்பட்டது. மேலும் கழகம் இவ்வாண்டு ரூ.117.44 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியது.
* 2004–2005ஆம் ஆண்டும் 95.2 எக்டேர் பரப்பளவில் அதிக முதிர்ச்சியடைந்த ரப்பர் மரங்களை வெட்டி விட்டு மறுஉற்பத்தி தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது. இதுபோன்று 2005–2006ஆம் ஆண்டிற்கும் ரப்பர் மறு உற்பத்தி தோட்டம் எழுப்பத் தேவையான ரப்பர் நாற்றங்கால் தற்போது எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

* * *

சிறுதொழில் துறையில் சீரிய வளர்ச்சி

வளர்ந்து வருகின்ற நாட்டின் வளர்ச்சிக்கு சிறு தொழில்களின் வளர்ச்சி ஒரு அடித்தளமாக அமைகிறது.

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடுவீரே!

என்று மகாகவி பாரதியார் அவர்கள் உழைப்பின் மேன்மையை வலியுறுத்தியுள்ளார்கள். இதனடிப் படையில், கிராமங்கள், நகரங்கள், மற்றும் மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு சிறு தொழில்கள் முன்னோடியாகத் திகழ்கின்றன. சிறு தொழில் வளர்ச்சி அடைகின்ற போதுதான் பொருளாதார வளர்ச்சியும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயமும் உருவாகிறது. நாட்டின் நிலைத்த வேலை வாய்ப்புக்கும் தொழில் முனைவோரின் செயல்திறன் மேம்பாட்டிற்கும் நாற்றங்காலாகச் சிறுதொழில்துறை விளங்குகிறது. அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும் மூலகாரணங்களாக அமைபவை சிறுதொழில் நிறுவனங்களே. சிறு தொழில்களை ஊக்குவிக்கவும், கிராமங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தவும் கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் “புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்” மற்றும் “நமது கிராமம் திட்டம்” போன்ற புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

சிறுதொழில்களுக்கு அரசு கொள்முதலில் முன்னுரிமை

* 1.12.2001லிருந்து, தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் உற்பத்திப் பொருட்களுக்கு அரசு கொள்முதல்களில் 15 விழுக்காடு விலை முன்னுரிமை வழங்கப் பட்டுள்ளது.

இணையதளம் மூலம்
தற்காலிகச் சான்றிதழ்

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று தொடங்கப்பட்ட இணையதளம் மூலம், தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ் வழங்கல் திட்டத்தின் கீழ் 30.4.2005 வரை 73,172 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

* புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 30.4.2005 வரை வேளாண் சார்ந்த / உணவுப் பதப்படுத்தும் தொழில்களை மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ரூ.688.33 கோடி மதிப்பீட்டில் தொடங்குவதற்காக 1,048 திட்டங்களுக்கு மாநில அளவிலான உயர்நிலைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 307 திட்டங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 133 திட்டங்கள் தொழில் முனைவோரது சொந்த நிதியால் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தத்தில், ரூ.160.60 கோடி மதிப்பில் 246 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. இதன் மூலம் 6,352 பெண்கள் உட்பட 9,350 கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம்

* சிறுதொழில் நிறுவனங்களுக்கு பின் முனை வட்டி மானியத்தின் கீழ், 31.3.2005 வரை முதலீட்டு மானியமாக ரூ.539 இலட்சமும், குறைந்தழுத்த மின் மானியமாக ரூ.650 இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ.10.80 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளன.
* கடந்த 4 ஆண்டுகளில் பொருள் விற்பனை செய்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் பொருள் வழங்கிய நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகை, 2004 டிசம்பர் முடிய, ரூ.1,845.68 இலட்சம் வசூலிக்க தீர்வு செய்யப்பட்டது.

மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

* 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இருந்து 20,000 மகளிருக்கும், பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5,000 மகளிருக்கும் ஆக ஆண்டிற்கு 25,000 மகளிர் வீதம் கடந்த 4 ஆண்டுகளில் 1,00,839 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சிகள் பெற்ற 36,608 மகளிர் தமது சொந்தத் தொழில் அலகுகளைத் தொடங்கியுள்ளனர்.
* பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா என்ற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 30.4.2005 வரை 64,088 நபர்களுக்கு வங்கிகள் மூலமாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

ஒற்றைச் சாளர முறை கூட்டம்

* தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள ஒற்றைச் சாளர முறையின்

மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 30.4.2005 வரை 4,510 மனுக்கள் பெறப்பட்டு 4,187 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன.

ஊட்டி ‘டீ’ விற்பனை

* தேயிலை விற்பனையை ஊக்கப்படுத்திடும் வகையில், “ஊட்டி டீ” என்ற பெயரில் தேயிலைத் தூளை விற்கும் திட்டத்தின்படி, 30.4.2005 வரை ரூ.83.34 கோடி மதிப்பிலான 11,113 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது.
* தேயிலை ஏலத்தை மின்னணு முறையில் வெளிப் படையாக நடத்த ஏற்படுத்தப்பட்ட “டீ செர்வ்” என்ற

புதிய ஏல மையம், 30.4.2005 வரை 266.30 இலட்சம் கிலோ கிராம் தேயிலைத் தூளை ஏலம் மூலம் விற்பனை செய்துள்ளது.

இன்கோ சர்வ், குன்னூர்

* குன்னூரில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் தலைமைச் சங்கமான "இன்கோ சர்வ்", கடந்த 4 ஆண்டுகளில், ரூ.88.40 கோடி மதிப்பிலான தேயிலைத் தூளை விற்பனை செய்துள்ளது.
* சேலத்தில் உள்ள "சேகோ சர்வ்", நிறுவனத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில், ரூ.733.35 கோடி அளவில் மரவள்ளிக் கிழங்கைப் பதப்படுத்தி தயாரிக்கப்படும் சவ்வரிசி மற்றும் மாவுப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தாய்கோ வங்கி

* சென்னை 'தாய்கோ' வங்கியால் 30.4.2005 வரை ரூ.222 கோடி வைப்பு நிதியாகத் திரட்டப்பட்டு ரூ.174.05 கோடி அளவிற்குக் கடன் மற்றும் முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்கூட்டுறவுச் சங்கம்

* கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை மற்றும் வருச நாடு பகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. 303 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இச்சங்கம் 2004–2005 முடிய 8.10 மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டைகளைக் கொள்முதல் செய்து ரூ.8.47 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்துள்ளது.
* கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 5,000 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் சந்தை வளர்ச்சி நிதியுதவியாகத் தமிழக அரசால் ரூ.1.23 கோடி வழங்கப்பட்டுள்ளது. கயிறு தொழிற்சங்கங்கள், கடந்த நான்காண்டுகளில் ரூ.3,821.14 இலட்சம் மதிப்புள்ள கயிறுப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

* சிட்கோ நிறுவனத்தின் மூலம், கடந்த நான்கு ஆண்டுகளில் 4,972 தொழில் மனைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. 4,222 தொழிற்கூடங்கள் கட்டப் பட்டுள்ளன. 41 தொழிற்பேட்டைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. மேலும், 200 முதல் 600 சதுர அடிவரை அளவுகள் கொண்ட 1,841 குறுந்தொழிற்கூடங்களும் கட்டப்பட்டுள்ளன.

மகளிர்க்கென தொழிற் பூங்காக்கள்

* **இந்தியாவிலேயே முதன் முறையாக, மகளிர்க்கென சிட்கோ நிறுவனம் மூலம், திருமுடிவாக்கத்தில் ரூ.54 இலட்சத்தில் தொழிற்பூங்காக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.**
* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இரண்டு மகளிர் தொழிற் பூங்காக்கள்

சென்னைக்கு அருகிலுள்ள திருமுல்லைவாயிலிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள வாழவந்தான் கோட்டையிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

* 2004–2005 ஆம் ஆண்டில், சிட்கோ நிறுவனத்தின் மூலம் சென்னை, விச்சூர் தொழிற்பேட்டை பகுதி–IIலும், கும்பகோணம் தொழிற்பேட்டை பகுதி–IIலும் மற்றும் சேலத்திலுள்ள கருப்பூர் மகளிர் தொழிற் பூங்காவிலும், ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 316 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
* சிட்கோ நிறுவனம் மூலம் 2001–2005 ஆம் ஆண்டுகளில் 7 தொழிற்பேட்டைகளில் 1,080 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூலப்பொருள் உதவித்திட்டம்

* கடந்த 4 ஆண்டுகளில் சிட்கோவின் மூலம், ரூ.129.17 கோடி மதிப்புள்ள 48,408 மெட்ரிக் டன் மூலப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

விற்பனை உதவித்திட்டம்

* சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2.21 கோடி மதிப்பிலான வழங்கல் ஆணைகள் பெறப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 311 சிறுதொழில் நிறுவனங்கள் சிட்கோ மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஏற்றுமதி உதவித்திட்டம்

* சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணைய தளத்தின் மூலம் விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 95 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
* அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகள் 'தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத்' திட்டத்தின் மூலம் ரூ.47.20 கோடி செலவில் மேம்படுத்தப்பட உள்ளன.
* தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) கடந்த 4 ஆண்டுகளில் ரூ.186.71 கோடி மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளது.
* டான்சி நிறுவனத்தின் இரு கைப்பம்புகள் உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் மற்றும் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாப்பாப்) ஆகியவை ISO : 9001–2000 தரச் சான்றிதழைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது.

மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் எரிசக்தித் துறை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலக அளவில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்கும், பிற்பகுதியில் இந்தியாவில் நடந்த பசுமைப் புரட்சிக்கும் இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்க காலமான தற்காலத்தில் நிகழ்ந்துவரும் கணினிப் புரட்சிக்கும் அடித்தளமாக இருப்பது மின்சாரம் தான். மின்சக்தி இல்லையேல் இவ்வுலகம் இல்லை. மின்சார உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்று ஒவ்வொரு குடிமகனும் மின்சாரத்தின் பயனை நுகரும் வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியம் செவ்வனே சேவையாற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் மின்உற்பத்தியை அதிகரிக்க அனைத்து வித உதவிகளையும், சிறப்புத் திட்டங்களையும் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தனியார் மின் உற்பத்தி, தாவர எரிசக்தித் திட்டங்கள், காற்றாலை மின்உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங் களிலிருந்து மின்உற்பத்தி, கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல் போன்ற நவீனத் தொழில் நுட்பங்கள் மூலமாக மின்சாரம் தயாரிக்கும் புதுமையான திட்டங்களுக்கும் தமிழக அரசு அளப்பரிய ஊக்கத்தை அளித்து வருகிறது.

மேலும், சீராக மின் அனுப்புகையை மேற்கொண்டு மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், கடந்த 4 ஆண்டுகாலமாக, தமிழ்நாடு மின்சார வாரியம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, தனித்தன்மையை நிலைநிறுத்தி வருகிறது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வாரியம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் போன்றவற்றிற்கு மின் இணைப்புகள் வழங்கியும், மின்வெட்டு, மின் தடையில்லாத மின்சாரத்தை வழங்கி, தமிழகத்திலுள்ள அனைவருக்கும் மின்சாரத்தின் பயனைப் பெற்றிட பெருந் தொண்டாற்றி வருகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மின் உற்பத்தி

* மின் உற்பத்தி தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மொத்த மின் உற்பத்தித் திறன் கடந்த நான்கு ஆண்டுகளில் 1,380 மெகாவாட் அதிகரித்துள்ளது. நாட்டின் புதுப்பிக்கத்தக்க

எரிசக்தியின் உற்பத்தியின் ஒட்டுமொத்த சராசரியான 5 சதவிகிதத்தோடு ஒப்பிடும்போது, தமிழகத்தில் 20% திறனை எய்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

காற்று சக்தி மூலம் மின் உற்பத்தித்திறனில் முதலிடம்

* காற்று சக்தி மூலம் மின் உற்பத்தித் திறனில் கடந்த நான்கு ஆண்டுகளில் (2001–2005) 1,227 மெகாவாட் அதிகரித்துள்ளது. இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மொத்த உற்பத்தித்திறன் 31.3.2005 வரை 2,040 மெகாவாட்டாக உள்ளது. இது நாட்டின் மொத்த உற்பத்தித்திறனில் 60 சதவிகிதம் ஆகும். இந்தியாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் தொடர்ந்து இத்துறையில் சாதனை படைத்து வருகிறது.

கரும்புச் சக்கையின் மூலம் மின்உற்பத்தியில் தமிழகம் முதலிடம்

* இந்தியாவிலேயே கரும்புச் சக்கையினைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்வதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. நான்கு ஆண்டுகளில் 132 மெகாவாட் மின்உற்பத்தி அதிகரித்துள்ளது. இது இந்தியாவில் மொத்த இத்தகு உற்பத்தித்திறனில் 30 சதவிகிதம் ஆகும் என்பதும் ஒரு குறிப்பிடத் தகுந்த சாதனையாகும்.

சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி

* சூரிய ஒளி சாதனங்களைப் பயன்படுத்தி கடந்த நான்கு ஆண்டுகளில் 4,500 சூரிய ஒளி லாந்தர், 1,229 வீட்டு விளக்குகள் மற்றும் 4,346 தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் சூரிய ஒளி சக்தி மூலம் விவசாயத்திற்கும், குடிநீர் இறைப்பதற்கும் அரசு மானியத்துடன் 90 இடங்களில் இறைப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.

* சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் 500 சதுர மீட்டர் (ம) அதற்கு மேல் கட்டப்படும் வணிக ரீதியான புதிய கட்டடங்களில் 150 சதுர மீட்டருக்கு மேற்படி கட்டப்படும் குடியிருப்புக் கட்டடங்களில் நிறுவுவது கட்டாயமாக்கி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாக உருவாகி வருகிறது.

* தமிழக சூரிய சக்தி சுடுநீர்க் கலன்களை அரசு கட்டடங்களில் நிறுவுவதற்கு ரூ.54.32 இலட்சம் நிதிஉதவியாகவும், தனியார் நிறுவனங்களுக்கு மானியமாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தாவர எரிசக்திசாதனங்கள்

* தொழிற்சாலைகளில் வெப்ப சக்தி (ம) மின்சக்தி தேவைகளுக்கு, தாவர எரி சக்தி வாயுக்கலன்களை அமைப்பதற்கு அரசு மானிய உதவி அளிக்கிறது. நான்கு ஆண்டுகளில் 13 தாவர எரிசக்தி வாயுக்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

* கோவை மாவட்ட ஊராட்சிகளில் தாவர எரிசக்தி வாயுக்கலன்களை நிறுவுவதில் முதன்மையாகத் திகழ்கிறது.

* மனிதக் கழிவுகளிலிருந்து பெறப்படும் வாயு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் திட்டத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்கி உள்ளது. 2003–04 ஆம் ஆண்டில் 14 சுகாதார வளாகங்களில் மனிதக்கழிவு எரிவாயுக் கலன்கள் அமைத்து, கிடைக்கும் வாயு மூலம் பம்புகளை இயக்கி அந்த வளாகங்களை, சுயசார்புடையவைகளாக மாற்றும் பணியினைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் செய்து வருகிறது. இதைத் தவிர 29 நிறுவனங்களில் மனிதக்கழிவு எரிவாயுக் கலன்கள் அமைக்கப்படுகின்றன. இதற்காக தமிழக அரசு மொத்தம் ரூ.43.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மனிதக் கழிவிலிருந்து 20 எரிவாயுக் கலன்களை நிறுவுவதற்கு ரூ.20 இலட்சம் அரசால் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம்

தடையில்லா மின்சாரம்

* மாநிலத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் எந்த ஒரு பகுதியிலும் மின்தடையின்றி, தமிழ்நாட்டிலுள்ள 1.7 கோடி மின்பயனீட்டாளர்களுக்குத் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

தங்கப்பதக்கம்

* தூத்துக்குடி, வடசென்னை மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு நான்கு ஆண்டு காலமாக இந்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. 2005ஆம் ஆண்டிலும் தங்கப்பதக்கத்தைப் பெறத் தகுதி பெற்றுள்ளது.



பன்னாட்டுத் தரச்சான்றிதழ்

* வடசென்னை, தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கு இந்தியத் தரச் செயலக நிறுவனம் ஐ எஸ் ஓ (ISO) – 9002 : 1994 தரச் சான்றிதழை வழங்கியுள்ளது. மேற்கண்ட அனல்மின் நிலையங்கள் மேலும் தகுதி மேம்பட்ட ஐ எஸ் ஓ (ISO) – 9001 : 2000 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளன.

1,000 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் திட்டங்கள்

* 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் திட்டத்தைக் கூட்டு முயற்சியில் தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல்மின் கழகமும் இணைந்து சென்னையில் செயல்படுத்தவுள்ளன.

* தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தைக் கூட்டு முயற்சியில் நிறுவ தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து செயல் படுத்தவுள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.6.2003 அன்று கையெழுத்தானது.

* வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13.3.2003இல் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது. அதேபோன்று குத்தாலத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் 24.3.04 முதல் இயங்கி வருகின்றது.

துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள்

* ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியின் உதவியுடன் ரூபாய் 185.75 கோடி மதிப்பீட்டில் 14 மாவட்டங்களில் துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மின் தடை நீக்கும் மையம்

* மின்நுகர்வோர்களின் மின்தடை பற்றிய குறைகளை உடனடியாகத் தீர்க்கும் பொருட்டு கணினி மயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள் 12.11.2003 முதல் சென்னை மாநகரிலும், 1.3.2005 முதல் சேலம், மதுரை மற்றும் திருச்சியிலும் இயங்கி வருகின்றன.

விவசாயிகளுக்கும் – குடிசைவாழ் மக்களுக்கும் மீண்டும் 1–4–2004 முதல் இலவச மின்சாரம்

* **விவசாயிகள் மற்றும் குடிசைவாழ் மக்களுக்கு 1.4.2004 முதல் மீண்டும் இலவச மின்சாரம் வழங்க ஆணையிட்டுள்ளது. இதற்கென மானியமாக முறையே ஒரு வருடத்திற்கு ரூபாய் 196 கோடி மற்றும் ரூபாய் 16 கோடி வழங்கி உள்ளது. இதன் மூலம் சுமார் 15.3 இலட்சம் விவசாயிகளும், சுமார் 9 இலட்சம் குடிசை வாழ் மக்களும் பயனடைகின்றனர். இந்த மானியம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரையாண்டிற்கு ஒருமுறையாக முன்கூட்டியே வழங்கி வருகின்றது.**

வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டணம் குறைப்பு

* **தமிழக மக்களின் நலன் கருதி தமிழக அரசு வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை 16.6.2004 முதல் குறைத்து ஆணையிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.910 கோடி மின் வாரியத்திற்கு அரசு மானியமாக வழங்குகிறது.**

கட்டட அனுமதிக்குச் சான்றிதழ் தேவை ரத்து

* கட்டடங்களுக்கு மின் இணைப்பு வழங்கும்போது கட்டட அனுமதி மற்றும் கட்டட நிறைவுச் சான்றிதழ் ஆகியவை அளிக்குமாறு வலியுறுத்தப்பட்டதை நீக்கி அரசு ஆணை பிறப்பித்து, ஆண்டொன்றுக்கு சுமார் 6 இலட்சம் வாய்ப்புள்ள பயனீட்டாளர்கள் விரைவில் மின் இணைப்புப் பெற வழிவகை செய்துள்ளது.

மின் உற்பத்தித்திறன் அதிகரித்தல்

* கடந்த நான்கு ஆண்டுகளில் இயக்கி வைக்கப்பட்ட கூடுதல் மின்உற்பத்தித் திறன் 1,648 மெகாவாட். கடந்த நான்கு ஆண்டுகளில் 1,92,091 மி. யூனிட்கள் நுகரப்பட்டது. புதிய மின் நிலையங்கள், துணை மின் நிலையங்கள், அதிக திறனாக்குதல் மற்றும் துணை மின் நிலையங்களில் கூடுதல் வோல்டேஜ் மின்னூட்டியை அறிமுகப்படுத்துதல் உட்பட 241 துணை மின்நிலையங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் இயக்கி வைக்கப்பட்டன.

மின் இணைப்பு

* கடந்த நான்கு ஆண்டுகளில் 59,480 தொழிற் சாலைகளுக்கும், 31,057 உயர்மட்ட, தரைமட்ட நீர்தேக்கி தொட்டிகளுக்கும், 93,425 தெருவிளக்கு களுக்கும், 21,30,925 வீடுகளுக்கும், 1,37,371 குடிசைகளுக்கும், 1,30,693 பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு

* கடந்த நான்கு ஆண்டுகளில் 27,883 மின் திருட்டுகள் பிற முறைகேடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதற்குரிய அபராதத் தொகை ரூ.10,383 இலட்சம் ஆகும்.

* * *

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

'உழைப்பே உயர்வு' – என்ற முதுமொழிக்கு ஏற்ப, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்தாக அமைபவர்கள் தொழிலாளர் பெருமக்கள் ஆவார்கள். தொழிலாளர்களின் உண்மையான முன்னேற்றமே நாட்டின் முழுமையான வளர்ச்சியாகும்.

உற்பத்தியை மென்மேலும் பெருக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் தொழிலாளர்களின் உழைப்பு பெரும் பங்காற்றுகிறது.

தொழிலாளர்களின் நலனைப் போற்றும் வகையில், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியங்கள் அமைத்து, தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கெனத் தீர்வு கண்டு, அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழக அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தொழிற் சிக்கல்களுக்குத் தீர்வு

* தொழிலாளர் துறையின் மூலம் 16 தொழிற்சாலைகளின் தொழிற் சிக்கல்கள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப் பட்டன.

முத்தரப்புக் குழு

* மூடப்பட்டத் தொழில் நிறுவனங்களைத் திறப்பதற்கு மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 3 மாதத்திற்கு ஒருமுறை கூடி விவாதிக்கும்.

தொழிலாளர்களுக்கு உதவித்தொகை

* நீண்டகாலமாக மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த 4,167 தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250 வீதம் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் ரூ.60,98,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நீதிமன்றம்

* பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சிரமமின்றி மிகக் குறைந்த செலவில் விரைவாக நீதி கிடைக்க சென்னை மற்றும் மதுரையில் "லோக் அதாலத்" என்ற மக்கள் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 43 வழக்குகள் முடிக்கப்பட்டு, கேட்புரிமை தாரர்களுக்கு 73,03,521 ரூபாய் இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சேலம் மாவட்டத்திலும் அமைக்கப்படவுள்ளது.

பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம்

* ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 2002ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

* 2005 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றவும், 2007ஆம் ஆண்டிற்குள் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றவும் அரசாணையிடப்பட்டது. இத்திட்டத்தினை மாவட்ட மற்றும் மாநில அளவில் செயல்படுத்த ரூ.1.25கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* அனைத்து மாவட்டங்களிலும் "மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டன.
* குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாகச் செயல்படும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாநில விருது வழங்கப்பட்டு வருகிறது. 2003ஆம் ஆண்டிற்கான விருது கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டது.

குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டங்கள்

* சிவகங்கை, இராமநாதபுரம், தஞ்சாவூர், பெரம்பலூர், திருவாரூர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்கள் குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டங்களாக அறிவிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

விழிப்புணர்வு முகாம்கள்

* குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி துண்டுப் பிரசுர வெளியீடு, சிறுநூல்கள், சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்றன. பேருந்துகளிலும், பொது இடங்களிலும் சுவரொட்டி மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன. மேலும், சுயஉதவிக் குழுக்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றன.

குழந்தைத் தொழிலாளர்களுக்குக் கல்வி

* 408 சிறப்புப் பள்ளிகளில், 15,059 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயில்கின்றனர். சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு தலா ரூ.100 மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

* தையற்பயிற்சி மட்டும் இயங்கி வந்த 19 மையங்களில் குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
* அடிப்படைக் கணினிப் பயிற்சி பெற, தொழிலாளி மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு மாவட்டத்திற்கு 5 நபர் வீதம் 150 பேருக்கு தலா ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

* தொழிலாளர் நல மையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மின் மோட்டார் இயந்திரம் பொறுத்திய தையல் இயந்திரம் 3,97,292 ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.
* ஈமச் சடங்கு உதவித்தொகை ரூ.500லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டது.
* 25,841 தொழிலாளர்களுக்கு ரூ.1,03,13,367 மதிப்பீட்டில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வி உதவித்தொகை உயர்வு

* பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் வேளாண்மைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,200லிருந்து ரூ.2,400ஆகவும், பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டயப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.720லிருந்து ரூ.1,440ஆகவும், தொழிற் பயிற்சிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.500லிருந்து ரூ.1,000ஆகவும், மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.600லிருந்து ரூ.1,200ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்

* தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 13.5.2001 முதல் 31.1.2005 வரை பதிவு செய்து கொண்ட 3,24,166 தொழிலாளர்களில் 50,691 நபர்களுக்கு, ரூ.16,32,32,553 நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
* தகுதியுடைய பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.200 மாத ஓய்வூதியம்.
* பதிவு செய்து கொண்ட தொழிலாளர்களின் பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை 10ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 11ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 12 ஆம் வகுப்பிற்கு ரூ.1,500 என வழங்கப்பட்டு வருகிறது.
* தற்போதுள்ள மகப்பேறு உதவித் தொகை ரூ.2,000 என்பதை ரூ.4,000 ஆகவும், இயற்கை மரணம் ஏற்பட்டால் நிவாரண உதவி ரூ.10,000 லிருந்து ரூ.15,000 ஆகவும், கண் கண்ணாடி வாங்க ரூ.250லிருந்து ரூ.500 ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

* பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியம்

* தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள – தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,23,905.
* கடந்த 4 ஆண்டுகளில், 26,594 பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.5,97,91,750 அளவில் பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
* **பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை 10ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 11ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 12ஆம் வகுப்பிற்கு ரூ.1,500.**
* மகப்பேறு உதவித்தொகை ரூ.2,000லிருந்து ரூ. 4,000 ஆக உயர்த்தப்பட்டது.
* இயற்கை மரணம் ஏற்பட்டால் ரூ.10,000லிருந்து ரூ.15,000ஆக உயர்த்தப்பட்டது.
* கண் கண்ணாடி வாங்க ரூ.500 வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்புத்துறை

* தமிழகத்திலுள்ள 34 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை நாடுவோரின் விவரங்களைப் பதிவு செய்தல், அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு மனுதாரர்களின் பெயர்களைப் பரிந்துரைத்தல் ஆகிய பணிகளுடன் தொழில்முறை வழிகாட்டுதல், சுயவேலைவாய்ப்பு வழிகாட்டுதல் ஆகிய முக்கியப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
* வேலைவாய்ப்புத்துறையின் இணையதளம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.
* இவ்விணையதளத்தில் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் செல்லாமலேயே "ஆன் லைன்" முறையில் தங்கள் பதிவுகளைப் புதுப்பிக்க வசதி

உள்ளது. இதுவரை 49,153 பதிவர்கள் சென்னை வராமலேயே தங்கள் ஊரிலிருந்து ஆன்லைன் முறையிலான புதுப்பித்தல் வசதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

* பொதுமக்களுக்கு விரைவான மற்றும் புகாரற்ற சேவை அளிப்பதற்காக அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் கணினி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தனியார் துறையில் பணியமர்த்தல்

* எல்லா மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமையன்று தனியார் துறை வேலையளிப்பவர்கள் மற்றும் வேலை நாடும் மனுதாரர்கள் சந்திக்கின்றனர். நேரடியாகத் தேர்வுகள் நடைபெறுகின்றன. உடனுக்குடன் மனுதாரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

கிராமப்புற இளைஞர்களுக்கான தன்னார்வப் பயிலும் வட்டங்கள்

* வேலை தேடும் இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் போட்டியிடும் தங்களது திறனை மேம்படுத்த தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

* ஊராட்சி ஒன்றிய தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு ரூ.99.88 இலட்சம், மாவட்ட தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு ரூ.67.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி நுறைத் தேர்வுக்குப் பயிற்சி

* ரூ.27.16 இலட்சம் செலவில் 4,922 ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கான பயிற்சியளிக்கப்பட்டு, இதில் 823 மாணவர்கள் பல்வேறு தொழிற் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர்.

சுயவேலைவாய்ப்பு

* 6,866 பேருக்கு சுயவேலைவாய்ப்பிற்காக ரூ.2,906 இலட்சம் வங்கிகள் மூலம் கடன் உதவிகள் பெற்றுத் தரப்பட்டன.

மகளிருக்கான புதிய தொழிற்பயிற்சி மையங்கள்

* மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆண்டிபட்டி, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் ரூ.2.79 கோடி செலவில் மகளிருக்கான புதிய தொழிற் பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு 616 மகளிர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

புதிய தொழிற் பிரிவுகள்

* தொழிற்பயிற்சி நிலையங்களில் கம்மியர் மெக்கட்ரானிக்ஸ் மற்றும் கம்மியர் வன்பொருள் ஆகிய தொழிற்பிரிவுகள் ஆகஸ்ட் 2005 முதல் 8 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.181.65 இலட்சம் செலவில் தொடங்கப்படவுள்ளன.

* வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்றாற்போல், 35 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் புதிய கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.5 கோடி செலவில் வழங்கப்படவுள்ளது.

அகில இந்திய திறனாய்வுத்தேர்வு

* 1964ஆம் வருடம் முதல் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய அளவில் திறனாய்வுப் போட்டி மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற 40 போட்டிகளில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக 2001 முதல் 2003ஆம் ஆண்டுகளில் 20 முறை தேர்வு செய்யப்பட்டு, குடியரசுத் தலைவர் அவர்களின் கேடயத்தைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் அளிக்கப்படும் தொழிற்பயிற்சி இந்திய துணைக் கண்டத்திலேயே தரம் வாய்ந்ததாகும்.

தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம்

* தொழிற்சாலைகள் மற்றும் ஆய்வகத்துறையின் மூலம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் பணி நிரந்தரம் செய்யும் சட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளி தான் பணிபுரியும் தொழிற்சாலையில் தொடர்ந்து 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் பணிபுரிந்திருப்பின் அவருக்கு அத்தொழிற்சாலையில் பணிநிரந்தரம் செய்ய வழி செய்யப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 4 ஆண்டுகளில் 25,643 தொழிற்சாலைகளில் 82,860 தொழிலாளர்களின் பணிகள் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளன.

மாநிலப் பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்

* தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிருவாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. இதுவரை கடந்த நான்காண்டுகளில் பாதுகாப்பு விருதுகள் 313 நிருவாகத்தினருக்கு முதல் பரிசும், 228 நிருவாகத்தினருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன.

"உயர்ந்த உழைப்பாளர் விருது"

* விபத்துத் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர் விருது" வழங்கப்படுகின்றன. கடந்த நான்காண்டுகளில் இதுவரை 168 தொழிலாளர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

* * *

போக்குவரத்துத் துறையின் மகத்தான சாதனைகள்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், அந்நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சியும், வாழ்க்கைத்தரமும் முக்கியமான அடிப்படை காரணங்களாகும். மக்களின் பொருளாதாரமும், வாழ்க்கைத்தரமும் உயர வேண்டுமானால் அனைத்து அடிப்படை வசதிகளோடுப் போக்குவரத்து வசதி சிறப்பாக அமைந்திடல் வேண்டும். போக்குவரத்து வசதிகளான சாலை, ரயில்வே, விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து வசதிகளில் சாலைப் போக்குவரத்து வசதி மிகவும் இன்றியமையா ஒன்றாகும். சாலைப் போக்குவரத்து வசதி சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தால்தான் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய முடியும். வளர்ச்சித் திட்டங்கள் செயல் வடிவம்பெறச் சாலைப் போக்குவரத்து முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதலிடமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வரும் அனைத்துத் துறைகளின் செயல் வடிவங்களில் சாலைப் போக்குவரத்து ஏனைய போக்குவரத்துச் சாதனங்களைவிட மக்களை நெருங்கி பயனளிப்பதில் உலக அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

போக்குவரத்துக் கழகங்களின் ஒருங்கிணைப்பு

* போக்குவரத்துக் கழகங்களின் நிருவாக அமைப்பைச் சீரமைக்கும் நோக்கத்தில், 21 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

* அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை 2003-2004-ஆம் ஆண்டில் 487.92 கோடியாக இருந்தது, 2004-2005-ஆம் ஆண்டில் 508.54 கோடியாக உயர்ந்துள்ளது.

இலாப நோக்கு செயல்

* மத்திய அரசின் அதிவேக டீசல் எண்ணெய் விலை உயர்வினால் ரூ.182 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்ட போதிலும் போக்குவரத்துக் கழகங்கள் 2004-2005ஆம் ஆண்டில் ரூ.14.45 கோடி இலாபம் ஈட்டியுள்ளன.

நாட்டிலேயே உயர்ந்த இயக்கத் திறன்

* மைய அரசின் திட்ட கமிஷன் (போக்குவரத்துத் துறை), 2004-2005 மற்றும் 2005-2006, ஆண்டுத் திட்டத்தை ஆய்வு செய்தபோது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உற்பத்தித் திறன் மிகச் சிறப்பாகவும், தொடர்ந்து முன்னேற்றமடைந்தும் உள்ளது என்று பாராட்டியுள்ளது. மேலும், 2003-2004-ஆம் ஆண்டில் வாகன இயக்கத் திறன் 385 கி.மீட்டரானது, 2004-2005இல் 392 கி.மீட்டராக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பாகச் சொல்லி, இது நாட்டிலேயே உயர்ந்த இயக்கத்திறன் என்று குறிப்பிட்டுள்ளது.

சலுகை விலையில் டீசல்

* இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், இந்துஸ்தான் பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய எண்ணெய் நிறுவனங்களுடன் ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.700 என்ற தள்ளுபடி அடிப்படையில் 1.10.2003 முதல் அதி வேக டீசல் வாங்க ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தம் 31.3.2005 வரை செயல்பாட்டில் இருந்தது. மேற்கண்ட ஒப்பந்தத்தினால் எரிபொருள் செலவில் ஏப்ரல் 2004 முதல் ஜனவரி 2005 வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.30 கோடி சேமித்துள்ளன.

தொழிலாளர்களின் நலன்

* போக்குவரத்துத் துறைப் பணியாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 1.67 சதவிகிதம் கருணைத் தொகை மற்றும் இடைக்கால நிவாரணமாக 1.9.2003 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் வழங்கப்படுகிறது.

* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஓர் ஆண்டில் தங்கள் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பில் 15 நாட்கள் விடுப்பில் செல்லாமல் சரண் செய்து அதற்கு ஈடாக ரொக்கத்தொகையை ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

புதிய பேருந்துகள்

* 2001-2002-ஆம் ஆண்டில் 1,550 பேருந்துகளும், 2002-2003-ஆம் ஆண்டில் 659 பேருந்துகளும், 2003-2004-ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 1,050 பேருந்துகள் வாங்கப்பட்டன. 2004-2005-ஆம் ஆண்டில் 1,325 பேருந்துகள் வாங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ASRTU (புதுடில்லி) விருது

அகில இந்திய அளவில் எரிபொருள் (டீசல்) சிக்கனத்திற்கான முதலிடத்தை 2001–2002–ஆம் ஆண்டிலும், இரண்டாம் இடத்தை 2002–2003–ஆம் ஆண்டிலும் திருநெல்வேலியில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகம் தொடர்ந்து பெற்றுள்ளது.

2001–2002–ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சேலத்திற்கு அகில இந்திய அளவில் மசகுஎண்ணெய்ப் பயன்பாட்டில் சேமிப்பிற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

2001–2002–ஆம் ஆண்டிற்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு, அகில இந்திய அளவில் நாள் ஒன்றிற்கு அதிக கி.மீ. இயக்கத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

பெண் ஓட்டுநர்

* தமிழக போக்குவரத்துக் கழகங்களில் முதல் பெண் ஓட்டுநர் நாகர்கோயில் போக்குவரத்துக் கழகத்தில் நியமனம் செய்யப்பட்டார். மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் 2 பெண் ஓட்டுநர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இலவச பஸ் பாஸ்

* 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் விடுமுறை நாட்கள் உள்பட அனைத்து நாட்களுக்கும் செல்லுபடியாகும் இலவசப் பேருந்துப் பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

பேருந்தில் மாணவர்களுக்குப் பயணச் சலுகை

* தனியார் கல்லூரிகள் உள்பட அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் அனைத்து மாணவர் களுக்கும் விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும் பயணம் செய்ய 50 சதவிகிதம் சலுகையில், பேருந்துப் பயணச்சீட்டுகள் வழங்கப் படுகின்றன. சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்குப் பயணிக்க 60 மாற்று டோக்கன்கள் வரை வழங்கப்படுகின்றன.
* 2003–2004ஆம் ஆண்டில் 17,41,740 மாணவ, மாணவியரும், 2004–05ஆம் ஆண்டில் 20,88,111 மாணவ, மாணவியரும் இலவசப் பயணச்சலுகை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், 50 சதவிகிதம் பயணச் சலுகை அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 2003–2004ஆம் ஆண்டில் 1,72,394 ஆகும். 2004 – 2005 ஆம் ஆண்டில் 2,68,200 ஆகும். மாணவர் பயணச் சலுகையினால் 2004–2005ஆம் ஆண்டில் சுமார் 24 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

புதிய பணிமனைகள்

* பொதுமக்களின் பேருந்து வசதிகளை மேம்படுத்த ரூ.83.75 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியிலும், ரூ.31 இலட்சம் செலவில் சேலம் மாவட்டம் தாரமங்கலத்திலும், ரூ.14.95 இலட்சம் செலவில் மதுரை மாவட்டம் புதுக்குளத்திலும் மூன்று புதிய பணிமனைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

சுற்றுலா மற்றும் புனிதத் தலங்களுக்குப் பேருந்து வசதி

தமிழ்நாட்டில் உள்ள புனித மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கும் தொடர்ந்து மக்களின் தேவைக்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், 'ஒப்பந்த ஊர்தி' என்ற முறையில் இயக்கப்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் வாடகைக் கட்டணம், ஏற்கெனவே உள்ள ரூ.6500க்குப் பதிலாக நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஒப்பந்த வாடகையாக ரூ.3500 வசூலிக்கப்படுகிறது.

பயணிகளுக்குச் சலுகைகள்

* வெளிமாநிலத்திற்கு இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கை முன் பதிவு செய்பவர்களுக்கு அவர்கள் சென்னையில் வசிக்கும் இடத்திலிருந்து, கோயம்பேடு பேருந்து நிலையம் (CMBT) செல்ல மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச அனுமதி சீட்டு வழங்கப்படுகிறது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தமிழகத்திற்குள் இயக்கப்படும் பகல் நேரப் பேருந்துகளில் (செமி–டீலக்ஸ்) மற்றும் சொகுசு (டீலக்ஸ்) பேருந்துகளிலும் பயணிகளின் நலன் கருதி, மற்ற புறநகர்ப் பேருந்துகளைப் போல குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கை முன்பதிவு செய்பவர்கள், போகவும் திரும்ப வரவும் ஒரே நேரத்தில் முன்பதிவு செய்தால் (Return ticket reservation) அவர்களுக்கு மொத்த பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் கழிவு வழங்கப்படுகிறது.
* மேலும் தற்போது கணினி மூலம் வீட்டிலிருந்தபடியே (Online reservation system) முன் பதிவு செய்யும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 8 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் மொத்தமாக முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 60 வயது நிரம்பியவர்கள் பயணம் செய்ய, முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.
* பயணிகள் தங்கள் விருப்பம் போல் மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்ய ஒரு நாளைக்கு ரூ.30ம், வாரத்திற்கு ரூ.160ம், மாதத்திற்கு ரூ.600ம் என கட்டணச் சீட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டு, பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

சாலைப் போக்குவரத்து நிறுவனம்

* சாலைப் போக்குவரத்து நிறுவனம் நடத்தி வரும் பெருந்துறை மருத்துவக் கல்லூரியிலும், ஈரோட்டில் பொறியியல் கல்லூரியிலும் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் குழந்தைகள் தனி ஒதுக்கீடு மூலம் அனுமதிக்கப்பட்டு 3,845 பொறியாளர்கள், 705 மருத்துவர்கள், 215 எம்.சி.ஏ. பட்டதாரிகள் உருவாகி உள்ளார்கள்.

ஓட்டுநர் பயிற்சி மையம்

* சாலைப் போக்குவரத்து நிறுவனம் தரமணி வளாகத்தில், புதிய ஓட்டுநர் பயிற்சித் தளம் ஒன்று (Driving Range) ரூ.68.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.19.92 இலட்சம் செலவில் திருநெல்வேலியில் ஓட்டுநர் பயிற்சித் தளம் ஒன்று அமைக்கப் பணி நடைபெற்று வருகிறது.

கடல் கொந்தளிப்பால் (சுனாமி) பாதிக்கப்பட்ட மக்களுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடை

* ரூ.5,31,57,000 நிதி திரட்டி சுனாமி கடல் கொந்தளிப்பு ஏற்பட்ட ஒன்பதாவது நாளான 4.1.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியாக அளிக்கப்பட்டது. இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்ல இரவு பகலாகப் பேருந்துகள் இயக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளூர் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதோடு மக்கள் தங்கியிருந்த முகாம்களைப் பார்வையிட்டு அவர்களின் தேவைக்கேற்ப கடலோரப் பகுதியிலுள்ள மக்களைக் கொண்டு செல்லவும் நிவாரணப் பணிகளை இலவசமாக மேற்கொள்ளவும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றதோடு அந்தமானிலிருந்து வந்த பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களுடைய சொந்த ஊருக்குப் பேருந்துகளில் இலவசமாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

போக்குவரத்துத்துறை, பயணிகளுக்கு நல்ல தரமான போக்குவரத்து வசதிகளைத் தொடர்ந்து அளிக்கும் பொருட்டு பல்வேறு தடங்கல் களுக்கிடையே சிறந்த முனைப்புடன் செயல்பட்டு அதன் செயல்திறனை நிரூபித்ததோடு 2003–04 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து நிலையான லாபம் ஈட்டியுள்ளன. *



திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

திட்டமிட்டுச் செயலாற்றும் நாடுதான் வளர்ச்சி யடையும். மாநில அரசினைப் பொறுத்தவரையில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்களையும் மற்றும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரித்து அதன் செயல்பாட்டைக் கண்காணித்து வருகின்றது. இதுதவிர, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணிப்பதுடன் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம், இராஷ்ட்ரிய சம் விகாஸ் யோஜனா ஆகியவற்றின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுகின்றது.

திட்டப்பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப்பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை மூலம் மதிப்பீடு செய்கின்றது. மேலும், பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலமாக புள்ளி விவரங்கள் சேகரித்து அவற்றை ஒருங்கிணைத்து வெளியிடுகின்றது.

இருபது அம்சத் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் கிராமோதயத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்து வருகின்றது.

* 2001 – 2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003 – 2004 ஆம் ஆண்டில் ரூபாய் 7,000 கோடியாக உயர்த்திப் பெறப்பட்டது. 2002 – 2003 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 5,750 கோடி என நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கு முழுமையாக எய்தப்பட்டது. 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 7,000 கோடி மற்றும் 2004 – 2005 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 8,001 கோடி என்ற திட்ட இலக்குகள் முழுவதுமாக எய்தப்பட்டன. 2005 – 2006 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூபாய் 9,100 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்

* மெரினா கடற்கரையினை அழகுபடுத்துதல், தரமான கட்டமைப்பு வசதிகளையும், சுகாதாரமான வாழ்க்கைச் சூழலையும் ஏற்படுத்துவது, சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, படிப்படியாக தரமான சாலைகளாக மாற்றிடும் வகையில், சென்னை மாநகருக்கு ஒட்டுமொத்தப் போக்குவரத்து மேலாண்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.
* ரூபாய் 18,000 கோடி முதலீட்டில் 10 ஆண்டு கால அளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 2003 → 2004 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் அதற்காக இலக்கிடப்பட்ட ஒதுக்கீடான ரூபாய் 1,780.95 கோடியை விடக் கூடுதலாக உள்ளது.

★ சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சாலைப் போக்குவரத்து, வடிகால் வசதிகள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், வீட்டு வசதி, குடிசை வாழ் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் மின்சக்தி வழங்குதல் போன்ற துறைகளில் 2004 – 2005 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை உயரளவாக ரூபாய் 2,010 கோடி எனவும் 2005 – 2006 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை ரூபாய் 2,054.09 கோடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டம்

★ இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா என்ற திட்டம் திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் மத்திய அரசின் திட்டக் குழுவின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.8,840 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ மண் வளப் பாதுகாப்புப் பணிகள் நான்காண்டுகளில் ரூ.1,446.71 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன.

★ தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகள் 2001 – 2002, 2002 – 2003 மற்றும் 2003 – 2004 ஆகிய ஆண்டுகளில் ரூ.886.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. 2004 – 2005இல் ரூ.315 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ கால்நடைகளைப் பராமரித்து பால்வளத்தைப் பெருக்கும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.187.14 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ சுற்றுச் சூழலை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்திடும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,407.08 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ சிறுபாசன முன்னேற்றப் பணிகள் 2001 – 2002, 2003 – 2004 மற்றும் 2004 – 2005 ஆகிய ஆண்டுகளில் ரூ.90.80 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ பட்டு வளர்ச்சியை அபிவிருத்தி செய்ய கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.18.86 இலட்சம் உதவித் தொகையாக 420 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

★ தேயிலை விவசாயம் செய்யும் சிறு குறு விவசாயிகளின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 2001 – 2002, 2002 – 2003 மற்றும் 2003 – 2004 ஆகிய ஆண்டுகளில் ரூ.60 இலட்சம் செலவில் 10 நலிந்த தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்பட்டன. 2004 –2005இல் ரூ.20 இலட்சத்தில் குந்தாவில் தேயிலை பயிரிடும் பகுதி மேம்படுத்தப்பட்டது.

★ 2001 முதல் 2005 வரையிலான நான்கு ஆண்டுகளில், ரூ.727.80 இலட்சம் செலவில் ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ சுற்றுலா வளர்ச்சிக்கு 2001ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை ரூ.216.25 இலட்சம் செலவிடப்பட்டு சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப் பட்டன. 2004–2005ஆம் ஆண்டில் ரூ.72.50 இலட்சம் மதிப்பில் உதகை படகு இல்லம் மேம்படுத்தப்பட்டது.

உள்ளாட்சி நிறுவனங்கள் மேம்பாட்டுப் பணிகள்

★ 2001 முதல் 2005ஆம் ஆண்டு வரை ரூ.925.41 இலட்சம் செலவில் உள்ளாட்சி நிறுவனங்கள் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நீர்வரத்துத் தலைவாயில் பணிகள்

★ ஒருங்கிணைந்த நீர்முகட்டு மேம்பாட்டு அடிப்படையில் நீர்வரத்துத் தலைவாயில் பணிகள் 2001 முதல் 2005 வரையிலான 4 ஆண்டுகளில் ரூ.464.23 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

தொலையுணர்வு ஆய்வுப் பணிகள்

★ தொலையுணர்வு ஆய்வுப் பணிகள் 2001 முதல் 2005 வரை ரூ.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரப் பணிகள்

★ பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் பணி மற்றும் மருத்துவ வசதிகளை அளிக்கும் பணிகள் 2001 முதல் 2005 வரை ரூ.284.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

மனித வள மேம்பாட்டுப் பணிகள்

★ பள்ளிகள் கட்டுதல், பள்ளிகளுக்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள், விளையாட்டு மைதானங்கள் செப்பனிடுதல் போன்ற மனித வள மேம்பாட்டுப் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.517.07 இலட்சம் செலவில் மேம்படுத்தப் பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் நலன்

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக 2001 முதல் 2005 வரை ரூ.425.56 இலட்சம் செலவிடப்பட்டு தொகுப்பு வீடுகள், தெருவிளக்கு வசதிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவை அமைத்துத் தரப்பட்டன.

ஊரக எரிசக்திப் பணிகள்

★ ஊரக எரிசக்திப் பணிகளுக்கு 2001 முதல் 2005 வரை ரூ.100.13 இலட்சம் செலவிடப்பட்டது. ★

விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வரும் வேளாண்மைத்துறை

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

– இது வள்ளுவர் வாக்கு

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

– என்றார் மகாகவி பாரதியார்

உழவுத் தொழிலே ஒரு நாட்டின் உயிர்நாடி போன்றது. 70 விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பியே வாழுகின்றனர். இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வேளாண் தொழிலுக்கான அனைத்து உதவிகளை வழங்கி ஒத்துழைப்பு நல்குவதே வேளாண்மைத் துறையின் பணியாகும். மாநிலத்தின் உணவு உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு பெற முதன்மைத்துறையான வேளாண்மைத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து ஊக்கமளித்து வருகிறார்கள்.

அரசின் சாதனைகள்

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

★ மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 2,40,000 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. 18,03,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட தரிசு நிலங்கள் பல்வேறு நீர்வடிப்பகுதி திட்டங்களின் கீழ் சீரமைக்கப்பட்டுள்ளன.

உணவு தானிய உற்பத்தியின் பெருக்கம்

★ 2001–2002ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 76.89 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவில் இருந்தது. 2002–2003 மற்றும் 2003–2004ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியால் உணவு தானிய உற்பத்தி குறைந்த நிலையில், 2004–2005ஆம் ஆண்டு பெறப்பட்ட மழை காரணமாக உணவு உற்பத்தி 90 இலட்சம் மெ.டன் என்ற அளவினைக் கடந்துள்ளது. இதில் 75 இலட்சம் மெ.டன் அரிசி உற்பத்தியும் அடங்கும்.

சிறுதானியப் பயிர்கள் சாகுபடி

★ குறைந்த நீரைக் கொண்டு பலன் தரும் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தின்கீழ் 2003–04 ஆம் ஆண்டு 9.03 இலட்சம் எக்டேரிலும், 2004–05 ஆம் ஆண்டு இதுவரை 12.12 இலட்சம் எக்டரிலும் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

செம்பான் சிலந்தி கட்டுப்படுத்தும் திட்டம்

★ செம்பான் சிலந்தியைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 2004–2005ஆம் ஆண்டில் ரூ.9.5 கோடி செலவில் 141.426 இலட்சம் மரங்களில் பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டு 67,620 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

பெண்பிள்ளைக்கு இலவச தென்னம்பிள்ளை வழங்கும் திட்டம்

★ உலகத் தென்னை தினத்தினை முன்னிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 2–9–2004க்குப் பிறகு பிறக்கும் கிராமப்புற பெண் குழந்தைகளுக்கு இரு தென்னம்பிள்ளைகள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, கிராமப் புறங்களில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு 31–3–2005 வரை 76,764 தென்னம்பிள்ளைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுப்பயிர்ச் சாகுபடித் திட்டம்

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாற்றுப்பயிர்ச் சாகுபடித் திட்டத்தின் கீழ், காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு பயிர்களில் அரசு விதைப் பண்ணைகளில் 1,500 ஏக்கர் பரப்பில் காட்டாமணக்குப் பயிரிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இயற்கைச் சீரழிவு நிவாரண நிதி

★ காவிரி ஆற்றுப்படுகை மாவட்டங்களில் பிப்ரவரி 2002இல் பெய்த பெருமழையால் நெல் மற்றும் பிற பயிர்களுக்கு ஏற்பட்ட பெருத்தச் சேதத்திற்கு விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.48.10 கோடி வழங்கப்பட்டது. 2004–2005ஆம் ஆண்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட

மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 2,73,742 விவசாயிகளுக்கு இயற்கைச் சீரழிவு நிவாரண நிதியிலிருந்து ரூ. 35.65 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டது.

★ இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி எனும் ஆழிப்பேரலை, 2004 டிசம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று தமிழகக் கடலோரப் பகுதிகளைத் தாக்கியதால், 8,460 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. இதற்கு நிவாரணமாக ரூ.1.80 கோடி வழங்கப்பட்டது. மேலும், நிலங்களைச் செம்மைப்படுத்த ரூ.16.96 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வீரிய ஒட்டு நெல் நிருபணத் திடல்கள்

★ 2001ஆம் ஆண்டு முதல் 2003-2004 வரை வீரிய ஒட்டு நெல் நிருபணத் திடல்கள் 7,761 இடங்களில் ரூ.88.32 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. 2004-2005ஆம் ஆண்டில் ரூ.31.67 இலட்சம் செலவில் 3,167 செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ 5 இலட்சம் உயிர் உரப் பொட்டலங்கள் 25 சதவிகித மானியத்தில் விநியோகிக்கப்பட்டன.

★ 20.73 இலட்சம் தரமான நெட்டை தென்னங் கன்றுகள் மற்றும் 14.38 இலட்சம் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் துறை மூலமாக உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

★ சிறுவிவசாயிகளுக்கு ரூ.1.92 கோடி மானிய செலவில் வேளாண் உதவி இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

★ ஒருங்கிணைந்த முறையில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், மண்வளம் காத்தல் மற்றும் மானாவாரி மற்றும் நிலமற்ற வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.51.47 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.

★ கடந்த நான்காண்டுகளில் ரூ.75.013 இலட்சம் செலவில் மக்காச்சோளம் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம், ரூ.4.89 கோடி செலவில் தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம், ரூ.23 கோடி மதிப்பில் எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் ஆகியன செயல்படுத்தப்பட்டன.

★ தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்தில் ரூ.10.36 கோடி செலவில் 1.14 இலட்சம் பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பேரியல் மேலாண்மைத் திட்டம்

★ பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், தானிய உற்பத்தித் திட்டம், கரும்பு உற்பத்தித் திட்டம், மானாவரி நீர்வடிப் பகுதி மேம்பாடுத் திட்டம் போன்ற திட்டங்கள் ரூ.83.71 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ கடந்த 4 ஆண்டுகளில் பசுந்தாள் உர விதைகள் 25 சதவிகித மானியத்தில் ரூ.84 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

பயறு கிராமத் திட்டம்

★ பயறுவகைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த ரூ.106.25 இலட்சம் செலவில் 17 மாவட்டங்களில் பயறு கிராமத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ தீவிர நெல் சாகுபடித் திட்டத்தின்கீழ், 2004-2005ஆம் ஆண்டு 5,804 செயல் விளக்கங்கள் ரூ.29.016 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2003-2005ஆம் ஆண்டுகளில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிருவாகம் மூலம் மண்வளத்தைக் காக்க ரூ.51.84 இலட்சம் செலவில் 16,200 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ விதைத் தரத்தை மேம்படுத்தவும் விவசாயிகளுக்குத் தரமான விதை வழங்கவும் ரூ.20.87 இலட்சம் செலவில் 9 விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்படுத்தப்பட்டன.

★ அனைத்து வேளாண் மற்றும் சகோதர துறையைச் சார்ந்த 1,400 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பில் தொழில்நுட்பப் பயிற்சி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அளிக்கப் பட்டது.

★ ராபிப் பருவ செயல் திட்டத்தின் கீழ் அனைத்துக் கிராமப்பஞ்சாயத்துகளிலும் 22,779 தீவிர முன்பருவ முகாம்கள் நடத்தப்பட்டு, 5,47,545 விவசாயிகள் பயனடைந்தனர்.

★ 2004-05 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்களை உரிய முறையில் பாதுகாக்க 100 விரிவாக்க மையங்கள் ரூ.107.23 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

★ நடப்பு ஆண்டு சுமார் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் விநியோகிக்கவும், 36,200 இலை வண்ண அட்டைகள் விநியோகிக்கவும், மண் வள வரைபடம் தயாரிக்கவும் ரூ.22.37 இலட்சம் செலவில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை

★ நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 2001 - 2002ஆம் ஆண்டில் ரூ. 547.25 இலட்சம் செலவில் குந்தா, கீழ்பவானி மற்றும் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 4,473 எக்டேர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டன. 2002 - 2003ஆம் ஆண்டில் ரூ. 521.26 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 3,058 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப் பட்டன. 2003 - 2004ஆம் ஆண்டில் ரூ. 614.19 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்திலுள்ள தென்பெண்ணை ஆறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் 3,812 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004-2005ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 5,965 எக்டேர் பரப்பில் ரூ.627.52 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

★ களர் நிலச் சீர்திருத்தத் திட்டத்தின்கீழ், களர் நில சீராக்கத் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி 2003-2004ஆம் ஆண்டில் 1,527 எக்டேர் பரப்பில் ரூ.19.28 இலட்சம் செலவில் களர் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன . 2004-2005ஆம் ஆண்டில் 1,529 எக்டேர் பரப்பில் களர் நில சீர்திருத்தப்பணிகள் ரூ.37.07 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் 47,934 எக்டேர் பரப்பில் ரூ.33.64 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தமிழக அரசின் மூலம் 2003-2004 மற்றும் 2004-2005ஆம் ஆண்டுகளில் ரூ.12.35 கோடி செலவில் பணிகள் செயல்படுத்தப் பட்டன.

வேளாண் இயந்திரங்கள்

★ 2002-2003 முதல் 2004-2005 வரை வேளாண் இயந்திரங்கள் உட்பட பல்வேறு கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.5.44 கோடி மானியமாகவும் வழங்கப்பட்டது.

★ 2001 முதல் 2005 வரையிலான நான்காண்டுகளில் ரூ.169.47 கோடி செலவில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளும் சுழற்சிமுறை நீர்ப்பாசனப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை பதிவு செய்யப்பட்ட 698 விவசாயிகள் குழுக்களில் (Farmers'Councils) 663 விவசாயிகள் குழுக்களுக்கு மார்ச் 2005 வரை மேலாண்மை மானியமாக ரூ.1,626.514 இலட்சம், உருவாக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது.

★ பண்ணைக்குட்டைகள் அமைத்தல் மற்றும் வறண்ட கிணறுகள் சீரமைத்தல் போன்ற மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ஜூலை 2002 முதல் மார்ச் 2004 முடிய 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.25.64 கோடி செலவில் அமைக்கப்பட்டன. மேலும் 2,093 வறண்ட கிணறுகளை ரூ.2.64 கோடி செலவில் புதுப்பித்து மழை நீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் திட்டத்தில், கடந்த நான்காண்டுகளில் ரூ.3.71 கோடி செலவில் 2,702 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

★ மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடந்த நான்காண்டுகளில், ரூ.13.41 கோடி செலவில் 8,650 எக்டேர் நிலப்பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல் படுத்தப்பட்டன.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மண்வளப்பாதுகாப்புப் பணிகள், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.13.97 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்

★ குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் புதிய குழாய் கிணறுகள் அமைத்தல், வடிமுனை குழாய் கிணறுகள் அமைத்தல் போன்ற 20,562 எண்ணிக்கையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ வேளாண்மைக்குப் பயன்படும் நீரேற்றுப் பம்புகளின் திறனை மேம்படுத்தும் திட்டமாக 2003-2004ஆம் ஆண்டில் தேனி, கோயம்புத்தூர், விழுப்புரம் மாவட்டங்களில் மூன்று மின்பிரிவுகள் பகுதிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டு, இதுவரை 34 விசை இறைப்பான்களின் உபயோகிக்கும் திறன் ரூ.11.12 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2004-2005ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 15,309 விசை இறைப்பான்களை மேம்படுத்தும் வகையில் ரூ.919.32 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

வேளாண்மைக் கல்வி

★ இளம் அறிவியல் பட்டப்படிப்பு பாடத்துடன் நடத்தப்படும் புதியதாக ஆற்றல் சுற்றுச்சூழல் பொறியியல் துறையில் தற்சார்பு இளநிலை பட்டப்படிப்புக் கல்வியில் 603 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் 289 நபர்கள் மாணவியர்கள் ஆவர். இக்கல்வியாண்டு முதல் முதறிவியல் பட்டப்படிப்பில் வேளாண்மை சார்ந்த வானிலையியல், வேளாண்மை உயிர்வேதியியல், உயிரியல் தொழில்நுட்ப தகவலியல் ஆகிய புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

★ திண்டிவனத்திலுள்ள எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்திருக்கும் முனைவர்.சி.சுப்பிரமணியம் வேளாண்மைக் கல்வி நிலையத்தில்; வேளாண்மையில் பட்டயப்படிப்பு தற்சார்பு முறையில் தொடங்கப்பட்டுள்ளது. இதில் 49 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

* இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் முழு நிதியுதவியுடன் தமிழகத்தில், திரூர்குப்பம், விரிஞ்சிபுரம், சிக்கல், நீடாமங்கலம், வம்பன், இராமநாதபுரம், பேச்சிப்பாறை, மதுரை, திண்டிவனம் ஆகிய ஒன்பது இடங்களில் புதிய வேளாண் அறிவியல் நிலையங்கள் 2004-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

வேளாண்மையில் தோட்டக்கலை ஒரு வளர்ச்சி அங்கமாக உருவாகி வருவதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, "தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்" ஏற்படுத்தியது.

வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

* தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்றுமதி வாய்ப்பைக் கருத்தில்கொண்டு 2002-2003ஆம் ஆண்டில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலங்கள் ஓசூர் மற்றும் நீலகிரியிலும் "மா"விற்காக ஒரு ஏற்றுமதி மண்டலம் தேனியிலும் (மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கியது) ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தமிழ்நாடு துல்லியப் பண்ணையம்

* வேளாண் சாகுபடி முறைகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இஸ்ரேல் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொழில் நுட்பங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு ரூ.720.60 இலட்சம் செலவில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் "தமிழ்நாடு துல்லியப் பண்ணையம்" என்னும் திட்டம் அரசால் ஏற்படுத்தப்பட்டு, முதலாமாண்டு இலக்கான 100 எக்டேர் 2004-05ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தினுடைய ஆக்கப்பூர்வமான வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு 2005-2006ஆம் ஆண்டில் மேலும், ஆறு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்காக அரசு ரூ.10 கோடி துல்லியப் பண்ணையத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

காட்டாமணக்கு மாதிரிப் பண்ணைகள் அமைத்தல்

* 11 அரசுத் தோட்டக் கலைப் பண்ணைகளில் 500 ஏக்கரில் காட்டாமணக்கு மாதிரிப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
* 2003-04 மற்றும் 2004-05ஆம் ஆண்டுகளில், நீலகிரி மாவட்டத்தில் தேயிலையுடன் மாற்றுப் பயிர்த் திட்டம் ரூ.100 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப் பட்டது.
* ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்லாண்டுப் பழவகைப் பயிர்களைப் பயிரிடத் திட்டமிடப்பட்டு, ஒரு பழங்குடி விவசாயிக்கு அதிகபட்சமாக 0.40 எக்டர் பரப்பிற்குத் தரமான நடவுச் செடிகளை 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படுகிறது.
* மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையம், குடுமியான்மலை தோட்டக்கலைப் பயிற்சி மையம், "பெரியகுளம்" தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை மேம்படுத்திட தலா ரூ.5 இலட்சம் உதவி நிதியாக வழங்கப்படுகிறது.
* தோட்டக்கலை பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு முழு உதவித்தொகையாக ரூ.5,000க்கு மிகாமல் கல்வி நிறுவனங்களில் மாதிரித் தோட்டக்கலை தோட்டங்கள் அமைக்கப்படுகிறது.
* கடந்த நான்காண்டுகளில் தோட்டக்கலை வளர்ச்சிக்காக மாநிலத் திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ.38.40 கோடியும், மத்திய மாநில அரசுகள் பங்குபெறும் திட்டங்களின்கீழ் ரூ.49 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

விதை சான்றளிப்புத் துறை

* விதை உற்பத்திப் பெருக்கம் 2001-2002 ஆண்டில் 43,216 மெட்ரிக் டன்களாகவும், 2002-2003 ஆண்டில் 41,325 மெட்ரிக் டன்களாகவும், 2003-2004 ஆண்டில் 41,331 மெட்ரிக் டன்களாகவும், 2004-05 ஆண்டில் 48,269 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்தது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

* ஓசூர் டான்ஃப்ளோரா மலர் ஏற்றுமதி மண்டலத் திலிருந்து தற்போது ரூ.10.80 கோடி மதிப்புடைய 400 மெட்ரிக் டன் கொய்மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
* கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது.
* திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் 100 ஏக்கர் பரப்பளவில் உணவுப்பூங்கா அமைக்கப்படவுள்ளது.
* ஈரோட்டில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.
* பருத்தி தொழில்நுட்பக் குழுமம் உதவியுடன் ரூ.919 இலட்சம் செலவில் விழுப்புரம், திருப்பூர், அன்னூர் மற்றும் மூலனூர் ஆகிய நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி விற்பனைக்கென சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
* ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வெல்லத்திற்கென நவீன உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.101.60 இலட்சம் செலவில் ஏற்படுத்தப் படவுள்ளது.

* * *

செய்தி மற்றும் சுற்றுலாத்துறை

மக்களாட்சி முறையை முழுமையாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற அரசியல் அமைப்பில், அரசின் அன்றாடச் செயல்பாடுகள் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பது அரசின் கடமையாகும். அரசின் கொள்கைகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி அரசு அளித்து வரும் சலுகைகள் போன்றவற்றை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயனுள்ளதாக்கிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத்துறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. அரசுக்கும், மக்களுக்கும் ஒரு பாலமாகச் செய்தி - மக்கள் தொடர்புத்துறை சிறப்பான முறையில் பணியை ஆற்றி வருகின்றது.

அரசின் சாதனைகள்

பத்திரிகையாளர்கள் நலன்

* பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற ஓய்வூதியம் 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூ.2,000/-லிருந்து ரூ.3,000/- ஆக உயர்த்தப்பட்டு 67 பத்திரிகை யாளர்கள் பயனடைகின்றனர்.
* பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் ரூ.500லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
* அங்கீகாரம் அல்லது அடையாள அட்டைகள் பெற்று 20ஆண்டுகள் அல்லது அதற்குமேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், மற்றும் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் இவர்களில் பணியிலிருக்கும் போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவித்திட்டத்தின் மூலம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி 2001 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/- லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப் பட்டு, இதுவரையில் இத்தகு இயற்கை எய்திய 3 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* சென்னை மற்றும் மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் உட்பட 1,032 பத்திரிகை யாளர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
* காஞ்சிபுரம், இராமநாதபுரம், மதுரை, தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 238 பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

நினைவகங்கள்

நாட்டிற்காக உழைத்த தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் சான்றோர்களின் நினைவினை, எதிர்கால சந்ததியினர் அறிந்திடும் வகையிலும், அவர்தம் நினைவைப் போற்றிடும் வகையிலும் அரசின் சார்பில் மணிமண்டபங்கள், நினைவு மண்டபங்கள் அமைத்துச் சிறப்பு செய்யப்படுகிறது. மேலும் அவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நினைவுநாள் விழாக்கள் அரசின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள நினைவகங்கள் மற்றும் மணிமண்டபங்கள் பின்வருமாறு:

* **கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார்** அவர்களுடைய நினைவாக, திருநெல்வேலியில் ரூ. 75 இலட்சம் செலவில் **மணிமண்டபம்** கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
* **நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவாக**, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் மூலமாக நினைவு மண்டபம் அமைப்பதற்கென, அடையாறு ஆந்திர மகிளசபா அருகில் ரூ.10 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலான 0.65 ஏக்கர் அரசு மனையிடம் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு இலவசமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* தமிழகத்தின் முன்னாள் **முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்** அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில் 0.46.5 எக்டேர்நிலம் ரூ.43,500 செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மணிமண்டபம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.
* கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளிக்கு அருகிலுள்ள மோர்னப்பள்ளியில் **மூதறிஞர் இராஜாஜி** அவர்களுக்கு **மணிமண்டபம்** அமைத்திட 1.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
* ஈரோடு மாவட்டம் அரச்சலூர் கிராமம் ஓடாநிலையில் **தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம்** அமைக்க 3.05.0 எக்டேர் தனியார் நிலம் ரூ.19.67 இலட்சம் செலவில் அரசின் சார்பில் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இங்கு ரூ.30 இலட்சத்தில் மணி மண்டபமும், ரூ.20 இலட்சத்தில் சமுதாயக் கூடமும் உருவாக்கிடும் வகையில், அரசின் சார்பில் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப்பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

* தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில், **அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம்** அமைத்திடும் வகையில், 0.81.0 எக்டேர் நிலம் ரூ.1,28,253 செலவில் கையகப்படுத்தப்பட்டு, அவற்றை உருவாக்குவதற்கான ரூ.112 இலட்சம் மதிப்பீட்டிலான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாகப் **பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊரான விருதுநகரில்** நகராட்சி தங்கும் விடுதி வளாகத்தில் **ரூ.5 இலட்சத்தில் நினைவுத்தூணும், ரூ.9 இலட்சத்தில்** மணிமண்டபமும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

* திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாவினையொட்டி, திருப்பூர் குமரன் நினைவகத்தில் அவரது **மார்பளவு வெண்கலச் சிலை** நிறுவப்பட்டுள்ளது. மேலும் திருப்பூர் குமரன் நூற்றாண்டு நினைவாகத் தபால் தலை வெளியிடப்பட்டது.

* சென்னை மெரினா கடற்கரையில் உள்ள **பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில், டாக்டர் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்** ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

* முன்னாள் குடியரசுத் தலைவர் **டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன், தந்தை பெரியார்** ஆகியோரின் 9 அடி உயர வெண்கலச்சிலைகள், ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு, புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்படவுள்ளன.

* ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் 28 நினைவகங்களில் தொடர்புடைய தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கிரானைட் கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

* **தியாகி செண்பகராமன்** அவர்களின் முழுவுருவச் சிலை சென்னை, கிண்டியிலுள்ள காந்திமண்டப வளாகத்தில் நிறுவப்படவுள்ளது.

* செஞ்சிக்கோட்டை அரசன் **தேசிங்கு ராஜன்** உயிர்நீத்த இடமான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள கடலி கிராமத்தில் நினைவகம் கட்டப்படும்.

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவுச்சின்னம், நினைவு மண்டபம்** அரசு சார்பில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் சார்பில் இதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் 10–3–2005 அன்று **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள்** கடைசி காலத்தில் வாழ்ந்த மதுரை – திருநகர் இல்லம் **பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவில்லமாக அரசின்** சார்பில் உருவாக்கப் படுமென்று அறிவிக்கப்பட்டு, இதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* **வீரன் சுந்தரலிங்கம், வீரபாண்டிய கட்ட பொம்மனுடன் போர்ப்படைத் தளபதியாக விடுதலைப்போரில் உடன் இருந்த வெள்ளையத் தேவன், மொழிவளர்ச்சிக்காகப் பாடுபட்ட தேவநேயப் பாவாணர்** ஆகியோர்களின் நினைவைப் போற்றிடும் வகையில் அரசின் சார்பில் மணிமண்டபங்கள் அமைக்கப்படுவதற்கான கருத்துருக்கள் ஆய்வில் உள்ளன.

திரைப்பட விருது வழங்கும் விழா

* 2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுக்கான திரைப்படத்துறையினருக்கான விருதுகளை 3.12.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 134 திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்கி, சிறப்புச் செய்தார்கள்.
* திரைப்பட விருது வழங்கும் திட்டத்தின் கீழ் புதிய விருதுகள் தோற்றுவித்துச் சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர் மற்றும் சிறந்த குணச்சித்திர நடிகை ஆகியோருக்கு விருதுகள் 2002ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.
* 1.10.2004 முதல் அரசு இடங்களிலும் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களிலும் படப்பிடிப்பு நடத்தப்படும் படப்பிடிப்புகளுக்கான கட்டணம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அரசுமானியம்

* குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.5 இலட்சமாக இருந்த மானியத்தொகையை 2003 ஆம் ஆண்டு முதல் ரூ.7 இலட்சமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

* 2001–2002ஆம் ஆண்டு கல்வி ஆண்டு முதல் ஒவ்வொருப் பட்டயப் படிப்பிற்கு அனுமதிக்கப் பட்டிருந்த 12 இருக்கைகள் 14ஆக அதிகரிக்கப் பட்டன.
* இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் 5 பட்டயப் படிப்புகளுக்கும், புதுடெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.
* 11.5.2005 முதல் 22.5.2005 வரை பாரிஸ் நகரில் நடைபெற்ற CANNES FILM FESTIVALக்கு இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 4 பட்டயப் படங்கள் திரையிடப்பட்டன.
* 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஜெர்மனியில் நடைபெறவுள்ள பாலிவுட் அண்ட் பிளாண்ட் என்கிற திரைப்பட விழாவில் கலந்து கொள்வதற்காக இந்நிறுவன மாணவர்களின் 6 பட்டயப் படங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.



மாணவர்களுக்கு நவீனத்தொழில்நுட்ப அடிப் படையில் பயிற்சி அளித்திடும் வகையில், ரூ.11 இலட்சத்தில் இன்டர்நெட் வசதியுடன் கணினிகள் வாங்கப்பட்டுள்ளன. திரைத்துறைத் தொடர்பான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.61.45 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளன.

தமிழரசு

தமிழக அரசின் செயல்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் ஊடகம் 'தமிழரசு' இதழ்.

அரசின் சாதனைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள், அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், அறிவிப்புகள், மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், திட்டங்கள், செயல்பாடுகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள், இலக்கியம், மருத்துவம் போன்ற பொதுக்கட்டுரைகள் மற்றும் பிறமொழிக் கதைகள் போன்றவை தமிழரசு இதழில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

2001 ஏப்ரல் வரையில் மொத்தம் 48,000ஆக இருந்த தமிழரசு தமிழ் இதழின் சந்தாக்கள், தற்பொழுது 75,638ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு 1,131ஆக இருந்த ஆயுள் சந்தாக்கள், தற்பொழுது 42,712ஆக உயர்த்தப்பட்டு, இதன் மூலம் 4 கோடியே 27 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அரசுக்கு வருவாயாக ஈட்டப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

பொருட்காட்சி

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த உரிய விளக்கங்களைப் பொது மக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் ஏப்ரல் – ஜூன் மாதங்களிலும், சேலத்தில் ஜூலை – செப்டம்பர் மாதங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப் படுகின்றன.

பொருட்காட்சிகளில், அரசுத்துறைகள், அரசுச் சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கேற்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்கு பொழுதுபோக்காக அமைவதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பையும் அளித்து வருகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளின் மூலம் ரூ.4,35,56,000 இலாபம் அரசுக்கு வரப்பெற்றுள்ளது. சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் குடியரசு தினவிழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். ★

சுற்றுலாத்துறை

தமிழகத்தில் சுற்றுலாத்துறை தமிழகப் பொருளாதார மற்றும் மக்களின் பண்பாடு, வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த ஒரு முக்கியப் பங்காற்றி வருகிறது. இத்துறையால் அயல்நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டின் பாரம்பரியமிக்க கோயில் தலங்கள், அருவிகள், பூங்காக்கள், பொங்கல் திருநாள் போன்ற கலாச்சார விழாக்களில் கலந்துகொள்ள ஏதுவாக இத்துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இத்துறை மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதனால் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டின் சொகுசு வரி மற்றும் அயல்நாட்டுச் செலாவணி அதிகரிக்க வழிவகுக்கப்பட்டு வருகிறது. அரசு இத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுலாவை மேம்படுத்தி வருகிறது என்பது மிகையாகாது.

ஆசியாவின் சிறந்த நுழைவு வாயில்

ஆசியாவின் வளர்ச்சிக்கோட்டில் சிறந்த இடத்தில் தமிழ்நாடு உள்ளதால், ஆசியாவின் **இந்திய நுழைவாயிலாகத்** தமிழ்நாடு கருதப்படுகிறது.

சுற்றுலாத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு

* கடந்த 4 ஆண்டுகளில் சுற்றுலாத்துறைக்கு ரூ.107.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் தமிழக சுற்றுலாத்துறை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.
* தமிழகத்தில் ஓட்டல்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 2002–2003இல் குறைக்கப்பட்டுள்ளது.
* ரூ.19 கோடி திட்ட மதிப்பீட்டில் 8.1.2003 அன்று மாமல்லபுர வளர்ச்சிப் பணிகள் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
* கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 சுற்றுலாத் தகவல் மையங்கள் அகமதாபாத், சண்டிகர், கவ்காத்தி, வாரணாசி, புவனேஸ்வர் மற்றும் ஆக்ரா, ஜெய்ப்பூரில் சுற்றுலா அலுவலகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
* சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிக்காக வேலையில்லா பட்டதாரிகளைத் தேர்வு செய்து 90 பேருக்கு சென்னை, மதுரை, ஊட்டி போன்ற மையங்களில் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிகள் ரூ.5 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டன.



★ ஆதிசங்கரர் மற்றும் விவேகானந்தா சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுப்பணிகளுக்கு ரூ.427.64 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சுகாதார மற்றும் மனவளச் சுற்றுலாவுக்கு உகந்த முன்னணி இடமாகத் தமிழக சுற்றுலாத்துறை விளங்குகிறது.

கிராமியச் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

கழுகுமலை மேம்பாட்டிற்கு : ரூ.48.68 இலட்சம்
செட்டிநாடு மேம்பாட்டிற்கு : ரூ.50.00 இலட்சம்
தீர்த்தமலை மேம்பாட்டிற்கு : ரூ.50.00 இலட்சம்
நிதிஒதுக்கீடு செய்துள்ளது.

★ நவகிரகத் தலங்கள், செட்டிநாடு, பழவேற்காடு, பிச்சாவரம் மற்றும் தரங்கம்பாடி உள்ளிட்ட புராதனப் பெருமை கொண்ட இடங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் சுற்றுலாத்தலங்களை சுற்றுலாத் துறை மேம்படுத்தியுள்ளது.

★ மதுரை திருமலைநாயக்கர் மகாலிலுள்ள ஒலி–ஒளிக் காட்சி ரூ.96.18 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

★ கன்னியாகுமரியில் படகு குழாம் பகுதியில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்க மைய அரசு ரூ.225 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஸ்கால் மாநாடு

64ஆவது ஸ்கால் மாநாடு 2003ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 முதல் 24 வரை சென்னையில் நடைபெற்றது. ஸ்கால் மாநாட்டில் 700 முக்கியப் பிரமுகர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து பங்கேற்றனர். மாண்புமிகு முதலமைச்சர் இம்மாநாட்டில் பங்கேற்று சிறப்புச் செய்தார்கள். சென்னையில் நடத்தப்பட்ட இம்மாநாட்டிற்கு மத்திய அரசு விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. 2003ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளதால், தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் இரண்டாம் மாநிலமாகத் திகழ்கிறது.

சுனாமி 2004

சுனாமி தாக்கியவுடன் சுற்றுலாத்துறை நிவாரணப் பணிகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டது. இந்தியாவின் பிற பகுதிகள்/வெளிநாடுகளில் வசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் உறவினர்களுக்குத் தகவல் அளிக்க ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டார். சுனாமிக்குப் பின் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளைப் பற்றிய தகவல்கள் வலைதளம் மூலம் வழங்கப்பட்டன.

சுற்றுலாத் துறைக்கு விருது

தமிழ்நாடு சுற்றுலாத்துறை "ட்டி 3" அமேடியஸ் விருது, கலிலியோ எக்ஸ்பிரஸ் பயணம் மற்றும் சுற்றுலா விருது, பாட்வா சர்வதேச விருது போன்ற தேசிய மற்றும் உலக அளவில் பல பெருமைக்குரிய பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளது.

கப்பல் சுற்றுலா

கப்பல் வழிச் சுற்றுலாவை ஈர்ப்பதில் தமிழக சுற்றுலாத்துறை பெரும் பங்கு வகிக்கிறது. கப்பல் வழி சுற்றுலாப் பயணிகளைச் சென்னை மாநகர், மாமல்லபுரம், காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலா வலைதளம்

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்கள், விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் உணவகங்கள், தங்கும் விடுதிகள் பற்றிய விரிவான விளக்கங்களை உலகில் எந்தவொரு மூலையில் இருக்கும் சுற்றுலாப் பயணியும் எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம் ஒரு சுற்றுலா வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இணையத்தள (Online Reservation) முன் பதிவு வசதி 2-7-2004 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மார்ச் 2005 வரை ரூ.14.13 இலட்சம் வரை வருமானம் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

இரயில் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இரயில் சுற்றுலாவைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கொல்கத்தா, மும்பை, டில்லி, அகமதாபாத், லக்னோவிலிருந்து இரயில் சுற்றுலாவை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் மூலம் ரூ.127 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. சுற்றுலா மேம்பாட்டிற்காக இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மற்றும் இதர மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது.

கம்பி வழிப் பயணம் (Rope Car)

அதிக வருவாய் ஈட்டக்கூடியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், மைய அரசும் இணைந்து கம்பி வழிப் பயணத்திற்காக 2003–2004 நிதியாண்டில் கொடைக்கானலுக்கு ரூ.1,452 இலட்சமும், உதகமண்டலத்திற்கு ரூ.1,597 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்காடு மற்றும் கன்னியா குமரியிலும் இதனை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த நான்காண்டுகளில் ரூ.616.01 இலட்சம் இலாபம் ஈட்டி சிறப்புடன் செயல்படுகிறது. ★

பொருளாதாரப் புரட்சிக் காணும் கூட்டுறவுத்துறை

"கூட்டுறவே நாட்டுயர்வு"

– என்ற தத்துவத்தை நிலைநாட்டிடும்வகையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்த் துறையில் கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய அங்கமாகவும், மாநில ஊரகக் கடன் வசதித் திட்டத்தின் முதுகெலும்பாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டு காலமாக பொதுமக்களுக்கு வேண்டிய அரிசி மற்றும் இன்றியமையாப் பொருள்கள் பொது விநியோகத் துறையின் மூலம் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு அரசின் தளராத முயற்சியால் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆக்கப்பூர்வமானப் பணிகளை நாட்டு மக்களுக்குச் செய்து வருகிறது.

விவசாயிகளுக்கான வட்டி தள்ளுபடி

★ விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடித் திட்டம் 2001ன் கீழ் விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 6,11,193 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

★ 2002–2003ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாகவும், வேளாண் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்புக் காரணமாகவும் 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க்கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு தன் பங்காக ரூ. 20 கோடிக்கு ஒப்புதல் அளித்தது.

★ 2002–03ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியின் காரணமாக ஏற்பட்ட இன்னல்களைத் தீர்க்கும் வகையில் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களின் மீதான வட்டியை அரசு தள்ளுபடி செய்தது. இந்நோக்கத்திற்காக அரசு ரூ. 61.05 கோடி ஒப்பளிப்புச் செய்தது. இத்திட்டத்தின் கீழ் 1,67,000 விவசாயிகள் பயனடைந்தனர்.

★ 2003–04ஆம் ஆண்டில் விவசாயிகளால் செலுத்தப் படவேண்டிய பயிர்க்கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை ரூ. 62 கோடி அளவிற்கு அரசு தள்ளுபடி செய்தது. இத்திட்டத்தின் கீழ் 2,43,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

★ நீலகிரி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தியாளர்கள் பெற்ற கடன்கள் மீதான தவணை கடந்த வட்டி, தள்ளுபடி செய்ய ரூ.1.80 கோடி அரசால் அனுமதியளிக்கப்பட்டது.

★ 1999ஆம் ஆண்டுக்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன் மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களில், 31.3.2004 அன்று நிலுவையில் இருந்த கடன்கள் மீண்டும் ஒரு தொகுப்புக் கடனாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்காக அரசால் ரூ.68.95 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழக அரசுதான் 31.3.2004 அன்று நிலுவையிலிருந்த பயிர்க்கடன் மற்றும் அதன்மீதான வட்டியை, 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றியமைத்து (Reschedulement) அதில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு கடனைக் கட்ட வேண்டியதில்லை என்றும், அடுத்த மூன்று ஆண்டுகளில் அக்கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 31.3.2005 அன்றுள்ளபடி ரூ. 1,556.83 கோடி அளவிற்கு 7,65,607 விவசாயிகளின் கடன்கள் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

பயிர்க்கடனுக்கான வட்டி விகிதம் குறைப்பு

★ விவசாயிகள், தற்போது நிலவிவரும் வட்டி விகிதத்தில் கடன் பெறுவதை உறுதி செய்வதற்காகப் பயிர்க்கடனுக்கான வட்டி விகிதம் 12% லிருந்து

9% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழக அரசுதான் பயிர்க்கடன் மீதான வட்டியை இந்த அளவிற்குக் குறைத்தது.

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன்

★ 2004-2005ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் 1,037 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கவேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட குறியீடு அளவைவிட அதிக அளவில் 5,29,446 விவசாயிகளுக்கு ரூ.1,080.58 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கடன் தீர்வுத் திட்டம்

★ நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், நீண்டகாலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலித்திட வழிவகுத்திடவும் ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம் (One Time Settlement Scheme) என்ற திட்டத்தை அரசு அறிவித்தது. இதுவரை 32,008 நபர்கள் ரூ.42.47 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளனர்.

★ சிறு தேயிலை பயிரிடுவோர்களின் துயர் துடைக்கும் நோக்கத்துடன், இன்கோசர்வ் நிறுவனம் பதப்படுத்திய தேயிலைத் தூளைப் பொது விநியோக நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தின்கீழ் இதுகாறும் 9,545 மெ.டன் ஊட்டி டீத்தூள் 85.91 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

காதிப் பொருட்கள் விற்பனை

★ கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை செய்யும் திட்டத்தில் இதுவரை 65,724 மெட்ரிக் டன் உப்பு 16.43 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் காதிப்பொருட்கள் விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 4.79 கோடி ரூபாய்க்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன்கள்

★ கூட்டுறவு வங்கிகளால் பல்வேறு நோக்கங்களுக்காக 2001-02 முதல் 2004-05 வரை வழங்கப்பட்டுள்ள குறுகிய கால விவசாயக் கடன், மத்திய காலக்கடன், நீண்டகால விவசாயக் கடன், நகைக்கடன், பண்ணைசாரா கடன், வேளாண்மை உற்பத்தி ஈட்டுக்கடன், தொழில் கடன், வீட்டுவசதிக் கடன் மூலம் வழங்கப்பட்ட தொகை ரூ.24,858.02 கோடி ஆகும்.

கூட்டுறவு வங்கிகளில் மகளிர்க்கு வழங்கப்பட்ட கடன்

★ கூட்டுறவு வங்கிகளின் பெண் அங்கத்தினர்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.379.37 கோடி. பயனடைந்தோர் எண்ணிக்கை 2,76,489 பேர்.

தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம்

★ தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கடன்தாரர்களுக்கு மாநில அரசின் பங்கு ரூ. 26.68 கோடியையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ரூ.60.03 கோடி அளவிற்கு 1,50,355 நபர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலப் பண்ணைக் கடன் பெற்றோருக்கு வட்டியில் சலுகை

★ சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்றுள்ள அபராத வட்டி 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி, கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் பயனாக 145.90 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு மாநிலத்திலுள்ள 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறுவர்.

★ நீண்ட காலப் பண்ணைக் கடன் பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையிலுள்ள அசல், வட்டி மற்றும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவிகிதம் செலுத்துவோருக்கு, 31.3.2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதிவரைக்கான வட்டியில் 50 சதவிகிதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம்

92.12 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். 57,430 விவசாயிகள் பயன் பெறுவர்.

இதர பண்ணைசாரா கடன்தாரர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 31.3.2003 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையில் உள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31.3.2003 அன்று நிலுவையில் உள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி, மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் 42.28 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு 17,990 கடனாளிகள் பயன் பெறுவர்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 31.3.2004 அன்றைய தேதியில், 356.01 கோடி ரூபாய் அளவுக்கு நடுத்தரக் காலப் பண்ணைக் கடன் நிலுவையில் உள்ளது. விவசாயிகள் இக்கடன்களைச் சுலபமாகத் திருப்பிச் செலுத்துவதற்காக, இந்தக் கடனையும் நபார்டு வங்கியின் வழிமுறையின்படி முதல் 2 ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளித்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடனாக மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நகர கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற தங்களது பழைய கடன்களுக்கு தற்போதைய நடப்பு வட்டி வீதத்திலேயே 1.4.2001 முதல் வட்டி வீதத்தை முன்தேதியிட்டு குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இச்சலுகையினைப் பெறுவதற்கு கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையில் 25% தொகையை ஆணை பிறப்பிக்கப் பட்ட மூன்று மாதங்களுக்குள் செலுத்தி மீதித் தொகையை அடுத்த ஆறு மாதங்களில் செலுத்திட வேண்டும். இத்திட்டம் நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களுக்கும் பொருந்தும்.

சோதனைச் சாவடி நீக்கம்

★ கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருந்து வந்த நெல் மற்றும் அரிசி லெவி முறையை (100% Levy system) மாற்றி சோதனைச் சாவடிகளை அகற்றியது இந்த அரசின் மாபெரும் சாதனையாகும்.

மண்ணெண்ணெய் விலை சீரமைப்பு

★ மைய அரசின் விலை நிர்ணயப்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால் இவ்வரசு 9.3.2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

அரிசி ஒரு கிலோ ரூ.3.50

★ பல மாநிலங்களில், ஏழை எளியோருக்கு ஒரு கிலோ ரூ.6 என்ற அடிப்படையிலும் மற்றவர்களுக்கு ரூ.8 முதல் ரூ.9 என்ற விலையில் அரிசி வழங்கப்படுகிறது. இந்த அரசு கடுமையான நிதிப்பற்றாக் குறையை எதிர்கொண்டு வந்தபோதும் பாகுபாடின்றி அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிய அளவு அரிசியைக் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற ஒரே விலையில் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.5.2004 அன்று அறிவித்துள்ளபடி, இதுவரை குடும்ப அட்டை பெறாமல் விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்கும் வகையில் மாநிலம் முழுவதும் 49,31,757 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்கள் அனைத்தும் விசாரணை செய்யப்பட்டு அதில் 37,70,446 விண்ணப்பதாரர்கள் குடும்ப அட்டை பெற தகுதி உள்ளவர்கள் என்று கண்டறியப்பட்டுக் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

உலக நுகர்வோர் உரிமை தினம்

★ ஆண்டு தோறும் மார்ச் 15ஆம் நாள், உலக நுகர்வோர் உரிமை தினமாக, மாநில அளவில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ★

மகளிர் நலன் காக்கும் சமூகநலத் துறை

ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அந்நாட்டின், மனிதவளம், சமூகநலம் மற்றும் பொருளாதார வளர்ச்சியையொட்டியே அமைந்துள்ளது. சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வரும் சமூக நலத் துறையின் கீழ் குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் நலத்திற்கும் பல்வேறு உன்னதத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் , தொட்டில் குழந்தைத் திட்டம், மகளிர் விடுதிகள், தொண்டு நிறுவனங்கள், ஆதரவற்றோருக்கான இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல், ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு நலத்திட்டங்கள், கர்ப்பிணி மகளிர், பாலூட்டும் தாய்மார்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கான சத்துணவுத் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்டப் பணிகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை மூலம் கடந்த நான்காண்டுகளாகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் சுயஉதவிக் குழு

★ இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், தமிழகத்தில் 19,79,494 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 1,20,005 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இம் மகளிர் குழு உறுப்பினர்கள் ரூ.560 கோடியைச் சேமித்துள்ளனர். மகளிர் சுயதொழில் தொடங்கும் வகையில் அவர்களுக்கு ரூ.863.51 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



புது வாழ்வுத் திட்டம்

★ தமிழகத்தில் வறுமையைக் குறைக்கவும், பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர்களை ஆற்றல்படுத்தவும் ரூ.717 கோடி மதிப்பீட்டில் இந்த "புது வாழ்வுத் திட்டம்" நடப்பாண்டில் தொடங்கப்பட உள்ளது.

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

★ பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.75.48 கோடி செலவில், 49,489 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

திருமண நிதியுதவித் திட்டங்கள்

★ 12,562 மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.16.50 கோடி திருமண நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ.573.4 இலட்சம் செலவில் 6,562 பேர் பயனடைந்துள்ளனர்.

இலவச தையல் இயந்திரங்கள்

★ ரூ.5.76 கோடி செலவில் 29,299 பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொட்டில் குழந்தைகள் திட்டம்

★ தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் கீழ், 188 இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டு ரூ.20.48 இலட்சம் செலவிடப்பட்டது.

சுனாமிப் பேரலை – ஆதரவற்ற குழந்தைகளுக்கு எதிர்கால வைப்புநிதி

★ சுனாமிப் பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோர்களை இழந்த வளர்இளம் பெண்கள் ஆகியோர் மறுவாழ்வுக்காக, ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் புதிய சேவை இல்லங்கள் ரூ.89.50 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளர்இளம் பெண்கள் ஆகியோரின் எதிர்கால மறுவாழ்விற்காகத் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூகப்பாதுகாப்பு நலநிதித் திட்டம்

★ தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு நலநிதித் திட்டத்தின்கீழ் ரூ.7,65,000 மதிப்பில், பாதிக்கப்பட்ட 153 மகளிர் பயனடைந்துள்ளனர்.

உடல் ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறு நிதியுதவிகள்

★ 23 அரசுச் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 2,230 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.24.32 கோடி செலவில் சிறப்புக் கல்வி, இலவசத் தங்கும் வசதி, உணவு, சீருடைகள் மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஆண்டொன்றிற்கு 15,971 உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியர்க்கு ரூ.4.28 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்திற்கு அதிக விருதுகள்

★ **மத்திய அரசின் சமூக நீதி மேம்பாட்டுத்துறை, ஊனமுற்றோருக்காக வழங்கிய 70 விருதுகளில் தமிழகம் 14 விருதுகளைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது.**

★ ஊனமுற்றோருக்குச் சேவை ஆற்றுவதில் அகில இந்திய அளவில் சிறந்த மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தேசிய விருது கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

★ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 3 புதிய திட்டப் பகுதிகளும், 12,852 புதிதாக மையங்களும் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 434 திட்டப் பகுதிகளில் 42,677 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன.

அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்ப்பு

★ 10,000 அங்கன்வாடி மையங்கள் ரூ.7 கோடி செலவில் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 82 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.1,02,50,000 செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

வளர்இளம் பெண்கள் மேம்பாட்டுத்திட்டம்

★ வளர்இளம் பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சிகள் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்பட்டன. 6,23,000 வளர்இளம் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

இலவச முட்டைகள் வழங்கல்

★ சத்துணவு சாப்பிடும் 68.28 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ. 39 கோடி செலவில் இலவசமாக முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ரூ.25.10 கோடி செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

★ "ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குவோம்" என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கேற்ப ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி குறித்த விழிப்புணர்வுப் பிரசாரம் தகவல் தொடர்புப் பணிகள் மூலம் 2001 முதல் மார்ச் 2005 வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

★ சுனாமிப் பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.8.18 இலட்சம் மதிப்புள்ள 39.650 மெட்ரிக் டன் இணை உணவு பயனாளிகளுக்கு கூடுதலாக வழங்கப்பட்டது.

★ அங்கன்வாடி மையங்களின் மூலமாக, 6,71,548 குழந்தைகளுக்கு இணை உணவும், 10,39,767 குழந்தைகளுக்கு சத்துணவும், 5,09,896 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவும், 44,403 முதியோர் உதவித் தொகை பெறுவோர்க்கு சத்துணவும் வழங்கப்படுகிறது.

★ 61,57,528 மாணவ மாணவியர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்துணவு

★ குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்துக் குறைபாட்டை நீக்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவுடன் 6 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு வட்டாரங்களில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறிகளுடன் முருங்கைக் கீரைப் பொடி அல்லது கறிவேப்பிலைப் பொடி சமையலுக்கு சேர்த்து வழங்கப்படுகிறது. இதன் மூலம் 35,000 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் நடப்பாண்டில் விரிவுபடுத்தப்படுகிறது.

★ சத்துணவுடன் வாரம் ஒருமுறை அதாவது திங்கட்கிழமை பயனாளி ஒருவருக்கு 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு மற்றும் வெள்ளிக் கிழமையன்று 20 கிராம் பச்சைப்பயிறு அல்லது 20 கிராம் கருப்புக் கொண்டைக்கடலை வேகவைத்து வழங்கப்படுகிறது.

★ கடந்த நான்காண்டுகளில் சத்துணவு மற்றும் அங்கன்வாடியில் உணவருந்தும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவதற்கு ரூ. 4 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் சத்துணவு மையங்களில் சமைப்பதற்கு உதவும் பழைய அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்க ரூ.2 கோடி செலவிடப் பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் சத்துணவு மையங்களைச் செப்பனிட ரூ.25.10 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ சாலையோரச் சிறார்களுக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் இரவுப் புகலிடங்களுக்கான மானியம் புகலிடம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.65,500/– என்பதாக இருந்தது. இந்த மானியத் தொகை புகலிடம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1,35,000/– என்பதாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ★ ★

தமிழகத்தில் தரணி போற்றும் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

– பாரதிதாசன்

தமிழக அரசு தமிழ் மொழியின் பழமையையும், சிறப்பையும் காக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது.

ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகப் 'புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்க 'சொல் வங்கி'த் திட்டம் – தமிழ் வளர்த்த தன்னிகரில்லாத் தலைவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நூற்றாண்டு விழாக்கள் – தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் – தரணியெங்கும் தமிழ் மொழி வளர உலகத் தமிழ் இலக்கிய வரலாறு நூல் உருவாக்கம் – கலைகளில் சிறந்தோங்கும் கலைஞர்களுக்கு விருதுகள் – இயல், இசை, நாடகத் தமிழை வளர்க்க நடவடிக்கைகள் – இந்து அறநிலைய திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் – திருக்கோயில்கள் குடமுழுக்குப் பணிகள் – ஆயிரக் கணக்கான மக்களுக்கு இலவசத் திருமணங்கள் – திருக்கோயில் யானைகளுக்குப் புத்துணர்வு முகாம்கள் என கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறையில் முத்து முத்தான சாதனைகள் படைத்துத் தமிழக அரசு பீடுநடை போட்டு வருகிறது.

அரசின் சாதனைகள்

அறிவியல் தமிழ்

* வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, தமிழ் மொழி வளப்படுத்தப்பட வேண்டும் எனும் நோக்கில் மிகப்பெரும் அளவில் 5.1.2002 அன்று சென்னையில் "அறிவியல் தமிழ் – தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்" நடத்தப்பட்டது.

* சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 31 வகைப்பாடுகளாக அதிகரிக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும், அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மும்பைப்பகுதி தமிழ் மாணவர்களுக்கு இலவச நூல்கள்

* மும்பைப்பகுதியில் வாழும் ஏழை, எளிய தமிழ் மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 3.10.2002 அன்று ரூ.43,025/– மதிப்புள்ள நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

நூல்கள் நாட்டுடைமை

* எழுத்தாளர்கள் புதுமைப்பித்தன், ந.மு. வேங்கடசாமி நாட்டார், ந. பிச்சமூர்த்தி, க.நா. சுப்பிரமணியம் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தாருக்கு தலா ரூ.5 இலட்சம் பரிவுத்தொகையும், கு.ப.சேது அம்மாள் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவருக்கு ரூ.3 இலட்சம் பரிவுத்தொகையும், கு.ப.ரா. அவர்களின் மகன் கு.ப.ரா. பட்டாபிராமனுக்கு ரூ.2 இலட்சம் பரிவுத் தொகையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டன.

* **புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவ ரூ.50 இலட்சம் ஒரே தவணையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி வழங்கப்பட்டது.**

* மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், எழுத்தாளர் கு.ப.ரா., மணிக்கொடி சீனிவாசன் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

* பதினொன்று, பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களிடையே படைப்பாற்றலை உருவாக்கி வளர்க்கும் நோக்கில், "தமிழ் மன்றம்" எனும் அமைப்பு மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதேபோன்று கல்லூரி மாணவ, மாணவியர் களுக்கும் மாவட்டந்தோறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சொல்வங்கித் திட்டம்

* ஆங்கிலம் மற்றும் பிற மொழிச் சொற்களுக்கு நிகரான புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கிப் பயன் பாட்டிற்குக் கொண்டுவரும் நோக்கில் "சொல்வங்கி" திட்டம் தோற்றுவிக்கப்பட்டு இதுவரை 479 புதிய தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சங்ககாலம் முதல் பாரதிதாசன் படைப்புகள் வரையிலான இலக்கியங்களைக் கொண்டு 'இலக்கியச் சொல்லடைவு' தயாரிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

* "உலகத் தமிழ் இலக்கிய வரலாறு நூல்" உருவாக்கத் திட்டமிட்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* சென்னை ஏழுகிணறு பகுதியில் வள்ளலார் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக்கப்படும் என அறிவிக்கப் பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்

* அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில், 32 தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் பெறத்தக்க வகையில் ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டு, ஒவ்வொருவருக்கும் திங்கள்தோறும் ஓய்வூதியமாக ரூ.500/– வழங்கப்பட்டு வருகிறது.

* தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001 மே முதல் இந்நாள்வரை 96 தமிழறிஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதமும், 11 மரபுரிமையர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வீதமும் வழங்கப்பட்டுள்ளன.

* சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 23,74,704/– நூலாசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

* தமிழில் "பல்துறைக் கலைக்களஞ்சியம்" தயாரிக்க ஆணையிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் தமிழ்த் தாத்தா உ.வே.சா. வாழ்ந்த இல்லம் நினைவிடமாக ஆக்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி வளாகத்திற்குப் புதிய கட்டடம்

* ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.05 அன்று திறந்து வைத்தார்கள்.

* தமிழகம் ஊரும் சீரும் குறுந்தகடுகள், தமிழில் மென்பொருள், மின் அகராதி, கிளவியாக்கம், மொழித்திறம் ஆகியவை தயாரித்தல், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தொல்லியல் துறை

* கடந்த நான்காண்டுகளில் மட்டும் 5,850 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இதனை நூல்களாகவும், டிஜிட்டல் முறையிலும் பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.

* நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட 4,582 தொல் பொருள்கள் பதிவு செய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

* அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் ஓர் ஆய்வு மையமாக மாற்றப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் 200 புதிய ஓலைச்சுவடிகள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலக வரலாற்றில் முதன் முதலாக தமிழ் வெளியீடுகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

* செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டு காலத்தில் பேரகரமுதலி 19 பகுதிகள் முடிக்கப்பெற்றுள்ளன.

கலைப் பண்பாட்டுத்துறை

★ கலைப் பண்பாட்டு இயக்ககத்தின் மூலம் மாவட்டங்கள்தோறும் கலை விழாக்களும், கலைப் பயிற்சி முகாம்களும் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ரூ.62.99 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைசிறந்த 5 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.11.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 285 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

இசைக்கல்லூரியில் செயல்முறை வகுப்புகள்

★ 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வாங்க ரூ.2.50 இலட்சமும், இசை தொடர்பான நூல்கள் வாங்க ரூ.1.70 இலட்சமும், இசைப்பள்ளிகளில் கலை வல்லுநர்களைக் கொண்டு செயல்முறை நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ரூ.1.70 இலட்சமும் வழங்கப்பட்டன.

கவின் கலைக் கல்லூரிகள்

★ சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி கட்டடங்கள் சீரமைக்கும் பணி ரூ.10 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. இக்கல்லூரியில் இள நுண்கலை பயிலும் மாணவர்களுக்கு இலவச வரைபட பொருட்கள் வழங்க ரூ.4 இலட்சம் மதிப்பில் வரைபட பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் வரைபொருள் களுக்கான தொகை ரூ.250லிருந்து ரூ.1,000/-மாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

இராக ஆராய்ச்சி மையம்

★ இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு தமிழக அரசால் 1992 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இம்மையத்திற்கு ரூ.15 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டுள்ளது.

தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

★ தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சமும், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழக அரசு தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்கு ரூ.200 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

தனியார் கலை நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி

★ கலை பயில் பண்பாட்டுக் கழகத்திற்கு கலை வளர்ச்சினைக் கருத்தில் கொண்டு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது.

★ இந்தியா மற்றும் இந்தோனேஷியா நாடுகளில் புகழ்பெற்ற பரதநாட்டியத்தில் ஒரு பிரிவான அசைவுகள் குறித்து புத்தகத் தொகுப்பு வெளியிட ரூ.7 இலட்சம் நிருத்யோதயா கலை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 3 தொகுதி நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இந்நிறுவனத்தினிடமிருந்து 10 தொகுப்புகள் பெறப்பட்டு அனைத்து இசைப் பள்ளிகளுக்கும், இசைக் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி

★ நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2002–2003இல் 498, 2003–2004இல் 500 மற்றும் 2004–2005இல் 500 கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ மறைந்த கலைஞர்களின் குடும்பப் பராமரிப்பு நிதி உதவித் திட்டத்தின்படி தலா ரூ.5,000 வீதம் 2001–2002இல் 12, 2002–2003இல் 16 மற்றும் 2003–2004இல் 6 குடும்பங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2004–2005இல் இத்தொகை உயர்த்தப்பட்டு ரூ.6,000 வீதம் 32 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம், கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி, நட்டுவாங்க கலைப் பயிற்சி, நாதசுரம், தவில் சிறப்புப் பயிற்சி, குழந்தைக் கலைஞர் ஊக்குவிப்பு, மாநிலங்களுக்கிடையேயான கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டங்கள், புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்கும் திட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ 2001 முதல் 2004 வரை 12,879 கலைஞர்களுக்கு இரயில் பயணச் சலுகைச் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளன.

★ நாடகக் குழுக்களுக்கு 50 சதவிகிதம் பேருந்து கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இந்த வகையில் 2001 முதல் 2005 வரை 137 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 1,690 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

மிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

2001–02, 2003–04, 2004–05 ஆகிய ஆண்டுகளில் 39 குழந்தைகள் புதுதில்லியில் நடத்தப்பட்ட இளந்திரு விருது தேர்வுப் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 சிறுவர்கள் தேசிய இளந்திரு விருதினைப் பெற்றுள்ளனர்.

சென்னை சவகர் சிறுவர் மன்றத்தில் 2001–2005 வரை கோடைக்கால இலவசக் கலைப்பயிற்சியில் 10,333 குழந்தைகள் பயிற்சி பெற்றுள்ளனர். கைவினைப் பயிலரங்கில் 2002–2005 வரை 160 குழந்தைகள் பங்கு கொண்டனர்.

மிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

கவின் கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும், புது தில்லி லலித கலா அகாதமியுடன் ஒருங்கிணைந்து அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் ரூ.52.11 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ரபு வழி கலைக்காட்சி

2001 நவம்பர் மாதத்தில் மாநில அளவில் மரபு வழி கலைக்காட்சி நடத்தப்பட்டது. இதில் தேர்வு செய்யப்பட்ட கலைப் படைப்புகளுக்கு மாநில விருது, புதுப்பாணிக் கண்காட்சியில் தேர்வு செய்யப்பட்ட கலைப் படைப்புகளுக்கு மாநில விருது, கவின் கலைக் கல்லூரி மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன. இவற்றால் 130 பேர்கள் பயன்பெற்றனர்.

தனிநபர் கண்காட்சி நடத்த 2001–2004 ஆண்டுகளில் 41 ஓவிய சிற்பக் கலைஞர்களுக்கும், 2001–2002இல் கூட்டுக்கலைக் காட்சி நடத்திய 4 குழுக்களுக்கும் நிதிஉதவி வழங்கப்பட்டது.

ுண்கலை" கலையிதழ் வெளியிடுதல்

கலை ஆர்வலர்கள் பயன் பெறும் வகையில் தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் "நுண்கலை" என்னும் கலையிதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

கோவில் கட்டடக் கலை தொழில் நுட்ப நூல் பணிக்கு ரூ.20,000/– முதல் தவணையாக வழங்கப் பட்டுள்ளது.

"கற்காலம் முதல் தற்காலம் வரை" குறுந்தகடு

★ "கற்காலம் முதல் தற்காலம் வரை" என்ற தலைப்பில் புகைப்படத் தொகுப்பைத் தயாரித்து குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை பொது மக்களும், கலையார்வலர்களும் பயன்பெறும் வகையில் வெளிக்கொணர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத்துறை

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப் பட்ட திருக்கோயில் அன்னதானத் திட்டத்தின் மூலம் 1 கோடியே 87 இலட்சத்து 74 ஆயிரத்து 188 பேர் பயன்பெற்றுள்ளனர்.

★ 5,81,272 சிறார்கள் ஆன்மிக வகுப்புகளில் பாடம் பயின்றுள்ளனர்.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனையின்படி கடந்த நான்காண்டுகளில் 2,550 இணைகளுக்கு இலவசத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

★ பழநி மலைக் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் பயன்பாட்டுக்கென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கம்பிவட ஊர்தி (ரோப் கார்) தொடங்கிவைக்கப்பட்டு பயன்படுத்தப் பட்டு வருகிறது.

★ 2,000 இலவச மின் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.



★ யானைகள் புத்துணர்வு சிறப்பு முகாமில் 213 யானைகள் பங்குபெற்றுப் புத்துணர்வு பெற்றுள்ளன.

★ 4,606 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது.

★ 148 திருத்தேர்கள் திருப்பணி செய்யப்பட்டுள்ளன.

★ 6,275 ஆதிதிராவிடர் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ 300 கிராமக் கோயில்கள் திருப்பணியும், 507 திருக்குளங்களைத் தூர் வாரி சீரமைத்துச் செப்பனிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

★ ★ ★

இளைஞர்கள் நலன் போற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

நாட்டின் வளர்ச்சி மற்றும் வலிமை, இளைஞர்களின் ஒட்டுமொத்த ஆற்றலை நம்பியே உள்ளது என்பது பேருண்மை. எதையும் சாதிக்க நினைக்கும் சக்தியுடன் கூடிய ஆற்றலையும், புத்துலகைப் படைக்கும் ஆற்றலையும் தன்னகத்தே கொண்ட இளைஞர்களை உருவாக்கும் நாடு, எதிர்காலத்தில் ஒரு வல்லரசு நாடாக உருவாகும். விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் அளித்து, ஊக்குவித்து, வீரர்களிடையே போட்டி மனப் பான்மையையும் வெற்றி பெறும் அணுகு முறைகளையும் வளர்த்து, விளையாட்டுத் துறையில் தமிழகத்தின் பெருமையை உலகளவில் அறியச் செய்யப் பல யுக்திகளைக் கையாண்டு, தமிழக அரசு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

அரசின் சாதனைகள்

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை

* ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க தமிழ்நாடு அரசு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை அறிமுகப் படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் 123 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.2.10 கோடி வழங்கப்பட்டது.

சென்னை "ஓபன்"

* டென்னிஸ் விளையாட்டில் இதுவரையில் சென்னையில் "டாடா ஓபன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் IMC (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து இந்தப் போட்டியை "சென்னை ஓபன்" (Chennai Open) என்ற பெயரில் 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு முடிய ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு ஜனவரி 3 முதல் 9 வரை சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டன.

சென்னையில் கூடுதலாக வளைகோல் செயற்கைப் புல்தரை

* 2005-ஆம் ஆண்டில் இந்தியாவில், சென்னையில் சேம்பியன் டிராபி (ஆண்கள்) வளைகோல் பந்து போட்டிகளை நடத்திட சர்வதேச வளைகோல்பந்து விளையாட்டு இணையம் அனுமதித்துள்ளது. சேம்பியன் டிராபி போட்டிகளை நடத்திட ஏதுவாக, 2 வளைகோல் செயற்கைப் புல்தரை ஆடுகளம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, சென்னையில் கூடுதலாக ஒரு வளைகோல் செயற்கைப் புல்தரை அமைக்கப்பட உள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு 10% இட ஒதுக்கீடு

* காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10% இட ஒதுக்கீடு முறை ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத்துறை மற்றும் வனத்துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டம்

* 2002-2003ஆம் ஆண்டு முதல், சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டத்தின் கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8-ம் வகுப்புகளில் பயிலும் சிறுவர் / சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் கண்டறியப் பட்ட திறன்படைத்த மாணவர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப, சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பளுதூக்கும் பயிற்சிக்கூடம்

* பளுதூக்கும் விளையாட்டு வீரர்களின் நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையில் சென்னையில் பளுதூக்கும் கூடம் ஒன்று சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் அமைக்கப்படவுள்ளது.

தடகளப் போட்டி

* தமிழகத்தில் தடகளப் பயிற்றுனர்களின் திறனை மேம்படுத்த உலகத்திறன் வாய்ந்த பயிற்சியினை பயிற்றுநர்களுக்கு வழங்க, ஆஸ்திரேலியா நாட்டு தடகளப் பயிற்றுநர் மூலம் ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில், இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்றுநர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு தடகள சங்கத்தைச் சார்ந்த பயிற்றுநர்கள் மொத்தம் 35 பேர் தடகளப் பயிற்றுநர்களுக்கான சிறப்பு முகாமில் கலந்து கொண்டு தடகள விளையாட்டில் தற்போதைய புதிய யுக்திகளையும், சர்வதேசப் பயிற்சிகளைப் பற்றியும் அறிந்து கொண்டார்கள்.

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்

* சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 53 விளையாட்டுச் சேம்பியன்களைக் கண்டறிந்து அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க, அவர்களது தேவைக்கேற்ப சரியான உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள விளையாட்டு வீரர்கள் / வீராங்கனை களுக்கு, அயல்நாடு சென்று பயிற்சி மேற்கொள்ள, பயணப்படிகளும், விளையாட்டுப் பொருட்களும், விளையாட்டு உபகரணங்களும், விளையாட்டு மருத்துவ உதவியும், சிறப்பு உணவுத் திட்ட உதவிகளும் மற்றும் மனரீதியான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இளைஞர் மன்றங்கள்

* இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக் கொணரும் வகையில் இளைஞர் நலத்திட்டங்களைத் செயல்படுத்திட 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

பீச் வாலிபால்

* தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் உள்ள பள்ளிகள் கண்டறியப்பட்டு, அங்கு படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர் பயனடையும் வகையில், கடற்கரை மணற்பரப்பில் விளையாடும் "பீச் வாலிபால்" என்ற புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விளையாட்டில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன.

நவீனமுறையில் உயர்தரப் பயிற்சி

* திறமைமிக்க விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தரப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சர்வதேச அளவில் அயல்நாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 37 விளையாட்டு வீரர்கள் பயனடைந்துள்ளனர்.
* தென்னாப்பிரிக்க வளைகோல் பயிற்றுநர் குமாரி ரீனா வான் ஜி அவர்களால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பயிற்றுநர்கள், இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்றுநர்கள் மற்றும் மாநில வளைகோல் கழகத்தை சார்ந்த 37 வளைகோல் பயிற்றுநர்களுக்கு சென்னை நேரு விளையாட்டு அரங்கில், ஜனவரி 24 முதல் 26 முடிய முற்பகலில் பயிற்சி தொடர்பான சிறப்புக் கருத்தரங்கும், பிற்பகலில் வளைகோல் பயிற்சி அளிப்பதற்கான சிறப்பு செய்முறையும் நடத்தப்பட்டது.
* சாம்பியன் மேம்பாட்டுத் திட்டம் மூலம் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.
* நேரு விளையாட்டு அரங்கில் கடற்கரை கைப்பந்து மைதானமும், நீலகிரியில் சிந்தடிக் டென்னிஸ் மைதானமும், புதுக்கோட்டை, அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.
* திருநெல்வேலி பாளையங்கோட்டையிலுள்ள அண்ணா விளையாட்டு அரங்கத்தில் செயற்கைப் புல்வெளி வளைகோல்பந்து-மைதானம் அமைக்கப் பட்டு தயார் நிலையில் உள்ளது.

"சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயம்

* தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இன்டர்நேஷனல் கழகமும் இணைந்து, "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயப் போட்டியைச் சர்வதேச மராத்தான் போட்டிகளுக்கு இணையாக கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது.
* பள்ளிக் கல்வி இயக்குநரகத்தால் நடத்தப்படும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் தற்போது உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன் ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள் சண்டை, குத்துச்சண்டை மற்றும் நீச்சல் ஆகிய 5 புதிய விளையாட்டுப் போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு 2004-2005இல் மேலும் டென்னிஸ், கைப்பந்து மற்றும் டேக்வாண்டோ ஆகிய மூன்று விளையாட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.
* துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டிற்கென சர்வதேச அளவிலான ரேஞ்சு கட்டமைப்பு வசதிகள் மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டு உபகரணங்கள் கூடிய துப்பாக்கிச் சுடுதல் தளம் சென்னையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
* சர்வதேச அளவில் போட்டிகளை நடத்திட பன்னாட்டுத் தரத்திற்கேற்ற வகையில் ஸ்கேட்டிங் ரிங்க் ஒன்று சென்னையில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வாள்சண்டை உபகரணங்கள்

* வாள்சண்டை விளையாட்டில் அதிக விளையாட்டு வீரர்கள் பங்கேற்று, பயிற்சி பெறும் வண்ணம், 5 மண்டல தலைமை இடங்களில் தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.

* ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டை வளர்த்து, முன்னிலைப்படுத்த தேவையான உபகரணங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

* "சுவர் பந்து" ஒரு சர்வதேச விளையாட்டாகும். இவ்விளையாட்டினை சேலம், தேனி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஸ்குவாஷ் ஆடுதளங்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* நீச்சல் பயிற்றுநர்களுக்கான சிறப்பு முகாம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 25 பயிற்றுநர்களுக்கு, மார்ச் 2005 முதல், ஆண்டு முழுவதும் பயிற்சி அளிக்கப் படவுள்ளது.

* தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், இந்திய விளையாட்டு மருத்துவக் கழகமும் இணைந்து 26ஆவது மருத்துவக் கருத்தரங்கத்தை சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடத்தின. இதில் உலகளவில் பிரசித்திப் பெற்ற 175 பேர் பங்கு பெற்றனர்.

* அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வண்ணம் மாதந்தோறும் போட்டிகள் நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதுவரை அனைத்து மாவட்டங்களிலும் 6 விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

விளையாட்டுத் திறன் முன்னேற்ற மையம்

* தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பன்னிரண்டு நிறுவனங்களுடன் விளையாட்டுத் திறன் முன்னேற்ற மையத்திற்கான கூட்டு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு உள்ளது. மேலும், 10 நிறுவனங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட உள்ளன.

விளையாட்டு அகாடமிகள்

* கல்வி நிறுவனங்கள், குழுக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தனியார் பங்கேற்புடன் கீழ்க்கண்ட அகாடமிகள் நிறுவப்பட்டுள்ளன.
  * விருதுநகரில் ஹாக்கி அகாடமி, திண்டுக்கல்லில் கையுந்துபந்து அகாடமி, தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் ஸ்குவாஷ் அகாடமி, சென்னை பேசின் பிரிட்ஜ் மேஜை பந்து அகாடமி, தமிழ்நாடு செய்லிங் கழகமுடன் செய்லிங் அகாடமி, சென்னை அசோக் நகர் புதூர் அரசு மேனிலைப்பள்ளியில் கிரிக்கெட் அகாடமி, சென்னை முகப்பேரில் டால்பின் நீச்சல் அகாடமிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 2004–2005ம் ஆண்டிற்கான நிதியாண்டில், பின்வரும் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:
  - ➢ மதுரையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி – இறகு பந்து அகாடமி.
  - ➢ சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து அகாடமி – பேசின்பாலம் தொன்போஸ்கோ மைதானத்தில் மேசைப்பந்து அகாடமி – நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கைப்பந்து அகாடமி – வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் டைவிங் அகாடமி – குறுந்தூர ஓட்டத்திற்கான அகாடமி – நீண்டதூர ஓட்டத்திற்கான அகாடமி – புதூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி.
  - ➢ புதுக்கோட்டை அறந்தாங்கியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடைப்பந்து அகாடமி.
  - ➢ திண்டுக்கல்லில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு எறிதல் அகாடமி.

* கடலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. *

"தமிழரசு" சந்தா விவரம்

தமிழரசு தமிழ் இதழ்

ஆண்டு சந்தா – ரூ.120
ஆயுள் சந்தா – ரூ. 1,000
(10 ஆண்டுகளுக்கு)

தமிழரசு ஆங்கில இதழ்

ஆண்டு சந்தா – ரூ.60
(மூன்று மாதத்திற்கு ஒருமுறை)
ஆயுள் சந்தா – ரூ. 500
(10 ஆண்டுகளுக்கு)

வங்கி வரைவோலையாக
அனுப்ப வேண்டிய முகவரி :
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

பார்க்க! படிக்க!! பயன்பெற!!!



தமிழரசு

ஜூன் 2005

இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.

வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள், முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.

ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
வைகாசி – ஆனி
மலர்: 36 இதழ்: 12
ஜூன் 2005
விலை ரூ.10

இந்த இதழில்...

★ வ.உ.சி அவர்களின் வரலாறு ஒரு தியாக காவியம் *(திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் *ஆற்றிய உரை)* 2

★ 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ – மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் 10

★ அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டட வளாகம் 11

★ பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகளுக்கு அரசின் சார்பில் இலவசச் சீரமைப்பு அறுவை சிகிச்சைத் திட்டம் 12

★ சொந்தமாக ஆட்டோ வாங்க மானியத்துடன் கடன் உதவித் திட்டம் *(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 26.5.2005)* 14

★ பதக்கம் வென்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு 16

★ நதிகள் இணைப்புத் திட்டம் – தென்மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகம் அளிக்கும் 17

★ மருத்துவம், பொறியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சி பயிலும் மாணவ, மாணவியருக்கு நிதி உதவி 24

★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை 25

★ பூம்புகார் மாநில விருது 27

★ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் 28

★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஆட்டோக்கள் 31

★ ஆடவர் ஏறு நடை போடட்டும்! மகளிர் வீறு நடை போடட்டும்! அதனால் தமிழகம் வெற்றி நடை போடட்டும்! 33

★ இந்தியாவிலேயே முதன்முதலாக ஆண்டிபட்டியில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா *(தேனி மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் *ஆற்றிய உரை)* 37

★ சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கத்தின் புதிய இணையதளம் 45

★ "என்றென்றும் சென்னை" திட்டத்தின் கீழ் புதிய கட்டடங்கள் 46

★ 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவ – மாணவியருக்கு ரொக்கப் பரிசு 47

★ ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டிற்காக ஊர்திகள் 49

★ சீர்மிகு சட்டப் பள்ளிக்கான புதிய கட்டடம் 52

★ பெருநகர காவல் நவீனமயமாக்கல் திட்டம் 57

★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியருக்கு 100 விடுதிகள் 59

★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மகளிர் தயாரிக்கும் நவீன தொழில்நுட்ப ஓடுகள் 63

★ புதுக்கோட்டை, வாராப்பூர் ஊராட்சியில் விறகு மூலம் மின் உற்பத்திச் சாதனை 68

★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13ஆவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி 70

★ ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி 73

★ வறட்சியைத் தாங்கி வளரும் சோற்றுக் கற்றாழை 77

★ பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை 80

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை	:	தேனி மாவட்ட அரசு விழா
மூன்றாம் பக்க அட்டை	:	வ.உ.சிதம்பரனார் மணிமண்டபம் திறப்பு விழா
நான்காம் பக்க அட்டை	:	திருநெல்வேலி மாவட்ட அரசு விழா

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



வ.உ.சி. அவர்களின் வரலாறு ஒரு தியாக காவியம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

தென்னகத்தின் பண்பாட்டுக் களஞ்சியமான திருநெல்வேலி மாநகரில் என் அன்புக்குரிய தென்பாண்டி மக்களாகிய உங்களைச் சந்தித்து, உங்களோடு கருத்துகளைப் பகிர்ந்துக் கொண்டு, நிறைவேற்றப் பட்டிருக்கும் திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நலிந்த பிரிவினர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் நல்லதொரு வாய்ப்பு இன்று கிடைத்ததற்காக நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதிகை மலைத் தொடரில் பொங்கி வழியும் பொருநை ஆற்றங்கரையில் வாழும் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்.

தென்றல் பிறந்ததும் பொதிகையில்தான்! செந்தமிழ் பிறந்ததும் பொதிகையில்தான்!

எனவே தென்றலின் மென்மையும், செந்தமிழின் இனிமையும் சேர்ந்த பெருமக்கள் நீங்கள்.

தமிழ் பிறந்த இந்த மண்ணில்தான் தமிழ் வளர்த்த பெரியோர்களும், தமிழர்க்காகப் பாடுபட்ட சான்றோர்களும் பிறந்தார்கள்.

சமயம் பரப்ப வந்த சான்றோர்களும் இந்த மண்ணுக்கு வந்து, தமிழ் மயமாய் ஆனார்கள்.

அயல்நாட்டிலே பிறந்து, இங்கு வந்து தமிழ் கற்று தேம்பாவணி என்னும் தீந்தமிழ்க் காப்பியத்தைத் தந்த வீரமா முனிவர், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வரைந்த கால்டுவெல்; திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த G.U.போப்; இணையற்ற தமிழ்த் தொண்டு புரிந்த ரேணியஸ் அய்யர் போன்ற பெருமக்களை எல்லாம் வரவேற்று வாழ வைத்தது நெல்லைச் சீமை அல்லவா?

சேனாவரையர், சிவஞான முனிவர், நம்மாழ்வார், குமரகுருபரர், பரிமேலழகர், உமறுப் புலவர், கிருஷ்ணப் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், சோமசுந்தர பாரதியார், அண்ணாமலைரெட்டியார், புதுமைப்பித்தன், ரசிகமணி டி.கே.சி – இப்படி எத்தனை எத்தனை பெருமக்கள் நெல்லைச் சீமையிலே தோன்றி நித்தம் நித்தம் முத்தமிழ் வளர்த்தார்கள்.

வாழையடி வாழை என வந்த அந்த வண்டமிழ் மரபில் வந்தவர்தான் தியாகச் செம்மல் வ.உ.சி. அவர்கள்

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் என்ற சிறப்புகளுக்குச் சொந்தக்காரரான விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு எழுப்பப்பட்டுள்ள நினைவுமண்டபத்தைத் திறந்து வைக்கும் பேறு எனக்கு இன்று கிடைத்தது குறித்து நான் இறும்பூதடைகிறேன்.

தியாகச் செம்மல் வ.உ.சி. அவர்களின் அறிவுக்கும், ஆற்றலுக்கும், வீரத்துக்கும், தியாகத்துக்கும் தலை வணங்கி நிகழ்காலமும், எதிர்காலமும் அவரை நினைவு கூர வேண்டும் என்பதற்காக தீரர் சிதம்பரனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க விரும்பி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு 13.3.2003 அன்று நெல்லையிலே நடைபெற்ற அரசு விழாவில் இம்மணிமண்டபத்துக்கான அடிக்கல்லை நாட்டினேன்.

இன்று அந்த மணிமண்டபத்தைத் திறந்து வைக்கும் மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கி; ஏழை எளிய மக்களுக்காக இலவசமாக வாதாடி; ஆங்கிலேயருக்குப் போட்டியாகக் கப்பல் கம்பெனி தொடங்கி; எழுத்தாலும், பேச்சாலும் சுதந்திர வேட்கையைத் தூண்டி; இரட்டை ஆயுள் சிறைத் தண்டனை பெற்று; சிறையிலே செக்கிழுத்து தியாகத்தின் திருவுருமாய் விளங்கிய சிதம்பரனாரின் வரலாறு ஒரு வீர காவியம்!

செல்வக்குடியிலே பிறந்து, தேச விடுதலைக்காகப் போராடி, வறுமையிலே வாழ்க்கையை முடித்துக் கொண்ட வ.உ.சி. அவர்களின் வரலாறு ஒரு தியாக காவியம்!

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் அவர்கள் துணிச்சலின் தூய வடிவமாக விளங்கியவர்.

இத்தனைச் சிறப்பையும் மொத்தமாய்ப் பெற்ற அந்தத் தியாக சீலருக்கு ஒரு மாபெரும் மண்டபத்தை நாம் நிறுவி இருக்கிறோம்.

திருநெல்வேலியில், பொருட்காட்சி மைதானத்தில், 1,674 சதுர மீட்டர் பரப்பளவில், 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எழுப்பப்பட்டிருக்கிறது தியாக சீலர் வ.உ.சிதம்பரனார் மணிமண்டபம்.

நூலகம்; வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி; தியான அரங்கு; தியான அரங்கின் நடுவே வ.உ.சி. அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை; சிறையில் இருந்த போது அவர் இழுத்த எண்ணெய்ச் செக்கின் மாதிரி வடிவம்; நுழைவாயிலில் கப்பல் வடிவிலான நீர் ஊற்று – இப்படி அழகின் அற்புதமாக அமைக்கப் பட்டுள்ளது சிதம்பரனார் மணிமண்டபம்.

மாமனிதர்களின் வாழ்க்கை நாம் விழுமிய வாழ்க்கை வாழ நமக்குத் தூண்டுகோலாக இருக்கும் என்று கூறினார் ஆங்கிலக் கவிஞர் H.W. Longfellow.

"Lives of great men all remind us
we can make our lives sublime"

– என்பது அந்தக் கவிஞரின் வாசகம்.

சான்றோர்களை நினைவு கூர்வதும், அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதும், "இப்படிப்பட்ட மனிதர் இங்கு வாழ்ந்தார்" என்று அடுத்த தலைமுறைக்கு அடையாளம் காட்டுவதற்காக மட்டும் அல்ல, அவர்களின் வார்த்தையையும், வாழ்க்கையையும் நாம் பின்பற்ற வேண்டும் என்பதற்காகத்தான்!

இந்த இனிய விழாவில் திருநெல்வேலி மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் 116 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 2,624 பணிகளைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொகுப்பு வீடுகள், அங்கன்வாடி கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், சமுதாய நலக்கூடங்கள், மகளிர் சுகாதார வளாகங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பணிமனைக் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மாணவ மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் முதலானவற்றைத் திறந்து வைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 48 இலட்சம் ரூபாய் செலவில் திருநெல்வேலி சந்திப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி நகர சட்டம் – ஒழுங்கு, குற்றம், போக்குவரத்து ஆகிய பிரிவுகள் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகியவை அடங்கிய காவல் நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவில் 107 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட உள்ள 2,203 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் உள்ளம் மிக மகிழ்கிறேன். சத்துணவு சமையல் கூடங்கள், விளையாட்டு அரங்கங்கள், பொது விநியோகக் கடைகள், மீன் உலர் களங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள், ஊராட்சி அலுவலகங்கள், மாணவ மாணவியர் விடுதிக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், வணிக வளாகங்கள் போன்றவற்றிற்கு அடிக்கல் நாட்டியதில் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

மனித குலம் உயிர் வாழத் தண்ணீர் தேவை. மரங்களும், பயிர்களும் செழித்து வளரத் தண்ணீர் தேவை. அதனால்தான் வள்ளுவப் பெருமான். "நீர் இன்றி அமையாது உலகு" என்று எடுத்துச் சொன்னார். மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் தட்டுப்பாடு இன்றி வழங்கப்படவும்; பயிர்கள் வளர்ந்தோங்கி உற்பத்தி பெருக பாசன வதிகள் மேம்படுத்தப்படவும் எனது அரசு உயரிய முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை முனைப்புடன் நிறைவேற்றி வருகிறது.

தமிழக மக்கள் அனைவருக்கும் தட்டுப்பாடு இன்றிக் குடிநீர் வழங்கப்பட வேண்டும். நகர்ப்புறங்களில் மட்டும் அல்லாமல் அனைத்துக் கிராமங்களிலும் பாதுகாப்பான குடிநீர் தேவையான அளவுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே உங்கள் அன்புச் சகோதரியின் நோக்கம் ஆகும். இதன் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 208 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் எனது அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், இந்த இனிய விழாவில் 16 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள பணகுடி, வடக்கு வள்ளியூர் மற்றும் 95 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 94 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள ஏர்வாடி நகரச் சிறப்பு ஊராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்; 60 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள கோபாலசமுத்திரம் சிறப்பு ஊராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்; 29 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆர்.நவநீத கிருஷ்ணபுரம் மற்றும் ஆலங்குளம் ஒன்றியத்தில் உள்ள 5 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் மிகவும் மகிழச்சி அடைகிறேன். மேலும் 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 18 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள 100 தனி மின் விசைத் திட்டங்களையும் இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

இவ்வாறு, குடிநீர் வசதி செய்து தருகின்ற அதே நேரத்தில், கைப்பம்புகள் மூலம் குடிநீர் பெறுவதில் மகளிருக்கு ஏற்படுகின்ற சிரமத்தை நீக்கும் வகையில் 2001–2002ஆம் ஆண்டில் எனது அரசு சிறு மின் இறைப்பான் திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டம் ஊரக மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் உள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள 450 சிறு மின் விசைத் திட்டங்களையும் இன்று திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் 29 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள அச்சன்புதூர், ஆய்க்குடி, பண்பொழி, வடகரை கீழ்ப்பிடாகை மற்றும் தென்காசி, கீழப்பாவூர், செங்கோட்டை, கடையம் ஒன்றியங்களைச் சார்ந்த 151 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 78 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் 16 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள பாளையங்கோட்டை, நாங்குனேரி மற்றும் களக்காடு ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த 185 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; மற்றும் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயன்பெறும் வகையில் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள திருநெல்வேலி நகராட்சி தச்சநல்லூர்ப் பகுதி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆகிய குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், 3 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள 50 தனி மின் விசைத் திட்டங்களுக்கும்; 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள 250 சிறு மின் விசைத் திட்டங்களுக்கும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இதுவன்றி, 78 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மானூர் மற்றும் 400 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும், 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வள்ளியூர், ராதாபுரம் மற்றும் நாங்குனேரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 47 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும் மிக விரைவாக நடந்தேறி வருகின்றன. எதிர்வரும் செப்டம்பர் மாதத்துக்குள் இப்பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்ற செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மனமகிழ்வு அடைகிறேன்.

தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள நீர்வளத்தைப் பாதுகாக்கவும், அவற்றைப் பெருக்கவும், புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கவும் எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்கி விவசாயிகளின் தேவையை ஈடு செய்ய பல்வேறு பாசனத் திட்டங்களை எனது அரசு மேற்கொண்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர் வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனப் பரப்பிற்குத் தண்ணீர் விரைந்து செல்லவும்; மடைகள் மற்றும் மதகுகளில் இருந்து தண்ணீர் கசிந்து நீர் விரயமாவதைத் தடுக்கும் வகையிலும்; 11 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

நாங்குனேரி வட்டத்தைச் சார்ந்த 17 கிராமங்களில் உள்ள 5,781 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்ற திருக்குறுங்குடி கொடுமுடியாறு அணை 31 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. ராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,740 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்ற நம்பியாறு நீர்த் தேக்கத்தில் வலது மற்றும் இடது புறக் கால்வாய்களை முழுவதும் புனரமைத்து லைனிங் செய்யும் பணி மற்றும் அவற்றின் குறுக்கே அமைந்துள்ள குறுக்குக் கட்டுமானப் பணி ஆகியவை 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

நாங்குனேரி வட்டம், களக்காடு அருகில் உள்ள மஞ்சுவிளை கிராமத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வடக்குப் பச்சையாற்றின் குறுக்கே 442 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்க எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2.3.1994 அன்று என்னால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட திட்டம் 45 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 2003ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு 13.3.2003 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது என்பதை நினைவு கூர்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின் கீழ் தாமிரபரணி ஆற்றுப் படுகைத் திட்டம், நுண்ணிய நீர்ப் பாசனத் திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாக கடந்த நான்கு ஆண்டுகளில் 12 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு பாசன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின் கீழ், கடனா – இராமநதி பாசனத் திட்டம், நம்பியார் ஆற்றுப் படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப் படுகைத் திட்டம், மணிமுத்தாறு பாசனத் திட்டம் ஆகிய திட்டங்கள் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று நடைபெறுகின்ற இனிய விழாவில் 61 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள அனுமன் நதி பாசனத் திட்டப் புனரமைப்புப் பணிகளைத் திறந்து வைத்ததிலும், 156 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கும் வகையில் கங்கை கொண்டான் – ராஜபதி சிற்றூர் அருகே 47 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள புதிய குளத்தைத் திறந்து வைத்ததிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 713 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கின்ற, நாங்குனேரி வட்டம், திருக்குறுங்குடி கிராமத்தில் உள்ள பெரிய குளத்தை 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள அடிக்கல் நாட்டியதிலும் நான் மிக்க மன மகிழ்வு அடைகிறேன்.

இவ்வாறு நீர் ஆதாரங்களைப் பெருக்கி பாசன வசதிகளை மேம்படுத்த எனது அரசு நடவடிக்கை எடுத்து வரும் அதே வேளையில், பாசன வசதி அற்று தரிசாகக் கிடக்கும் நிலங்களை மேம்படுத்தி வேளாண்மையைப் பெருக்க வேண்டும்; சிறு, குறு விவசாயிகள் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 2001–ஆம் ஆண்டு விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன்.

இத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 21,870 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. யாருக்கும் பயன் இன்றித் தரிசாகக் கிடந்த இந்நிலங்களில் பாசன வசதிக்காக 875 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு 7,35,000 பழச்செடிகளும், 1,65,000 வன மரக் கன்றுகளும் நடப்பட்டு, நாட்டுக்கும் வீட்டுக்கும் வளம் அளிக்கும் பசுமைப் பகுதியாக இந்நிலங்கள் தற்போது மாற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 3,810 சிறு, குறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஒரே வளாகத்தில் அமைவது தான், அந்த அலுவலகங்களை நாடிவரும் பொதுமக்கள் சிரமமின்றித் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், அரசு அலுவலர்கள் தங்களது சேவைகளை மக்களுக்கு விரைவாக அளித்திடவும், வாய்ப்பாக அமையும் என்கின்ற காரணத்தால், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் ஒரே வளாகத்தில் அமைந்திடும் வகையில் பெருந்திட்ட வளாகங்களை ஏற்படுத்த என்னுடைய அரசு தனி முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போதைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்

தலைவர் அலுவலகம் 150 ஆண்டு பழமை வாய்ந்த மிகவும் பழுதுபட்ட கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஒரு சில மாவட்ட அளவிலான அரசு அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, போதிய இட வசதியுடன் மாவட்ட அளவிலான அனைத்து அரசு அலுவலகங்களும் ஒரே இடத்தில் அமையும் வகையில் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 87 ஆயிரம் சதுர அடி பரப்பளவுடைய தரைத் தளம் மற்றும் மூன்று மேல் தளங்கள் கொண்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் கட்ட நான் இந்த இனிய விழாவில் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் மற்றும் மாவட்ட அளவிலான 39 அலுவலகங்களும் இடம் பெறும்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு வளம் சேர்க்கவும், திருநெல்வேலி மாவட்ட மக்கள் வாழ்க்கையில் நலம் கூட்டவும் வகை செய்யும் சில புதிய திட்டங்களை இந்த இனிய விழாவில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

* வாகனங்களின் அபரிமிதமான பெருக்கம் காரணமாகவும், திருநெல்வேலி நகர்ப் பகுதி சாலைகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிக அதிகமாகப் பெருகியதன் காரணமாகவும், திருநெல்வேலி நகரம் மற்றும் திருநெல்வேலி சந்திப்பு ஆகிய இடங்களில் எப்போதும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில் ஒரு புதிய இணைப்புச் சாலை உருவாக்கப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை ஏற்று 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தச்சநல்லூரிலிருந்து ஸ்ரீபுரம், வயல்புரம், தெற்கு மவுண்ட் சாலை மற்றும் திருநெல்வேலி நகரம் வழியாக பேட்டை வரையில் ஒரு புதிய தார்ச் சாலையை உருவாக்க, நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய சாலையை அமைக்க நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் ஒத்துழைப்புடன் இப்பணி மேற்கொள்ளப்படும். 4.2 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தச் சாலை அமைவதன் மூலம் திருநெல்வேலி சந்திப்புப் பகுதியைத் தவிர்த்து மதுரை மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களுக்குச் செல்ல முடியும். அதே போல், பேட்டை பகுதியில் வாழ்கின்ற மக்கள் நெல்லையப்பர் கோவில், அமைந்துள்ள நெரிசலான நகர்ப் பகுதியைத் தவிர்த்து பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையத்திற்குச் செல்ல முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில், பாளையங்கோட்டை – நாகர்கோவில் சாலையில், குலவணிகபுரம் மற்றும் மத்திய சிறை ஆகியவற்றின் அருகே தற்போது ஆள் மூலம் இயக்கப்படும் "ரயில்வே கிராசிங்" உள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு முறை இந்த இடத்தை ரயில் கடக்கும்போதும் இருபுறமும் ஏராளமான வாகனங்கள் நிற்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு போக்குவரத்து நெரிசலும், பயணிகள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்குக் குறித்த நேரத்திற்குச் செல்ல முடியாத நிலைமையும் ஏற்படுவதால் இந்த இடத்தில் ஒரு ரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கோரி வருகிறார்கள். பொது மக்களின் இந்த வேண்டுகோளினை ஏற்று 2 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய மேம்பாலத்தினை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய மேம்பாலம் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில், மத்திய நெடுஞ்சாலைத்துறை மற்றும் ரயில்வே துறை ஆகியவற்றின் ஒப்புதல் பெற்று கட்டி முடிக்கப்படும்.

* இதேபோல, திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்குள் மதுரை – கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை மற்றும் பழைய புறவழிச்சாலை சந்திப்பில் அமைந்துள்ள செல்லப்பாண்டியன் சிலை அருகே சுரங்க நடைபாதை ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று இப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரி வருகிறார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்று இப்பகுதியில் 1 கோடி ரூபாய் மதிப்பில் சுரங்க நடைபாதை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்தச் சுரங்க நடைபாதை தேசிய நெடுஞ்சாலையின் ஊடே அமையும் என்பதால் மத்திய நெடுஞ்சாலைத் துறையின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

* திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால் 200 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். சீரான போக்குவரத்தை மேற்கொள்ளும் வகையில் இந்தச் சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி செப்பனிட்டுப் புதுப்பிக்க திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இதுவன்றி, திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் பழுதுபட்டுள்ள சுமார் 200 கிலோ மீட்டர் நீளச் சாலைகளையும் சீரமைத்திட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* அண்மையில், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களைத் திடீரெனத் தாக்கிய சுனாமிப் பேரலைகளால் இம்மாவட்டத்தில் ராதாபுரம் வட்டத்தைச் சார்ந்த பெருமணல், இடிந்த கரை, கூத்தன்குழி, கூட்டப்புளி முதலிய கடலோரக் கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இக்கிராமங்கள் எதிர்காலத்தில் கடல் அலைகளால் பாதிக்கப் படாதவாறு பாதுகாக்கும் வகையில் "கிராயின்" எனப்படும் கற்சுவர்களைக் கட்டத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி இந்தப் பகுதிகளில் சுமார் 2,450 மீட்டர் நீளத்திற்கு "கிராயின்கள்" கட்ட 27 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இதற்கான நிதி உதவி வழங்க வேண்டி மத்திய அரசின் திட்டக் குழுவுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதனை எதிர்நோக்கி இந்தப் பணியை உடனடியாக மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம் மேற்கண்ட கிராமப்பகுதி மக்களுக்கு சுனாமிப் பேரலைகள் மற்றும் கடல் அலைகளின் சீற்றங்களினாலும் ஏற்படும் ஆபத்துகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டத்தில் உள்ள 185 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது மண் அரிப்பு காரணமாகப் பெரிதும் தூர் சேர்ந்து விட்டதால் அதன் கொள்ளளவு 120 மில்லியன் கன அடியாகக் குறைந்து விட்டது என்றும், எனவே இதனைத் தூர் வாரிப் பழைய கொள்ளளவிற்கே கொண்டு வர வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். விவசாயிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்று இந்நீர்த் தேக்கத்தைத் தூர் வார நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். எனினும், இந்நீர்த்தேக்கத்திலிருந்து தூர்வாரி எடுக்கப்படுகின்ற மண்ணைக் கொட்டுவதற்குத் தகுந்த இடம் தேர்வு செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டு தூர்வாரும் பணி விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலந்துறை ஆற்றில் இருந்து திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு 2 கால்வாய்கள் மூலம் 52 ஏரிகளுக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இக்கால்வாய்களில் மண் படிந்து இருப்பதாகவும், இதனால் ராதாபுரம், பணங்குடி, வள்ளியூர் மற்றும் சமூகரங்கபுரம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் தண்ணீரின் அளவு குறைந்துவிட்டதாகவும், எனவே இக்கால் வாய்களைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர். இதனை ஏற்று இந்த இரு கால்வாய்களையும் மற்றும் அவற்றைச் சார்ந்த 40 கிளைக் கால்வாய்களையும் தூர்வாரவும், இக்கால்வாய்களில் உள்ள 142 மதகுகளைப் புதுப்பிக்கவும், 52 ஏரிகளைத் தூர்வாரி செப்பனிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் 6 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள ராம நதி நீர்த்தேக்கத்தில் இருந்து கிடைக்கும் உபரி நீரை ஜம்பு நதியில் திருப்பி தென்காசி வட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறுமாறு செய்ய வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை ஏற்று 4.1 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு புதிய இணைப்புக் கால்வாய் அமைத்து அதன் மூலம் ராம நதி நீர்த்தேக்கத்தில் உபரியாகக் கிடைக்கும் 48 மில்லியன் கன அடி தண்ணீரை நாராயணப்பேரி ஏரிக்குக் கொண்டு சென்று அதனுடன் இணைத்து மொத்தம் 7 ஏரிகளுக்குப் பாசனவசதி அளிக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன். நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் 3 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட உள்ள இத்திட்டத்தின் மூலம் 600 ஏக்கர் நன்செய் நிலங்கள் நிலையான பாசனவசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, தமிழகத்தின் வளர்ச்சிக்காக நான் தளராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

என்னுடைய இந்த முயற்சிகளுக்கெல்லாம் எத்தனை எத்தனை தடைகள்! எந்த மகத்தான திட்டத்தையும் தொடங்க விடாதபடி எத்தனை எத்தனை இடையூறுகள்!

இந்தத் தடைகளைத் தவிடு பொடியாக்கி, இடையூறுகளை முறியடித்து, உங்கள் துணையோடு எல்லா முயற்சிகளிலும் நான் வெற்றி பெற்று வருகிறேன்.

ஆனாலும் தொடர்கின்றன தடைகள்! இடையூறுகள்! என்ன காரணம் என்று சிந்தித்தேன். இப்படி இருக்கலாமோ என்று தோன்றியது.

பழங்காலத்தில் கிரேக்க நாட்டில் ஒரு பழக்கம் இருந்தது. பிடிக்காதவர்களின் பெயர்களை ஓட்டாஞ் சல்லிகளில் எழுதி அவற்றை ஒரு மண் பானையில் போடுவார்கள். யாருடைய பெயர் அதிகமாக எழுதப் பட்டிருக்கிறதோ அவரை நாடு கடத்தி விடுவார்கள்.

ஒரு நாள் கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் (Aristotle) ஒரு கிராமத்தின் வழியே போய்க் கொண்டிருந்தார். அவரைப் பெரியவர் ஒருவர் வழி மறித்தார்.

'இந்த ஓட்டாஞ் சல்லியில் அரிஸ்டாட்டில் என்று எழுதிக் கொடுங்கள்' என்று அவரைக் கேட்டுக் கொண்டார்.

'எதற்கு ?' என்று கேட்டார் அரிஸ்டாட்டில்.

'அரிஸ்டாட்டிலை நாடு கடத்த வேண்டும். அவருடைய பெயரை ஓட்டாஞ் சல்லியில் எழுதி மண் பானையில் போட வேண்டும். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆகவே நீங்கள் இதோ இந்த ஓட்டாஞ் சல்லியில் அரிஸ்டாட்டில் என்று எழுதிக் கொடுங்கள்' என்றாராம் பெரியவர்.

'அரிஸ்டாட்டில் எல்லோருக்கும் நன்மையைத் தானே செய்கிறார் ? அவர் உனக்கு என்ன கொடுமை செய்தார் ?

ஏன் நாடு கடத்த வேண்டும் என்கிறாய்?' என்று கேட்டார் அரிஸ்டாட்டில்.

'அவர் ஒரு தீமையும் செய்யவில்லை. எங்கு பார்த்தாலும் அரிஸ்டாட்டிலின் புகழ்தான் பேசப்படுகிறது. அதைக் கேட்கக் கேட்க எனக்குப் பொறாமையாக இருக்கிறது. எனவேதான் அந்த ஆளை நாடு கடத்த வேண்டும் என்கிறேன்' என்றாராம் அந்தப் பெரியவர்.

தமிழ்நாட்டில் அப்படிப் பட்ட பெரிய மனிதர்களுக்குக் குறைவே இல்லை!

அவர்களைப் பொறுத்தவரை, பொறாமைப் படுவதற்கு ஒரு காரணமே தேவையில்லை! அவர்கள் எதைக் கண்டாலும் பொறமைப்படுவார்கள்!

மற்றவர்களுக்குப் புகழ் கிடைத்தால் போதும் – அதைத் தாங்க முடியாத பெரிய மனசுக்காரர்கள் அவர்கள்!

அவர்களால் பொறாமைப்படாமல் இருக்க இயலாது.

எனவேதான் நாள்தோறும் ஏதாவதொரு பிரச்சினையை அரங்கேற்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

அசூயையின் வடிவமாக விளங்கும் அந்தப் பொல்லாத மனிதர்களின் பொறாமைத் தீ என்னைச் சுட்டுவிடாதபடி உங்கள் அன்பு என்னும் குற்றாலச் சாரல் என்னை எப்போதும் குளிர்வித்துக் கொண்டிருக்கிறது. என் மீது மாசில்லாத அன்பு வைத்துள்ள உங்கள் தூய நெஞ்சங்களின் உறுதுணையோடுதான் தமிழகத்தைப் பல்வேறு துறைகளில் முதன்மை மாநிலமாக நான் உருவாக்கிக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவிலே இன்றைய தினம் மொத்தம் 6,988 பயனாளிகளுக்கு 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் போதாது என்பதால் இந்த மேடையில் 15 பேருக்கு மட்டும் உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும் இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல் ஆனந்த் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் உரித்தாக்கிக் கொண்டு

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

23.6.2005 அன்று நடைபெற்ற
திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில்
விடுதலைப் போராட்ட வீரர்
வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தைத்
திறந்து வைத்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா *அவர்கள்,*
ஆற்றிய உரை

அரசு உதவிபெறும் பள்ளிகளில், சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகளில், பயிலும் மாணவ, மாணவியருக்கும் இலவசப் பாடநூல்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 20-5-2005

அறிவுடைமை மிக்க சமுதாயமே, ஆற்றல் மிக்க சமுதாயமாகத் திகழும் என்பதால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டுக்கும் எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது.

அங்கன்வாடிகள், பால்வாடிகள் மற்றும் மழலையர் பள்ளிகளில் தங்களது கல்வியைத் தொடங்கும் சின்னஞ்சிறு தளிர்கள், எவ்விதக் காரணங்களாலும் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடக்கூடாது என்பதை இலட்சியமாகக் கொண்டு, அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலுவதற்கான அனைத்து வசதி வாய்ப்புகளையும் எனது அரசு ஏற்படுத்தித் தருகிறது.

இதன் அடிப்படையில் தான் சத்துணவு, சீருடை, கல்வி உதவித்தொகை முதலானவற்றை வழங்குவதோடு, மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் கல்வி கற்க ஏதுவாக, பள்ளிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் எனது அரசு ஏற்படுத்தி வருகிறது. மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளேயே தொடக்கப் பள்ளி வசதியையும், 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளி வசதியையும் எனது அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ, மாணவியர் தங்கள் கல்வியை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கற்க ஊக்கம் அளிக்கும் ஒரு பேருதவித் திட்டமாக, அவர்களுக்கு 10-ஆம் வகுப்பு வரை இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அண்மையில் நான் ஆணையிட்டேன்.

மாணவ, மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற இத்திட்டம், ஏழை, எளிய பெற்றோர் ங்களது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதை மையாகக் கருதாமல் சுகமாகக் கருதிட வழிவகை சய்வதாலும், தங்களது கல்வியை இடையில் நிறுத்தி டாமல் தொடர்ந்து கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை ாணவ, மாணவியருக்கு ஊட்டுவதாலும், தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மாணவ, மாணவியரின் நலன் கருதி இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்திட நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் +2 எனப்படும் 12ஆம் வகுப்பு வரை இலவசப் பாடநூல்களை வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப் படுவதால், இவற்றில் பயிலும் 11 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.22.25 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாடநூல்கள் வழங்கும் இத்திட்டம், நடப்பு ஆண்டு முதலே, அதாவது, 2005–2006ஆம் ஆண்டில் இருந்தே செயல்படுத்தப்படும்.

தற்போது விரிவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று வரும் 1 கோடியே 8 இலட்சம் மாணவ, மாணவியருக்கு அனைத்து பாடநூல்களும் இலவசமாக வழங்கப்படும். இதற்காக எனது அரசு நடப்பாண்டில் 83 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவிடும். ◆

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 1 கோடியே 8 இலட்சம் மாணவ-மாணவியருக்கு, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்கள்.

அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில், 1ஆம் வகுப்பு முதல் +2 எனப்படும் 12ஆம் வகுப்பு வரை பயிலும், அனைத்து மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.5.2005 அன்று உத்தரவிட்டார்கள். இத்திட்டம் நடப்பு ஆண்டு முதலே அதாவது 2005–2006ஆம் ஆண்டில் இருந்தே செயல்படுத்தப்படும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சென்னை – அசோக்நகர், திருவல்லிக்கேணி, எழும்பூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளிலும், கோடம்பாக்கம், சாந்தோம் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளிலும் பயிலுகின்ற 18 மாணவ மாணவியருக்கு, இலவசப் பாடப் புத்தகங்களை நேரில் வழங்கி, இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழகத்திலுள்ள பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 1 கோடியே 8 இலட்சம் மாணவ மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைவர். 2005–2006ஆம் கல்வியாண்டில் இதற்கென ரூபாய் 83 கோடியே 70 இலட்சம் மதிப்பிலான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், அரசு தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திரு.கு.தங்கமுத்து, தமிழ்நாடு பாடநூல் கழக மேலாண் இயக்குநர் திரு.ஸ்வரண் சிங், இ.ஆ.ப., மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. எஸ். பரமசிவன் ஆகியோர் பங்கேற்றனர். ❖

அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டட வளாகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ரூ.10 கோடி செலவில் தமிழ்நாடு அரசின் பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டட வளாகத்தை 25.5.2005 அன்று, திறந்து வைத்தார்கள்.

அரசு நிருவாகத்தில் மேலாண்மை உத்திகளைத் திறம்படப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட, தமிழ்நாடு அரசின் நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையம், தமிழக அரசின் பயிற்சிக் கொள்கைகளுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும், அவற்றைச் செயல்படுத்தும் நிறுவனமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்திற்கென்று ரூபாய் 10 கோடி செலவில், 8,700 சதுர மீட்டர் பரப்பளவில் போதிய இடவசதியோடு, அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புடனும் சென்னை பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலையில் தற்போதுள்ள கட்டடத்தின் அருகில் புதிய கட்டட வளாகம் உருவாக்கப் பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இந்தப் புதிய கட்டட வளாகத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட 200 இருக்கைகள் கொண்ட அரங்கம், குளிர் சாதன வசதி கொண்ட ஆறு வகுப்பறைகள், மூன்று கணினி அறைகள், குளிர் சாதன வசதி கொண்ட நூலகம், 48 அறைகளுடன் கூடிய விடுதி வளாகம், 4 அறைகள் கொண்ட விருந்தினர் இல்லம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

பயிற்சியாளர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தின் புதிய கட்டட வளாகத்திற்கு "**மகிழம்பூ**" என்றும், இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு "**பொன்னரங்கம்**" என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று ரிப்பன் வெட்டியும், குத்து விளக்கு ஏற்றியும், கல்வெட்டைத் திறந்து வைத்தும் இந்தப் புதிய கட்டட வளாகத்தைத் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைமை இயக்குநர் திரு.மை.பீ.பிராணேஷ், இ.ஆ.ப., பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அரசு செயலாளர் திரு.க.அருள்மொழி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ✶

பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகளுக்கு அரசின் சார்பில் இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சைத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், தமிழகத்தில் உள்ள, பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் ஆகிய பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகள் அனைவருக்கும் அரசின் சார்பில், இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளுகின்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் என்பது குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற பிறவிக் குறைபாடு ஆகும். இந்தக் குறைபாடு, குழந்தைகளுக்கு விகாரமான முகத்தோற்றத்தை ஏற்படுத்துவதுடன், பேச்சு சரியின்மை, காது கேளாமை மற்றும் பற்கள் வளர்ச்சியில் குறைபாடு போன்ற மருத்துவக் குறைகளையும் ஏற்படுத்துகிறது. நமது எதிர்கால சந்ததியினர் ஆரோக்கியமான உடல் வளம் படைத்தவர்களாகவும், உறுதியான சிந்தனை உடையவர்களாகவும் திகழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குழந்தைகளுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாடுகள் அனைத்தையும், பொது சுகாதாரப் பிரச்சினையாகக் கருதி தக்க மருத்துவச் சிகிச்சை அளித்திட கடந்த 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஊட்டியில் நடைபெற்ற அகில இந்திய பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்க மாநாட்டில் ஆணையிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள பிறவிக் குறைபாடு உடைய அனைத்துக் குழந்தைகளையும் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கும் வகையில், அதுகுறித்த விவரங்களைத் தொகுத்திட, அனைத்துக் கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் கணக்கெடுக்கும் பணியை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.8.2004 அன்று தொடங்கிவைத்தார்கள்.

இந்தக் கணக்கெடுப்பில், தமிழகத்தில் 5,534 ுழந்தைகள் பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட ்மலண்ணத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ்ண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய பிறவிக் குறைபாடு டைய குழந்தைகள் ஒருவர் கூட சிகிச்சை அளிக்கப்படாமல் விடுபட்டுவிடக் கூடாது என்றும், றிப்பாக ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் பொருளாதார வசதியற்ற காரணத்தால் இந்த மருத்துவ வசதியைப் பெறுகின்ற வாய்ப்பை இழந்துவிடக் கூடாது ன்ற சீரிய நோக்கத்துடன், மாண்புமிகு தமிழக தலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் உள்ள, அறுவைச் சிகிச்சைக்கு உகந்த குழந்தைகளுக்கு, ஆறு ாத காலத்திற்குள்ளாக அரசு சார்பில் இலவசமாக அறுவைச் சிகிச்சை செய்யும் ஒரு விரிவான திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், தமிழகத்தில் ள்ள, பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் ஆகிய பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகள் அனைவருக்கும், அரசின் சார்பில் இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளுகின்ற இந்தப் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

குத்துவிளக்கு ஏற்றி திட்டத்தைத் தொடங்கிவைத்த ாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள உள்ள 2 குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களைப் ரிசாக வழங்கி, தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டதுடன் அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் வெற்றிகரமாக நிறைவேறிட தனது மனமுவந்த ாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்தத் திட்டத்தின்படி சிகிச்சை தேவைப்படும் ுழந்தைகளுக்கு அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் ரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ னைகளிலும் 6 மாதங்களுக்குள்ளாக அறுவைச் கிச்சை அளிக்கப்படும். வறுமைக்கோட்டிற்குக் ழ் உள்ள குடும்பங்களைச் சார்ந்த நபர்கள் தனியார் ருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை மற்கொண்டால் மருத்துவ சிகிச்சைக்காக அரசு சார்பில் 5,000 ரூபாய் வழங்கப்படும். அரசு மருத்துவ னைகளில் இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் சிறப்பு காம்கள் அமைக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைகள் சய்யப்படும். சிகிச்சை தேவை என்று கண்டறியப் ட்டுள்ள குழந்தைகளில் 3 மாதங்களுக்கு மேல் உள்ள ுழந்தைகளுக்கு அவர்களுடைய உடல் தகுதிக்கு ஏற்ற கையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் டைய குழந்தைகள் அனைவருக்கும் இலவசச் ரமைப்பு அறுவைச் சிகிச்சைத் திட்டத்தைத் தாடங்கி உள்ள முதல் மாநிலம் தமிழகம் ன்பது மட்டுமல்ல, இத்தகைய திட்டத்தைச் சயல்படுத்துகின்ற ஒரே மாநிலம் நாட்டிலேயே மிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது ஆணையின்படி செயல்படுத்தப்படும் இந்தப் புதுமைத் திட்டத்தின் மூலம், பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் உடைய, 3 மாதங்களுக்கு மேல் உள்ள அறுவைச் சிகிச்சைக்கு உகந்த குழந்தைகள் அனைவருக்கும் 6 மாத காலத்திற்குள் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிக்கப்படும். இதன் மூலம், இன்னும் 6 மாத காலத்திற்குள் பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் ஆகிய குறைபாடுகள் கொண்ட குழந்தைகளே இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய்சுந்தரம், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச்செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை செயலாளர் திருமதி ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., மருத்துக்கல்வி இயக்குநர் டாக்டர் பி.விஜயலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுத் துறை இயக்குநர் டாக்டர் என்.கல்யாணசுந்தரம், பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் பி. முருகன், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் டி.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ✶

சொந்தமாக ஆட்டோ வாங்க மானியத்துடன் கடன் உதவித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 26.5.2005

தமிழகம் உயர்வு பெற தங்களது உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்கள், எந்தப் பிரிவில் எவ்வகையான பணி செய்பவர்களாக இருந்தாலும், அவர்களது வாழ்வு வளம் பெற வேண்டும். அவர்களது குடும்பம் நலமுடன் வாழவேண்டும் என்பதே எனது உளமார்ந்த விருப்பம் ஆகும். இதன் அடிப்படையில் தான், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துதல், போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தர எனது அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

ஆட்டோ வாகனப் போக்குவரத்து ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்க்கை அளிப்பதுடன், நடுத்தர மக்கள் நாடிச் செல்கின்ற போக்குவரத்து வசதியாகவும் திகழ்கின்றது. ஆட்டோ வாகனப் போக்குவரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும், ஆட்டோ ரிக்ஷா வாகனங்களை ஓட்டுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், ஆட்டோ வாகனத் தொழிலாளர்கள் என்னிடம் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

இரவு பகல் பாராமல், பொதுமக்கள் விரும்புகின்ற எந்தப் பகுதிக்கும் அழைத்துச் செல்கின்ற ஆட்டோ வாகனத் தொழிலாளர்கள் அளித்துள்ள இந்தக் கோரிக்கைகளை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களது ஒட்டுமொத்த நலன் கருதி கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பழைய மோட்டார் வாகனங்களினால் ஏற்படும் புகை சுற்றுப்புறத் தூய்மைக்கு மிகப்பெரும் கேடு விளைவிப்பதால், அவ்வாறு சுற்றுப்புறத்தை மாசுபடுத்துபவர் அதற்கென ஒரு வரியைச் செலுத்த வேண்டும் என்னும் அடிப்படையில் பசுமை வரி (Green Tax) என்னும் ஒரு வரி அனைத்துப் பழைய மோட்டார் வாகனங்களுக்கும் விதிக்கப்படுகிறது. போக்குவரத்து வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டு காலம் முடிவடைந்த பின்னரும் உபயோகத்தில் இருந்தால், பசுமை வரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வசூலிக்கப்படுகின்ற தொகை தங்களுக்கு ஒரு சுமையாக

இருப்பதாக ஆட்டோ ஓட்டுநர்கள் தெரிவித்து அதனைக் குறைக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஏற்று, 7 ஆண்டுகளுக்கு மேலான ஆட்டோ வாகனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு விதிக்கப்படும் பசுமை வரியை 500 ரூபாயிலிருந்து 200 ரூபாயாகக் குறைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்த வரிக்குறைப்பு, நடப்பு நிதியாண்டிலிருந்தே, அதாவது 2005~2006ஆம் ஆண்டில் இருந்தே அமல்படுத்தப்படும்.

சென்னை மாநகரில் வசித்து வரும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது போக்குவரத்துத் தேவைக்கு ஆட்டோக்களையே பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றனர். இந்தத் தேவையை ஈடுகட்டும் வகையில் தற்போது இயங்கிவரும் ஆட்டோக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆட்டோக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் அதேநேரத்தில், அதன் மூலம் சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்தவும் இது வகை செய்யும் என்பதையும் கருத்தில் கொண்டு, சென்னை மாநகரில் கூடுதலாக 5,000 புதிய ஆட்டோ அனுமதிகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இது நடுத்தரக் குடும்பங்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வதோடு, 5,000 குடும்பங்கள் வாழ்வாதாரம் பெறவும் ஏதுவாக அமையும். இந்தப் புதிய ஆட்டோ அனுமதிகள் உரிமையாளரே ஓட்டுநராக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும். மேலும், எரிவாயு திரவத்தின் (LPG) மூலம் இயக்கப்படும் ஆட்டோக்களுக்கு மட்டுமே இந்தப் புதிய அனுமதி அளிக்கப்படும்.

சென்னை மாநகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கும், வசிப்பிடங்கள் மற்றும் வணிக மையங்களுக்கும் அருகில் ஆட்டோ நிறுத்தங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, பெருகி வருகின்ற இத்தகையக் குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் கருதி, அவற்றின் அருகில் புதிய ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட, அனுமதி அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் ஆட்டோ நிறுத்தம் அதிகம் தேவைப்படும் இடங்களை ஆய்வு செய்து அவற்றிற்கு அனுமதி வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இவ்வகையில், சென்னையில் சுமார் 100 புதிய ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

ஆட்டோக்களில் தற்போது அதிகபட்சமாக 3 பேர் மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு மாணவ மாணவியரை ஏற்றிச்செல்லும் ஆட்டோக்களுக்கும் இதே விதிமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. பள்ளிகளுக்கு மாணவ மாணவியரை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்களில் கூடுதலாக மாணவ மாணவியரை ஏற்றிச்செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஆட்டோ ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஏற்கின்ற அதேநேரத்தில், மாணவ, மாணவியரின் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, 14 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் 5 பேர் வரை ஒரு ஆட்டோவில் பயணம் செல்ல அனுமதி வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயதொழில் மேற்கொள்ள ஒரு வாய்ப்பாக ஆட்டோ ஓட்டும் தொழில் அமைந்துள்ளது. இவ்வாறு ஆட்டோ ஓட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும், புதிதாக ஆட்டோ ஓட்டும் தொழிலை மேற்கொள்ள விரும்புவோரும், தங்களுக்கே சொந்தமாக ஆட்டோ பெற்றிட ஏதுவாக எளிதில் கடனுதவி கிடைக்கப்பெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, புதியதாக மானியத்துடன் கூடிய கடன் உதவித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் / வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கப்படும். ஆட்டோ வாகனத்தின் மதிப்பில் 25 சதவிகிதத் தொகையை மானியமாக தமிழக அரசு வழங்கும். அவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சமாக 25,000 ரூபாயாக இருக்கும். இவ்வாறு கடன் உதவி பெறும் நபருக்கு ஆண்டு வருமானம் 36,000 ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும். இவ்வாறு வாங்கப்படும் ஆட்டோக்களின் உரிமையாளரே ஓட்டுநராகவும் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் கடனுதவி வழங்கப்படும்.

இந்த அறிவிப்புகளின் பயனாக ஆட்டோ வாகன போக்குவரத்துத் தொழில் பெரிதும் மேம்படும் என்பதுடன், பெருமளவில் இளைஞர்கள் கடன் உதவி பெற்று ஆட்டோ ஓட்டுநர் – உரிமையாளர் என்ற உயர்வைப் பெறவும், பொதுமக்களின் போக்குவரத்துத் தேவை நிறைவு பெற்றிடவும் வழிவகை செய்யும்.

* * *

பதக்கம் வென்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் கோவா மாநிலம் பனாஜியில் நடைபெற்ற 12ஆவது அகில இந்திய வனத்துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழக வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு மொத்தம் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

10.2.2004 முதல் 14.2.2004 முடிய கோவா மாநிலம் பனாஜியில் நடைபெற்ற 12ஆவது அகில இந்திய வனத்துறை விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கான ரெரக்கப் பரிசுகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சியைச் சேர்ந்த திரு.கே.செல்லதுரை, வனக்காவலர், திரு.பி.செந்தில்குமார், காவலர், திரு.டி.கே.ராஜசேகரன், வனச்சரகர், திரு.ஏ.மணிமாறன், காவலர், திரு.வி.முர்ரத், காவலர், திரு.பி.சரவணன், காவலர், திரு.கே.ஜெயமணி, வனச்சரகம், திருச்சி வட்டம், திரு.எஸ்.கோபி, பணியாளர், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர், திரு.ஆர்.சக்திவேல், காவலர், கோயம்புத்தூர் வட்டம், மற்றும் திரு.கே.கந்தசாமி, இ.வ.ப., கோட்ட வன அலுவலர், நாமக்கல் ஆகியோருக்கு ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ரொக்கப் பரிசுகளைப் பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்கள் தங்களது நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைச் செயலாளர் திரு.சுர்ஜித் கே.சௌத்ரி, இ.ஆ.ப., முதன்மை வனப் பாதுகாவலர் திரு.ஜே.சி. காலா ஆகியோர் பங்கேற்றனர்.

* * *

நதிகள் இணைப்புத் திட்டம் தென்மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகம் அளிக்கும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

வரலாற்றுச் சிறப்புமிக்க புதுச்சேரி நகரில், இன்று நடைபெறும் இந்த 23ஆவது தென்மண்டலக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏறக்குறைய எட்டு ஆண்டு கால நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடைபெறும் இக்கூட்டத்தில் பங்கேற்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது உரையின் நகல் வழங்கப் பட்டுள்ளது. அதனைக் கருத்திற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எழுத்து மூலமான என்னுடைய உரையில் இடம் பெற்றுள்ள முக்கியமான சில கருத்துகளை உங்களோடு நான் இங்கே பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

கடைசியாக திருவனந்தபுரத்தில் 1997ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதத்தின் போது எழுப்பப்பட்ட முக்கியமானதொரு பிரச்சினையை, அதாவது, இம்மண்டலத்தில் புனல்மின் திட்டங்களின் முன்னேற்றத்திற்குப் பரஸ்பர ஒத்துழைப்பு நல்குவது பற்றிய பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். சென்ற ஆண்டில், நாம், கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதும் தேசிய புனல் மின்சக்தி நிறுவனத்தின் ஆதரவுடன் நிலை–1 சிவசமுத்திரம், ஒகேனக்கல் புனல்மின் திட்டங்கள், நிலை–II ராசிமணல், மேகதத்து புனல்மின் திட்டங்கள் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்து வதற்குரிய ஒப்பந்தம் தயாரிக்கின்ற அளவுக்கு நெருங்கி விட்டோம் என்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இது ஒரு மாபெரும் சாதனையாகும். இதனால், இம்மண்டலத்தில் மின் சக்தி கிடைப்பது அதிகரிக்கும். கர்நாடக அரசு, இத்திட்டங்களின் விஷயத்தில் காட்டிய அதே ஒத்துழைப்பைக் காவிரி நதிநீர்த் தகராறுகள் குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்துவதிலும் காட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தென்கிழக்குப் பருவ மழை தொடங்கியவுடன் புதிய வேளாண் பருவமும் தொடங்கிவிடும். எனவே, உச்சநீதிமன்ற ஆணைக்கு ஒப்பான காவிரி நதி நீர் தகராறுகள் நடுவர் மன்றத்

தீர்ப்பைச் செயற்படுத்த வேண்டுமென கர்நாடக மாநில அரசுக்கு நினைவூட்டுவதற்கு இதுவே சரியான தருணம் என நான் கருதுகிறேன்.

புனல்மின் திட்டங்களைத் தொடங்குவதில் மாநிலங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு குறித்து பேசுகின்ற இவ்வேளையில், நீண்ட நெடுங்காலமாகப் பரிசீலனையில் இருந்துவருகிற பாண்டியாறு - புன்னம்புழா மற்றும் சோளத்திப்புழா திட்டங்களையும், தற்போது தயாரிக்கப்பட்டு கேரள அரசுக்குத் தனியாக அனுப்பப்பட்டு வருகின்ற திருத்தியமைக்கப்பட்ட விரிவான தொழில்நுட்ப அறிக்கையின் அடிப்படையில், புதிதாகப் பரிசீலிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மீண்டும் உயிர்ப்பு அளிக்கப்படவேண்டிய முக்கிய மானதொரு தேசியத் திட்டமான நதிநீர் இணைப்புத் திட்டத்தை, மத்திய உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். குறிப்பாக, காவிரி நதியுடன், மகாநதியையும் பின்னர் குண்டாறு நதியையும் இணைக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்பதில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன். இந்த நதிகள் இணைப்புத் திட்டம் தென்மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகம் அளிக்கும் என்பதால் மத்திய உள்துறை அமைச்சர் இத்திட்டத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மண்டலத்தில் சுற்றுலா மேம்பாட்டுக்கான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதில் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரிக்கும், இம்மண்டலத்தைச் சேர்ந்த மாநிலங்கள் ஆகியவற்றிற் கிடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். தென்னிந்திய சுற்றுலா மன்றம் ஒரு நல்ல முயற்சி ஆகும். இதனை நாம் மேலும் முன்னெடுத்துச் செல்லலாம். "தி பேலஸ் ஆன் வீல்ஸ்'' போன்ற சிறப்பு சுற்றுலா ரயில்களை இயக்குதல், கடற்கரைப் பகுதி நெடுக ஆடம்பர கடல் உலாவுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற புது முயற்சிகளை மேற்கொள்ள காலவரையறைக்குட்பட்ட செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

இம்மண்டலத்திலுள்ள மாநிலங்களுக்கும் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிக்குமிடையேயான பெரிய அளவிலான பொருளாதார ஒத்துழைப்புப் பற்றிய கோட்பாடு குறித்தும் நாம் இங்கே விரிவாகப் பேச வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, கூட்டுத் திட்ட முயற்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய கட்டமைப்பு வசதி மேம்பாடு குறித்து, இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது, சாலைகள், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம். தென்னக எரிவாயுக் கட்டமைப்புக் கோட்பாட்டை மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. சென்னை, இம்மண்டலத்தின் மையமாக அமைந்திருப்பதால், எண்ணூர் துறைமுகத்தில் பெரிய அளவிலானதொரு திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) முனையத்தை ஏற்படுத்துவது குறித்துத் திட்டமிடலாம். இது தென்னக எரிவாயுக் கட்டமைப்பின் முக்கிய மையமாக விளங்கும். அடிப்படைக் கட்டமைப்பு வசதியில் முதலீடு செய்வதற்கு ஏதுவாக, மாநிலங்களின் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் அவற்றுக்கு நிபந்தனையற்ற நிதி ஒதுக்கீடு செய்வது குறித்துக் கருதிப் பார்க்கவேண்டும் என்று மாண்புமிகு உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துராஜ் நிறுவன அமைப்பில் மாற்றங்கள் செய்வது குறித்து எனது அரசு சில கருத்துகளைத் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பு, கூட்டாட்சி முறையிலான இரண்டடுக்கு அமைப்பாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும். அதுதான் நமது சமுதாயப் பண்பமைதிக்கு மிகவும் பொருத்த மானதாக இருக்கும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் பொருந்தக்கூடிய நீக்குப் போக்கான விருப்புரிமையை அளிப்பதற்கு வகை செய்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவர ஏதுவாக இது குறித்துப் புதிதாக, முழுமையாகப் பரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டு அளவைப் பாதுகாத்துக் கொள்ள மாநிலங்களை அனுமதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யும் முக்கியப் பிரச்சினை குறித்து தற்போது நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு நான் முதலமைச்சராக இருந்தபோது, அப்போது நடைமுறையில் இருந்துவந்த 69 சதவிகித இடஒதுக்கீட்டினைப் பாதுகாத்திடவேண்டி, மாநில சட்டமன்றத்தில் தனிச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 45/1994 என்ற இச்சட்டம் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்குப் பாதுகாப்பு அளித்தது. இச்சட்டத்திற்கு அரசியலமைப்புச் சட்ட பாதுகாப்பு அளித்திடுவதற்காக 1994ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்ட எழுபத்தியாறாவது திருத்தத்தின் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் இது சேர்க்கப்படுவதை நான் உறுதி செய்தேன். தமிழ்நாடு சட்டம் 45/1994ஐ எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு இன்னும் விசாரணையில் இருந்து வருகிறது. இதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதுதான் மிகவும்

பொருத்தமாக இருக்கும்; அப்போதுதான் தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு போன்ற முந்தைய இடஒதுக்கீட்டு அளவைத் தக்கவைத்துக்கொள்ளும் அதிகாரத்தை மாநிலங்கள் பெறமுடியும். தற்போது உருவாகியுள்ள முரண்பாடான நிலைமைக்கு இதுதான் சரியான தீர்வாக அமையும்.

அடுத்ததாக, 15.4.2005 அன்று புதுடெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு குறித்த மாநாட்டில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுள்ள பல பொருள்களை உள்ளடக்கிய கூடுதல் பொருள்நிரல் பற்றிப் பேச விரும்புகிறேன்.

பெண்களையும், சிறுவர், சிறுமியரையும் இழி தொழிலில் ஈடுபடுத்துகிற பிரச்சினை கவலை அளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டில், அத்தகைய குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்ய உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டு விபச்சார (தடுப்பு) சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய குற்ற ஆவணப் பிரிவின் (NCRB) அண்மைக்கால அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தப் பிரச்சினையைக் கையாள்வதில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டினையே இது சுட்டிக் காட்டுகிறது. என்னுடைய அரசு இது தொடர்பான நடைமுறையில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தி இந்தச் சமூகக் கேடு தொடர்வதற்கு முக்கியக் காரணமாக இருக்கின்ற குற்றவாளிகளான பெண் தரகர்கள் மற்றும் இழி தொழிலில் ஈடுபடுத்துவோர் கண்காணிக்கப்படுவதை என்னுடைய அரசு உறுதி செய்தது. பெண்தரகர்கள் மற்றும் இழி தொழிலில் ஈடுபடுத்துவோருக்கு எதிரான நடவடிக்கைக்கு வகை செய்யும் மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, 2001–ஆம் ஆண்டில் 12 ஆக இருந்து 2004ஆம் ஆண்டில் 85 ஆக உயர்ந்துள்ளது. இப்பிரச்சினையை அது வேர்விடும் நிலையிலேயே கிள்ளி எரிவதற்கான சிறப்பு முயற்சியில் அரசு சாரா அமைப்புகளையும், ஈடுபடுத்துவதற்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் (Swadhar Scheme) நிதியுதவி அளிப்பதற்காக, மொத்தம் ரூ.1.76 கோடி செலவு ஆகக் கூடிய 13 செயற்குறிப்புகளை என்னுடைய அரசு அனுப்பியுள்ளது. இச் செயற்குறிப்புகளுக்கு விரைவில் அனுமதியளிக்கப்பட வேண்டுமென்று இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்காக குற்றம் மற்றும் றவாளிகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள ண்டும் என்கிற கருத்து உண்மையிலேயே மிகவும் ருத்தமானதே. சென்னையில் மாநில குற்ற ஆவணப் பிரிவை, அண்மையில் நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதை இது தொடர்பாக இங்கே அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். முற்றிலும் கணினிமயமாக்கப் பட்டுள்ள இப்பிரிவு, மாநில அளவில் குற்றங்களை விரைவில் ஒப்புமைப்படுத்திச் சரிபார்க்க உதவுகிறது. அனைத்திந்திய அளவில் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தத்தக்க அளவில் இம்முயற்சியை நாம் முன்னெடுத்துச் செய்வது மிகவும் இன்றியமை யாததாகும். குற்றம் பற்றிய தகவல்களை மாநிலங்களுக்கிடையே பரிமாறிக் கொள்ள உதவுகின்ற திட்டம் ஒன்றை உள்துறை அமைச்சகம் முன்னின்று உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

குற்றம் பற்றிய புள்ளிவிவரத் தகவலை உடனுக்குடன் அளிப்பது பற்றி மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தமிழ்நாடு, 2004ஆம் ஆண்டுக்கான குற்றம் பற்றிய புள்ளிவிவரத் தகவலை, தமிழக அரசு தேசிய குற்றப் பதிவுப் பிரிவிற்கு அளித்துள்ளது என்ற தகவலை இது தொடர்பாக தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறைகளை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். ரூ.77 கோடி செலவில் புழலில் கட்டப்பட்டு வருகின்ற எங்களுடைய புதிய மற்றும் நவீனச் சிறை வளாகம், 2005 நவம்பர் திங்களில் ஆயத்தமாகிவிடும் என்பதை இது தொடர்பாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்லியில், 15.4.2005 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பற்றிய மாநாட்டில் நான் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக மகாநகரங்களின் காவலுக்கான திட்டத்தை, உடனடியாக அறிவித்தமைக்காக மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். கடலோரப் பாதுகாப்பு பற்றிய எங்களுடைய செயற்குறிப்புகளை, மத்திய அரசு பரிசீலித்து வருகிறது என்றும், அந்தக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், கடலோரப் பாதுகாப்பிற்கென தனிப்படை அணி ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். இச் செயற்குறிப்பு 26.5.2005 அன்று விவாதிக்கப்பட்டது என்றும் தேவையான பணியாளர்களுக்கான தொடரினச் செலவை, மாநில அரசு ஏற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதை நான் அறிகிறேன். பணியாளர்களுக்கான சம்பளங்கள் வகையிலான செலவு உட்பட முழுச் செலவையும் 5 ஆண்டுகளுக்காவது மத்திய அரசு ஏற்க வேண்டும்.

எங்களுடைய செயற்குறிப்பில் திட்டமிட்டுள்ளவாறு, துணைச் சாதனங்களுடன் காவல் படையணியை, உடனடியாக ஏற்படுத்திட ஏதுவாக இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கருத்தை ஏற்று மத்திய உள்துறை அமைச்சர் நக்ஸலைட்டுகளால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைப்புக் குழுவில் தமிழ்நாடு முதலமைச்சரையும் சேர்த்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பின்தங்கிய மாவட்ட சிறப்பு முயற்சிகள் என்பது, தற்போது பின்தங்கிய வட்டார மானிய நிதி என்பதன் கீழ் புதிய திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்று நான் அறிகிறேன். முந்தைய திட்டத்தில், நக்ஸலைட்டு பிரச்சினையால் பாதிக்கப்பட்ட 55 மாவட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டிலிருந்து எந்தவொரு மாவட்டமும் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. 2005–2006ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வரும் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டைச் சேர்ந்த தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களை நக்ஸலைட்டு பாதிப்பு மாவட்டங்களாகச் சேர்க்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் எல்லைகளை ஒட்டி அமைந்துள்ள இம்மூன்று மாவட்டங்களுக்கும் பின்தங்கிய வட்டார நிதியிலிருந்து சிறப்பு நிதி கிடைக்கச் செய்ய வேண்டும்.

தேசிய அளவிலும் மாநில அளவிலும் பேரிடர் மேலாண்மை குறித்ததொரு சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பை நான் வரவேற்கிறேன். பேரிடர் ஏற்படும் நேர்வில் அது தொடர்பான உடனடி நிவாரண நடவடிக்கை எடுக்கும் அமைப்பை நிறுவன ரீதியானதாக்க இது உதவும். ஆழிப் பேரலைகள் (சுனாமி) தமிழ்நாட்டை தாக்கியபோது அரசு இயந்திரம் ஒருங்கிணைந்து சிறப்பாகச் செயல்பட்டமை உலக அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. இனி இத்தகைய நெருக்கடி ஏற்படும் போது, இதனைக் கையாளுவதற்கு உரிய முறையான நிறுவன அமைப்பை ஏற்படுத்துவது குறித்து கருதிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். வரைவு சட்டமுன் வடிவின் விவரங்களை ஆராய்ந்து, எங்களுடைய பதிலை அளிப்போம். தேசிய பேரிடர் நிவாரணப் பணிக் குழுக்கள் எட்டு படைப் பிரிவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளதாக நான் அறிகிறேன். இது போன்ற மாநில அளவிலும் நிவாரணப் பணிக் குழுக்கள் அமைக்கப்படலாம் என்றும் சாதாரணமாக இயற்கைச் சீற்ற நிவாரண நிதி முழுவதும் நடப்பு இயற்கைச் சீற்றங்களைச் சமாளிப்பதற்கே செலவிடப்பட்டுவிடுவதால் இந்நிதியிலிருந்து செலவு செய்யுமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொள்வதற்குப் பதிலாக இக்குழுக்களை அமைக்க சிறப்பு நிதி அளித்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் நான் கருதுகிறேன்.

ஊரக ஏழைக் குடும்பம் ஒவ்வொன்றிலும், உரிய வயதடைந்த ஒவ்வொருவருக்கும் ஓராண்டில் குறைந்தது 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வகை செய்யும் வேலைவாய்ப்பு உத்தரவாதக் கோட்பாட்டை நான் வரவேற்கிறேன். அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தினை மாற்றியமைக்க வேண்டிய சில அம்சங்கள் உள்ளன. வேலைவாய்ப்பின்மை உதவித்தொகை (Unemployment Allowance) அளிக்கவேண்டிய பொறுப்பு மாநில அரசைச் சார்ந்தது என்று இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வேலை வாய்ப்பின்மை உதவித் தொகைக்கும் மத்திய அரசே முழுமையாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தில், திட்டச் செலவில் 25 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்க வேண்டும் என்று வகை செய்யப்பட்டுள்ளது. இது மாநில அரசுக்குப் பெருத்த நிதிச்சுமையை ஏற்படுத்தும். மாநில அரசின் பங்களிப்பு 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயனடைவோரில் குறைந்தது 50 சதவிகிதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும் என்பது சட்டப்படி கட்டாயமானதாக்கப்படவேண்டும். இதன்கீழ் பல்வேறு ஊரகப் பணிகளும் சேர்க்கப்பட்டு வேலைவாய்ப்பின் தன்மை விரிவாக்கப்பட வேண்டும். உத்தேச வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் இக் கருத்துகளையும் இணைக்க வேண்டியது அவசியமாகும்.

2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தமிழ்நாடு கடற்கரையைக் கடும் சீற்றத்துடன் தாக்கிய "சுனாமி" ஆட்கொல்லிப் பேரலைகள் ஏற்படுத்திய அளப்பரிய அழிமானங்களைப் பற்றி மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் நன்கு அறிவார். உடனடி நிவாரணம் அளிப்பதற்கான தொடக்கப் பணிகள் முடிவடைந்து விட்ட நிலையில், நீண்டகால மறு மீள் உருவாக்கப் பணிகளை நாங்கள் தற்போது மேற்கொண்டு வருகிறோம். புதிய வீடுகளைக் கட்டித்தருவதற்கும், வாழ்வாதாரங்களை புதுப்பிப்பதற்கும் தேவையான அனைத்தையும், நாங்கள் செய்து வருகிறோம் என்றாலும், சுனாமி ஆட்கொல்லிப் பேரலைகள் தமிழ்நாட்டில் உள்ள பல கடற்கரை மாவட்டங்களில் பொருளாதாரத்தையே சீரழித்து விட்டன. எனவே, இந்த மாவட்டங்களில் தொழில்களில் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் புதிய வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

2001ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஏற்பட்ட பெருத்த நில நடுக்கத்தினால் கடும் நாசத்திற்குள்ளான குஜராத்தின் கச் பகுதியில் தொடங்கப்பட்ட புதிய தொழில் பிரிவுகள் உற்பத்தி செய்த ஆயத்தீர்வை விதிக்கத்தக்க

பொருட்களுக்கு, இந்திய அரசின் நிதி அமைச்சகம், வருவாய் துறையின் 31.7.2001ஆம் நாளிட்ட 39/2001ஆம் எண் மத்திய ஆயத்தீர்வை அறிவிக்கையின்படி ஆயத் தீர்வை செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட்டதை மத்திய உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். அதேபோல, இமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்தராஞ்சல் ஆகிய மாநிலங்களில் தொழில் பிரிவுகள் ஏற்படுத்தப் படுவதற்கும் மத்திய அரசு இவ்வாறு ஆயத்தீர்வை விலக்களிக்கிறது. இதைப்போன்றே அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் ஏற்படுத்தப்படும் புதிய தொழில் பிரிவுகளால் உற்பத்தி செய்யப்படும் ஆயத் தீர்வை விதிக்கத்தக்க பொருட்கள் அனைத்திற்கும், அத்தகைய தொழில் பிரிவுகள் வணிக ரீதியாக உற்பத்தியைத் தொடங்கும் நாளிலிருந்து பத்தாண்டுக் காலத்திற்கு ஆயத்தீர்வை விதிப்பதினின்றும், விலக்களித்து அறிவிக்கை ஒன்று வெளியிடப்படவேண்டும். இந்த அறிவிக்கை, தமிழ்நாட்டில் சுனாமி பாதித்த மாவட்டங்களையும் உள்ளடக்க வேண்டும். விரைவில் தேவையான அறிவிக்கை வெளியிட இயலும் வகையில் இந்தப் பிரச்சினையை அவசரமாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், சுனாமி துயரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுதல் உட்பட பெருமளவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் எஃகு, சிமிட்டி, குழாய்கள் மற்றும் ஏனைய கட்டுமானப் பொருட்கள்/சாதனங்கள் மீது மூன்றாண்டு கால அளவிற்கு ஆயத்தீர்வை விதிப்பதினின்றும், மத்திய அரசு விலக்களிக்க வேண்டும்.

இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்குப் பயனுள்ள தீர்வுகள் காண்பதற்கு இந்த விவாதங்கள் வழி வகுக்கும் என்ற நம்பிக்கையிலும், மண்டலங்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய அணுகுமுறைகளை வகுப்பதற்கு உறுதுணையாக அமையும் என்ற நம்பிக்கையிலும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமானப் பொருட்கள் குறித்து என்னுடைய கருத்துகளை இங்கு சுருக்கமாக நான் எடுத்துரைத்துள்ளேன். நம்மைப் போன்ற ஓர் கூட்டாட்சி அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில், ஒவ்வொரு மாநிலமும், வெவ்வேறு அரசியல் கட்சிகளால் அமைக்கப்பட்ட அரசைக் கொண்டிருக்கலாம் என்றாலும், பரஸ்பரம் பயனளிக்கும் தீர்வுகளைக் காண்பதுதான் எப்போதுமே நமது தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். தேசிய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ள சில பிரச்சினைகளையும் நான் எழுப்பியுள்ளேன். இங்கு எடுத்துரைக்கப்பட்ட கருத்துரைகளை விரைந்து செயற்படுத்த ஏதுவாக, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் இவற்றை விரைந்து பரிசீலிக்க நடவடிக்கை எடுப்பார் என்று நான் நம்புகிறேன்.

தமிழக அரசின் கருத்துகளுக்கு மதிப்பளித்து அவற்றை உள்வாங்கிக் கொள்வதில் ஆர்வமும், அக்கறையும் காட்டிய மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், மத்திய–மாநில அரசுகளுக்கிடையே தொடர்ந்து ஒரு உறுத்தலாக இருந்து வருகிற ஒரு விஷயத்தைப் பற்றி இங்கே குறிப்பிட விழைகிறேன். நம்மைப் போன்ற கூட்டாட்சி அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில், ஒரு மாநிலத்தில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், பரஸ்பர புரிந்துணர்வு கொள்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது மத்திய அரசுதான். ஆனால், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சிலரிடையே, மாநில அரசை அறவே உதாசீனப்படுத்துகிற அல்லது தேசிய நலனைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் மாநில அரசைக் கடுமையாகச் சாடுகின்ற போக்கு காணப்படுகிறது. இத்தகைய போக்கு விட்டொழிக்கப்பட வேண்டும். மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி சில அடிப்படையான நாகரிகம் கூட இல்லாமல், கண்ணியமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கண்டித்து அடக்கி வைப்பார் என நான் நம்புகிறேன்.

மண்டலக் குழுக் கூட்டத்தை நடத்துவதற்கான இடத்தைத் தேர்வு செய்வதில் சுழற்சி முறை பின்பற்றப்படுவதாலும் இக் கூட்டங்கள் அபூர்வமாகவே நடத்தப்படுவதால், அடுத்த வாய்ப்பு, சென்னைக்கு வெகு காலத்திற்குப் பிறகே வரும் என்றும் அறிகிறேன். எனவே, இந்தக் கூட்டங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கும் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும் பயனுள்ள களமாகப் பரிமளிக்க வேண்டுமாயின், இக்கூட்டத்தை, குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையேனும் நடத்தி, கூடிய விரைவில் இக்கூட்டத்தை நடத்துவதற்கான வாய்ப்பையும், மகிழ்ச்சியையும் எங்களுக்கு நல்கிட வேண்டுமென்ற கருத்தை வைத்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

புதுச்சேரியில் 31–5–2005 அன்று நடைபெற்ற
23ஆவது தென்மண்டலக் குழுக்கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

காப்பீட்டுத் திட்டத்தில் மேலும் 50 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்படுவார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 22.6.2005

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறவும், கணிசமான வருவாய் ஈட்டிடவும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத்திட்டங்களையும், என்னுடைய தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில், அதாவது 2004–2005இல் "புங்கர் பீமா யோஜனா" (Bunkar Bima Yojana) என்ற பெயரில் புதிய காப்பீட்டுத் திட்டத்தை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் (Life Insurance Corporation of India) இணைந்து செயல்படுத்திட நான் ஆணையிட்டேன். இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உறுப்பினராகவுள்ள நெசவாளர்ஒவ்வொருவருக்கும், மத்திய அரசின் பங்காக ரூ.150, ஆயுள் காப்பீட்டுக் கழகப் பங்காக ரூ.100, நெசவாளர்களின் பங்காக ரூ.130, ஆகமொத்தம் ரூ.380 பிரீமியத் தொகையாக செலுத்தப்படவேண்டும். கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.130ஐ தமிழக அரசே செலுத்திட நான் ஆணையிட்டேன். இதன்படி, முதல் கட்டமாக, கடந்த ஆண்டில் (2004–2005) 76,096 கைத்தறி நெசவாளர்கள் செலுத்த வேண்டிய மொத்த பிரீமியத் தொகையான 98 இலட்சத்து 92 ஆயிரத்து 480 ரூபாயைத் தமிழக அரசே செலுத்தியது. கைத்தறி நெசவாளர்கள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையை அவர்களது சார்பாகத் தமிழக அரசே செலுத்தி விடுவதால், நெசவாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைய தனியாக பிரீமியத் தொகை எதுவும் செலுத்த வேண்டிய தேவை இல்லை என்று நான் அறிவித்தேன்.

கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளித்து, அவர்தம் துயர்துடைக்கும் இந்த "புங்கர் பீமா யோஜனா" காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நெசவாளர்களின் நலனை முன்னிட்டு, இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இந்த ஆண்டில், அதாவது 2005–2006இல் கூடுதலாக 50,000 நெசவாளர்களை இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், நெசவாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.130 வீதம், 50,000 நெசவாளர்களுக்கு இந்த ஆண்டில் (2005 – 2006) செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.65 இலட்சமும், மற்றும் ஏற்கெனவே, இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள 76,096 நெசவாளர்களுக்கு, இந்த ஆண்டில் (2005 – 2006) செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ.98,92,480 ஆக மொத்தம் ரூ.1,63,92,480ஐ தமிழக அரசே செலுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், மொத்தம் 1,26,096 நெசவாளர்கள் பயனடைவார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்கள் 60 வயதுக்கு முன்னர் இயற்கையாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000 வழங்கப்படும். விபத்தில் மரணம் அடைந்தால் ரூ.80,000, விபத்தில் முழுவதும் செயல் இழக்க நேரிட்டால் ரூ.50,000, பகுதி செயல் இழப்பு ஏற்படின் ரூ.25,000 இழப்பீட்டுத்தொகையாக வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை, அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ.300 கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

* * *

சென்னைப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8–6–2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தரமணி, கிண்டி வளாகங்களில் கட்டப்பட்டுள்ள மொத்தம் ரூ.2.63 கோடி மதிப்பிலான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு, சேப்பாக்கம் ஆகிய வளாகங்களில் மொத்தம் ரூ.14.85 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப் படவுள்ள கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8–6–2005 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தரமணி வளாகத்தில் விலங்கு அறிவியல் நெறிமுறைகளைப் பின்பற்றி புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள், தடுப்பூசிகள், மரபு வழி நோய்களின் காரணம் அறிதல் ஆகியவற்றை ஆய்வு செய்ய ரூ. 1 கோடியே 53 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள விலங்கக வசதி மையம், நோய் பரப்பிகளாகச் செயல்படும் பூச்சிகளை அழிப்பதற்கான பூச்சிக் கொல்லிகளை ஆய்வு செய்ய ரூபாய் 60 இலட்சம் மதிப்பில் கிண்டி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள பூச்சிகள் வளர்ப்பு மையம், 500 கிலோவாட் மின்திறன் கொண்ட 'தனி மின்னாக்கி' மற்றும் அதே வளாகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாணவர் நல மையம் ஆகிய புதிய கட்டடங்களை திறந்துவைத்தார்கள்.

மேலும், இதே நிகழ்ச்சியில், சேப்பாக்கம் வளாகத்தில் ரூ.6.83 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள, தொலை வழிக் கல்விக்கான படப்பிடிப்பகம்; செயற்கைக்கோள் வழி கல்வி ஆய்வுக்கூடம்; இணைய வகுப்பறைகள்; தொலைவழிக்கல்வி பாட உருவாக்கக்கூடம் மற்றும் கருத்தரங்கம் ஆகியவை அமைந்த தொலைவழிக்கல்வி கட்டடம்; ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள தரவு மூலமையம்; மின் ஊடக ஆய்வுக்கூடம்; காட்சி கேட்புப் படத் தயாரிப்பகம் ஆகியவற்றைக் கொண்ட தகவல் இயல், தரவியல் மற்றும் அறிவூட்டவியல் மையம்; கிண்டி வளாகத்தில், ரூ.1 கோடியே 95 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள, உயிர் வேதியியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் துறைகளுக்கான தனிக் கட்டடம்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் இயற்பியல் துறையை நிறுவியதோடு 1954இல்

'கொலாஜன்' அமைப்பைக் கண்டுபிடித்து உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் மறைந்த டாக்டர் ஜி.என்.இராமச்சந்திரன் அவர்கள் பெயரில் அமைந்துள்ள நவீன கருவியக வசதிக் கட்டடம்; தரமணி வளாகத்தில் ரூ.1 கோடியே 29 இலட்சம் மதிப்பில் கட்டப் படவுள்ள நுண்ணுயிரியல் கட்டடப் பிரிவு; ரூ.73 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள மாணவியர் விடுதி; சேப்பாக்கம் வளாகத்தில், மின் தடை ஏற்படுகின்றபோது மின்வசதி அளிக்கும் வகையில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்தப்படவுள்ள, 500 கிலோ வாட் மின்திறன் கொண்ட மின்னாக்க வசதி கொண்ட கட்டடம்; சேத்துப்பட்டு வளாகத்தில், நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக, தற்காலிகமாகத் தங்கிச் செல்லும் வகையில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள, மாணவ விளையாட்டு வீராங்கனைகளுக்கான தங்கும் வசதி கொண்ட கட்டடம் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், தலைமைச்செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப.,சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ச.ப.தியாகராசன் ஆகியோர் உடனிருந்தனர். ❖

மருத்துவம், பொறியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சி பயிலும் மாணவ, மாணவியருக்கு நிதிஉதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், போதிய நிதிவசதி இல்லாது தவிக்கும் மருத்துவம் (M.B.B.S.), பொறியியல் (B.E) ஆகிய பட்டப்படிப்புகளில் பயிலும் 4 பேருக்கு தலா 25 ஆயிரம் வீதமும், ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் 13 பேருக்கு ரூபாய் 5,000 வீதமும், ஆகமொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 65 ஆயிரத்திற்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிலும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.வி.ராமன், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பயிலும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.டி.பழனி ஆகியோர், தொடர்ந்து மருத்துவக் கல்வி (M.B.B.S.) பயிலவும், சென்னை குரோம்பேட்டை எம்.ஐ.டி.யில் பயிலும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ஆர். அருண்குமார், கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி என்.பிரேமாவதி ஆகியோர், தொடர்ந்து பொறியியல் கல்வி (B.E) பயிலவும் மற்றும் ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு பயிலும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எம்.சௌந்திரபாண்டியன், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஏ. வளர்மதி, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி டி.தனலட்சுமி, திரு.எம்.ரமேஷ், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் ஆர்.சுரேந்தர், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி எம்.அமுதலட்சுமி, எம்.ஆணைக்குட்டி, திரு.எம்.இளங்கோவன், திரு.ஏ. ஜெயக்குமார், செல்வி வி. கவிதா, செல்வன் பி.வானுந்தர், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஜி. சிவசங்கரி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஜி. மகாலட்சுமி ஆகியோர் தங்களது கல்விச் செலவுக்கென நிதியுதவி கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில் கோரிக்கை மனு கொடுத்திருந்தனர்.

இவர்களது கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த மருத்துவக்கல்வி மற்றும் பொறியியல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு தலா ரூ.25,000 வீதமும், ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு பயிலும் மாணவ – மாணவிகளுக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதமும் மொத்தம் 1 இலட்சத்து 65 ஆயிரத்திற்கான தொகையினை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டு அதற்கான காசோலைகளை 8.6.2005 அன்று அந்த மாணவ மாணவிகளிடம் நேரில் வழங்கினார்கள்.

நிதிஉதவியைப் பெற்றுக்கொண்ட மாணவ மாணவிகள் அனைவரும் தங்களது குடும்பச் சூழ்நிலையை அறிந்து தக்கநேரத்தில் நிதிஉதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஆந்திர

மாநிலம் ஐதராபாத் மற்றும் விசாகப் பட்டினம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற 32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற 44 தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூபாய் 12 இலட்சத்து 15 ஆயிரத்தை ஊக்கத் தொகையாக வழங்கிப் பாராட்டினார்கள்.

மேலும், சதுரங்க விளையாட்டில் 2003 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் ‘கிராண்ட் மாஸ்டர்’ (Grand Master) பட்டம் பெற்ற சென்னையைச் சேர்ந்த திரு.ஆர்.பி. ரமேஷ் மற்றும் செல்வி எஸ். மீனாட்சி ஆகியோருக்கு தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 10 இலட்சம் சிறப்பு ஊக்கத் தொகையினை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு ஊக்கத்தொகை

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திவரும் இந்திய ஒலிம்பிக் சங்கம், 32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளை 2002ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஐதராபாத் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் நடத்தியது. இந்தப் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் மற்றும் வீராங்கனைகள் தனித்திறன் போட்டிகளிலும், குழுப் போட்டிகளிலும் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். இவர்கள், கூடைப்பந்து (ஆண்கள்), கால்பந்து

(ஆண்கள்), கையுந்துப் பந்து (ஆண்கள் மற்றும் பெண்கள்), சேபக் டக்ரா (Sepak Takraw), பீச் வாலிபால் (ஆண்கள் மற்றும் பெண்கள்), மேசைப்பந்து (ஆண்கள்), பளு தூக்குதல் (ஆண்கள்), படகுப்போட்டி (ஆண்கள்), நீச்சல் மற்றும் தடகளம் ஆகிய போட்டிகளில் மொத்தம் 105 பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெயரும், புகழும் பெற்றுத் தந்துள்ளனர்.

ஆந்திர மாநிலம் ஐதராபாத், விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற 32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 6–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில், சென்னை, சைதாப்பேட்டையைச் சேர்ந்த திருமதி மஞ்சுளா என்பவருக்கு அவரது கண்பார்வையற்ற மற்றும் மனவளர்ச்சிக்குன்றிய இருமகன்களின் சிகிச்சை மற்றும் பராமரிப்புச் செலவுக்காக ரூபாய் 50,000–த்திற்கான காசோலையினை முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 6–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில், கிணற்று வேலை செய்தபோது இரு கைகளின் விரல் பகுதிகளையும் இழந்த விழுப்புரம் மாவட்ட சவரியார்பாளையத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி என்பவருக்கு நிவாரண உதவியாக ரூபாய் 50,000–த்திற்கான காசோலையினை முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

தமிழகத்தின் சார்பில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்ற 44 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையாக மொத்தம் 12.15 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு வழங்கிப் பாராட்டினார்கள்.

சதுரங்கத்தில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றோருக்கு சிறப்பு ஊக்கத்தொகை

சென்னை வடபழனியைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீரர் திரு.ஆர்.பி.ரமேஷ் மற்றும் மேற்கு கே.கே.நகரைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீராங்கனை செல்வி எஸ். மீனாட்சி ஆகியோர், தேசிய அளவிலும், உலக அளவிலும் பல்வேறு சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று 2003 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றுள்ளனர். இவர்களது திறமைகளைப் பாராட்டி, சதுரங்க விளையாட்டில் மேலும் சாதனைகள் படைக்க ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு ஊக்கத் தொகையாக தலா 5 இலட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, சதுரங்க விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற திரு.ஆர்.பி.ரமேஷ் மற்றும் செல்வி எஸ். மீனாட்சி ஆகிய இருவருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தலா ரூபாய் 5 இலட்சத்திற்கான காசோலைகளை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

ஊக்கத் தொகையினைப் பெற்றுக் கொண்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *

பூம்புகார் மாநில விருது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பல்வேறு கைத்திறன் தொழில்களில் சிறப்புமிகு திறமை பெற்றுள்ள 20 கைவினைஞர்களுக்கு "பூம்புகார் மாநில விருது"களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் கைத்திறன் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் திறமையினை வெளிக்கொணர்ந்து அவர்களை ஊக்குவித்துப் பாராட்டுவதோடு பரிசும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கைத்தொழில் திறமை, கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி, மற்றவர்களுக்கு அவர் அளித்த பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் 5 கைவினைஞர்கள் "பூம்புகார் மாநில விருது" பெறத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இதன்படி, திரு.வி.நாகராஜன் (தஞ்சாவூர் ஓவியம்), திரு.கே.நாகசாமி (நூக்க மர பதிப்பு), திரு.என்.சண்முகசுந்தரம் (மூங்கில் வேலைப் பாடு), திரு.எம். செண்பகராமன் (சணல் நார்), திரு.எஸ்.வரதராஜன் (பஞ்சலோகம்), திரு. வி. ஹரிகிருஷ்ணன் (கற்சிற்பம்), திரு.ஜெயா குரூஸ் (கோக்கனட் சிப்ஸ் மாலை), திரு.கே.என்.பாலு மணி (நெட்டிவேலை), திரு. வி.பாலசுப்ரமணியன் (தஞ்சை ஓவியம்), திரு.என்.பக்கிரிசாமி (நெட்டி வேலை), திரு.ஜே.ரா.ஜவான் ஷெல்லி (தீக்குச்சிகளால் செய்யப்பட்ட ஓவியம்), திரு.ஜி. செல்வம் (மட்பாண்டம்), திரு.டி.நாகராஜன் (சுட்ட களிமண்), திரு.கே.அருள் (மரச் சிற்பம்), திரு. சுப்பிரமணியம் (மாவுக்கல்), திரு.என்.துரைராஜ் (மரச் சிற்பம்) திரு.கே.பி.உமாபதி மற்றும் திரு.கே.பி.விழிநாதன் (துகட்டுவேலை), திரு.ப.சாம்போஜி போன்ஸ்லே (தஞ்சாவூர் ஓவியம்), திருமதி.க.வாசுகி (களிமண்) ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்த விருது பெறும் கைவினைஞர்களுக்கு ரூபாய் 5,000 ரொக்கப்பணம், வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும், இந்த விருது பெற்றவர்கள் 60 வயதை அடைந்தவுடன் மத்திய அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான ரூபாய் 1,000 பெறவும் தகுதி உடையவர்களாகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து விருதுகளைப் பெற்றுக் கொண்ட இந்த கைவினைஞர்கள் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு.எம்.ரவிச்சந்திரன், கைத்தறித்துறைச் செயலாளர் திரு.ஏ.இளங்கோவன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 200 ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 12 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை உட்பட ஓய்வூதியம் மொத்தம் 70 ஆயிரத்து 307 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கு ஏற்ப 30.11.1994 அன்று கட்டுமானத் தொழில்களில் ஈடுபட்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தினால் உயிரிழந்தாலோ, விபத்தினால் உடல் உறுப்பு இழப்பு அல்லது பகுதி முடக்கம் ஏற்பட்டாலோ காப்பீட்டுத்தொகை வழங்கவும், ஓய்வூதியம் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் 60 வயதினைப் பூர்த்தி செய்து பதிவு பெற்ற தொழிலாளியாகத் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் இருப்பவர்கள் இந்த ஓய்வூதியத்திற்குத் தகுதியுடையவராவார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தகுதியுடைய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 2000 – 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூ.200 மாத ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும், 2000 – 2001ஆம் ஆண்டு முதல் ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கப்படும் என்றும், 29.3.2005 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், தற்போது 409 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னையைச் சேர்ந்த ஜி.சண்முகம், ஆர்.பச்சையப்பன், எஸ். நடராஜன், எம்.ஆர்.சாமி, வி.பெருமாள், சி.எஸ்.முருகேசன், வி.துரைராஜ், குப்பம்மாள், வேலூரைச் சேர்ந்த எம். முனுசாமி, கே. கேசவன், சேலத்தைச் சேர்ந்த கே.கோவிந்தன், சி.அம்மனியம்மாள் ஆகிய 12 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 9.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், நிலுவைத் தொகை உட்பட ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு.பி.அண்ணாவி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலர் திரு. என்.கோவிந்தன், இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையாளர் திரு.எம்.சாய்குமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

ஊனமுற்றோருக்கான விருதுகள்

ஊனமுற்றோரில் சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்களுக்கும், ஊனமுற்றோர்களுக்காகச் சிறப்பாகச் சேவை புரிந்தவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் மூலம் ஆண்டுதோறும் மாநில விருதுகள் மற்றும் இந்திய அரசால் தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேசிய விருது (National Award)

அ) அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் ஆகியோருக்கான சிறந்த பணியாளர் (Best Employee) மற்றும் சிறந்த சுயதொழில் செய்யும் பணியாளர் (Best Self Employed) ஆகியோருக்காக மொத்தம் 25 விருதுகளும்,

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தோர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சிறந்த தனியார் தொழிலதிபர்களுக்காக என 18 விருதுகளும்,

இ) ஊனமுற்றோரை அதிக அளவில் வேலைக்கு அமர்த்திய பணியமர்த்தும் அலுவலர் (Placement Officer) நான்கு நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாகச் சேவை புரிந்த ஐந்து தனி நபர்களுக்கும் (Best Individual Award),

உ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாகச் சேவை புரியும் ஆறு தொண்டு நிறுவனங்களுக்கும் (Best Institution Award),

ஊ) ஊனமுற்றோரின் மறுவாழ்விற்காக உதவும் நவீன சாதனங்களைக் கண்டுபிடித்த சிறந்த தொழில் நுட்ப சாதனைக்காக (Best Technological Innovations Award) 3 விருதுகளும்,

எ) இலக்கியம், கலாச்சாரம் போன்ற துறைகளில் புதிய படைப்புகளை உருவாக்கிய ஊனமுற்ற நபருக்கு ஒரு விருதும்,

ஏ) ஊனமுற்றோர் தடையின்றி சென்றுவர சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கட்டடத்திற்காக மூன்று விருதுகளும்,

ஐ) ஊனமுற்றோரில் அவர்கள் சார்ந்த துறையில் சாதனை புரிந்து சிறந்த முன் மாதிரியாக விளங்கும் ஊனமுற்ற நபர்கள் 5 பேர்களுக்கும் (Role Model Award),

ஒ) மறுவாழ்வுப் பணிகள் சிறப்பாக வழங்கும் மாவட்டத்திற்கு ஒரு விருதும்,

ஓ) தேசிய அறக்கட்டளையின் சிறந்த உள்ளூர் குழுவிற்கு ஒரு விருதும் என மொத்தம் 72 தேசிய விருதுகளுக்காக மாநில அரசு தகுந்த விண்ணப்பங்களை மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்யும்.



மாநில விருதுகள் (State Award)

அ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சிறந்த தொழிலதிபர்களுக்கான 2 விருதுகளும்,

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுள் சிறந்த பணியாளர்களுக்கான ஒவ்வொரு பிரிவிலும் ஒருவருக்கென 5 விருதுகளும்,

இ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தல் மற்றும் கல்வி போதித்தமைக்கான சிறந்த ஆசிரியர்களுள் 5 நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்கு சிறப்பாகச் சேவை புரிந்த தொண்டு நிறுவனங்களுக்கு 2 விருதுகளும்,

உ) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

ஊ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த சிறந்த மருத்துவர் அல்லது இணை மருத்துவ நிபுணர்கள் (Para Medical Personnel) என ஒரு நபருக்கும்,

எ) ஊனமுற்றோருக்கு சேவையாற்றிய 2 சமூகப் பணியாளர்களுக்கும்,

ஏ) மகளிர் நலத்திற்குத் தொண்டாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும் ஒரு சமூகப் பணியாளருக்கும் என மொத்தம் 20 விருதுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட 20 விருதுகளில் பின்வரும் ஆறு விருதுகள் சுதந்திர தின விழாவின்போது வழங்கப்படும்.

1) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்த நபர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பளித்த ஒரு தனியார் தொழிலதிபருக்கும்,

2) ஊனமுற்றோர் உயர்வுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு நிறுவனத்திற்கும்,

3) மகளிர் உயர்வுக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும்,

4) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

5) ஊனமுற்றோருக்கு சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த ஒரு மருத்துவருக்கும்,

6) ஊனமுற்றோருக்குச் சேவையாற்றிய ஒரு சிறந்த சமூகப் பணியாளருக்கும்

என மொத்தம் ஆறு விருதுகள் சுதந்திர தினத்தன்றும், இதர 14 விருதுகள் 3.12.2005ல் நடைபெறும் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்" அன்றும் வழங்கப்படும். ❖

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஆட்டோக்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10–6–2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 50 பெண்களுக்கும், 250 ஆண்களுக்கும் ஆகமொத்தம் 300 ஆட்டோக்களை வழங்கினார்கள்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள இளைஞர்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இலவசமாக ஆட்டோ ஒட்டுநர் பயிற்சி வழங்கப்படுவதுடன் மானியம் மற்றும் வங்கிக் கடனுடன் சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா வாங்க நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பை உருவாக்கி அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வழியமைத்துத் தரும் நோக்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் தாட்கோ நிறுவனத்தின் சார்பாக, சென்னை தரமணியிலுள்ள சாலைப் போக்குவரத்துப் பயிற்சி நிறுவனத்தால் ஆட்டோ உரிமம் இல்லாத 50 பெண்கள், 100 ஆண்கள், ஆட்டோ உரிமம் உள்ள 150 ஆண்கள் ஆகமொத்தம் 300 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில், ஆட்டோ உரிமம் இல்லாதவர்களுக்கு சாலைப்

போக்குவரத்துப் பயிற்சி நிறுவனத்தில் 6 வார கால இலவச ஆட்டோ ஓட்டுநர் பயிற்சியும், ஆட்டோ ஓட்டுநர் உரிமம் உள்ளவர்களுக்கு 2 வார கால சிறப்புப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இதனையடுத்து, ஆட்டோ ரிக்ஷா வாகனங்களைப் பெற்று சுயதொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு வாழ்க்கை நடத்த ஏதுவாக தலா ரூபாய் 25,000 மானிய உதவியுடன், ரூபாய் 80,000 வங்கிக் கடன்

ஏற்பாட்டுடன் இந்த 300 பயனாளிகளுக்கும் ஆட்டோக்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில், 10.6.2005 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 15 பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் 15 ஆண் ஆட்டோ ஓட்டுநர்கள் ஆகியோருக்கு ஆட்டோ வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள். இவ்விழாவிலேயே, மேலும் 35 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும், 235 ஆண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் ஆட்டோக்கள் வழங்கப் பட்டன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 10-6-2005 அன்று வழங்கப்பட்டுள்ள இந்த 300 ஆட்டோக்களும் மாசுக் கட்டுப்பாடு அம்சங்களுடன் கூடிய எரிவாயு வசதியுடன் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி, தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திருமதி. வி. சரோஜா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.மா.பாலமுருகன், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ❖

ஆடவர் ஏறு நடை போடட்டும்!
மகளிர் வீறு நடை போடட்டும்! அதனால்
தமிழகம் வெற்றி நடை போடட்டும்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மகளிர் சிறப்புக் காவல் அணியின் முதலாம் துவக்க நாள் கொண்டாடப்படுகின்ற இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் உவகை அடைகிறேன். உங்களுக்கு என் உளமார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இன்றைய நிகழ்ச்சிகளைக் காண்கிற போது, பூக்களுக்குள்ளா இத்தனை புரட்சி ஒளிந்து கிடந்தது? மலர்களுக்குள்ளா இத்தனை மகிமை மறைந்து கிடந்தது? என்ற வியப்பு எவருக்கும் ஏற்படும். ஆனால் எனக்கு அந்த வியப்பு இல்லை! காரணம், இவற்றைச் சாதிக்கின்ற வல்லமை உங்களுக்கு உள்ளது என்பதை நான் அறிவேன் - இதற்கு மேல் சாதிக்கின்ற வல்லமையும் உங்களுக்கு உண்டு என்பதையும் அறிவேன்.

தமிழகத்துப் பெண்மையின் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கை அப்படிப்பட்டது.

அந்த நம்பிக்கைக்குக் கிடைத்திருக்கிற வெற்றியாகவே உங்களது சாதனையை நான் மதிக்கிறேன்.

கடந்த ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் உங்களிடையே பேசுகிறபோது நான் கூறிய ஒரு வாசகம் உங்களுக்கு நினைவிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

"பெண்கள் ஆண்களுக்குச் சமமாக மட்டும் அல்ல, வாய்ப்புக் கிடைத்தால் ஆண்களை விடச் சிறப்பாகவும் பணி ஆற்ற வல்லவர்கள்" என்று நான் கூறினேன்.

நான் கண்ட கனவு

அந்தக் கூற்றை நீங்கள் மெய்ப்பித்திருப்பது எனக்கு மெத்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு தாயின் நிலையில்

இருந்து வீராங்கனைகளாகிய உங்களைப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன்! பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!

பெண்களைப் பொறுத்தவரை அன்றைக்கும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது – இன்றைக்கும் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. ஆனால், இரண்டு கேள்விகளுக்கும் இடையேதான் எவ்வளவு வேறுபாடு?

"என்ன முடியும் பெண்களால்?" – இது அன்று கேட்கப்பட்ட கேள்வி!

"என்ன முடியாது பெண்களால்?" – இது இன்று கேட்கப்படுகிற கேள்வி!

இரண்டு கேள்விகளுக்கும் இடையே கடலளவு வேறுபாடு அல்லவா காட்சி அளிக்கிறது!

மகளிரின் நிலை மாற்றம் மட்டுமா?

சமூகத்தின் மன மாற்றமும் அல்லவா தெரிகிறது!

இந்த மாற்றம் தற்செயல் விளைவா?

இல்லை!

நான் நீண்ட காலமாகக் கண்ட கனவு!

உங்கள் நிலை உயர நான் வகுத்த திட்டங்கள் – அவற்றைச் செயல்படுத்த உங்கள் உயர் அதிகாரிகளும் நீங்களும் எடுத்த முயற்சிகள் – இவற்றுக்குக் கிடைத்த நியாயமான பரிசுதான் இந்த மாற்றம்!

எந்த மாற்றமும் தானாக வராது. மாற்றம் என்பது, தானே ஏற்படுவது அன்று! ஏற்படுத்தப்படுவது!

'தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!' என்பது மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய கருத்துக் கவிதை! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய புதுமைப் பாடல்!

காவல் துறையின் நோக்கிலும் போக்கிலும் மாறுதல்களைக் கொண்டு வர விரும்பிய நான் அதை நவீனப்படுத்தி வலிமைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

புரட்சிப் பெண்களாகவும் ஆகவேண்டும்

ஏனைய துறைகளில் பெண்கள் வெற்றிக் கொடி நாட்டி வருவதைப் போல காவல் துறையிலும் பெண்கள் வெற்றிக் கொடி நாட்ட வேண்டும் என்று விரும்பினேன்.

அந்த விருப்பத்தின் விழுமிய வெளிப்பாடுதான் இந்தியாவிலேயே முதன் முதலாக நாம் உருவாக்கிய 'பெண் போலீஸ் கமாண்டோ படை'!

2.6.2003 அன்று நடைபெற்ற பயிற்சி நிறைவு விழா மற்றும் முதல் பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தின் தொடக்க விழாவில் நான் கலந்து கொண்டேன்.

பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்களாக இருந்தால் மட்டும் போதாது – புரட்சிப் பெண்களாகவும் ஆக வேண்டும் என்னும் என்னுடைய அவாவை அதிரடிப்படை வீராங்கனைகள் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்று அன்று நான் சொன்னேன்.

அந்தப் புரட்சி வரலாறு மேலும் தொடரும் விதமாக பெண் போலீஸ் கமாண்டோ பிரிவை உள்ளடக்கிய மகளிர் சிறப்புக் காவல் அணியை 30.1.2004 அன்று நான் தொடங்கி வைத்தேன்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முதல் பெண் காவல் அணி தமிழகத்தில் தொடங்கப்பட்ட அந்த நாளைத் தமிழகக் காவல் துறை வரலாற்றிலே பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள் என்று நான் குறிப்பிட்டேன்.

முற்றிலும் மகளிரையே கொண்ட அந்தக் காவல் மகளிர் அணி தனது முதல் ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்து இன்று விழாவைக் கொண்டாடுகின்றது.

சாதனைகளைப் படைப்பதில் ஆண் என்றோ, பெண் என்றோ பாகுபாடு கிடையாது என்பது என்னுடைய

அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நிறைவேற்றி உள்ள உங்கள் அனைவரையும் இந்தத் திருநாளில் நான் பாராட்டுகிறேன்.

முதன்மை இடம் பெறும் காவல்துறை

வீர சாகசங்களையும், வீரச் செயல்களையும் அரங்கங்களில் நிகழ்த்திக் காட்டுகிற நீங்கள் சமூகம் எதிர்பார்க்கின்ற கடுமையானப் பணிகளை மேற்கொள்வதிலும் வீராங்கனைகளாகவே விளங்கி வருகிறீர்கள் என்பதை அறிந்து நான் அக மகிழ்கிறேன்.

கும்பகோணம் மகாமகப் பணி ஆகட்டும் – நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல் பாதுகாப்புப் பணி ஆகட்டும் – ஆழிப் பேரலை தாக்கிய வேளையில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் மேற்கொண்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணி ஆகட்டும் – ரயில்வே காவல் பிரிவினருடன் இணைந்து ரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புப் பணிகள் ஆகட்டும் – கனரக வாகனங்களை ஓட்டுகின்ற பணி ஆகட்டும் – இப்படி எல்லாவற்றிலும் ஆக்கப்பூர்வமானப் பணிகளை நீங்கள் ஆற்றி வருவது, உங்கள் அணிக்குப் பெருமை சேர்க்கிறது.

அது மட்டும் அல்லாமல், இசைக்குழு மற்றும் விளையாட்டுக் குழுக்கள் மூலமாகவும் உங்கள் திறனை நீங்கள் வெளிப்படுத்தி வருவதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறை முதன் முதல் என்னும் தகுதிகள் பலவற்றைப் பெற்றதோடு அல்லாமல் முதன்மை இடம் பெறும் காவல்துறையாகவும் விளங்குகின்றது.

தமிழ்நாடு காவல் துறை மேம்பட்ட சாதனைகளை மேலும் படைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன்! தொடர்ந்து எடுத்து வருகிறேன்.

காவல்பணிக்குத் தனியே திட்டம்

உலக நாடுகளுக்கு இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை மாநகர் அமைய வேண்டும் என்பது எனது தொலைநோக்குத் திட்டம் ஆகும். இந்த நோக்கத்தை எய்தும் வகையில் சென்னைப் பெருநகரின் ஒட்டு மொத்த வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வரும் நான் மிக விரைவாக வளர்ந்து வரும் சென்னைப் புறநகர்ப் பகுதிகள் சென்னை மாநகரின் அங்கமாக வளர்ந்துள்ளதால் ஏற்படும் சவால்களையும், பிரச்சினைகளையும் திறம்படச் சமாளித்து மக்களுக்கு பாதுகாப்பையும், அமைதியையும் வழங்கிட சென்னைப் பெருநகர் காவல் துறையின் அதிகார எல்லைக்குள் செங்கை (கிழக்கு) காவல் மாவட்டம் முழுவதையும் உள்ளடக்கி விரிவுபடுத்தும் ஒரு திட்டத்தை அறிவித்தேன். இவ்வாறு விரிவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகம் இந்தியாவில் உள்ள மிகப்பெரும் மாநகர் காவல் ஆணையரகங்களில் ஒன்றாக அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

புது டெல்லியில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் – ஒழுங்கு பற்றிய மாநாட்டில், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் பெருநகரங்களில் காவல் பணிக்கு என்று தனியே திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறினேன். இதனை ஏற்று பெருநகர காவல் பணிக்கென ஒரு துணைத் திட்டத்தை ஏற்படுத்த மத்திய அரசு முன் வந்துள்ளது என்பது முன்னோடித் திட்டங்களை வகுப்பவர்கள் நாம் என்பதற்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழகத்தின் சாதனை

கடற்கரை சார்ந்த மற்றும் கடல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் கடலோரக் காவல் படை என்ற தனிப்படையை உருவாக்க 1994–ஆம் ஆண்டில் நான் ஆணையிட்டேன். இந்தக் கடலோரக் காவல் படையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இருந்து 1,050 காவலர்கள் சுழற்சி முறையில் அயற்பணியில் பணியாற்றி வருகிறார்கள். கடலோரப் பாதுகாப்புப் படைக்கென தனியே காவலர்கள் இருந்தால்தான்



சிறப்புறப் பணியாற்ற இயலும் என்பதால் கடலோரப் பாதுகாப்புப் படைக்கெனத் தனி அணி ஒன்று ஏற்படுத்தப் படும் என்று 15.3.2005 அன்று சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன். அகில இந்திய அளவில் இதனைச் செயல்படுத்த மைய அரசு பரிசீலித்து வருகிறது என்னும் செய்தி, காலத்துக்கு ஏற்ற திட்டத்தை வகுப்பதிலும் முன் நிற்பவர்கள் நாம் என்னும் பெருமைக்குக் கட்டியம் கூறி நிற்கிறது.



குற்ற எண்ணிக்கையைக் குறைத்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சதவிகிதத்தை உயர்த்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு உரிய தண்டனையை, விரைந்து பெற்றுத் தருவதில் தமிழகம் சாதனை படைத்து வருகிறது. கொலைக் குற்ற வழக்கில் வழக்குப் பதிவு செய்த நாளில் இருந்து 16 நாட்களில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புப் பெறப்பட்ட சாதனை படைக்கப்பட்டது தமிழகத்தில்தான் என்பதை இங்கே நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அன்புக்கட்டளை

அனைத்துத் துறைகளின் வளர்ச்சியும் சட்டம் – ஒழுங்கு நிலை நிறுத்தப்படுவதைப் பொறுத்தே அமையும். ஆகவே, காவல் துறையை முழுமையாக வலுப்படுத்த காவல் துறையினருக்கு நவீன தொழில் நுட்ப வசதிகள் வழங்கப்படுவதோடு, அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியத்திலும் அவசியம் என்பதால், காவல் துறையை நவீனப்படுத்த, பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நாளும் எடுத்து வருகிறேன். இந்தச் சீரிய நடவடிக்கைகளின் பயனாகத் தமிழகக் காவல் துறை இன்னும் பல சாதனைகளைப் படைக்கும் என்பது என் எதிர்பார்ப்பு – படைக்க வேண்டும் என்பது எனது அன்புக் கட்டளை.

இன்று, முதல் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் மகளிர் சிறப்புக் காவல் அணி புதிய வெற்றிகளைக் குவிக்கட்டும்.

இன்னொன்றையும் நான் இங்கு உள்ளவர்கள் மூலமாக எல்லோருக்கும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பெண்கள் உரிமை பெறுவது ஆண்களின் உரிமைகளுக்கு எதிரானது அல்ல!

பெண்கள் பெருமை பெறுவது ஆண்கள் பெருமை பெறுவதற்குத் தடையானதும் அல்ல!

ஆடவர் ஏறு நடை போடட்டும்!
மகளிர் வீறு நடை போடட்டும்!
அதனால் தமிழகம் வெற்றி நடை போடட்டும்!

மகளிர் சிறப்புக் காவல் அணியினருக்கு எனது பாராட்டுகளையும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு, இந்த விழா சீரோடும், சிறப்போடும் அமைய பாடுபட்ட டி.ஜி.பி. அலெக்ஸாண்டர் அவர்களுக்கும், அவரோடு ஒத்துழைத்த காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, My dear Girls, Women of Tamil Nadu Police, I am proud of you, என்று கூறிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

(13–6–2005 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மகளிர் சிறப்புக் காவல் அணியின் முதலாம் துவக்க நாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை).

இந்தியாவிலேயே முதன்முதலாக ஆண்டிபட்டியில் உயர்தொழில்நுட்ப நெசவுப் பூங்கா!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்

தேன் போல் இனிக்கும் தென்தமிழ் பேசும் தேனி மாவட்டத்தில், என் அருமைத் தொகுதியாகிய ஆண்டிபட்டித் தொகுதியில், என் அன்புக்குரிய ஆண்டிபட்டியில் இன்று நடைபெறும் அரசு விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வானத்தில் ஒளி வீசும் வட்ட நிலாவை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தட்டாது.

கண் எட்டும் வரைக்கும் நீண்டு பரந்திருக்கும் நீலக் கடலை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தட்டாது.

நிமிர்ந்து நிற்கும் நீல மலைத் தொடரை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தட்டாது.

அதைப்போலத்தான், என் அன்புக்குரிய ஆண்டிபட்டித் தொகுதி மக்களாகிய உங்களைத் திரும்பத் திரும்பச் சந்தித்தாலும் தித்திக்குமே ஒழிய, அது திகட்டவே திகட்டாது.

நான் ஆண்டிபட்டித் தொகுதிக்கு வரும் போதெல்லாம் என் உள்ளத்தில் குதூகலம் கோலோச்சிக் கொண்டு இருக்கும்.

தமிழகத்தில் எல்லாத் தொகுதியும் என் தொகுதியே என்றாலும், எனது தாய்த் தொகுதி ஆண்டிபட்டித் தொகுதி அல்லவா! ஆகவேதான், மற்ற தொகுதிகளை விட ஆண்டிபட்டித் தொகுதிக்கு நான் அதிக முறை வந்திருக்கின்றேன்.



ஆண்டிபட்டிதான் என் அன்னை

ஒவ்வொரு முறையும் நான் ஆண்டிபட்டிக்கு வரும்போது அலை கடலாய்ப் பெருகி வரும் உங்கள் அன்புப் பெருக்கில் நான் உள்ளம் திளைக்கிறேன். ஆர்வம் ததும்பும் உங்களைச் சந்திப்பதும், உங்களோடு சேர்ந்து சிந்திப்பதும் எப்போதும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

நான் சென்னைக் கோட்டையில் இருந்து ஆட்சி நடத்தவில்லை. ஆண்டிபட்டித் தொகுதி அன்பு நெஞ்சங்களே, உங்கள் இதயத்தில் இருந்துதான் நான் ஆட்சி நடத்துகின்றேன். இது தான் உண்மை!

நான் இருப்பது சென்னை!

ஆனால், ஆண்டிபட்டிதான் என் அன்னை!

இந்த இனிய விழாவில், தேனி மாவட்டத்து மக்கள் பயனடையும் வகையில் 39 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 1,822 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதில் ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 13 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 634 பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

14 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் [illegible] மூலம் செய்து முடிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்கள் கட்டுதல் [illegible] பணிகளைத் திறந்து வைத்ததில் நான் அக [illegible]கிறேன்.

பொதுப்பணித் துறை, [illegible] துறை, [illegible] துறை, [illegible] நலத்துறை [illegible] துறை [illegible] கூடங்கள், [illegible]

கட்டடங்கள், தீயணைப்பு நிலையம், மருத்துவமனைக் கட்டடங்கள், கூட்ட அரங்கம், மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள், மகளிர் சுகாதார வளாகங்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகம், விளையாட்டு அரங்கங்கள் மற்றும் மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவில், 160 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,615 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதில், ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 122 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 943 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

மேலும் 10 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 17,458 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்றுமதி விற்பனை உயர்வு

தமிழகத்தில் உள்ள நெசவாளர்கள் தங்களது நெசவுத் தொழிலில், உயர் தொழில்நுட்பத்தைப் புகுத்தி, உலகச் சந்தையில் போட்டியிடும் திறன் படைத்தவர்களாக மேம்பட்ட தரத்துடன் புதிய வடிவமைப்புகளுடன் தங்களது துணிகளை உற்பத்தி செய்திட எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில்தான் தமிழக கைத்தறி நெசவாளர்கள் தயாரிக்கின்ற துணி வகைகள் உலகச் சந்தையுடன் போட்டியிடும் வண்ணம் புதிய வடிவமைப்பு மற்றும் வண்ணங்களுடன் கூடிய ரகங்களை உற்பத்தி செய்திட, அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் 1,300 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டன. மேலும் 2,000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைத்தறித்துணி வகைகளின் விற்பனையைப் பெருக்கிட என்னுடைய அரசு மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் 2,406 கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணி வகைகள் விற்பனை செய்யப்பட்டன. 2000–2001ஆம் ஆண்டில் 92 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே இருந்த ஏற்றுமதி விற்பனை 2004–2005ஆம் ஆண்டில் 304.02 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது.

வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா

இவ்வாறு, கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெற்றிடவும் அதிக ஊதியம் பெற்றிடவும் ஏதுவாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்ற அதே வேளையில், தமிழகத்தில் விசைத்தறித் தொழில் மேம்படவும், அத்தொழிலை நம்பியுள்ள மக்கள், நலம் பெற்று வாழ்க்கை வளம் பெறவும் எனது அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது.

தாராளமயம் ஆக்கப்பட்ட பன்னாட்டுச் சந்தையில் பங்கேற்று உலகச் சந்தையில் போட்டியிடும் வகையில் உலகத் தரம் வாய்ந்த துணிகளை உற்பத்தி செய்திட உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய நாடா இல்லாத விசைத்தறிகளை நிறுவுவது மிக அவசியமானதாகும் என்பதால், விசைத்தறித் தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைக்கப்பட வேண்டும். இதன்படி, எனது ஆணையின்பேரில், இத்தகைய உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி; கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம்; ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு; மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் குமாரபாளையம் ஆகிய இடங்களில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் என்று 2003–2004 ஆம் ஆண்டு கைத்தறித் துறையின் மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. தற்போது, இதில் ஆண்டிபட்டி, பல்லடம், குமாரபாளையம் ஆகிய மூன்று பகுதிகளில் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், ஆண்டிபட்டியில் அமையவுள்ள 'வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவுக்கு' இந்த இனிய விழாவில் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டிபட்டிக்கு அருகில் டி.சுப்புலாபுரம் என்ற இடத்தில் 40.86 ஏக்கர் நிலப்பரப்பில் 96.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைக்கப்படும். 108 சிறு விசைத்தறி தொழில் முனைவோர்களால் தொடங்கப்படவுள்ள இப்பூங்காவில் 630 நாடா இல்லாத விசைத்தறிகள் மற்றும் 3 சைசிங் ஆலைகள் ஆகியவை நிறுவப்படும். அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் மற்றும் வடிகால் வசதி, சாலை மேம்பாடு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாற்று மின் வசதி, குழந்தைகள் காப்பகம், தொழிலாளர் பயிற்சி நிலையங்கள், ஆய்வகம், கணினி வடிவமைப்பு மையங்கள், கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்கள், தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் சுகாதார மையங்கள் ஆகிய அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக இப்பூங்கா திகழும். இந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்தத் தேவையான நிதியுதவி மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படும்.

ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு

இந்த உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைவதற்குத் தேவையான 40.86 ஏக்கர் இடம் 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அடிப்படை வசதிகள் 20.04 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விசைத்தறிகளை நிறுவுவதற்கான தொழிற்கூடங்கள் 12.52 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அதி நவீன உயர் தொழில்நுட்பம் வாய்ந்த நாடா இல்லாத விசைத்தறிகள் 63.32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம், 96.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பூங்கா உருவாக்கப்படும்.

இப்பூங்கா மூலம் சுமார் 1,500 நபர்களுக்கு நேரடியாகவும், 15,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் இப்பூங்கா மூலம் ஆண்டிற்கு சுமார் 360 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதித் தரம் வாய்ந்த துணிகள் உற்பத்தி செய்யப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, நான் அடிக்கல் நாட்டியுள்ள வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவின் உள்கட்டமைப்புப் பணிகளை உடன் துவங்கும் வகையில் 4.37 கோடி ரூபாயை இங்கே வழங்கியதில் நான் பெருமகிழ்ச்சி

அடைகிறேன். இப்பூங்கா அமையவுள்ள நிலத்தினைப் பதிவு செய்ய 50 சதவிகித முத்திரைத்தாள் கட்டணச் சலுகை வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைக்கும் பணி ஓராண்டு காலத்திற்குள் நிறைவு செய்யப்பட்டு உற்பத்தி துவக்கப்படும் என்பதையும் இப்பூங்கா மூலம் ஆண்டுதோறும் சுமார் 225 கோடி ரூபாய் மதிப்பிற்கு அன்னியச் செலாவணி ஈட்டப்படும் என்பதையும் மிகுந்த மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விசைத்தறித் தொழிலின் மேம்பாட்டிற்காக, உயர் தொழில்நுட்பம் வாய்ந்த நெசவுப் பூங்கா இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இவ்வாறு, மாநில மக்கள் அனைவர் வாழ்விலும் எவ்வாறு வளம் சேர்ப்பது என்பதை நாள்தோறும் சிந்தித்து, புதிய புதிய திட்டங்களை நான் அறிவித்து வருகிறேன்.

கல்விக்கு அரசு அளிக்கும் வசதிகள்

மனிதவள ஆற்றலை மேம்படுத்தி தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக உருவாக்குவதில் கல்வி இன்றியமையாத பெரும் பங்கு வகிக்கும் காரணத்தால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் நான் மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறேன். மழலையர் வகுப்பில் தங்களது கல்வியைத் தொடங்கும் மாணவ, மாணவியர் எந்தக் காரணத்தைக் கொண்டும் இடையில் நின்றுவிடக் கூடாது, கல்வி கற்பதை நிறுத்திவிடக் கூடாது என்பதை இலட்சியமாகக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கல்வி பயில்வதற்கான அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும், எனது அரசு ஏற்படுத்தித் தருகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளேயே தொடக்கப்பள்ளி வசதிகளையும், மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளி வசதியையும், எனது அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் கல்வி கற்பதற்கு ஏதுவாக சத்துணவு, சீருடை, கல்வி உதவித் தொகை, இலவச பாடப் புத்தகங்கள், இலவச சைக்கிள்கள் என ஒல்லும் வகையெல்லாம் உதவிகளை வழங்குவதோடு மாணவ, மாணவியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் எல்லாப் பள்ளிகளிலும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஏற்படுத்தித் தருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், தேனி மாவட்டத்தில் 29 புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 36 துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், தரம் உயர்த்தப்பட்டுள்ளன. NABARD வங்கிக் கடன் உதவி மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலமாக 313 கூடுதல் வகுப்பறைகளும், 9 ஆய்வகங்களும் கட்டப்பட்டு, கழிவறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனது அரசு செயல்படுத்திய கல்வி வளர்ச்சிப் பணிகளால் எத்தகைய மாற்றம் தேனி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது தெரியுமா? 2002ஆம் ஆண்டில் 88 சதவிகிதமாக இருந்த மாணவ, மாணவியர் சேர்க்கை வீதம் தற்போது 98.1 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தில், 2001–2002ஆம் ஆண்டில், 2,06,096 மாணவ, மாணவியரே கல்வி பயின்ற நிலை மாறி, 2004–2005ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2,42,891 ஆக உயர்ந்துள்ளது. எனது தலைமையிலான தமிழக அரசு மேற்கொண்டுள்ள கல்வி வளர்ச்சிப் பணிகள் எந்த அளவுக்குப் பயன் அளித்துள்ளன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தேனி அரசு மருத்துவக் கல்லூரி

தேனி மாவட்டத்தில், குறிப்பாக, ஆண்டிபட்டியிலும் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் தரமான உயர் கல்வியை வழங்கி பின்தங்கிய இந்தப் பகுதியை முன்னேறிய பகுதியாக மாற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை, நான் மேற்கொண்டு வருகிறேன்.

இதன் அடிப்படையில்தான், ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற இளைஞர்களும், இளம் பெண்களும் உயர் கல்வியைப் பெறும் வகையில் கல்லூரி ஒன்று ஆண்டிபட்டியில் 2002ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்று 2004ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

மேலும், ஆண்டுதோறும் 100 மாணவ, மாணவியர் மருத்துவக் கல்வி பயில வாய்ப்பாக, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய தேனி அரசு மருத்துவக் கல்லூரி ஆண்டிபட்டியில் அமையும் வகையில் அதன் முன்னோடி நடவடிக்கையாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனையையும், மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்களையும் 2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நான் தொடங்கி வைத்தேன்.

இத்தகைய முனைப்பான நடவடிக்கைகளின் பயனாக, தேனி மாவட்டம், குறிப்பாக ஆண்டிபட்டி தொகுதி கல்வி வளர்ச்சியில் முன்னிலை பெற்று, மாநிலத்தில் உள்ள வேறு எந்த இடத்தோடும் போட்டிபோடும் அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில், தொடர்ந்து செயல்படுத்தப்படும் கல்வி வளர்ச்சிப் பணிகளுக்காக, 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டுத் திடல்கள், விளையாட்டு அரங்கங்கள், வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் கூடங்கள் முதலான 44 பணிகளைத் திறந்து வைத்ததிலும்; 16 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வகுப்பறைக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், முதலான 149 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னுடைய சிந்தனைகள் எப்பொழுதும் மக்களைச் சுற்றியே இருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் அனைத்தும் மக்களின் நன்மை ஒன்றையே கருத்தில் கொண்டு அமைகின்றன.

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை அனைவரின் கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

தேனி மாவட்ட மக்கள் மருத்துவக் கல்வி மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகளைப் பெறுகின்ற மேம்பாட்டுத் திட்டமாக, ஆண்டிபட்டியில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உருவாக்கப்படும் என்று 2002ஆம் ஆண்டில் நான் அறிவித்து இருந்தேன். புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கும் பணிகளை உடனடியாகத் தொடங்கிடும் வகையில் இதற்கான அரசாணை 2002ஆம் ஆண்டு செப்டம்பரில் வெளியிடப்பட்டது. இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக 12 கோடி ரூபாயும், இரண்டாவது கட்டமாக 46.93 கோடி ரூபாயும், அதன் பின்னர் 15.39 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குரிய மொத்த நிதி ஒதுக்கீடான 74.32 கோடி ரூபாயையும் எனது அரசு முழுமையாக ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, ஆண்டு தொடரும் செலவினமாக 8.77 கோடி ரூபாய் செலவில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக 300 படுக்கைகள் கொண்ட அதிநவீன மருத்துவ மனையையும், ஆண்டுதோறும் 100 மாணவ–மாணவியர் பயிலும் மருத்துவக் கல்லூரியையும் நிறுவுவதற்கான முழுத் தொகையையும் எனது அரசு ஒதுக்கியுள்ளது. ஆண்டிபட்டியில் அமைந்துள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை நான் 8.12.2004 அன்று துவக்கி வைத்தேன். இம்மருத்துவமனை நல்ல முறையில் இயங்கி வருவதை அனைவரும் நன்கு அறிவர். இம்மருத்துவமனையில் நாள்தோறும் ஏறத்தாழ 1,000 புறநோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இவ்வளவு சிறப்பாக இந்த மருத்துவமனை இயங்கி வருகின்ற வேளையில் மருத்துவக் கல்லூரியைத் துவங்குவதற்கான அனுமதியை இந்திய மருத்துவக் குழுமம் (Medical Council of India) வழங்காமல் நிறுத்தி வைத்திருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கதாகும்.

தேனி மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகிய அனைவரும் நியமிக்கப்பட்டு இந்த மருத்துவமனையில் பணியாற்றி வருகின்றனர். மாணவ–மாணவியருக்கான தங்கும் விடுதிகள் கட்டும் பணி விரைவாக நடைபெற்று

வருகிறது. இது மிக விரைவில் முடிக்கப்படும். இந்நிலையில் இந்திய மருத்துவக் குழுமம் (Medical Council of India) வேண்டும் என்றே மாணவ–மாணவியர் தங்கிப் பயில தற்காலிக மாற்று விடுதிக் கட்டடங்கள் இருந்தபோதிலும், புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படவில்லை போன்ற காரணத்திற்காக மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கான ஒப்புதலை வழங்காமல் உள்ளது, உள்ளபடியே தமிழக மக்களுக்கு, குறிப்பாக, தேனி மாவட்ட மக்களுக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய அநீதியாகும். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து, தேனி மருத்துவக் கல்லூரிக்கான ஒப்புதல் உடன் வழங்கப்பட வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.



சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் வாக்களித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்று, மத்திய அரசில் இன்று பதவி வகிக்கும் 12 அமைச்சர்கள், 12 மத்திய அமைச்சர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு, வேண்டுமென்றே இத்தனை இலட்சம் மக்களுக்குப் பயன்படக்கூடிய இந்த மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னால், இது எவ்வளவு பெரிய அநீதி? மக்கள் சம்பந்தப்பட்ட இத்தகையப் பிரச்சினைகளில் அரசியல் புகுத்தப்படக்கூடாது என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. ஆகவே, தமிழகத்தில் இருந்து டெல்லிக்குச் சென்ற, மத்திய அரசில் பதவி வகிக்கின்ற 12 அமைச்சர்கள் இப்போதாவது இதில் உரிய கவனம் செலுத்தி எந்த நியாயமான காரணமும் இல்லாமல் இந்த தேனி மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைப்பதற்கான அனுமதியை வழங்காமல் இருப்பதை உடனடியாக அவர்கள் கவனித்து, தேவையான அனுமதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக மீண்டும் ஒரு முறை நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய திட்டங்கள்

குழந்தையின் பசி அறிந்து உணவு அளிக்கும் தாய்மை உணர்வுடன் மக்களின் தேவையை அறிந்து திட்டங்களைத் தீட்டும் நல்லரசாக எனது அரசு விளங்குகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தேனி மாவட்ட மக்களின் தேவை அறிந்து, ஆண்டிபட்டி மக்களின் ஆவலை உணர்ந்து, அவர்களின் கோரிக்கைகள் என்னென்ன என்று ஆய்ந்தறிந்து, அவற்றை எப்படி எல்லாம் நிறைவேற்றலாம் என்று முனைந்து நான் செயல்பட்டு வருகிறேன். அந்த வகையில் தேனி மாவட்ட மக்கள் வாழ்வில் வளமும் நலமும் சேர்க்கும் சில புதிய திட்டங்களை இந்த இனிய விழாவில் அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டிபட்டி, ஜக்கம்பட்டி, மற்றும் டி.சுப்புலாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் மேம்படுத்தப்பட்ட நெசவுத் தறிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கையை ஏற்று இந்தப் பகுதி கைத்தறி நெசவாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நெசவுத் தறிகளை, அதாவது Handloom with Jacquard வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி, ஒவ்வொன்றும் 12,000 ரூபாய் மதிப்புள்ள மேம்படுத்தப்பட்ட நெசவுத் தறிகள் சுமார் 1,500 கைத்தறி நெசவாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப் படும்.

தேனி மாவட்டத்தில் உள்ள சில தொலை தூர மற்றும் மலைப் பகுதி குக்கிராமங்களில் தற்போது மின் வசதி இல்லை. வனப் பகுதிகளின் வழியாக மின் கம்பிகள் அமைப்பதில் தடைகள் உள்ளன. எனவே, அரசரடி, பொம்மராஜபுரம், குழிக்காடு, நொச்சி ஓடை, இந்திரா நகர், அஞ்சராப்பள்ளி, ராஜீவ் நகர், மற்றும் வெள்ளிமலை எஸ்டேட் ஆகிய குடியிருப்புகளில் சூரிய மின் சக்தியைப் பயன்படுத்தி வீடுகளுக்கு மின்வசதியும், தெருவிளக்கு வசதியும் உடனடியாகச் செய்து தர நான் ஆணையிட்டுள்ளேன். இப்பணிகள் ஆறு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராட்சை விவசாயிகளுக்குப் பயனளிக்கும் தொழிற்சாலைகள்

தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ராயப்பன்பட்டி மற்றும் கம்பம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காமைய கவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி ஆகிய இடங்களில் அதிக அளவில் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் திராட்சைகளின் மதிப்பைக் கூட்டுகின்ற வகையில், திராட்சையை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் அமைவது திராட்சை விவசாயிகளுக்கு பெரும் நன்மை பயக்கும் என்பதால், பதப்படுத்தப்பட்ட திராட்சை பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் உலர் திராட்சை தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படி நான் ஆணையிட்டுள்ளேன்.

மாம்பழ சேகரிப்பு மையம்

தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மாம்பழங்கள் பெருவாரியாக விளைகின்றன. இம்மாவட்டங்களில் 73,697 ஏக்கர் பரப்பளவில் ஏறத்தாழ 1 இலட்சத்து 58 ஆயிரம் மெட்ரிக் டன் மாம்பழங்கள் விளைகின்றன. இதில், தேனி மாவட்டத்தின் பங்கு மட்டும் 28 ஆயிரம் மெட்ரிக் டன்களாகும். இவற்றை ஏற்றுமதி செய்திட ஏதுவாக இம்மாவட்டங்களை உள்ளடக்கி மாம்பழத்திற்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம் – Agri Export Zone – ஏற்படுத்தப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்தேன். இத்திட்டம் 24 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மாநில அரசின் பங்கு 4 கோடியே 13 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் மாம்பழங்களைப் பதப்படுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விளையும் மாம்பழங்களை எளிதில் கொள்முதல் செய்யும் வகையில், பெரியகுளத்தில் ஒரு மாம்பழ சேகரிப்பு மையம் 25 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் தொழில் முனைவோரால் அமைக்கப்படும். பெரியகுளத்தில் அமைந்துள்ள தோட்டக்கலைக் கல்லூரி, தேனி மாவட்ட மாம்பழ விவசாயிகளுக்கு மாம்பழம் பயிரிடுவதிலும், அறுவடைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய வேளாண்மை குறித்தும் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கும். இதன்மூலம் தேனி மாவட்டத்திலுள்ள மாம்பழ விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள்.

குமுளி பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்த்திடவும், பேருந்துகளைப் பயன்படுத்துகின்ற பொது மக்களின் வசதியை மேம்படுத்திடவும் நமது மாநில எல்லைக்குள் அமைந்துள்ள குமுளி லோயர் கேம்ப் (Kumuli Lower Camp) பகுதியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் வனத் துறையின் அனுமதி பெற்று புதிய பேருந்து நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் சீரமைப்பு

மாநிலத்தில் தொழில் வளம் பெருக வேண்டுமானால், மேம்பட்ட சாலை வசதிகளுடன் அந்த மாநிலம் இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு சாலைகளை மேம்படுத்தவும், இணைப்புச் சாலைகள் உருவாக்கவும், பாலங்கள் கட்டவும் நான் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இதன் அடிப்படையில், தேனி மாவட்டத்தில், கடந்த நான்கு ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ், 70 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் 220க்கும் மேற்பட்ட சாலை மற்றும் பாலப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இந்த இனிய விழாவில், 15 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பில் சாலை அமைத்தல், சாலை மேம்படுத்துதல் முதலான பல்வேறு பணிகளைத் திறந்து வைத்து, 28 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள 492 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். இவ்வாறு, முழு முனைப்புடன் சாலை அமைத்தல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பழுதடைந்த சாலைகளையும், சீரமைத்துத் தர வேண்டும் என்று மக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இதனை ஏற்று முதலமைச்சரின்

சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த சாலைகள் சீரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில், போடிநாயக்கனூரில் இருந்து தேனி வழியாக வைகை ஆற்றில் சேருகின்ற கோட்டக்குடி ஆற்றின் தண்ணீர் வீணாகாமல் தேக்கி வைத்து அதனை பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் குரங்கனி அருகே ஒரு நீர்த் தேக்கம் கட்டப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கோரிக்கை ஆகும். பொதுமக்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, இத்திட்டத்தை உடனடியாக ஆய்வு செய்து செயலாக்கம் செய்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொதுப் பணித்துறை உயர் அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

தேனி மாவட்டத்தில் 2,354 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை உறுதி செய்யும் வகையிலும், 2,350 ஏக்கர் நிலத்திற்குப் புதிய பாசன வசதி அளிக்கும் வகையிலும் தொடங்கப்பட்ட 18ஆம் கால்வாய் திட்டம் நிலம் கையகப்படுத்துவது உள்ளிட்ட சில பிரச்சினைகள் காரணமாக நிறைவேறாமல் உள்ளது என்பது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டப் பணிகளை விரைவுபடுத்தி, விரைந்து முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொதுப் பணித் துறை உயர் அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், நேரம் போதாது என்பதால் 15 பேருக்கு மட்டும் இந்த மேடையில் நான் உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இப்போதே இங்கேயே உரிய உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

16.6.2005 அன்று ஆண்டிபட்டியில்
நடைபெற்ற தேனி மாவட்ட
அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரை

சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கத்தின் புதிய இணையதளம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கம் சார்பில் உருவாக்கப் பட்டுள்ள புதிய இணையதளத்தினைத் தொடங்கி வைத்தார்கள். இந்த இணைய தளத்தின் முகவரி www.capacs.org ஆகும்.

எய்ட்ஸ் நோயைத் தடுப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி முனைப்புடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த ஆதரவும், இலவச மருத்துவச் சிகிச்சையும் அளித்திட உறுதி பூண்டுள்ளது. இதன் அடிப்படையில் தான், சென்னை மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனை, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை, மதுரை மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனை மற்றும் நாமக்கல் அரசு பொது மருத்துவமனை ஆகியவற்றில் இதற்கான இலவச மருத்துவச் சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டு எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தீவிர நடவடிக்கையால் 2001ஆம் ஆண்டில் கருவுற்ற தாய்மார்களுக்கு 1.5 சதவிகிதமாக இருந்த எச்ஐவி/எய்ட்ஸ் நோய், தற்போது 0.17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

எச்ஐவி/எய்ட்ஸ் நோய் இல்லா தமிழகம் உருவாக, தமிழக அரசு பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மூலமாகத் தடுப்பு நடவடிக்கைகளையும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தக்க ஆதரவையும் வழங்கி, இந்த நோயைத் தடுப்பதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது. இவ்வாறு, தமிழக அரசு மற்றும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் பொதுமக்களுக்கு அளித்து வரும் பல்வேறு நலத்திட்டங்களை மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கம் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள புதிய இணையதளத்தை 8.6.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

இந்த இணையதளத்தின் மூலம் சென்னையில் இயங்கிவரும் அரசு இரத்த வங்கிகள், குடும்பநல மருத்துவ மையங்கள், தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள், பால்வினை நோய் சிகிச்சை மற்றும் 24 மணி நேர தொலைபேசி ஆலோசனை மையம் ஆகியவற்றின் சேவைகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், பயன்பெறவும் இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், சென்னை மாநகர துணை மேயர் திரு.கராத்தே ஆர்.தியாகராஜன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திருமதி. எம்.ஷீலா ப்ரியா, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி இணை ஆணையர் டாக்டர்.க.மணிவாசன் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

* * *

"என்றென்றும் சென்னை" திட்டத்தின் கீழ் புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், சென்னை மாநகராட்சி மூலதன நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் கீழ், ரூபாய் 1 கோடியே 69 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள், மருந்தகங்கள், பூங்கா மற்றும் தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவ மனையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 50 படுக்கைகளுடன் கூடிய கூடுதல் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

சென்னை நகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள, "என்றென்றும் சென்னை" என்னும் திட்டத்தின் கீழ், சாலைகள், விளக்குகள், பூங்காக்கள் முதலியன மேம்படுத்தப்படுவதோடு, மக்கள் பயன்பெறும் வகையில், புதிய மருத்துவமனைகள், பள்ளிக் கட்டடங்கள், பள்ளி ஆய்வகங்கள் ஆகியவற்றைச் சென்னை மாநகராட்சி கட்டி வருகிறது.

இதன்படி, சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மொத்தம் ரூ.82.79 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சிப் பூங்கா, அறிவியல் ஆய்வகம், கூடுதல் வகுப்பறைக் கட்டடம், உடற்பயிற்சிக் கூடம், உயர் மின் கோபுர விளக்கு ஆகியவற்றையும், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.59.44 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் சலவைத் தொழிலாளர் ஒய்வறைக் கட்டடங்கள் ஆகியவற்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.சந்திரன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.11.34 இலட்சம், மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15.52 இலட்சம் ஆகமொத்தம் ரூ.26.86 இலட்சம் மதிப்பில் ஜெ.ஜெ.நகரில் கட்டப்பட்ட மருந்தகம் ஆகியவற்றையும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலம் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்த தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 50 படுக்கைகளுடன் கூடிய கூடுதல் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு செய்தி – விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் திருமதி. ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திருமதி.ஷீலா ப்ரியா,இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணைமேயர் கராத்தே திரு.ஆர்.தியாகராஜன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.எம்.பி.விஜயகுமார், இ.ஆ.ப., ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் டி.ரவீந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். ✶

10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவ - மாணவியருக்கு ரொக்கப் பரிசு

பள்ளி இறுதி வகுப்பான 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்விலும், +2 எனப்படும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்விலும், தமிழை முதல் மொழிப்பாடமாகக் கொண்டு மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் மூன்று நிலைகள் பெறுகின்ற மாணவ, மாணவியரின் திறமையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ரொக்கப் பரிசு அளிக்கும் புதிய திட்டம் (Award Scheme) ஒன்றைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின்படி, 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழை முதல் மொழிப்பாடமாகக் கொண்டு, மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் மூன்று நிலைகளைப் பெறுகின்ற மாணவ, மாணவியருக்கு முதல் நிலைக்கு 7,000 ரூபாய், இரண்டாம் நிலைக்கு 6,000 ரூபாய், மூன்றாம் நிலைக்கு 5,000 ரூபாய் ரொக்கப் பரிசாக வழங்கிடவும், 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை முதல் மொழிப்பாடமாகக் கொண்டு, மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் மூன்று நிலைகளைப் பெறுகின்ற மாணவ, மாணவியருக்கு முதல் நிலைக்கு 15,000 ரூபாய், இரண்டாம் நிலைக்கு 12,000 ரூபாய், மூன்றாம் நிலைக்கு 10,000 ரூபாய் ரொக்கப் பரிசாக வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, இந்த ஆண்டு தமிழ்நாட்டில் பள்ளி இறுதித் தேர்வான 10ஆம் வகுப்பில் தமிழை முதற்பாடமாகப் பயின்று, 500க்கு 490 மதிப்பெண்கள் பெற்று முதல்நிலையில் தேறிய அருப்புக்கோட்டை, சாத்தூர் SHN ஈத்தல் ஹார்வி பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி ஏ.ரம்யா அவர்களுக்கு 7,000 ரூபாய்,

தூத்துக்குடி ஹோலிகிராஸ் பெண்கள் மேனிலைப் பள்ளியில் பயின்று, 489 மதிப்பெண்களுடன் இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெற்ற வி.மகராசி அவர்களுக்கு 6,000 ரூபாய் மற்றும் 488 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் நிலையில் தேர்ச்சி பெற்ற நாகர்கோயில் செயின்ட் ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி என்.சிந்து, தூத்துக்குடி ஸ்பிக்நகர் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி கே. ஷர்மிளா தேவி, மற்றும் செல்வி ஜி.ஷிர்லி, திருச்சி காட்டூர் செயின்ட் ஆண்டனி உயர்நிலைப்பள்ளி மாணவன் செல்வன் டபிள்யு. ஆலிவர் சாம்சன் ராய், மன்னார்குடி செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ஜி.கஸ்தூரி ஆகியோருக்கு தலா 5,000 ரூபாயையும் ரொக்கப் பரிசாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.6.2005 அன்று நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

தொடர்ந்து, இவ்வாண்டு 12ஆம் வகுப்புத் தேர்வில் தமிழை முதல்மொழிப் பாடமாக ஏற்று, 1200க்கு 1,185 மதிப்பெண்கள் பெற்று, முதல் நிலையில் தேர்ச்சி பெற்ற நாமக்கல் காவெட்டிப்பட்டி குறிஞ்சி மேனிலைப்பள்ளி மாணவி செல்வி ஜி.சத்யாவுக்கு 15,000 ரூபாயும், 1,183 மதிப்பெண்கள் பெற்று, இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெற்ற திருநெல்வேலி பாளையங்கோட்டை ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி செல்வி எம். ஆஷா பெனாசிருக்கு 12,000 ரூபாயும், 1,181 மதிப்பெண்கள் பெற்று, மூன்றாம் நிலையில் தேர்ச்சி பெற்ற கிருஷ்ணகிரி ஊத்தங்கரை எஸ்.வி.மந்திர் மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி எஸ்.ஏ.ஆயிஷா, நாமக்கல் ராசிபுரம் எஸ்.ஆர்.வி. ஆண்கள் மேனிலைப்பள்ளி மாணவன் செல்வன் ஆர்.ஸ்ரீநாத் ஆகியோருக்கு தலா 10,000 ரூபாயையும் ரொக்கப் பரிசாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிப் பாராட்டினார்கள். மேலும், அந்த மாணவ, மாணவிகள் ஊக்கமுடன் கல்வி பயின்று வாழ்க்கையில் முன்னேறுவதோடு தமிழ்நாட்டிற்குப் பெருமைச் சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

ரொக்கப் பரிசுக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட இந்த மாணவ, மாணவிகள் அனைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த ரொக்கப் பரிசுத் தொகை அன்றி, 10ஆம் வகுப்பில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெற்றுள்ள மாணவ மாணவியர் தங்களது மேல்நிலைக் கல்வியைத் தொடர்ந்து பயில, ரூபாய் 1,500ம், 12ஆம் வகுப்புத் தேர்வில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெற்றுள்ள மாணவ, மாணவியர் தங்கள் கல்வியைத் தொடர, அரசு விதிமுறைகளின்படி உயர்கல்விக் கட்டணங்கள், விடுதிக் கட்டணங்கள் மற்றும் புத்தகச் செலவினத்தையும் அரசு வழங்கும்.

* * *

கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களது 110–ஆவது பிறந்த நாளினையொட்டி அவரது நினைவிடத்தில், 5.6.2005 அன்று, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மலர்ப் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டிற்காக ஊர்திகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் 31 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மொத்தம் 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 31 நோயாளர் ஊர்திகளையும் (Ambulance) 15 வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டிற்காக 65 இலட்சத்து 61 ஆயிரத்து 735 ரூபாய் செலவில் 15 சீருந்துகளையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கிராமப்புற மக்களுக்குத் தரமான மருத்துவச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகளற்ற ஊராட்சி ஒன்றியங்களில் மருத்துவ மனைகள் அமைக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் இதுவரை 105 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 30 படுக்கை வசதிகள், அறுவைச் சிகிச்சை அரங்கம், எக்ஸ்ரே, இ.சி.ஜி., அல்ட்ராசோனோகிராம், கூடுதல் ஆய்வக வசதி மற்றும் ஆம்புலன்ஸ் வசதி போன்றவை செய்து தரப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட 105 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஏற்கெனவே 76 நோயாளர் ஊர்திகள் வழங்கப்பட்டுவிட்டன. தற்போது, மீதமுள்ள 29 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட வருசநாடு, தடிக்காரன்கோணம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட மொத்தம் 31 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் செலவில் 31 வாகனங்களை வாங்கி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, தேனி மாவட்டம் தேவதானப்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் இடைக்கோடு, சேலம் மாவட்டம் வாழப்பாடி, காஞ்சிபுரம் மாவட்டம் திருப்புக்குழி, திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை, விழுப்புரம் மாவட்டம் மைலம் ஆகிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உரிய வாகனங்களின் சாவிகளை அந்தந்த வாகன ஓட்டுநர்களிடம் 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நேரில் வழங்கினார்கள். மீதமுள்ள 25 வாகனங்களும் அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டு சாவிகள் வாகன ஓட்டுநர்களிடம் அளிக்கப்பட்டன.

இதேபோன்று, வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தேனி, திண்டுக்கல், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 15 மாவட்ட வேளாண் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டுக்காக மொத்தம் 65,61,735 ரூபாய் செலவில் 15 சீருந்துகளை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்ட வேளாண் விற்பனைக் குழுக்களுக்கான ஊர்திகளின் சாவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அந்தந்த வாகன ஓட்டுநர்களிடம் நேரில் வழங்கினார்கள். இவ்விழாவிலேயே, மேலும் 9 வேளாண் விற்பனைக் குழுக்களுக்கான சீருந்து வாகனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என்.தளவாய் சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே. பாண்டுரங்கன், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் திருமதி.ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., வேளாண்மைத் துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத் தலைவர் திரு. ஆர்.முருகையாபாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர். *

சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு மேலும் ரூ.12.5 கோடி நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 17.6.2005



விவசாயிகள், கைவினைஞர்கள், ஊரக ஏழை எளியோர் ஆகியோர் தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அவர்கள் கடன் உதவி நிறுவனங்களை எளிதில் அணுகி, கடன் வசதி பெற்றிடவும், அவர்களின் வாழ்க்கை நிலை உயர்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரவும், என்னுடைய அரசு, எப்போதுமே அவர்களுக்கு ஆதரவான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று ஏற்கெனவே, அதாவது 10.4.2005 அன்றே நான் சுட்டிக்காட்டி இருந்தேன். அதுவும் கடந்த மூன்று ஆண்டுகளாக மாநிலம் தொடர்ந்து வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நிலையில், இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது இன்னும் மோசமானதாகும். சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், மத்திய நிதி அமைச்சகம் 1949ஆம் ஆண்டு வங்கிப் பணிகள் முறைப்படுத்தல் சட்டத்தின் 11(1) பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட விதிவிலக்கைத் தொடர்ந்து அளிக்காமல் அதற்கு மாறாக, அவ்வங்கியின் செயல்பாடுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி கட்டுப்பார்டு விதித்துள்ளது. இதனால், அடுத்த வேளாண்மைப் பருவம் தொடங்கவிருக்கும் நிலையில், விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் ஊரக ஏழை, எளியோர் பாதிக்கப் பட்டுள்ளனர். 31.3.2005ஆம் நாள் அன்றுள்ளவாறான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் கருத்திற் கொள்ளப்பட்டால், அன்றைய நிலவரப்படி சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் உள்ள நிகர மதிப்பு (Net worth) 2.35 கோடி ரூபாய் என்பதையும், எனவே, அவ்வங்கி, 1949ஆம் ஆண்டு வங்கிப் பணிகள் முறைப்படுத்தல் சட்டத்தின் 11(1) பிரிவை நிறைவு செய்கிறது என நான் முன்னரே சுட்டிக்காட்டியிருந்தேன். எனவே, 31.3.2005ஆம் நாளன்று நிலவரப்படியான நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் திரும்பப்பெறப்பட வேண்டும் என நான் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்குக் கடிதம் எழுதினேன்.

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டிக் குறிப்புகளின்படி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கணக்குகள் விரிவாகத் தணிக்கை செய்யப்பட்டதில், 31.3.2005ஆம் நாள் நிலவரப்படி, அவ்வங்கியின் நிகர மதிப்பு (Net worth) 2.36 கோடி ரூபாய் எனத் தெரியவந்துள்ளது. நடைமுறையிலுள்ள வழிகாட்டிக் குறிப்புகளின்படி பார்த்தால், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடித்து வருகிறது என்று தெளிவாகிறது. எனவே, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைத் திரும்பப் பெற வலுவான முகாந்திரம் இருப்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இன்னும் சொல்லப் போனால் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின்படி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, 2004–2005ஆம் ஆண்டில் 28.13 கோடி ரூபாய் ஆதாயம் ஈட்டியுள்ளது. தற்போது "நபார்டு" வங்கி மிகவும் கண்டிப்பான நிலைப்பாட்டை மேற்கொண்டு, மிகக் கடுமையான சில அளவுகோல்களுடன் மேலும், கடுமையான நெறிமுறைகளை விதித்துள்ளது. வங்கியின் தணிக்கை முடியும் முன்னர் பெறப்பட்ட தொகைகளைக் கணக்கில் கொள்ளாமலும் மாற்றியமைக்கப்பட்ட வட்டியினைச் செயல்படாச் சொத்துகளாகக் கருதவேண்டுமென வலியுறுத்தியும் நபார்டு வங்கி உண்மை நிலையைத் திரித்து

மோசமான நிதிநிலை நிலவுவதைப்போல ஒரு தோற்றத்தைச் சித்தரிக்க விழைந்துள்ளது. எனவே, 'நபார்டு' வங்கி இந்தப் புதிய, கடுமையான வழிகாட்டிக் குறிப்புகளின் அடிப்படையில் சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டை மதிப்பீடு செய்து புதிதாக ஒரு அறிக்கை அளித்துள்ளது. ஆனால், நபார்டு வங்கியின் இந்த அறிக்கையின்படி பார்த்தால்கூட, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, 2004– 2005 ஆம் ஆண்டில் 6.19 கோடி ரூபாய் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. அப்படி இருக்க ஏன் இந்தக் கடும் நடவடிக்கை?

முந்தைய தி.மு.க அரசால் 1999ஆம் ஆண்டில் சீரழிக்கப்பட்ட சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிதி நிலைமையைச் சீரமைத்திட தமிழ்நாடு அரசு அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளபோதிலும், இந்திய ரிசர்வ் வங்கி, விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் ஊரக ஏழை எளியோர் ஆகியோருக்குக் கடனுதவி கிடைத்திட ஏதுவாக பரிவுடன் நடவடிக்கை எடுக்காதது எனக்கு வியப்பைத் தருகிறது. இது விவசாயிகளுக்கும், கைவினைஞர்களுக்கும், ஊரக ஏழை எளியோருக்கும் கடனுதவி மிகவும் தேவைப்படுகின்ற ஒரு காலகட்டமாகும். இந்த நேரத்தில் முட்டுக்கட்டை போடுகின்ற கொள்கையைப் பின்பற்றுவது நல்லதல்ல. ஒட்டுமொத்தக் கூட்டுறவுக் கடன் அமைப்பையும் மறுசீரமைத்துப் புத்துயிர் ஊட்ட வேண்டியது இன்றியமையாதது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இது தொடர்பாக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட பணிக்குழு அதன் அறிக்கையை அண்மையில்தான் அளித்துள்ளது. நாட்டில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தையும் பெரிய அளவில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று அந்த அறிக்கையில் இருந்து நமக்குப் புலனாகிறது. பணிக்குழுவின் அறிக்கை இன்னும் பரிசீலிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாத நிலையில், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிதி நிலைமையைச் சீரமைத்து அதற்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் என்னுடைய அரசு மேற்கொண்டு, அதன் பயனாக, அந்த வங்கி உள்ளபடியே, தற்போது நன்கு செயல்பட்டு வருகிற நேரத்தில், அதன் செயல்பாட்டை முடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

இப்பிரச்சினையை மீண்டும் புதிதாகப் பரிசீலிக்க வேண்டும் என நான் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்கு ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்துள்ளேன். நபார்டு வங்கியின் மதிப்பீட்டைக் கருத்திற்கொண்டு தற்போது இந்திய ரிசர்வ் வங்கி, மாநில அரசு, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் புதிதாக நிதி உதவி அளித்திட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது. அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடர்பாக இதுவரை செயல்படுத்தப்பட்டு வருகின்ற வழிகாட்டிக் குறிப்புகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அகற்றி அதனை முழுவீச்சில் செயல்பட உடனடியாக அனுமதிக்கலாம் என்பதே எங்களுடைய கருத்தாகும். விவசாயிகளும், ஊரகப் பொருளாதாரமும் வறட்சியின் பிடியில் இருந்து மீண்டு வந்துகொண்டு இருக்கின்ற இந்தத் தருணத்தில், இந்த வங்கியின் நேர்வில் மட்டும் ஒரு வேறுபட்ட வழிகாட்டிக் குறிப்புகள் பின்பற்றப்படுவது ஏன் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

இருப்பினும், விவசாயிகள், கைவினைஞர்கள், ஊரக ஏழை, எளியோர் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு உடனடியாக, மேலும் 12.50 கோடி ரூபாய் நிதியுதவி அளித்திட நான் முடிவு செய்துள்ளேன். இத்தொகையில் 5 கோடி ரூபாய் நேரடி மானியமாக வழங்கப்படும். 7.50 கோடி ரூபாய் பங்கு மூலதன உதவியாக வழங்கப்படும். 1.4.2005ஆம் நாளுக்குப் பிறகு, இந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியால் பெறப்பட்ட தொகையான 12.23 கோடி ரூபாய் மற்றும் தற்போது வழங்கப்படும் இந்த உதவித் தொகை ஆகியவற்றைக்கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி ஆகியவற்றால் தற்போது விதிக்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டிக் குறிப்புகளை இவ்வங்கி பெரும்பாலும் நிறைவு செய்திடும். என்னுடைய அரசால், தற்போது புதிதாக அளிக்கப்பட்டுள்ள உதவியைக் கருத்திற்கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்துப் பிறப்பித்த ஆணைகளை ரத்து செய்து, அவ்வங்கி நடப்பு வேளாண்மைப் பருவத்தில் இயல்பாகச் செயல்பட்டு, விவசாயிகள், ஊரக கைவினைஞர்கள், ஏழை, எளியோர் ஆகியோருக்குக் கடன் உதவி அளித்திட உடனடியாக அனுமதிக்கும் என்று நான் நம்புகிறேன்.

* * *

சீர்மிகு சட்டப் பள்ளிக்கான புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று சென்னை பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பூம்பொழில் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "சீர்மிகு சட்டப் பள்ளிக்கான" (School of Excellence in Law) கட்டடத்தை குத்துவிளக்கு ஏற்றித் திறந்து வைத்தார்கள்.

19.4.2002 அன்று நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக முதல் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று விழாப் பேருரை ஆற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு அரசால் "சீர்மிகு சட்டப் பள்ளி" உருவாக்கப்படும் என்றும், பல்கலைக் கழகமே அதனை நேரடியாக நடத்தும் என்றும் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தவாறு 21.11.2002 அன்று சீர்மிகு சட்டப் பள்ளியை தொடங்கி வைத்தார்கள்.

தொடர்ந்து இப்பள்ளிக்கான புதிய கட்டடம் கட்டுவதற்கு 9.6.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 2 தளங்களுடன் சீர்மிகு சட்டப் பள்ளி குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடத்தின் ஒவ்வொரு தளமும் 559.14 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். கீழ்த்தளத்தில் 4 வகுப்பறைகள், ஆசிரியர் அறைகளும் மற்றும் மாணவியரின் பொது அறையும் அமைந்துள்ளன. முதல் தளத்தில் நூலகம், முதல்வர் அறை, அலுவலக அறை, ஆசிரியர்கள் அறை, வகுப்பறைகள் மற்றும் மாதிரி நீதிமன்ற அறை ஆகியவை அமைந்துள்ளன.

மாணவ – மாணவியருக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் உள்ள பணியாளர்களுக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளோடும் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்போடும் உருவாக்கப்பட்டுள்ள சீர்மிகு சட்டப் பள்ளியின் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பன்னாட்டுச் சட்டம் மற்றும் அறிவார்ந்த சொத்துரிமைச் சட்டம் ஆகிய இரண்டு புதிய முதுகலை சட்ட மேற்படிப்புகளைத் தொடங்கி வைத்தார்கள். 2005 – 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பட உள்ள இந்த முதுநிலை சட்ட மேற்படிப்புகளின் ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவ–மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இதே நிகழ்ச்சியில், பூம்பொழில் வளாகத்தில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 3 தளங்களுடன் கூடிய நிருவாக அலுவலகம் மற்றும் முதுநிலை சட்ட மேற்படிப்புத்துறை கட்டடத்தைக் கட்டுவதற்கும், செங்கல்பட்டு சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் 1 கோடி ரூபாய் மதிப்பிலும், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், நூலகம், விடுதி மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகியவை கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

இதுவன்றி, இந்திய வழக்குரைஞர் மாமன்றம், பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் சட்டப் பல்கலைக்கழக கல்விக் குழுமங்கள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ள பாடத் திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்டுத் தமிழில் எழுதப்பட்டுள்ள 27 சட்டப் பாட நூல்களையும், 40 மையச் சட்டங்கள் மற்றும் 41 தமிழ்நாடு சட்டங்களின் தமிழாக்க நூல்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள். மேலும், அகில இந்திய அளவில் சட்டக் கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற சட்ட நுணுக்கங்கள் தொடர்பான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு. எஸ்.எஸ்.பி. தர்வேஷ், சட்டத்துறைச் செயலாளர் திரு. எல். ஜெயசங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டடக் கலையின் அற்புத அழகு

தருமபுரியில் நுளம்ப பல்லவர் காலத்துச் கலையைப் புலப்படுத்தும் ஒரு கோயில் உள்ளது. மல்லிகார்ஜுனர் கோயில் எனப்படும் சைவக் கோயில் அது. சமண சமயம் அப்பகுதியில் எட்டிப் பார்க்கும் முன் அக்கோயிலுக்கு வேளாலீஸ்வரர் கோயில் என்று பெயர். அதற்கு அருகிலேயே ஒரு பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. வேளாலீஸ்வரர் கோயில் மல்லிகார்ஜுனர் கோயிலாக மாறியது கி.பி. பத்தாம் நூற்றாண்டு வாக்கில்.

சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் அருகருகேதான் உள்ளன. பெருமாள், மடியிலே லட்சுமியை வைத்துக் கொண்டு அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். பரவாசு தேவர் பெருமாள் என்று பெயர்.

மல்லிகார்ஜுனர் கோயில் நுளம்பர் காலக் கட்டடக் கலையின் அற்புத அழகை வெளிப்படுத்துகிறது. இக்கோயிலில் அம்பாள் சந்நிதி நடுவிலும் இருபுறங்களிலும் வேளாலீஸ்வரர் சந்நிதியும், சோமேஸ்வரர் சந்நிதியும் உள்ளன.

இங்குள்ள நவரங்க மண்டபம் நூறு தூண்களைக் கொண்டது. அதிலே இரண்டு தூண்கள் கூரையைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. எனினும் அவை தரையைத் தொடாமல் தொங்குகின்றன. தரைக்கும் தூணின் அடிப்பகுதிக்கும் இடையேயுள்ள இடைவெளியில் ஒரு குச்சியை நுழைத்து அடுத்த புறமாக எடுத்துவிடலாம். ஆனால் தூண் ஆடவோ அசையவோ இல்லை. இன்னொரு தூணின் இடைவெளியில், முக்கால் பகுதியை குப்பையோ மண்ணோ அடைத்துக் கொண்டுவிட்டது.

இந்த ஒவ்வொரு தூணும் ஏறக்குறைய இரண்டு முதல் மூன்று டன் எடையுடையது. தூணின் மேற்பகுதியில் மூன்றடி உயரத்திற்கு கழுமுனை மாதிரி செதுக்கி அதிலே போதிகையைக் கோர்த்திருக்கிறார்கள். கோர்த்த இடத்தைச் சுற்றி பாறாங்கற்களைப் பரப்பி மண்டபமாக்கியிருக்கிறார்கள். கோயிலின் ஒட்டு மொத்த பாரமும் இந்தத் தூண்கள் மீது இருப்பதுதான் விந்தை. இதே போல் அடி ஒட்டாத ஒரு தூண் அடுத்துள்ள காமாட்சி கோயிலிலும் உள்ளது.

கருவறையின் நுழைவாயிலின் இருபுறமும் இரு யானைகள் நீர் தெளிக்க – கஜலட்சுமி சிற்பம். ஒரு யானை நீர் தெளிக்க ஒரு யானை காத்திருக்கிறது. நவரங்க மண்டப வாயிலிலும் கஜ லட்சுமி – யானைகள். அங்கு இதற்கு எதிர்மாறாக நீர் சொரியும் யானைகள் காத்திருக்க இங்கே காத்திருந்த யானை அங்கே நீர் சொரிகிறது. கருவறையில் சிவலிங்கம். இதிலே ருத்ரபாகம் எனும் மேலே நீண்டுள்ள பாளத்தில் எதிரில் எந்தப் பொருள் இருந்தாலும் எதிரொளிக்கிறது. காலை வேளையில் கொடி மரம் முதற்கொண்டு இதிலே பிரதிபலிக்கிறது.

அடுத்து காமாட்சி அம்மன் கோயில் பாதிக் கோயில் கீழே புதைந்துள்ளது. தாமரை மலரில் ஆலயம் அமைந்திருப்பது போல் கட்டுமானம். ❖

("நம்மவர் செய்த விந்தைகள்" என்ற நூலிலிருந்து...)

விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்களைப் போற்றும் வகையில் மணிமண்டபங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்த படி, திரு.ரெட்டைமலை சீனிவாசன், பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர், திரு. வெள்ளையத்தேவன், திரு. சுந்தரலிங்கனார் மற்றும் மொழிஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர் ஆகியோரின் புகழைப் போற்றும் வகையில் நினைவு மண்டபங்களை உடனடியாக அமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 9.3.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திரு.ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் முழு உருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னை கோயம்பேட்டில் 19.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் திரு.ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் முழு உருவச்சிலை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மதுரை மாவட்டம் திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த இல்லம் அரசு நினைவிடமாக அமைக்கப்படும் என்று மண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 10.3.2005 அன்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த இல்லத்தை 22.59 இலட்சம் ரூபாய் மதிப்பில் அரசு சார்பில் நினைவிடம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் போர்ப்படைத் தளபதியாக இருந்த திரு.வெள்ளையத் தேவன் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 12.4.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில், வல்லநாடு கிராமத்தில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில்,12.4.2005 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சுந்தரலிங்கனார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் வட்டத்தில், பாஞ்சாலங்குறிச்சியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கனார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மொழி ஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று 12.4.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அவர், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் பிறந்திருந்த போதிலும், அவர் இயற்கை எய்தியது தமிழ்ச் சங்கம் தோன்றிய மதுரை மாநகர் என்பதால், மதுரை மாநகரில் மணிமண்டபம் அமைவதே சிறப்பாக இருக்கும் என்று அவருடைய மகன் திரு.தே.மணி அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார். அவரது வேண்டுகோளினை ஏற்று, மதுரை மாநகரில் 33 இலட்சம் ரூபாய் மதிப்பில் மொழி ஞாயிறு திரு.தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த மணிமண்டபங்கள் அமைக்கும் பணிகள் அனைத்தையும் உடனடியாகத் தொடங்கி, அப்பணிகளை சிறப்பாக விரைவில் முடிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

* * *

தமிழக காவல் துறை மாநில குற்ற ஆவணக் காப்பகத்திற்கென புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.15 கோடி ரூபாய் செலவில் தமிழக காவல்துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகத்திற்கென கட்டப்பட்டுள்ள புதியக் கட்டடத்தை 25.5.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, ஆராய்ந்து அவற்றை விசாரணை அலுவலர்களுக்குத் தேவையான அளவில் தகவல்களாகவும், புள்ளி விவரங்களாகவும் தருவது மற்றும் குற்றம் புரிவோருக்கு உள்ள தொடர்புகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கூறுவது ஆகிய பணிகளைத் தமிழ்நாடு மாநில குற்ற ஆவணக் காப்பகம் மேற்கொண்டு வருகிறது. மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் அங்கங்களாகக் குற்றச் செயல்முறை விளக்கப் பிரிவு, கைரேகைப் பதிவுப் பிரிவு மற்றும் குற்றம் மற்றும் குற்றவாளிகளைப் பற்றிய தகவல் முறை (Crime and Criminal Information System) அடங்கிய மாநில அளவிலான குற்றப் பதிவுகளைப் பராமரிக்கும் கணினிப் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த அனைத்துப் பிரிவுகளும் போதிய இடவசதி பெறும் வகையில், அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்போடும், எழிலார்ந்த முறையில் மூன்று தளங்களுடன், ஒட்டுமொத்தமாக 20,147 சதுர அடி பரப்பு கொண்டதாக மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் புதிய கட்டடம் 2.15 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள இக்கட்டடத்தில் 50 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய, அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு நவீன கூட்ட அரங்கம், ஒரு சிறிய கூட்ட அரங்கம் மற்றும் பயிற்சி அறை ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றியும் இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். தொடர்ந்து, தரைத் தளத்தில் அமைந்துள்ள அலுவலகப் பிரிவுகளைப் பார்வையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதல் தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கத்தையும் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், உள்துறை முதன்மைச் செயலாளர் திரு.பவன்ரெய்னா, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ்.அலெக்சாண்டர், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான திரு.ஐ.கே.கோவிந்த், இ.கா.ப., குற்றப் புலனாய்வுத்துறை குற்றப் பிரிவு கூடுதல் இயக்குநர் திரு. அமித்வர்மா, இ.கா.ப., ஆகியோர் கலந்துகொண்டனர். *

பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முயற்சியின் காரணமாக, வங்காளதேச சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட, சென்னை காசிமேட்டைச் சேர்ந்த குப்பன், சதீஷ், ராஜேஷ், சுரேஷ், தேசப்பன் மற்றும் செந்தில் ஆகிய 6 மீனவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். அப்போது மீனவர்கள் நலமுடன் தமிழகம் திரும்பியதற்கு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பாதிக்கப்பட்ட இம்மீனவர்களுக்கு செலவிடும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

26.7.2004 அன்று கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த குப்பன், சதீஷ், ராஜேஷ், சுரேஷ், தேசப்பன் மற்றும் செந்தில் ஆகிய 6 மீனவர்கள் இந்திய எல்லையைத் தாண்டி வங்காளதேச கடல் எல்லைக்குள் நுழைந்தனர் என்ற அடிப்படையில் வங்காள தேச அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த மீனவர்களை உடனடியாக விடுவித்துத் தாயகம் திரும்பிட ஆவன அனைத்தும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 21.3.2005 அன்று கடிதம் எழுதினார்கள். இதன் பயனாக, வங்காளதேச அரசால் சிறைபிடிக்கப்பட்டிருந்த தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். 27.5.2005 அன்று திரிபுரா மாநிலத்தில் உள்ள இந்திய எல்லையில் வங்கதேச அதிகாரிகளால் விடுவிக்கப்பட்ட இவர்களைத் தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று திரிபுரா மாநில அரசு பத்திரமாகக் கொல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, தமிழக மீன்வளத் துறை உயர் அதிகாரிகள் கொல்கத்தாவுக்குச் சென்று விமானம் மூலமாக அந்த 6 மீனவர்களையும் சென்னைக்கு திரும்ப அழைத்து வந்தனர். 30.5.2005 அன்று சென்னை திரும்பிய இவர்களை மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தனிப்பட்ட அக்கறையாலும், தமிழக அரசின் தொடர்ந்த முயற்சியாலும் வங்கதேச சிறையிலிருந்து மீண்டு தங்களது குடும்பத்தினருடன் இணைந்த காசிமேடு பகுதியைச் சேர்ந்த குப்பன், சதீஷ், ராஜேஷ், சுரேஷ், தேசப்பன் மற்றும் செந்தில் ஆகிய 6 மீனவர்களும், 8.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்துக் கண்ணீர் மல்க தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அப்போது மீனவர்கள் நலமுடன் தமிழகம் திரும்பியதற்கு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதுடன் பாதிப்புக்குள்ளான இம்மீனவர்களுக்கு உதவிடும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

வங்காளதேச சிறையில் வாடிக்கொண்டிருந்த தங்களை மீட்டதுடன் பாதிப்புக்குள்ளான தங்களுக்கு மேலும் உதவிடும் வகையில் தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கியமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு இம்மீனவர்கள் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

* * *

-3 ஆக 2005

பெருநகர காவல் நவீனமயமாக்கல் திட்டம்

பெருகி வரும் நகரமயமாக்கலின் விளைவாக,காவல் துறையில் எழுந்துள்ள புதிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும்; மனித ஆற்றல் தேவைகளை நிறைவு செய்யவும் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், பெருநகர காவல் நவீனமயமாக்கல் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.4.2005 அன்று புதுடெல்லியில் பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம்–ஒழுங்குப் பராமரிப்பு குறித்த மாநாட்டில் விடுத்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், 2005–2006ஆம் ஆண்டுக்கான காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், ஒரு துணைத் திட்டமாக சென்னைப் பெருநகர காவல் திட்டத்தைச் சேர்த்துக் கருத்துரு அனுப்ப தமிழக அரசைக் கேட்டுக் கொண்டதுடன், இந்தக் கருத்துரு குறித்து விரிவாக விவாதிப்பதற்காக புதுடெல்லியில் ஒரு சிறப்புக் கூட்டத்தை 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் திங்களில் நடத்திடவும் மத்திய உள்துறை அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், தமிழக காவல் துறை,காவல் பணி ஆற்றுவதில், நாட்டிலேயே சிறந்த காவல் துறை எனும் பெயர் பெற்றுள்ளது. சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகக் காவல் துறை மிகுந்த முன்னுரிமை அளித்துச் செயல்படுவதன் காரணமாக தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. அமைதியும், பாதுகாப்பும் மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது என்பதால், காவல் கடமையாற்றுவதில் புதுமையான உத்திகளைக் கையாண்டு நகரை ஒட்டியுள்ள பகுதிகளில் நகரத்துக்கு ஈடான காவல் பணி வழங்குவதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான தமிழக அரசு உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் செங்கை கிழக்கு காவல் மாவட்டத்தில் அமைந்திருந்த 41 சட்டம்–ஒழுங்கு காவல் நிலையங்களையும், 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் சென்னை மாநகர காவல் துறை அதிகார வரம்பின் கீழ் இணைத்து, சென்னைப் பெருநகர காவல்

ஆணையரகத்தை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

பொது அமைதி காப்பதிலும், மக்களுக்கு நிம்மதியான சூழ்நிலையை உருவாக்கித் தருவதிலும் மிகுந்த முனைப்புக் காட்டுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ள இத்திட்டத்தில், காவல் மாவட்ட எல்லைகளை இணைப்பதோடு மட்டுமன்றி, காவல்துறை நிருவாகத்தின் அதிகார வரம்புகள் மற்றும் நிருவாக அமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் மாற்றி அமைத்தல் ஆகியனவும் அடங்கும். 3 புதிய காவல் மாவட்டங்கள், ஒரு புதிய போக்குவரத்து மாவட்டம் மற்றும் தாம்பரத்தைத் தலைமை யிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் உட்கோட்டம் ஆகியவை இதில் உள்ளடங்கியுள்ளன. இத்திட்டத்தை செயலாக்கிட தமிழக அரசு ரூ. 22.40 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், புதிதாக உருவாக்கி ஆணையிட்டுள்ள சென்னைப் பெருநகர காவல் ஆணையரகத்தில் 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உள்ளடக்கி மொத்தம் 155 காவல் நிலையங்கள் உள்ளன. மேலும், தாம்பரம் உட்கோட்டத்திற்கென தனியே ஒரு புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம் விரைவில் செயல்படத் துவங்கும்.

15.4.2005 அன்று புதுடெல்லியில் பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு குறித்த மாநாட்டில் பங்கேற்று பேசிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த புதிய முயற்சியின் சிறப்பம்சங்கள் பற்றிய விளக்கத்தை தனது உரையில் விரிவாக எடுத்துரைத்தார்கள். சென்னைப்பெருநகர ஆணையரக உருவாக்கம் தனித்துவம் வாய்ந்தது என்றும், சென்னைப் பெருநகர காவல் ஆணையரகத்தை புதியதாக உருவாக்கியதன் மூலம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய பெருநகர காவல் ஆணையரகங்களில் ஒன்று என்ற தனிச்சிறப்பைத் தமிழகத்தின் சென்னைப் பெருநகர காவல் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது உரையில் குறிப்பிட்டார்கள். பெருநகர காவல் பணிகளின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அவற்றுக்குத் தனித்த முக்கியத்துவம் அளித்தல் மற்றும் அவற்றைச் சிறப்புடன் கையாளுதல் ஆகியவை இன்றியமையாதன என்பதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அப்போது வலியுறுத்தினார்கள். பெருகி வரும் நகரமயமாக்கலின் விளைவாக எழுந்துள்ள புதிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், மனித ஆற்றல் தேவைகளை நிறைவு செய்யவும் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், பெருநகர காவல் நவீனமயமாக்கல் என்ற தனியான ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற குறிப்பான வேண்டுகோளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அந்த மாநாட்டில் மத்திய அரசின் முன்வைத்தார்கள்.

பெருநகரங்களின் காவல் பணி தொடர்பான பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குறிப்பாகத் தெரிவித்த இந்த ஆலோசனையை மத்திய அரசு தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், மத்திய உள்துறை அமைச்சகம் 13.5.2005 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, 2005–2006ஆம் ஆண்டுக்கான காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், ஒரு துணைத் திட்டமாகச் சென்னைப் பெருநகர காவல் திட்டத்தைச் சேர்த்து கருத்துரு அனுப்புமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், மாநில அரசின் இந்த முயற்சி புதுமையானது என்பதால் இந்த கருத்துரு குறித்து விரிவாக விவாதிப்பதற்காக புதுடெல்லியில் ஒரு சிறப்புக் கூட்டத்தை இந்த ஆண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் திங்களில் நடத்திடவும் மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தெரிவித்த ஆலோசனையை மத்திய அரசு ஏற்று, அதன் அடிப்படையில் பெரு நகர காவல் பணிகள் குறித்த சிறப்புப் பிரச்சினைகளை சமாளிக்க துணைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கும், புதுமை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற முனைப்பான சிந்தனைக்கும் கிடைத்த வெற்றி ஆகும். மக்கள் மேம்பாட்டுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் புதிய திட்டங்களை வகுத்து அதில் புதுமைகளைப் புகுத்தி புதிய முயற்சிகளை மேற்கொள்வதில் தமிழகமே முன்னோடி மாநிலம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இது அமைந்துள்ளது.

❖ ❖ ❖

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ - மாணவியருக்கு 100 விடுதிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியரின் பயன்பாட்டுக்கென

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்



ரூ.31.50 கோடி செலவில் 26 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 100 விடுதிகளை திறந்து வைத்தார்கள். மேலும், ரூ.19.18 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்படவுள்ள 66 விடுதிகள் மற்றும் பள்ளி கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள். மேலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெண் பயனாளிகளுக்கு நிலப் பத்திரங்களை வழங்கினார்கள். தொடர்ந்து, இவ்வாண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியருக்கு ஊக்கப் பரிசுகளை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2001ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப் பேற்றதும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியரின் நலன் கருதி, தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த அனைத்து விடுதி களுக்கும் அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடனும், போதிய இடவசதிகளுடனும் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்ட உத்தரவிட்டார்கள். இதன்படி, தாட்கோ நிறுவனம் மூலம் ரூ.155.30 கோடி செலவில் 493 விடுதிகளைக் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவற்றில், கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.83.47 கோடி மதிப்பீட்டில் 265 ஆதிதிராவிட மாணவ – மாணவியர் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 26 மாவட்டங்களில் ரூ.31.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 100 விடுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், இதே நிகழ்வில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ரூ.19.18 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்படவுள்ள 66 விடுதிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இந்த விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்கள் 9 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு, இந்தக் கல்வி ஆண்டு இறுதிக்குள் மாணவ – மாணவியர்கள் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

ஆதிதிராவிட மகளிர் சொந்த நிலம் வாங்க உதவி

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்ற நிலமற்ற மற்றும் சிறு/குறு விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையும் வகையிலும், அவர்களை நிலச் சொந்தக்காரர்கள் ஆக்கும் நோக்கிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிட மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின் கீழ்,ஒவ்வொரு பயனாளியும் 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வாங்க, அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் நிதியுதவியும், நில அபிவிருத்தி, பாசன வசதி மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் நிதியுதவியும் வழங்கப்படுகிறது. இதில், 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், பயனாளிகள் நிலம் வாங்குதல் தவிர நில அபிவிருத்தி, பாசன வசதி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றிற்கு மொத்தமாகவும் அல்லது அவரவர் தேவைக்குத் தக்க வகையிலும் உதவி பெறலாம். இத்திட்டத்தில், பயனாளிகள் தாங்கள் வாங்க விரும்பும் நிலத்தினை தாங்களே தேர்வு செய்யலாம். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 75 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படுகிறது. மீதமுள்ள 25⁄ சதவிகித கட்டணமும் கடனில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இப்பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவசமாக மின் இணைப்பும் உடனடியாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 8,829 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு 1,233 இனங்களுக்கு ரூ.7.25 கோடி மானியமாகவும் ரூ.8.5 கோடி வங்கிக் கடனாகவும் ஆக மொத்தம் ரூ.15.75 கோடி நிதியுதவி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,10.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், 25 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெண் பயனாளிகளுக்கு நிலப் பத்திரங்களையும், நிதி உதவியையும் வழங்கி தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியருக்கு ஊக்கப் பரிசுகள்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அரசு பல சலுகைகளையும், பொருளாதார உதவிகளையும் செய்து வருகிறது. ஆதிதிராவிடர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் 1,049 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளையும், பழங்குடியினர் வாழும் மலைப்பகுகளில் 280 உண்டு உறைவிடப் பள்ளிகளையும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் தமிழக அரசு நடத்தி வருகிறது. இந்த ஆண்டு, அதாவது 2005ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் இத்துறை பள்ளிகளில் முறையே 61% மற்றும் 69% மாணவ – மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

12ஆம் வகுப்புத் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் மொத்தம் 6 பேருக்கு தலா ரூ.25,000 மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் மொத்தம் 6 பேருக்கு தலா ரூ.10,000 வீதம் ஊக்கப் பரிசாக தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தின்படி 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற செல்வன். வி.சக்திவேல் (1173/1200), செல்வி. எஸ்.கிருத்திகாராஜ் (1172/1200), செல்வன்.மைக்கேல் ஆண்டோ (1149/1200), செல்வி ஜெ.ரோஸ்மேரி (1142/1200) ஆகியோருக்கு தலா 25,000 ரூபாய் வீதமும் , 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற செல்வி. என்.சிந்து (488/500), செல்வன் ஜெ.ஜோ. பிரவின்குமார் (483/500), செல்வன்.எஸ்.சரவணன் (481/500), செல்வி. ஆர்.பிரபா (481/500), செல்வன் பி.பால்ராஜ் (476/500), செல்வி.வி.ஆண்டோ மரிய ஜெரால்டின் (475/500) ஆகியோருக்குத் தலா 10,000 ரூபாய் வீதமும் ஊக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்த விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி, தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திருமதி.வி.சரோஜா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.மா.பாலமுருகன் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

* * *

தெரிந்து கொள்வோம்

அண்டார்டிகா பிரதேசத்தில் சூரியன், பல மாதங்கள் இருபத்து நான்கு மணி நேரம் தொடர்ந்து பிரகாசித்து, அங்கு இரவே உருவாக முடியாதபடி செய்து விடுகிறது. இந்தப் பிரதேசத்தில் இருக்கும் சராசரி வெப்பநிலை –37°c. சில சமயங்களில், இங்கு வெப்பநிலை –88°c அளவுக்கு தாழ்ந்துவிடுகிறது. இங்கு சில சமயங்களில் காற்று வேகமாக வீசி விரைவாக ஓடிச் செல்லும் இரயில் வண்டியைப் போன்று சப்தத்தை உருவாக்குகிறது. இங்கு 3 கிலோ மீட்டர் ஆழத்துக்கு பனி உறைந்து கிடக்கிறது. 14 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள இந்தப் பிரதேசத்தில் உறைந்திருக்கும் பனி உலகிலே இருக்கும் பனியின் அளவில் 95 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பொனிலியா (Bonellia) என்ற கடல் புழு இனத்தில், பெண் புழு ஆறு அங்குல நீளத்தைக் கொண்டதாக இருக்கிறது. ஆண் புழுவின் நீளம் 1/16 அங்குலம் தான். பெண் புழு ஆண் புழுவைவிட பல மடங்குகள் பருத்து காணப்படுகின்றது. ஆண் புழுவை விட பெண் புழு நூறு மடங்குகள் அதிக எடை கொண்டதாக உள்ளது.

பெண் வண்ணத்துப் பூச்சி ஆண் வண்ணத்துப் பூச்சியைவிட பதினைந்து மடங்கு நீளமாகவும், பத்து மடங்கு அதிக எடை கொண்டதாகவும் இருக்கிறது.

பழம்பெரும் திரைப்பட நடிகைக்கு உதவித் தொகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறிய நிலையில் வாடிவரும் பழம்பெரும் திரைப்பட நடிகையும், கர்நாடக குரல் இசையில் புலமை பெற்றவருமான திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்காக முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் நிதிஉதவி வழங்கிடவும், அதனை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation) சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் வைப்பு நிதியாகச் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை, மாதந்தோறும் அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும் உத்தரவிட்டு, அதற்கான ஆணையினை 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள், 50 ஆண்டு காலமாகத் திரைப் படங்களில் நடித்துவரும் பழம்பெரும் நடிகை ஆவார். 300 திரைப்படங்களுக்கு மேல் நடித்து புகழ்பெற்றவரும், கர்நாடக குரலிசையில் புலமை பெற்றவருமான திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள், சக்கரவர்த்தித் திருமகள், மாட்டுக்கார வேலன், நீதிக்கு தலைவணங்கு போன்ற பல படங்களில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடனும், வீரபாண்டிய கட்ட பொம்மன், பூவா தலையா, பணமா பாசமா முதலான பல்வேறு வெற்றிப் படங்களிலும் நடித்தவர் ஆவார். திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள், தற்சமயம் மிகவும் வறிய சூழ்நிலையில் உள்ளதாகத் தெரிவித்து, தான் தொடர்ந்து வாழ்க்கை நடத்த உதவிட வேண்டும் என்று கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை மனு கொடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறிய நிலையில் வாடும் இவர் வாழ்க்கை நடத்துவதற்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, ரூ. 10 இலட்சம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள். மேலும், இந்த உதவித் தொகை ரூபாய் 10 இலட்சத்தையும் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்துமாறும், அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 5,833/– ரூபாயை அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதற்கான அரசாணையை திருமதி எஸ். வரலட்சுமி அவர்களிடம் 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

இதன் மூலம், திருமதி எஸ். வரலட்சுமி அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.5,833 உதவித் தொகையாக கிடைக்கும். இந்த உதவித் தொகை, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக மாதந்தோறும் திருமதி எஸ். வரலட்சுமி அவர்களுக்கு அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து இதற்கான ஆணையைப் பெற்றுக் கொண்ட பழம்பெரும் நடிகை திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ❖

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மகளிர் தயாரிக்கும் நவீன தொழில்நுட்ப ஓடுகள்

26.12.2004 அன்று தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி எனும் இயற்கைச் சீற்றத்தினால், தமிழகத்தின் கடற்கரையோர கிராமங்கள் அனைத்தும் பாதிக்கப் பட்டன. அதில் நாகப்பட்டினம் மாவட்டம் சுனாமியால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு, மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர்.

நாகப்பட்டினத்தில் உள்ள அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம் போன்ற மீனவ கிராமங்கள் பெரும் பாதிப்படைந்து இந்தக் கிராமங்களைச் சார்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான நபர்களை சுனாமி பலி வாங்கியது.

எதிர்கால வாழ்க்கையே கேள்விகுறியாகி விட்ட நிலையில் தங்களது அன்றாட வாழ்க்கைக்கு என்ன செய்யப்போகிறோம் என கலங்கி இருந்த மக்களுக்கு மாற்றுத் தொழில்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட நிருவாகத்தின் சார்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் அக்கரைப்பேட்டை கிராமத்தில் உள்ள வங்கக்கடல் மற்றும் கடல்கன்னி மகளிர் சுயஉதவிக் குழுவின் 26 உறுப்பினர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தில் கான்கீரிட் கூரை ஓடுகள் தயாரித்தல் குறித்து ஒரு மாத பயிற்சி அளிக்கப்பட்டது. மீன்பிடி சார்ந்த தொழில் புரிந்துவந்த மற்றும் வேறு தொழில் செய்யாத பெண்களுக்கு இது ஒரு புதுமையான அனுபவம்.

யாருமே எதிர்பார்த்திடாத வகையில், அப்பெண்கள், இப்பயிற்சியில் முழு மனதுடன் ஈடுபட்டனர். இத் தொழில் குறித்த அனைத்து தொழில்நுட்பங்களையும் கவனமுடன் கற்றுக்கொண்டதுடன் இல்லாமல், அவர்கள் தொழில் தொடங்கி விட்டனர். பெண்களால் தொடங்கப்பட்ட எந்த ஒரு செயலும் சிறப்பானதாக அமையும். அதுமட்டும் அன்று, இச்செயல் ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது. தற்போது இப்பெண்கள் மேற்கொண்டு வந்த மீன்பிடித் தொழிலை மட்டும் நம்பியிருக்கவில்லை. நாள்தோறும் இப்பெண்களால் 200 முதல் 220 ஓடுகள் தயாரிக்கப்படுகின்றன.

ஒரு ஓட்டினைத் தயாரிக்க ரூ.5 செலவாகிறது. ஒரு ஓடு ரூ.6.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 6,000 ஓடுகள் வரை உற்பத்தி செய்தால் அதன் மூலம் ரூ.9,000 வரை இலாபம் கிடைக்கும்.

நவீன தொழில்நுட்ப ஓடுகள் தயாரிப்பதற்கு உற்பத்திக் கூடம் ரூ.9.91 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி விரைவில் முடிக்கப்படும். ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இதுதவிர அக்கரைப்பேட்டையில் உற்பத்திக்கூடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.



எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டத்தின் கீழ், ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய கடன் ரூ.2 இலட்சம் வங்கிக்கடன் பெற தகுந்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவப் பெண்கள் முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

– பொ.முத்தையா,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்.

* * *

விடுதலைப் போராட்ட வீராங்கனைக்கு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய தேசிய ராணுவத்தில் பங்கேற்று சேவையாற்றிய விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களின் தியாகத்திற்கு கௌரவம் அளித்து, வறுமை நிலையில் வாடுகின்ற இவர் வாழ்க்கை நடத்துவதற்கு ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதி உதவி வழங்கிடவும், இதனை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாடு நிறுவனத்தில் வைப்புத் தொகையாக செலுத்தி அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 2,917 ரூபாயை அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும், மேலும் அவர் தனது வாழ்நாள் முழுவதும் இலவசமாகத் தங்கிடும் வகையில் அரசு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றை அவருக்கு வழங்கிடவும் ஏற்கெனவே உத்தரவிட்டவாறு, அதற்கான ஆணைகளை நேரில் வழங்கினார்கள்.

இந்திய தேசிய ராணுவத்தில் முன்னணி வீராங்கனையாகப் பணியாற்றிய 83 வயது நிரம்பிய விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்கள், தற்போது தங்குவதற்குப் போதிய இடவசதி அற்ற சிறிய வாடகை வீட்டில் தங்கியிருப்பதாகவும், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மட்டுமே பெற்று வருவதாகவும், வேறு எந்த ஆதரவும் இல்லாத நிலையில் மிகவும் வறிய சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்து தொடர்ந்து வாழ்க்கை நடத்த தனக்கு உதவிட வேண்டும் என்று கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனு அளித்திருந்தார்.

இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களின் தியாகத்திற்கு கௌரவம் அளிக்கும் வகையிலும், வறுமை நிலையில் வாடுகின்ற இவர் வாழ்க்கை நடத்த ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சம் நிதியுதவி வழங்கிடவும், இதனை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்தி அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 2,917 ரூபாயை அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும் உத்தரவிட்டிருந்தார்கள். மேலும், இடவசதியற்ற சிறிய வாடகை வீட்டில் இவர் தங்கி இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரது வாழ்நாள் முழுவதும் இலவசமாகத் தங்கிடும் வகையில் அரசு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றை வழங்கிடவும் ஆணையிட்டிருந்தார்கள்.

இதன்படி, இந்த உதவிகளுக்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

இந்த ஆணைகளைப் பெற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். ✶



பள்ளிகளில் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்திட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 8.6.2005

இந்நாட்டின் எதிர்காலமாகத் திகழும் குழந்தைகள், கல்வி பயிலும் காலத்தில் ஒரு நாளின் பெரும் பகுதி நேரத்தைச் செலவிடும் இடமாகிய பள்ளிகளில், பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்திட உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியது அவசியம் ஆகும். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில், அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஒன்றில் 16.7.2004 அன்று நிகழ்ந்த ஒரு கோர தீ விபத்தை அடுத்து, என்னுடைய அரசு, இம்மாநிலத்தில் பள்ளிகளின் செயல்பாட்டை முறைப்படுத்துவதற்காகச் சில கூடுதல் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி, பள்ளிக் கட்டடங்களின் கட்டுமான உறுதித் தன்மை, பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு சில வரையறைகளை நிர்ணயித்துள்ளது.

16.7.2004 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற சோகச் சம்பவத்தை அடுத்து, உடனடியாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தங்களது அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்துப் பள்ளிகளையும், மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நான் உத்தரவிட்டேன். முதல் நடவடிக்கையாக கீற்றுக் கூரைகள் கொண்ட பள்ளிகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இவ்வாறு கீற்றுக் கூரைகளைக் கொண்டுள்ள அனைத்துப் பள்ளிகளும் அவற்றை உடனடியாக அகற்றி, தீப்பிடிக்காத பொருட்களால் ஆன கூரைகளை அமைக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் பெற்றோர் – ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு, சம்பந்தப்பட்ட பள்ளிகள் அனைத்தையும் முழுமையாக ஆய்வு செய்து, கீற்றுக் கூரைகள் அனைத்தும் மாற்றப்பட்டு அவற்றுக்குப் பதிலாக தீப்பிடிக்காத பொருட்களால் ஆன கூரைகள் அமைக்கப்படுவதை உறுதி செய்தது.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையின் அடுத்த கட்டமாக, 11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளின் கட்டுமான உறுதித் தன்மையையும், குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகிறது. இப்பள்ளிகளில், ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பயிலும் எல்.கே.ஜி., யு.கே.ஜி., போன்ற மழலையர் வகுப்புகளும் உள்ளன. பல்வேறு அபாயங்களுக்கு, குறிப்பாக, தீயினால் ஏற்படும் அபாயங்களுக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ள குழந்தைகள் பயிலுகின்ற இப்பள்ளிகள் கட்டட உறுதித் தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்த கட்டாயத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது இரட்டிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த இன்றியமையாத் தேவைகளில் சமரசத்துக்கு இடமே இல்லை.

அனைத்து மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளும், கட்டுமான உறுதித் தன்மை மற்றும் பாதுகாப்புத் தேவைகளைக் கண்டிப்பாக நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து ஒப்புதல் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக எனது அரசு 2004–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இருந்து ஒரு தீவிர நடவடிக்கையை மேற்கொண்டது. அனைத்து மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளும் இந்தப் பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்ய ஏதுவாக வழக்கமான கோடை விடுமுறை காலத்தையும் சேர்த்துப் போதிய அவகாசம் அளிக்கப்பட்டது. இப்பாதுகாப்புத் தேவைகளைக் கண்டிப்பாக நிறைவு செய்து, பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னதாக, தேவையான ஒப்புதலைப் பெற வேண்டுமென இப்பள்ளி நிருவாகங்களுக்கு மீண்டும் இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு, போதிய அறிவிப்புக் கொடுத்தும் பல மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், கட்டடங்களின் கட்டுமான உறுதித் தன்மையையும், குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து ஒப்புதலைப் பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஒப்புதல் பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கூட சில மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் தாக்கல் செய்யவில்லை. இது, கட்டடங்களின் கட்டுமான உறுதித் தன்மை, குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவை குறித்த விதிமுறைகளை நிறைவு செய்வதில் அவற்றின் அக்கறையற்ற அலட்சியப் போக்கையே காட்டுகிறது. இவ்வாறு விதிமுறைகளை அலட்சியப்படுத்துவதானது இப்பள்ளிகளில் சேர்ந்து பயிலும் குழந்தைகளின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும். இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

கோடை விடுமுறைக்குப் பிறகு குழந்தைகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு மீண்டும் செல்லத் தொடங்கி இருக்கிறார்கள். கட்டடத்தின் கட்டுமான உறுதித் தன்மை, குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவை குறித்த விதிமுறைகளை நிறைவு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் தற்போது உணர்ந்து அவற்றை நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இத்தகைய நிலைமையில் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்படக் கூடிய இடர்பாடுகளையும், இடப்பெயர்வுகளையும் தவிர்ப்பதற்காக, இக்கல்வி நிறுவனங்களின் நிருவாகங்கள், விதிமுறைகளை நிறைவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து தேவையான ஒப்புதலைப் பெறுவதற்கு 31.8.2005 வரை மூன்று மாத கால அவகாசம் அளிப்பதென நான் முடிவு செய்துள்ளேன். இக்கால வரம்பிற்குள் விதிமுறைகளை நிறைவு செய்யாத பள்ளிகள் கடுமையான நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

பள்ளிக் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டியதன் கட்டாயத் தேவையையும், இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, இப்பள்ளி நிருவாகத்தினர் தற்போது அளிக்கப் பட்டுள்ள கால நீட்டிப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதற்குள்ளாக வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் முழுமையாக நிறைவு செய்து ஒப்புதலைப் பெறுவார்கள் என நம்புகிறேன். ❖

திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூரில் அமைந்துள்ள அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலுக்கு மரத்தினால் ஆன ஒரு புதிய திருத்தேரை ரூ.20 இலட்சம் மதிப்பில் உருவாக்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூரில் அமைந்துள்ள அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் ஆகிய அருளாளர்களால் பாடப்பெற்ற சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.5.2005 அன்று, இத்திருக்கோயிலுக்குச் சென்று முருகப்பெருமானைத் தரிசித்தார்கள். அப்பொழுது அந்தக் கோயில் நிருவாகத்தினரும், பக்தர்களும், அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலுக்கென தனியாக ஒரு மரத்தேர் இல்லை என்றும், தற்போது, திருக்கோயில் பிரம்மோற்சவத் தேர்த்திருவிழா ஒரு சிறிய சகடை, அதாவது சிறு சட்டத் தேரில் மட்டுமே கொண்டாடப்பட்டு வருவதாகவும், எனவே இத்திருக்கோயிலுக்கென புதியதாக மரத்தேர் ஒன்றினை உருவாக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த வேண்டுகோளினை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறையின் மூலமாக, ரூ. 20 இலட்சம் மதிப்பில், திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலுக்கு மரத்தினால் ஆன ஒரு புதிய திருத்தேரை உருவாக்கும் திருப்பணியைச் சிறப்புடன் மேற்கொண்டு, விரைவில் முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

* * *

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 79ஆவது பிறந்தநாளையொட்டி 24–6–2005 அன்று, சென்னை தியாகராய நகர், ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

புதுக்கோட்டை, வாராப்பூர் ஊராட்சியில் விறகு மூலம் மின்உற்பத்திச் சாதனை

குறைந்த செலவில் விறகுகள் மூலம் மின் உற்பத்தி செய்து சாதனைப் படைத்து வருகிறது, புதுக்கோட்டை மாவட்டம் வாராப்பூர் ஊராட்சி. ஊராட்சி மன்றத்தலைவர் திரு.எஸ்.ராமசாமி இதற்கான முயற்சியில் கடந்த 6 மாதங்களாக ஈடுபட்டு தற்போது வெற்றிக் கண்டுள்ளார்.



ரூ.3.15 இலட்சம் செலவில் இதற்கான ஜெனரேட்டர் குஜராத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

விறகுகள், குச்சிகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அதனை எரித்து, அதனைக் கொண்டு ஜெனரேட்டர் மூலம் மின் உற்பத்திச் செய்யப்படுகிறது.

இத்திட்டம் பயோ–மாஸ் கேஸி பயர் என்று அழைக்கப்படுகிறது.

மின்சாரத்திற்கும் பயோ–மாஸ் கேஸி பயர் மின்சாரத்திற்கும் உள்ள செலவின வித்தியாசம்	
மின்வாரியம்	**பயோ – மாஸ் கேஸி பயர்**
ஒரு யூனிட்டுக்கு ரூ.3.5	யூனிட்டுக்கு ஆகும் விறகின் மதிப்பு 75 காசுகள்
கூலி 0.46 காசு	கூலி 0.66 காசு
பராமரிப்பு 0.71 காசு	பராமரிப்பு 0.28 காசு
மொத்தச் செலவு ரூ.4.67	மொத்தச் செலவு ரூ.1.69

இப்பகுதியில் தைலமரங்கள் உள்ளிட்ட மரங்கள் அதிகளவில் இருப்பதால் மின் உற்பத்தி செய்ய ஏதுவாக உள்ளது.



இந்தத் திட்டத்தின் மூலம் 1 மணி நேரத்தில் 10 கிலோ விறகினைப் பயன்படுத்தி 20 யூனிட் மின்சாரத்தை உற்பத்திச் செய்ய முடியும்.

பயோ–மாஸ் கேஸி ப்யர் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் மின்வாரியத்திலிருந்து பெறும் மின்சாரத்தை விட குறைந்த விலையில் உற்பத்திச் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

மின்வாரியம் மூலம் பெறப்படும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவு ரூ.4.67. பயோ–மாஸ் கேஸி பயர் மூலம் பெறும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவு ரூ.1.69.

இதன் மூலம் ஒரு யூனிட் மின்சாரத்துக்கு ரூ.2.98 மிச்சமாகிறது.

தற்போது வாராப்பூரில் 4 ஹெச்பி (குதிரை சக்தி) திறன் கொண்ட மோட்டார் பம்புசெட்டுகள் 2 பயோ–மாஸ் கேஸி பயர் மின்சாரம் மூலம் இயக்கப்படுகிறது.

விரைவில் இதன் மூலம் ஊராட்சியில் 200 தெருவிளக்குகள் எரிய வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

துரை. தாமரைச்செல்வம்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.

மிளகாய் வற்றல் கொள்முதலைத் தீவிரப்படுத்த நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை
(14–5–2005)

ஏற்றுமதிச் சந்தையின் பல்வேறுபட்ட காரணிகள் மற்றும் இந்த ஆண்டு பயிர் விளைச்சலில் ஏற்பட்ட உயர்வு ஆகியவற்றால், அங்காடியில் மிளகாய் வற்றலின் விலை சரிந்து, அதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பருவத்தில் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை எதிர்நோக்கி, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), என்னுடைய உத்தரவுகளின் பேரில், 2005–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நியாய விலையில் மிளகாய்வற்றல் நேரடிக் கொள்முதல் நடவடிக்கையை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. முதன்மைப் பருவத்தில் விவசாயிகள் பயன்பெறும் விதத்தில், மிளகாய் வற்றலுக்கு ஆதரவு. இந்த நடவடிக்கை பெரிதும் உதவியுள்ளது.

மிளகாய் பருவம் முடிவுறும் இந்தத் தருணத்தில், கடைசி காய்ப்பான நீளம் குறைந்த மிளகாய் பறிக்கும் பணி நடைபெற்று வந்தாலும், சந்தையில் விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகளிடம் ஏற்கெனவே பறித்த மிளகாய் வற்றல் இன்னும் இருப்பு உள்ளது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மிளகாய் மிகுதியாக விளையும் பகுதிகளான, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில், விவசாயிகளிடம் இருந்து மேலும் மிளகாய் வற்றலை உடனடியாகக் கொள்முதல் செய்யுமாறு நான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு உத்தர விட்டுள்ளேன்.

இந்த மிளகாய்ப் பருவம் முடியும் வரை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், நியாய விலையில், அதாவது சம்பா (Chamba) ரகம், வகை I (நல்ல தரம்) வற்றலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,300 என்ற விலையிலும், வகை II (சராசரி தரம்) வற்றலை குவிண்டால் ஒன்றுக்கு 1,900 ரூபாய் என்ற விலையிலும் கொள்முதல் செய்யும். முண்டு (Mundu) ரக வற்றல், குவிண்டால் ஒன்றுக்கு 100 ரூபாய் குறைவாக, அதாவது, முறையே 2,200 ரூபாய் மற்றும் 1,800 ரூபாய் என்ற விலைகளில் கொள்முதல் செய்யப்படும். விவசாயிகளுக்குக் கிடைக்கும் அங்காடி விலை அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாத நிலையில், அவர்களிடமிருந்து மேலும் மிளகாய் வற்றலைக் கொள்முதல் செய்யும் இந்த நடவடிக்கையை அவர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற இந்த திட்டத்தை மத்திய அரசின் அங்காடித் தலையீட்டுத் திட்டத்தின் (Market Intervention Scheme) கீழ் சேர்க்க வேண்டும் என்று கோரி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதி உள்ளேன். அங்காடித் தலையீட்டுத் திட்டத்தினால் ஏற்படும் இழப்பில் 50 சதவிகிதத்தை மட்டுமே மத்திய அரசு ஈடுசெய்கிறது. இதற்கு மாறாக, இழப்பு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டுள்ளேன். அங்காடித் தலையீட்டுத் திட்டத்தின் இந்த வழிகாட்டிக் குறிப்புகள் திருத்தி அமைக்கப்படுவதை எதிர்நோக்கி தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மிளகாய் வற்றல் கொள்முதலை அங்காடித் தலையீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டுமென நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, ஆதரவு அளித்திடும் விதத்தில் மிளகாய் வற்றல் கொள்முதலைத் தீவிரப்படுத்துமாறு நான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு உத்தரவிட்டுள்ளேன். ❖

கிருஷ்ணகிரி மாவட்டத்தில்
13ஆவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி

பதின்மூன்றாவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி 15.5.2005 முதல் 29.5.2005 வரை கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கண்காட்சியில் பல்வேறு மாநிலங்களிலிருந்து வரப்பெற்ற தோத்தாபுரி, அல்போன்சா, ரஸ்புரி, செந்தூரா, நீலம் போன்ற பல்வேறு வகையான மாங்கனிகள், பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டன. மாம்பழச்சாறு மற்றும் உணவு பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. 'மா' போட்டி அரங்கில் பழங்களால் அமைக்கப்பட்டிருந்த கோபுரம், பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

15.5.2005 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள், மாவட்ட சுற்றுலாப் பொருட் காட்சியினைத் திறந்து வைத்தும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், பல்துறைப் பணிவிளக்கக் கண்காட்சியினைத் திறந்து வைத்தும், இணையதளத்தைத் தொடங்கி வைத்தும் சிறப்புரையாற்றினர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள், விழாவிற்குத் தலைமையேற்று தலைமையுரையாற்றினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும்போது :-

கிருஷ்ணகிரி மாவட்டம் மேம்பட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.25 கோடி செலவில் குடிநீர்த் திட்டப் பணிகளும், ரூ.5.20 கோடியில் சாலை மேம்பாட்டுப் பணிகளும், ரூ.77 இலட்சத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய அளவிலும் கிருஷ்ணகிரி மாவட்டம் தனி இடம் பெறும் என்பதில் நம்பிக்கையுடன் செயலாற்றி வருகின்றோம். மாங்கனிக் கண்காட்சியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து உற்பத்தியாளர்கள் கொண்டு வந்திருந்த 100க்கும் மேற்பட்ட ரக மாங்கனிகள் போட்டி அரங்கில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டன. இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயப் பெருமக்கள் அதிக அளவில் மாம்பழம் உற்பத்திச் செய்து வருகிறார்கள். மாம்பழச் சாறு தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படுவதால் நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், பல்வேறு திட்டங்களை மாவட்டத்திற்கு அறிவித்து அதற்கான நிதியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பெரிய நகரங்களில் உள்ளது போன்ற விளையாட்டரங்கம் தற்போது நிறுவப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது. இது போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு வழங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு மாவட்ட நிருவாகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

விழாவில், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

"தமிழ்நாட்டில் 80 எக்டேரில் மா பயிராகின்றது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30,800 எக்டேரில் 40 சதவிகிதம் மா உற்பத்தியாகின்றது. இந்தக் கண்காட்சியினால் மா விவசாயிகள் பயன்பெறுவர். தமிழ்நாட்டை இந்தியாவில் முதல் மாநிலமாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். நீர்ப்பாசனத்திற்கு ரூ.20 கோடி, சாலை மேம்பாட்டிற்கு ரூ.30 கோடி, கெலவரப்பள்ளி அணைக்கு ரூ.1.75 கோடி, மருத்துவமனை மேம்பாட்டிற்கு ரூ.12.50 கோடி, ஸ்வர்ண ஜெயந்தி திட்டத்திற்கு ரூ.11 கோடி, சுற்றுலாத்துறைக்கு ரூ.77 இலட்சம் என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.1,740 கோடி, நகர்புறக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.822 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட ரூ.10 கோடி, பேருந்து நிலையம் கட்ட ரூ.6.50 கோடி என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நிதி ஒதுக்கியுள்ளார்கள். அனைத்து மாணவ, மாணவிகளும் பயன்பெறும் வகையில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றியபோது கூறியதாவது:-

"வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மாங்கனிக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்தான், சுற்றுலாத்துறை தனியாகப் பிரிக்கப்பட்டு அதற்குத் தனி அமைச்சர் நியமனம் செய்யப்பட்டார். சுற்றுலாத்துறைக்குத் தனிக் கவனம் செலுத்திப் பல்வேறுத் திட்டங்களை அறிவித்துள்ளார். அவதானப்பட்டி ஏரியில் சிறுவர் பூங்கா மற்றும் படகு குளம் அமைக்க ரூ.60 இலட்சமும், தேன்கனிக்கோட்டை தேவர்பேட்ட கோயிலைப் புதுப்பிக்க ரூ.69 இலட்சமும், தருமபுரி மாவட்டம் தீர்த்தமலைக் கோயிலைப் புதுப்பிக்க ரூ.50 இலட்சமும், ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த ரூ.1.50 கோடியும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. கடந்த 2002-இல் ரூ.17 கோடியும், 2003-இல் ரூ.32 கோடியும், 2004-இல் ரூ.27 கோடியும், நடப்பாண்டில் ரூ.32 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாமல்லபுரத்தில் நாட்டிய விழா அரசால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் கலந்து கொள்கிறார்கள். கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் விழா ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நடத்தப்பட்டது. இருப்பினும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கி இருந்து விழாவைப் பார்த்துவிட்டுச் சென்றனர்.

அரசுக்கு அன்னிய செலாவணியை ஈட்டித் தருவதில் ஜவுளி ஆபரணங்களுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறை மூன்றாவது இடத்தில் உள்ளது. எனவே, சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறப்பானத் திட்டங்களை அறிவித்துள்ளார்".

29.5.2005 அன்று மாங்கனிக் கண்காட்சியில் இடம் பெற்ற சிறந்த அரங்குகளுக்கும், மா சாகுபடியாளர்களுக்கும், மா கண்காட்சி அரங்குகளுக்கும் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சிறந்த விவசாயிகளுக்கும், காட்சி அரங்கத்திற்கும் பரிசுகளை வழங்கி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் பேசியதாவது:-

தமிழகம் உணவு உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. சோளம், கம்பு, நிலக்கடலை, கரும்பு, எண்ணெய் வித்துத் தானியங்கள், மரவள்ளிக் கிழங்கு, முட்டைகோஸ், மஞ்சள் ஆகிய உணவு உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தேங்காய், அரிசி, வாழையில் இரண்டாம் இடத்திலும், பருத்தியில் மூன்றாம் இடத்திலும் உள்ளது. இரண்டாம் இடத்தில் உள்ள உணவு உற்பத்தியை முதலிடத்திற்குக் கொண்டு வர தமிழக அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாய் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது கூட உணவு உற்பத்தியில் தமிழகம் முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த ஆண்டு 90 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்திச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 55 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்ய வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 158.11 இலட்சம் மெட்ரிக் டன் உணவு

உற்பத்தியை எட்ட வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் மா விளைச்சலுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை என இங்கு பேசிய பலரும் சுட்டிக் காட்டினர்.

மாம்பழத்திற்கு பல மருத்துவக் குணங்கள் உள்ளன. மருத்துவக் குணங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினால் மாம்பழ விளைச்சலுக்கு ஏற்ற விலையினை விவசாயிகள் எளிதில் பெற முடியும். இந்தியாவில் மா உற்பத்தியில் தமிழகம் ஆறாம் இடத்தில் உள்ளது. தமிழகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. கிருஷ்ணகிரியில் 150 ஏக்கரில் ரூ.50 கோடி செலவில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்க மாவட்ட நிருவாகத்தின் மூலம் அரசுக்குத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அடுத்தாண்டுக்குள் கிருஷ்ணகிரியில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்க அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும். தேனியில் ரூ.27.06 கோடியில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலூரில் முந்திரிக்கு ரூ.10.36 கோடியில் புனரமைப்புத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. திருச்சியில் ரூ.10 கோடியில் வாழைக்கு ஏற்றுமதி மையமும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 400 ஏக்கர் நிலப்பரப்பில், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளோம். இதில் அதிக அளவில் மாங்கன்றுகளை நடவும், ஒரு எக்டேருக்கு ரூ.8 ஆயிரம் வரையில் மானியம் வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது – இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. சி. பெருமாள், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மு. தம்பிதுரை, திரு. கோவிந்தராஜ், திரு. கே.பி. முனுசாமி, திரு. கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை விற்பனைக் குழுத் தலைவர் திரு. ஆர். விஜயன், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கோ. அர்ச்சுனன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. ஆர். அம்சவேணி, நகராட்சித் தலைவர் திரு. ஏ.எஸ். சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் துணை தலைவர் திரு. கோ. ரவிச்சந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் திரு. செ. பெருமாள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மு. அசோக்குமார், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ட்டி. சுந்தரம், திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு. ஆர். சக்திவேல், கோட்டாட்சியர் திருமதி. ஆர். சுந்தரவல்லி, மண்டல உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை திரு. இரா. குணசேகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு. சிவப்பிரகாசம், உதவி இயக்குநர் (வேளாண்மை) திரு.லோகநாதன், வேளாண்மை அலுவலர் திரு.பச்சையப்பன், மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு. அ. இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஊரக வளர்ச்சித் முகமை, சிறுசேமிப்புத்துறை, காவல்துறை, சுகாதாரத் துறை, ஆவின், சமூகநலத்துறை, சுற்றுலாத்துறை, வேளாண்மைத்துறை, கல்வித்துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, வனத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

– மு.விஜயகுமார்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி.

* * *

ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற திருநெல்வேலி மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த திருமதி. சிக்கந்தர் பேகம் – முகம்மது அஜீஸ் குடும்பத்திற்கும், ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற தேனி மாவட்டம் அல்லி நகரத்தைச் சேர்ந்த திருமதி. நாகஜோதி – ராஜமாணிக்கம் குடும்பத்திற்கும், அந்தக் குழந்தைகளின் நலன் கருதி ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவியாக வழங்கிடவும், அத்தொகையை, குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்புநிதியாக முதலீடு செய்து, மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை, குழந்தைகளின் வளர்ச்சிக்கும் பராமரிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளவும் உத்தரவிட்டு, இதற்கான ஆணைகளை அந்தக் குழந்தைகளின் தாய் தந்தையரிடம் நேரில் வழங்கினார்கள்.

ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்ற திருநெல்வேலி மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த திருமதி. சிக்கந்தர் பேகம் அவர்கள், தனது கணவர் மருந்துக் கடையில் பணிபுரிவதாகவும், அவரது சொற்ப வருமானத்தில் இக்குழந்தைகளைக் காப்பாற்றுவதில் மிகவும் சிரமப் படுவதாகவும், மிகவும் வறுமையான, சூழ்நிலையில் உள்ள தங்களுக்கு இந்தக் குழந்தைகளை நன்கு வளர்க்க உதவி புரிந்திட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்தக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காகத் தற்போது பிறந்துள்ள 3 பெண் குழந்தைகளுக்கும், ஒரு பெண் குழந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்கள்.

அதேபோல, ஒரே பிரசவத்தில் இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண் குழந்தை ஆக மூன்று குழந்தைகளைப் பெற்ற தேனி மாவட்டம் அல்லி நகரத்தைச் சேர்ந்த திருமதி நாகஜோதி என்பவர், தனது கணவர் தச்சு வேலை செய்வதாகவும் தனது குடும்பம் மிகவும் வறுமையான சூழ்நிலையில் உள்ளதாகவும் தெரிவித்து, இந்தக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க, தங்களுக்கு

உதவி புரிந்திட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்த இரண்டு ஆண் குழந்தைகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு வழங்கப்படும் நிதியை அந்தந்த குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்புநிதியாக முதலீடு செய்யவும், அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை, குழந்தைகளின் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும், பயன்படுத்திக் கொள்ளவும் ஆணையிட்டவாறு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், சிக்கந்தர் பேகம் – முகம்மது அஜீஸ் குடும்பத்திற்கு மொத்தம் 3 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணையையும், நாகஜோதி – ராஜமாணிக்கம் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணையையும் அவர்களிடத்தில் நேரில் வழங்கினார்கள்.

இதன்மூலம், திருநெல்வேலி மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த திருமதி. சிக்கந்தர் பேகம் – முகம்மது அஜீஸ் குடும்பத்திற்கு மாதந்தோறும் 1,750 ரூபாயும், தேனி மாவட்டம் அல்லி நகரத்தைச் சேர்ந்த நாகஜோதி – ராஜமாணிக்கம் குடும்பத்திற்கு மாதந்தோறும் 1,167 ரூபாயும் நிதியுதவியாகக் கிடைக்கும். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, இந்தக் குழந்தைகள் 18 வயது நிறைவடையும்போது, உயர்கல்வி பயிலவோ அல்லது சொந்தத் தொழில் தொடங்கவோ, பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த வைப்பீட்டுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ஆணைகளைப் பெற்றுக் கொண்ட குழந்தைகளின் பெற்றோர் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர். ✶

வியப்பூட்டும் உண்மைகள்

ஜெர்மனியைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர் ஹான்ஸ் விலேம். இவருக்கு தான் பிறந்த கிராமத்தில் உள்ள ஒரு ஓக் மரத்தின் மீது அவருக்கு அளவு கடந்த ஆசை. சிறு வயது முதலே அவருக்கும் அந்த மரத்திற்கும் இடையே ஒரு நட்பு உருவாகிவிட்டது. தான் இறந்தபின் தன் உடலை அந்த மரத்திலேயே அடக்கம் செய்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அவர் இறந்தபின், அவரது விருப்பப்படி மரத்தின் நடுவில் பெரிதாகக் குடைந்து 1824ஆம் ஆண்டு மார்ச் முதல் தேதி நின்ற நிலையில் அவரது உடல் அதில் அடக்கம் செய்யப்பட்டது.

◆ ◆ ◆

பிளாக் பேர்ட் என்பவர் ஓமாகா இந்தியர்களின் தலைவர். அவருக்குத் தனது குதிரைமேல் பிரியம். எப்போதும் அதன்மேல் ஏறி அமர்ந்த வண்ணம் சுற்றிக் கொண்டிருப்பார். தான் இறந்தவுடன் தன் உடலைக் குதிரையில் அமர்ந்தபடியே புதைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன்படியே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை, 7–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில், ஆஸ்திரேலியா நாட்டின் வெளியுறவு விவகாரத்துறை அமைச்சர் திரு.அலெக்சாண்டர் டோனர் அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 8–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில், ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்ற மதுரை வேட்டையன்பட்டி செல்வம்–சரஸ்வதி குடும்பத்திற்கு அந்தக் குழந்தைகளின் நலன் கருதி ஒரு பெண் குழந்தைக்கு ரூ.1 இலட்சமும், 2 ஆண் குழந்தைகளுக்குத் தலா ரூ.50,000–மும் நிதியுதவியாக வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 8–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில்,ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகளைப் பெற்ற கடலூர் மாவட்டம், பாதிரிக் குப்பம் தமிழ்ச்செல்வன் – கலைமணி குடும்பத்திற்கு அந்தக் குழந்தைகளின் நலன் கருதி ஒரு பெண் குழந்தைக்கு ரூ.1 இலட்சமும், 3 ஆண் குழந்தைகளுக்குத் தலா ரூ.50,000–மும் நிதியுதவியாக வழங்கினார்கள்.

உயிரிழந்த காவலர் குடும்பத்திற்குக் கருணைத்தொகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 23.5.2005 அன்று தலைமைச் செயலகத்தில், காட்டுக் கொள்ளையன் வீரப்பனின் கூட்டாளிகளால் 1991ஆம் ஆண்டில் தாக்கப்பட்டு மரணம் அடைந்த காவலர் திரு.நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்குக் கருணைத் தொகையாக 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அவரது மனைவி திருமதி மாதேஸ்வரி அவர்களிடம் வழங்கினார்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும், அவனது கும்பலையும் ஒழித்துக்கட்டி, தமிழகம் மற்றும் கர்நாடக மக்கள் அமைதியுடன் வாழ வழியமைத்துக் கொடுத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினரைக் கௌரவிக்கும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரொக்கம் மற்றும் வீட்டுமனைகள் ஆகியவற்றைப் பரிசாக வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சிறப்புக் காவல் பதக்கங்களையும் வழங்கினார்கள். அத்துடன் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளுடன் முன்னர் நடந்த மோதல்களில், தங்களது இன்னுயிரை இழந்தவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களின் தியாகத்தை மறந்துவிடாமல், அவர்களுக்குத் தகுந்த கௌரவம் அளிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இதன் அடிப்படையில், முன்னதாக 4.7.1991 அன்று மரணம் அடைந்த காவலர் திரு.நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்குத் தற்போதுள்ள நடைமுறைப்படி வழங்கப்படும் கருணைத் தொகையான 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும், இதில் ஏற்கெனவே அளிக்கப்பட்ட 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் போக, மீதமுள்ள 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக அவரது மனைவி திருமதி மாதேஸ்வரி அவர்களிடம் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெ ஜெயலலிதா அவர்கள், 28.10.2004 அன்று ஆணையிட்டார்கள்.

30.10.2004 அன்று சிறப்பான விழா ஒன்றை நடத்தி, அதிரடிப்படை வீரர்களுக்கான பரிசுகளையும், உதவிகளையும் வழங்கியபோது திருமதி மாதேஸ்வரி அவர்கள் இவ்விழாவில் பங்கேற்க இயலாத நிலையில் இருந்த காரணத்தால், இந்த ரொக்க உதவிக்கான காசோலையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கும்படி ஆணையிட்ட இந்தக் கருணைத் தொகையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கரங்களிலிருந்து நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று திருமதி மாதேஸ்வரி அவர்கள் விருப்பம் தெரிவித்ததையடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருமதி மாதேஸ்வரி அவர்களை 23.5.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக்கொண்ட திருமதி மாதேஸ்வரி, கண்ணீர் மல்க தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்துக்கொண்டார். ❖

வறட்சியைத் தாங்கி வளரும் சோற்றுக் கற்றாழை

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், குன்னூர் கிராமத்தில் விவசாயிகள் ஒப்பந்த முறையில் கற்றாழை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு.இன்பத்தமிழன் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்களும், நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

சோற்றுக்கற்றாழைப் பயிர் பல மருத்துவக் குணங்கள் கொண்ட மூலிகைப் பயிராகும். இப்பயிரிலிருந்து கிடைக்கும் திரவத்தின் மூலம் பல்வேறு மருந்துப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டுப் பயன்பாடு மற்றும் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. சோற்றுக் கற்றாழைப் பயிர் தரம் குறைந்த மண்ணிலும் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியதாகும். சோற்றுக் கற்றாழைப் பயிர்களைப் பதப்படுத்தி, அதன் மூலம் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தற்போது துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒப்பந்தமுறை விவசாயமாக சோற்றுக் கற்றாழைப் பயிர்களைப் பயிரிட விவசாயிகள் முன்வந்துள்ளனர். இதன் அடிப்படையில் சோற்றுக் கற்றாழைப் பயிர்களை முன்மாதிரியாக விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன் கோவில் அருகில் உள்ள குன்னூர் கிராமத்தில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். சரளைக் கற்கள் மிகுந்த மண்பாங்கில் சோற்றுக் கற்றாழைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து இருப்பதால், கிணற்றில் இருக்கும் பாசன நீரை சொட்டு நீர்ப் பாசனம் (இன்லைன் தொழில்நுட்பம் மூலம்) அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. சொட்டுநீர்ப் பாசன அமைப்பு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அமைக்கப்பட்டு 25 சதவிகித அரசு மானியமாக ரூபாய் 55 ஆயிரம் வழங்கப் பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 40 டன் உற்பத்தி செய்யலாம். ஒரு டன்னுக்கு ரூபாய் 2 ஆயிரத்து 500 வீதம் ரூபாய் ஒரு இலட்சம் தொகைக்கு ஒப்பந்தமுறை மூலம் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒப்பந்தமுறை விவசாயத்தால் விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது.

சோற்றுக் கற்றாழைப் பயிர்களுக்குச் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துள்ளதால் விளைச்சல் அதிகரிப்பதுடன், பயிர்கள் தரமாகக் காணப்படுகிறது. கிடைக்கின்ற பாசன நீரில் அதிகப் பரப்பளவில் விவசாயம் செய்ய இயலுகிறது. வறட்சி மிகுந்த இப்பகுதியில் சோற்றுக் கற்றாழை நல்ல இலாபம் ஈட்டும் மாற்றுப் பயிராக விளங்குகிறது.

– சி.கண்ணதாசன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர்.

* * *

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 6 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள்.

சென்னை மாவட்டம் : கொருக்குப்பேட்டை பாரதி நகரைச் சேர்ந்த திரு.என்.முகமது கனி, **கோயம்புத்தூர் மாவட்டம் :** காரமடை கிராமம், மகாத்மா காந்தி சாலையைச் சேர்ந்த திரு.டி.பி. கனகராஜன், **மதுரை மாவட்டம் :** பேரையூர், சுப்பிரமணிய சுவாமி கோயில் தெருவைச் சேர்ந்த திரு.கே.ஆர்.கே.திருப்பதி ஆறுமுகம், பேரையூர் வட்டம் பாப்பையாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சு. குருசாமி ரெட்டியார், திருநகர், நெல்லையப்பபுரத்தைச் சேர்ந்த திரு. கே. ஏ.அண்ணாமலை, பழங்காநத்தம், ஆர்.சி. தெருவைச் சேர்ந்த திரு.ஜி.பாப்பையா ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியமாக, மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப்படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணைகளை, விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்ந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் வழங்குவார்கள்.

❖ ❖ ❖

குற்றவாளிக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தந்த காவல்துறைக்குப் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 26.6.2005

தமிழகத்தில் குற்ற எண்ணிக்கையைக் குறைத்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சதவிகிதத்தை உயர்த்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தருவதில் தமிழ்நாடு அரசின் காவல்துறை தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது.

ஒரு கொலை வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 44 நாட்களிலேயே குற்றவாளிகளுக்கு விரைவு நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுத் தந்து 16.12.2004 அன்று சாதனை நிகழ்த்தியது. இதனை அடுத்து, 7.2.2005 அன்று பதிவு செய்யப்பட்ட ஒரு கொலை வழக்கில், 8.3.2005 அன்று அதாவது 29 நாட்களிலேயே குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தந்தது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசும் போது இந்த சாதனைகள் குறித்து நான் பெருமையுடன் தெரிவித்து, தமிழ்நாடு காவல்துறைக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டேன். இதனை அடுத்து இந்த சாதனைகளை மிஞ்சும் வகையில், வழக்குப் பதிவு செய்யப்பட்ட 17 நாட்களுக்குள் ஒரு கொலை வழக்கிலும், 16 நாட்களுக்குள் மற்றொரு கொலை வழக்கிலும், கடந்த மே திங்களில் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை பெற்றுத் தந்து தமிழக காவல் துறை மேலும் சாதனை படைத்தது. தற்போது இந்தச் சாதனைகளை எல்லாம் மிஞ்சும் வகையில், சென்னை மயிலாப்பூர் செயின்ட் மேரிஸ் சாலையைச் சேர்ந்த திரு.வரதராஜன் என்பவர், தங்கராஜ் என்பவரை 17.6.2005 அன்று கொலை செய்த வழக்கில், சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 8 நாட்களில் அதாவது 24.6.2005 அன்று குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்ட 8 நாட்களில் துரிதமாக விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தந்து சாதனையை விஞ்சிய சாதனை நிகழ்த்திய தமிழக காவல்துறைக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✱

எல்லோரா

எல்லோரா [illegible] வரைகளில், 17 இந்து மதக் கோயில்கள் எட்டாம் நூற்றா[illegible]லிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரையான கால கட்டத்தில் ராஷ்டிரகூட மன்ன[illegible]ளால் கட்டப்பட்டு, புராணக் கதைகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரிய குகைக்கோயில் கைலாயக் கோயில். இதைக் கட்டியுவர் முதலாம் கிருஷ்ணன் எனும் ராஷ்டிரகூட மன்னர் (757–783). ஒரு பெரிய குன்றையே, சிற்பியின் கைச் சிற்றுளி பெரிய கட்டுமானக் கோயில் போல் உருவாக்கியி[illegible]து உலகம் வியக்கும் பெரும் விந்தை.

பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற 9ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு, இந்திய அணியில் பங்கு பெற்று பதக்கம் வென்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் மற்றும் அவர்களுடைய பயிற்றுநர்களுக்கும் ஊக்கத் தொகையாக மொத்தம் ரூபாய் 7 இலட்சத்து 36 ஆயிரத்திற்கான காசோலைகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், 20.3.2004 முதல் 7.4.2004 வரை பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் தனித்தனி போட்டிகளிலும், குழுப் போட்டிகளிலும், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். இவர்கள் தடகளம் (பெண்கள்), நீச்சல் (ஆண்கள்), ஸ்குவாஷ் (பெண்கள்), மேசைப்பந்து (ஆண்கள்), கையுந்து பந்து (ஆண்கள்) ஆகிய போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்றுள்ளனர்.

9ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்று தமிழகத்திற்குப் பெருமையும், புகழும் சேர்த்த இந்த 19 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊக்கத் தொகையாக மொத்தம் ரூபாய் 7 இலட்சத்து 36 ஆயிரத்திற்கான காசோலைகளை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

ஊக்கத் தொகையினைப் பெற்றுக்கொண்ட வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

◆ ◆ ◆

185489